EISSN 2456-5571

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

BODHI

INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 6 | SPECIAL ISSUE 2 | NOVEMBER 2021 | E-ISSN: 2456-5571

சிறப்பிதழ் - வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

மற்றும்

குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை

பொருண்மை

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் படைப்பாக்கங்கள்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **ந. இரத்தினக்குமார்**
உதவிப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி, மதுரை

முனைவர் **சே. பாலகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

BODHI

International Journal of Research in Humanities, Arts and Science

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

Vol. 6 Special Issue 2 November 2021 E-ISSN: 2456-5571

CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

BIJRHAS

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

Dr. S. Balakrishnan
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

AUTHOR GUIDELINES

About Bodhi

The BODHI International Journal of Research in Humanities, Arts and Science (E-ISSN:2456-5571) is open access, peer reviewed, referred and quarterly journal, which is powered & published by center for Resource, Research and Publication Services, (CRRPS) India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the field of humanities, arts and science.

Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. Agriculture, anthropology, education, geography, advertising botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Call for Papers

The journal invites balanced mix of theoretical or empirical, conceptual papers to publish including research articles, case studies, review papers, comparative studies, dissertation chapters, reports of projects in progress, analytical and simulation models, technical notes, and book reviews, leading academicians, business peoples, corporate sectors, researcher scholars and students from academic institutions, research organizations, non-government organizations (NGOs), corporate sectors, civil societies, industries, and others from India and abroad.

Submission of Manuscript

1. Submit your article by email to **bodhijournal@gmail.com**
2. The manuscripts/papers should be research based or related, original and comprise of previously unpublished material and must be presented following scientific methodology.
3. Authors must send an abstract of the paper not exceeding 250 words, all manuscripts must be in font style of Times New Roman, size: 12, line spacing: double spaced and submitted only in MS Word 2003/ 2007 version.
4. All manuscripts should follow the MLA or APA style manual. The full paper must not exceed 3000 words, including tables and references.
5. The manuscript should be well-organized to have Title page, Abstract, Keywords, Introduction, Literature Survey, Problem Definition, Material & Methods, Findings & Results, Interpretation & Discussion, Conclusion and References.
6. All quoted, reproduced material should clearly be referenced.
7. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text.
8. All contents should be original – authors' own words, ideas, findings and arguments.

9. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text. All figures and tables must have an intelligible caption in relation to the text.
10. Photographs must be sharp, and exhibit good contrast.
11. Correct and complete referencing of quoted and reproduced material is the obligation of the author. In the text, references should be inserted in parentheses in full.
12. If author uses a reference from an out-source, author should cite relevant source giving credit to the original author/contributor.

Review of Article / Manuscript

1. The manuscript will be numbered and sent to the review committee for review-report.
2. The author will be intimidated of the review and the process will take a maximum period of 15 – 20 days.

Ethical Policy

1. Authors are advised to adhere to the ethics of publication of his/her article to be considered for publication.
2. Acknowledgement of the original ideas, borrowed from other sources is imperative.
3. The authors of original research work (previously unpublished / under process for the publication elsewhere) should be an accurate submission of the work carried out, provide the rationale of the significance of the research work in context with previous works, and should contain sufficient details to allow others for further research.
4. It will be the wholesome responsibility of the authors for such lapses if any on legal bindings and against ethical code of publication or communication media.

Plagiarism Alert & Disclaimer

1. The publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts.
2. All submissions should be original and must have a "statement of declaration" assuring their research paper as an original and fresh work and it has not been published anywhere else.
3. It will be authors are sole responsibility for such lapses, if any on legal bindings and ethical code of publication.
4. Contributors are advised to be aware about Plagiarism and ensure their paper is beyond plagiarism as per UGC norms.

Publication Policy & Peer-review Process

Peer review exists to ensure that journals publish article which is of benefit to entire research community. Peer reviewers' comments and recommendations are an essential guide to inform the editor's decision on a manuscript that revisions and improvement. They are part of the publication process and actually help raise the quality of the manuscript. It also helps the readers to trust the research integrity of the article.

1. The Editor-in-Chief will primarily examine each manuscript.
2. The editor-in- Chief will advise the authors about the acceptance of the manuscript by email.
3. The manuscript will be evaluated on parameters of originality, practical importance, subject relevance, scientific level and contribution to the current academic scenario.
4. If the manuscript is accepted following publication policies.

5. Accepted manuscript will be forwarded to the double-blind peer review process. Such that the journal does not disclose the identity of the reviewer(s) to the author(s) and does not disclose the identity of the author(s) to the reviewer(s).
6. The review committee is not responsible for stripping of any information during panel review as the original author is not known to the committee.
7. Manuscript/paper will be published only when the article is 'commended for publication' from the review committee/editorial board.
8. If necessary the copy-editing work will be done by the members of the Editorial Board.
9. The review process may take minimum 20 working days.
10. In case of acceptance of the manuscript and commended for publication favorably, the manuscript will be published in online mode of time. If paper/article/manuscript is not commended for publication, the rejected manuscripts shall not be returned.

Copyright Notice

Submission of an article implies that the work described has not been published previously (except in the form of an abstract or as part of a published lecture or academic thesis), that it is not under consideration for publication elsewhere, that its publication is approved by all authors and tacitly or explicitly by the responsible authorities where the work was carried out, and that, if accepted, will not be published elsewhere in the same form, in English or in any other language, without the written consent to the Publisher. The Editors reserve the right to edit or otherwise alter all contributions, but authors will receive proofs for approval before publication.

Copyrights for articles published in Bodhi International Journal of Research in Humanities, Arts and Science are retained by the authors, with first publication rights granted to the journal. The journal/publisher is not responsible for subsequent uses of the work. It is the author's responsibility to bring any infringement action if so desired by the author.

Indexed & Open Access

The journal will be indexed as per database norms. The Indexing will provide the manuscript to achieve its purpose of being accessible to worldwide readers. Easy accessible will increase as manuscript's and journal's reputation. It will be a source of the quality information in respective areas/studies.

Privacy Statement

We may collect the contact details from authors like names, designation with Institutional address, email addresses, postal address, phone numbers and other information to understand needs and provide with a better service that are entered in this journal site and will be used exclusively for the stated purposes of this journal.

Frequency of Publication of the Journal

BODHI is a quarterly journal, will be published in January, April, July and October on respective Years.

Review and Evaluation Committee

Quarterly review committee meeting will be convened by the editor-in-chief. Authors are expected to submit their manuscript before 20 working days of the publication of the respective month. The journal will be published regularly as per Journal publication policy.

Article Submission

Authors are kindly advised to send manuscripts along with registration & copyright forms. (Duly filled-in Registration form is mandatory with the paper for acceptance) Soft copy of the papers should be mailed to **bodhijournal@gmail.com**

Conference Proceedings

Bodhi will be published as special issues for the national / international conference and seminars volumes. The group of papers also will be published in Bodhi journal.

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

மருத்துவர் தங்கராசு சாலை, சட்டக் கல்லூரி அருகில், மதுரை - 625020. வலைத்தளம்: utsmdu.org;
தொலைபேசி எண்: 0452 - 2530766 / 0452 - 2530799: மின்னஞ்சல் முகவரி: utsmdu.research@gmail.com

முனைவர் **தா.லலிதா**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,
இயக்குநர்

நாள்: 01.11.2021

வாழ்த்துரை

இலக்கியப் படைப்புகள் காலத்தின் வெளிப்பாடுகள். வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்ற வாழ்வியல் நெறிகளை வலுப்படுத்தும் நோக்கில் யதார்த்த சித்திரிப்புடன் சமூகச் சிந்தனைகளைக் காட்சிப்படுத்தும் இயல்பு இலக்கியத்திற்கெப்போதும் உண்டு. நான்மாடக் கூடலில் அமைந்துள்ள மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ்க்கவிதை, சிறுகதை, புதினம் மற்றும் ஆய்வு நூல்களைப் பற்றிய கருத்துரையாடலைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றது. குறிப்பாக, அயலகத் தமிழர்களின் வாழ்வியலை - புலம்பெயர் வாழ்வியல் தவிப்பை, பிற பண்பாட்டு வெளியில் அடைந்து வரும் மாற்றங்களை, மொழியுணர்வை அவர்தம் படைப்புகளினூடாக மக்களிடம் கொண்டு செல்லும் பணியினை முனைப்புடன் செயலாற்றி வருகின்றது.

அமெரிக்கன் கல்லூரியில் 1991ஆம் ஆண்டு முதல் 1994 வரை இளங்கலைத் தமிழ் இலக்கியம் படித்த முன்னாள் மாணவர்களால் தொடங்கப்பட்டிருக்கும் குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், உலகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் படைப்பாக்கங்கள் எனும் ஆய்வுப் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த வேண்டும் என்ற நோக்கம் இன்றைக்கு நிறைவேறி இருப்பதை மகிழ்வோடு நினைத்துப் பார்க்கின்றேன். அந்த வகையில் புலம்பெயர் இலக்கிய வகைமையில் சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசன் அவர்களின் படைப்பாக்கங்கள் பற்றிய திறனாய்வு உலகத் தமிழ்ச் சங்க அவையில் நிகழ்வதென்பது உள்ளபடியே மகிழ்ச்சி.

சிங்கப்பூர்த் தமிழர்களின் பண்பாட்டினை, வாழ்வியலை எடுத்துரைக்கும் உன்னதப்பணியைத் தமது படைப்புகளினூடே செய்து வந்த சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசன் அவர்களின் தமிழ்ப் பணியையும் இலக்கியப் பணியையும் ஆய்வு நோக்கில் எல்லோருக்கும் கொண்டு போய்ச் சேர்க்கும் வகையில் இந்தக் கருத்தரங்கம் நடத்தப்பெறுகின்றது. அதற்கு ஆவணமாக ஆய்வுக் கோவையையும் வெளியிட்டுத் தமிழ்ப் பணியைத் தொடங்கியிருக்கும் குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்திற்கு எனது வாழ்த்துகள். மேலும், இது போன்ற கருத்தரங்குகளைத் தொடர்ந்து செவ்வனே செய்ய பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

இயக்குநர்

(முனைவர் தா.லலிதா)

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
(மத்திய கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் 'ஏ' தகுதி பெற்றது
காந்திகிராமம் - 624 302, திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு

தமிழ்த்துறை

முனைவர் ஒ.முத்தையா மின்னஞ்சல்: muthiahtamil@gmail.com

செந்தமிழ் வளர்த்த பைந்தமிழ்ப் பாவலர்

தமிழர்கள் அலைகடல் தாண்டிப் பூமிப்பந்தின் எட்டுத்திக்கும் வணிகர்களாய், உழைப்பாளிகளாய், கலைஞர்களாய், ஏவலர்களாய்ப் பயணித்தனர். புலம்பெயர்ந்த மண்ணைத் தாய் மண்ணாய்ப் போற்றி உழைத்து வளம்பெருக்கினர். தங்கிய இடங்களிலெல்லாம் தயக்கமின்றித் தமிழ் முழக்கம் செய்து,செம்மாந்த தமிழைச் செழித்தோங்கச் செய்தனர். பேச்சையும் எழுத்தையும் இலக்கியத்தையும் மூச்சாகக் கொண்டு தமிழைக் காலந்தோறும் செழுமைப்படுத்தினர். ஏன் அந்தந்த நாட்டின் அலுவல் மொழியாகவே தாய்த்தமிழை ஆட்சிபீடத்தில் ஏற்றிவைத்து அழகு பார்த்தனர் (தமிழ் பிறந்த மண்ணில்தான் அதற்குக் கொடுப்பினை இல்லை). இன்றைய நவீன இணையத் தமிழின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அவர்களே முன்னத்தி ஏர். தொப்புள்கொடி உறவுகளைப் பின் தொடர்வதும் ஆதரவுக்கரம் நீட்டித் தாங்குவதும் காலத்தின் தேவையாகும். அந்தவகையில்தான் சீர்மிகு சிங்கப்பூர் மண்ணில் தன் வாழ்நாளெல்லாம் தமிழைச் செழிக்கச் செய்து தமிழறிஞராகவே வாழ்ந்து மறைந்த அய்யா மு.தங்கராசன் அவர்களைத் தமிழாய்ந்த மதுரை மண்ணில் நினைவு கூர்கிறோம்.

தமிழாசிரியர் மு.தங்கராசன் அய்யா எனக்கு இரண்டு வகையில் அறிமுகம். ஒன்று, அவர் சிங்கப்பூரில் தமிழாசிரியராகப் பணியாற்றிய உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நான் காலடி வைத்தது. இரண்டாவது, அவருக்கான நினைவேந்தல் கூட்டத்தில் (இணையவழி) அவரது படைப்பான**'நாட்டுப்புறத்தில்'**என்ற நூல் குறித்து உரையாற்றியது (இந்த நூலைக் காவ்யா பதிப்பகம், சென்னை வெளியிட்டுள்ளது).எனது உரையாடலுக்காகத் தமிழாசிரியரின் தமிழ்ப் பணிகளை அறிந்துகொள்ள இணையத்தில் உலா வந்தபோது, சிங்கப்பூர் தேசிய நூலகம் அவருடைய அனைத்து நூல்களையும் (கவிதை, சிறுகதை, நாடகம், உரைநடைக் கட்டுரைகள், மொழிப்பயிற்சி,நாட்டுப்புறம் என்று நாற்பது நூல்கள்) இணையத்தில் பதிவிட்டிருந்தது வியப்பைத் தந்தது. சிங்கப்பூர் தேசிய நூலகம்தான் தமிழறிஞர் மு.தங்கராசன் படைப்புகள் குறித்த இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை வெளிவருவதற்கு ஆதாரம், அடிப்படை. அய்யா மு.தங்கராசன் படைத்த நூல்களின் தலைப்புகள் அவரது இயற்கைநேயத்திற்கு, குறிப்பாகப் பூத்துக்குலுங்கி மணம் பரப்பும் மலர்களின்மேல் கொண்ட காதலுக்கு அடையாளம். பூச்செண்டு, சிந்தனைப் பூக்கள், மகரந்தம், மலர்க்கொத்து, பொய்கைப் பூக்கள், மலர்க்கூடை, மணங்கமழும் பூக்கள், கற்பனை மலர்கள், நித்திலப் பூக்கள், மணக்கும் மல்லிகை, வாகைப் பூக்கள், தாழம்பூ, தாமரைப்பூ, மணங்கவர் மலர்கள், சூரியகாந்தி, விண்வெளிப் பூக்கள், சாமந்திப் பூக்கள், முற்றத்து முல்லைகள் என்று நூல் தலைப்புகளில் எல்லாம் மலர்களின் வாசனைதான். இதனால்தான் இவரது படைப்புகள் கடலையும் தாண்டி மல்லிகை மணக்கும் மதுரையில் மணம் பரப்புகின்றன.

இவர் கலைஞர்,நாடக ஆசிரியர், மேடை நாடக இயக்குநர்,பாடகர்,இலக்கியவாதி, கவிஞர், சிறுகதை ஆசிரியர், சமூகத்தொண்டர், தமிழ்ப் பயிற்றுநர்,தமிழ்ச் சங்க நிர்வாகி என்று தமிழைக் காக்கவும் பரப்பவும் வலம் வந்த தசாவதானி. தமிழ் ஊடகத் தேனீ.

தமிழறிஞர் மு.தங்கராசன் அய்யாவின் '**நாட்டுப்புறத்தில்**'என்ற நூலை இங்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று எனக்குப்படுகிறது. இந்த நூலில் நாட்டுப்புற வழக்காறுகளை (தாலாட்டு, ஒப்பாரி, தெம்மாங்கு, விடுகதை) வாய்மொழி வரவாக, நாட்டுப்புற இலக்கியமாக உணர்ந்து நயம் பாராட்டுகின்றார். தாய்ப்பால் கொடுப்பது நிறுத்தப்பட்ட காலத்தோடு தாலாட்டுப் பாடலும் முத்தாய்ப்புப் பெற்றுவிட்டது என்று கூறி வருந்துகிறார். மலேயா, சிங்கப்பூர் பகுதிகளில் இரப்பர், செம்பனைத் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ் மக்கள்,

"கள்ளுக்கடை ஓரத்திலே
கச்சான்கடை நம்மகடை
கச்சான்வாங்க வந்தகுட்டி
கருத்தக்குட்டி நம்மகுட்டி

கள்ளுக்கடைப் பக்கத்திலே
ஒட்டுக்கடை நம்மகடை
சீப்புவாங்க வந்தகுட்டி
செவத்தக்குட்டி நம்மகுட்டி,"

என்று தங்களின் உடல்வலி தீரவும் உழைப்பின் களைப்பைப் போக்கவும் கள்ளுண்டு ஆடிப்பாடியதை மிகுந்த ஈடுபாட்டோடு பதிவுசெய்கின்றார்.

தமிழகத்திலேயே வழக்கொழிந்துபோன வாய்மொழி விடுகதைகள் பலவற்றை ஆவணப்படுத்தியுள்ளார். ஒரு சான்று:

"நெய்யாத் துகிலுடுத்தி நீராடும் பெண்ணே
வையாபுரிக்கு வழியேது கண்ணே?"
"வனையாத பானையில் தண்ணிகொண்டு போறவரே
வையாபுரிக்கு அதுதான் பாதை."

மேலும் செட்டியார்களின் வட்டிக்கணக்கைப் புதிர்களாக்கி நண்பர்களோடு பகிர்ந்துகொண்ட நினைவுகளையெல்லாம் தொகுத்தளித்திருக்கின்றார். .

தமிழ் வணிகர்கள் மலாயாப் பெண்களை மணந்து வாழ்ந்ததன் விளைவாக 'மலாக்கா செட்டியார்கள்' என்ற தனிச் சமூகம் தோன்றியிருப்பதை எடுத்துக்காட்டி, இதனால் தமிழும் மலாயாவும் (தமிங்கலம்போல) இரண்டறக் கலந்துவிட்ட மொழிக்கலப்பையும் அதன்வழி வெளிப்படும் பேச்சு வழக்குகளையும் நகைச்சுவையாகப் பதிவுசெய்துள்ளார்.

சிங்கப்பூர் பற்றி எழுதப்பட்ட நாட்டுப்புற இலக்கியமாக இன்றுவரை அறியப்பட்டிருப்பது நா.வ.இரங்கசாமிதாசன் இயற்றிய 'அதிவினோத குதிரைப் பந்தய லாவணி' (21 பாடல்களைக் கொண்டது) என்ற நூல்தான். இனி சிங்கப்பூர் கல்வித்திட்டத்தில் நாட்டுப்புறவியல் பாடத்திற்கான நூலாக, இலக்கிய நோக்கில் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்ந்துரைக்கும் அய்யா மு.தங்கராசனின் **நாட்டுப்புறத்தில்** என்ற நூலையும் தாராளமாக இணைத்துக்கொள்ளலாம்.

புலம்பெயர்ந்த தமிழறிஞர் மு.தங்கராசன் அவர்கள் தமிழ் இலக்கியத்தின் மீது கொண்டிருந்த பற்றும் துறைதோறும் அவர் ஆற்றியுள்ள வாழ்நாள் பங்களிப்புகளுமே அவர் மீண்டும் தாய் மண்ணில் முளைத்தெழுவதற்கு வாய்ப்பளித்துள்ளன. தமிழுக்குத் தொண்டு செய்வோன் மறைவதுமில்லை, மறக்கப்படுவதுமில்லை. தமிழறிஞரை நினைவுகூரும் நல்லுள்ளங்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

வாழ்த்துகளுடன்



தொகுப்புரை

மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், மதுரை குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையமும் இணைந்து 'சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் படைப்பாக்கங்கள்' என்ற பொருண்மையில் 13.11.2021 அன்று உலகத்தமிழ்ச் சங்கத்தில் நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் உள்ள 'தளுகை பாதர்பேட்டை' எனும் கிராமத்தில் பிறந்து(1935) தமது மூன்றாவது அகவையில் பெற்றோருடன் மலாயவுக்குப் புலம் பெயர்ந்தவர் மு. தங்கராசன். அங்குத் தமிழ்ப் பயின்று, தமிழ்க் கல்விக் கழகத் தமிழ்ப் பள்ளிகளில் பணியாற்றும் பொருட்டு சிங்கப்பூர் வந்தவர். 1961 முதல் 1972 வரை 'சிங்கப்பூர் செம்பவாங் தமிழ்ப் பள்ளியில்' தலைமையாசிரியராகப் பணிபுரிந்தவர். சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடநூலாக்கக் குழுவில் இணைந்து சிறப்புறப் பணியாற்றியவர். சிங்கப்பூரின் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டவர். அவர் எழுதிய நூல்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், நாட்டுப்புறவியல் எனப் பன்முகமானவை. கவிஞர், கதைசொல்லி, அரங்க நெறியாளர், நடிகர், கல்வியாளர், சமூகப் பணியாளர் எனப் பல நிலைகளில் தனது பங்களிப்பை ஆற்றியிருப்பது போற்றத்தக்கது. மு.தங்கராசனாரின் தமிழ்ப் பணிகளைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு 'மு. தங்கராசனின் படைப்புகளை' ஆய்வுக் களமாகக் கொண்டு, பன்னாட்டுக் கருத்தரங்கத்தை ஒருங்கிணைக்கத் திட்டமிட்டோம். குறிஞ்சியின் அமைப்புக் குழுவினர் பல முறை கூடிக் கருத்தரங்கப் பணிகளைப் பகிர்ந்து, முன் நகர்ந்தோம்.

"மு. தங்கராசனாரின் படைப்புகளைத்" தமிழ் ஆர்வலர்களிடம் கொண்டு செல்லும் பொருட்டு, அவரின் இருபத்தெட்டு நூல்களையும் மின்னூல் வடிவில், இணையத் தளத்தில் பகிர்ந்து, அவருடைய படைப்புகளை மையமாகக் கொண்டு ஆய்வாளர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகளைப் பெற விழைந்தோம். தமிழ் ஆய்வுச் சூழலில் அதற்கு நல்ல பலன் கிடைத்தது. பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், முதுகலை மாணவர்கள் எனப் பல திறத்தாரும் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி வைத்தனர். ஆய்வாளர்கள், எழுத்தாளரின் படைப்புகளில் காணப்படும் பன்முக ஆற்றலைப் பல்வேறு நிலைகளிலிருந்து அணுகியிருந்தமை சிறப்பிற்குரியது. கட்டுரைகள் அனைத்தும் மு. தங்கராசனின் தனிச்சிறப்பைப் பறைசாற்றுவனவாக அமைந்திருந்தன. தொடக்கத்தில் ஐம்பது கட்டுரைகள் வரும் என்ற எங்களின் முன் முடிவுகளைத் தமிழ் ஆய்வுலகம் முறியடித்து 120 கட்டுரைகள் என்ற எண்ணிக்கையினை எட்டியிருப்பது, கருத்தரங்கின் வெற்றியாகும். மு. தங்கராசனாரின் தமிழ்ப் பணியை ஆய்வாளர்கள் நன்கு உள்வாங்கிக் கொண்டதன் புலப்பாட்டைப் பார்க்க முடிந்தது. படைப்பாளியின் சமூக அக்கறை, தமிழ்மொழி மீதான பற்றுதல், தாய்நாட்டின் மீதான ஏக்கம், சிங்கப்பூர் மற்றும் மலேயாவில் தமிழர் வாழ்வியல், புலம்பெயர்ச் சூழல், படைப்பாளியிடம் காணப்பட்ட திராவிடப் பண்புகள் எனப் பல்வேறு பொருண்மைகளில் ஆய்வுப் பார்வைகள் விரிவும் ஆழமும் மிகுந்து தனித்துவமாக அமைந்திருந்தன.

இக்கருத்தரங்கம் சிறப்புற அமையப் பல்வேறு தரப்பினர் தங்களின் உழைப்பை நல்கினர். கட்டுரைகள் வழங்கிய ஆய்வாளர்களுக்கும், கட்டுரைகளை நல்ல முறையில் ஒரே எழுத்துருவிற்கு மாற்றியும் திருத்தம் செய்தும் கொடுத்த "லேசர் பாயிண்ட்" தரப்பினருக்கும் நூலாக வடிவமைத்த சான்லாக்ஸ் நிறுவனத்தாருக்கும் அதைச் சிறப்புற வெளியிட்ட 'போதி' ஆசிரியர் முனைவர் S. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மு.தங்கராசன் அவர்களின் தமிழ்ப் பணியை உலகம் அறியச் செய்ய விளைந்த அவரின் குடும்பத்தாருக்கும் அயலகத்தில் இருந்து சிறப்புற ஆற்றுப்படுத்திய கருத்தரங்க ஆலோசனைக் குழு அறிஞர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். உலகின் பல்வேறு இடங்களில் உள்ள தமிழறிஞர்களை ஒன்று திரட்டி தமிழின் இனிமையினைத் தரணி போற்றச்செய்யும் உலகத்தமிழ்ச் சங்க இயக்குநர் முனைவர் தா. லலிதா அவர்களுக்கும் நன்றிகள் பல. பதிப்புப் பணிகளைச் செம்மையாகச் செய்த நண்பர்கள் முனைவர் பா. சிங்காரவேலன், முனைவர் ஆ. பூமிச்செல்வம் ஆகியோருக்கும் பல்வேறு பணிகளை இன்முகத்துடன் செய்து கொடுத்த நண்பர் நகைக் கடை செந்தில், வடிவமைப்பாளர் பேராசிரியர் கார்த்திக்குமரன், மற்றும் சபரி, குமார் ஆகியோர்களுக்கும் நன்றி.

இவண்

முனைவர் ந. இரத்தினக்குமார்
உதவிப் பேராசிரியர்
மதுரை கல்லூரி, மதுரை

முனைவர் சே. பாலகிருஷ்ணன்
உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

வாழ்த்துரை

டாக்டர் சு.ப.திண்ணப்பன், சார்பு நிலைப் பேராசிரியர், சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

உலக நாடுகளில் நம் தமிழ்மொழியை அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு, அதன் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவி வருவது சிங்கப்பூர் நாடாகும். தமிழ்க் கல்வி, மொழி இலக்கியம், பண்பாடு, சமயம், சமூகம், கலை, நாகரிகம், மரபு, இனம் முதலிய பல்துறைகளின் வளச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் சிங்கப்பூர் அரசும், சமூக அமைப்புகளும் அரசுசார் நிறுவனங்களும் ஒல்லும் வகையான் எல்லாம் தொடர்ந்து உதவிவருகின்றன. இதனால், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கியம், குறு நாவல்கள்\நாவல்கள், கட்டுரைகள், பக்தி நூல்கள் வாழ்க்கைக் கட்டுரைத் தொகுப்புகள், திறனாய்வு நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் எனப் பலவகையில் 1965முதல் சென்ற அரை நூற்றாண்டாக வளர்ச்சி கண்டுள்ளது. இதனைப் பற்றி டாக்டர் அ.வீரமணி விரிவாக ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில், 'சிங்கப்பூர்த் தமிழிலக்கிய விளைச்சலுக்கு மகுடம் சூட்டுவது போல அமைந்தது, அருண் மகிழ்நன் தலைமையில் மின்னிலக்கக் குழுவினர் முன்னெடுத்த சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய மின் தொகுப்பு. உள்ளூர்த் தமிழ் மரபுடைமை அமைப்புகளும் தேசிய நூலக வாரியமும் இணைந்து செயலாற்றி, இத்திட்டம் சுதந்திர சிங்கப்பூர் முதல் 50 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் அனைத்தையும் மின்னிலக்க வடிவமாக்கி, இணையத்தில் கிடைக்கச் செய்யும் நோக்கில் தொடங்கப்பட்ட பெருந்திட்டம். சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தைப் பாதுகாப்புடன் எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கும் விதமாக, 2013ஆம் ஆண்டில் சுமார் 350 நூல்கள் மின்னிலக்க வடிவில் அன்பளிப்பாக அளிக்கப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் விளைவாக, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் படைப்புகளை யாரும் எங்கிருந்தும் எப்போதும் இணைய வாயிலாகப் பெற்றுப் படிக்கலாம். எனவே சிங்கப்பூர் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளைத் தாய் நாடாகிய தமிழகத்திலுள்ள வாசகர்கள், படைப்பாளர்கள், பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் முதலிய அனைவர்க்கும் அறிமுகப்படுத்துவதிலும், அவர்களின் கருத்தை அறிவதிலும் அதிக ஆர்வமுடையவர்களாக உள்ளனர். இதன் விளைவாக, சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகமும் சென்னைப் பல்கலைக் கழகமும் இணைந்து சில ஆண்டுகளுக்கு முன் 2017இல் இரண்டு நாள் கருத்தாங்கு ஒன்றை ஏற்பாடு செய்து நடத்தின. அக்கருத்தரங்கில் சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிப் படித்த கட்டுரைகளை, எழுத்தாளர் கழகத் தலைவர் திரு. ஆண்டியப்பன் எவ்வளவோ முயன்றும் தொகுத்து நூலாக வெளியிட இயலவில்லை.

இந்நிலையில், மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தினரும் குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்தினரும் இணைந்து சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் படைப்பாளர்களில் ஒருவராக விளங்கி, காலமாகியுள்ள தமிழாசிரியர் மு.தங்கராசனின் படைப்புகளை இணையவழியிலும் நூல் வடிவிலும் படித்து, அவை தொடர்பாக ஏறத்தாழ 100 ஆய்வுக்கட்டுரைகளை எழுதச் செய்து, கருத்தரங்கம் ஒன்றை நடத்துவது என்பது, உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். சிங்கப்பூரில் 1982ஆம் ஆண்டு தொட்டுப் பணியாற்ற வந்த காலம் முதல் ஆசிரியர் மு.தங்கராசனாரை நான் நன்கு அறிவேன். சிங்கப்பூரில் தொடக்கப்பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளி வரை, பல தமிழ்ப் பள்ளிகளில்

தமிழாசிரியராகப் பணியாற்றி, முதல் சாதனையாளர் என்கிற விருதினையும் பெற்றவர். என்மீது அன்பும் மதிப்பும் கொண்ட பெருந்தகையார். உயர்நிலைப் பள்ளிப் பாடநூல்\பயிற்று கருவிகள் தயாரிப்புக் குழுவில் நான் மதியுரைஞராகப் பணியாற்றிய போது, அவரும் அக்குழுவின் உறுப்பினராக இருந்து பல பாடங்கள்\பயிற்சிகள் உருவாக்கியவர் அப்போது, அவரது தமிழறிவுப் புலமையை நான் அறிந்து போற்றியுள்ளேன். தமிழாசிரியர் மட்டுமின்றித் தமிழ்க் கல்வி தொடர்பான பல செயல்களைத் திட்டமிட்டுச் செய்தவர் தங்கராசனார்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களில், நான் அறிந்த வகையில் கவிதை, கட்டுரை சிறுகதை, நாடகத் தொகுப்பு என 29 நூல்கள் 1982 முதல் இதுவரை இவர் ஒருவர் தான் படைத்துச் சிங்கப்பூர் இலக்கியத்திற்குச் சிறப்பு செய்துள்ளார். இத்துடன் சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்த தமிழவேள் சாரங்க பாணியைப் போற்றி சிங்கப்பூர் - மலேசியக் கவிஞர்கள் பாடிய ஒரு கவிதைத் தொகுப்பையும் கொண்டு வந்துள்ளார். இதன்வழி இவரின் நன்றி உணச்சி நன்கு புலப்படும். இவரின் படைப்பிலக்கியங்கள் சிலவற்றிற்கு நான் அணிந்துரைகள் கொடுத்துள்ளேன். வெளியீட்டு விழாக்கள் சிலவற்றில் நூல்களை அறிமுகம் செய்து வைத்துப் பேசியும் உள்ளேன். இவரின் நூல்கள் பலவற்றிற்குத் தமிழ்ப்பூக்கள் பெயர்களைத் தலைப்பாகத் தந்து, இவர் தம் இயற்கை அன்பையும் புலப்படுத்தி உள்ளார். தாம் மட்டுமின்றி மற்றவர்களையும் தமிழ் இலக்கிய நூல்கள் எழுதத் தூண்புயவர். வெளியீட்டு விழாக்கள் செய்யும் பல்லாற்றானும் உதவும் பண்பினர். இவருடைய நூல்கள் தமிழகப் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலை, ஆய்வுப் பகுதிகளாக இருந்தமையை நான் அறிவேன். இயல், இசை, நடிப்பு என மூன்றும் கலந்த நாடகத் துறைக்கும் கூட இவர் ஆற்றிய நற்பணிகள் பலப்பல. செம்பவாங்க தமிழ்ச் சங்கத்தில் இவர் செய்த சமுதாயப் பணிகள் பல ஆகும்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் பிள்ளைகள் நால்வரையும் தமிழாசிரியப் பணியில் அமர்த்தி, அழகுபார்த்த தமிழாசிரியர் இவர் ஒருவரே எனலாம். தமிழ்ப்பணி, இலக்கியப் பணி, கல்விப்பணி, நாடகப்பணி, சமூகப்பணி எனப் பன்முகம் கொண்ட மு.தங்கராசானாரின் இலக்கியப் பனுவல்களைத் தமிழ் நாட்டினர்க்கு அறிமுகம் செய்து, ஆய்வுக் கட்டுரைகளை எழுத வைத்து கருத்தரங்கமும் நடத்தியதுடன், கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து மு.தங்கராசனார் நூல்கள் பற்றிய ஆய்வுக் கோவையையும் வெளியிடுவதென்பது சிறப்பிற்குரியதாகிறது. சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ்ப் படைப்பாளர் ஒருவர் பற்றிய ஆய்வரங்கைத் தமிழகத்தில் நடத்துவது இதுவே முதன்முறை என்பதையும் இவ்விடத்துச் சுட்டிக்காட்ட விழைகிறேன். இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் என் பாராட்டும் வாழ்த்தும் உரியனவாகும்.

சு.ப.திண்ணாப்பன்

அனுபவ உரை : பன்முகத் திறனாளர் மு தங்கராசனார்...

சிங்கப்பூரின் முன்னோடித் தமிழாசிரியர்களில் அமரர் மு. தங்கராசனார் அவர்களும் ஒருவர். அவர் மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்து தமிழாசிரியர் பணியைத் தொடங்கினார். ஆரம்பத்தில் செம்பவாங் தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராகவும் பிறகு தலைமையாசிரியராகவும் பணியாற்றினார். காலத்தின் கட்டாயத்தினால் அப்பள்ளி மூடப்பட்டதால், அவர் உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்க அனுப்பப்பட்டார். அப்பள்ளியும் 1976-இல் மூடப்பட்டதால், இரங்கூன் சாலை உயர்நிலைப்பள்ளியில் தமிழ்க் கற்பிக்கச் சென்றார். பிறகு, நேவல் பேஸ் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பின் ஓய்வு பெற்றார்.

கல்வி அமைச்சின் உயர்நிலைப் பாடநூலாக்கக் குழுவில் சிறப்பு எழுத்தாளர்களுள் ஒருவராக இடம்பெற்ற இவர், 'தமிழ் மாலை' என்னும் பாடநூல் வரிசை நூல்களை எழுதினார். தமிழாசிரியர் திரு. மு. தங்கராசனார் அவர்களை நான் பல்லாண்டுகளாக அறிவேன். அவர் சிறந்த ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர், நாடக ஆசிரியர், கவிஞர், நடிகர், நாடகத் தயாரிப்பாளர் எனப் பன்முகத் திறன்கள் படைத்தவர். அவர் அடுக்குமொழியில் அழகாக எழுதும், பேசும் ஆற்றல் படைத்தவர். நான் அவரிடம் பாடம் கேட்கவில்லையென்றாலும் அவருடைய அழகிய தமிழ்நடையின் மீது காதல் கொண்டு, அவரைப் போல் எழுத வேண்டுமென்று ஆசைப்பட்டவன்.

ஆசிரியர் மு. தங்கராசனார் அவர்கள் தமிழ்மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமை உடையவர். அவர், தம் வாழ்நாள் முழுவதும் இலக்கியப் படைப்புகளைப் படைத்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் பலரையும் நூல்கள் எழுதுமாறு ஊக்குவித்தார். மேலும், எழுத்தாளர் பலருக்கும் நூல் வெளியீட்டு விழா நடத்தி மகிழ்வார். நூல் வெளியீட்டு விழாவுக்காக மண்டபத்தை ஏற்பாடு செய்து நானும் அவருக்குப் பலமுறை உதவியிருக்கிறேன்.

நான் பெரிதும் மதித்துப் போற்றும் தமிழாசிரியர்களுள் மு.தங்கராசன் அவர்களும் ஒருவர். அவருடைய தமிழ்ப்பற்று, தொடர்ச்சியான எழுத்துப்பணி இரண்டையும் கண்டு வியந்துபோயிருக்கிறேன். அவர் தம்முடைய மூன்று மகன்களைத் தமிழாசிரியர்களாக உருவாக்கினார். சிம்மக்குரல் படைத்த அவர் சிறப்பாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். சிங்கப்பூரில் தமிழ் அதிகாரத்துவ மொழியாக ஆவதற்குப் பாடுபட்ட, திரு கோ.சாரங்கபாணியின் மீது அவர் பேரன்பு கொண்டவர். கவிஞர்கள் பலர் கோ.சாரங்கபாணியைப் போற்றிப் பாடிய பாடல்களைத் தொகுத்துக் 'கவிக்குலம் போற்றும் தமிழவேள்' என்னும் பெயரில் நூல் ஒன்றை அவர் வெளியிட்டார். மேலும், அவர் பெயரில் தமிழவேள் நாடக மன்றம் ஒன்றினை நிறுவி நாடகத்துறைக்குப் பங்காற்றினார்.

ஆசிரியர் மு. தங்கராசனார் அவர்கள் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்திற்குப் பேராதரவு கொடுத்து வந்ததோடு, அதன் வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவர். தமிழாசிரியர் சங்கக் கட்டட நிதிக்காக, அவர் சங்கத்துக்கு நேரடியாக வந்து ஆயிரம் வெள்ளியை நன்கொடையாக வழங்கினார். தமிழ் முரசு நாளேடும் சங்கமும் இணைந்து, கடந்த இருபது ஆண்டுகளாக நல்லாசிரியர் விருது நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து வருகின்றன. அவருடைய இலக்கியத் தொண்டைப் பாராட்டி அவருக்கு 2012-இல் வாழ்நாள் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும், தமிழாசிரியர் சங்கம் முன்னோடித் தமிழாசிரியர்களைக் கௌரவித்தபோது மு தங்கராசனார் அவர்களைப் பாராட்டிச் சிறப்பித்தது.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த, திரு மு. தங்கராசனார் அவர்களுடன் நான் பழகிய அந்த இனிய நாள்களை எண்ணிப் பார்க்கிறேன். அவரின் நினைவுகள் என் நெஞ்சில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கின்றன.

சி. சாமிக்கண்ணு
தலைவர் உலகத் தமிழாசிரியர் பேரவை
முன்னாள் தலைவர் ஆலோசகர்
சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், சிங்கப்பூர்

வாழ்த்துரை

மறைந்த மூத்த தமிழாசிரியர் திரு மு.தங்கராசனார் அவர்கள், தமிழவேள் நாடக மன்றத்தின் சார்பில் 1982-ல் ‘‘கவிக்குலம் போற்றும் தமிழவேள்” என்ற தமிழர் தலைவர் தமிழவேள் கோ.சாரங்கபாணியின் புகழ் போற்றும் காவியத்தைத் தொகுத்தளித்து வரலாறு படைத்தவர் ஆவார்.

”அருந்தமிழின் வளர்ச்சிக்கும் அறியாமை நீங்கியொளிர்
இருந்தமிழர் நிலையூன்றி ஏற்றமுற்று வாழ்வதற்கும்
அருஞ்சேவை செய்துயர்ந்த அருந்தலைவர் பொன்னடிக்கே
நறுந்தமிழின் பாத்தொகுப்பை நன்மலராய்ப் படைக்கின்றோம்”

என்று எழுதி ‘‘கவிக்குலம் போற்றும் தமிழவேள்’’ நூலைத் தம் தலைவருக்கே காணிக்கையாக்கியவர். தமிழவேளை நினைவு கூறும் அரிய பாத்தொகுப்பு அந்நூல். தமிழவேளின் மறைவிற்குப் பின் அவரைப் பற்றி வெளிவந்த முதல் கவிதை நூல் மட்டுமல்ல, முதல் நூலும் இதுவாகும், அந்நூல் வெளியீட்டைத் தொடர்ந்து பல சிறப்பான நூல்களை எழுதி வெளியிட்டுப் பேரும் புகழும் பெற்றவராவார். அவரது 29வது நூல் ”நாட்டுப்புறத்தில்” என்ற கட்டுரைத் தொகுப்பு நூல். கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் நாடகம் என பல துறை நூல்களை வெளியிட்டு, அரை நூற்றாண்டுக்கும் மேலாக சிங்கப்பூர் தமிழிலக்கியத்திற்கு அருந்தொண்டாற்றியிருப்பவர் எனது ஆசிரியர் திரு மு.தங்கராசன் அவர்கள். அவர் ‘‘பொன்னி’’ மற்றும் ‘‘பொன்னரசன்’’ ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

தென்கிழக்காசியாவிலேயே ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளி என்னும் பெருமை பெற்ற, உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் நான் பயின்றபோது 1970களின் தொடக்கத்தில் அவரிடம் தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பாடம் கற்கும் அரிய வாய்ப்பை நாங்கள் பெற்றோம். அவரது தமிழ்ப் புலமையை அப்போது நாங்கள் கண்டோம். அழகுத் தமிழில் ஆவர் பாடம் நடத்தும் பேரழகைக் கண்டு, அவர் தமிழப் பேசும் அழகில் மயங்கிக் கிடந்தோம் என்று தான் சொல்ல வேண்டும். அதுவரை நான் பயின்ற தமிழாசிரியர்களிடமிருந்து அவர் மாறுபட்டுத் திகழ்ந்தார். உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் எங்களுக்குப் பாடம் கற்பித்தபோது, புதுப்புது தமிழ்ச்சொற்கள், நல்ல உச்சரிப்பு, தேவையான எடுத்துக்காட்டுகள் என அவர் எங்களுக்கு பாடம் நடத்தியதே, தனி பாணியாக, புதிய அனுபவமாக இருந்தது. அப்போது அவரது இன்னொரு பரிமாணத்தை நான் கண்டேன். ஆம். அவரது எழுத்தாற்றல்....

அப்போது ஒரு ஞாயிற்றுக்கிழமை நாளிதழில் (தமிழ்நேசன் என்று நினைவு) அவர் எழுதிய ‘‘உலர்ந்த உதடுகள்’’ என்ற சிறுகதை வெளிவந்தபோது அதைப் பார்த்து, படித்து வியந்தேன். மாணவர்களாகிய நாங்கள் அவரது தமிழாற்றலையும் எங்களுக்கு ஆர்வமூட்டும் வகையில், அவர் பாடம் கற்பிக்கும் முறைகளையும் கண்டு சொக்கிப் போனோம்.

கவிஞர், சிறுகதை எழுத்தாளர், நாடகக் கதாசிரியர், மேடைப் பேச்சாளர், நடிகர், சமூகத் தொண்டர் என பல முகம் காட்டி, நல்லாசிரியராகவும், நல்ல குடும்பத் தலைவராகவும் மிளிர்ந்தவர். இப்படியும் வகைப்படுத்தலாம், கல்விப் பணி, குடும்பப் பணி, இயல், இசை, நாடகம் என முத்தமிழ்ப்பணி இதுவே எங்கள் ஆசிரியரின் தனி பாணியாக இருந்தது.

அடுத்து, அவர் தோற்றுவித்த, ”தமிழவேள் நாடக மன்றம்”. தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்கள் மீது கொண்ட அளப்பரிய மதிப்பின் காரணமாக, 1962-ம் ஆண்டு அவர் பெயரில் மன்றத்தை நிறுவி அழகு பார்த்தவர் ஆசிரியர் மு.தங்கராசனார் அவர்கள். ‘‘சிங்கை - மலேசிய நாடுகளில் வாழ்ந்து வருகின்ற தமிழர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும், தமிழ் மொழி மேம்பாட்டுக்காகவும் அயராது பாடுபட்டுக் கொண்டு வரும் தனிப் பெருந்தலைவர் தமிழவேள் அவர்களின் பேரால் சிங்கை - மலேயா நாடுகளில் இதுகாறும் எந்தவொரு மன்றமும் இல்லாத காரணத்தால் தலைவர் தம் திருப்பெயரால் நாடக மன்றம் அமைத்திடுவோம் என்று அமைப்பாளர்கள் அனைவரும் ஒரு முகமாகக் கருத்துரைக்கவே, ”தமிழவேள் நாடக மன்றம்” என்று பெயர் சூட்டப்பட்டது” என்று மன்றத்திற்கு பெயர் சூட்டிய காரணம் கூறுகிறார் ஆசிரியர். மன்றத்தின் வழி பல நாடகங்களை மேடையேற்றி நாடகக் கலையை வளர்த்ததோடு, பல எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகள், கலந்துரையாடல்கள் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தியும் மூத்த கவிஞர்களை, எழுத்தாளர்களைப் பாராட்டி விழா எடுத்து, நிதி திரட்டித் தந்து கண்ணியப்படுத்தியதையும் சிங்கப்பூர்த் தமிழுலகம் என்றும் மறவாது.

ஆசிரியர் வழியில் மாணவன்

ஆசிரியர் மு.தங்கராசனார் அவர்களின் வழித்தடத்தில் அவர் போற்றும் மலேசிய, சிங்கப்பூர் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் பெயரில் நாங்களும் ‘‘தமிழவேள் நற்பணி மன்றம்’’ என்ற பெயரில் மன்றம் அமைத்து தமிழ்ப்பணி ஆற்றி வருகிறோம். முதுமையின் காரணமாக அம்மன்றத்தை அவர் கலைக்க முடிவெடுத்தபோது, சில நண்பர்கள் ஏன் கலைக்கிறீர்கள்? மன்றம் அப்படியே இருக்கட்டுமே என்றதற்கு, ‘‘தலைவர் பெயரால் அன்று ஓர் அமைப்பு இல்லை. எனவே அவர் பெயரால் 1958-ல் தமிழவேள் நாடக மன்றம் (பதிவு பெற்றது 1962-ல்) என்ற அமைப்பைத் தோற்றுவித்தேன். இப்போது, தமிழவேள் நற்பணி மன்றம் என்ற அமைப்பு இருக்கிறது. என்னுடைய மாணவர் தான் அந்த மன்றத்தின்செயலாளர்.மன்றம் மிகச் சிறப்பாக செயல்படுகிறது. அவரது நூற்றாண்டு விழாவை சிங்கப்பூரில் மட்டுமல்ல, தமிழகத்திலும், தமிழர் தலைவர் டாக்டர் கி.வீரமணி அவர்களின் ஆதரவில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்ட சிறப்பான விழாவாக நடத்திக் காட்டினார். பின் எதற்கு இரண்டு அமைப்பு?’’ என்று பெருந்தன்மையோடு எங்களை அரவணைத்துச் சொல்லியிருக்கிறார். அவரது பெருந்தன்மையை இப்போதும் நினைத்து உருகுகின்றோம்.

சிங்கப்பூர் வரலாற்றில் தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் பெருமைக்குரிய பணியாற்றிய தலைவரைப் பற்றி என் ஆசிரியர் ‘‘கவிக்குலம் போற்றும் தமிழவேள்’’ என்ற கவிதைத் தொகுப்பு நூலைத் தந்தார். அவர் மாணவரான, நான்” தமிழவேள் சாரங்கபாணி” என்ற வரலாற்றுத் தொகுப்பு நூலை 1998-ல் எழுதி வெளியிட்டேன். அவர் போற்றிய தலைவரை நானும் போற்றினேன். அவர் பெயரில் அமைந்த மன்றத்தின் செயலாளராக இருக்கிறேன். அவர் பெரிதும் மதித்துப் போற்றிய, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கலந்து கொண்ட, ‘‘தமிழவேள் நூற்றாண்டு விழா’’வை சென்னையில் நடத்தினோம். தமிழவேளின் 110வது பிறந்த நாளில், தமிழவேளைப் பற்றி அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துரைத் தொகுப்பு நூலான, ”தமிழவேள் பற்றி...” மற்றும் ‘‘The Legacy of G. Sarangapani’’ (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்களையும், சிங்கப்பூரின் ஆறாவது அதிபர் மேதகு எஸ்.ஆர்.நாதன் அவர்கள் வெளியிட்ட அந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் என் ஆசிரியரை பெருமை கொள்ளச் செய்திருக்கும் என்பதில் என்ன சந்தேகம்.

உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற போது, அவரிடம் ஆட்டோகிராப்பில் கையெழுத்து வாங்கியது மற்றொரு மறக்க முடியாத நிகழ்ச்சி.

“அன்பு நலம் செழிக்கட்டும்
அறிவு நலம் சிறக்கட்டும்
ஆன்றோர் ஆசிபெருகட்டும்”

என்று எழுதி கையெழுத்திட்டுத் தந்தார்.

அவர் மறைவதற்கு முன் தொகுத்து வெளியிட இருந்த, எதிர்பாராத விதமாக அவரது இரங்கற் கூட்டத்தில் வெளியீடு கண்ட ‘‘நாட்டுப்புறத்தில்’’ எனும் நூலை நான் படித்து இன்புற்றேன். நான் கேட்டு ரசித்த பல நாட்டுப்புறப் பாடல்கள் இப்பாத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நகர்புறத்தில் வாழ்ந்துக் கொண்டு ஏன் நாட்டுப்புறத்தில் என்ற தலைப்பை இந்நூலுக்கு ஆசிரியர் சூட்டியிருக்கிறார் என்று சிந்தித்தேன். அந்தத் தலைப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரையை (பக்கம் 141) படித்துப் பார்த்தேன். 1958 ஆம் ஆண்டு தமிழ் முரசு ஆண்டு மலரில் வெளிவந்த கட்டுரை அது .அந்தக் கட்டுரை எழுதியதன் பின்னணியைப் ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். ஆண்டு மலரில் சிங்கப்பூர் - மலாயா எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் அன்புகூர்ந்து வாய்ப்பளிக்க வேண்டும் என்று நண்பர்களோடு, தமிழவேள் அவர்களிடம் வேண்டுகோள் வைத்த அந்த ஆர்வத்தை எப்படிப் பாராட்டுவது. இலக்கியச் சுவை மிகுந்த இக்கட்டுரையை - நான் பிறப்பதற்கு ஓராண்டுக்கு முன்பே என் ஆசிரியர் எழுதியிருப்பதை படித்துப் பார்த்துப் பூரித்துப் போனேன்.

சிங்கப்பூர் ஒரு சின்னஞ் சிறிய தீவு- நகரம். நாடு. இங்கு வயல் வரப்பு, காடு கழனி, உழவுத் தொழில் விவசாயம் என்பதெல்லாம் கிடையாது. எனினும், தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு, கலாசார விழுமியங்கள் போன்றவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் (தை மாதத்தில்) பொங்கல் விழாவை விட்டில் இந்தியா வட்டாரத்தில் மட்டுமல்லாது, புக்கிட் பாஞ்சாங் மற்றும் குடியரசின் வேறு சில பகுதிகளிலும் கோலாகலமாகக் கொண்டாடி வருவது பாராட்டத்தக்கதாகும். அவ்வேளையில் தமிழகத்தின் சிறந்த நாட்டுப்புறக் கலைஞர்களை வரவழைத்து அவர்கள் பாடும் சிறப்பான நாட்டுப்பறப் பாடல்களைக் கேட்கும் நல் வாய்ப்பினைத் தமிழர்கள் பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும். தமிழ் மொழி விழா ஏப்ரல் மாதம் முழுவதும் மிக விமரிசையாக எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருவதை நாம் அறிவோம். எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும். தமிழன்னைக்கு மேலும் பல அணிகலன்களைப் பூட்டி அழகு சேர்த்திருப்பார்.

வாழ்க என் ஆசிரியர் தங்கராசனார் தமிழ்ப்பணி !
வளர்க அவரது புகழ்!

அன்புடன்,

எம். இலியாஸ்
செயலாளர் - தமிழவேள் நற்பணி மன்றம்
ஆசிரியர் - செம்மொழி -சமூக, இலக்கிய இதழ்
சிங்கப்பூர்

மகிழ்வுரை : மனத்திரையில் முத்திரை பதித்தவர்

நல்லாசிரியர் என்பவர் கற்பித்தலில் மட்டுமன்றி மாணவர்கள் மனங்களில் என்றும் நிலையான இடத்தைப் பிடித்திருக்க வேண்டும். அந்த வகையில், ஆசிரியர் திரு மு. தங்கராசன் அவர்கள் என்றும் எங்கள் மனங்களில் இடம்பிடித்திருப்பவர் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் அவர்கள் 1973-ஆம் ஆண்டு உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளிக்குத் தொடக்கப்பள்ளியிலிருந்து மாற்றலாகி வந்தார். நானும் அந்த ஆண்டு உயர்நிலை ஒன்றில் சேர்ந்தேன். அவர் எங்கள் வகுப்புக்கு, வகுப்பாசிரியராக இருந்ததோடு தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு ஆகிய பாடங்களையும் எங்களுக்குக் கற்பித்தார். அதனால், தினமும் அவர் எங்களுக்குப் பாடம் கற்பிக்கும் வாய்ப்பு இருந்தது.

அவர், ஒரு மணி நேரம் கற்பிக்க வேண்டிய பாடத்தை அரை மணி நேரத்தில் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர். எஞ்சிய அரை மணி நேரத்தை மாணவர்களின் திறன்களை அறிந்து, அவற்றை வளர்க்கும் முயற்சியில் செலவிட்டார். பாட்டு, கட்டுரை, நடிப்பு, பொது அறிவு எனப் பலவற்றில் நாங்கள் சிறந்து விளங்க எங்களை ஆற்றுப்படுத்தினார். கற்பிக்கின்றபோது தாம் சூரியனாகவும் மாணவர்களைச் சூரியகாந்தியாகவும் மாற்றும் அவரது திறமை எங்களை வியப்பில் ஆழ்த்தியது.

அவரின் மாணவர்கள் எந்தப் போட்டியில் கலந்துகொண்டாலும் பரிசு பெற்றார்கள். ‘போட்டியில் வென்றால் கிடைப்பது பரிசு; தோற்றால் கிடைப்பது அனுபவம்,’ என்னும் தாரக மந்திரத்தைக் கொண்டிருந்தார். உயர்நிலை மற்றும் தொடக்கக் கல்லூரிகளுக்கான கட்டுரைப் போட்டியில் எங்களைக் கலந்துகொள்ள ஊக்குவித்தார். நாங்கள் உயர்நிலை ஒன்று என்பதால் தயங்கினோம். எங்களில் மூவரைப் போட்டிக்கு அனுப்பினார். அப்போட்டியில் நான் முதல் பரிசு பெற்றேன்; என் நண்பன் ஆறுதல் பரிசு பெற்றான். குடத்துக்குள் விளக்காக இருந்த எங்கள் திறமையைக் குன்றின்மேலிட்ட விளக்காக்கினார். அதைப்போலவே எந்தப் போட்டி நடந்தாலும் எங்களைக் கலந்துகொள்ளச் சொன்னார். தேசியத் தொடக்கக் கல்லூரியில் நடைபெற்ற விவாதப்போட்டியில், “உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விவாதித்த தமிழ்மொழி நடை எதிரணியினருக்கு விளங்க முடியாத அளவுக்குக் கடுமையாக இருந்தது,” என்று நடுவர் சுட்டிக்காட்டும் அளவுக்கு மாணவர்களைத் தயார்செய்தார்.

மாணவர்களின் கட்டுரை அல்லது இலக்கிய வினாவுக்கான பதில் சிறப்பாக இருந்தால் அதைப் படித்துக்காட்டி வெகுவாகப் பாராட்டுவார். இலக்கியப் பாடப்பகுதிகளில் இடம்பெறும் இனிய சொற்றொடர்களை எவ்வாறு எழுத்துப் படைப்புகளில் பயன்படுத்துவது என்பதைச் சான்றுகளுடன் கற்பிப்பார். இலக்கணச் சான்றுகளுக்குச் சமகாலத்திலுள்ளவற்றைச் சான்றாகக் கூறுவார். குறிப்பாக, அணி இலக்கணத்தைக் கற்பிக்கும்போது திரைப்படப் பாடல்களைச் சான்றாகக் கூறுவார். தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்கு இட்டுச் செல்லும் ‘கானே’ என்னும் கல்வியாளரின் கற்பித்தல் உத்தியைப் பின்பற்றிச் சிறப்பாகக் கற்பித்தார்.

ஆசிரியர், உமறுப்புலவர் பள்ளியில் கற்பிக்கத் தொடங்கிய அதே ஆண்டு, உயர்நிலை நான்கிற்குத் தமிழ்மொழி மற்றும் இலக்கியம் கற்பித்த ஆசிரியர் பணியிலிருந்து

விலகிக்கொண்டார். அதனால், ஆசிரியர் இரண்டாம் பருவத்தில் காலையில் அந்த மாணவர்களுக்கும் பிற்பகலில் எங்களுக்கும் கற்பித்தார். அந்த ஆண்டுத் தேசியநிலைத் தேர்வு எழுதிய மாணவர்கள் தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் மற்ற ஆண்டுகளைவிடச் சிறப்பாகத் தேறினர். அதன் பின்னர் ஆண்டுதோறும் ஆசிரியர் அவர்களே உமறுப்புலவர் தமிழ்ப்பள்ளி இயங்கியதுவரை தேசிய நிலைத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இந்த இரண்டு பாடங்களையும் கற்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் அவர்கள், எங்களை இலக்கியத் தேனைப் பருகிடச் செய்தார். தொடர்நிலைச் செய்யுள் பகுதியைக் கற்பிக்கின்ற போது, அதில் வரும் பாத்திரமாகவே ஆசிரியர் மாறிவிடுவார். நா. பார்த்தசாரதியின் 'நெற்றிக்கண்' என்னும் புதினத்தைக் கற்பிக்கின்ற போது, எங்களைக் கதாமாந்தர்களாகவே வாழச் செய்தார். திரைப்படத்தில் சோகக்காட்சிகளைப் பார்ப்பதுபோல் அவரது கற்பித்தல் இருக்கும். சிலபோது பாடம் முடிந்த பின்னர்த் தொண்டை எல்லாம் புண்ணாகத் தோன்றும் அளவுக்குச் சோகத்தின் உச்சிக்கே கொண்டு செல்வார்.

எங்கள் வகுப்பில் படித்த ஒருவர் திருமணத்திற்குப் பின்னர், தமிழ்ப் புழக்கம் இல்லாத அயல் நாட்டில் வாழ்ந்து வந்தார். அவரது மணவாழ்க்கையில் சிக்கல் ஏற்பட்டதைப்பற்றி முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர்ச் சகமாணவருக்குத் தமிழில் கடிதம் எழுதி இருந்தார். அதில் அவர், "ஒரு செடியின் எந்தப் பாகம் பழுதடைந்தாலும் செடி துளிர்த்துக்கொள்ளும். ஆனால், வேர் பட்டுவிட்டால்... என் வாழ்க்கை வேர் துளசியின் (நெற்றிக்கண் புதினத்தின் நாயகி) வாழ்க்கைபோலவே பட்டுவிட்டது. எனக்குச் சாற்றப் பிறர் இல்லை; சரியத் தோள் இல்லை; போய்ச் சேரக் கரை இல்லை," என்று எழுதி இருந்தார். இதைப் படித்தபோது என் விழியின் ஓரங்களில் கசிந்திருந்த கண்ணீரை என்னால் மறைக்க முடியவில்லை. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தமிழ்மொழியை மறக்க முடியாத அளவுக்கு ஆசிரியரின் கற்பித்தல், ஈடுபாடு மிக்கதாக இருந்தது.

நான், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தபோது, நல்லாசிரியர் யார்? எதிர்மறையானவர் யார்? என்று பேராசிரியர் திரு ச. தெய்வநாயகம் அவர்கள் எழுதச் சொன்னார். நான் என் ஆசிரியர்கள் திரு மு. தங்கராசன் அவர்களையும், திரு க. இராசப்பன் அவர்களையும் முன்னிலைப் படுத்திக்கொண்டு கருத்துகளை எழுதினேன். என்னுடைய கருத்துகளைப் படித்துவிட்டுத் திரு ச. தெய்வநாயகம் அவர்கள், "நீங்கள் குறிப்பிட்டுள்ள நல்லாசிரியரின் பண்புநலன்களை நீங்களும் பெற்று நல்லாசிரியராகத் திகழ வாழ்த்துகிறேன்," என்று குறிப்பு எழுதி இருந்தார். எனக்கு முன்மாதிரியாகவும் ஆலோசகராகவும் விளங்கிய திரு மு. தங்கராசன் அவர்கள் என் உள்ளம் என்னும் தரையில் முத்திரை பதித்தவர். ஆசிரியரைப்பற்றிப் புகழ்ந்து சொன்னால், சொல் மாளாது; எழுதினால் ஏடு கொள்ளாது.

திரு அ. இளங்கோ
ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி (தமிழாசிரியர்)
சிங்கப்பூர்

நன்றியுரை

மதுரை மாநகரின் உலகத் தமிழ்ச் சங்கம், குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் ஆகியவற்றின் சீரிய முயற்சியில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் இனியே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில் இயற்கை எய்திய சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் படைப்பாக்கங்களை ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டு இக்கருத்தரங்கம் அமையப் பெற்றிருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழாசிரியராக சேவையாற்றிய மு. தங்கராசன் தம் எழுத்துப் படைப்புகளால் சமூகப்பணியாற்றிச் சிறந்த படைப்பாசிரியராகவும் பரிணமித்துள்ளார். கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை என 25 நூல்களுக்கு மேல் படைத்தளித்துள்ள அன்னாரின் மொழித் தொண்டு சிங்கையில் மட்டுமன்றி உலக அளவில் அறியப்பட வேண்டுமென்னும் நோக்கில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் தலைமையுரையாற்றிய உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர், முனைர் தா. லலிதா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய சிங்கப்பூரின் தமிழறிஞர் முனைவர் சுப. திண்ணப்பன் அவர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றி. தொடக்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகையளித்துச் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களுக்கும், ஆசியுரை வழங்கி வாழ்த்தியருளிய குருமகாசந்திதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழறிஞர் மு. தங்கராசன் அவர்களின் படைப்பாக்கங்கள் என்பதே இக்கருத்தரங்கின் மையப்பொருளாகும். அன்னாரின் நூல்கள் பலவும் மின்னூலாக்கப்பட்டுச் சிங்கப்பூர் தேசிய நூலகத்தின் இணையப்பக்கத்தில் கிடைக்கப்பெறுவதால் ஆய்வுப்பணி எளிதில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர்கள் பலரும் இணையத்தின் துணைகொண்டு அந்நூல்களை முறையே பார்வையிட்டுத் தம் ஆய்வுக்கட்டுரைக்கு ஏற்ற வகையில் நூல்களைத் தெரிவுசெய்து ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்தளித்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் இக்கருத்தரங்கிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டன. அவை இரண்டு தொகுதிகளாக நூல் வடிவம் கண்டுள்ளன. பெரும் சிரத்தையோடும் ஈடுபாட்டோடும் ஆய்வுக்கட்டுரைகளை உரிய காலத்தில் அனுப்பி, இன்று சீரிய முறையில் அவற்றைப் படைத்தளித்த ஆய்வாளர்கள் அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். மு. தங்கராசனின் அவர்களின் நூல்களில் வெளிப்படும் மொழிப்பற்று, சமுதாயப் பார்வை, வாழ்வியல் நோக்கு, கவித்துவம் முதலான கூறுகளை நன்முறையில் ஆய்வுசெய்து படைப்புகள் சிறப்பாக அமையப்பெற்றுள்ளன.

இக்கருத்தரங்கின் நிறைவு விழாவிற்குத் தலைமையேற்றுச் சிறந்த முறையில் உரை நிகழ்த்திய மதுரை காமராஜர் பல்கலைக்கழக, தமிழியற்புலத்தின் மேனாள் தலைவர், முனைவர் மு. மணிவேல் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய காந்திகிராம கிராமியப்

பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் ஒ. முத்தையா அவர்களுக்கும், அனுபவ உரை நிகழ்த்திய சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் மதியுரைஞர், திரு சி சாமிக்கண்ணு அவர்களுக்கும், சிறப்புரையாற்றிய எழுத்தாளர் சோ.தர்மன் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்து.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கு சீரும் சிறப்புமாக நடந்தேறுவதற்கு நல்லறிஞர்களும் பேராசிரியப் பெருமக்களும் பல்லாற்றானும் உதவியுள்ளனர். அவர்களது சீரிய முயற்சியில் இக்கருத்தரங்கு தாம் வகுத்துக்கொண்ட இலக்கை இனிதே எய்தியுள்ளது. உலகத் தமிழ்ச் சங்கமும், குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு மையமும் ஒன்றிணைந்து அயல்நாட்டுத் தமிழறிஞர் மு. தங்கராசனாரின் படைப்பாக்கங்களை மையப்படுத்திப் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்து நடத்துவதற்கு உதவிய முனைவர் பா. சிங்காரவேலன், முனைவர் ந. இரத்தினக்குமார், முனைவர் ஆ. பூமிச்செல்வம், முனைவர் சே. பாலகிருஷ்ணன் ஆகிய பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். நற்றமிழ் செழித்தோங்க நாளும் கடமையாற்றுவோம். வணக்கம்.

கருத்தரங்கில் நடுவர்களாக இருந்து சிறந்த கட்டுரைகளைத் தேர்வு செய்த பேராசிரியர் மு மணிவேல், பேராசிரியர் பெ.க.பெரியசாமி ராசா, பேராசிரியர் ஆ.த. பரந்தாமன், ஆகியோருக்கும் நன்றிகள்.

அன்புடன்

முனைவர் த. வேணுகோபால்

கல்வி அமைச்சு

சிங்கப்பூர்

BODHI

INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

Vol: 6 **Special Issue 2** **November 2021** **E-ISSN: 2456-5571**

Aim & Objectives

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of books; motivating dissemination of research results for people and society.

Disclaimer

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

Communication

Papers should be mailed to bodhijournal@gmail.com

CONTENTS

S. No.	Chapters	Page No.
1	மு. தங்கராசனின் சிந்தனைப்புலம் **முனைவர் சே. பாலகிருஷ்ணன்**	1
2	சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் தமிழ்ப்பணி **ச. பாலமணிகண்டன்**	8
3	மு.தங்கராசனின் நாட்டுப்புறத்தில் காணலாகும் இறைவழிபாட்டு முறைகள் **மு. பாலமுருகன்**	13
4	'வாகைப்பூக்கள்' கவிதையில் பன்முகப் பார்வை **சு. பால்மோகன்**	17
5	எம்.தங்கராசனின் நாடகத்திற்கான பங்களிப்பு **ஆர். பிரியதர்ஷினி**	21
6	மு. தங்கராசனின் "சிந்தனைப் பூக்கள்" சிறுகதைத் தொகுப்பு காட்டும் சமுதாயச் சிக்கல்கள். **பிரியா. க**	24
7	பன்முக நோக்கில் அமுதத்தமிழ் **செ. பூமாதேவி**	28
8	ஒரு புகலிடவாசியின் சில நாடக முயற்சிகள் **முனைவர் ஆ. பூமிச்செல்வம்**	31
9	மலர்க்கொத்து சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள் **முனைவர் இல. பூர்ணிமா ஜோதி**	39

10	கவிஞர் மு. தங்கராசனின் பன்னூல் புலமைத்திறன் **முனைவர் மா. பெரியசாமி**	44
11	‘கடல் விரித்த தமிழ் ஆளுமைக்’ கவிஞர் மு. தங்கராசன் **முனைவர் பா. பெரியவர்**	48
12	மு. தங்கராசனின் ‘சூரியகாந்தி’ கவிதைத் தொகுப்பு நூலில் மொழி, நாடு, சமுதாயம் **முனைவர் ரோமா. பேச்சிமுத்து**	53
13	மு. தங்கராசனின் ‘மணக்கும் மல்லிகை’ சிறுகதைத் தொகுப்பு காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் **மகாலட்சுமி. மா**	57
14	தியாகச் சுடர்கள் **ப. மகாலெட்சுமி**	60
15	‘சிந்தனைப் பூக்கள்’ சிறுகதைத் தொகுப்பில் இழையோடும் புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் **நா. மணிகண்டபிரபு**	64
16	‘மாதுளங்கனி’ கவிதையில் வாழ்வியல் அறம் **முனைவர் சு. மலர்விழி**	72
17	சூரியகாந்தி கவிதைத் தொகுப்பில் கவிஞர் மு. தங்கராசனின் சமுதாயப் பார்வை **சே. மாசிலாமணி**	75
18	மு.தங்கராசுவின் ‘சூரிய காந்தி’ கவிதைத் தொகுப்பில் இலக்கியச் செறிவு **வெ. மாரிச்செல்வி**	78
19	கவிமொழியும் நம்பிக்கைகளும் (சிங்கப்பூர் மு.தங்கராசன் கவிதைகளை முன் வைத்து) **ம. மீனாட்சி சுந்தரம்**	81
20	சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனாரின் படைப்புத் திறனில் சமூகச் சிந்தனையும் தமிழ் வளர்ச்சியும் **பேரா. பா. முத்தீஸ்வரி**	85
21	மாதுளங்கனி கவிதைத் தொகுப்பில் உழைப்பின் மகத்துவம் **பேரா. து. முத்துக்குமார்**	90
22	புலம்பெயர் தமிழரின் நாட்டார் வழக்காற்றியல் பதிவுகள் **முனைவர் பெ. முத்துராஜ்**	93
23	மு. தங்கராசனின் ‘வாகைப்பூக்கள்’ நூலில் தன் வரலாற்றுப் பதிவுகள் **இ. முருகலெட்சுமி**	103
24	சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி: மு.தங்கராசனின் ‘தமிழ் எங்கள் உயிர்’ நூலை முன்வைத்து… **வெ. முருகன்**	108
25	புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளரின் மொழி ஆளுமை **முனைவர். இரா.முருகானந்தம்**	113
26	அமுதத்தமிழ் : கல்வியும் அறமும் **செ. மெல்வின் ராஜா**	121
27	மு.தங்கராசன் ஐயா கவிதையில் கையாண்ட தானம் **சு. ராஜா**	124
28	மு. தங்கராசன் சிறுகதைகளில் மொழிநடை **முனைவர் செ. ரெஜினா**	127
29	மு. தங்கராசனின் ‘நாட்டுப்புறத்தில்’ தாலாட்டு **முனைவர் அ. ரேவதி**	133
30	“வாகைப் பூக்களில்” விரியும் மரபும் புதுமையும் **டாக்டர். லாவண்யா ஜெயராம்**	138

31	மு. தங்கராசனின் 'அபூர்வ நண்பர்கள்' என்ற சிறுகதையில் சமுதாயச் சிந்தனை **முனைவர் சா. வினோலியா சாலொமி சந்திரகாந்தம்**	142
32	கவிஞர் மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் சமுதாயச் சிந்தனைகள் **முனைவர் இரா. விஷ்ணுப் பிரியா**	145
33	'பொய்கைப்பூக்கள்' கவிதையில் சமுதாயச் சிந்தனை **முனைவர் கி.வேணுகா**	152
34	'உதயம்' கவிதைத் தொகுப்பில் மனிதநேயச் சிந்தனைகள் **முனைவர். பா. ஜான்சன்**	154
35	மு. தங்கராசனின் 'உதயம்' கவிதையில் பண்புகள் **மு. ஜான்சி**	159
36	சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் கட்டுரைகளில் 'வேதாகமத் தாக்கம்' **பா. ஜில் டேனியல் தங்கராஜ்**	163
37	கவிஞர் மு. தங்கராசனின் 'பனித்துளி' கவிதைத் தொகுப்பின் வழி வாழ்வியல் சிந்தனைகள் **முனைவர். ந.ஜெயசுதா**	167
38	மு. தங்கராசனின் 'வாகைப்பூக்கள்' கவிதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள் **முனைவர் இரா.ஜெயந்தி**	171
39	"பூச்செண்டு" சிறுகதையில் படைப்பு உளவியல் - ஓர் பார்வை **மு. ஜெயலட்சுமி**	175
40	மணக்கும் மல்லிகை சிறுகதைத் தொகுப்பில் குடும்பச் சூழல்கள் **திருமதி. ஜெயஜோதி**	181
41	மு.தங்கராசனின் 'பதமியம்' **முனைவர் சை. ஜெஸிமா**	185
42	ஏட்டின் எழுதாப் பாடல் தொகுப்பாளி மு. தங்கராசன்: நாட்டுபுறத்தில் எனும் நூலை முன்வைத்து **முனைவர் த.ஸ். ஸாம்தாஸ்**	191
43	மு.தங்கராசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் **திருமதி அ.ஸ்ரீ ஜனனி**	195
44	மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதை உணர்த்தும் சமூகச்சிந்தனை **முனைவர் இர. ஷீலாராணி**	199
45	மு. தங்கராசனின் சிறுகதைகளில் களமும் கதையாடலும் **ப. ஷேக் செய்யது அலி**	206
46	மு.தங்கராசனின் 'உதயம்' – வார்த்தைகள் கட்டமைக்கும் சமூக அறம் **முனைவர் பெ.ஹென்றி ஜூலியஸ்**	210
47	தமிழறிஞர் மு. தங்கராசனின் 'தமிழ் எங்கள் உயிர்' கட்டுரைத் தொகுப்பில் தமிழுணர்வு **முனைவர் பெ. கி. கோவிந்தராஜ்**	220
48	மு.தங்கராசனின் சிறுகதைகளில் 'பெண்கள் குறித்த மரபுவழிக் கருத்தாக்கங்கள்' **முனைவர் ம.செங்கோல் மேரி**	225
49	சிங்கையில் தமிழ்ச் சமுதாயமும் பண்பாடும் **முனைவர் செ. சோபியா பெஞ்சமின்**	229

50	கவிஞர் மு. தங்கராசனார் கவிதைகளில் சமூக அறச் சிந்தனைகள் **திரு ம. ஞானசேகரன்**	233
51	‘வாகைப்பூக்கள்’ கவிதைகள் - பன்முக ஆய்வு **முனைவர் ஜோ. பிரின்ஸ்**	237
52	'மஞ்சள் கயிறு' முன்வைக்கும் தமிழ்ப் பண்பாடு **பேரா. மா. மீனாட்சிசுந்தரம்**	240
53	நாடகப் படைப்பாக்கங்களில் புலனாகும் “நாடகக் கட்டமைப்புக் கூறுகள்” **முனைவர் சு. மேகலா**	243
54	‘மணக்கும் மல்லிகை’ சிறுகதைத் தொகுப்பில் காட்சிப்படுத்தப்படும் இளைஞர்களின் வாழ்வியல் சிக்கல்கள் **ரா. ஜெனிபர்**	248
55	நாட்டுப்புறத்தில் காதல் **அ. தேன்மொழி**	252
56	தாலாட்டுப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் **முனைவர் பா. நேருஜி**	257
57	மு. தங்கராசனின் ‘பூச்செண்டு’ புலப்படுத்தும் தமிழர்களின் வாழ்வியல் **க. முருகன்**	261
58	சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் ‘மலர்க்கூடை’ சிறுகதைத் தொகுப்பில் பண்பாட்டு அம்சங்கள் **க. தேவசேனா**	267
59	மு. தங்கராசனின் “மாதுளங்கனி” புலப்படுத்தும் சமுதாயச் சிந்தனைகள் **முனைவர் அ. கணேசன்**	269
60	‘வாகைப் பூக்கள்’கவிதைத் தொகுப்பில் ‘வாகை சமுதாயம்’ **தி. சரஸ்வதி**	272
61	மு. தங்கராசனின் அணிகலன் கவிதை காட்டும் சமூகப் பார்வை **முனைவர் மு. இராஜலெட்சுமி**	274
62	மு. தங்கராசனின் “தமிழ் எங்கள் உயிர்” என்னும் கட்டுரைத் தொகுப்பில் பழமொழிகள் **முனைவர் த. அமுதா**	278
63	“மலர்கொத்து” சிறுகதைகளில் வாழ்வியல் **முனைவர் வெ.பரிமளம்**	283
64	பன்முகநோக்கில் மகரந்தம் கவிதைப் படைப்பு **முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்**	288

மு. தங்கராசனின் சிந்தனைப்புலம்

முனைவர் சே. பாலகிருஷ்ணன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

அறிமுகம்

“மு. தங்கராசனின் சிந்தனைப்புலம்” என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரை சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப்பரப்பில் நிகழ்ந்த மாற்றம் பற்றிய ஒரு விவரணையே. ‘மு. தங்கராசன்’ என்ற தமிழாளுமையைக் கொண்டு அவரின் படைப்பாக்கச் செல்திசையை வாசிக்க முயலுகிறது. சிங்கப்பூர்க் கல்வி வரலாற்றைக் கட்டமைப்பதிலும் தமிழ்க்கல்வி பயிற்றுவித்தலிலும் தமிழ் மாணவர்கள் பலரை உருவாக்கியதிலும் இவருடைய பங்களிப்புகள் அளப்பரியன. அதே சமயம் சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சிக்கு உயிர்ப்புடன் செயலாற்றி, நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, நாட்டார் இலக்கியம் போன்ற படைப்பிலக்கிய முயற்சிகளில் தொடர்ந்து இயங்கியவர். அந்த வகையில் சிங்கப்பூர்க் கலை, இலக்கிய உன்னதங்களை அறிவுத்தளத்திலும் வெகுசன வெளியிலும் இணைத்த இவரின் படைப்பாக்கங்களை முன்வைத்து வாசித்துப் பார்க்கிறது இக்கட்டுரை.

“கலை - கலாச்சாரப் பெருமிதங்களுக்காகப் பட்ட பாடுகளை எல்லாம் நூல் வடிவில் கொண்டு வரவேண்டும்” (தாழம்பூ: முன்னுரை, ப.10) என்று தமது நூலாக்க முயற்சிகளைப் பற்றிக் கூறும் ஆசிரியர், தமிழகத்தில் திருச்சி தளுகை பாதர் பேட்டையைச் சேர்ந்தவர். 1935ஆம் ஆண்டு பிறந்த இவர் 1938 இல் தமது மூன்றாவது அகவையில் பெற்றோருடன் ஒருங்கிணைந்த மலாயாவிற்குப் புலம் பெயர்ந்தவர். ஜப்பானியரின் வருகை, வெள்ளையரின் காலனித்துவம், ஒன்றுபட்ட மலாயா என்று மூன்று ஆட்சிக்காலக் கட்டங்களையும் பார்த்தவர். ஐம்பதுகளின் பிற்பகுதியில் தமது ஆசிரியர் பணியியைத் துவக்கிய இவர் இனம் - மொழி - சமுதாயப் பற்றுமிக்கவராகத் தமிழ் அமைப்புகளில் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். பொதுப் பணியிலும் தம்மை முன்னிறுத்திக் கொண்ட சமூகச் செயற்பாட்டாளர். சிறந்த தமிழாசிரியர். நூலாக்கம் எண்பதுகளில் வெளிவந்திருப்பினும் ஐம்பதுகளில் பிற்பகுதியில் எழுதத் துவங்கியவர். சிங்கப்பூர் இலக்கிய வகைமைகளில் ஒரு புதிய போக்கை உருவாக்கியவர். தமது பல்துறை சார்ந்த அறிவுடன் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் புலத்தில் கவிஞர், நடிகர், உரையாளர், சிறுகதையாசிரியர், நாடகவியலாளர், சமூகவியலாளர் எனப் பரிமாணங்களில் இவரது ஆளுமை படர்ந்திருந்தது.

கலைமகள் தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராக, செம்பவாங் தமிழர் சங்கத் தமிழ்ப் பள்ளியில் தலைமையாசிரியராக, செம்பவாங் தமிழர் சங்கத்தின் செயலராக, தமிழவேள் நாடக மன்றத்தின் நிறுவனராக, உமறுபுலவர் தமிழ்

உயர்நிலைப்பள்ளியில் தமிழ்மொழியும் - இலக்கியமும் பயிற்றுவிக்கும் தமிழாசிரியராக, சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு தமிழ்ப்பாட நூலாக்க வல்லுநராகச் செயலாற்றியவர். தொடர்ந்து தமிழ் முரசு, தமிழ் நேசன் நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி வழியாக பரந்த அளவில் இலக்கியப் பணியாற்றியவர். இவரது ஆசிரிய, கலை, இலக்கியப் பணிகளுக்காக 2012 ஆம் ஆண்டில் வாழ்நாள் நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர்ச் சமூக வரலாற்றில் ஐம்பதுகள் இன எழுச்சிமிக்க மிக முக்கியமான ஒரு காலக் கட்டமாகும். இன எழுச்சியோடு தன்னாட்சி உரிமையை எதிர்நோக்கி கலக குரல் எழுந்த காலம் அவை. சீனர்கள் சீனக்கல்வி இலக்கியத்தின் வாயிலாகவும், மலாய்க்காரர்கள் “Angatan Sastrawan 50” என்ற இலக்கிய இயக்கத்தின் வாயிலாகவும் தங்கள் இன, மொழிப் பண்பாட்டுக் கலாச்சார மேம்பாடுகளைத் தீவிரப்படுத்திய போது, சிங்கப்பூர்த் தமிழர்கள், ஒரு வித முனைப்போடு இன எழுச்சிக்கான செயல்களில் ஈடுபட்டனர். சிங்கப்பூரில் இயங்கிய தமிழ்ப்பள்ளிகள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்க் கல்விக் கழகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. அக்காலத்தில், தமிழ் வளர்ச்சி தொடர்பாகவும், இன எழுச்சி தொடர்பாகவும் சிங்கப்பூர் மலாயாத் தமிழர்கள் செயல்பட்டனர். இத்தகைய முனைப்பான செயலாக்கப் பின்புலத்தில் மு. தங்கராசன் ஆசிரியர் பணியிலும் படைப்பாக்க முயற்சிகளிலும் ஒரு சேரப் பயணித்தார் என்று கூறலாம்.

மு. தங்கராசனின் படைப்பிலக்கியப் பங்களிப்புகள்

சிங்கப்பூர் மலாயாத் தமிழர்களின் வாழ்வியலை அறிந்து கொள்வதற்கு இவருடைய படைப்புகள் துணை புரிவதோடு, சிங்கப்பூர் இலக்கியக் களத்தில் ஒரு புதிய சிந்தனையை உருவாக்கின.

இவரது படைப்புகள்...

நாடகத் தொகுப்புகள்: தாழம்பூ, தாமரைப்பூ, மணங்கவர் மலர்கள், விண்வெளிப்பூக்கள், சாமந்திப் பூக்கள், முற்றத்து முல்லைகள்.

சிறுகதைத் தொகுப்புகள்: பூச்செண்டு, சிந்தனைப் பூக்கள், மலர்க் கொத்து, மலர்க் கூடை, மணங்கமழும் பூக்கள், கற்பனை மலர்கள், மணக்கும் மல்லிகை,

கவிதைத் தொகுப்புகள்: கவிக்குலம் போற்றும் தமிழவேள், அணிகலன், உதயம், மகரந்தம், மாதுளங்கனி, பனித்துளிகள், பொய்கைப் பூக்கள், நித்திலப்பூக்கள், வாகைப்பூக்கள், இன்பத்திருநாடு, சூரிய காந்தி.

கட்டுரைத் தொகுப்பு: தமிழ் எங்கள் உயிர், இன்பத் தமிழ், அமுதத் தமிழ்

நாட்டுப்புற இலக்கியம்: நாட்டுப்பறத்தில் அவ்வகையில் மு. தங்கராசனின் புனைவுலகம் வாசிப்பாளனுக்கு சிங்கப்பூர் மலாயாச் சமூகத்தின் உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாகவும், படைப்புகள் வெறும் நிகழ்ச்சிக் கோர்வையாக / தட்டைப் பிரதியாக இல்லாமல் உணர்வு நிலைகளை நோக்கியதாகவும் இருப்பதை வகைப்படுத்தி உரைக்கலாம்.

நாடகப் பிரதிகளும் கலை வெளிப்பாடும்

மு. தங்கராசனின் முதல் எழுத்துலகப் பிரவேசம் ‘வஞ்சகி தானா?’ என்ற தலைப்பில் சிறுகதை

(1955) தமிழ் முரசு நாளிதழில் வெளிவந்தது என்றாலும், 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற ஓரங்க நாடகத்தின் மூலமே இவரது படைப்பாக்கச் செயற்பாடு துவங்குகிறது (தாமரைப்பூ: ப. 18). நாடகத்துறையின் மீதுள்ள ஈடுபாடு காரணமாக ஏறத்தாழ 1961 – 1975 வரையிலான காலக் கட்டத்தில் இவருடைய நாடகப் பங்களிப்பைத் தனித்துவமாக வரையறுக்க முடியும்.

1953 ஆம் ஆண்டு மலாயா – ஜொகூர் மாநில, ஜொகூர்பாரு மாவட்ட 'மாசாய்' புறநகர் பகுதியில் இயங்கி வந்த 'காந்தி நினைவுப் பொதுப்பள்ளி'யில் நிகழ்ந்த பெற்றோர் தின விழாவையொட்டி, ஓரங்க நாடகம் படைக்கும் பொறுப்பினையேற்றுக் கொண்ட போது உருவானதே 'விதியை வெல்லலாம்' என்ற நாடகம். பின்னர் மலாயா – குளுவாங் மாவட்ட 'புக்கிட் பெனுட்' தோட்டத் தமிழ்ப்பள்ளிக்கு மாறுதலாகிய போது இளைஞர்கள் பலரை நாடக முயற்சியில் ஈடுபடுத்தி 'சேரன் செங்குட்டுவன்' என்ற வரலாற்று நாடகம் மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து 1959 இல் கலைமகள் பள்ளியில் பணியாற்றும் காலத்தில் 'பதவி மோகம்', 'எல்லாம் நன்மைக்கே', 'ஏமாந்தது யார்', ஆகிய நாடகங்கள் பள்ளி மாணவர்களைக் கொண்டு படைக்கப்பட்டன. 1961 ஆம் ஆண்டு சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகம் சார்பாக கிராமிய நடனம் மற்றும் பாடல்களின் பின்புலத்தில் 'மணமகன் யார்' என்ற மேடை நாடகம் அரங்கேற்றப்பட்டது.

செம்பவாங் தமிழர் சங்கத் தமிழ்ப் பள்ளிக்கு பணி மாறுதலாகிய போது, சிங்கப்பூர் ஆசிரியர்கள் சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் பங்கேற்று 'தியாகி' என்ற வரலாற்றுக் கற்பனை நாடகம் படைக்கப்பட்டு முதல் பரிசு பெற்றது. 1963 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் தொலைக்காட்சி ஒளிபரப்பு துவக்கப்பட்ட போது, சிங்கப்பூரின் வரலாற்றுப் பின்னணியை மையமாகக் கொண்டு 'ஆளவந்தான்' என்ற நாடகம் ஒளிபரப்பாகியது. சிங்கப்பூர்த் தொலைக்காட்சித் தமிழ்ப் பிரிவில் ஒளிபரப்பாகிய முதல் நாடகம் என்ற பெருமைக்குரியதாக இந்நாடகம் அமைந்தது. நாடகத்துறையின் ஈடுபாட்டால் 'தமிழவேள் நாடக மன்றம்' என்ற அமைப்பின் மூலம் ஏறத்தாழ பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றிய பெருமை இவரையே சாரும். 'கவியின் கனவு', 'தியாகச் சுடர்', 'நான் கண்ட கனவு', 'கண்ணைப் பறித்த காதல்', 'அத்தை மகன்', 'எதிரொலி', 'ஏணி(னி)ப்படி', 'புத்தொளி' (புதுவெளிச்சம் என்ற மலையாள நாடகத்தின் மொழிபெயர்ப்பு) ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும், செம்பவாங் ஆர்ட்ஸ் புரடக்ஸன்ஸ் நாடக மன்றத்திற்கு எழுதிக் கொடுத்த 'வானவில்' நாடகம் அரங்கேறாமல் போய் விட்டதையும், 'இலட்சிய வாழ்வு', 'நீதி எங்கே' ஆகிய இரு நாடகப் பிரதிகள் தொலைந்து போனதையும் தமது குறிப்புரையில் பதிவு செய்திருக்கிறார் மு. தங்கராசன் (தாமரைப்பூ: ப.25).

ஓர் இலக்கியப் படைப்பும் ஒரு நாடகப் பிரதியும் வேறுபட்ட அளவுகோல்களுடன் இயங்குகின்றன. ஓர் இலக்கியப் படைப்பென்பது தன்னளவில் புனைவுகளுடனான சித்திரிப்பே. ஆனால், ஒரு நாடகப் பிரதி பெரும்பாலும் தனக்குரிய வாழ்வியலை மனத்தில் வைத்தே

உருவாக்கப்படுகிறது. பால்ய கால நண்பர்களின் கல்வி பயணத்தில் நிகழும் மனவியல்புகளை 'எதிரொலி' நாடகம் காட்சிப்படுத்துகிறது. மதங்கள் கடந்த அன்பின் பெருவலியை ஜோசப், கந்தன், கதீஜா ஆகியோரின் அகவாழ்வின் அர்ப்பணிப்பை 'தியாகச் சுடர்' வலியுறுத்தகிறது. கணவனை இழந்த கைம்பெண் மரியத்தின் வாழ்வில் கண்ணன் மூலம் ஏற்படும் மறுமலர்ச்சியைத் தோட்டப்புறச் சூழலில் நிகழ்ந்த உண்மை நிகழ்வை அடிப்படையாக வைத்து 'அத்தை மகன்' படைக்கப்பட்டிருக்கிறது. குடும்ப உறவின் மேன்மையை, பகைமையை, அதிகார வேறுபாட்டை அண்ணன் - தங்கை பாசத்தினூடாக 'வானவில்' விளக்குகிறது. சிங்கப்பூர்த் தொழில் வளர்ச்சியின் அபரிமிதமான போக்கினை, உயரிய இலட்சிய மாந்தர்களாக, உன்னதமான குடிமக்களாகச் சிங்கப்பூர் மக்கள் வாழ வேண்டும் என்ற வேட்கையை 'ஏணி(னி)ப்படி' பார்வையாளருக்குள் விதைக்கிறது. ஒரு பெண்ணை இருவர் நேசிக்கும் காதலைக் குடும்ப உறவுகளுடன் நேர்த்தியாக விவரிக்கிறது 'மணமகன் யார்'.

இவருடைய நாடகப் பிரதிகளில் வெளிப்பாடு கொள்ளும் கதை மாந்தர்கள் அதிக வலியுறுத்தல்கள் இன்றி, மனித இயல்புகளின் பல்வேறு நெகிழ்வுகளை, சாத்தியங்களைச் சரளமாகப் புலப்படுத்தும் வகையில் படைக்கப்பட்டுள்ளனர். முக்கியமாக, குடும்பம், சகோதர உறவுகள், நட்பு, திருமணம், காதல், ஏமாற்றம், பகைமை போன்றன ஒரு ஸ்தூலமான நாடக இயல்பில் சமனப்பட்டு விடுவதை பிரதியின் வாசிப்பினூடாக அறிய முடிகிறது. மேலும், கதை மாந்தர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு நிகழ்வுக்குப் பிறகும் திருத்துபவர்களாக – ஏற்றுக் கொள்பவர்களாக மாறுகிறார்கள். முரணியச் சிந்தனையுடையவர்கள் மரபைக் கடந்து செல்வதற்கான உத்வேகங்களையும் அதற்கான முகாந்திரம் கொண்டவர்களாகவும் நாடகப் பிரதியில் அறியப்படுகிறார்கள்.

கல்விக் கற்கைத் தளங்களில் நாடகப்பிரதிகள் சிக்கல் மிக்கவை என்னும் கருத்தியலுக்கு மாற்றாக நாடக எழுத்து, நிகழ்வு, உரையாடல், அரங்கப் பின்புலம், மொழி நடை இப்படியான புதிய பரிசோதனைகளைத் தொடர்ப் பயிற்சிகளின் மூலம் மு. தங்கராசன் சாத்தியப் படுத்தியிருக்கிறார். சிங்கப்பூர் நாடக வரலாற்றில் இவரின் நாடக முயற்சிகள் பெரிதாகப் பேசப்படாமல் போயினும் அவ்வளவு எளிதாகப் புறந்தள்ளி விடமுடியாது என்பதே நிதர்சனம்.

கதையாக்க மொழிவும் தனித்துவமும்

சிங்கப்பூரர்களின் தனி உணர்வுகளையும் அவர்களுக்கே உரிய வாழ்வியல் சிக்கல்களையும் இவருடைய சிறுகதைப் படைப்புகளில் காண முடிகிறது. "புதுமைப்பித்தன் நெல்லைப் பகுதிக் கதை மாந்தரையும், தி.ஜானகிராமன் தஞ்சைப் பகுதிக் கதை மாந்தரையும், நான் மதுரை, இராமநாதபுரம் பகுதிக் கதை மாந்தரையும் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பதைப் போலத் தங்கராசன் சிங்கைத் தமிழரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு நிறைய எழுத முடியும். அதற்கான அனுபவமும் திறனும் அவரிடம் இருக்கிறது" (சிந்தனைப் பூக்கள்: அணிந்துரை,ப.5) என்று மு.தங்கராசன் கதைகள் பற்றி நா. பார்த்தசாரதி தமது முன்னுரையில் குறிப்பிடுவதன் மூலம் இவரது கதைத்துவம், கதை சொல்லியின் குரலாக இல்லாமல் கதையை நடத்திச்

செல்பவனின் குரலாக இருப்பதைச் சிறுகதை வாசிப்பில் கண்டுணர முடிகிறது. பூச்செண்டு, மலர்க்கொத்து, மலர்க்கூடை, மணங்கமழும் பூக்கள், சிந்தனைப்பூக்கள், கற்பனை மலர்கள், மணக்கும் மல்லிகை என்று சிறுகதைத் தொகுப்பின் தலைப்பில் மலர்த்துவம் நிறைந்திருப்பது போல இவருடைய கதைகளுக்குள் யதார்த்தமான மொழி நடையுடன் கதைத்துவம் பொதிந்திருப்பதை வாசிப்பில் ஆராய்ந்து அறிய முடியும்.

கவிதை : உணர்வாக்கமும் யதார்த்தமும்

கவிதை என்பது ஒரு வகை உள்மொழி. மொழியில் பொருள் சார்ந்து நிற்கும் சொற்களுக்கு உணர்வேற்றம் செய்து, வாசிப்பு நிலையில் புதிய அர்த்தங்களை உணரச் செய்வது இன்றைய இலக்கியப் படைப்பின் முக்கியப் பணியாகப் பேசப்படுகிறது. குறிப்பாக, சொல்லில் உணர்வு சார்ந்த தளத்தை மேலும் விரிவுபடுத்தகிறது: நீட்சிப்படுத்துகிறது என்றே சொல்லலாம். கவிதையின் மையப்பொருளாக யாவருக்கும் பொதுவாகிய காதல், மொழி, நாட்டுப்பற்று, சமூகம், சிந்தனை, உணர்வுகள், உண்மை போன்றவற்றை தேர்ந்தெடுத்த சொற்களால், சொற் சேர்க்கையின் வாயிலாக, உணர்வுத் தொகுதியின் ஆழ்படிமங்களாக நம் மனத்தில் படிந்திருப்பதில் கவிதையின் பங்கு – செயற்பாடு முக்கியமானது. கவிதையின் மேற்சொன்ன புரிதல்களுடன் மு. தங்கராசனின் கவிதைகளை வாசிக்கும் போது மிகவும் பழக்கமான அனுபவங்களை இயற்கை சார்ந்த கற்பனார்த்தம் நிறைந்த புனைவுகளாக – பெரும்பாலும் மரபுக் கவிதை வடிவில் அமைந்திருக்கின்றன. என்றாலும், சமூகத்தின் பல்வேறு தளங்களிலான அனுபவங்களை, சிங்கப்பூர் வாழ்வு தரும் உள நெருக்கடியை, பொய்மையாய்த் துலங்கும் நிஜத்தை, காதலை, மெல்ல படர்ந்து வரும் வாழ்வின் போலியாக மாறிவிட்ட செயற்கைத் தன்மையை மு. தங்கராசன் கவிதைகள் காட்டிக் கொடுக்கின்றன.

“ஆசையில் அளவு வேண்டும்
அது கடந்தேகு மாயின்
நீசத்திற் கிடமும் தோன்றும்
நீர்மைகள் செத்துப் போகும்”

(உதயம்: ப.33)

என்ற கவிதை அளவிற்குட்பட்ட மன ஆசையால் நேரும் நெருக்கடிகளைத் தெளிவுபட மொழிகிறது.

“நேற்றமைந்த நிகழ்வெல்லாம் இன்று மாற்றம்
நிகழ்ந்திடுதல் நீளுலகின் இயல்பு தாமே”

(மகரந்தம்: ப.77)

என்று மாறி வரும் வாழ்க்கைச் சூழலை இயல்பாக எதிர் கொள்ளும் மனநிலையை இவ்வரிகள் சுட்டுகின்றன.

“..... நேர்மை இல்லா
நெடும் புவனப் பேராற்றல் செல்லாக் காசே...
தன்திறமை தானறிந்து தகைமையொடு
தரணியில் தழையாதார் செல்லாக் காசே”

என்று தனி மனிதர்களின் சுய முன்னேற்றத்தை – தன்னம்பிக்கையை – நேர்மையில்லாதவர்களின் இழிநிலையை இக்கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

“கொதிப்பிருக்கும்: கொள்கையற்ற
பேரைக் கண்டு
குமைகின்ற மனமிருக்கும்...
தீமை மாய்க்கும்
பதைபதைப்பிருக்கும் - பழந்தமிழ் மேல்
என்றும் நல்ல
பற்றிருக்கும்... சமுதாயத்
தொண்டர் மீதும்

மதிப்பிருக்கும் : மறுமலர்ச்சி
வேண்டும் என்றும்
மங்காத துடிப்பிருக்கும்...
பேச்சில் உண்மை
பொதிந்திருக்கும் - ஆனாலும்
புவியை வாட்டும்
பொய்மைகளை எதிர்த்து நிற்கும்
திடந்தான் இல்லை.."

தொழில் நுட்பங்களில் அசுர வளர்ச்சியினால் உருச்சிதைந்த மனித வாழ்வின் விழுமியங்களை – நவீன வாழ்வு தரும் மாற்றங்களை விசாரணைக் குட்படுத்தும் இந்தக் கவிதை சிங்கப்பூர் கவிதை மரபில் புதிய முயற்சி என்றே கூறலாம்.

கட்டுரை: கூர்மையான சொற்களும் தேவையான கருத்துக்களும்

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ்மொழி பயிலும் மாணவர்களைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தின் அடிப்படைப் பயிற்சிகளுக்கும் தேர்வுகளுக்கும் ஏற்ற வகையில் கட்டுரையாக்க முயற்சி இவரால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், இரு மொழிக்கொள்கையைப் பின்பற்றி இக்கட்டுரைகள் எழுதப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 'தமிழ் எங்கள் உயிர்' (2004), 'அமுதத்தமிழ்' (2007) ஆகிய இரு கட்டுரைப்பிரதிகளும் வாசிப்பு நிலையில் மாணவர்களுக்கு பல்முனை சாத்தியங்களை உருவாக்கும் அல்புனைவுகளாக அமைந்திருக்கின்றன. இவற்றை நாடு, மொழி, சமுதாயம், கல்வி, உணர்வுகள், உண்மைகள் போன்ற உபதலைப்புகளில் தமிழ்மொழிக் கல்வி சார் கோட்பாட்டுச் சட்டகமாக விரிவுபடுத்துகிறார். சிங்கப்பூர்க் குடிமக்களின் உறுதிமொழியோடு துவங்கும் பிரதியில் சமகால வாழ்வியலில் இளையோரின் மனப்போக்கு, பன்மொழி அறிவினால் விளையும் நன்மைகள், நூல்கள் வாசிப்பதன் அவசியம், சிங்கப்பூரில் முதியோர் கல்வி போன்ற கட்டுரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமக்கு விருப்பமான – வெவ்வேறு தலைப்புகளில் தனித்துவமான கட்டுரைகளை அளித்துள்ள மு. தங்கராசன், 'இன, சமய, மொழிப் போராட்டங்கள் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக உள்ளன' எனும் தலைப்பில் உலகளவில் பொருளாதார வீழ்ச்சிகள் ஏற்படுவதற்கு இது போன்ற போராட்டங்கள் காரணம் என்று ஒரு முன்மொழிவை வைக்கிறார். ஆனால், தேசியம், திராவிடம், தமிழ் என்ற கருத்தாக்கங்களை / அதன் அரசியல் உள்ளடக்கங்களைத் தான் முழுமையாக தெரிந்திருந்தாலும், உலகளாவிய சூழலில் உள்ளார்ந்திருக்கும் அரசியலை விளக்க முயற்சித்திருக்கிறார் என்றே கருத இடமிருக்கிறது. என்றாலும், மாற்று உரையாடலுக்கான ஒரு வெளியை இக்கட்டுரை கட்டமைக்கிறது என்பது வெளிப்படை.

நாட்டுப்புறக் கலை மரபும் ஆவணமாக்கலும்

1958 ஆம் ஆண்டு தமிழ் முரசு நாளிதழின் ஆண்டு மலரில் பிரசுரமான "நாட்டுப்புறத்தில்" எனும் கட்டுரையின் தலைப்பில் இவரால் சேகரிக்கப்பட்ட நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் ஒருசேரத் தொகுக்கப்பட்டு அண்மையில் (2021) நூலாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. இவருடைய மறைவுக்குப் பிறகு வெளிவரும் நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர் - மலாயா தோட்டப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழிற்களங்களிலும், விழாக்களிலும் ஓரிசைவாகப் பாடும் பாடல்கள்,

வாய்மொழி மரபாகக் கையளிக்கப்பட்டு வந்தாலும், அவற்றை நேரிடையாகச் சென்று சேகரித்து வைத்த இவருடைய முயற்சி, இன்றைக்கு சிங்கப்பூர் இலக்கிய வகைமைகளில் ஒரு பெரும் மாற்றத்தை உருவாக்கியுள்ளதை இதன்வழி அவதானிக்க முடியும்.

நிறைவாக...

இந்தக் கட்டுரையை எழுதுவதற்காகச் சிங்கப்பூர் இலக்கிய வரலாற்றை வாசிக்க நேர்கையில் சிறுகதை, கவிதை, நாடகம் பற்றிய விவரணைகளைத் தேடுகிற போது, பிற படைப்பாளர்களின் விவரணைகள் அதிகமாகப் பதிவு செய்யப் பட்டிருப்பதையும் ஒன்றிரண்டு இடங்களில் மு. தங்கராசனின் பெயர் (பெயரளவில்) குறிப்பிடப் பட்டிருப்பதையும் வெளிப்படையாக அறிந்துணர முடிகிறது. 'தரத்தைக் கருத்தில் கொண்டு எழுதும் படைப்பாளி' என்று இராம. கண்ணபிரானின் கூற்றும் இவருடைய படைப்புகள் 'அறநெறி சார்ந்தவை' என்ற குறிப்பும் மட்டுமே நமக்கு கிடைக்கின்றன. ஏறத்தாழ 1961 முதல் 1975 வரை பள்ளிச் சூழலில் பல்வேறு மேடை நாடகங்களை அரங்கேற்றிய இவரின் நாடகத் தொண்டினைச் சிங்கப்பூர் நாடக வரலாற்றில் முழுமையாக ஆவணப்படுத்த வேண்டும். "பொதுப் பணியில் மிகையான ஈடுபாடு காட்டியதால் ஓர் எழுத்துலக வனவாசம் போல் இந்த பதினைந்து ஆண்டுகளிலும் எந்தவித இலக்கியப் படைப்பையும் அவர் கைவண்ணமாகக் கொண்டு வரவில்லை" (நாட்டுப்புறத்தில்: ப.109) என்ற குறிப்புரை இவரைப் பற்றி இடம் பெற்றாலும், "ஏடுகளில் எவ்வளவு தான் எழுதிக் குவித்திருந்தாலும் ஒன்றிரண்டு நூல்களாவது உருவாக்கம் பெறாவிட்டால் இலக்கிய உலகத்தில் 'எழுத்தாளர்' என்ற அங்கீகாரம் கிடைப்பதில்லை. இலக்கிய ஆய்வாளர்கள் நூல்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு விமரிசிக்கிறார்கள்" (மலர்க்கொத்து: முன்னுரை, ப.V) என்ற இவரது முன்னுரைக் குறிப்பு ஒரு படைப்பாளியின் உள் வேட்கையைத் தூண்டக் கூடியதாக மாறுகிறது. இவருடைய பழந்தமிழின் முதுநினைவின் ஆழ்மையிலிருந்து வெளிவரும் உணர்வுகள் படைப்பிலக்கியமாக - மலர்களின் பெயர்களில் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சிங்கப்பூர்க் கல்வித் திட்டத்தில் வலியுறுத்தப் பெறும் பகுப்பாய்வுச் சிந்தனைத் திறனும், படைப்பாற்றல் சிந்தனைத் திறனும் மாணவர்களிடம் வளர்வதற்கு பொறுப்பு மிக்க ஆசிரியராகத் திகழ்ந்த மு. தங்கராசனின் தனித்துவமான சிந்தனைகளைச் சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியச் சூழலில் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியமிருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் இலக்கிய வரலாற்றிலும் விடுபடல்கள் அநேகம் உள்ளன. அவற்றை மீளாய்வு செய்து ஆவணமாக்கும் பொறுப்பு தமிழாய்வாளர்களுக்கு உண்டு. அந்த வகையில் படைப்பாளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் மு. தங்கராசனின் சிந்தனைப் புலத்தை அடுத்த தளம் நோக்கி நகர்த்திச் செல்வதற்கு முக்கிய வினையாற்ற வேண்டிய தேவையும் இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். சிங்கப்பூரில் இருந்த தகைசால் பாவலர்கள் பலரை ஒன்று சேர்த்து பாத்தொகுப்பு மலரச் செய்த, இவரின் மலர்களிலான படைப்புகளைத் திறனாய்வு நோக்கில் அணுகி, மொழி, கல்வி, சமூகம் கலை பற்றி இவரது நிலைப்பாட்டை வெகுசன வெளியில் பரவலாக்கம் செய்ய வேண்டும். இதுவே இவருக்கு நாம் செலுத்தும் இலக்கிய அஞ்சலி.

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் தமிழ்ப்பணி

ச. பாலமணிகண்டன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

ஆய்வுச்சுருக்கம்
தேறும் தோறும் இனிதாம் தன்மையுடைய தமிழ் மொழிக்கு எழில் சேர்த்தோர் பலர். அப்பலருள் பழந்தமிழ்ப் புலவர்கள் தொடங்கி, இக்காலக் கவிஞர்கள்வரை அனைவரின் பங்கும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தமிழ் இலக்கியத்தின் சிறப்பை உணர்ந்து தமிழ்நாட்டிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் பலர் தமிழ்ப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுள் கடல் கடந்து சென்று தமிழ் வளர்த்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மு.தங்கராசன் ஆவார். அவர் அயல்நாடுவாழ் தமிழர்களும் தமிழ் எழுத்தாளர்களும் நன்கு அறியும் சிறப்பிற்குரியவர். சிங்கப்பூரில் வாழ்ந்த காலத்தில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் அவர் ஆற்றிய பணி சிறப்பானது. அவர் சிங்கப்பூர்வாழ் மாணவர்களுக்கான தமிழ்ப் பாடநூல்களை உருவாக்கும் திட்டக்குழுவில் இணைந்து பணியாற்றியவர். அவ்வாறாக அயல்நாடுவாழ் மாணவர்களுக்குத் தமிழ்ப் பணியாற்றிய தன்மையில் வாழ்நாள் நல்லாசிரியர் விருதும் கிடைக்கப்பெற்ற தங்கராசன், தமது படைப்புகளின் வழி சமூகம்சார் கருத்துகளை விதைத்து, சமூகப்பணியும் மேடை நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றி நாடகப்பணியும் ஆற்றிய தன்மையில் அவரின் ஒட்டுமொத்த தமிழ்ப்பணியை இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகிறது.

முன்னுரை

மக்களின் வாழ்வியலை மையமிட்டு படைப்புகளைத் தந்த தங்கராசன், திருச்சியைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவருக்கு மூன்று வயதாக இருக்கும்போது, பெற்றோர் அவரை மலேயாவிற்கு அழைத்து வந்தனர். அங்குப் பள்ளிப்படிப்பை முடித்து, ஆசிரியர் பயிற்சியும் பெற்று தமிழாசிரியராகப் தனது பணியைத் தொடங்கினார். பின்பு சிங்கப்பூருக்குச் சென்று அங்கும் தமிழ் ஆசிரியராக பணியாற்றியதோடு பல படைப்புகளைத் தந்து தமிழுக்கும் தமிழருக்கும் சிறப்பு பெற்றுத்தந்தார். அவ்வாறாக, தமிழ் கூறும் நல்லுலகுக்கு அவர் ஆற்றிய தமிழ்ப்பணியை இக்கட்டுரை முன் வைக்கிறது.

தகைசால் தமிழாசிரியராக

பன்னூல்களைப் படைத்தளித்துள்ள தங்கராசன், அடிப்படையில் ஒரு பள்ளித் தமிழாசிரியர். இருப்பினும் அவர் பள்ளியில் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டுமே என்று இல்லாமல் பல்வேறு நூல்களைப் படித்து தகைசால் தமிழாசிரியராக விளங்கும் பாவலர். அதுமட்டுமல்லாமல் நன்னூலார் குறிப்பிடுவது போல, **“உலகிய லறிவோ டுயர்குண மினையவும் / அமைபவ னூலுரை யாசிரி யன்னே”**[1] என்ற நல்லாசிரியருக்குரிய இலக்கணமாகிய உலகியல் அறிவோடு உயர்குணமும் அமையப்பெற்றவர். அவ்வாறான உலகியல் அறிவை அவர் தம் படைப்புகளே வெளிப்படுத்தும். அத்தகு தங்கராசன் மலேயாவில் ஆசிரியர் பயிற்சிபெற்று, தமிழாசிரியராக பணியாற்றினார். பின்பு சிங்கப்பூர் கலைமகள் தொடக்கப் பள்ளியிலும் அடுத்ததாக, செம்பவாங் தமிழர் சங்கப் பள்ளியிலும் பணியாற்றினார். இவ்வாறாக பணியாற்றிய காலத்தில், பணியில் ஈடுபாட்டோடு, பல சமூகப் பணிகளைச் செய்ததால் அவரால் எழுத்துப் பணியில் ஈடுபட முடியாமல் போக, சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தனது எழுத்துப் பணியில் பல படைப்புகளைத் தந்து, தகைசால் தமிழாசிரியராக சிங்கப்பூரை வலம் வந்தார். அவர் தம் படைப்புகளை கவிதை,

சிறுகதை, நாடகம், கட்டுரை, நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பு என்ற நிலைகளில் வகைப்படுத்தலாம். இவரது படைப்புகளில் மரபார்ந்த சொற்களும், தமிழியல் சார்ந்த செய்திகளும் விரவும் தன்மை இவரது தமிழாசிரியப் புலமைக்கு மேலும் மெருகூட்டுவன. பல படைப்புகளுக்கு உரிமை உடையவரான தங்கராசன் தனக்கெனத் தனித்துவத்தை வகுத்துக்கொண்டு, படைப்புலகில் முத்திரைப் பதித்து, பல பள்ளி மாணவர்களையும் உருவாக்கி, கல்வி பணியாற்றிய சிறப்புக்குரியவர்.

தாய்மொழி பேணும் மாண்பாளராக

தாய் மொழிக் கற்றலே ஒருவனின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கக்கூடியது என்றும் தாய்மொழிக் கற்றலோடு பிறமொழிக் கற்றலும் அவசியம் என்றும் அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறான தாய்மொழி குறித்த புரிதலை தங்கராசன் அவரது படைப்புகளின் மூலம் தெளிவுறுத்துகிறார். மாந்தர்கள் பலமொழிகளைக் கற்று பன்மொழி அறிவு வாய்க்கப்பெற்றாலும் தாய்மொழிப் பற்று உடையவராக விளங்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதாக முதலில் பன்மொழி அறிவு பெற வேண்டியதன் சிறப்பை, பல வண்ண மலர்களைத் தொடுத்தால் அது பல வண்ணமாக மிளிர்ந்து, அது கண்ணுக்கு விருந்தாகி மணங்கமழ்வதுபோல பன்மொழி அறிவும், புகழ் உச்சிக்கு எடுத்துச் செல்லும் பெற்றியது என்பதை, **“பன்னிற மலர்கள் பதியச் செய்தே / நன்னிற மாலை நயம்படத் தொகுத்தால் / பொன்னிறம் பூத்துப் புகழ்மணங் கமழும் / பன்மொழி அறிவும் அத்தகையப் பாங்கே”**[2] எனக்காட்டி, பன்மொழி அறிவு வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தாலும் மாந்தர் அனைவரும் தாய்மொழிப்பற்று கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை, **“ஒவ்வொரு நிமிடந் தோறும் / உள்ளத்தில் மொழியின் பற்று / ஒவ்வொரு மனிதர் தாமும் / உயிருக்கு நிகராய்க் கொண்டால் / ஒவ்வொரு சமுதா யத்தார் / உறுதிமொழி எல்லாம் ஓங்கும் / ஒவ்வொரு நாட்டில் என்றும் / உயிர்ப்புடன் வாழ்ந்து மேவும்”**[3] என்றும் வலியுறுத்தித் தாய்மொழிப்பற்று குறித்தப் புரிதலை தங்கராசன் தெளிவுபடுத்துகிறார். ‘தமிழ் எங்கள் உயிர்’ என்ற கட்டுரைத் தொகுப்பிலும் அவர் இத்தகு தன்மையிலே கருத்துக்களை முன்வைப்பது சிந்திக்கத்தக்கது. சிறுகதைப் படைப்புகளில் தமிழ்க் கவிஞர்களையும் அவர்களுக்கு விழா எடுக்கும் தன்மையையும் தமிழ்ப் பனுவல்கள் குறித்தக் கருத்துக்களையும் தங்கராசன் காட்டுகிறார். அதனை ‘கற்பனை மலர்கள்’ என்ற சிறுகதைத்தொகுப்பில் திருவிளக்கும் தெருவிளக்கும் என்ற சிறுகதையிலும் ‘ஆத்மார்த்தங்கள் அழிவதில்லை’ என்ற சிறுகதையிலும் குறிப்பிடுவதை வாசகர்கள் அச்சிறுகதைகளை படிக்கும்போது உணர முடியும். ‘திருவிளக்கும் தெருவிளக்கும்’ என்ற சிறுகதையில் நல்லசிவம் என்பார் திருக்குறள் விழாவிற்குச் செல்கிறார். அங்கு சிலம்பொலி செல்லப்பனாரின் திருக்குறள் சொற்பொழிவைக் கேட்கிறார் என்பதாகவும் ‘ஆத்மார்த்தங்கள் அழிவதில்லை’ என்ற சிறுகதையில் மகேந்திரன் என்பவர் பொழுதுபோக்கும் பொருட்டு நூலகத்திற்குச் சென்று, அகிலன், நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன் போன்ற படைப்பாளிகளின் படைப்புகளைப் படிக்கிறார் என்பதாகவும் காட்டுகிறார். இவ்வாறாக தங்கராசனின் படைப்புகள் தோறும் பலவிடங்களில் அவரது மொழிப்பற்றைக் காண முடியும்.

மரபுக்கவிதை பாவலராக

பாவலர்கள் பலர் புதுக்கவிதையை நோக்கிச் சென்ற காலத்தில் சொற்கட்டு கொண்டமைந்த மரபுக்கவிதைகளைத் தந்து, வாசகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளச் செய்தவர். இவர் பத்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் நினைத்த உடனேயே கவிதை இயற்றும்

ஆசுகவி என்று நினைக்கும் அளவில் பற்பொருட்களைப் பற்றி கவிதை இயற்றியுள்ளார். குடும்ப வாழ்வு, அறம், நாடு, மொழி என இவரது கவிதையின் பாடு பொருள்கள் பல்கிப்பெருகும் தன்மையன. இருப்பினும், தத்துவச் சிந்தனைகள், நாட்டு நடப்புகள், சமுதாயச் சிந்தனைகள், விழாக்கள் பற்றிய பாக்கள், வாழ்த்துப் பாக்கள், நினைவஞ்சலி பாக்கள் என இவரது கவிதைகளை ஒருவாறு வகைப்படுத்தலாம். இக்கவிதைகளின் சிறப்பை 'கவிக்கொண்டல் இக்பால்' அவர்கள், **"கற்பனையின் கடலில் மூழ்கி தங்க ராசன் / கவிதை எனும் முத்துக்கள் கொண்டு வந்தார் / ஒற்றைக்கால் நடனமிடும் எழுது கோலால் / ஓவியங்கள் காகிதத்தில் பேச வைத்தார்"**[4] என சிறப்பிக்கிறார். அத்தகு சிறப்பு பொருந்திய கவிதைத் தொகுப்புகளில் குடும்ப வாழ்வைப் பற்றி குறிப்பிடும் கவிதையில், நடைமுறை கருத்தாக குடும்ப வாழ்வு என்றால் ஆயிரம் பிரச்சனைகள் வரும் அதையெல்லாம் நினைக்காமல் வாழ்வை நகர்த்த வேண்டும் என்று சொல்லும் தன்மையை எளிய நடையில் சொற்செறிவாக, **"குடும்பமெனில் பிரச்சனைகள் குவிந்து தோன்றும் / குமை நிறைவுக் கொள்கலனாய் நிமிர்ந்து நின்று / குடும்பத்தின் தலைவனவன் குலைந்து போகாக் / குறிக்கோளின் அடிப்படையில் கூர்ந்து நிற்கும்"**[5] என்று காட்டுகிறார். இவ்வாறான கவிதைகளை பாடி மரபுக்கவிதை பாவலராக தங்கராசன் போற்றப்பெறுகிறார்.

பன்னூற் படைப்பாளராக

கவிஞர், சிறுகதை ஆசிரியர், நாடகாசிரியர், கட்டுரையாசிரியர் என்றெல்லாம் பல திறன்களைக் கொண்ட தங்கராசன் பல நூல்களைப் படைத்த சிறப்புக்குரியவர். இதனோடு தொகுப்பாசிரியராகவும் விளங்கும் தன்மையர். 'தமிழ் எங்கள் உயிர்' என்ற மாணவர்களுக்கானக் கட்டுரைத் தொகுப்பில் அவர்களின் திறனை வளர்க்கும் பொருட்டு, நாடு, மொழி, கல்வி, சமுதாயம், உணர்வுகள் என்ற தன்மையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரையை வழங்கியுள்ளார். இக்கட்டுரைத் தொகுப்பு, கட்டுரை எழுத முயற்சிக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் தன்மையது. அத்துடன் சிங்கப்பூர் தமிழரின் வாழ்வியலை எடுத்துச் சொல்லும் வண்ணம் சிறுகதைகளையும், விழுமியம் நிறைந்த கருத்துகளை எடுத்துச் சொல்லும் நாடகப் படைப்புகளையும் வழங்கியுள்ளார்.

சிங்கப்பூரில் தமிழ்ப் பணியாற்றிய தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் சிறப்புகளை எடுத்துச் சொல்லும் வகையில் சிங்கைவாழ் கவிஞர்கள் பாடிய கவிதைகளைத் தொகுத்து, 'கவிக்குலம் போற்றும் தமிழர்' என்ற நூலுக்கு தொகுப்பாசிரியராகவும் இருந்து, தொகுப்புப் பணிகளைச் செய்துள்ளார். 'நாட்டுப்புறத்தில்' என்ற நூலில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையில் இறைவழிபாடு, தாலாட்டு, காதல், பல்சுவை, உறவு என்பன போன்ற தலைப்பில் கட்டுரைகளை நாட்டுப்புறப் பாடல்களோடு வழங்கியுள்ளார். இந்நூலில் பலதரப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களைக் காட்டியுள்ளார். இத்தன்மை எளிதானதல்ல. நாட்டுப் புறப்பாடல்கள் குறித்த களப்பணி செய்தால் மட்டுமே அது சாத்தியமாகும். இவ்வாறாக கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை என்ற நிலைகளில் பல நூல்களைத் தந்து தமிழ்ப்பணி ஆற்றிய பெருமகனாராக தங்கராசன் விளங்குகிறார்.

அறிஞர்கள் போற்றும் தமிழ் அறிஞராக...

சிங்கப்பூர் வாழ் முன்னோடி எழுத்தாளரான தங்கராசன் அறிஞர் உலகம் போற்றத்தக்க சிறப்புக்குரியவர். இவருடைய கவிதையினை கவிஞர் சுரதா, **"கச்சிதமாய் காவியங்கள் படைப்பதற்கோர் / கவியுள்ளார் ; அன்னவர்தாம் தங்க ராசன் / எச்சிலையும்**

தேனாக மாற்றும் சக்தி / இவர் கவிதைக்கு உண்டு என்று துணிந்து சொல்வேன்"[6] என்று பாராட்டுகிறார். இவரது ஒவ்வொரு படைப்புகளும் சமுதாய நலம் குறித்து சிந்திக்க கூடியத் திறன் மிக்கது. **"முற்போக்கான எண்ணம் இக்கதைகளில் மேல் எடுப்பதாக தெரிகிறது. இத்தொகுதியில் உள்ள கதைகள் அனைத்தும் நல்ல சிறுகதைக்கான இலட்சணங்களை கொண்டிருக்கின்றன"**[7] என இவரது 'பூச்செண்டு' சிறுகதைத் தொகுப்பு நூல் குறித்து ஜெயகாந்தனும் குறிப்பிடுகிறார். சமகால சமூகப் பிரச்சினைகளை தம்முடைய கதைகளில் வடித்து அதனைத் தீர்க்கப் போராடும் குறிஞ்சிமலர் நா.பார்த்தசாரதி அவர்களும் இவரது சிறுகதைத் தொகுப்பினை பாராட்டுகின்றார். **"அதாவது ரசித்து மகிழத்தக்க சுவையான ஆற்றொழுக்கு போன்ற தெளிவான தமிழ்நடை; வீச்சு நிறைந்த கதைப் போக்கு"**[8] என்று 'சிந்தனைப்பூக்கள்' சிறுகதைத் தொகுப்பு குறித்து அவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக பல அறிஞர்கள் போற்றும் படைப்புகளைத் தந்து மொழிப்பணியாற்றிய இவரது சிறப்பை, "**பொங்கும் தமிழில் புதுப்புது சிந்தனை / பொலிய வைப்பவரோ! – நம் / தங்க ராசன் தமிழைக் காக்க / தம்மையே வைப்பவரோ"**[9] என கவிக்கொண்டல் இக்பால் அவர்களும் பாராட்டுகின்றார்.

தமிழவேள் நாடகமன்ற பொதுச்செயலாளராக..

தங்கராசன் நாடகங்களை இயற்றுபவராக மட்டுமின்றி, பல பள்ளிகளில் மாணவர்களை வைத்து நாடகங்கள் அரங்கேற்றமும் செய்துள்ளார். பல நாடகங்களை எழுதி அரங்கேற்றம் செய்த இவரோடு நாடகமன்றத்தின் அமைப்பாளராக பலர் சேர்ந்து நாடக மன்றம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். அந்த நாடக மன்றத்திற்குத் தமிழர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட தமிழவேள் அவர்களின் பெயரைச் சூட்டி, அரசு அங்கீகாரம் பெற்ற அமைப்பாக அதனை உருவாக்கினார்கள். அவ்வமைப்பின் பொதுச் செயலாளராக இருந்து பல நாடகங்களை அமைப்பாளர்களோடு அரங்கேற்றமும் செய்து நாடகப் பணியாற்றினார். அத்துடன் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றிலும் பள்ளிகள், தமிழ்சார்ந்த அமைப்புகள் போன்றவற்றிலும் நாடகங்களை அரங்கேற்றி நாடகப்படைப்பாளராகத் தனக்கென தனி முத்திரை பதித்தார்.

முடிவுரை

பன்முகச் சிந்தனையாளரான தங்கராசன் அறிஞர் பலர் போற்றும் சிறப்புக்குரியவர். அத்துடன் பல தமிழ்ப் பணிகளையும் ஆற்றிய தமிழறிஞர். அவர் கவிதைப் படைப்புகளில் மரபார்ந்த சொற்களையும் கட்டுரைகளில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எளிய மேற்கோள்களையும் சிறுகதைகளில் தமிழ் இலக்கியம் சார்ந்த கருத்துகளையும் காட்டும் தன்மை அவரது தமிழ்ப் புலமையையும் தமிழ்ப் பணியையும் காட்டுவன. அவற்றோடு அவரது படைப்புகள் முன்வைக்கும் சமூகம்சார் கருத்துகள் அவரது சமூகப் பணியையும் வெளிப்படுத்துவன. பல பள்ளிகளிலும் தமிழ்சார் அமைப்புகளிலும் தமிழவேள் நாடக மன்றத்தின் சார்பிலும் மேடை நாடகங்களை அரங்கேற்றியத் தன்மை அவரது பணியைக் காட்டுவன. இவ்வாறாக, சிங்கப்பூரில் கல்விப் பணியாற்றிய தங்கராசன் தமிழ்ப்பணி, சமூகப்பணி, நாடகப்பணி என பல பணிகளை ஆற்றிய தன்மையை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் போற்றும்.

சான்றெண் விளக்கக் குறிப்புகள்

ஆறுமுகநாவலர், (உ.ஆ.), நன்னூல், பக்.4,5.

மு.தங்கராசன், சூரியகாந்தி, ப.9.

மேலது., ப. 10.

மு.தங்கராசன், பொய்கைப்பூக்கள், ப.13.

மு.தங்கராசன்,மகரந்தம், ப. 26.

மு.தங்கராசன், பொய்கைப்பூக்கள், ப.3.

மேலது., ப.9.

மேலது., ப.12.

மேலது., ப.13.

துணைநூற் பட்டியல்

ஆறுமுகநாவலர் (உ.ஆ.), - **நன்னூல் காண்டிகையுரை – பகுதி –** முல்லை நிலையம், சென்னை – 13, முதற்பதிப்பு, 1991.

தங்கராசன்,மு., - **உதயம்,** விஜயா சபரி பதிப்பகம், சென்னை – 96, முதற்பதிப்பு, 1988.

தங்கராசன்,மு., - **கவிக்குலம் போற்றும் தமிழவேள்,** சிங்கப்பூர், முதற்பதிப்பு , 1992.

தங்கராசன்,மு., - **'கற்பனை மலர்கள்'** தமிழவேள் நாடக மன்றம், சிங்கப்பூர், முதற்பதிப்பு , 1995.

தங்கராசன்,மு., - **சூரியகாந்தி,** தமிழவேள் நாடக மன்றம், சிங்கப்பூர், முதற்பதிப்பு, 1995.

தங்கராசன்,மு., - **தமிழ் எங்கள் உயிர்,** தமிழவேள் நாடக மன்றம், சிங்கப்பூர், முதற்பதிப்பு , 1995.

தங்கராசன்,மு., - **தாமரைப் பூக்கள்,** தமிழ்வேள் நாடக மன்றம், சிங்கப்பூர், முதற்பதிப்பு, 2008.

தங்கராசன்,மு.- **நாட்டுப்புறத்தில்,** ஜீவஜோதி பதிப்பகம், சிங்கப்பூர், முதற்பதிப்பு, 2002.

தங்கராசன்,மு., - **பொய்கைப் பூக்கள்,** அன்னை சாரதா பதிப்பகம், சென்னை – 03. முதற்பதிப்பு, 1992.

தங்கராசன்,மு., - **மகரந்தம்,** பூவழகி பதிப்பகம், சென்னை – 03. முதற்பதிப்பு, 1988.

மு. தங்கராசனின் நாட்டுப்புறத்தில் காணலாகும் இறைவழிபாட்டு முறைகள்

மு. பாலமுருகன்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி

முன்னுரை

'கோயில் இல்லாத ஊரில்லை' எனும் பெருமையைப் பெற்றது தமிழகம்.'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முதுமொழி எடுத்துரைக்கின்றது. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை இறை நம்பிக்கையுடனும், அச்சம் கலந்த உணர்வுடனும், ஆதி அந்தம் இல்லாதவையாகவும், பிறப்பு இறப்பு உள்ளவையாகவும், பண்பாட்டு உணர்வோடும், மனித உணர்வோடும், வழிபாடு செய்தனர். மழை இல்லாக் காலத்து மழை வேண்டியும், விளைச்சல் பெருகவும், நோய் நொடி வராதிருக்கவும், பகை ஏற்படின் பகைக்குப்பின் சமரச முயற்சிக்காகவும் இறையை வழிபடுவது உண்டு. நல்ல சகுணம் கேட்டும், பூக்கட்டிப் பார்த்த பின்பும் தெய்வத்துக்கு விழா எடுக்கப்படுகிறது. விழா எடுப்பதன் வாயிலாக மனித மனதிற்கு மகிழ்வும், உறவுக்குத் தொடர்பும் ஏற்படுகின்றன. இத்தகையளவில் மு.தங்கராசனின் 'நாட்டுப்புறத்தில்' எனும் பனுவலில் காணப்படுகிற இறைவழிபாட்டின் முறைமைகள் இருப்பதை ஆய்வுப் பொருண்மைகளாக்க் கண்டு ஆராயப்படுகின்றது.

வழிபாடு

மனித மனம் கொடி போன்றது. மனமானது தனித்து நிற்கவோ தன்னியலாகச் செயல்படவோ இயலாது. ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு படர்ந்து எழுவதாகும். மனித மனநிலைகளின் விளைவே வழிபாடு. இயற்கையைக் கட்டுப்படுத்தவும், மனித மக்கள் நோயிலிருந்து நலம்பெறவும், சமுதாயத்தில் மகிழ்ச்சியாக இருக்கவும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன. உடல் நலம் பேணவும், குழந்தைப்பேறு கிடைப்பதற்கும், செல்வச் செழிப்போடு வாழ்வதற்கும் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

வழிபாட்டின் தோற்றம்

'வழிபடு' என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளும் செயல்பாடுகளும் பூசை முறைகளுமே வழிபாடு என்றும், இறைவனுடன் ஒன்றாக கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்று கூறலாம். மனிதன் துன்பப் படுகையில் இறைவனை நினைத்து வேண்டுகிறான். இயற்கை வழிபாடு தொடங்கி இறை வழிபாடு, தனி மனித வழிபாடு என்று பல்வேறு வகையிலும், முறையிலும் பெருகி, வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாக வழிபாடு நின்று நிலைத்து விட்டது. வழிபாடு பண்டைக்காலம் முதலே தொடக்கத்திலிருந்தே அமைந்துள்ளது.

"தமிழர்கள் இயற்கைகள், விலங்குகள், மரம், செடி ஆகியவற்றை வழிபட்டனர். பின்பு

உருவ வழிபாடுகள் தோன்றியது. ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங்களையும் சிலைகளாக அமைத்து வழிபட்டார்கள். வழிபாட்டின் தோற்றம் நாளடைவில் கோயில்களாக தோற்றம் பெற்றது" என்பார் தெ.மு. பாஸ்கர தொண்டைமான். (தமிழ் கோயில்கள் தமிழர் பண்பாடு, ப.3)

இறை வழிபாட்டு முறைகள்

நாட்டுப்புற மக்களால் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் கிராம தெய்வங்களே சிறு தெய்வங்களாகும். நாட்டுப்புறங்களில் நாட்டுப்புற தெய்வங்கள் அதிகமுள்ளன. சிறு தெய்வத்தை நாட்டுப்புறத் தெய்வம், கிராம தெய்வம், ஊர்த் தெய்வம், எல்லைத்தெய்வம், காவல் தெய்வம், துணைத்தெய்வம் எனப் பல பெயரில் அழைக்கப்படுகிறார்கள். சிறுதெய்வ வழிபாடு கிராம மக்களின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்து விட்டது. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமாக விளங்குகின்றன. உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் கடவுளை முதலாகக் கொண்டு இயங்குகின்றன திருவள்ளுவர் தம் குறட்பாவில் கடவுளை முதலாக குறிப்பிட்டுள்ளார். இதனை,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" - குறள் 1:1

என்னும் குறட்பாவழி அறியலாம்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" - குறள் 1:9

என்ற குறட்பா இறைவனை முதன்மையானவன் என்றும், எட்டுக் குணங்களையுடைய கடவுளின் திருவடிகளை வணங்காத தலையானது, கேளாத செவி, பாராத கண் போலப் பயனற்றதாகும் என்றும் குறிப்பிடுகிறது.

இசையே இறை வழிபாடு

இசையானது தமிழர்களின் வாழ்வோடு இயைந்த ஒன்று. வாழ்வு முழுமையும் வளமார்ந்த இசையோடு இணைந்து விடுகிறார்கள். பிறப்பிலும், வாழ்விலும், வளர்ச்சியிலும், இளமையிலும், முதுமையிலும் இறுதியாக இறப்பிலும் கூட இசையை முன்வைத்துத் தங்கள் வாழ்க்கையை இசையோடு இரண்டற இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இசை காப்புச் செய்யுளாகப் பாடப்படுகின்றது. காப்புச் செய்யுள் தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் முதலாவதாக அமையும் பாடல். கவிஞன் தான் படைக்க நினைத்துள்ள நூலினை வெற்றிகரமாக, முழுமையாக இயற்றி முடிப்பதற்கு இறைவன் துணை நின்று காக்க வேண்டும் என்ற கருத்தில் காப்பு பாடப்படுகிறது. இதனை,

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே". –
(ஆத்தி சூடி காப்புச் செய்யுள்)

என்ற வரிகளில் சுட்டியுள்ள படி, கிராமப் புறங்களில் உள்ளோரும் அவ்வப் போது தெய்வங்களை வணங்கும் 'திருக்காப்பு' செய்துள்ளதை அறிய முடிகிறது.

விநாயகரை வழிபடும் இறை வழிபாடு

இறை வழிபாட்டில் பிள்ளையாரை வணங்குவது என்பது உழவர்களுக்கு இயல்பான ஒன்று. வேளாண்மைத் தொழிலுக்கு மிகவும் வேண்டப்பட்ட தெய்வமாக விநாயகர் கருதப்படுகின்றார். தங்கள் நிலங்களைச் செப்பனிட்டு உழுது பயிரிட முனையும் முன்னர், மஞ்சள், அரைத்து, பிள்ளையார் பிடித்து, அருகம்புல்லைச் செருகி வணங்குவது மரபு. பிள்ளையாரை வழிபடும் இறை வழிபாட்டுப் பாடலாக,

'முந்தி முந்தி விநாயகரே முக்கண்ணனார் தன்மகனே

கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே'

என்றும்,

சந்தமும் போற்றும் சந்தக் கவிதை நம் கன்னித் தமிழ் ஔவையும் தனித் தமிழில் பாடுகின்றார். இதனை,

"துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா"

என்ற வரிகளில் துங்கக்கரி முகத்துத் தூமணியே என்றும் தும்பிக்கையான் பாதம் என்றும் பாடிய அதே பொருளில் தான் கிராமப் புறங்களில் பாடும் நாட்டுப் புறப்பாடல்களிலும்,

'ஆனை முகத்தோனே ஐயங்கரனார் தன்மகனே
பானை வயிற்றோனே பார்வதியாள் தன் மகனே'

பாட்டுரைத்துப் பாராட்டப் படுகின்றது.

பல வகைகளாக திகழ்கின்ற விநாயகரை நாட்டுப்புறத்தில் சுண்டல், பொங்கல், பொறிகடலை,அவல், தேங்காய், அருகம்புல் மாலை, வாழைப்பழம், சூடம், நெய், எண்ணெய், ஊதுபத்தி, வெற்றிலை பாக்கு, சந்தனம், குங்குமம், துணி போன்றவற்றை வைத்து வழிபாடு செய்கின்றனர்.

இயற்கையே இறைவழிபாடு

நாட்டுப்புறத்தில் இயற்கையை இறையாக வழிபாடு செய்துள்ளனர். பண்டைய தமிழரின் இலக்கண நூலான தொல்காப்பியம், மற்றும் சங்க இலக்கிய நூல்கள், காப்பியங்களில், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவற்றுடன் இணைந்தவையாக சிந்து சமவெளி நாகரிக காலம் வரையும், ஐந்து திணைகளாகக் கடவுளை வணங்குவதாக கூறப்படுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

– (தொல் -பொருள்: 951)

என்ற நூற்பாவானது திணை வழியாக இறைத் தன்மையை எடுத்தியம்புகிறது.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"
"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"
"மா மழை போற்றுதும் மா மழை போற்றுதும்".

(சிலம்பு - புகார் - பா. வரி : 1,4,7)

என்ற பாடல் வரிகளில் திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை இறையாக நினைத்து வழிபட்டதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

கொலு முறையில் இறைவழிபாடு

கிராமப்புறங்களில் எப்போதும் வழிபடும் தெய்வங்களில் மாரியம்மனும் ஒருவராவார். மாங்கல்யக்காரி என்றும், அம்மை நோய் கண்டுவிட்டால் வீடுகளில் வேப்பிலை செருகி வைத்து, ஒவ்வொரு நாள் மாலையும் 'அம்மன் விளக்கு' ஏற்றி வைத்து 'மாரியம்மன் தாலாட்டு' படிப்பது ஒரு ஆன்மிக மரபாக உள்ளது. இதனை, பின்வரும் பாடல் வரிகள் வாயிலாக அறியலாம்.

"ஆயி மகமாயி ஆயிரம் கண்ணுடையாள்
நீலிதிரி சூலி நீங்கா த பொட்டுடையாள்"

என்ற வரிகளில் அறிய முடிகிறது.

நாட்டுப்புறங்களில் கொண்டாடப்பட்டு வரும் திருவிழாக்களில் சரஸ்வதி பூஜை ஒன்றாகும். கொலு முறைகளில் பார்வதி தேவி, லெட்சுமி தேவி மற்றும் சரஸ்வதி தேவிக்கு மூன்று மூன்று நாட்களாக இறை வழிபாடு நடத்தப்படுகிறது.

உலகில் மனிதனின் வாழ்க்கையும் உயிரினங்களின் வளர்ச்சி நிலையை எடுத்தியம்பும்

விதமாகவும், மனிதன் படிப்படியாக தன்னை கடந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாகக் கொலுப்படிகள் அமைக்கப்படுகின்றன. இறைவழிபாடுகள் இந்து சமயத்தில் மட்டுமல்ல; கிறிஸ்துவம், இஸ்லாம், சைன், பௌத்தம் போன்ற பல சமயங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. எல்லா சமயங்களிளும் இறை வழியாகச் சமய சகிப்புத்தன்மையானது காட்டப்படுவதாகவே சுட்டப்பெறுகின்றது.

முடிவுரை

இயற்கையைக் கட்டுப்படுத்தவும், மக்கள் நோயிலிருந்து நலம்பெறவும், சமுதாயத்தில் மகிழ்ச்சியாக இருக்கவும், இயற்கை, கொலு, சிறுதெய்வம், இசை வழியாக மக்கள் பல வழிபாடுகளைச் செய்து வருகின்றனர். நாட்டுப்புறத்தில் பெருந்தெய்வ வழிபாட்டை விடச் சிறுதெய்வ இறைவழிபாடான விநாயகர், அம்மன் போன்ற வழிபாடுகள் மிகப்பெரிய அளவில் நடைபெற்று வருகின்றன. பல்வேறு வகையான இறை வழிபாட்டினை நாட்டுப்புறத்தில் மக்கள் நிகழ்த்திவருவதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

மு. தங்கராஜன், நாட்டுப்புறத்தில், 2020, ஜீவஜோதி பதிப்பகம், சிங்கப்பூர் - 521 254.

ச.வே சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ஜுன் 2006, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 108.

புலமை வேங்கடாசலம், சிலப்பதிகாரம், டிசம்பர் 2007, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை 14.

எம். சிவசுப்ரமணியன், திருக்குறள், ஆகஸ்ட் 2011, கமர்சியல் பதிப்பகம், தென்னிந்தியா.

ச.மெய்யப்பன், நீதிநூல் தெளிவுரை, பிப்ரவரி 2012, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 108.

‘வாகைப்பூக்கள்’ கவிதையில் பன்முகப் பார்வை

சு. பால்மோகன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

முன்னுரை

‘வாகைப்பூக்கள்’ கவிதைத் தொகுப்பில் பத்து வகையான வெவ்வேறு தலைப்புகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன இவரது படைப்புகள் மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் ஊட்டும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளன. உலகில் ஒவ்வொரு மனிதருக்கும் தன்னம்பிக்கை, மொழிப்புலமை, கற்பனை நாட்டுபற்று, கல்வியில் சிறப்பு, மாணவர் மாண்பு, தாய் தந்தையர் சிறப்பு, ஒற்றுமையே பலம் ஆகியவற்றை மக்களுக்கு ஊட்டும் நோக்கில் ‘வாகைப்பூக்கள்’ என்ற கவிதைத்தொகுப்பு படைக்கப்பட்டுள்ளது.

மொழிப்பற்று

ஒருவருடைய தாய்மொழி அவரின் அடையாளம் அதிலும் தமிழ்மொழி உலகில் தோன்றிய மொழிகளில் முதன்மையானது. அப்படிப்பட்ட தமிழ்மொழியை தன்னுடைய தாய் தந்தையர் போற்றியதற்கு நிகராக மு.தங்கராசன் போற்றுகிறார் என்பதை கீழ்க்கண்ட வரிகள் மூலம் அறியலாம்.

“முந்தையர் தமிழர் வாழ்வினில் முகிழ்ந்து
எந்தையும் தாயும் இனிதே போற்றிய
சிந்தனைக் கவரும் செம்மொழி ஆகும்
சந்தமும் போற்றும் தமிழே வாழ்க”

மேலும் தமிழ்மொழி, பிறமொழிகளின் துணையின்றி செழித்து வளரும் தன்மையுடையது. அதற்குக் காரணம் அதில் தோன்றிய இலக்கிய, இலக்கண நூல்கள் தான் என்று கூறுகிறார்.

“எந்தமொழி துணையுமின்றி இயங்குதமிழ் வாழ்கவே
சிந்தைகவர் எங்கள்மொழி சிந்துதமிழ் வாழ்கவே
செழிப்புமிக்க இலக்கியங்கள் செந்தமிழ் வாழ்கவே
வலிமைமிக்க இலக்கணங்கள் வாய்ந்தமிழ் வாழ்கவே
கலைமலிந்த கனிந்ததமிழ் கன்னித்தமிழ் வாழ்கவே
நிலையோங்கி நீள்புவியில் நெடிதுயர்ந்து வாழ்கவே”

மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் தாய்மொழிப்பற்று அவசியம், அதிலும் தாய்மொழியைத் தன் உயிருக்கு நிகராக மதிக்க வேண்டும். அதுபோல, பிறமொழி கலந்து பேசும் தன்மையும் மறக்க வேண்டும் என்று மக்களை வலியுறுத்துகிறார் என்பதைக் கீழ்க்கண்ட கவிதை மூலம் அறியலாம்.

“கடமையை மறந்தார் வாழ்வில்
கண்ணியம் இழந்து போவார்
மடமையாம் பிறமொழி தாக்கம்
மாற்றிடல் சுலபம் ஆமோ?
நடப்பியல் மாற்றி னால்தான்
நன்மொழி காக்கக் கூடும்

திடமுடன் சேர்ந்தார் தம்மைத்
திட்டியே திருத்த வேண்டும்"

மேலும், தமிழ்மொழிக்கு நிகரான மொழி இவ்வுலகில் இல்லை என்றும், தமிழ்மொழி போல் சிறப்புள்ள மொழி இவ்வுலகில் இல்லை என்றும் தன் கவிதையில் போற்றுகிறார்.

"எம்மொழியும் எம்மொழிபோல் இனிதா வதில்லை
தம்மொழியைப் புகழ்ந்துரைக்கும் தார்மிகள் காண்போம்"

என்ற வரிகள் மூலம் தாய்மொழி மீது அவர் கொண்ட பற்றுப் புலப்படுகிறது.

கல்வியின் சிறப்பு

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக" (குறள் 391)

என்ற குறளுக்கு ஏற்ப கல்வியின் சிறப்பை மக்களுக்கு மு.தங்கராசன் தனது கவிதைகள் மூலம் கூறியுள்ளார். ஒருவன் தான் பெற்ற கல்வியினால் இந்த உலகம் போற்ற வாழலாம்;

"படிப்படி யாகக் கற்றுப்
பாரெல்லாம் புகழ்ம ணக்க
நெடிதுயர் வாழ்வு பெண்ணே
நீள்புவி போற்ற வாழ்வார்! "

என்ற கவிதை வரிகள் மூலம் அறியலாம். மேலும் கல்வி ஒருவனை தன் வாழ்வில் முன்னேற்றமடையச் செய்யும். அந்தக் கல்வியைத் தடைகள் பல வந்தாலும் தடைகளைத் தாண்டி, கல்வி கற்றால் இந்த உலகமே போற்ற வாழலாம் என்பதைப் மு.தங்கராசன் கூற்று மூலம் அறியலாம்.

"அடிப்படைகள் மாறாமல் அடுத்து அடுத்துப்
படிப்படியாய்ப் பழுதறவே பயின்று வந்தால்
படித்துணர்ந்த கல்விகேள்வி பல்கக் காண்போம்
படிப்பநிலைப் பட்டறிவைப் பாரே போற்றும்"

மு.தங்கராசன் போன்று "கல்வியின் சிறப்பை கூறும் விதமாக பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும் என்று அதிவீரராமபாண்டியன்" கூறுகிறார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்றை நன்றே"

நாட்டுப்பற்று

ஒரு மனிதனுக்கு மொழிப்பற்று எவ்வளவு முக்கியமோ அதுபோல தாய்நாட்டுப்பற்றும் முக்கியம். அதனால்; தான், நமது தாய்த் திருநாட்டைத் தாயாக பாவித்து, பாரதத்தாய் எனப் போற்றுகிறார்கள். அதுபோல மு.தங்கராசன் கவிதைகளில் உலக நாடுகளில் பாரதநாடு தனித்துவமான நாடு என்றும் அன்பு குடிகொண்டுள்ள நாடு என்றும், பண்புகளால் சிறந்த நாடு என்றும், உலகில் குடியாட்சி தத்துவத்திற்குச் சான்றாக விளங்கும் நாடு என்றும் போற்றுகிறார்.

"முடியாட்சித் தன்மையிங்கு முகிழ்க்கா வண்ணம்
குடியாட்சித் கோட்பாட்டைக கொண்டே ஆட்சி
நெடிதுயிர்க்கும் நீர்மையினான் நிலைபெற் றோங்கி
கொடியுயர்த்திக் கோலோச்சிக் கொழிக்கும் நாடு
சின்னஞ்சிறு நாடாகச் செறிந்த நாடு
பௌளம் பொருள் கொள்கையினால் பெயர்பெற்ற நாடு
தன்னம்பிக்கை கொண்டிலங்கித் தனகந்த நாடு
நன்னாடென நானிலமே போற்றும் நாடு"

மேலும், இந்தியத் திருநாட்டில் பல சாதி மக்களும் பலமொழி பேசும் மக்களும், பலமதத்தவர் இருந்தாலும் ஒற்றுமைதான்

இந்திய நாட்டின் பலம் என்பதை வாகைப்பூக்கள் கவிதையில் கூறியுள்ளார்.

"இனம் மதம் பேதம் இல்லா
இணக்கம் கொண்டே இயங்கும் நாடு
உனக்கு எனக்கு உரிமை என்பதில்
பிணக்கே இன்றிப் பெரிதமை நாடு"

அறியாமை

"பேதமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொள்
ஊதியம் போக விடல்" (குறள் 831)

என்று அறியாமைக்கு விளக்கம் தருகிறார் வள்ளுவர். அறியாமை மனிதனை முட்டாளாக்கி, அவனை அழிவுப்பாதையில் இட்டு செல்கிறது. அறியாமை என்ற இருள் இந்த உலகத்தை விட்டு அகலாவிட்டால். இந்த உலகத்தை அறியாமை என்ற இருள் அழித்துவிடும் என்பதை மு.தங்கராசன் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

"அறியாமை இருளும் நீங்கி
அகிலமே சிறக்க வேண்டும்
புரியாமை கங்குல நீங்கிப்
புதுப்புது நானம் தோன்றி
வெறித்தனம் விலகியோடி
விடியலாய் சமுதாயந்தான்
புரிந்துகொள் புதுமை நாலப்
பூமியில் தோன்ற வேண்டும்"

மேலும், இந்நாட்டில் மக்கள் வெற்றுக் கதையைப் பேசி, தன் வாழ்க்கையை வீணடிக்கின்றனர் என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"வெற்றுக்கு உரையாடி வீண்கதைகள் பேசியவவன்
சற்றேனும் தொடர்பில்லாச் சங்கதிகள் பட்டிமன்றம்
பற்றுகொள்ளும் பொழுது போக்கு
பாழ்பட்டுத் கொண்டிருக்கு
தொற்றுநோய் தொடர்ந்திடாத துவக்கங்கள் வேண்டும்மா! "

அன்பு

இவ்வுலகில் எவராலும் வெல்லமுடியாத சக்தி அன்பிற்கு உண்டு. அதனால் தான் வள்ளுவர்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" (குறள் 71)

என்று, அன்பின் மகத்துவத்தை கூறுகிறார். அதுபோல மு.தங்கராசன் தனது கவிதைகளில் இவ்வுலகில் உள்ள நற்பண்புகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது அன்பு என்று கூறுகிறார்.

"மனிதாபி மாளத்துக்கும் மன்னுயிரை மதிப்பதற்கும்
மனிதநேயம் தழைப்பதற்கும் மானசீக உறவுக்கும்
அணிகலனாய் நெஞ்சத்தில் அழைத்துவரும் அன்பேதான்
கனிவோடு குழைந்துவரும் கருணைக்கும் காரணமாம்!

மேலும், இவ்வுலகில் அன்பினால் எதையும் சாதிக்க முடியும் என்று தனது கவிதைகளில் கூறியுள்ளார்.

"ஒருபோதும் யாருக்கும்; இளகாத கல்மனமும்
திருவோடு திகழ்ந்துவரும் அன்பினால் உருகிவிடும்
உருகாத நெஞ்சமும் உதவாத கைகளும்
திருந்தாத உள்ளமும் தேடிவரும் பகைமையும்
அன்போடு பேசுவதால் அரவணைக்கும் தன்மையினால்
துன்பத்தைத் துடைத்தருள எப்போதும் இயன்றுவரும்"

இதைப்போன்று, இராமலிங்க அடிகளாரும் இவ்வுலகத்தை இயக்கிவரும் பரம்பொருளாக அன்பை அடையாளப் படுத்துகிறார் என்பதை திருவருட்பா பாடல் மூலம் அறியலாம்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படும் பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் ளமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே"

(திருவருட்பா)

நன்றி மறவாமை

மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களில் ஒன்று செய்நன்றி மறவாமை. அதனால் தான் வள்ளுவர்,

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" (குறள் 101)

என்று கூறுகிறார். ஒருவர் செய்நன்றியை மறந்தால் அவரை இந்த உலகத்தில் உள்ள எவரும் மதிப்பதில்லை. அதுபோல, செய்நன்றியை மறவாமல் வாழ்வோர் இந்த உலகம் போற்ற வாழ்வார்கள் என்பதை மு.தங்கராசன் தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

"செய்நன்றி மறந்தார் தம்மை
செகத்தினோர் மதிப்பதில்லை
மெய்நன்றி உணர்ந்தோர் தம்மை
மேதினி மறப்பதில்லை
எய்திய நன்தை தன்னை
எப்போதும் எண்ணிப் பார்த்துச்
செய்தவர் சிந்தை என்றும்
குளிர்ந்திடச் செய்வார் வாழ்வார்! "

தன்னம்பிக்கை

நம்முடைய வாழ்வில் தன்னம்பிக்கை இருந்தால் நாம் வாழ்வின் சிகரத்தை அடையாளம். தன்னம்பிக்கை இல்லாத மனிதன் வாழ்வதற்குப் பதிலாக இறப்பதே மேல் என்று பல அறிஞர்கள் கூறியுள்ளனர். அதுபோல, மு.தங்கராசன் தன்னுடைய கவிதைகளில் தன்னம்பிக்கை மனிதனிடம் இருக்க வேண்டிய உயர்ந்த குணங்களுள் ஒன்று என்று தன்னுடைய கவிதைகளில் கூறியுள்ளார்.

"இறைவனை எதிர்த்துப் பேசும்
இயல்பினைக் "தீர" னார்க்கு
இறையருள் சைகை காட்ட
எழுந்ததன் னம்பிக் கையே!
ஒருவரை ஒருவர் நம்பும்
உயர்குணம் இல்லா விட்டால்
ஒருபோதும் ஆன்ம நேயம்
உருவாகப் போவ தில்லை!"

முடிவுரை

இவ்வாறு மு.தங்கராசன் தன்னுடைய கவிதைகளில் மனிதன் வாழ்வதற்குத் தேவையான பல நற்கருத்துகளையும் கூறி, அவறோடு மனிதனுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய நாட்டுப் பற்று, மொழிபற்றின் அவசியத்தையும் வாகைப் பூக்கள் என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் எடுத்துரைக்கிறார் என்பதை இக்கட்டுரை மூலம் அறியலாம்.

எம். தங்கராசனின் நாடகத்திற்கான பங்களிப்பு

ஆர். பிரியதர்ஷினி
முனைவர் பட்ட ஆய்வாளர், இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

முன்னுரை

அவர் யார்? அவர் 15 வருடங்களுக்கு முன்பு போலவே இருந்தார்; அதே நீண்ட சட்டை சட்டை, அதே உடை மற்றும் அவரது நடத்தை அதிகம் மாறவில்லை. பல தமிழ் மொழி தொடர்பான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளில் அவர் பழக்கமான முகம். மற்றவர்களை விடச் சற்றே குட்டையாக, பக்கவாட்டில் பிளவுபட்ட தடித்த வெள்ளை முடியுடன், அவர் பற்களை அணியவில்லை என்றாலும், சில பற்களை காணவில்லை! ஆனால் அவர் தமிழில் பேசத் தொடங்கும் போது, அவரது பேச்சு இன்னும் தெளிவாகவும் மிருதுவாகவும் இருக்கும். ஸ்போர் தேசிய நூலகத்தில் 39 தமிழ்ப்புத்தகங்கள் அவரால் எழுதப்பட்டுள்ளன. அவர் ஓர் ஆசிரியர் என்று மட்டும் சொல்லாமல், தமிழ் ஆசிரியர் தங்கராசன் என்று பெருமையாக அறிவித்துக் கொள்கிறார்.

ஆரம்ப வருடங்கள்

1935 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பிறந்த எம். தங்கராசு தனது மூன்று வயதில் மலாயா சென்றார். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு அவர் எந்த முறையான பள்ளியிலும் சேரவில்லை, மேலும் தமிழ்மொழியில் ஆசிரியராக இருந்த தந்தையிடமிருந்து வீட்டில் தமிழ்மொழிக் கல்வியைப் பெற்றார். பின்னர், அவர் 1954 இல்ஜோகூர்பஹ்ருவில் உள்ள ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்பு புக்கிட்புலாட்டில் உள்ள ஒரு ஆசிரியர் பள்ளியில் நியமிக்கப்பட்டார். 1957 இல், அவர் திருமணம் செய்து கொண்டார்; இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் சிங்கப்பூரில் குடியேறினார். அங்கு அவர் ஒரு நிரந்தர ஆசிரியர்ப் பதவியைப் பெற்றார். அவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக் தமிழ்மொழி ஆசிரியராக இருந்தார். அவர் பள்ளியில் கற்பிக்கும் போது, மொழி மற்றும் அதன் இலக்கியத்தின் மீதான அவரது காதல் பள்ளி செயல்பாடுகளுக்காக பல நாடகங்களை எழுதவும் அரங்கேற்றவும் வழி வகுத்தது.

சிங்கப்பூரின் ஜப்பானிய ஆக்கிரமிப்பு

அவர் சிங்கப்பூர் ஜப்பானிய ஆக்கிரமிப்பு, பிரிட்டிஷ் காலனி ஆட்சி மற்றும் சிங்கப்பூர் மலாயாவின் பகுதியாக இருந்த காலகட்டத்தில் வாழ்ந்தார். அவர் தனது பிறந்த இடமான இந்தியாவில் இருந்து 80 வயதிற்கு முன்பு தனது பாட்டியுடன் மலாயாவுக்குச் சென்றார். தமிழ் எழுத்துக்களை மணலில் எழுதக் கற்றுக் கொள்வது முதல், தமிழ் ஆசிரியராக வேலை செய்யத் தொடங்கும் வரை, அவர் தமிழ் மொழியில் அனைத்தையும் படித்தார். மலேசியாவில் ஆசிரியராகப் பணியாற்றிய சில வருடங்களுக்குப் பிறகு, அவர் சிங்கப்பூர் சென்றார். மேலும் அவர் ஆசிரியராகத் தனது பணியைத் தொடர்ந்தார், மேலும் எழுத்து மற்றும் சமூகப் பணிகளைச் செய்தார்.

அவர் தனது கல்வி வாழ்க்கையில் பல பாத்திரங்களை ஏற்றுக்கொண்டார் - ஒரு ஆசிரியர், பள்ளி முதன்மை, பாடத்திட்ட அலுவலர் முதலியோர் 2012 இல், தமிழ் முரசு மற்றும் தமிழ் ஆசிரியர் சங்கத்தால் அவருக்கு வாழ்நாள் கற்பித்தல் விருது வழங்கப்பட்டது.

அவருடைய கடின உழைப்பு

அறிஞர், நாடக ஆசிரியர், நாவலாசிரியர், கவிஞர் மற்றும் கட்டுரையாளர் ஆகிய மு. தங்கராசு நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ்

மொழி ஆசிரியராக இருந்தார். செல்வாக்குள்ள தமிழவேல் நாடக சங்கத்தின் நிறுவன உறுப்பினரான அவரது படைப்பு இலக்கிய ஆர்வம் அவரை ஒரு சிறந்த எழுத்தாளராகவும், தமிழ் சமூகத்தில் நன்கு அறியப்பட்ட இலக்கிய வாதியாகவும் ஆக்கியது. அவரது படைப்புகள் சமூகம் மற்றும் குடும்ப மதிப்புகளின் பிரச்சினைகள் மற்றும் ஒருவரின் தாயகத்தில் ஒருவரின் அடையாளத்தை மையமாகக் கொண்டது.

எம். தங்கராசுவின் ஆரம்பகால கவிதைகள் மற்றும் சிறுகதைகள் செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன, குறிப்பாக தமிழ் முரசு மற்றும் தமிழ் மலர், தினசரி தமிழ்மொழி செய்தித்தாள்கள் பல ஒளிபரப்பப்பட்டது. அவரது படைப்புகள் சமூகம் மற்றும் குடும்ப மதிப்புகள் மற்றும் தாயகத்தைப் பற்றிய அடையாளம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன, மேலும் ஒரு நாட்டின் குடிமக்களால் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று அவர் கருதும் நல்லொழுக்கங்கள் மற்றும் மதிப்புகள் பற்றிய அக்கறையையும் வெளிப்படுத்துகிறது.

இலக்கியப் பணி

எழுத்தாளர் தங்கராசனின் முதல் இலக்கியப் படைப்பு 'விதியைஅறிவால் வெல்ல முடியும்'. அவர் இந்த நாடகத்தை அரங்கேற்றினார், அவர் ஆசிரியர் பயிற்சியில் இருந்தபோது, சான்றளிக்கப்பட்ட ஆசிரியராக மாறுவதற்கு முன்பே. இருப்பினும், 1956 ஆம் ஆண்டில் தமிழ் முரசில் வெளியிடப்பட்ட 'வனஜகிதானா' என்ற சிறுகதை, அவரை ஓர் எழுத்தாளராக இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அவற்றில் பல சிறுகதைகள், நாடகங்கள், கவிதை மற்றும் மாணவர்களின் தொகுப்பு தொடர் (மொழிபெயர்ப்பு) ஆகியவை சுமார் 39 இலக்கியப் படைப்புகள் வரை சேர்க்கப்பட்டுள்ளன.

அவரது படைப்புகளின் தலைப்புகள் ஏன் பூக்களுடன் தொடர்புடையவையாக உள்ளன என்று யாராவது விசாரித்தபோது, அவர் தனது நாவல்கள் "இலக்கிய உலகின் மலர் தோட்டத்தில் ஒரு சிறிய வாசனையை வழங்க வேண்டும்" என்று பதிலளித்துள்ளார். செம்பவாங் தமிழர் சங்கம் 13 அக்டோபர் 2012 அன்று பாராட்டு விருந்தை நடத்தியது, அதன் உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். தங்கராசன் சமீபத்தில் சிங்கப்பூரில் தகுதியான தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட 'வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்றதற்காக. இந்தச் சிறப்பு விருதை நினைவுகூரும் வகையில், செம்பவாங் தமிழர் சங்கத்தின் முன் & பின் பள்ளிப் பராமரிப்பு மையம் (HQ) யிஷூனில் உள்ள பாராட்டு விருந்து நடைபெற்றது.

எம்.தங்கராசன் (ஐந்தாவது இடம்) காவியின் கனவு 1962

தமிழவேல் நாடகச் சமூகம்

விருதுகள் & பாராட்டுக்கள்

எம். தங்கராசு 1995இல் கல்வி அமைச்சகத்தின் பிங்கட் பக்தி சேத்தியாவை (நீண்ட சேவை விருது) பெற்றார். 2008இல் கவிமாலை இலக்கிய அமைப்பிலிருந்து கணையாழி இலக்கிய விருதைப் பெற்றார்.ஒரு சிறந்த எழுத்தாளர், எம்.தங்கராஜூ தனது முதல் கவிதைத் தொகுதியான ஜுவல்ஸ் முதல் 22

புத்தகங்களை வெளியிட்டுள்ளார். நறுமண மல்லிகையில் அவரது கதை ஒன்று (2001) தேசிய நூலகவாரியத்தின் வாசிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது!.

அவர் செம்பவாங் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக 12 ஆண்டுகள் கடமைகளைச் செய்தார். மேலும் மேல்நிலைப்பள்ளிக்கான நிதி திரட்ட நன்கொடை இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தார். செம்பவாங் தமிழ்ப்பள்ளியின் முதல்வர் மற்றும் செம்பவாங்தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக அவரது இரட்டைப் பொறுப்புகள் அவரது இலக்கியப் பணியில் இருந்து 12 வருட இடைவெளி எடுக்கக் காரணமாக இருந்தாலும், அவர் மாணவர்களுக்கும் ஆர்வமுள்ள குழுக்களுக்கும் தொடர்ந்து நாடக வசனங்களை எழுதினார். அவரது இலக்கியப் பயணம் தடையின்றி, தொடர்கிறது.

சிங்கப்பூரின் நிலையான வளர்ச்சியைக் கண்டார்

எழுத்தாளர், ஆசிரியர் மற்றும் சமூக சேவகரின் மும்முறை திறமைகள்தான் எம். தங்கராசனை உருவாக்குகின்றன. 80 வயதில் (2014), அவர் சிங்கப்பூரின் நிலையான வளர்ச்சியைக் கண்டார், உள்ளூர் தமிழ் இலக்கியக் காட்சிக்குப் பங்களித்தார் மற்றும் பல வழிகளில் சமூகத்திற்கு உதவினார். சிங்கப்பூர் மலாயாவுக்குள் ஒரு மாநிலமாக இருந்தபோது, பெரும்பாலும் கிராமங்களைக் கொண்டது மற்றும் தோட்டங்கள். பிறகு, சிங்கப்பூரில் பல தமிழ் பள்ளிகள் இருந்தன. மொழி ஊடகங்களின்படி பள்ளிகள் பிரிக்கப்பட்டன. எனவே தமிழ், சீனம் மற்றும் மலாய் பள்ளிகள் இருந்தன, மேலும் அனைத்து பாடங்களும் அந்தந்த மொழிகளில் கற்பிக்கப்பட்டன. மக்களை ஒன்றிணைக்க ஆங்கில மொழி தேவைப்பட்டது. சிங்கப்பூரின் மரியாதைக்குரிய தலைவர் திரு லீகுவான்யூ, "அடுத்த 20 ஆண்டுகளில் நான் இந்த ஒற்றுமையை அடைவேன்" என்று கூறினார். இன்று அது வானளாவிய கட்டடங்கள், 2ஆவது மொழியாக தாய்மொழி, இருமொழி கொள்கைகள் மற்றும் உலகத்தரம் வாய்ந்த கல்வி கொண்ட நகரம்.

முடிவுரை

கலை சமூகத்தின் மிக மூத்த உறுப்பினர்கள மற்றும் கலைகளுக்கு வாழ்நாள் முழுவதும் பங்களிப்பு செய்தவர்கள். இந்தக் கலைஞர்கள், நிர்வாகிகள், கல்வியாளர்கள், புரவலர்கள் மற்றும் சாம்பியன்கள் இன்று நாம் அனுபவிக்கும் துடிப்பான கலை மற்றும் கலாச்சாரக் காட்சியின் அடித்தளத்தை அமைத்த பல சிங்கப்பூர் கலை முன்னோடிகளை உள்ளடக்கியது. கவிதைகளுக்கும் சிறுகதைகளுக்கும் நாடகங்களுக்கும் தேவையான, அருமையான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி முன்னுதாரணமாக விளங்கிய திரு தங்கராசனை, படைப்பாளிக்கே படைப்பாளி என்றார் உள்ளூர் எழுத்தாளர் திரு இராமகண்ணபிரான். அவர் அறிமுகப்படுத்திய பல அருஞ்சொற்களை நான் எனது படைப்புகளில் பயன்படுத்தியது உண்டு," என்றார் அவர். தமிழவேள் நாடக மன்றம் என்ற அமைப்பை நிறுவி நடத்திவந்தார் திரு.தங்கராசன்.

துணைநூற் பட்டியல்

கோ. புண்ணியவான், மலேசியா புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், இந்திரையா நிலையமும், 2009.

சென், பீட்டர். எஸ்.ஜே., (பதிப்புகள்), சிங்கப்பூர் மேம்பாட்டுக் கொள்கைகள் மற்றும் போக்குகள், ஆக்ஸ்போர்டு யுனிவர் சிட்டிபிரஸ், சிங்கப்பூர், நியூயார்க், 1983.

1937 மற்றும் 1939 இல் வெளியிடப்பட்ட 'மலைய மான்மியம்' சரவண முத்துப்பிள்ளை முத்து தம்பிப்பிள்ளை ஆகிய 2 தொகுதிகளின் படைப்பு, பி.என்.எம். முத்து பழனியப்பனின் 1938 மலையவின் தோட்டம், ஆர்.பி. கிருஷ்ணனின் 1936 மலையவில் இந்தியர்கள், கே.எஸ்.சந்து, மற்றும் ஏ.மணி (பதிப்புகள் 1800 முதல் இந்திரவராய் இந்தக் குழுக்களின் விரிவான கணக்குகளை அளிக்கிறார்.

மு. தங்கராசனின் “சிந்தனைப் பூக்கள்” சிறுகதைத் தொகுப்பு காட்டும் சமுதாயச் சிக்கல்கள்

பிரியா. க
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
சிவந்தி ஆதித்தனார் கல்லூரி, பிள்ளையார்புரம்

முன்னுரை

சிறந்த எழுத்தாளரான சிங்கப்பூர் மு. தங்கராசனின் சிந்தனைப் பூக்கள் சிறுகதைத் தொகுப்பு சிறந்த இலக்கிய நயத்தை வெளிப்படுத்துகிறது. சிறுகதைகள் ஆயிரம் படிக்கக் கிடைக்கலாம். ஆனால் சிந்தனை மலர்ச்சியோடு கிடைக்கும் சிறுகதை அமிர்தம் போன்றது. சிறுகதைகள் மட்டுமின்றி கட்டுரைகள், கவிதைகள் மட்டுமின்றி பல நூற்களையும் வெளியிட்டுள்ளார். இச்சிறுகதையில் சமுதாயத்தின் சட்ட சிக்கல்கள் அதிக அளவில் காண முடிகிறது. அதுமட்டுமில்லாமல் சமுதாய சீர்திருத்த கருவும் மறைந்துள்ளது. இதைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

எண்ணிப்பார்

மறுமணம் என்பது இன்றைய சமுதாயத்தின் பரவலாகக் காணப்படும் சமுதாய நிலைகளில் ஒன்று. எண்ணிப்பார் சிறுகதையில் தன்னுடைய மனைவியை இழந்த நபர் மறுமணம் என்ற ஒன்று தேவையில்லை என எண்ணி தன்னுடைய இரண்டு மகன்களுக்காக தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்திருக்கிறார். இன்றைய சூழலில் தாய் தந்தை ஒன்றிணைந்து வளர்க்கும் குழந்தைகளே நற்பண்புகளுடன் வளர்வது அரிது. இக்கதையில் தந்தையானவர் நல் ஒழுக்கங்களுடன் தன் குழந்தைகளை கருவிழிகள் போல வளர்க்கிறார். “கூடா நட்பு கேடாய் முடியும்” என்பது பழமொழி. தன் இளைய மகனின் மோசமான நண்பர் கூட்டம் அவனைப் பாதாளத்திற்கு அழைத்துச் சென்றது. தீய பழக்க வழக்கங்களுக்கும், தொழிலுக்கும் அடிமை ஆனான்.

தன் கன்றை இழந்த பசு மனுநீதிச் சோழனிடம் நீதி கேட்க, தன் ஒரே மகனைத் தேர்காலில் இட்டு, கொன்று நீதி வழங்கினான். அது போல எவரும் நீதி கேட்காமலேயே தன் மனசாட்சிக்கும், சமூகத்திற்கும் நீதி வழங்கும் விதமாக தன் மகனைக் காவலர்களிடம் ஒப்படைத்து மரண தண்டணையைப் பெற்றுக் கொடுத்தார் என்று ஆசிரியர் கதையை முடித்துள்ளார். இதிலிருந்து சமுதாயத்தின் ஒழுங்கைப் பாதுகாப்பதில் ஆசிரியருக்கு உள்ள அக்கறை நமக்குப் புலனாகிறது. இக்காலத்தில் ஒரு தந்தையால் இவ்வாறு நேர்மையாக வாழ முடியுமா? என்றால் அதற்கு வாய்ப்பே இல்லை என்று தான் கூற வேண்டும். தன் மகனுக்கு திருமணம் செய்து மாலையும் கழுத்துமாகப் பார்க்க ஆசைப்பட்டவர், இறுதிச் சடங்கில் மாலையும் கழுத்துமாகப் பார்த்ததை எண்ணிக் கொண்டிருந்தார், என்று ஒரு தந்தையின் மனத்துயரை ஆசிரியர் புலப்படுத்துகிறார். சமுதாயத்தில் குழந்தையை வளர்க்க தாய் தந்தை இருவரும் அவசியம். ஒருவர் இல்லை என்றாலும் அக்குழந்தை நல்வழியில் செல்வது கடினம் என்பதும் இக்கதையில் புலனாகிறது.

முத்தப்பா

ஒரு பெண்ணுக்குத் திருமணமானவுடன் குழந்தை பிறக்க வேண்டும். அதுதான் அவளுக்கு தனிப்பட்ட மகிழ்ச்சியையும், இருவீட்டாரிடமும் பரஸ்பர நெருக்கத்ததையும் உண்டாக்கும். “ஆடுமாடு இல்லாதவர் அடைமழைக்கு ராஜா, பிள்ளை குட்டி இல்லாதவர் பஞ்சத்திற்கு ராஜா” என்ற பழமொழிக்கு இணங்க இக்கதையில்

வரும் கதை மாந்தர்களாகிய தம்பதியினருக்கும் குழந்தை பாக்கியம் இல்லை.

குழந்தை இல்லையே தவிர குழந்தைகளை வளர்ப்பதில் அதிக அனுபவம் பெற்றவள். குழந்தைகளை வளர்ப்பதில் கொள்ளை பிரியம் இருந்தது. தனக்கு ஒரு குழந்தை இல்லை என்பதை வெளிக்காட்டாமல் தன் தெருவில் உள்ள குழந்தைகளைத் தான் பெற்ற குழந்தைகளாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதற்கிணங்க தன் கணவனின் நண்பன் தன் மகனைத் தாரை வார்த்தான்.

தான் பெற்றெடுக்கா விட்டாலும் கடவுள் தனக்குத் தந்த மிகப் பெரிய பரிசாக அக்குழந்தையை வளர்க்கிறாள். கடவுளின் அனுகிரகத்தால் கிடைத்த குழந்தை என்றெண்ணி கடவுளின் அடைமொழியை தன் குழந்தையின் பெயருக்கு பின்னால் வைத்தாள். கடவுள் நம்பிக்கை என்பது உலக வழக்கில் உள்ள ஒரு செயல். உலகம் திறம்பட இயங்குகிறதென்றால் அது பரம்பொருளின் செயலால் தான் நடக்கிறது என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

முதல் குழந்தை வந்த நேரம் ஐந்து வருட மன வேதனைக்கு முடிவு காட்டும் விதமாக அவள் கருவுற்றாள். இனம்புரியா சந்தோஷத்திலும் முதல் குழந்தை மீது வைத்த பாசம் எள்ளளவும் குறைவில்லை. இன்றைய சமுதாயத்தில் இச்செயல் சாத்தியமில்லா ஒன்றாகவே இருக்கும். தான் பெற்ற குழந்தைக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்போம்.

அவளுக்குக் குழந்தை பிறந்த உடனே தான் தத்தெடுத்த குழந்தை இறந்தது. பிறந்த குழந்தையும் தாய்ப்பாலை அருந்தும் முன்பே இம்மண்ணுலகைப் பிரிந்தது. பித்து பிடித்தவளாய் தெருவில் அலைந்தவள் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். இதில் ஒரு தாயின் மனநிலையை ஆசிரியர் சித்தரிக்கின்றார். தனக்குக் குழந்தை இல்லை என்ற நிலையில் கூட தைரியமாக இருந்த பெண், இரு குழந்தைகளும் இல்லை என்றதும் மன தைரியத்தை இழந்தாள். மனித வாழ்வில் காசு, பணம் கூட பெரிதல்ல. தம் சந்ததியினர் பேரை நிலைநாட்ட ஒரு குழந்தை கண்டிப்பாக வேண்டும் என்ற சமுதாய எதிர்பாhப்;பை விளக்குவதாக ஆசிரியர் முடித்துள்ளார்.

காதல் மூலிகை

காதல் என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை சேர்ந்து வாழ வேண்டும் என்பனவற்றை உடைய ஓர் ஆசை, காதல் மூலிகை என்னும் இச்சிறுகதையிலும் வயிற்றுப் பிழைப்புக்காக வெளியூர் செல்லும் கதாநாயகன் அங்கு காதல் வலையில் விழுகிறான். அவனுக்கென்று சமுதாயத்தில் எந்த உறவும் இல்லை. புது உறவு வருகையை எண்ணிப் பூரிப்படைந்தான்.

காதல் ஆசை ஒரு நோய். அது வளர்ந்து கொண்டே செல்லும் தன்மை உடையது. அது தீரா நோயைப் போன்றது. அதற்கு மருந்தென்பது இல்லை. அதனாலேயே புத்தர் "ஆசையே துன்பத்திற்கு காரணம்" என்கிறார். இந்த காதல் ஆசையே கதாநாயகனுக்குத் துன்பத்தைத் தந்தது. உருகி உருகி காதலித்த காதலியைத் தன் பண கஷ்டத்தால் இழந்தான்.

"ஒன்று ஜனக்கட்டு வேணும் இல்லே
பணக்கட்டு வேணும் "

என்னும் பழமொழிக்கு ஏற்ப உறவுகளும் இல்லாமல், பணமும் இல்லாமல் அல்லல்பட்டான். இதன் மூலம் சமுதாயத்தில் பணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறியுள்ளார்.

கண்களைப் பார்த்தும் அன்பு நிறைந்த உள்ளத்தைப் பார்த்தும் காதல் புலப்படு; என சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இக்காலகட்டத்தில் உடல் அழகைப் பார்த்தும், வசதி வாய்ப்புகளைப் பார்த்துமே பலருக்குக் காதல் மலர்கிறது. இது போலவே கதாநாயகனின் காதலும் அவனின் வறுமையால் சிதைந்தது. காதலியின் குடும்ப கட்டுப்பாடுகளுக்கு ஒத்துக் கொண்டு இருவரும் மனமுவந்து பிரிந்து விட்டனர்.

எல்லா வகையான நோய்களுக்கும் மருந்து இருப்பது போல இந்த காதல் நோய்க்கு ஏன் மருந்து இல்லை என்று தினம் தினம் அழுவதாக ஆசிரியர் கதையை முடித்துள்ளார்.

கசந்த வாழ்க்கை

திருமணம் என்பது மனித வாழ்வில் அவசியமான ஒன்று. அழகான வாழ்க்கை இறைவன் கொடுக்கும் பரிசு என்றே கூறலாம். மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதி படைத்த ஒழுக்க முறையே திருமணம் ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப் பொறுப்பில் நடந்துவதற்கு பலர் அறியச் செய்யும் செயலே மணம் எனப்படும். இச்சிறுகதையில் கதைமாந்தர்கள் இருவரும் வறுமையில் இருந்தாலும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அன்றாட சம்பளத்தில் மனநிறைவாக வாழ்ந்தவர்களின் வாழ்வில் எமன் குறுக்கிட்டு கணவனின் உயிரைக் களவாடிச் சென்றான். நிம்மதியான வாழ்க்கை சீரழிந்தது. இரண்டு குழந்தைகளுடன் அனாதையாக நின்றாள். மறுமணம் என்பது இன்றைய சமுதாய அமைப்பில் இன்றியமையாதது. கணவனை இழந்த ஒரு பெண் சமுதாயத்தில் தனித்து வாழ்வது கடினம். தன் கணவனின் இறுதி விருப்பப்படி மறுமணம் செய்து கொண்டாள். மகிழ்ச்சியின் பொக்கிஷமான வாழ்க்கையை மனநிறைவோடு வாழ்ந்து வந்தாள். அதன் பரிசாக இன்னொரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். வாழ்க்கை என்னும் காலச்சாரம் அவள் வாழ்வை மீண்டும் புரட்டிப் போட்டது. அடுத்த கணவனும் இறந்தான்.

குழந்தை வளர்ப்பதே சிரமமாக இருக்கும் தருணத்தில் மூன்று பெண் குழந்தைகளைத் தனியாக வளர்க்க முற்பட்டாள். பெற்றவளுக்கு பிள்ளை பாரமா, என்பதற்கிணங்க மிகவும் கஷ்டத்திலும் தன் குழந்தைகளை நேர்மையாக வளர்த்தாள், என்பதிலிருந்து ஆசிரியர் தாயுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பெண் மனம் எவரும் அறியாத புதிர். ஒரு பெண்ணிடம் உள்ள இரகசியத்தை அவள் நினைத்தால் மட்டுமே வெளிக்கொணர முடியும். பெண்ணின் மனம் என்றுமே புதிரானது. இதற்கிணங்க இக்கதையில் வரும் பெண்ணும் தான் மறைத்து வந்திருந்த இரகசியத்தை இரண்டு கணவர்களிடமும் கூறாமல் மனதில் வைத்திருந்தாள், என பெண்ணின் மனதைக் கூறிட்டு காட்டியுள்ளார்.

பிரசவம் என்பது ஒரு பெண்ணுக்கு மறுபிறப்பு என்று கூறுவர். தன் முதல் பிரசவத்தில் குழந்தை பிறந்து இறந்ததும் துடிதுடித்துப் போனவளுக்கு தன் கணவனின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கமும் துளிர்த்தது. “திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை” என்பதற்கிணங்க அருகில் இருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தது. ஆனால் அப்பெண் இறந்து விடவே, யாருக்கும் தெரியாமல் அக்குழந்தையைத் தனதாக்கிக் கொண்டாள். இப்படி வாழ்க்கையில் அடிமேல் அடி வாங்கி வாழ்ந்தாள். இனிப்பான வாழ்க்கையும் கசப்பானது. அப்படி யாருக்கும் தெரியாமல் எடுத்த சுவிகார புத்திரிக்கு தன் கணவன்மார்கள் இல்லாமல் திருமணம் நடை பெறுவதை எண்ணி மனவேதனை அடைந்து கொண்டிருப்பதாக ஆசிரியர் கதையை முடிக்கிறார்.

ஓடுகாலி

தந்தையின் கண்டிப்பில் நல்லொழுக்கங்களைப் பயிலாத குழந்தை நன்னெறிப்படாது. கல்வி என்னும் நற்கனியை கைதவறிவிட்டவர்கள் வாழ்க்கையும் கசப்பானதாகவே இருக்கும். “ஏட்டறிவை விட பட்டறிவு நல்ல பலன் தரும்” என்பது முற்றிலும் உண்மை. இக்கதையில் வரும் தந்தையும் நற்சிந்தனைகளைப் பெற்றவர். குப்பை அள்ளும் தொழிலைச் செய்து வந்தார். தன் மகன் நன்கு படித்து, நல்ல தொழிலுக்குச் செல்ல வேண்டும் என விரும்பினார். ஆனால் மகனோ தீயப் பழக்க வழக்கங்களுக்குள் சிக்கி கல்வியையும் கைவிட்டான். தந்தையின் கனவைச் சுக்கு நூறாக உடைத்துத் தள்ளினான். சிறைச்சாலை வரை செல்லும் அளவிற்கு அவனது செயல்களும் வளர்ந்தன என்ற சமுதாயச் சிக்கலை வெளிக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

நமது சமுதாயத்தில் தனிமனிதன் ஒருவன் சிறைச்சாலை சென்றான் என்றால் அவனது நன் மதிப்பு சிதைந்துவிடும். அவன் அச்சமுதாயத்தில் வாழ்வதும் கடினம். இக்கதையின் கதாநாயகனும் தொழிலுக்காக இடம் பெயர்ந்து வெளியூர் சென்றான். அங்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்தான்.

திருமணம் என்பது இருமனம் இணைந்த நிகழ்வு. இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து நடந்தால் மட்டுமே இல்லற வாழ்வு நல்வாழ்வாகும். இன்றைய காலகட்டத்தில் பலரது திருமண உறவு முறிவதற்கு காரணம் பண வசதியின்மை, தகாத உறவுமுறை, புரிதல் இல்லா நிலை போன்றவை ஆகும். "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்" என்பதற்கிணங்க கதைத் தலைவியின் மனைவியும் ஆறு மாதம் நல்லபடியாக வாழ்ந்து வந்தாள். தன் கணவனுக்கு குடும்பத்தை நடத்த போதிய பண வரவு இல்லை

என்றறிந்ததும் அவனை விட்டு விலக ஆரம்பித்தாள். இதிலிருந்து ஆசையின் விளைவாக சமுதாயத்தில் நிகழும் சீர்கேடை விளக்கியுள்ளார்.

இன்றைய சமுதாயத்தில் தகாத உறவு அதிகமாகி விட்டது. பெரும்பாலான தகாத உறவு. பண அடிப்படையிலேயே நிகழ்கிறது. இங்கும் கதாநாயகி பணத்தை வேண்டி இன்னொருவனை மணந்தாள். அவனுடனும் முறைப்படி வாழாமல் பலருடைய தொடர்பில் இருந்தாள். சமுதாயமே 'ஓடுகாலி' என அவளுக்கு பட்டம் சூட்டியது. அவளின் தகாத உறவால் பெயர் தெரியாத நபர் அவளைக் கண்டந்துண்ட்டமாக வெட்டிக் கொன்றதாக ஆசிரியர் கதையை முடித்துள்ளார்.

பெண்ணுக்குச் சுதந்திரம் கிடைத்தாலும் அதனை அளவோடு பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் இப்படிப்பட்ட மனக்கசப்பான செயலே நடைபெறும், என்பதிலிருந்து பெண்ணுக்கு சுதந்திரம் அவசியம் தான். ஆனால் அதிக சுதந்திரம் சமூகத்தில் ஆபத்தானது என ஆசிரியர் தெளிவுப்படுத்துகிறார்.

முடிவுரை

தமிழாசிரியரான சிங்கப்பூர் மு.தங்கராசன் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். சமுதாய இன்னல்களைச் சிறுகதைகளாக்கி உள்ளார். சிந்திந்து செயல்படும் அறிவு நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்னும் நோக்கிலே இச்சிறுகதைக்கு "சிந்தனைப் பூக்கள்" என்று பெயர் சூட்டியுள்ளார். இச்சிறுகதை சமுதாய சிக்கலை படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

பன்முக நோக்கில் அமுதத்தமிழ்

செ. பூமாதேவி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி)
நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை

முன்னுரை

பெற்றோரைப் பேணிக்காத்தலின் அவசியம், கலாச்சாரம், நட்பு, மேன்மக்கள் நிலை, உழைப்பு, உணவே மருந்து, தாய்மொழி போன்ற பல கருத்துக்களை மு. தங்கராசனின் 'அமுதத்தமிழ்' நூலில் எங்ஙனம் கையாளப் பட்டுள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெற்றோரைப் பேணல்

பெற்றோரைப் பேணிக் காப்பது நாம் ஒவ்வொருவரின் கடமையாகும். 'வாழைக்கு தான் ஈன்ற காய் கூற்றம்' என்பது போல இன்றைய தலைமுறையினர் தன்னை இதுவரை பெற்று வளர்த்து, நல்லதோர் நிலையினை அடைவதற்குக் காரணமாய் இருந்த, தமது பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். பெற்றோரைப் பேணுவதை கடமையாக எண்ணாமல் பாரமாக எண்ணிப் புறந்தள்ளுகின்றனர், மு.தங்கராசன் தமது கட்டுரையில், பிள்ளைகள் பெற்றோரைப் பேண வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட வேண்டும் எனும் தலைப்பிலான கட்டுரையில், இன்றைய தலைமுறையினருக்குப் பெற்றோரின் அவசியத்தை எடுத்துரைத்துள்ளார். இது, சிரவணன் தன் பெற்றோரைச் சுமந்து செல்வது போலும், கர்ணன் தன் தாய்க்குக் கொடுத்த வரம்போலும் பெற்றோரைப் பேணாவிட்டாலும் முதியோர் இல்லங்களில் சேர்க்கும் அளவிற்கு மோசமானதொரு நிலையைப் பெற்றோர்க்கு ஏற்படுத்தக்கூடாது என்பதை உணர்த்துகிறது.

கலாச்சாரம்

வாழ்வின் அடிப்படைப் பண்பாடாக வகுத்துத் தந்த கலாச்சாரம் பெருமிதத்துக்குரியது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற சொற்றொடர் மூலம் கணியன் பூங்குன்றனார் உலகம் முழுவதையும் ஒரே ஊராகவும், அனைத்து மக்களையும் தமது உறவாகவும் எண்ணுவதைக் காண முடிகிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற வரிகள் மூலம் திருமூலர் மனிதகுலம் முழுவதையும் ஒன்றாகக் காண எண்ணுகிறார். இறைவன் ஒருவனே என்று வலியுறுத்துகிறார். கணியன் பூங்குன்றனார், திருமூலர் ஆகிய இருவரும் மனித குலத்தை எந்த அடிப்படையிலும் பிரிக்காமல் அனைவருமே சமம் என்று சிந்திக்கின்றனர். இது அவர்களின் நற்பண்பை மனித உலகிற்கு எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் இராமலிங்க அடிகளார். 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்றார் தாயுமானவர். இராமலிங்க அடிகளாரிடம் பிற உயிரையும் தன்னுயிர் போல் என்னும் கருணையைக் காண முடிகிறது. யான் பெற்ற அனைத்தையும் அனைவரும் பெற வேண்டும்

என்ற மனிதாபிமானம் தாயுமானவரிடம் உள்ளது பெருமையளிக்கின்றது. மு. தங்கராசனின் 'தமிழ்க் கலாச்சாரம் என்றும் பெருமைக்குரியதே' எனும் கட்டுரையின் மூலம், நமக்கு முன்னர் வாழ்ந்தவர்களிடம் எப்படிப்பட்ட நற்குணம் இருந்துள்ளது என்பதை உணர முடிகிறது.

நட்பு

ஒவ்வொருவரும் உற்ற துணை ஒன்றை நாடுதல் இயல்பாகும். அவ்வாறு உற்ற துணையாக; நண்பனாக வரப்பெறுபவரையும் எவ்வாறு பெறுதல் வேண்டும் என்று நமது முன்னோர் வரையறுத்துள்ளனர். 'சேரிடம் அறிந்து சேர்' என்பது முன்னோர்களின் பொன்னுரையாகும். ஊரெல்லாம் தோழன் இருந்தாலும் உற்ற தோழன் ஒருவன் இருக்கப் பெறுதல் வேண்டும்.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பே நட்பு"

உதட்டளவில் இனிப்பாகப் பேசுகின்ற நட்பு சிறந்த நட்பல்ல; நெஞ்சத்தில் வஞ்சமில்லாது உள்ளுணர்வுகளோடு ஒன்றிப் பழகுகின்ற நட்பே சிறந்த நட்பாகும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

ஆபத்து காலத்தில், தான் உடுத்தியிருக்கும் ஆடை நழுவினால் எவ்வாறு கைகள் விரைந்தோடி யாரும் ஆணையிடாமலேயே விலகும் ஆடையை, விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறதோ அவ்வாறு ஓடிச்சென்று, அதாவது நண்பன் அழைக்காமலேயே விரைந்து சென்று உதவ வேண்டும். அத்தகைய நட்பே சிறந்த நட்பாகும். பாலோடு கலந்த நீராகப் பரிணமிக்க வேண்டும். நட்பு, பன்றியோடு சேர்ந்த கன்றாக மாறக்கூடாது என்று கூறிக் கூடா நட்பும் கூடா ஒழுக்கமும் புறத்தொதுக்கி, நன்னெறி காட்டும் நம்பிக்கையும் நாணயமிக்க நட்பினரையும் நாடுதல் வேண்டும் என்று கூறுகிறார்.

மேன்மக்களின் உயர்வான நிலை

நற்பண்புகளும், நல்லொழுக்கங்களும் நல்லெண்ணங்களும் வாய்க்கப்பெற்ற நற்குடிப் பிறந்தோராகிய நல்லவர்கள் இருப்பதாலேயே இவ்வுலகம் இன்று நிலை பெற்றிருக்கின்றது என்பது சான்றோரின் அமுத வாக்கு. இன்பமும் துன்பமும், வாழ்வும் தாழ்வும், செழுமையும் வறுமையும் இருக்கும் மனித வாழ்வில் மக்கள் மேன்மக்களாக வாழ்வது பெருமைக்குரியது.

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லார்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

பசும்பாலை எவ்வளவு காய்ச்சினாலும் அது சுவையில் குன்றாது. வெண் சங்கு ஒன்றை, உலைக்கூடத்தில் இட்டு எவ்வளவுதான் சுட்டாலும் அந்தச் சங்கு தனக்கே உரிய வெண்மை நிறத்தை இழக்காது என்பது போல, அளவில்லாத துன்பங்கள் வந்தாலும் மேன்மக்கள் துவண்டு போக மாட்டார்கள்.

"ஆற்றும் பெருங்கற் றடிசுடுந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து"

பால் சுவையில் குன்றாது இருப்பது போலும், சங்கின் வெண்மை போலும், ஊற்று நீர் போலும் மேன்மக்களாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

உழைப்பு

ஒரு மனிதன் வெற்றியடைய வேண்டுமெனில் உழைப்பின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். 'உழைப்பின் வாரா உறுதிகளும் உளவோ' என்றார் பட்டினத்தடிகள். சோம்பலுக்கும் உள்ளத் தளர்வுக்கும் இடம்கொடுக்காமல் தொடர்ந்து செயல்பட்டால் வெற்றி பெறலாம். உழைப்பில் நம்பிக்கை வைத்து உழைத்தால் மட்டுமே மேம்பாடு காண முடியும். உழைப்பு என்பது முயற்சி, தன்னம்பிக்கை, உற்சாகம் என்பவற்றின் பிரதிபலிப்பு. 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்' என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் அமுத வாக்கு.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்"

என்று உழைப்போரை உயர்த்திப் பாடுகின்றார். உழைப்பவரே உயர்வர். உழைப்பே உயர்வு தரும்.

உணவே மருந்து

அகிலத்தின் அனைத்து உயிர்ப் பிறப்புகளும் உணவின்றி உயிர் வாழ்தல் அரிது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மணிமேகலை வரியின் மூலம், உணவு அளித்தலின் உயர்வை அறிய முடிகிறது. உடல், உடல் ஆரோக்கியத்திற்கு நல்லுணவே மூலாதாரம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நல்லுணவுகள் தாம் ஊட்டச்சத்துக்களைத் தரும். உணவினைச் சுத்தமாக உண்ண வேண்டும். மு. தங்கராசன், உணவின் அவசியம் குறித்தும் கூறியுள்ளார்.

தாய்மொழி

மொழிப்பற்றே நாட்டுப்பற்றுக்கு அடிப்படை. மொழிப்பற்று இல்லாதவரிடம் நாட்டுப்பற்றும் இருக்காது. தாயின் மேல் உள்ள அன்பைப் போல தாய்மொழியின் மீதும் பற்று இருத்தல் அவசியம். சிறு வயதில் முதன்முதலில் கற்கும் மொழியே தாய்மொழி குழந்தைக்கு அதன் தாய் கற்றுத்தரும் மொழியே தாய்மொழி குழந்தையின் உதடுகள் உச்சரிக்கும் முதல் மொழியே தாய்மொழி.

"தாயை இகழ்ந்தானைத்
தாய் தடுத்தால் விட்டுவிடு
தமிழ் தடுத்தால் விட்டுவிடு
தமிழை இகழ்ந்தானைத்
தாய் தடுத்தாலும் விடாதே; அந்தத்
தமிழே தடுத்தாலும் விடாதே"

என்று தாய்மொழியாகிய தமிழ் மொழியின் அவசியத்தை எடுத்துரைக்கிறார்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
வருந்தமிழ்தம் வேண்டினும் வேண்டேன்'

தமிழத்தாயே நீ இந்த உலகத்தில் இருப்பதனால் இங்கு உயிர் தரித்து வாழ்கின்றேன். நீயில்லாத உலகத்தில், தேவர்களுக்கு மட்டுமே கிடைக்கப்பெறும் அமிழ்தமே கிடைத்தாலும் ஏற்கமாட்டேன் என்பதன் மூலம், தமிழ் மொழியின் மீதுள்ள பற்றினை அறிய முடிகிறது.

முடிவுரை

பெற்றோரைப் பேணிக்காப்பது பிள்ளைகள் ஒவ்வொருவரின் கடமையாகும். வாழ்வின் அடிப்படை, கலாச்சாரம், நட்பு மேன்மக்களின் உயர்வான நிலை, உழைப்பின் உன்னதம், உணவின் அவசியம், தமிழ்மொழிப் பற்று ஆகியவற்றைப் பன்முக நோக்கில் மு. தங்கராசனின் 'அமுதத்தமிழ்' நூலின்மூலம் அறிய முடிகிறது.

ஒரு புகலிடவாசியின் சில நாடக முயற்சிகள்

முனைவர் ஆ. பூமிச்செல்வம்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

ஆய்வுச் சுருக்கம்

கடந்த இருபதாம் நூற்றாண்டினை, தொடர்ந்த இரு உலகப் போர்களின் காலகட்டம் எனின், இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தை முன்னவற்றின் விளைவுகளை அனுபவிக்கும் காலம் என்று கூறுவது பொருந்தும். முந்தைய சூழலில் புதிய புதிய கண்டுபிடிப்புகள், நாடுபிடித்தல், உலகையே சந்தைமயப்படுத்துதல் எனும் அதிரடி நிலைமை; சமகாலத்தில் ஆயுத விற்பனை, அதிகோர வறுமை, அளவற்ற நோய்மை, எதிர்பாராப் புலம்பெயர்வு, ஏகோபித்த அகதிமை என்பவற்றை எதிர்கொள்ள வேண்டிய வாழ்வியல் நெருக்கடிகள். இவ்விதப் பன்முக நெருக்கடிகளின் சமீபத்திய ஒரு வரவுதான் 'புகலிடத்துயரம்' என்பது.

புகலிடம் கோரல் என்பது, எப்போதும் தானே உருவாவது அல்ல. இது, யாரோ சில தரப்பினரின் ஆதிக்க மனோபாவத்தின் விளைவால், திட்டமிட்டு உருப்பெற வைக்கப்படுவதாகிறது. ஆதிகாலத்தைய அலெக்ஸாண்டர் தொடங்கி, அன்மைக் காலத்தில் ஆப்கானிஸ்தானின் அமைதியைக் குலைத்த அமெரிக்கக்காரர்கள் வரைக்குமாக, பலதரப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களால், இவ்வுலகில் புகலிடவாசியர் தொடர்ந்து உருவாக்கப்பட்ட வண்ணமே உள்ளனர். இவ்வித நிலைமையினைக் குறிப்பிட்ட ஒருகாலத்தில், கும்பினியர்களின் கொடுஞ் செய்கைகளால் எய்தியவர்களாக இந்தியர்களும் இருந்துள்ளனர். இவ்விதத் துயர்நிலைமையை இந்தியர்கள் ஓரிரு வருடங்களல்ல; ஏறக்குறைய நானூறு வருடங்களாக அனுபவித்தும் வந்திருக்கின்றனர். வெள்ளையர்களின் நாடுபிடிக்கும் மோகத்தால், இந்தியர்களுக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு ஒரு கட்டத்தில், தங்களுடைய சொந்த நாட்டையே இழக்க வேண்டிய துர்பாக்கிய நிலையானதும் உருவானது. இதன் காரணமாகவே, இலங்கை, பர்மா, மொரீசியஸ், பிஜி, சிங்கப்பூர், மலேசியா எனத் தமிழர்கள் புலம் பெயர்ந்து சென்று, காடு திருத்தி, கரும்பு வெட்டி, ரப்பர் பால் வடித்து, தேயிலை ஒடித்து, நசிய வேண்டியதாயிற்று. இவ்விதத் துயர்நிலைமையை எதிர்கொண்ட தமிழினம், அத்துயரைப் பிறருக்கு வெளிப்படுத்திட எத்தனங் கொண்டு, அதற்குப் பன்முகக் காரணிகளைக் கைக்கொண்டது. அதன் ஒருகூறுதான் புலம்பெயர் இலக்கியம். இவ்வித இலக்கிய வகைமையை உருவாக்கிய பலருள் 'சிங்கப்பூர் தமிழாசிரியர் மு.தங்கராசனும்' ஒருவராகக் காணக்கிடைக்கிறார். சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில், திருச்சிப் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து, ஒருங்கிணைந்த மலேயாவில் அமர்ந்து, உழைப்பால் உயர்ந்த ஒரு நபரின் மகன் தான் இந்தத் தங்கராசன். கதாசிரியர், கட்டுரையாளர், கவிஞர் என்கிற பன்முகத் தளங்களில் இவர் புழங்க முயற்சித்திருந்தாலும், அடிப்படையில் ஓர் பள்ளி ஆசிரியராகப் பணிசெய்த காரணத்தில், மாணவர்களை மையமிட்ட நாடகப் பனுவலாக்க முயற்சியில், சற்றுத் தனித்துப் பார்க்கப்பட வேண்டியவராகக் காணக் கிடைக்கிறார்.

திறவுச்சொற்கள்: புகலிடம், பனுவல், புளகாங்கிதம், சுயம், நீட்சி, கிடக்கை, அவதானிப்பு, பிரதி, எத்தனம், புனரமைப்பு, சுமூகம், கோமாளி, செய்கை, துருத்தி, நிஜநாடகம், பூர்வீகம், நசிவு.

முன்னுரை

மு.தங்கராசன் தனது படைப்பாக்க இலட்சிய வழியில் ஏறக்குறைய இரண்டு டஜன் படைப்பு நூல் உருவாக்கத்தை எட்ட முயன்ற எத்தனத்தின் விளைவாகவே, இருபது என்கிற எண்ணிக்கையை ஒட்டிய நாடகங்களைப் படைத்திருக்கிறார். இத்துடன், அவற்றை இரண்டு தொகுதிகளாகவும் ஆக்கித் தந்திருக்கிற இவரின் முயற்சி என்பது, புகலிடச் சூழலில் வரவேற்கத்தக்க ஒன்றுதான். இவருடன் புலம்பெயர்ந்து பல இடர்பாடுகளுடன் வாழும் சில தமிழ்ப் படைப்பாளியர், படைப்புத் தொழிலையே தம் வாழ்க்கையின் இலக்காகக் கொண்டு, நசிந்தலைந்த நிலையில், வெகு கவனமாகத் தம் படைப்பு முயற்சியையும், பாடம் நடத்தும் பணியையும் சரிசமாகப் பாவித்து, அவற்றைத் தமது வெற்றிக்கும் புகழுக்குமாக மாற்றிக் கொண்டுள்ள விதத்தில்தான், இவர் கரிசனமிக்கவராகவும் கவனிக்கத் தக்கவராகவும் ஆகியிருக்கிறார். இச்செயல் நிகழ்வுகளை இவரின் கூற்றே பலவிடத்தில் உரத்து அறிவித்திருக்கின்றன.

மு.தங்காசனின் நாடகப் பனுவலாக்க முயற்சியும் அதற்கான சில எத்தனங்களும்

“எனது வாழ்க்கைக்கான தொழில் மற்றும் சமுதாயப் பொதுப்பணிகள் என்கிற போராட்டங்களினூடே, இதுகாறும் நான் எழுதிச் சேர்ந்த புத்தகங்களின் எண்ணிக்கை பத்தொன்பது மட்டுமே. கலை, கலாச்சாரப் ‘பெருமிதங்களுக்காக’ நான் பட்ட பாடுகளையெல்லாம் நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என்ற ஓர் எண்ணம் - உந்துதல் என் இதயத்துள் ஒரு நச்சரிப்பாகத் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது. ‘தமிழ்வேள் நாடக மன்றத்துக்காகவும், இன்னபிற இனிய நண்பர்களின் வேண்டுகோள்களுக்காகவும் நான் எழுதி, … இருந்தவற்றில் ஒன்றிரண்டை உருப்படியாகச் சேர்த்து, நாடகத் தொகுப்பு நூலை வெளியிட வேண்டும் என்றொரு சிந்தனைகளின் உருவாக்கம்தான் இந்நூல். எதிரொலி, தியாகச் சுடர், அத்தை மகன் என்ற மூன்று நாடகங்களின் தொகுப்பாக மலரும் இத் ‘தாழம்பூ’ என்னுடைய இருபதாவது படைப்பாகும்”1 என்கிற தன்னிலை விளக்கமானது, இவர் நாடகம் படைக்க முயன்றதன் முயற்சியியை வெளிப்படுத்திடும் நிலையில், தான் நாடக நூலை உருவாக்க வேண்டியதன் நோக்கம் என்ன என்பதையும் வெகு வெள்ளந்தியாகப் பின்வருமாறு பிரஸ்தாபித்தும் இருக்கிறார்.

நான், “கவிதைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைத் தொகுப்பு நூல்கள் பலவற்றை உருவாக்கம் பெறச் செய்துள்ளேன். இயல், இசை என்கிற இருவகையானும் நூல்கள் பல படைத்தாகி விட்டன. ‘நாடகம்’ எனும் தமிழிலும் நூல்கள் வெளியீடு செய்துவிட்டால், ‘முத்தமிழ்ப் படைப்புகளிலும் கால் பதித்திருக்கும் ஓர் ஆத்ம திருப்தி எனக்கு ஏற்படும்… தமிழவேள் நாடக மன்றத்தின் வெளியீடுகளாக ‘கவிக்குலம் போற்றும் தமிழ்வேள்’ முதற்கொண்டு, ‘அமுதத்தமிழ்’ ஈறாக, இதுகாறும் பத்தொன்பது நூல்கள் வெளியீடு செய்துள்ளேன். அந்த வகையில் கவிதைத் தொகுப்புகள் எட்டு; சிறுகதைத் தொகுப்புகள் ஏழு; உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைத் தொகுப்புகள் மூன்று; ஆகக் கூடுதல் பதினெட்டு நூல்கள். பத்தொன்பதாவது நூல் ‘தாமரைப்பூ’ எனும் நாடகத் தொகுப்பு நூல். இந்த நூல் ‘தாழம்பூ’ என்பது. இது இருபதாவது (நாடகத் தொகுப்பு) நூலாகும். நூல் வெளியீட்டு முயற்சியில் என்னுடைய இலக்கு இருபது நூல்கள் என்பது”2. அதுவும் நிறைவேறிவிட்டது எனப் பலவாறு இவர் புளகாங்கிதப் பட்டும்; கொள்கிறார்.

‘தமிழ்வேள் நாடக மன்றம்’ என்கிற ஓர் அமைப்பை இவரே நிறுவி, ஏறக்குறைய ஓர் அரை நூற்றாண்டுகாலம் இவர் அதனைக்

கையகப்படுத்தி வைத்திருந்த நிலையில், அம்மன்றத்தினைத் தொடர்ந்து வழிநடத்து வதற்காகவும், தன்னிடம் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவுமே பல நாடகங்களை எழுதியதோடு இயக்கியும் நடித்தும் கூட வந்திருக்கிறார்.

இவற்றை, "சிங்கப்பூர் வானொலி மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் நடித்து வந்தவர். நாடகம், சிறுகதை, இலக்கியப் பேச்சு, கவியரங்கம் ஆகியவற்றுக்கு எழுதியும் பங்கேற்றும் வந்தவர். சிங்கப்பூர் கல்வி அமைச்சுப் பாடத்திட்ட, பாடநூலாக்கப் பகுதியில் உயர்நிலைப் பிரிவில், ஒன்று முதல் நான்கு வரையிலான மாணவர்களுக்குப் புத்தகங்கள் எழுதிப் புகழ்பெற்றவர் ... இலக்கியச் சந்தையில் கதை, கவிதை, கட்டுரை ஆகிய இவர்தம் படைப்புகளினூடே 'நாடக நூலும்' இடம் பெறுவதை அறிந்து மகிழ்கிறேன்"3 என, இவரின் தோழரொருவர், இவரைப் புகழ்ந்திருக்கும் கூற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றன.

மு.தங்கராசனின் மேற்கண்ட செயல் நிலைகளை முன்வைத்துப் பார்க்கும்போது, ஒரு பள்ளியாசிரியர் தன் புகலிடப் பணிச் சூழலில் தன்னைத் தக்கவைக்கவும், தன்னை வெளிக்காட்டி நிரூபிக்கவும் எனச் சில கலை-இலக்கியப் படைப்புசார் மெனக்கிடல்களைச் செய்திருக்கிறார் என்பதும், அம்மெனக்கிடல்களுள் பெரும்பான்மையன, தான் பொறுப்புவகித்த மன்றங்களையும், தம்மிடம் பயின்ற மாணவர்களையும் மையமிட்டே தொழிற் பட்டிருக்கின்றன என்பதும் புலப்பாடு பெறுகின்றது. இத்தகு முயற்சியாளரின் பன்முக நாடகப் பிரதிகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்து ஆய்வதன் மூலம், அவரின் நாடக ஆக்கத்திறன்களை மதிப்பீட்டறிய முடியும் என்கிற விதத்தில், இவ்வாய்வுத் தலைப்பு தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் நீட்சியாகவே, இவர் படைத்த 'அத்தை மகன்' எனும் நாடகப் பிரதி இவ்வாய்வுக்கான முதன்மையாகக் கொள்ளப் பெற்றிருக்கிறது.

ஏறக்குறைய ஈராயிரத்தைனூறு ஆண்டுகாலத் தமிழ்க்கலை இலக்கிய வழித்தடத்தில், நாடகக் கலைக்கெனக் கணிசமான இடமுண்டு. ஆதி மானுடம் தம் உள்ளக் கிடக்கைகளைப் பன்முக மெய்ப்பாடு களின்வழிப் புலப்படுத்த முயன்றமை தொட்டு, நடப்புநாளில் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் வாழ்நிலையே அதிநடிப்பாக ஆகிப்போயுள்ளமை வரை, தமிழ்ச் சூழலில் நடிப்பும் அதுசார் கலையுருவாக்கமும் காத்திரமான இடத்தைப் பெற்று வந்துள்ளன. பரதம், பஞ்ச பாரதீயம், பரத சேனாபதியம், சயந்தம், கூத்துநூல், மதிவாணன் நாடக நூல் என்கின்ற ஆதிகாலப் படைப்புப் பனுவல்கள் ஒரு புறம்; நாற்காலிக்காரர்கள் (ந.முத்துசாமி), நந்தன் கதை (இந்திரா பார்த்தசாரதி), வெறியாட்டம் (சே.இராமானுஜம்), ஆதியிலே மாம்சம் இருந்தது (பிரேதா: பிரேதன்), சரித்திரங்களின் அதீத மியூசியம் (ச.முருகபூபதி) என்கிற சமகாலப் பிரதிகள் மறுபக்கம். இவற்றனுள் மு.தங்கராசனின் நாடகப் பனுவலாக்க முயற்சியின் இடம் எத்தகையது என அனுமானிக்க முயலும் பட்சத்தில், தன் தலைமையாசிரியரின் தயைகூர் பார்வைக்காக எழுதப்பட்ட 'விதியை வெல்லலாம்' தொட்டு, வை.திருநாவுக்கரசு என்பாருக்குச் சமர்ப்பிப்பதற்காகத் தொகுக்கப்பட்ட 'எதிரொலி'யைத் தொடர்ந்து, சிங்கப்பூர்த் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையத்தார்கள் வைத்த போட்டியில், பங்கேற்பதையே முதன்மை நோக்கமாக மனதிற் கொண்டு வடிவமைக்கப்பட்ட 'நெருஞ்சி முள்' வரையிலான, பலவித நாடகப் பனுவலாக்கப் பிரயத்தனங்கள் என விரிந்து பரவி, நாடக சபாக்களை மையமிட்ட, மாணவப் பயிற்சியைக் கருத்திற்கொண்ட, வெகுஜன ஊடகங்களின் கவனத்தைப் பெற முயற்சித்த நாடக ஆக்கச் செய்கைகளாகவே கட்டமைந்து உருமாறி, நிலைகொள்கின்றன. இருப்பினும், 'ஒரு

புகலிடவாசியின் நாடக முயற்சிகளைக் கருத்திற்கொண்டு, அதுசார் பதிவுப் பிரதி, யாதேனும் தேருமா? என அவதானித்து அறிய முற்பட்ட வேளையில், 'அத்தை மகன்' எனும் பிரதி கவனத்தை ஈர்த்தது. அக்கவன ஈர்ப்பிற்கு, "தோட்டப்புறச் சூழல் வாழ்க்கையைப் பின்புலமாக வைத்து, ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கிளர்ந்து எழுந்ததே இந்நாடகம்"4 என்கிற விதத்தில், நாடக ஆசிரியர் தந்திருந்த ஒரு குறிப்பும், "இரண்டாவது உலகப் போர் முடிவடைந்து, அன்றைய மலாயாக் கூட்டரசு அமைதிபெற்றுக் கொண்டிருந்த நிலையில், பொதுமக்கள், அவரவர் வாழ்ந்த பகுதிகளுக்கே திரும்பிச் சென்று, தம் வாழ்க்கையைப் புனரமைப்புச் செய்து கொள்ள சிறு வழி ஏற்பட்டிருந்த சூழலில், ஜொகூர் மாநிலம் 'நியூஸ் கூடாய் தோட்டத் தமிழ்ப் பள்ளியில்', படிப்பைத் தொடங்கி, அங்கேயே தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய 'அல்லி அர்ச்சுனா' கூத்தில் பால அல்லியாக, வேசமேற்று நடித்திருந்த செய்தியும்"5 காரணங்களாக அமைந்தன. இவ்வித ஈர்ப்பினையே மூலாதாரமாகக் கொண்டு, 'அத்தை மகனை' அணுகியபோது, அது எதிர்பார்ப்பிற்கு எதிர்புறத்தில் இருந்தது.

தமிழ் நாடக வழித்தடத்தில் 'அத்தை மகனு'க்கான இடம் ....

பொதுவாக, தமிழ்நாடகச் சூழலில் ஒரு நாடகத்தின் அமைப்புமுறையானது குறிப்பிட்ட விதங்களில்தான் இருந்திட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக, "பொருத்தம் என்பது ஒற்றுமை உடைமை ஃ அஃது இடனும் காலமும் செயலும் என மூவிதப்படு மென்ப மேற்றிசை வாணர்"6 என்பவாக, இருக்க வேண்டும் என வேண்டற்பட்டது. இவ்வித அளவுகோள்களுடன் 'அத்தை மகனை' எதிர்கொண்டபோது, அதன் மையக்கரு 'அண்ணன் - தங்கை' யருக்கிடையிலான சுயகௌரவப் பிரச்சினையும் (நபழ) அது (பார்வையாளர்கள் எதிர்பார்ப் பதற்கிணங்க) இறுதியில் தீர்ந்து, சுமூகமாவதும் என்பதாக ஆகிவிட்டது.

சரி; கருதான் இவ்வாறு எனின், கதையாவது தோட்டப்புரப் புகலிட வாழ்க்கை நசிவை விவரணை செய்யுமா? எனின், அதுவும் அதனிலிருந்து விடுபட்டு, தன் பேச்சைக் கேட்காமல் திருமணம் செய்து கொண்ட பாவாயி எனும் தங்கைமீது, வையாபுரி எனும் அண்ணன் கொள்ளும் பரம பகையுணர்வின் விவரணையாகவே மாறி, தேங்கி விட்டிருக்கிறது. இந்தப் பகைமையுணர்வினை வெளிக்காட்டி வரைவதற்காக, 'பழனி கண்ணம்மா காதல்'; 'கண்ணன் மரியம் காதல்' என்கிற சம்பவங்கள் இணைத்துக் கொள்ளப் பெற்றிருக்கின்றன.

குறிப்பாக, தம் பெற்றோர்களைத் தனது பால்ய வயதிலேயே இழந்து வாடும் வையாபுரி, அடிமட்டத் தோட்டத் தொழிலாளியாகப் பணி செய்து, தன்னுடைய ஒரே தங்கையான பாவாயியைக் கண்ணுங் கருத்துமாகப் பாவித்து வளர்க்கிறார். பாவாயியோ, திருமண வயதை எட்டியதும், தனக்குப் பிடித்த ஒருவரை மணமுடிக்க விரும்பிடும் நிலையில், எவ்வித முகாந்திரமுமின்றி, வையாபுரி அதனை வன்மையாக எதிர்க்க, அதனை மீறி, பவளாயி திருமணம் முடித்துப் பழனி என்கிற ஒரு பையனுக்கும் தாயாகிறாள். இவ் இடைவெளியில் மணமுடித்து, கண்ணம்மா எனும் மகளைப் பெற்று, மனைவியை இழந்து வாடும் வையாபுரி, தன் தங்கையினுடைய கணவனின் இறப்பிற்குக்கூடப் போகாமல், வெகு வைராக்கியமாக, பவளாயி மீதான பகைமையுணர்வைப் புடம் போட்டு, அணையாமல் பாதுகாக்கிறார். இந்நிலையில்,

இரண்டாவது அத்தியாயமாக அத்தை மாமன் மக்களான பழனி-கண்ணம்மா காதலானது சினிமாப்படப் பாணியில் தொடங்கி நீள்;கிறது. இது தெரிந்து பெருவன்மங் கொள்ளும் வையாபுரி, தடாலடியாகத் தன் மகளுக்கு, கண்ணன் எனும் மாப்பிள்ளையைப் பேசி முடிக்க, அப் பையன் (நாடகத்துள் நாடகமாக), "பொண்ணு தாழ்ந்த குலமாக இருப்பதனால் அந்த ஒரு பாயிண்ட வச்சி, இந்தக் கல்யாணம் நடக்காதுங்க"7 என்று கூறி மறுக்க, உரிய நேரத்தில், தங்கை பாவாயி வந்து, அண்ணனின் மானத்தைக் காப்பாற்ற வெண்ணி, தனக்கு மருமகளாகக் கண்ணம்மாவை ஏற்றுக்கொள்ளவென இசைவு தெரிவிக்க, மோதலில் தொடங்கிய சகோதர சகோதரி உறவு, இறுதியில் பாசத்தில் பிணைந்து 'சுபமாக' முடிகிறது. இதுதான் இந்நாடகத்தின் கதை.

'இருபது' என்கிற எண்ணிக்கையில் அங்கங்கங்களாகப் பகுத்துக் கொண்டு, வெகு மெதுவாகப் பயணிக்கிற இந்நாடகம், ஏறக்குறைய இருபது இருபத்தைந்து ஆண்டுகாலக் கதை நிகழ்வுகளைத் தன்னுள் ஏந்தியிருக்கிறது. இவற்றோடு 'கதை நிகழும் களங்களானவை', மையமாந்தர்களான வையாபுரியின் வீடு பாவாயியின் வீடு, என்பவாகவும், ஒன்றிரண்டு இடத்தில் காதல் டூயட் பாடுவதற்கும், துயர மனத்தைப் பகிர்வதற்குமெனத் தோட்டப் புரமாகவும் மட்டுமே ஆகி, ஓர் அசலான தொலைக்காட்சி நாடகத்தன்மையைப் பெற்று, துலக்கங் கொள்கிறது.

நாடகத்திற்கான 'காட்சி மாற்றம்' என்கிற வகையில், திரையானது எந்திர கதியில், வெகு செயற்கையாக ஏற்றி, இறக்கப் படுவதாக மட்டுமே இருக்கிறது. ஓர் உரையாடலின் இடையிலேயே திரையைப் போட்டுவிட்டால், நிகழ்ந்துவந்த காட்சி நிறைவு பெற்றுவிடும் எனச் சிறார்போல, நாடகாசிரியர் செய்திருப்பது சற்று அயற்சியைத் தருகிறது.

ஒரு நாடகத்திற்கு உயிர்த் தன்மையைத் தருபவர்கள் பெரும்பாலும் கதாமாந்தர்களாகவே இருப்பர் என்பது வெளிப்படை. ஆனால் இப்பிரதியில் அப்பா வேடம் பூண்டு இடம்பெறுகிற மையமாந்தர் வையாபுரியும், எதிர்நிலை பாத்திர வேசமேற்றிருக்கும் இணைமாந்தர் ஜோசப்பும், அசலான சினிமா வில்லன்களைப் போன்று, தம் உடலசைவுகளாலும் மற்றும் உரையாடல்களாலும் கட்டமைக்கப் பட்டிருப்பதென்பது, தரக்குறைவுற்ற தமிழ்த் திரைப்படங்களை நினைவுபடுத்துகிறது. இத்துடன் இந்நாடகத்தில், 'கோமாளி' என்கிற ஒருவர் வந்தே தீரவேண்டும் என்று ஆதங்கப்பட்டிருக்கும் படைப்பாளி, 'முனியாண்டி' எனும் பாத்திரத்தைக் குறைப்பிரசவமாக ஈன்றிருப்பது வேதனைக் குரியதாகப் படுகிறது. இவ்வரிசையில் கௌரவக் கதைமாந்தர் வேசத்தைத் தாங்கிவரும் கங்காணி மண்டூருவையும் பொறுத்தமற்று இணைத்திருப்பதில் தான் வெகு துயரமானது மிகுகிறது.

ஒரு நாடகம் எனின், ஆடல், பாடல், உரையாடல் என்பனவெல்லாம் அவசியம் தேவை என்கிற மரபுவழி மனோபாவமும் வெளிப்பாடும் இந்நாடகத்தைப் பொறுத்தவரை, படைப்பாளியால் ஏகோபித்த அளவில் செய்யப்பட்டிருக்கின்றன. சான்றாக, இந்நாடகம் தொடங்கும்போது அமைக்கப்பட்டுள்ள காட்சியமைப்பை நோக்கின், முற்சொன்மையின் அர்த்தம் விளங்கும்.

"இடம்: வேலைக்காடு. இருப்போர்: பழனி, கண்ணம்மா, மண்டூர். காட்சி: காதல் களிப்பு உரையாடல். (காதல் சிட்டுகள் இன்பகீதம் பாடி, ஆடி மகிழ்ந்திருக்கின்றனர். ஆடலும் பாடலும் முடிந்தபின்னர் இமையாமல் பார்த்தல்). பழனி: கண்ணம்மா ... என்ன இன்னிக்கு ஒரே சந்தோஷமா ஆடிப்

பாடிக்கிட்டிருந்தே... ? ம். சொல்லு. கண்ணம்மா: ம்க்கும் ... நீங்க வரும்போது ஆடாம, பாடம நான் இருந்தாத்தான் உங்களுக்குக் கோபம் மூக்குக்கு மேல வந்துடுதே... பழனி: (சிரித்து) ஓஹோ ... அதனாலதான? கண்ணம்மா: ஆமா நாந்தான் பாடிக்கிட்டிருந்தேன். ஏன் நீங்களும் பாடுனீங்க,"8 என்றும், "அரங்கம் பத்து. இடம் : அவரவர் வீடு. காட்சி: காதல் பிரிவு. சோகப் பாடல் ஒன்றிற்கு அபிநயத்தல்;. இருவரும் பாடலுக்கு நடித்தல்"9 என்கிற விதத்தில், அமைக்கப்பட்டிருக்கின்ற உரையாடல் தன்மையை நோக்கின், நிஜநாடக இயக்க மு.ராமசுவாமி மற்றும் மணல் மகுடி இயக்க முருகபூபதி முதலான, தமிழ்நாடகப் படைப்பாளியரிடமிருந்து மு.தங்கராசன் வெகு தொலைவில் இருக்கிறார் என்பது தெரிகிறது. இதற்கு இவர் புலம் பெயர்ந்து மலேயாவில் இருந்திருப்பதும்கூட ஒரு காரணமாக இருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிறது.

மேற்கண்ட செய்கைகளோடு, நடப்புக் காலத்தில் நாடகத்திற்குப் பொருந்தாதன எனப் புறந்தள்ளப்பட்டிருக்கிற பலதரப்பட்ட சம்பவங்களும் கூட, இந்நாடகத்தில் குறைவற இடம்பெறச் செய்யப்பட்டிருப்பதும் நகைப்பிற்குரியதாக இருக்கிறது. குறிப்பாக, காதலில் தோல்வி பெற்றிடும் இரண்டாம் ஜோடியைச் சேர்ந்த கண்ணன், அதுவரை அதியோக்கியனாக இருந்து, பிரிவுசார் பிரச்சினை எழுந்தவுடனேயே, "குடித்துவிட்டு, சிகரட் மேல் சிகரெட் எனப் புகைத்துக் கொண்டே, கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்"10 என்ற சினிமாப் பாடலுக்கு அபிநயித்து நடிப்பதும், மரியம் கடைநிலை ஊழியனான கண்ணனிடம் கொண்ட காதலைத் தந்தை ஜோசப் மறுக்குமிடத்து, "அப்பா, காதல் என்பது இருப்பவர் - இல்லாதவர் பார்த்து ஏற்படுவது இல்லை. கண்ணோடு கண் நோக்கொக்கின் என்றார் வள்ளுவர்"11 என, வள்ளுவரின் குரலை மேற்கோள் காட்டி ஒலிப்பதும், எதார்த்த சூழல்களுக்குப் பொறுந்த வண்ணம் இருக்கின்றன. இத்துடன், நாடகப் படைப்பாளி, ஓர் ஆசிரியராக அதுவும் பூவீகத் தமிழகத்திலிருந்து புறப்பட்டு வந்து தமிழ்ப் படித்து, பள்ளியில் பணிசெய்யும் தமிழாசிரியராக இருப்பதால், ஆங்காங்கே, பாரதிதாசன் முதல் கலைஞர் கருணாநிதி வரையிலான நபர்களைத் தமது வசனங்களினூடே துணைக்கழைத்துக் கொண்டு, உரையாடல்களை நகர்த்திச் செல்வதும் நாடகவோட்டத்துடன் துளியும் பொறுத்தாது துருத்திக் கொண்டு நிற்கின்றன.

ஒரு 'சமூக நாடகம்' எனின் ஏதேனும் ஒரு கருத்து, ஒரு 'தனித்துவ வசனம்' வேண்டுமல்லவா? அவற்றையும் இப்பிரதியில் படைப்பாளி இட்டு நிரப்பி இருக்கிறார். சான்றாக, காதலில் பிரிவுநேரப் போகும் வேளையில், காதலன் கண்ணன், தனக்கென "இந்த உலகில் யாருமே இல்லை. நான் ஓர் அனாதை"12 என்கிறான். அதற்குக் காதலி மரியம், பின்வருமாறு நீள் உரையாற்றத் தொடங்குகிறாள்: "உலகில் பிறந்த ஒவ்வொருவருமே அனாதை இல்லை. எல்லாம் மனித குலம். நாம் எல்லோரும் மனிதர் குலம். மனிதர்கள்தான் உறவு, நட்பு, பாசம், அன்பு என்றெல்லாம் நினைக்கிறார்கள். மற்ற உயிரினங்கள், தங்கள் இனத்தின்மீது நம்பிக்கையும் பற்றும் கொள்கின்றன. பகுத்தறிவுபெற்ற நாம் ஏன் அந்தப் பரந்த மனப்பாங்கினை ஏற்றுக் கொள்ளக்கூடாது. பிளவு – பூசல் -ஏற்றத்தாழ்வு இவற்றைப் பிற உயிரினங்கள் கருதுவதில்லையே ... நாம் மட்டும் ஏன் அதை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்"13 என்பதாய், அத் தத்துவ உரை அமைகிறது. இதனைப் பார்க்கும்போது, மலேசியா – சிங்கப்பூரில் ஏற்படும் காதல் பிரிவின்போது, இவ்வாறுதான் தத்துவார்த்தமாக

உரையாற்றுவார்களோ என நினைக்கவும் தோன்றுகிறது.

தொகுப்புரை

ஆக மொத்தத்தில், இந்நாடகப் பிரதியை ஆய்ந்து அவதானித்தறிய முற்பட்ட நிலையில், இந்நாடகமானது கரு, கதை, நிகழிடம், கால அளவு, கதாமாந்தர் படைப்பு முறை, மொழியாளுகை, உரையாடற் பாங்கு, காட்சியமைப்புமுறை, உணர்த்தவரும் செய்தி என்கிற அனைத்துவித அகக் கட்டமைப்பிலும் சரி; தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்கிற புறக்கட்டமைப்பிலும், பலவிதச் சினிமாத் தனங்களை ஒருங்கே உள்வாங்கி, கருப்பு – வெள்ளைக்காலத் தொலைக்காட்சி நாடகத்துக்கான தன்மைகளையே வெகுவாகக் கொண்டிருப்பமையானது அப்பட்டமாகப் புலப்பாடு பெறுகிறது. இந்நாடகம் மட்டுமின்றி, இவரின் ஏனைய படைப்புப் பிரதிகள் பலவும் இதே தன்மைகளையே பெரிதும் உள்வாங்கி இருப்பமை என்பதும் கண்கூடாகிறது.

நிறைவாக ...

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில், புகலிடந்தேடி ஒருங்கிணைந்த மலேயாவுக்குப் பெயர்ந்து, தொடர்ந்த தன் உழைப்பால் சிங்கப்பூர் சென்று, வாழ்வுப் பந்தயத்தில் வெற்றி பெற்ற ஒரு நபர், பன்முகத் தமிழ்சார் கலை - இலக்கிய முயற்சியிலும்கூடத் தன்னை வெகுவாக இயைத்துக் கொண்டுள்ள விதத்தில்தான் மு.தங்கராசன் என்பார், கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவராகிறார். எங்கோ ஓரிடத்தில் பிறந்த மானுடம், தம் வாழ்வியல் நிலைமை கருதி, பிற புலத்தை நாடும்போது, புகலிடந்தேடுதல், உயிரைத் தக்கவைத்தல், உடமைகளைப் பெற முயற்சித்தல் என்பவாகவே அவர்தம் வாழ்நிலை பெரிதும் அமையும். அவ்வாறு, வெகுவாக முயன்று, தம்மைத் தக்கவைத்தபின், உடமைகளைப் பெறும் அந்நபர்கள், முதலில் கைக்கொள்வது தமது ஆதி உறவுகளை வேரறுப்பதேயாம். இதிலிருந்து சற்று வேறுபட்டு, இலக்கியம் வழித் தனது வேர்களைத் தாய் நிலத்தில் பாய்ச்ச எண்ணிய இப்படைப்பாளியின் நன்முயற்சி சற்று வியப்புக்குரியதாகவேப் படுகிறது.

“மண்ணு வளமிருக்க / மகத்தான நாடிருக்க – நாங்கள் / நாடுவிட்டு நாடு வந்து – மறு / நாட்டான் சீமையிலே / மரம் வெட்டிப் பால் சுமந்து / மலைவெட்டி மண் சுமந்து / காடுவெட்டிக் கல்லுடைத்து கையேந்திக் கூலி வாங்கி / பாடுபட்ட கதைகளையும் / பட்ட துன்பம் அத்தனையும் / பாட்டிலே சொல்லப் போனால் / பல காலம் ஆகுமென்று / எண்ணாது எண்ணி எண்ணி / ஏட்டிலே நான் எழுதி வைத்தேன்”14 என, ஒரு தமிழ்ப் பெண் மலேசியாவிலிருந்து, தமது இனத்தின் உண்மை சார்ந்த ஒருவிதக் குரலை வெகு உண்மையாக எழுப்பியுள்ள நிலையில்,

“உங்கள் செல்வச் சுமையுடன் எங்கள் நாட்டிற்கு வாருங்கள் / நீங்கள் வசதியாகத் தங்க இடமளிக்கிறோம் நாங்கள்! / எங்களுக்கு ஆசை காட்டிக் கவர்ந்திழுக்கவும் / எங்கள் அழகிய, மணமாகாத பெண்களை வசப்படுத்தவும் / உங்களை நாங்கள் அனுமதிக்கிறோம். ஏனென்றால், நாங்கள் தொடர்ந்து உயிர்வாழ / உங்கள் பணம் எங்களுக்குத் தேவை. உங்கள் நாடு திரும்பியதும், நீங்கள் / தூய்மையும் திறமையுமுள்ள எங்கள் நகரைச் / சொல்லோவியமாகத் தீட்டுகிறீர்கள்; ஆனால் வெறுக்கிறீர்கள் / எங்கள் அரசியலை, எங்கள் வாழ்க்கை நெறிமுறையை / அடக்குமுறையும் கொடுமையும் உள்ளதெனச் சொல்லுகிறீர்கள் / எனினும் எங்கள் வாழ்க்கைத் தேவை உங்கள் நலன்களைச் / செழிக்கச் செய்தலின், மீண்டும் மீண்டும் திரும்பி வருகிறீர்கள்! / விட்டுக் கொடுக்கும் இவ்வியத்தகு உடன்பாட்டால் / உங்களுக்கென்ன நலம் கிடைக்கிறது? / நானிதை

நினைந்து அடிக்கடி வியப்படைகிறேன்!"15 என்று 'கிர்பால் சிங்' என்னும் கவிஞர் சிங்கப்பூரிலிருந்து, அதன் உண்மை முகத்தைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

மேற்கண்ட கருத்தாம்சங்களின் அடிப்படையில் நோக்கும்போது, ஒருங்கிணைந்த மலயா, நவீனகாலச் சிங்கப்பூர் என இரு தேசங்களிலும் புகலிடந்தேடிச் சென்று, "வந்த நாட்டைச் சொந்த நாடாகக் கொண்டு குடியுரிமை பெற்று",16 ஆசிரியப் பணியில் அதுவும் அரசுப் பணியில் அமர்ந்து, மாணவர்களின் உயர்விலும், மொழி - இனத் தழைப்பிற்கான முயற்சியிலும் ஆட்பட்டு, தமிழ்ச் சமுதாய அங்கீகாரத்திற்காக வேண்டி, கலை இலக்கியப் பணிகளிலும் தம்மை இயைத்துக் கொண்டிருந்த மு.தங்கராசனின் செயல்கள் ஒருவிதத்தில் உவப்பிற்குரியனவேயாம். ஆனாலும், அங்கு அவர் வாழ்ந்த புகலிடப் பிரதேசம் பற்றிய மிக நுட்பமான அவதானிப்புகளை; உடனிருந்த தோட்டத் தொழிலாளர்களின் பன்முகப்பட்ட வாழ்வியலில் நசிவுகளை, எதிர்கால கட்டத்தில் புகழிடத் தமிழர்கள் எதிர்கொள்ளவிருக்கும் இன்னல்சார் நெருக்கடிகளை மிகத் துல்லியமான விவரணைகளோடு, நாடகச்சுவை நனிசொட்டச் சொட்ட, தேர்ந்த மொழியாளுகையோடு இவர் படைத்திருந்தாரேயானால் உவப்பா யிருந்திருக்கும். ஆனால் இவற்றிலிருந்து இவர் விடுபட்டிருக்கிறார். இது போன்றே, எங்கிருந்தோ தூரதேசத்திலிருந்து வந்தமர்ந்து, அங்கிருந்தவர்களோடு வெட்டியும் ஒட்டியும் உறவு கொண்டாடி நைந்தும் வாழுகிற தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய ஓர் ஆவணமாகவே இந்நாடகம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்ல விருப்பம்தான்; ஆனால் இவற்றிலிருந்து இப் பிரதியும் விடுபட்டுள்ளது என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

இருந்தாலும் ஒரு புகலிட தேசத்தில், பன்முக நெருக்கடிசார் வாழ்நிலையில் மு.தங்கராசன் கலை-இலக்கியத்தோடு தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்தார் என்பதே வரவேற்கக்கூடிய அம்சம்தான். இருந்தாலும், கலை-இலக்கியம் படைப்பதையே தம் வாழ்நிலையாகக் கொண்டு, இறுதிவரை தங்களின் வாழ்க்கையையே அவற்றுக்காக ஒப்புவித்து மறைந்த, பாட்டுக்கோர் புலவன் பாரதி, தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் புதுமைப்பித்தன், நவயுகக் கட்டுரையாளர் நகுலன், நவீன நாடக கர்த்தா பிரமிள் என்கிற தமிழிலக்கியச் சிற்பிகளின் படைப்புசார் இடங்களைச் சிங்கப்பூர் தங்கராசனார் எட்டிட, இன்னும் வெகுதூரம் பிரயாணப்பட்டிருக்க வேண்டுமோ என இவ்விடத்து சொல்லத் தோன்றுகிறது.

சான்றெண் விளக்கக் குறிப்புகள்

மு.தங்கராசன், தாழம்பூ, பக்.10-11.

மேலது., பக்.16-17.

மு.தங்கராசன் (நூ.ஆ.), வீ.சதானந்தன் (வா.உ.), தாழம்பூ, "எனக்குத் தெரிந்த மட்டில்...!', பக்.8-9.

மேலது., ப.240.

மேலது., பின்னட்டைப் பகுதி.

பிரிரிமாற்கலைஞர், நாடகவியல், ப.61.

மு.தங்கராசன், முந்நூல், ப.224.

மேலது., பக்.139-140.

மேலது., ப.194.

மேலது., ப.200.

மேலது., ப.182.

மேலது., ப.178.

மேலது., ப.178.

முத்தம்மாள் பழனிசாமி, நாடு விட்டு நாடு, ப.14.

கிர்பால் சிங் (கவி.ஆ.), 'சிங்கப்பூர் வருபவர்க்கு', பக்.101-102.

மு.தங்கராசன், முந்நூல், ப.7.

மலர்க்கொத்து சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் இல. பூர்ணிமா ஜோதி
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

சமுதாய மாறுதலுக்கேற்ப பல்வேறு இலக்கிய வளங்களைப் பெருக்கிக் கொண்டு சிறப்புடன் விளங்கும் மொழி தமிழ்மொழி யாகும். தமிழ்மொழியில் எழுத்தார்வம் மிக்க படைப்பாளர்கள் சிறுகதையை எழுதி வெளியிட்டு வருகின்றனர். சிறுகதை இலக்கியங்கள் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் காட்டும் கண்ணாடியாக மட்டுமன்றி எதிர்கால சமுதாயத்திற்கும் விழிப்புணர்வு காட்டுபவையாக அமைகின்றன. நடப்பியல் உண்மைகளில் சிறிது கற்பனையைக் கலந்து சிறுகதை ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். அவ்வகையில் எழுதப்பட்ட சிறுகதை தான் 'மலர்க்கொத்து' என்னும் சிறுகதைத் தொகுப்பாகும்.

மு.தங்கராசன் நூலாசிரியர் அறிமுகம்

'மலர்க்கொத்து' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் மு. தங்கராசன். பொன்னரசு, பொன்னி, செல்வமணாளன் சிற்பிதாசன், தராசு ஆகிய புனை பெயர்களிலும் படைப்பிலக்கியங்களை எழுதி வந்துள்ளார். சிங்கை மலேசிய நாளிதழ்கள், வார மாத இதழ்கள் ஆகியவற்றுக்கும் வானொலி நிலையங்களுக்கும் இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் எழுதியுள்ளார்.

இவரது வாழ்க்கைத் தொழில் தமிழாசிரியர் பணியாகும். சிங்கையில் நேவல்பேஸ் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந்து வந்தவர். எழுத்துத்துறை மற்றும் கலைத்துறை ஆகிய இரண்டிலும் சேவை செய்தவர். பல்வேறு அமைப்புகளில் தலைமை வகித்தவர்.சிங்கப்பூர் முப்பதின்மரின் கவிதைகளைத் தொகுத்து "கவிக்குலம் போற்றும் தமிழவேள்" என்னும் அரிய நூலை வெளியிட்டுள்ளவர். பூச்செண்டு, மலர்க் கொத்து, சிந்தனைப்பூக்கள், மணக்கும் மல்லிகை ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும், அணிகலன், மகரந்தம், உதயம் ஆகிய கவிதைத் தொகுப்புகளும் வெளியிட்ட பெருமைக்குரியவர்.

மலர்க்கொத்து நூல் அறிமுகம்

உயிர் நண்பன், அன்னையின் குமுறல், மலடி, சிரித்தவள், தனிமரம் குப்பையிலே குன்றுமணி, முறிந்த பால், மாறாத வடு, வஞ்சகிதானா, இறைவன் தான் சாட்சி எனும் பத்துச் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பாகும்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பில் குடும்பம், காதல், பெண்களின் நிலை என்ற மூன்றினையும் விளக்குவதே ஆய்வுக் கட்டுரையின் சாராம்சமாகும்.

குடும்பம்

மனித சமுதாயத்தின் மிகப் பழமையான நிறுவனமாகக் குடும்பம் திகழ்கின்றது. குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும்

இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்பட்டு வருகின்றது. “சங்க காலத்தில்’குடி’ என்ற சொல்லே குடும்பம் என்ற பொருளில் கையாளப்படுகிறது” (புறநானூறு, ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும், பா.எண்.183).

“குழு என்ற சொல்லில் இருந்து குடும்பம் உருவாகியிருக்க வேண்டும்” என்கிறார். (ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.56).

‘உயிர் நண்பன்’என்ற முதல் சிறுகதையில் குடும்பம் என்ற அமைப்பு சுட்டப்பட்டுள்ளது.

தங்கம்மாளின் மகன் தயாநிதி. தயாநிதியின் தந்தை செம்பவாங் கப்பற்பட்டறைத் தொழில் துறையில் வேலை பார்த்தவர்.தயாநிதி உயர்நிலை இரண்டாம் படிவத்தில் படித்துக் கொண்டு இருப்பவர்.

“செம்பவாங் ஷிப்யார்ட் என்னும் கப்பற் பட்டறை. அந்தக் காலக் கட்டத்தில் அசிஸ்டெண்ட் டிபார்ட்மெண்ட் மேனேஜர் என்னும் அந்தஸ்து பெற்றார் என் தந்தை. அப்போது கிடைக்கப் பெற்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு எனது தந்தையார் துணிந்து கடன்பட்டு இப்போது நாங்கள் வசித்து வரும் இந்த ஆனந்த இல்லத்தை எழிலார்ந்த அமைப்பில் கட்டி முடித்தார்” என்று கூறுவதிலிருந்து தயாநிதியின் தந்தையார் மேனேஜர் பதவியில் இருப்பதாகவும், அதில் வந்த வருமானத்தைக் கொண்டு புதிதாக இல்லம் ஒன்று கட்டி முடித்ததாகவும் காண முடிகின்றது. (மு.தங்கராசன், உயிர் நண்பன்,ப.9.).

“இந்த துரித வேக முன்னேற்றம் இறைவனுக்குப் பொறுக்கவில்லலயோ என்னவோ என் தந்தை அகால மரணமுற்றார்.அன்று வரை வேலைக்குப் போயறியாத ஆஸ்த்துமா நோயாளியான என்னுடைய தாயார் நிறைவான வீட்டையும் நிறைந்த கடனையும் விட்டுச் சென்று விட்டார் என்று அல்லும் பகலும் அலைமோதிக் கொண்டு இருந்தார்கள்” என்று கூறியுள்ளார்.இதன் மூலம் தயாநிதியின் தந்தை இறந்து விடுவதாகவும் தாயார் ஆஸ்த்துமா நோயாளியாகவும் திகழ்கின்றார் என்பதனை அறிய முடிகின்றது. (மேலது,ப.9).

“ராஜன் உலகில் ஊர் பேர் தெரியாத உற்றார் பெற்றோர் இல்லாத ஒண்டிக்கட்டையல்ல. பத்து மாதம் சுமந்து பெற்ற பாசத்துடன் அமுதூட்டி வளர்த்த அன்னையும், அண்ணா! அண்ணா என்று ஆசைத் ததும்ப அழைக்கும் அன்புத் தங்கையும், ஆசைத் தம்பியும் அவனுக்கு இருந்தனர்.அதுமட்டுமல்ல நீண்ட பல கிளைகளுடைய நெடுமரம் போல் கிளைஞரும் கேண்மையரும் வாய்க்கப் பெற்றவன். ஆதலால் தந்தையை மட்டும் இழந்து விட்டான்.பால்ய வயதிலே அல்ல,! பருவம் வந்த பின்னர் தான் தந்தை இறந்தார்” என்று ‘அன்னையின் குமுறல்’என்ற சிறுகதையில் ராஜனுடைய அன்னையும், உடன்பிறந்தவர்கள், சுற்றத்தார் ஆகியோரும் இருக்கின்றனர் என்பதனைக் காண முடிகின்றது. (மு.தங்கராசன், அன்னையின் குமுறல், ப.20).

ராஜனுக்கும், தங்கத்திற்கும் திருமணம் இனிதே நடைபெற்றது. தங்கத்திற்கும், ராஜத்தின் தாயாருக்கும் சமாதானம் இல்லாத காரணத்தினால் தனிக்குடித்தனம் சென்று விடுகின்றனர். இதனை ”ராஜனும் தங்கமும் தனி வீடு புகுந்து தனி வாழ்க்கை நடத்தினர்” என்று ஆசிரியர் கூறியுள்ளார். (மேலது,ப.23).

"சிந்தாமணியும் காத்தப்பனும் கல்யாணம் பண்ணிக் கொண்டு கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இல்லறம் நல்லறமாக இருந்தது" என்று கூறுவதிலிருந்து சிந்தாமணியும் காத்தப்பனும் இனிமையான இல்லறம் நடத்தி வருகின்றனர் என்பதை உணர முடிகின்றது. (மு.தங்கராசன், தனிமரம், ப.37).

"கணவன் மனைவி என்ற பந்தத்தால் பிணைப்புண்ட நாங்கள் இல்லற வாழ்க்கையை நல்லறமாகக் கொண்டு வாழ்க்கை எனும் படகை உலகம் எனும் பெருங்கடலிலே காலம் எனும் துடுப்பு கொண்டு எங்களின் அன்பு எனும் கூரிய வாளால் பொறாமை எனும் வாய் பிளந்து வந்த திமிலங்களை வெட்டி வீழ்த்தி விட்டுக் காதல் ஜோடிகளாக இன்பவானில் பறந்து கொண்டிருந்தோம்." என்று கூறுவதிலிருந்து வேலனும் பத்மினியும் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. (மு.தங்கராசன், குப்பையிலே குன்றுமணி,ப. 49).

குடும்பம் என்ற அமைப்பில் அமைந்துள்ள சிறுகதைகள் சிறப்பிற்குரியதாகும்

காதல்

காதல் ஓர் உன்னத உணர்வு. உயிரினம் அனைத்திற்கும் பொதுவானது. எனவே தான் மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து இன்று வரை மனித குலத்தால் போற்றப்படும் ஒன்றாகும்.

"காதல் என்பவற்றிற்கு அன்பு, அவா, ஆந்தை, பல்லி முதலியவற்றின் ஒலி, ஆவல், ஒரு பாடல், கொலை, காம நோக்கம் என்று தமிழ் அகராதி விளக்குகின்றது. (எஸ்.கௌமாரீஸ்வரி, கௌரா தமிழ் அகராதி, ப.251).

"அன்பின் கூறுகளில் காதல் தனித்துவமானது அன்புக் கூறுகள் பலவாம்.அதில் விழுமியது காதல்", என்று கூறியுள்ளார். (திரு.வி.க, சன்மார்க்க போதமும் துறவும்,ப.138).

செல்லப்பனும், வள்ளியம்மாளும் காதல் திருமணம் செய்து கொண்டனர் என்பதனை," வள்ளியும் செல்லப்பனும் வயலோரம் சந்தித்து, வற்றாத பாசம் வளர்த்து, மற்றவர்கள் போற்ற,உற்றவர் உளமகிழ, பெற்றவரின் சம்மதம் பெற்றுக் காதலில் வெற்றி பெற்ற நற்றமிழ் மணமக்கள்" கூறியுள்ளார். (மு.தங்கராசன், மலடி,ப. 26).

குணசீலனும், செல்வமதியும் காதலர்களாகத் திகழ்ந்தனர். ஆனால் இருவரின் காதல் நிறைவேறாத காதலாக 'சிரித்தவள்'எனும் சிறுகதையில் ஆசிரியர் கூறியுள்ளார். இவர்களைப் பற்றிக் கூறும் போது,நாங்கள் காதலர்களானோம். புதுப்பொம்மை ஒன்றை ஒரு குழந்தைக்கு வாங்கிக் இன் கொடுத்தால் அந்தப் பொம்மை என்ன பாடுபடுமோ அந்த நிலைக்காளானாள் அவள்.எனக்குக் காதல் பரிசாக அவள் பெயர் பதித்த மோதிரம் ஒன்று, தங்கச் சங்கிலி ஒன்று,சீமா கைக் கடிகாரம் ஒன்று வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தாள்" என்று குறிப்பிட்டுள்ளார். (மு.தங்கராசன், சிரித்தவள்,ப. 32)

மோகனாவும், திருத்தவதாசனும் மூன்றாண்டுகளாகக் காதலித்து வருகின்றனர். "காதல் செய்தி தான் காட்டுத்தீ போல் பரவுமே"என்று ஆசிரியர் கூறியுள்ளார். இருவரது காதலும் நிறைவேறாத

காதலாகச் சிறுகதையில் இடம்பெற்றுள்ளது. (மு.தங்கராசன், முறிந்த பால்,ப.59).

முருகனும் முத்தம்மாளும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். இவர்களின் காதலைப் பற்றிக் கூறும் போது,"விழி மூலம் அன்றாடம் மொழி பேசி நெஞ்சமொன்றி அழியாதக் காதல் வளர்த்தனர்" என்று மாறாத வடு சிறுகதையின் மூலம் அறியமுடிகின்றது. (மு.தங்கராசன், மாறாத வடு,ப. 66).

வஞ்சகி தானா என்ற சிறுகதையில் கதாபாத்திரங்களின் பெயர்களைக் கூறாமல், இரு வேறு சந்தர்ப்பங்களில் காதல்கள் பேசப்படுகின்றது." அந்த மாஜிக் காதலர் வந்தார். மன்னித்து விடு என்னை, உன்னை என்னால் மறக்க முடியவில்லை.நாமிருவரும் காதலர்களாகவே இருப்போம் என்று கூறினார்.நானும் அவரை நம்பி என்னையும் இழந்தேன். ஒரு குழந்தைக்குத் தாயாகியும் விட்டேன். அப்பொழுது என்னைக் கைவிட்டு விட்டு சென்று விட்டார்"என்று ஆசிரியர் கூறியுள்ளார். இந்த காதல் மாறுபட்ட காதலாகத் திகழ்கின்றது. (மு.தங்கராசன், வஞ்சகி தானா, ப. 73)

விதவைப் பெண்களின் நிலை

இறைவன் தான் சாட்சி எனும் சிறுகதையில் விதவைக் கோலம் பூண்ட பெண்களைச் சித்தரித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

"அதோ அந்த பெஞ்சில் அமர்ந்திருக்கின்றாள் ஒரு பெண். வெள்ளுடை தரித்து விதவைக்கோலம் பூண்டு விதிர்ந்து போய், கண்ணீரும் கம்பலையுமாய், கண்மூடித் தவக்கோலம் பூண்டிருப்பவளைப் போல அமைதியே உருவாக அமர்ந்திருக்கிறாள் "என்று கூறியுள்ளார். கணவனை இழந்த பெண்கள் வெள்ளுடை அணிய வேண்டும் என்பது தெளிவாகிறது. (மு.தங்கராசன், இறைவன் தான் சாட்சி,ப.79).

ஆதவனும் கற்பகமும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள். ஆதவன் இறந்த பிறகு, கற்பகத்தின் நிலையினை எடுத்துரைக்கும் போது, "ஆதவனுக்குப் பிரியா விடை ஆகமங்கள் கற்பகத்தை மணக்கோலம் பூணச் செய்து,பிணக்காடியை வலம் வரச் செய்து, சூட்டப்பட்டிருந்த பூக்களைப் பிய்த்து எறிந்து விட்டு,நெற்றிக் குங்குமத்தை அழித்து, வெள்ளைச் சேலையைப் போர்த்தி, வண்ணப் புடவையைக் கலைந்து கொண்டிருந்த அவலக் காட்சி, கற்பகம் அடிக்கொரு தடவை சொல்லிச் சொல்லி அழுதாள்" என்று விதவைப் பெண்ணின் நிலையினைச் சித்தரித்துக் காட்டுகின்றது. (மேலது, ப.100)

சீர்திருத்தத் திருமணம்

வேலனும் பத்மினியும் திருமணம் செய்து கொண்டவர்கள். ஆனால் வேலனின் நண்பனாகத் திகழுகின்றவனிடம் பத்மினி தன்னையே இழந்து விடுகின்றாள். அதனை வேலன் பார்த்து விடுகின்றான். அப்போது இருவரின் நிலை குற்றவாளிகள் போல் இருந்தனர். வேலன் இருவரையும் சேர்ந்து வாழ வைக்கின்றான்." உங்களின் காதல் பாதையிலே கள்ளிக்காடாக அமையவில்லை. நீங்கள் இருவரும் இனி கள்ளக் காதலர்களாக இருக்க வேண்டாம். கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்துங்கள் என்று அவர்களின் கையைப் பிணைத்து வைத்தேன் சீர்திருத்தத் திருமணம் ஒன்று

நடப்பதே போன்று" என்று வேலன் மூலமாகத் தனது கருத்தினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். (மு. தங்கராசன், குப்பையிலே குன்றுமணி, பக்.51-52).

தொகுப்புரை

மலர்க்கொத்து எனும் சிறுகதைத் தொகுப்பில் பத்துச் சிறுகதைகள் அடங்கியுள்ள அற்புதமான தொகுப்பாகும். குடும்பம் என்ற அமைப்பு குறித்து உயிர் நண்பன் சிறுகதையில் எடுத்தியம்பப்பட்டுள்ளது. அன்னையின் குமுறல் என்ற சிறுகதையில் குடும்ப அமைப்பின் முறைகள் பற்றியும் தனிக்குடித்தனம் வாழும் முறையினையும் கூறப்பட்டுள்ளது. தனிமரம் என்ற சிறுகதையில் கணவன் மனைவி வாழும் இல்லற வாழ்க்கை நல்லறமாகத் திகழ்கின்றது. வஞ்சகி தானா என்ற சிறுகதையில் இடம்பெற்றுள்ள பெண் கதாபாத்திரம் பெரிய குடும்பத்தில் பிறந்தவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். விதவைப் பெண்களின் நிலை குறித்து இறைவன் தான் சாட்சி எனும் சிறுகதையில் கற்பகம் என்ற பெண் மூலம் ஆசிரியர் கூறியுள்ளார்

கவிஞர் மு. தங்கராசனின் பன்னூல் புலமைத்திறன்

முனைவர் மா. பெரியசாமி
தமிழ்த்துறைத் தலைவர், நா.ம.ச.ச
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை

முன்னுரை

சிங்கைத் திருநாட்டிற்கு 1959 ஆம் ஆண்டு வந்து தமிழ்ப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய கவிஞர் மு. தங்கராசன் அவர்கள், பல்வேறு பனுவல்களைத் தமிழ்மொழிக்கும், தமிழ் உலகிற்கும் ஆக்கியளித்துள்ளார். மொழியாசிரியர் என்ற போதும் எழுத்தாளராகச் சிறந்துள்ளார். பள்ளி மாணவர்களுக்குரிய ஆற்றலையும் அறிவுத்திறனையும் வளர்க்கும் நோக்கில், தன் சிந்தையில் உதித்த கருத்துக்களை எடுத்துரைக்கும்போது பன்னூல் புலமையினைப் பயன்படுத்துகிறார். இத்தகு சிறப்பினை 'அமுதத்தமிழ்' என்னும் நூலில் சான்றுகளாகக் கொண்டு இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

உலகப் பொதுமறை

"வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு".

என்றுரைப்பார் பாரதியார்.

உலகத்து மக்களுக்கும், உலகத்து இறையாண்மைக்கும் துலாக்கோல் போல் நேர்பட நிற்பது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். பல்வேறு அறிஞர்கள், திறம்படத் தம்முடைய கருத்துக்களை நுட்பமாக எடுத்துரைக்கும் போது வள்ளுவனின் குறளடிகளைக் கையாளுவதுண்டு. அதுபோல் கவிஞர் தங்கராசனும், ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறுகின்ற போது,

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்கிறார். நோய் நொடியில்லாமை, பொருளதாரச் செழிப்பு, விளைச்சல் அதாவது ஆக்கம், துன்பமில்லாத இன்பமயமான வாழ்க்கை, தக்க பாதுகாப்பு அரண் ஆகிய ஐந்தும் தான் ஒரு நாட்டிற்குப் பேரழகு என்பதாகும் என்று கூறுகின்றார். வள்ளுவரால் சொல்லப்பட்ட வளங்கள் அனைத்தும் தாம் வாழ்கின்ற நாட்டிற்கு அமைய வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் 'கடமையைச் செய்து உரிமையைப் பெறு' என்ற கொள்கையைக் கடைபிடித்து வாழவேண்டும்'1 என்று மேற்கோள் காட்டியுரைப்பது அவரது புலமை நுட்பத்தைப் புலப்படுத்துகிறது.

சங்கயிலக்கியப் புலமை

கவிஞர் தங்கராசன், சிங்கப்பூர் நாடானது இரண்டாயிரமாவது ஆண்டில் வியத்தகு சாதனைகள் பெற்று, உலகில் தலைசிறந்த வளமுடைய நாடாகத்திகழும் என்பதை விளக்குகின்றபோது, சங்க இலக்கிய வரிகளை மேற்கோள்காட்டி விளக்குகிறார். முன்னேற்றச் சிந்தனைகளில் மூழ்கித் திளைத்துக்

கொண்டிருக்கும் சிங்கைத் திருநாட்டின் முப்பெரும் இனத்தவரும்,

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே….!”

என்னும் உற்றதோத் உளப்பண்பால் ஒருங்கிணைந்து, இனம்-மொழி-நிறம் ஆகிய இன்னோரன்ன வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் சிறந்த பண்பினராய், சீரிய சிங்கப்பூராய்ச் செழுமை பெற்றுத் திகழ்ந்திடும் சீர்மையில் செறிந்து நிற்போம்.

‘அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி’ என்னும் பொன்மொழிக்கேற்ப, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’ என்னும் மணித்தமிழ்ச் சான்றோர் மறைமொழிக்கு ஏற்ப, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் கனித்தமிழ்ப்புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களின் கருணைகூர் கருத்திற்கேற்ப மாட்சிமை மிக்க நாடாக மலர்ந்திடுவோம்”2 என்று விளக்கிக் கூறுவது அவரது சங்கப் புலமையைப் புலப்படுத்துகின்றது.

நீதிநூல் புலமை

‘வீடும் நாடும்’ என்னும் தலைப்பில் கருத்துக்களை விளக்கிப் பேசுகின்ற போது ஔவையாரின் நீதிக்கருத்தினை மேற்கோள் காட்டி உணர்த்துகின்றார்.

“அருந்தமிழ்ப் பெருமக்கள் அன்புடன் ‘ஔவைப்பாட்டி’ என்றும், ‘ஔவை மூதாட்டியார்’ என்றும் அழைக்கும் ஔவையார் பழுதமிழ்ப் பெண்பாற் புலவராவார். அவர், ஒரு மன்னர்தம் முடிசூட்டு விழாவிற்குச் சென்றிருந்தார். புலவர்கள் பலரும் அரசரை வாழ்த்திப் பாட்டிசைத்தார்கள். அந்த வேந்தரை வாழ்த்தியருளுமாறு அவையினர் ஔவையாரைக் கேட்டபோது உடனே எழுந்தவர், ‘வரப்புயர’ என்று பாடத் தொடங்கினார்.

“வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்!”

என்றிவ்வாறு வாழ்த்துரை வழங்கி அமர்ந்தார். பாடலின் பொருள் எளிமையாகவும் இனிமையாகவும் இருந்ததனால் அனைவரும் ஔவையாரைப் பாராட்டினர்”3 என்று கூறி, ஒவ்வொரு நாட்டின் நற்குடி மக்களும் உழைப்பால் உயர்ந்து வாழக் கற்றுக்கொண்டால், ஒவ்வொரு குடும்பத்தின் வீடும் உயரும். இவ்வாறு வீடுகள் உயர-சிறக்க-செழிக்க-நாடும் நலிவின்றி ஓங்கும்! எனவே, ஔவையாரின் அருள்கூர்ந்த வாழ்த்துப் பாடலைத் தழுவி, புதுப்பாடலாக,

‘வீடுயர நாடுயரும்
நாடுயர நாமுயர்வோம்!’

எனப்பாடி மகிழலாம் என்று விளக்கும் சூழல் உணர்வு தங்கராசனின் நீதிநூல் புலமையை வெளிப்படுத்துகின்றது. மேலும், உலக நீதிநூல் கருத்தையும் இளைஞர்களுக்கு மேற்கோள்காட்டிப் பேசுகின்றார் இவர்.

“கண்போன போக்கில், கால்போன போக்கில், மனம்போன போக்கில் சிந்தனையினைச் செல்லவிடாமல் அதனைத் திசைதிருப்பி நல்லனவற்றின்பால் நாட்டம் கொள்ளச் செல்வதே நல்லறிவு என்பதாகும். வயது அறிவு முதிர்ச்சி உள்ளவர்கள் நிச்சயம் மனம் போன போக்கில் போகவிடமாட்டார்கள். இளம் பிராயத்தினர் இது தீது, இது நன்று என்று பகுத்துணரும்

ஆற்றல் இல்லாது, பார்த்த மாத்திரத்தில் பகட்டுக்கும் படாடோபத்துக்கும் இலக்காகிப் படுகுழிப் பாதாளத்தில் வீழ்ந்து தத்தளித்துப் போவார்கள். எனவேதான், 'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்று உலகநீதி என்னும் நூலும் உணர்த்துகிறது"4 என அறிவுறுத்துவதன் வழி நீதிநூல் புலமை வெளிப்படுகிறது.

தற்கால இலக்கியப் புலமை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருபெரும் எழு ஞாயிறுகளாகத் தோன்றி, தமிழ்மொழிக்குக் கவிதை இலக்கிய மரபுகளைப் பெற்றுத் தந்தவர்கள் பாரதியும், பாரதிதாசனும் ஆவார்கள். சமூகத்தின் உணர்வு மிக்க கருத்துக்களை எளிய நடையில், வைர வரிகளால் வார்த்தெடுத்தவர்கள். இவர்களது வரிகளையும் தகுந்த இடத்தில் இனங்காட்டி விளக்குவதில் தங்கராசனின் புலமை நயம் வெளிப்படுகின்றது.

"தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடினார் பாட்டுக்கொரு புலவன் பாரதியார். தனிமனித முயற்சியினால் நாட்டின்கண் முன்னேற்றம் தழைப்பதில்லை. ஆகவே, நாட்டின் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் அடிப்படை மூலாதாரம், அந்நாட்டுத் தனிமனித வீடுகளின் சிறப்பும் செழிப்பும் ஆகும்"5 என்று கருத்து உரைப்பதில் பாரதியின் படைப்பின் புலமை தெளிகிறது. மேலும்,

நாளைய நடப்பில் உள்ள நாட்டம் குறித்து ஆய்வு செய்வோம் என்பதை 'புதியதோர் உலகு செய்வோம்' என்றான் பாரதிதாசன் என்றுரைப்பதில் பாரதிதாசன் வரிகளும், அவரது நுன்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றன.

ஒருவருக்குத் தாய்மொழிப்பற்று எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு பாரதிதாசனின் வரிகளை மேற்கோளிட்டுக் காட்டுகின்றார். இதன்வழி கவிஞர் தங்கராசன், பாரதிதாசனின் சிந்தனைகளுக்குள் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் திட்பத்தை உணரமுடிகிறது. என்றும், எக்காலத்தும் அறிவுப்பாலூட்டும் அன்னையாகத் திகழ்வது தாய்மொழியே. ஆகவேதான் பாட்டுக்கொரு புலவர் பாரதியாரின் தாசனானப் பைந்தமிழ்ப் புரட்சிக்கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன்,

"தாயை இகழ்ந்தானைத்
தாய் தடுத்தால் விட்டுவிடு
தமிழ்தடுத்தால் விட்டுவிடு
தமிழை இழந்தானைத்
தாய்தடுத்தாலும் விடாதே; அந்தத்
தமிழே தடுத்தாலும் விடாதே!"

என்று வீரமுழக்கமிட்டு அறிவுறுத்துகின்றார். இந்தத் தாய்மொழிப்பற்று எல்லோர்க்கும் இந்த உலகில் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்று இதயமார்ந்து கூறுவேன். அடுத்து, பழந்தமிழ்ப் பாவலர் ஒருவர்கூறும் கவிதை வரிகளை இங்கு நினைவு கூர்ந்திட விரும்பி விழைகின்றேன்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் வேண்டினும் வேண்டேன்'

தமிழே....தாயே....நீ இந்த உலகத்து இருப்பதனால் இங்கு உயிர்தரித்து வாழ்கின்றேன். நீயில்லாத உலகத்தில், தேவலோக தேவர்களுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுகின்ற சாவா மருந்தெனினும் அதனை

ஏற்க மாட்டேன். செத்தொழிவேன் என்பது கவிதை அடிகளின் விளக்கம்”6 என்று கூறும் கவிஞர் தங்கராசனின் சிந்தனை நோக்கத்தக்கது.

முடிவுரை

கவிஞர் தங்கராசன் இந்த நாடு எவ்வாறு வளம்பெற வேண்டும் என்ற சிந்தனையைக் கூறும்போது வள்ளுவரின் கருத்தையும், ஔவையாரின் சிந்தனையையும் குறிப்பிட்டு உணர்த்துகிறார்.

சங்க கால இலக்கிய வரிகளின் உணர்வை, பாரதியார், பாரதிதாசனின் கவிதையடிகளைக் கையாண்டு, சமூகம், தாய்மொழிப்பற்று போன்ற கருத்தை விளக்கும் முறைகளில் அவரது பன்னூல் புலமை நலம் சிறக்கின்றது.

மேற்கோள்கள்

அமுதத்தமிழ், பக்.15-16.
மேலது., பக். 25-26.
மேலது., பக். 36-37.
மேலது., ப. 86.
மேலது., ப. 37.
மேலது., பக். 58-59.

‘கடல் விரித்த தமிழ் ஆளுமைக்’ கவிஞர் மு. தங்கராசன்

முனைவர் பா. பெரியவர்
கௌரவ விரிவுரையாளர் (தமிழ்)
அரசு கலைக் கல்லூரி, மேலூர்

முகப்புரை

எண்ணத்தின் விளைவு, கருத்துருவாக்கம் எனும் பரிமாண வளர்ச்சியில் தான் செய்யுள், மரபுக்கவிதை, உரைநடை, புதுக்கவிதை போன்ற இலக்கிய வடிவங்கள் உருவாக்கம் பெறுகின்றன. சிற்சில நேரங்களில் உடல் பாவனைகளிலும், இசை நயங்களிலும் வெளிப்பட்டு நிற்கும். ஆனாலும், வாழ்வியக்கத்தில் மனிதருக்கென்றே சிறப்பாயமைந்த மொழிக்கருவியின் துணை கொண்டு வெளிப்படும் கருத்தே நிலையானதாகவும், ஆளுமைகளின் அடையாளமாகவும் நிறுவப்படும்.

பதியப்படுகிற எண்ணத்தெறிப்புக்களே இலக்குகளை இயம்புகிற இலக்கியமாக மிளிர்கிறது. மிளிரும் இலக்கியத்தில் மின்னலாய் எண்ண ஆற்றல் வெளிப்படுவது கவிதை மட்டுமேயாகும். அதனினும் அனைவரையும் ஆட்கொள்ளும் சக்தியும், தனித்துவமும், கவிதைக்கு மட்டுமே உண்டு. காரணம் எண்ணத்தின் விளைவு கருத்து. கருத்தின் விளைவு மொழி மொழியின் செறிவுமிக்க உள்ளடக்கம்தான் கவிதைக்குரிய தனித்தன்மையாகும்.

இக்கண்ணோட்டத்தோடு, கவிஞர் மு. தங்கராசனின் கவி ஆளுமையை உற்று நோக்கலாம். ‘நித்திலப்பூக்கள்’ எனும் கவிதைத் தொகுப்பில் எழுபத்திரண்டு கவிதைகள் இடம்பெறுகின்றன. கவிதைக்குரிய பாடு பொருள்கள், நாடு, சமுதாயம், கடவுள், மத நல்லினக்கம், மனிதாபிமானம், அறப்பண்பு, வாழ்த்தும் மனப்பாங்கு, தமிழுக்குத் தொண்டாற்றியவர்களை நினைவு கூறல், தமிழின் தொன்மைத்துவம், தமிழரின் விழாக்கள் என்பவை அமைகின்றன. தமிழகத்தில் பிறந்து, புலம்பெயர்ந்து மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் கல்வி பயின்று தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய கவிஞர், தமிழின் பெருமை முழுதும் ஆய்ந்திட, சுவைத்திட முனைந்து தமிழுக்கு பல்வேறு வடிவங்களில் தமிழ், தமிழரின் தொன்மை அடையாளங்களை வெளிக்கொணரும் பல்வேறு அயலகத் தமிழ் ஆளுமைகளின் வரிசையில் கவிஞர் மு. தங்கராசனாருக்கும் சிறப்பான இடம் உண்டு என அறுதியிடலாம்.

ஆளுமை: விரிவும் வீரியமும்

பூலோகத்தின் பரந்து விரிந்துபட்ட நிலவெளியில் வாழுகின்ற மானுடத்தைக் குழுவாகவும், வகைப்படுத்தும் கருவியாகவும் முன்நிற்பது மொழி. மானுட இனங்களில் எது முதல்குடி என்றறிய ஏதுவாக மக்கள் பேசும் மொழியே சான்றாக உள்ளது. அம்மக்கள் வாழும் நிலப்பரப்பை, நாடாகவும், தேசமாகவும் வரையறுத்துப் பெயர் வைக்கவும், மக்களின்

தோற்றம், நிறம், பண்பாடு, நாகரிகம் அனைத்தையும் தாண்டி முதலில் மொழியே முதன்மை பெறுகிறது.

ஓர் இனத்தின் தொன்மைத்துவம், பன்மைத்துவம் உள்ளிட்ட கூறுகளை அறிய மொழியே முதன்மை பெறுவதால், மக்கள் தங்களது தாய்மொழியை மட்டுமே தொன்மைத்துவமிக்கதாக அடையாளப் படுத்துவது இயல்பான ஒன்றாகும். தமிழ் தொன்மைபற்றி கவிஞர் வைரமுத்து அவர்கள் இவ்வாறு தடம்பதிக்கிறார்.

“தமிழ்
மண்ணுக்கு
வந்ததில்
மொகஞ்சோதாராவிலும்
முன்னுக்கு வந்த
மொழி”

(வைரமுத்து, பெய்யெனப் பெய்யும் மழை, ப.7)

குறிப்பாக, பல நிலப்பரப்புகளில் பல மொழிகளின் நடுவிலும் உறவாடிய தமிழர், தமது தாய்மொழி மீது பற்றுதலும், ஈர்ப்பும் கொண்டிருப்பதோடு, பாதுகாத்தும் வளர்த்தும் வந்துள்ளதை கவிஞர் மு. தங்கராசனின் கவிதை வழித் தெளிய முடிகிறது. இவ்வாறாக, வரலாறு நெடுகிலும் கவிதை இலக்கியங்களின் வழி ஆளுமை செலுத்திய தமிழ்மொழி அயலகங்களிலும் வளம் குன்றாமல் நின்று நிலை பெற்றிருக்கிறது.

மேலும், இனப்பரவல், இடம்பெயர்தல், வாணிபம், ஆட்சித்தொடர்பு, சமய ஊடுருவல், சமயப்பூசல்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள் எனும் கூறுகளைக் கடந்து தமிழ்க்கவிதை நிலைபெற்றிருப்பதற்கு கவிஞர் மு. தங்கராசன் போன்ற ஆளுமைகள் தான் நிலைத்த காரணியாகின்றனர்.

தமிழும் ஆளுமைகளும்

ஒவ்வொரு மொழியும் அது உலவுகின்ற பரப்பில் தன்னை அடையாளப்படுத்தும் பலப்பல ஆளுமைகளை நிலைநிறுத்தும். அவ்வாளுமைகளே அந்த மொழியின் பெருமையாய் நின்று மானுடக் கூறுகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொள்கின்றன. ஏனெனில், மொழியும் ஆளுமையும் ஒன்றுக்கொன்று பெருமை கூட்டி மானுடத்தை மலரச் செய்கின்றன.

அவ்வகையில், ஆங்கிலமொழி ஈன்ற சிறந்த ஆளுமைகள் ஷேக்ஸ்பியர், வின்சன்ட் சர்ச்சில், ஜெர்மன் மொழி தந்த ஆளுமை ‘கதே, இத்தாலிநாடு தந்த ஆளுமை மாக்கிய வல்லி, சீனமொழி தந்த ஆளுமை கான்பூஸியஸ் போன்று, தமிழும் தொன்மைக்காலம்தொட்டு இக்காலம் வரை பல்வேறு ஆளுமைகளைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக, அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர் தொடங்கிய 20ம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன் முதல் நூற்றுக்கணக்கான கவி ஆளுமைகள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். சிறப்பாக, நவீன மொழி இயங்கியலில் தத்தமது கவிதைகள்வழி தமிழ், தமிழர்களின் தொன்மைத்துவத்தையும், நவீனத்துவத்தையும் தமது ஆளுமையின் பால் நிறுவியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் குடிகள், அந்தந்த நாட்டுக் குடிமைச்சமூகத்தோடும், சட்டவியல் மரபு களோடும் இயைந்து தங்களது வாழ்வுரிமையை நிலைநிறுத்திக் கொண்டாலும் கூட,

தாய்மொழியின்பால், தமிழ்நிலத்தின்பால் பற்பல களங்களில், தமது மொழிப்பற்றை, இனப்பற்றை, கலாச்சாரப் பற்றைத் தொப்புள் கொடி உறவு போல் பேணிவருகின்றனர் என்பது திண்ணம்.

அவ்வரிசையில், 'நித்திலப்பூக்கள்' எனும் கவிதைத் தொகுப்பில், கவிதைக்கான உள்ளடக்கமாக நாடு, மொழி, இனம், சமூகம், இறைமை, மத நல்லிணக்கம், விழாக்களின் தற்பெருமை, மானுட உணர்வு, தியாக அடையாளங்களை நினைகூறல், தனிநிலை வாழ்த்து மடல், வாழ்வியல் அறம் எனும் உட்கூறுகளை உள்வாங்கி, கவிதைக்குரிய பாடுபொருளாக தகவமைத்துக்கொண்டு, மொழியின் நெகிழ்வு கொண்டு தமது தமிழ் ஆளுமையை நிறுவிட முனைந்திருப்பது மொழிக்கு வளம் சேர்ப்பதாகவே அமைகின்றது. இங்கு, ஒவ்வொரு கவிதையையும் பொருள் விளக்கம் கூறி விளக்குவதைவிடுத்து, கவிதைக்கான களத்தையும், கருவையும், அது செலுத்தும் உள்ளீடுகளும் தமிழ்மொழிக்கும், தமிழருக்கும் இக்கவிஞரின் கவி ஆளுமையால் விளைந்திட்ட மேன்மையும், உணர்வுமே முக்கியம் எனும் கருது கோளின்படி இவரை அடையாளப் படுத்துவது அவசியமாகிறது.

குறிப்பாக, அவரது கவிதைகளில் தமிழ்மொழி ஒன்றுதான், மதபேதங்கள் கடந்து, மனிதனைச் சிந்திக்க வைக்க, மானுடத்தை வயப்படுத்தக்கூடிய கருதுகோள் மேலும், தமிழை உடலால் மட்டுமல்ல; உயிராலும் உச்சரிக்க முடியும் என்கிற அழுத்தமும் திடமான பார்வையும் இவரது கவிதைகள் வழிப் புலப்படுகின்றன. பல கவிதைகளில், பிறமொழிக் கலப்பும், மொழியழிப்பும் குறித்த எச்சரிக்கை உணர்வைத் தருவதாகவும் இருக்கின்றன. தொல்குடியாகிய தமிழ், தமிழர்களுடைய ஒட்டுமொத்த விழுமியங்களையும் சேமித்து செறிவூட்டும் கவிதைகள் வழி கவிஞரது ஆளுமைத் திரள்ச்சி முழுமை பெற்றுள்ளன எனலாம்.

கவிஞரின் உள்ளீடும் பாய்ச்சலும்

மொழி என்கிற கருவி, அது இயங்குற இயங்கியல் பரப்பில் எவ்வகைப் பயனீடுகளைப் பெற்றிருக்கின்றன என்பதை, அம்மொழி ஈன்றெடுத்த ஆளுமைகளைக் கொண்டுதான் அளவிட முடியும். அவ்வகையில், கட்டற்ற சிந்தனையோடு 'நித்திலப்பூக்கள்' எனும் தொகுப்பு தமிழின் செழுமையை வீரியத்தோடு எடுத்தியம்புகிறது. மேலும், பன்முகத் தன்மையோடு தமது ஆளுமைமிக்க விதைகளால் புரட்சிக் கவி எனும் அடையாளத்தைப்பெறும் பாரதிதாசன், தமிழின மீட்டுருவாக்கத்தின் வழிகாட்டியாகவும், மீட்சியாகவும் அறியப்படுவது போல், மு.தங்கராசனும், அவரது கவிதைகளின் பொருண்மையும் வீச்சும் பாய்ச்சலும் தமிழ் தேசிய உணர்வுகளுக்கு ஊட்டம் சேர்ப்பனவாக இருக்கின்றன.

முன்னீடும் முதிர்ச்சியும்

உலகத்தில் எல்லாமே மாறக்கூடியது எனும் கருதுகோள்தான் மாறாதது என்பர் காரல் மார்க்ஸ் மானுடக்குழுக்களின் முதன்மையான கருவியாக சுட்டப் படுவது மொழி அம்மொழியின் வினை கொண்டு, இனம், நாடு, சமூகம், பண்பாடு, அரசியல், இறைமை, வழிபாடு, அறநெறிப்படுதல் எனும் காரணிகள் காலம்காலமாக எவ்வாறு உருமாற்றம் பெற்று

வந்துள்ளன? அம்மாற்றங்களில் நிகழ்வுற்ற சிதைகள் அதிர்வுகள் என்ன? எதிர்நிலை வளர்ச்சிக்குரிய காரணிகள் யாவை? என்பனவற்றை ஆய்வதும் சரியான வளர்ச்சியின் மூலத்தைக் கண்டு தெளிவதும் தான் மானுட இனத்தின் முன்னுள்ள முக்கியக் கருதுகோள்கள் இதனை அடியொட்டி, தமிழகத்தில் தொன்மைக்காலம் தொட்டு 21ஆம் நூற்றாண்டு வரை, தமிழ்மொழியில் நிகழ்ந்த மாற்றங்கள், வளர்ச்சிகள், விளைவுகள் பற்றி ஆய்வும் விரிவும் இக்காலகட்டத்திற்கு அவசியமாகிறது. மூளை உழைப்பால் பொருளும் புகழும் ஈட்டும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தம்மை ஒரு தனி உலகமாக வருவித்துக் கொள்ளும் மனப்பாங்கை ஒற்றைப் பண்பாட்டுக்குள் சுருக்கிவிடும் சூழலில், தமிழர் மீதும், தமிழ்மொழியின் ஆளுமை மீதும் அன்றாடம் தாக்கம் ஏற்பட்டுவரும் சூழலில், தமிழகத்தில் வாழும் பொறுப்புணர்வு மிக்க அறிவாளி வர்க்கம் எதிர்வினை புரிந்திடாத, முனைப்பு காட்டிடாத நிலையில் கவிஞர் மு. தங்கராசன் எனும் கவி ஆளுமை, அயலகத்தில் வசித்தாலும் தாய்மொழி மீதும், தமிழரின் தொன்மை அடையாளங்கள் மீதும் தமது கவிதைகளின் வழி இழந்த பெருமைகளை மீட்டெடுக்கும் உணர்வையும் உந்துதலையும் இட்டு நிரப்புகிறார். குறிப்பாக, தமது மொழியாளுமையால், மொழிப்பற்றால், தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு பாய்ச்சுகிறார். 'தமிழுக்குத் தொண்டு செய்வோர் மரணிப்பதில்லை. ஆம், "ஓர் சமூகத்திற்குரிய ஆன்ம உணர்வை அளிப்பதும், வழிப்படுத்துவதும், வலுப்படுத்துவதும் அச்சமூகத்தில் பிறந்த அறிவாளிகளின் கடமை' என்பார் ஆண்ட்ரியோ கிராம்ஸி. ஆகவே, தமிழ்ச் சமூகத்தை ஓர்மைப்படுத்துவதும் தமிழ்த் தேசிய உணர்வை எழுச்சி பெறச் செய்வதும், இழந்துவிட்ட தமிழ் அடையாளங்களை தமிழ்க் கவி ஆளுமைகளின் களன்களாகவும் கடமையாகவும் அமைத்துக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

நிறைவுரை

மனிதன், தம்மை ஆளும் மொழியின் மீது கொண்ட காதல் அணிச்சையான உணர்வாலும், அவர்களுடைய மொழியில் உள்ள வலுவான கருத்துக்கள், சொலவடைகள் மூலம் செம்மைப் பொருளுணர்வும், தொன்மையின் வலுவும், மாந்தரின் உணர்வையும் மனதையும் இயல்பாகவே கவ்விப்பிடிக்கும். இதனையே கவிஞர் தம்மொழியைப் போற்றுவதும் அதன்வழி, இலக்கிய வளங்களைப் புதுப்பிப்பதும் செழுமைப்படுத்துவதுமான பணியினை இட்டு நிரப்புகிறார். இவ்வாறு, மொழி மீது பற்றுக் கொள்வதும், அம்மொழி பேசும் மக்கள் பரப்பைத் தம்மினமாக உணர்வதும் உறவு கொள்வதும், அம்மொழி ஆளும் நிலப்பரப்பைத் தம் நாடாக உருக்கொள்வதும், நேர்விளைவுகளாக நின்று, நேர் விளைவாக உயிர்ப்பிக்கும் தன்மை இயற்கையான ஒன்றாகும் என்பதை அறிவியல் விஞ்ஞானமும் மெய்ப்பிக்கின்றன. தொடர்ச்சியாக, மொழிப்பற்றும், இனப்பற்றும, நாட்டுப்பற்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டன என்கிற கருத்து முரண்களும், எதிர்மறைச் சித்தாந்தங்கங்களும் முன்பைவிட தமிழ்நிலத்திலும், அயலகத்திலும் நின்று நிலவினாலும் கூட, அன்றே, அறிஞர் அண்ணா அவர்கள்,

'தமிழ்மொழிப்பற்றைக் குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டு விடமுடியாது. அது பொருளற்றது" என்கிறார். மேலும், திரு.வி.க. 'தாய்மொழியினிடத்து அன்பில்லா ஒருவன், தாய்நாட்டின் அன்பனாகான். நாட்டன்பிற்கு நாட்டு மொழியன்பே உயிர் தாய் மொழியன்றோ? தாய்மொழிப் பற்றில்லாத இடத்தில் முன்னேற்றம் எங்ஙனம் உருக்கொள்ளும்? முன்னேற்றத்திற்கு உயிர் தாய்மொழியன்றோ? அதன்மீது கவலை செலுத்தாதிருப்பின் நாட்டின் கவலை எங்ஙனம் நீங்கும்? என்கிறார். (தேசப்பக்தாமிர்தம், திரு.வி.கல்யாணசுந்தரம், ப. 126).

இங்ஙனம், இனம், நாடு, மொழி, சமூகம் எனும் வாழ்வியல் கட்டமைப்பை நிறுவிடும் மொழியை உணர்வதும் உணர்த்துவதும் கவி ஆளுமைகளின் தலைமைப்பணி என்பதை,

"கவிதையெனும் பேய்ப்பிடித்து
சகாராவில் விட்டாலும்
தமிழ்கொண்டு சேர்ப்பேன்-சுடு
தார்ச்சாலை மீதும் ஒரு
தாமரையாய் பூப்பேன்"
(வைரமுத்து, பெய்யெனப் பெய்யும் மழை, ப.115)

எனும் வரிகளுக்கு ஒப்ப, கவிஞர் மு. தங்கராசனின் ஆளுமையின் வீச்சும் தமிழ் நிலத்தின்பால் பற்றுணர்வு கொண்டிருப்பது இயல்பான, இயற்கையான ஒன்றாகவே அவதாரிக்க முடிகிறது.

மு. தங்கராசனின் 'சூரியகாந்தி' கவிதைத் தொகுப்பு நூலில் மொழி, நாடு, சமுதாயம்

முனைவர் ரோமா. பேச்சிமுத்து
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

முன்னுரை

மு. தங்கராசின் 'சூரியகாந்தி' என்னும் கவிதைத் தொகுப்பு நூலில் மொத்தம் எழுபத்து மூன்று கவிதைகள் உள்ளன. இவ்வாய்வுக் கட்டுரையில் மொழி, நாடு, சமுதாயம் குறித்த அவரது இருபத்து நான்கு கவிதைகள் மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன.

'சூரியகாந்தி' கவிதைத் தொகுப்பு நூல் - நுவல்பொருள்

சிங்கப்பூர் தமிழாசிரியர் மு. தங்கராசன் 'சூரியகாந்தி' என்னும் தம் மரபுக்கவிதைத் தொகுப்பு நூலினைச் சிங்கப்பூரில் தம் சொந்தப் பதிப்பாக 2013இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூலில் 'மொழி' என்னும் பகுப்பில் ஆறு கவிதைகளும், 'நாடு' என்னும் பொருண்மையில் ஐந்து கவிதைகளும், 'சமுதாயம்' எனும் வகைமையில் பதின்மூன்று கவிதைகளும் 'பதிவு செய்து பாராட்டுப்பா' என்னும் தலைப்பில் பத்துக் கவிதைகளும், 'படித்தளித்த பாராட்டுப்பா' என்னும் தலைப்பில் பத்துக் கவிதைகளும், 'விருதும் பாராட்டும்' எனும் பொருண்மையில் ஐந்து கவிதைகளும், 'திருவிழாக்கள்' குறித்து ஆறு கவிதைகளும், நினைவஞ்சலியாகப் பதின்மூன்று கவிதைகளும், இறைமைப் பொருளில் ஐந்து கவிதைகளும் என மொத்தம் எழுபத்து மூன்று கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

மு. தங்கராசனின் மொழியுணர்வுக் கவிதைகள்

மு. தங்கராசன், பாரதிதாசனைப் போன்று தம் 'தமிழ்வாழ்த்து' என்னும் கவிதையில் தமிழுக்கு எங்கள் தமிழ், இன்பத்தமிழ், சங்கத்தமிழ், சந்தத்தமிழ், பொங்குமின்பம் தங்குந்தமிழ், வளர்ந்த தமிழ், இயங்கு தமிழ், எங்கள் மொழி, சிந்துதமிழ், செழிப்புமிக்க இலக்கியங்கள் செறிந்த தமிழ், வலிமைமிக்க இலக்கணங்கள் வாய்ந்த தமிழ், கலைமலிந்து கனிந்த தமிழ், கன்னித்தமிழ் (மு.தங்கராசன், சூரியகாந்தி, ப. 6) எனப் பல்வேறு அடைகளைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளார். ஒவ்வோர் அடைமொழியிலும் தமிழின் சீர்மிகு பண்புகள் வெளிப்பட்டு நிற்கின்றன. இவ்வாறே அவர் 'இன்பத்தமிழ் வாழ்கவே' என்னும் கவிதையிலும் இன்பத்தமிழ், சந்தத்தமிழ், வளர்ந்த தமிழ், மொழியுந்தமிழ், தூயமொழி, இலங்குதமிழ் என்னும் ஆட்சிகளைக் (மு. தங்கராசன், மு.நூ, ப.7) கொண்டு தமிழ்மொழியை வாழ்த்துகின்றார். அவர் 'அன்னைத்தமிழ் வாழ்க' என்னும் கவிதையில்,

"பயிராகி விளைகின்ற பான்மை யாகி
அயரா துழைக்கும் நல்லாண்மை தந்து

உயிராகி உடலாகி உணர்வுமாகி
துயிலா தெமையூக்கும் தமிழே வாழ்க
முந்தையர் தமிழர் வாழ்வினில் முகிழ்த்து
எந்தையும் தாயும் இனிதே போற்றிய
சிந்தைதனைக் கவரும் செம்மொழியாகும்
சந்தமும் போற்றும் தமிழே வாழ்க
பண்ணகல் ஞாலம் களிகூர்ந்திடவே
முன்னவர் யாண்டும் முனைந்து வளர்த்த
பண்ணெலாம் நிறைந்து பாமணங்கமழும்
எண்ணரும் அன்னைத் தமிழே வாழ்க"

(மு. தங்கராசன், மு.நூ, ப. 8)

என, அன்னைத் தமிழை வாழ்த்துகின்றார். இக்கவிதையின் முதல் நான்கடிகளில் 'வானாகி மண்ணாகி....' என்னும் மாணிக்கவாசகரின் திருவாசகம் பாடலின் தாக்கமும், அடுத்த நான்கடிகளில் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி' என்னும் பாரதியாரின் கவிதைத் தாக்கமும் இடம்பெற்றுள்ளன. மு. தங்கராசன், தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்குத் தமிழ் மொழிப்பற்று வேண்டுமென்பதைத் 'தாய்மொழிப்பற்று' என்னும் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். தாய்மொழிப்பற்றில் ஊனம் இருக்கக்கூடாதென்கிறார்.

"விழிகளை இமைகள் காக்கும்
பொறுப்பினை விமலன் தந்தான்
விழிப்புடன் இருத்தல் வேண்டும்
வியனிமை கடமை யன்றெ
மொழியதன் உயர்வும் தாழ்வும்
முகவரிகள் பொறுப்பே யாகும்
விழியனை மொழியைக் காக்க
வீறுமை பெறுதல் வேண்டும்"

(மு. தங்கராசன், மு.நூ., ப. 10)

இவ்வாறு மொழியுணர்வைப் போற்றும் கவிஞர் 'இருமொழிக்கல்வி' என்னும் கவிதையில் சிங்கப்பூர் நாட்டில் ஆங்கிலமும் தாய்மொழியும் பள்ளிக்கல்வியில் வேண்டும் என்கின்றார்.

மு.தங்கராசனின் நாட்டுணர்வுச் சிந்தனைகள்

சிங்கப்பூர் மக்கள் கழகம் என்னும் அரசுசார் அமைப்பு 2010இல் நடத்திய கவிதைப் போட்டிக்கு மு. தங்கராசன் 'மண்ணுலக சொர்க்கபுரி' என்னும் கவிதையை எழுதினார். அக்கவிதையில் அவர் மண்ணுலக சொர்க்கபுரி எனக் குறிப்பிட்டு, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அந்நாட்டின் பண்பாடு என்கின்றார்.

"தன்னாட்சி உரிமைகளும் தனியாட்சிச் சுதந்திரமும்
மன்னாட்சிக் குடியரசும் மலர்ந்து வந்தே சிறந்ததுவும்
மண்ணுலக சொர்க்கபுரி எனச்சான்றோர் மகுடமிடும்
பொன்னாட்சி என்றுலகம் போற்றுகின்ற நல்லாட்சி".

(மு. தங்கராசன், மு.நூ, ப. 14.)

இக்கவிதை வரிகளில் அவர் சிங்கப்பூர் நாட்டின் அரசியல் மற்றும் ஆட்சிப் போக்கினை வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்கப்பூர் நாட்டுத் துறைமுகம்

சிங்கப்பூரின் பொருளாதார வளம் வர்த்தகமே ஆகும். அதற்குக் காரணமாக அமைந்துள்ள சிங்கப்பூர்த் துறைமுகத்தை 'இனியவளம் துறைமுகமே' என்னும் கவிதையில் கூறியுள்ளார்.

"உலகத்து நாடுகளின்
வறுமைக் கேந்திரமாய்

உறைந்திருக்கும் நல்லமைவு
உண்மையில் நம் நற்பேறு
அனைத்துலக வர்த்தகத்தின்
அடிப்படையே துறைமுகந்தான்
அனைத்துலக நாடுகளின்
அமைந்துவரும் நல்லுறவு
சிங்கப்பூர்த் துறைமுகத்தின்
செழுமைகளைப் போற்றாத
சீரார்ந்த நாடுகளே
சீருலகில் இல்லையம்மா"

(மு. தங்கராசன், மு.நூ., பக். 16-17.)

மு. தங்கராசன், சிங்கப்பூர் நாட்டின் சுதந்திரத்தின் விழாவிற்கு உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிக்காகச் 'சிங்கைத் திருமகளே வாழ்க' என்னும் கவிதை எழுதினார். அதில் சிங்கப்பூர் நாட்டின் நான்கு மொழிகளுக்கும் சமத்துவம் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

"செப்புமொழி நான்கினுக்கும் ஏற்றம் - உன்றன்
இருப்பதைந் தாண்டுகளின் மாற்றம்"

(மு. தங்கராசன், மு.நூ., ப. 18)

மு. தங்கராசன் 'சிங்கப்பூரின் சீர்மைகள்' என்னும் கவிதையில், சிங்கப்பூரில் பல இனமக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் 'தேசியம்' என்னும் கூட்டுறவில் ஒன்றுபட்டு வாழ்வதைக் குறிப்பிடுகின்றார்.

"தேசிய சேவை செய்கின்றோம்
தேசியப் பண்பில் செழிக்கின்றோம்
தேசிய உறவில் தெளிகின்றோம்
தேசியம் என்றே வாழ்கின்றோம்"

(மு. தங்கராசன், மு.நூ., ப. 19)

சிங்கப்பூரில் நான்கு தேசிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்ந்தபோதும் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பார்கள். உறவுகளை வளர்க்க கைகொடுப்பார்கள். நற்கடமைகளுக்காக உயிரையும் கொடுப்பார்கள். அரிய நற்செயல்களைச் செய்து சமூக ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பார்கள் என்கின்றார்.

மலைநாடு (மலேசியா)

கவிஞர் மு. தங்கராசன் தான் முதலில் குடியேறிய மலேசியாவை வாழ்த்தி 'மாணுயர் மலையகம் வாழ்க' என்னும் கவிதையை எழுதியுள்ளார். அக்கவிதையில் அவர்,

"இயற்கையின் வளங்கள் யாவும்
குறைவற இனிதே பெற்ற
இயல்பினான் சிறந்த தேசம்
எழில்மலை நாடு என்றும்
அயர்விலா துழைக்கும் மக்கள்
அணியமைந் தாங்கி யோங்கும்
செயல்திறம் மிக்க நாடாம்
மலேசியத் தேசம் வாழ்க"

(மு. தங்கராசன், மு.நூ., ப. 24)

என, மலேசியா நாட்டின் வளங்களைக் குறிப்பிட்டு வாழ்த்துகின்றார்.

மு. தங்கராசனின் சமுதாயச் சிந்தனைகள்

மு. தங்கராசன் இன்றைய இளைஞர்களின் மனப்போக்கு மாறவேண்டும் என்கின்றார். இதனை அவர் 'இளையோர் தம் மனப்போக்கு' என்னும் கவிதையில்,

"இன்றென்ன வென்று மட்டும்
இறுமாப்புக் கொண்டி லங்கும்
நன்றாகும் நாளைக் கென்ன?
நல்லெதிர் காலம் தன்னில்

வென்றுவர வேண்டு மென்ற
விருப்பமும் விழைவும் இல்லை
என்றுதான் மீளப் போமோ?
இளையோர் தம் இந்தப்போக்கு"
(மு. தங்கராசன், மு.நூ., பக். 28)

என மனவேதனையுடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

பணிவு வேண்டும்

"பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற" (குறள். 95)

என்றார் வள்ளுவர். மு. தங்கராசன் மக்கள் வள்ளுவ நெறியில் பணிவுடன் வாழவேண்டும் என்பதைப் 'பணிவன்பு' என்னும் கவிதையில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"செல்வமும் பொருளும் ஏற்றம்
சிறப்புடன் செழிக்குங் காலை
நல்லுளப் பண்பாம் சால்புப்
பணிவன்பு நயத்டுதல் வேண்டும்
வள்ளுவர் இதனை யன்றே
வலியுறுத்த லாகச் சொன்னார்
தெள்ளிய அமுதாம் அந்தத்
திருக்குறள் கருத்தை ஏற்போம்"
(மு. தங்கராசன், மு.நூ., ப. 30)

இதனைத் தவிர மு. தங்கராசன் 'வையகம் போற்றும் நன்னாள்' (பக்.35-36) உழைப்பவர் தினமான மே தினத்தை வாழ்த்தியுள்ளார். அவர் குடியெனில் என்னும் கவிதையில்,

"குடித்திடும் எல்லோருக்கும்
குடும்பமும் இருப்பதுண்டு
குடிப்பதால் மதிப்பு போகும்
குறியதில் கொள்ளல் வேண்டும்"
(மு. தங்கராசன், மு.நூ., ப. 40)

என, மதுப்பழக்கத்தால் குடும்பம் கெடும் எனக் கூறியுள்ளார். மேலும், அவர் 'பணியெனில்' என்னும் கவிதையில், நல்லறம் தழைக்க வள்ளலார் நெறியில் நற்பணி செய்ய வேண்டும் என்கிறார்.

"வள்ளலார் அருளிச் சென்ற
வார்த்தைகள் மறக்கப் போமோ?
நல்லறம் தழைக்க வேண்டின்
நற்பணி புரிதல் வேண்டும்"
(மு. தங்கராசன், மு.நூ., பக். 41)

நிறைவுரை

சிங்கப்பூர் தமிழாசிரியர் மு. தங்கராசனின் 'சூரியகாந்தி' கவிதைத் தொகுப்பு நூலின் முற்பகுதியில், மொழி மற்றும் சமுதாயச் சிந்தனைகள் பொது நிலையிலும் நாட்டுணர்வுச் சிந்தனைகள் சிங்கப்பூர், மலேசியா சார்ந்தும் கூறப்பெற்றுள்ளன.

மு. தங்கராசனின் 'மணக்கும் மல்லிகை' சிறுகதைத் தொகுப்பு காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

மகாலட்சுமி. மா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
சிவந்திஆதித்தனார் கல்லூரி, பிள்ளையார்புரம்

முன்னுரை

சிறந்த தமிழாசிரியரான மு. தங்கராசன் அவர்கள், ஆசிரியப் பணியோடு, படைப்புப் பணியையும் செவ்வனே செய்து வருகிறார். பல்வேறு நாளிதழ்களில் அவ்வப்போது தம்முடைய சொந்தப் பெயரிலும், புனைப் பெயர்களிலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதியதோடன்றி, 1984-ஆம் ஆண்டிலிருந்து பல நூற்களையும் எழுதி வெளியிட்டு வருகிறார். இவரது சிறுகதைகளில் இடம் பெறும் நிகழ்வுகள் யாவும் சிங்கப்பூரில் நடைபெற்றதாகவே இருக்கின்றன. மணக்கும் மல்லிகை என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு அவருடைய ஏழாவது சிறுகதைப் படைப்பாகும். இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கதைகளும் யதார்த்தமான சம்பவங்களாக இருந்தாலும் உணர்ச்சித் தன்மைகளோடு கூடிய வாழ்வியல் சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளன. அவற்றைக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

வாழையடி வாழை

வாழையடி வாழை என்பது இத்தொகுப்பிலுள்ள முதல் சிறுகதையாகும். மாமியார் - மருமகள் உறவு எப்பொழுதும் எதிரும் புதிருமாகவே சமுதாயத்தில் காணப்படுகின்றன. இந்நிலையானது அவ்வீட்டிலுள்ள தாய்க்கும் - மகனுக்குமான நல்லுறவைச் சிதைத்து விடுவதாகவும் - சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் இந்நிலை வாழையடி வாழையாகத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதை ஆசிரியர், வாசகர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்பியதால் இத்தலைப்பினை இக்கதைக்குத் தேர்வு செய்திருக்கலாம். மேலும் மனிதர்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் தாய்ப்பாசம் இருக்கத்தான் செய்கிறது. அதனைப் புலப்படுத்தும் வாய்ப்பு எப்போதும் அமைவதில்லை. அதிலும் இக்கால இளையர்களுக்குப் பாசம் என்பதே கிடையாது என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அது முற்றிலும் உண்மையல்ல என்று இக்கதையில் ஆசிரியர் நிரூபித்துள்ளார்.

சமுதாயத்தில் 'ஈன்று புறந்தருதல்' மட்டுமே ஒரு தாய்க்கான கடமை. ஆனால் இக்கதையில் ஒரு விதவைத்தாய், தனது மகனைச் சான்றோனாக்குகின்ற ஒரு தந்தைக்கானப் பணியையும் சேர்த்து செய்கிறாள். ஆயினும் இவ்விருவருக்கிடையே மருமகள் என்ற ஒருத்தி வந்தால், மகன் தன் தாய் மீது கொண்ட பாசத்தை வெளிக்காட்ட இயலாமல் போராடுதை மிகத் தெளிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார். 'அன்னையர் தினம்' என்ற கொண்டாட்ட நாள் மகனுக்கு, தன் தாய்ப்பாசத்தை வெளிக்காட்ட வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மகன் தன் கண்ணீரால் தாயின் மனதைக் குளிர்விக்கிறான். அத்தாய், பெருந்தன்மையோடு மகனை அரவணைத்துக் கொண்டு, மருமகளும் ஒரு நாள் திருந்துவாள் என்று காத்திருக்கிறாள்.

பெரும்பாலான இளையர்கள் கல்வி, தொழில் மற்றும் வியாபாரம் போன்ற காரணங்களால் வெளிநாடுகளில் இருக்கக் கூடும். ஒரு சில குடும்பங்களில் பொருளாதாரப் பிரச்சனைகள் இருக்கலாம். ஒரு சில குடும்பங்களில் கோப தாபங்கள் கூட உறவுகளைப் பிரித்து வைத்திருக்கலாம். அத்தகையோருக்கெல்லாம் அன்னையர்

தினத்தை ஒரு சமூக விழாவாகக் கொண்டாடினால்; இளையர்களுக்கும் தங்கள் அன்னையரைக் கொண்டாட ஒரு வாய்ப்பு கிட்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கொடுமை

ஆசிரியர் பொதுவாக தமது எல்லாக் கதைகளிலும் பூஜை முறைகளைக் கூறி மங்கலப்படுபத்தியுள்ளார். இக்கதையிலும் அவ்வாறே பூஜையெல்லாம் செய்து கொண்டு, கணவனுக்கு அடங்கி வாழ்கின்ற ஒரு மனைவியையும், வெகுளியாக, பிறரிடம் வெகுவாக ஏமாந்து போகின்ற ஒரு கணவனையும் மிக யதார்த்தமாகக் காட்டியுள்ளார். எனினும் கதையைப் படிக்கின்ற வாசகர்களாகிய நாம் பிறரிடம் ஏமாந்து விடக்கூடாது என்ற வாழ்வியல் சிந்தனையை அறிவுறுத்தியுள்ளார். உலகத்தில் ஏமாற்றிப் பிழைப்போர் போடும் வேடங்கள் பல நாம் அவர்களைச் சரியாகப் புரிந்து கொண்டு ஏமாற்றமடையாமல் வாழ்வதென்பது மிகவும் கடினமான காரியமாகும். பிறரிடம் நாம் காட்டும் கருணையென்பது கழிவிரக்கமா? மனித பலஹீனங்களில் ஒன்றா? என்று ஆசிரியர் நம்மிடம் வினவுகின்றார். இக்கதையில் வரும் அலுவலர் ஒருவர் கருணை என்ற பெயரில் ஆயிரக்கணக்கில் பணத்தை இழந்ததை ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். சிங்கப்பூர் போன்ற தலங்களில் வேலைகளுக்குப் பஞ்சமில்லை. எனினும் குடிப்பதற்காகச் சில ஆசாமிகள் இவ்வாறு பிறரை ஏமாற்றிப் பிழைக்கின்றனர் என்றும் இத்தகையர்களால் தான் குறிப்பிட்ட சமுதாயத்திற்கு தலை குனிவும் ஏற்படுகிறது என்பதைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கையில் எதுவும் நிலையற்றது. ஏமாற்றிப் பிழைப்பவர்கள் எல்லோரையும், எல்லா நாளும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது எந்தவோர் அதர்மமும் எல்லாக் காலத்துக்கும் நீடிக்கவே நீடிக்காது என்ற வாழ்வியல் தத்துவத்தையும் இக்கதையில் நிரூபித்துள்ளார் ஆசிரியர்.

இலவு காத்த கிளி

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று கன்னிமைப் பருவத்தில் காதல் வயப்படும் ஒரு இளம்பெண்ணின் சீரழிந்த வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகிறார். இக்கதையின் மூலம் வாழ்க்கையில் ஒழுக்கம் மிகவும் முக்கியமானது என்ற வாழ்வியல் சிந்தனையை வலியுறுத்துகிறார். பெற்றோர்களையே துச்சமெனத் தூக்கியெறிந்து விட்டுப் பேடிகளுடன் ஓடி வரும் பேதைப் பெண்களுக்கு இதுதான் கதி என்பது போன்று கதையைச் சோக முடிவுடனேயே முடித்துள்ளார். பிரச்சினைகளின் மொத்த கூட்டுருவமே மனிதர்கள் என்பது போல இக்கதையின் நாயகி, ஏராளமான பிரச்சினைகளைச் சந்திப்பதாகக் காட்டுகிறார். வருவது வழியில் தங்காது வந்தே தீரும். துன்பங்களின் சுமையைத் தோள் மாற்றிக் கொள்ள முடியாது என்பது போன்ற வாழ்வியல் சிந்தனைகளைக் காட்டியுள்ளார். மேலும் ஒற்றைப் பெற்றோர் குழந்தை வளர்ப்பு குறையுள்ளதாகவே இருக்கும் என்றும் பூர்வ ஜென்ம புண்ணிய பலன் படிதான் எல்லாமும் நடந்தேறும் அது தவிர்க்க முடியாத ஒன்று என்பது போன்ற சிந்தனைகளைக் கதையில் கூறியுள்ளார். இக்கதை நாயகி திறமையான அறிவுச் சுடர் இல்லை. எனினும் துணிவைத் துணையெனக் கொண்டு அவள் அனைத்துப் பிரச்சனைகளையும் சமாளித்து வாழ்வதைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆயினும் அவளால் அவள் காதல் கணவனையும், அன்பு மகனையும் திருத்த முடியவில்லை. அவர்களால் அவளுக்கு எந்த ஆதரவும் இறுதி வரை கிடைக்கவேயில்லை. கதையை யதார்த்தமான நிலையில் முடித்துள்ளார். கதைக்காக எப்படி வேண்டுமானாலும் சுபமாக முடித்திருக்கலாம். ஆனால் ஆசிரியர் அவ்வாறு செய்யவில்லை. அவளுடைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அவளுடைய தவறான கணவன் தேர்வே காரணமாகும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

தியாகச் செம்மல்

செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி. இதுவே இக்கதையின் கருவாகும் கொடுக்கின்ற

வள்ளல் பெருமக்கள் தங்களுக்கு எதுவும் வேண்டுமென்று பதுக்குதல் கிடையாது. எப்போதும் அச்சான்றோர் பெருமக்கள், ஏழைகளைக் கண்டாலே என்ன கொடுக்கலாம்? எவற்றைக் கொடுக்கலாம்? என்று மட்டுமே சிந்திப்பர். அவ்வாறே

சிங்கப்பூரில் டாக்டர்.இராமசாமி என்ற வள்ளல் ஒருவர் வாழ்;ந்த சம்பவத்தை தெளிந்த நீரோடைப் போன்று விளக்குகின்றார். ஏழை மக்களுக்கு இலவச வைத்தியம், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு பணம் கொடுத்தல், நலிந்த பத்திரிக்கைகளை ஏற்று நடத்துதல், நலிந்த கலைஞர்களுக்கு உதவி செய்தல் என தன்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்து வந்த ஒருவர், தான் இறந்த பிறகும் கூட தன் ஈமச் சடங்கைத் தவிர்த்து, அதற்கு ஆகும் செலவினைக் கூட ஏழைகளுக்குக் கொடுக்கக் கூறியுள்ளதை அழகான ஒரு கதையாகச் சித்தரித்துள்ளார்.

தூளியும் தொட்டிலும்

அழகான ஒரு தாய்மை உணர்வை வெளிப்படுத்தும் அருமையான சிறுகதை. தாய்மை உணர்வோடு தாய்ப்பாலும் விலையற்றது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார். குழந்தைகளுக்கு பணத்தைச் செலவு செய்து வாங்கும் ஆடம்பரத் தொட்டிலை விட அன்பும் அரவணைப்பும் உடைய தூளியே சிறந்தது என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். குழந்தைகள் பராமரிப்பில் அரவணைப்பே முக்கியமானது என்ற வாழ்வியல் சிந்தனையை இக்கதையில் தெளிவு படுத்தியுள்ளார்.

முடிவுரை

மு. தங்கராசன் அவர்கள் சிறந்த சிறுகதையாசிரியர் ஆவார். ஒரு சம்பவத்தை அல்லது ஒரு உணர்வை மட்டுமே கொண்டு சிறு கதைகளை மிக அழகாகப் படைத்துள்ளார். அவர் கதைத் தொகுப்பிற்கு வைத்துள்ள பெயர்களைப் போலவே கதைகள் அத்தனையும் மணக்கின்றன. யதார்த்த அமைப்புகளோடு கதைகள் படைக்கப் பட்டிருந்தாலும் அத்தனையும் வாழ்வியல் சிந்தனைகளைக் கொண்டு விளங்குகின்றன.

தியாகச் சுடர்கள்

ப. மகாலெட்சுமி
முதுகலை ஆசிரியர், முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

முன்னுரை

'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'புதிய கூண்டு' என்ற சிறுகதையும், தங்கராசனின் 'கற்பனை மலர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'விடியல்' என்ற சிறுகதையும் ஒப்பீடு செய்யப்பட்டு இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

தாய்மையின் தியாகங்கள்

'புதிய கூண்டு' கதையில் வரும் மீனாட்சியம்மாள் எனும் கதாப்பாத்திரம், 'விடியல்' சிறுகதையில் வரும் தெய்வானை என்ற கதாப்பாத்திரத்துடன் எவ்வாறு ஒன்றிப் போகின்றது என்று பார்க்கலாம். புதுமைப்பித்தனின் 'புதிய கூண்டு' சிறுகதையில் வரும் மீனாட்சி அம்மாள், தன மகன்களான அம்பியையும் கிட்டுவையும் தன் கடின உழைப்பினால் கல்லூரி வரைப் படிக்க வைத்து மகிழ்ந்திடும் அன்னையாய் விளங்குகின்றாள்.

குடும்ப வறுமையை அகற்றிக் கொள்ள அடுப்படியில் வெந்து தணிந்து தன் மகன்களான அம்பியையும் கிட்டுவையும் ஆங்கிலேயப் பாதிரியார்களின் சிறு உதவியுடன் கல்லூரிக் கல்வி கற்றிடப் பெரிதும் பாடுபடுகின்றாள்.

அதே போன்றே 'விடியல்' சிறுகதையிலும் தன் மகனைக் கல்வியில் சிறந்தவனாக்கிட அவனின் அப்பா ஆறுமுகம், அம்மா தெய்வாணையும் வறுமையின் பிடியில் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தன் உழைப்பினால்வரும்குறைவானவருமானத்தையும் அவனுக்காகச் செலவிட்டு, கல்வி பயிலச் செய்கின்றனர். எதிர்பாராத விதமாக ஒரு விபத்தில் தந்தை அகால மரணம் அடைந்திடவே, தெய்வாணை பல வீடுகளில் வீட்டு வேலை செய்து தன் மகனைப் படிக்க வைக்கிறாள். தன் மகனைப் பட்டதாரி ஆக்கி மகிழ்ந்திடவே பல கடன் சுமைகளை ஏற்று, அயராது உழைக்கின்றாள். தெய்வானையும் மீனாட்சி அம்மாளும்,

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்
தற்கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை"

எனும் குறளுக்கேற்ப வாழ்கின்றனர். ஆதவனைப் போன்றே அம்பியும் கிட்டுவும் படிப்பில் திறமைசாலிகள். தெய்வானையைப் போன்றே தன் மகன்களை அரசு அதிகாரிகளாக்கி மகிழ வேண்டும் என்பதே ஆசை... இதற்காக இந்த இரு தாய்மார்களும் வறுமையில் தம்மை மாய்த்துக் கொண்ட போதிலும், தம்மைத் தியாகச் சுடராக்கி அதில் தம் மகன்களை வெளியுலகத்திற்குச் சிறந்த மனிதர்களாகக் காட்டிட உழைத்துக் கொண்டே இருந்தனர். இது இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் நடுத்தரக் குடும்பத்தில் வாழும் அன்னையர்களின் நிலையோடு ஒன்றிப்போகின்றன என்றால் அது நிதர்சனம்...

இச்சிறுகதைகள் ஏதோ ஒரு வகையில் ஆங்கிலேயர்களுடன் தொடர்புடைய நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன எனலாம்.

குடும்பச் சூழலில் பெண்

அம்பியும், கிட்டுவும் பாதிரியார்களால் மதம் மாற்ற வசப்படுத்தப்படும் முயற்சிகளில் தோற்றுப்போன போதிலும், 'காதலுக்கு கண் இல்லை என்பர்'. ஆனால் காதல் சாதி மதமும் பார்ப்பதில்லை என்பதை உணர்ந்ததனால், கிட்டுவும் கிறிஸ்துவப் பெண்ணான ஜயாவை மணந்து, மதம் மாறிச் சென்று விடுகிறான்.

அதுபற்றி மீனாட்சி அம்மாளின் குடும்ப உறவினர்களால் விமர்சிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால், மீனாட்சி அம்மாளின் குடும்பத்தை ஊரைவிட்டே ஒதுக்கி வைத்துவிடுகின்றனர். ஆகையால், துயரம் மோலோங்கி உயிர் பிரியும் பெரும் போராட்டச் சூழ்நிலை மீனாட்சிஅம்மாளுக்கு உருவாகிறது. கிட்டுவின் மனைவி ஜயா ஒரு கிறிஸ்துவ பெண்ணாக இருந்த போதிலும், மனிதத் தன்மையுடன் மீனாட்சி அம்மாளின் மரணப்படுக்கையில் கிட்டுவைக் கொடுத்த புனிதமான மீனாட்சி அம்மாளின் சரீரத்தை ஏந்திப் பிடிக்கின்றாள். ஏற்றத்தாழ்வுகள் மனிதர்களிடம் தான் என்பதை ஜெயா தனது செய்கையின் மூலம் உணர்த்திச் செல்கிறாள்.

'விடியல்' சிறுகதையில் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்திடும் தெய்வானையின் செயல், அவளுக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது. தானும் தன் கணவரும் வயித்தைக்கட்டி வாங்கிய கூரை வீட்டில், அவர்கள் இருவரும் மனநிறைவாக வாழ்வார்கள் என்று நிம்மதியுறும் சூழ்நிலையில், நோயின் பிடியில் பாதிக்கப்பட்டு மரணமடைகிறாள்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

என்ற குறள் சொல்லும் கருத்தை மறந்த மருமகள் மாதவியோ, ஆடம்பரங்களின் மொத்த உருவாக மாறி, ஆதவனின் பொருளாதாரத்திற்கு மீறிய செலவினால், அந்தக் கூரையை அரண்மனைக் கோபுரமாக மாற்றுகிறாள். இதனால், அதிக கடன் பாதிப்பிற்கு உள்ளாகி, மன நிம்மதி இழந்து நோய்வாய்ப்படுகின்றான். ஆதவனின் நண்பனான பழனிச்சாமியின் மனைவி பரிமளாவின் சிக்கனத்தினால், அவர்கள் மனநிறைவான வாழ்வு வாழ்கின்றனர். இறுதியில், பரிமளா ஆதவன் குடும்பத்திற்கு உதவ முன்வரவே, புதிய தன்னம்பிக்கையோடு உடல்நலம் மீண்டு வருகின்றான். மாதவியோ தன் செயலை எண்ணித் தலைகுனிகின்றாள். இந்த இரண்டு சிறுகதைகளும் இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறன. இவற்றில் சாதி மதப் பாகுபாடு என்பது ஏராளம் பொதுவாக வறுமையில் வாழ்பவர்கள் என்றாலே ஏனோ ஏளனம் தான்... தாய் என்றாலே தியாகத்தின் மறு உருவம்தான். அந்த வகையில் இளம் வயதிலேயே கணவனை இழந்து கைம்பெண்ணாக தன் இருமகன்களையும் கஷ்டப்பட்டு கண்ணியமாய் வளர்ப்பதே கடமையாய் கொண்டு வாழ்ந்து வரும் மீனாட்சி அம்மாள், பல வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்து தன் மகளை எப்படியாவது கல்லூரி படிப்பினைப் படிக்க வைத்துவிட வேண்டும் என்ற கனவோடு வாழும் தெய்வாணை போன்ற இவ்விரு தாய்களைப் போலவே இன்னும் எண்ணற்ற தாய்மார்கள் இந்தச் சமுதாயத்தில் வாழ்ந்தும் மறைந்தும் மடிந்தும் கொண்டு தான் இருக்கின்றனர்.

சமுதாயச் சூழல்

இன்றைய சமுதாய நிலையில் நடுத்தரக் குடும்பத்தில் வாழும் அன்னையர்களின் நிலையோடு இச்சிறுகதையில் வரும் மீனாட்சி அம்மாள், தெய்வாணைக் கதாப்பாத்திரங்கள் ஒன்றிப்போகின்றன. தன்னலம் பாராது தன் பிள்ளைக்காக உழைத்துத் தேய்ந்து விடும் அந்த தாயைப் பாதுகாத்து, பாசம் ஊட்டிட மறந்து விடுகின்றது பெரும்பாலான இன்றைய சமுதாயம். ஆனால், தன் பெற்றோரின் பாசத்தையும் தியாகத்தையும் உணர்ந்து, புரிந்து கொண்டு பாசத்தோடும் நேசத்தோடும் பாதுகாக்க எண்ணும் ஆதவன் ,அம்பி போன்றோரும் இன்றைய சமுதாயத்தில் உள்ளனர் என்பதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. தெய்வாணை, மீனாட்சி அம்மாள் இருவரின் கதாபாத்திரம் இன்றளவும் நம் கண் முன்னால் நடனமாடி, நடமாடும் பிணங்களாகக் கண்ணீரை வர வழைக்கின்றன. அன்றைய சமுதாய சூழ்நிலையில் இருந்து இன்று வரை இந்த தாய்மார்களின் நிலை மாறாமல் இருப்பது பெரும் துயரமே... தன் அன்னையை மறந்து சுயநலத்திற்காகக் காதல் திருமணம் செய்து கொள்ளும் கிட்டுவைப் போன்ற எண்ணற்றோர் இன்றைய சூழலிலும் உள்ளனர்.

ஆடம்பரமான சூழ்நிலை

இன்று சமுதாய சூழலில் பிறரின் பார்வைக்கு ஆடம்பரமாக வாழும் முறை பெரும்பாலான குடும்பப் பெண்களினால் பின்பற்றபட்டு வருகிறது என்றால் நம்மால் அது மறுக்க முடியாத உண்மையே... ஆதவனின் மனைவியின் போக்கும் அவ்வாறே இச்சிறுகதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆதவனின் வருமானத்திற்கு மீறி, அவள்வீட்டை அலங்கரிப்பதும் ஆடம்பரமான பொருட்களை வாங்கிக் குவிப்பதும், தன் வசதி வாய்ப்பின் பெருமைதனைப் பிறர் பேசும் வகையில் விருந்தளிப்பதும்... ஆடை ஆபரண அலங்காரங்களில் திளைப்பதும் என, அவளின் ஆடம்பரத்தால் ஆதவன் கடன் சுமைகளில் மூழ்கிப் போகின்றான். இன்றைய நாகரிகச் சமுதாயப் பின்னணியில் பல குடும்பங்கள் இவ்வாறு தான் சீர் கேட்டு வருகின்றன. மாறாக ஒவ்வொரு பெண்ணும் தன் குடும்ப சூழல் உணர்ந்து தன் கணவரின் வருமானதிற்கேற்பக் குடும்பத்தை நடத்தியும், புது வருமானத்திற்கு வழிவகை செய்து கொண்டும் இன்றைய சமுதாயத்தில் பல பெண்கள் இருந்து வருகின்றனர். இதனால் பல குடும்பங்கள் வறுமையின் பிடியில் இருந்து மீண்டு மகிழ்ச்சியாக வாழ்கின்றன...

ஆடம்பரம் என்பது இன்றைய நாகரிகச் சமுதாயத்தினைப் பிடித்து ஆட்டிடும் ஓர் உயிர்க் கொள்ளும் நோயாகும். இதற்கு மருந்து என்பது போதும் என்ற மனநிறைவான வாழ்க்கைதான். மாதவி, பரிமளா என்ற இவ்விரு பெண்களின் நிலையும் இன்றைய குடும்பங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பெற்றோரைக் காக்கும் பிள்ளைகள்

இன்று முதியோர் இல்லங்களே பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறன. பிள்ளைகளால் கைவிடப்பட்ட தாய், தந்தையரின் கண்ணீர் அங்கே மௌனமாக உயிரை மாய்த்து கொண்டு வருகின்றது. இந்நிலைதனை மாற்றும் போக்கில் 'புதிய கூண்டு' சிறுகதையில் வரும் அம்பியின் கதாபாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது. தன் அண்ணன் கிட்டு காதல் திருமணம் செய்து கொண்டு, தன் தாயைக் கைவிட்டு சென்ற நிலையிலும், தான் அவளை விட்டுச்செல்லாது, சமுதாயம் தந்த இன்னல்களையும் அவமரியாதைகளையும் தாங்கிக் கொண்டு, தன் தாயைக் காப்பற்றும் செயலானது இன்றைய இளைஞர்களை வழி நடத்த வகை செய்யும் சிறந்த படைப்பாகத் திகழ்கிறது. 'விடியல்' சிறுகதையில் வரும் ஆதவன், தன் அன்னையைக் காத்திட எண்ணிடும் போது, நிகழும் அவளின் மரணம் நம் கண்களில் உதிரம் வடிக்க வைத்திடும் நிகழ்வு... தாய் தந்தையர் இருக்கும் பொழுது அவர்களின் அருமையையும், இறந்த பின்பு அவர்களின் தியாகங்களையும் உணராமல் இருப்பதே இந்நிலைக்கு அடிப்படைக் காரணம்.

மாமியார், மருமகள்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணிதகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறள் வழி வாழும் பரிமளாவின் மாமியார் பாத்திரப்படைப்பு இங்கே மிகவும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. தன் மருமகளை மகள் போன்று பாவிக்கும் வழக்கம் இன்றைய சமுதாய சூழ்நிலையில் இருந்தால், பல பெண்களின் வரதட்சணைக் கொடுமைகளும், மரணங்களும் தடுக்கப்படும். கிட்டு தன் தாயுடன் தம்பியும் வேலையின்றி கஷ்டப்படும் செய்தி கேட்டு, பணம் அனுப்புகிறான். ஆனால், அம்பி அதைத் திருப்பி அனுப்பி விடுகிறான். இச்செயலால் வருத்தப்பட்ட கிட்டு தாயைப் பார்த்துவிட்டாவது வரலாம் என்று மனைவி ஜயாவுடன் செல்கின்றான். அப்போது அண்ணன் தம்பி இருவரிடையே ஏற்பட்டிடும் வாக்கு வாதத்தால், மனம் கலங்கிய மீனாட்சி அம்மாள் மயங்கி விழவே, ஜயா தன் மாமியாரைத் தாங்கிப்பிடிகின்றாள். அவளின் அன்னையைப் போன்றே எண்ணி இறுதியில் கண்ணீர் வடிக்கும் நிகழ்வு, நம் நெஞ்சினை உறுத்துகின்றது. இது போன்ற மாமியார் மருமகள்கள் இருப்பது ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு அடிப்படையாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

முடிவுரை

இவ்வாறு, தங்கராசனை 'விடியல்' சிறுகதையும் புதுமைப்பித்தனின் 'புதிய கூண்டு' சிறுகதையும் தாய்மையின் பெருமையை விளக்கும் தியாகச் செயல்களை எடுத்துரைக்கின்றன. மேலும், குடும்ப உறவுகளின் உன்னத நிகழ்வுகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. தலைவனின் வெற்றி தோல்விக்கு துணைவியரே காரணம் என்பதையும் இச்சிறுகதைகள் விளக்குகின்றன.

‘சிந்தனைப் பூக்கள்’ சிறுகதைத் தொகுப்பில் இழையோடும் புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள்

நா. மணிகண்டபிரபு

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்

அமெரிக்கன் கல்லூரி, மதுரை

ஆய்வுச் சுருக்கம்

தொடக்ககாலந்தொட்டு மனிதர்கள் மற்றும் விலங்குகள் இடம் விட்டு இடம், பெயர்ந்து கொண்டுதான் வருகின்றனர். ஆனால், அவ்வாறு பெயர்வதற்கான காரணங்கள்தான் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப மாறிக்கொண்டே இருக்கின்றன. நவீன காலத்தில் பிரிட்டிஷாரின் ஆட்சியில் ஏற்பட்ட காலனி ஆதிக்க ஒடுக்குமுறை, இரு உலகப்போர்கள், தாது வருஷப் பஞ்சம், பேரிடர், இயற்கைச்சீற்றம் போன்ற காரணங்களுக்காகப் புலம்பெயர்வானது நிகழ்ந்து வந்தது. இக்காலகட்டத்தில்தான் வரலாற்றில், தமிழர்களின் புலம்பெயர்வும் அதிக அளவில் நிகழ்ந்துள்ளது. மொரீசியஸ், பிஜி ஆஸ்திரேலியா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு தமிழர்கள் அடிமைகளாகவும், கூலிகளாகவும் புலம்பெயர்ந்தனர். மேலும், சிலர் மலேசியா, சிங்கப்பூர், பர்மா முதலான நாடுகளுக்குக் கங்காணிகளால் தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர் தோட்டங்களிலும் கூலிகளாக அனுப்பப்பட்டனர். அங்கு அவர்களின் வாழ்நிலை என்பது மிகவும் நலிவடைந்ததாகவே அமைந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் கூலித்தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர். சிலர் தங்களின் தாயகம் திரும்பினர். பலர் தங்கள் வாழ்நிலையினை இழந்து, அப்புகலிட நாட்டிலேயே குடியேறினர். பின்னர் தாங்கள் அக்காலகட்டத்தில் அனுபவித்த இன்னல்களையும், வலிகளையும், வேதனைகளையும் உலகிற்கு வெளிப்படுத்த, சிறுபத்திரிகைகள், கவிதைகள், வாய்மொழிப்பாடல்கள் போன்ற வடிவங்களில், இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தத் தொடங்கினர். இதன் முயற்சியாகவே தமிழ் இலக்கியங்களில் ‘புலம்பெயர் இலக்கியம்’ என்னும் புதுவகை இலக்கியப்பரப்பு உருவாகியது. புலம்பெயர் இலக்கியப் பனுவல்களைப் பெரும்பாலும் ‘புலம்பல் இலக்கியம்’ என்றே இலக்கியவாதிகள் குறிப்பிட்டுவருகின்றனர். ஏனென்றால், அவ்வகை இலக்கியங்களில் அகதியாக்கப்பட்டதன் துயரம், புகலிடம் தேடிப் பயணப்பட்ட அனுபவம், புகலிட நாட்டில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் அவ்விலக்கியங்களின் மையப்பொருண்மையாக அமைகிறது. இதன் வெளிப்பாடாக, சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஆஸ்திரேலியா முதலான நாடுகளில் இருந்து புலம்பெயர் இலக்கியங்கள் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வகை இலக்கியங்கள் மனிதனின் அகநிலை நிகழ்வுகள் மற்றும் புறநிலை நிகழ்வுகளின் ஒரு பதிவாகவே படைக்கப்படுகின்றன. இதன்படி, சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள், புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலைப் பதிவு செய்துவருகின்றன. அந்த வகையில், அந்நாட்டின் முன்னோடி எழுத்தாளரான மு.தங்கராசன் அவர்கள், தாம் வாழும் காலத்தின் வாழ்வியலை மிகவும் நேர்த்தியாகத் தம் சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார். அவரது சிறுகதைகள்வழி, சிங்கப்பூரில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் நோக்கம் ஆகும்.

Summary of the Study

From the beginning, humans and animals have been moving from place to place. But the reasons for such a shift are changing from time to time. Colonial oppression under British rule in modern times, the two world wars, the ore year famine, the disaster, the natural calamity caused the emigration. It was during this period that the emigration of Tamils took place on a large scale throughout history. Tamils migrated to Mauritius, Fiji, Australia and Europe as slaves and mercenaries. And some were sent to Malaysia, Singapore, Burma, etc., by the Kangani as hire in the tea estates and rubber estates. Their living conditions there were very poor. Mercenaries were liberated by a regime change after World War II. Some returned to their homeland. Many lost their livelihoods and settled in the country. Later, they began to express to the world the sufferings, pains and sufferings they experienced at that time, in the form of pamphlets, poems, and oral literature. As a result of this, a new genre of literature called 'Diaspora Literature' was formed in Tamil literature. Diaspora Literary Works Mostly ~ Lamentation Literature | Literary scholars refer to it. This is because such literature is central to the tragedy of being a refugee, the experience of asylum seekers, and the problems faced in a refugee country. As a result, diaspora literature from Singapore, Malaysia, Canada and Australia was introduced to Tamil. This type of literature is created as a record of the subjective and objective events of man. Accordingly, Singapore Tamil short stories are recording the biographies of diaspora Tamils. In that sense, M. Thangarasan, the country's foremost writer, has very neatly recorded the biographies of his time in his short stories. Through his short stories, the Tamil people living in exile in Singapore; The purpose of this article is to examine biological conditions.

திறவுச்சொற்கள் (Key Words)

புலம்பெயர் (DiasPora), புகலிடம் (Refuge), புகலிட நாட்டுப்பற்று (Refuge Patriotic), அகநிலை (Subjective), புறநிலை (Objectivity).

முன்னுரை

தமிழ்மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொட்டு, இன்றுவரை அதன் வலிமை குன்றாமல், பிற மொழி களுக்கிடையே செவ்வியல் மொழியாக நிலைத்து நிற்கிறது. ஏனென்றால், தமிழ் இலக்கியங்களில், மரபு இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் என புதுப்புது இலக்கிய வகைமைகள் மட்டுமல்லாது, பல கண்டம்விட்டு வெவ்வேறு நாடுகளின் அகப், புறச்சூழலை உள்வாங்கி, அந்நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தத் தமிழ் எழுத்தாளர்களால், தமிழில் இலக்கியங்கள் படைக்கப்படுவதே இதன் காரணமாகும். குறிப்பாக, அண்டை நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், தமிழ் இலக்கியத்திற்கு மேலும் வலு சேர்த்திருக்கின்றன எனலாம். குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உதாரணமாக, சிங்கப்பூரில் தமிழ் இலக்கியம் என்பது சிங்கப்பூரின் வரலாற்றுப் பின்னணியையும், அந்நாட்டின் மக்களையும் சித்தரிக்கும் வகையிலும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் இலக்கியங்கள் எழுதிக் கொண்டே வருகின்றனர். இதனால் புதுப்புது சொற்களையும் பாடுபொருட்களையும் தமிழ் மொழிக்கு அறிமுகப்படுத்துகின்றனர். அந்தவகையில், சிங்கப்பூரின் முன்னோடி எழுத்தாளரான மு.தங்கராசன் அவர்கள் கவிதை, சிறுகதை,

கட்டுரை, நாடகம், நாட்டுப்புறவியல் ஆகிய இலக்கிய வகைமைகளில் படைப்புகள் படைத்துள்ளார். அவற்றில் சிங்கப்பூர்வாழ் தமிழர்களின் புலம்பெயர் துயரங்கள், இவரது படைப்புகளில் இல்லாவிடினும் புலம்பெயர்ந்த மக்களைப் பற்றியான வாழ்வியல் நிலைப்பாடுகள் இடம்பெறுகின்றன. இதனை மையமிட்டு, இவரது சிறுகதை நூல்களில் ஒன்றான 'சிந்தனைப்பூக்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளில் காணலாகும் தமிழர்களின் வாழ்வியல்நிலை குறித்துக் காண்பதே இவ்வாய்வின் முன்னுரையாக அமைகிறது.

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்

உரைநடை இலக்கிய வகையில், புனைவிலக்கியமே இன்று பலராலும் புனையப்பட்டும் பெரும்பாலோரால் வாசிக்கப்பட்டும் வருகிறது. அந்தப் புனைவிலக்கியங்கியங்களில் சிறுகதையும் கவிதையும் மட்டுமே தனது ஆளுமைகளை விரிவுப்படுத்திக் கொண்டு ஆழமாகவும் அகலமாகவும் இன்னும் புதுப்புது கிளைகளை வேரூன்றி நமக்கு அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. "ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சியின்போது, அவர்களால் தொழிலாளர்களாகத் தென் கிழக்காசிய நாடுகளில் ஒன்றான, அன்றைய மலாயாவிற்கும் சிங்கப்பூருக்கும் தென்னிந்தியத் தமிழர்கள் தினக்கூலிகளாகக் கொண்டு வரப்பட்டு, தோட்டப் புறங்களிலும் சாலை மற்றும் இரயில்பாதை நிர்மாணிப்புகளிலும் வேலைக்கமர்த்தப்பட்டனர். அந்தத் தலைமுறையின் வாரிசுகளான இரண்டாம், மூன்றாம், நான்காம் தலைமுறையினரின் படைப்புகளைத்தான், இன்று மலேசியா மற்றும் சிங்கப்பூர் வாழ்வியலைச் சித்தரிக்கும் புனைவிலக்கியங்களாக அடையாளம் காட்டப்பட்டு வருகின்றன."[1] என்று முன்னோடி எழுத்தாளரான நா.கோவிந்தசாமி குறிப்பிடுகிறார். அவ்வகையில், சிங்கப்பூரின் புனைவிலக்கியங்களில் ஒன்றான சிறுகதை இலக்கியங்களில், குறிப்பாக, மு.தங்கராசனின் சிறுகதைகள், சிங்கப்பூர் வாழ்வியலை யாங்ஙனம் சித்தரிக்கின்றது என்பதைக் காணலாம்.

தமிழ்ச் சிறுகதைகளைப் பற்றிய ஒரு முன்னோட்டப் பார்வை

தமிழில் சிறுகதை வடிவத்திற்குப் பாரதியாரின் 'ரயில்வே ஸ்தானம்' சிறுகதையே முதன்மையானது எனவும், ஆனால் சிறுகதை வடிவம் மிகவும் சரியாக அமைந்தது வ.வே.சு. ஐயர் எழுதிய, 'மங்கையற்கரசியின் காதல்' என்ற தொகுப்பிலுள்ள 'குளத்தங்கரை அரசமரம்' என்ற சிறுகதையே என்று பல இலக்கிய ஆய்வாளர்கள் முன்னுரைத்துள்ளனர். அதன் பின்னர், புதுமைப்பித்தனின் கதையாக்கம் நவீனப் படைப்பாக்கத்திற்கு வித்திட்டு, இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களால் தமிழியல் படைப்புகள் பெருகிவருகின்றன. தமிழ் நாட்டை அடுத்து மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளுடனும், தமிழர் மரபின் கூறுகளுடனும், விழுமியங்களுடனும் சிறுகதைகள் புனையப்பட்டு வருகின்றன.

இன்றைய சிங்கப்பூரின் முன்னோடித் தலைமுறை எழுத்தாளர்களில் 'மு.தங்கராசனார்' பெறும் இடம்

இலக்கியம் மனிதனிடமிருந்தும் அவனின் வாழ்க்கையிலிருந்தும் தோன்றியதாகும். மனித வாழ்வில் அவன் சார்ந்த சமூகத்தின், தொடர்பின்

ஒட்டுமொத்த அனுபவத்தின் பாய்ச்சலாகவே படைப்பிலக்கியங்கள் உருவாகின்றன. இத்தகைய படைப்பிலக்கியங்கள் மனிதனின் அகநிலை நிகழ்வுகள் மற்றும் புறநிலை நிகழ்வுகளின் ஒரு பதிவாகவே அங்கம் வகிக்கின்றன. இக்கூற்றின்படி, சிங்கப்பூர்ச் சிறுகதைகள் இத்தகைய அகநிலை மற்றும் புறநிலை நடப்புகளைப் பதிவு செய்திருக்கின்றன. சிங்கப்பூரின் முன்னோடித் தலைமுறை எழுத்தாளர்களான மு.சு.குருசாமி, சே.வே.சண்முகம், மு.தங்கராசு, நா. கோவிந்தசாமி, ஜே.எம்.சாலி, மா. இளங்கண்ணன், பி. கிருஷ்ணன், ந.பழநிவேலு, சிங்கை தமிழ்ச்செல்வம், சங்கரி இராமனுஜம், கண்ணம்மா, ஏ.பி.சண்முகம், இராம. கண்ணபிரான், பொன்.சுந்தரராசு எனப் பலர் அவர்கள் வாழும் காலத்தின் வாழ்வியலை மிகவும் நேர்த்தியாகத் தங்களின் சிறுகதைகளில் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில், சிங்கப்பூரின் முன்னோடி எழுத்தாளரான 'மு.தங்கராசன்' அவர்கள்தம் படைப்புகளின் வழி, தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்தவர் ஆவார்.

இந்தியாவில் பிறந்த சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசன், மூன்று வயதில் ஒருங்கிணைந்த மலாயாவிற்குப் புலம்பெயர்ந்தவர். ஜப்பானியரின் ஆளுகை, வெள்ளையரின் காலனித்துவம், ஒன்றுபட்ட மலாயா என்று, மூன்று ஆட்சிக் காலக் கட்டங்களையும் பார்த்தவர். சிங்கப்பூரின் வளர்ச்சியைப் படிப்படியாகக் கண்டவர். 1960களில் இவர், சிங்கப்பூரில் தமது ஆசிரியர் பணியினைத் தொடங்கினார். ஆசிரியர், எழுத்தாளர், சமூகத் தொண்டர் எனப் பன்முகங்கள் இவருக்குண்டு. ஆசிரியர், பள்ளி முதல்வர், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட அதிகாரி எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மேலும், 'தமிழ்வேள் நாடக மன்றம்' என்ற அமைப்பை நிறுவியும் நடத்தி வந்தவர். கவிதைகள், கட்டுரைகள், நாடகத் தொகுப்பு முயற்சிகள், சிறுகதைகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் வளங்கள் என, 40 நூல்களைப் படைத்துள்ளார். மு.தங்கராசன் புலம்பெயர் எழுத்தாளர் என்று கூறினாலும் இவரது படைப்புகள் சிங்கப்பூர் தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்வியலை மையமிட்டே அமைகிறது. 'கம்போங் கிளாப்பா', 'ஜொகூர் பாரு', 'சீலாட் தோட்டம்', 'புக்கிட் தீமா ரோடு' முதலான இடங்களில் வாழும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அனுபவம், காதல் வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை போன்ற பொருண்மைகளே இவரது சிறுகதைகளிலும் கவிதைகளிலும் காணக்கிடைக்கின்றன. 2013 ஆம் ஆண்டில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, தமிழாசிரியர் சங்கம், தமிழ் முரசு ஆகிய மூன்றும் இணைந்து இவருக்கு 'வாழ்நாள் நல்லாசிரியர் விருது' கொடுத்து, இவரைச் சிறப்பித்தமையென்பது குறிப்பிடத்தக்கது.

புகலிட நாட்டுப்பற்றினை உள்வாங்கி யுள்ள 'எண்ணிப்பார்' சிறுகதை

மனிதராகப் பிறக்கும் எவ்வொருவரும், தம் தாய்நாட்டின் மீது பற்றுக்கொண்டவராக இருப்பர். உலகின் எந்தவொரு மூலைக்குச் சென்றாலும் தாய்நாட்டையும் தாம் பிறந்த மண்ணையும் மனதில் நினைத்துக் கொண்டே இருப்பர். அந்தவகையில் புலம்பெயர் தொழிலாளர்கள் அந்நிய நாட்டிற்குப் புலம்பெயர்ந்து, புகலிட நாட்டில் தன்

வாழ்வைக் கழித்துக் கொண்டு வந்தாலும் தானம் பிறந்த நாட்டின் மீது என்றும் பற்றுக்கொண்டவராகவே இருக்கின்றனர். ஆனால் ஒருசிலர் மட்டுமே, தாம் புலம்பெயர்ந்து சென்ற நாட்டின் மீது கொண்டவர்களாகவும் உள்ளனர். அந்த வகையில் மு.தங்கராசனின் 'எண்ணிப்பார்' சிறுகதை இதற்குச் சிறந்த உதாரணமாக இருக்கிறது.

எண்ணிப்பார் என்கிற சிறுகதையில் இடம்பெறுகிற புலம்பெயர்ந்து சிங்கப்பூரில் ஒரு தமிழர், இவர் தன் மகன் சிங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் போதைப் பொருள் கடத்துகிறான் என்பதை அறிந்தவுடன், சொந்த மகன் என்றும் பாராது, சிறுவயதில் தனக்குப் புகலிடம் கொடுத்த, சிங்கப்பூர் நாட்டின்மீது கொண்டுள்ளப் பற்றின் காரணமாக, நீதிமன்றத்தில் அவனுக்குத் தூக்குத்தண்டனை நபராக ஆகிவிடுகிறார். இதனை தன் உள்ளடக்கம் பொருண்மையாக்க கொண்டுள்ள கதைதான் அவர் நினைத்தார்போல, சிங்கப்பூரின் அரசாங்க அதிகாரியாகப் பணி செய்து வருகிறார். இரண்டாவது மகன் 'அன்பானந்தன்', தனக்குப் படிப்பு ஏறவில்லை என்று முடிவெடுத்து, லாரி டிரைவராகப் பணியாற்றி வருகிறார். இருப்பினும் இவ்விருவரும் குணத்தில் சிறந்தவர்கள் தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் மகேந்திரன். திருமண வயதை எட்டியதும் இவ்வூர்க் கலாச்சாரத்தின்படி, பொறுப்பை அவர்களிடமே விட்டுவிட்டு நிம்மதியடைகிறார். ஒருநாள் இரவு மகேந்திரனார் தனிமையில் இருக்கும்போது, இருவரும் வெளியூர் வேலை என்று கூறிச்சென்றுவிடுகின்றனர். அவர்கள் இருவரும் வீட்டில் இல்லாத அச்சமயம், இரவு உணவினை அருந்தி விட்டு, தனியே தன் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் இரண்டாவது மகன் அன்பானந்தன் அறையில், யாரோ வந்து செல்லும் சத்தம் எழுகிறது என்று எண்ணி, மாடியில் உள்ள அவன் அறைக்குச் சென்றுப் பார்க்கிறார். அறையின் கதவு திறக்கப்பட்டு உள்ளதை கண்டு திடுக்கிட்டு, உள்ளே நுழைகிறார். அப்பொழுதுதான், தன் மகன் டிரைவராக பணியாற்றிய போதும், கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகளை கொண்டு வந்து கொடுக்கும் காரணம் அவருக்குப் புரியவந்தது. இளையமகன் அன்பானந்தன், வீட்டிலேயே போதைப்பொருள் விற்கிறான் என்பதை அறிந்து மனமுடைந்து செய்வதறியாது பதட்டம் அடைந்தவுடன், சிங்கப்பூரின் போதைப்பொருள் தடுப்புப்பிரிவைத் தொடர்பு கொண்டு, தன் சொந்த மகன் என்று கூட பார்க்காமல், அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்து, அவனுக்கு நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனையும் வாங்கிக்கொடுக்கிறார்.

நீதிபதிகளின் கேள்விகளுக்கு மகேந்திரனார், "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து சுமந்து பெற்றெடுத்து, பாலூட்டி – சீராட்டி அல்லும் பகலும் அயராது கண் விழிப்போடு காத்து வளர்த்து காளைப் பருவத்தில் தன் மகனைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த ஒரு தாய்... தன்னுடைய மகன் ஒரு 'போதைப் பொருள் புழங்கியாக – வழங்கியாக இருக்கின்றான்' என்று தெரிந்தவுடன் சற்றும் தயங்காது போலீசுக்கு அறிவித்து அவனைக் கழுவிலேற்றும் காட்சியைக் கலங்காமால் பெருமிதத்தோடு பார்த்து மாண்டாள்...!

அத்தகைய 'தியாகத் தாயார்' வாழும் பெருமைக்குரிய சிங்கைத் திருநாட்டில் என்னுடைய இந்தச் செயல் மிகவும் சாதாரணம்"[3] என்று, சிறிதும் கலக்கமின்றி மனோதிடத்துடன் அரசு தரப்பினரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

சிங்கப்பூரில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தாலும் தன் மகன், போதைப்பொருள் கடத்துபவனாக உள்ளான் என்பதை அறிந்தவுடன் பாசத்திற்கும் அன்பிற்கும் இடம் கொடுக்காமல் தனக்கு அடைக்கலம் கொடுத்த புகலிட நாட்டின் மேல் பற்றுக் கொண்டவராக இருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எனவே சிங்கப்பூர்வாழ் தமிழர்கள், தங்களது தாய் நாட்டின்மீது பற்றுக் கொண்டவர்களாக இருந்தாலும், அதே வேளையில் தாங்கள் வாழும் நாட்டின் மீதும் பற்று உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதனை ஆசிரியர் மு.தங்கராசன் 'எண்ணிப்பார்' சிறுகதைவழி நமக்கு உணர்த்துகிறார்.

'சிந்தனைப் பூக்கள்' சிறுகதைத் தொகுதி பற்றியான மதிப்புரை

1988ஆம் ஆண்டு வெளிவந்த மு.தங்கராசனின் 'சிந்தனைப்பூக்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் எண்ணிப்பார், முத்தப்பா, காதல் மூலிகை, கசந்த வாழ்க்கை, ஓடுகாலி, உலர்ந்த உதடுகள், பிள்ளையோ பிள்ளை, விட்டில்பூச்சி, இதயத்துடிப்பு, இதயராகம் ஆகிய 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்து கதைகளிலும் ஆசிரியர் கதையின் முன் சுருக்கத்தை நான்கு வரிகளில், குறிப்பாக எடுத்துச் செல்வதை காணலாம். கதையின் சாரத்தைப் பழமொழி வாயிலாகக் காட்டி, அதன் காரணத்தை கதையின் உச்சத்தில் காணமுடிகிறது. 'எண்ணிப்பார்' என்னும் முதல் சிறுகதையில் இதன் சாயலை காணமுடியும். மொழிநடை என்று பார்க்கும்பொழுது, "டிரிங்... டிரிங்! தொலைபேசி அலறியது."[4] என்றும், – "'தொபுகடீர்' சத்தம் கேட்டது."[5] என்றும், "'சடக்..! சடக்..!' அவரின் செருப்பு ஒலியோடு, 'படக்..! படக்..!' என்று அவரது நெஞ்சத் துடிப்பு போட்டி போட்டது"[6] போன்ற ஓசைகளை அதன் அமைப்பிலேயே பதிவுசெய்வதன் வாயிலாக, வெகுசன மக்களைக் கவரும் வகையிலும், "முருகன், சாந்தி முகூர்த்தத்தின் போது, அவனது மனநிலை நண்பரின் கட்டாயத்திற்காக, பார்த்தத் திரைப் படத்தையே, மூன்றாவது முறையாக பார்க்கச் செல்லும் அலட்சியம் இருந்தது"[7] என்று பொருத்தமான உவமைகளும் காட்சிப்படுவதை இவரது கதைகளில் காணமுடிகிறது.

பொதுவாக, எழுத்தாளர்கள் தம் சிறுகதைத் தொகுப்பினை வெளியிடும்போது, அத்தொகுதியில் உள்ள ஏதேனும் ஒரு சிறுகதையின் தலைப்பையே அந்நூலின் முதன்மைத் தலைப்பாக அமைப்பர். ஆனால் இவரது சிறுகதைத் தொகுதிகளின் தலைப்புகள், இத்தொகுதியில் இடம்பெறாத பெயராகவே உள்ளது. தங்கராசன் அவர்கள், தமிழ்மொழி மீதும், பூக்கள் மீதும் மிகவும் ஈர்ப்புக் கொண்டவர்போலும். அவரது சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், நாடகங்கள், கட்டுரைகள், நாட்டுப்புறவியல் ஆகிய அனைத்து நூல்களின் தலைப்புகளும் மலரின் பெயரை மையமிட்டே அமைவது இவரது படைப்புகளின் தனிச்சிறப்பாக

அமைகிறது. உதாரணமாக மலர்க்கூடை, சிந்தனைப்பூக்கள், நித்திலப்பூக்கள், மலர்ச் செண்டு, மலர்க்கொத்து, சூரியகாந்தி, அமுதத்தமிழ், தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றெல்லாம் பெயர்கள் சூட்டி இருப்பதை காணமுடிகிறது.

ஒருங்கிணைந்த மலேசிய, சிங்கப்பூர் காலங்களில் அந்நாட்டிற்குப் புலம்பெயர்ந்து, சிங்கப்பூரிலேயே தன் இறுதிநாள் வரை எழுத்துப் பணியைத் தொடர்ந்துவந்த தங்கராசனின் படைப்புகளில், அங்கு வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் சூழலை, இலக்கிய நயத்தோடும் புனைவோடும் எடுத்துக்காட்டியுள்ளார். இவரது கதைகளில் தமிழர்களின் அன்றாட வாழ்வியல் சூழல் மட்டுமே எடுத்தாளப்பட்டுள்ளது. பிற நாட்டினரின் கலப்புகள் பற்றிய பதிவுகள் காணக் கிடைக்கவில்லை. அவ்வாறு இடம்பெற்றிருந்தால், அவையே முழுமையான அயல்நாட்டு சூழலை உள்வாங்கியுள்ளது என்று கூறமுடியும். தமிழ்பேசும் மக்களை மட்டுமே மையமிட்டு செல்வதால், தமிழ் நிலச்சூழலில் எழும் புனைகதைகள் என்ற எண்ணம், வாசகர்களிடையே எழுகிறது. “சிங்கப்பூர் தமிழர்கள், புகலிட நாட்டினருடன் சமூக உறவு கொள்ளாமல் தனித்தீவாக வாழ்ந்து விட முடியாது என்றும், அவன் வாழ்வில் கலப்பவர் புனைகதைகளிலும் வரலாம்; வர வேண்டும். அப்போதுதான் எதார்த்தமாக இருக்க முடியும்”[8] என்று நா.பார்த்தசாரதி அவர்கள் இந்நூலின் அணிந்துரைப் பகுதியில் கூறுகிறார்.

முடிவுரை (Conclusion)

மு.தங்கராசன் எழுதிய ‘சிந்தனைப் பூக்கள்’ சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் ‘எண்ணிப்பார்’ எனும் சிறுகதையினை முன்வைத்து எழுதப்பட்ட இக்கட்டுரையின் வாயிலாக, சிங்கப்பூர் தமிழர்களின் புகலிட நாட்டுப்பற்றினை மையமிட்டு அமைக்கப் பட்டுள்ளது. இக்கதையில் தோன்றும் மையக் கதைமாந்தரைப் போலவே எழுத்தாளருக்கும் புகலிட நாட்டு மக்களின் மீது பற்றுக் கொண்டவராக இருந்திருக்கிறார். சிங்கப்பூருக்குப் புலம்பெயர்ந்து சென்று, தன் இறுதி வாழ்நாள் வரைக் கழித்தாலும் தம் படைப்புகளில், சிங்கப்பூர் மக்களின் தாக்கம் மட்டுமே இடம்பெற்றுள்ளது. அகதிகளின் துயரங்களும், புகலிட நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளும் அவரது படைப்புகளில் காணமுடியவில்லை. அப்பொருண்மையினைத் தவிர்த்துவிட்டு, சிங்கப்பூரில் தோன்றிய தமிழ்ப் புனைகதை இலக்கியமாகக் கருதினால், எளிமையான மொழிநடையும், சிங்கை நாட்டின் வாழ்வியல் சூழலையும், அங்கு வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கலாச்சாரத்தையும், அந்நாட்டு மக்களின் பேச்சு வழக்குச் சொற்களையும், புதுப்புது வகையான கதைக்களங்களையும் இவர்தம் நூல்களில் காணமுடிகிறது. இந்தவகையில் இவரது எழுத்து முயற்சி, தமிழ் இலக்கியத்திற்கென பெரும் பேற்றினைப் பெற்றுத்தரக் கூடிய இலக்கியங்கள் என்று கூற முடியும்.

சான்றெண் விளக்கக்குறிப்புகள்

கா.சிவத்தம்பி, உலகத் தமிழிலக்கிய வரலாறு, ப.356.

மு.தங்கராசன், சிந்தனைப் பூக்கள், ப.9.

மேலது., ப.27.

மேலது., ப.7.

மேலது., ப.34.

மேலது., ப.93.

மேலது., ப.67.

மேலது., ப.5.

துணைநூற் பட்டியல்

சிவத்தம்பி.கா.,(மு.பதி.ஆ.), - **'உலகத் தமிழிலக்கிய வரலாறு'** தொகுதி – 3 (கி.பி. 1851-2000), உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600008. முதற்பதிப்பு, 2012.

தங்கராசன்.மு., - **'சிந்தனைப் பூக்கள்,** விஜயா சபரி பதிப்பகம், பெருங்குடி, சென்னை – 600096, முதற்பதிப்பு, 1988.

‘மாதுளங்கனி’ கவிதையில் வாழ்வியல் அறம்

முனைவர் சு. மலர்விழி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முன்னுரை

இயற்கையெழில் மாதுளங்கனியினைப் பிளந்து பார்க்குங்கால் வெண்முத்து போன்று அமைந்தொளிரும் இன்சுவை நல்கும் இனிய மணிப்பரல்கள் தரும் இன்பத் திரட்சி பற்றிக் கவிஞர் கூறியுள்ளார். தமிழாசிரியராக, சமுதாயத் தொண்டராக, கலைஞராக, சிறுகதையாசிரியராக, கவிஞராக வளர்ச்சியுற்ற, முழுமையான சிந்தனைகளின் சில கூறுகளை எடுத்தியம்பும் படைப்பாக மலர்ந்துள்ளது மாதுளங்கனி. முப்பத்தைந்து தலைப்பிலான கவிதைகளில் பெரும் பாலானவை நெடுங்கவிதைகள். மனித வாழ்க்கை நலமுற்றுத் திகழ தனிமனிதனின் பங்கினைப் பல பாக்களில் ஆசிரியர் உணர்த்தி செல்கின்றார்.

அறம்

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே அறம் எனப்படும். “அறம் என்னும் சொல்லை அறு ஈஅம் எனப் பிரித்துத் தீமையை அறுப்பது என்றும் பொருள்காண்பர்.”1 மனித வாழ்க்கை மாட்சியுற மனிதன் மனிதனாக வாழ்ந்து தெய்வநிலையை அடைய, அவனுடைய சிந்தனைகளையும், உணர்வுகளையும் முறைப்படுத்தி, நெறிப்படுத்தி இயங்கும் இயற்கைப் பேராற்றலே அறமாகும்.

அறத்தின் இலக்கணம்

“ஒரு மனிதன் சமுதாத்தோடு இணைந்து வாழ்வதற்கும், அல்லது தனியே நின்று சிறப்பான தனிமனிதனாக இயங்குவதற்கும், அவ்வாறு இயங்கும் தனிமனிதனுடைய பண்பு நலன்களை உருவாக்கி வைக்கும் குறிக்கோள்களுக்கும் அறம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.”2

அறம் என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ கொண்டொழுவில்லை. அதனை வாழ்க்கை நெறியாகவே கொண்டொழுகினர்.

அறத்தின் தலைமை

அறம், பொருள், இன்பம் மூன்றனுள் அறமே தலைமையும் சிறப்பும் வாய்ந்தது, அறத்தின் அடிப்படையில் மற்ற இரண்டும் இயங்கி வந்தன. இதனை,

“சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப் படுஉம் தோற்றம் போல”3

என்று புறநானூறு தெளிவுப்படுத்துகின்றது.

குறிக்கோள்

மனித வாழ்க்கை நலமுற்றுத் திகழ, தனி மனிதனின் பங்கினைப் பல பாக்களில்

ஆசிரியர் உணர்த்திச் செல்கின்றார். 'குறிக்கோள்' எனும் கவிதையின் மூலம் கவிஞர் தனிமனிதன் மனித சமுதாய வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகளை விளம்புகின்றார்.

"எப்படியோ வாய்ந்திடுவோம் என்றே எண்ணி
இலக்கின்றி இருந்திடுதல் என்றும் தீதாம்!
எப்படியும் வாழ்ந்திடலாம் என்ற ஒன்று
இழிதகைமை எதிர்போக்கு இல்லா வாழ்க்கை
இப்படித்தான் வாழ்வமைய வேண்டும் என்றே
எழுந்தமையும் கொள்கைநலம் குறிக்கோள் இன்பம்
தப்படிதான் வைக்காத தனித்த பண்பு
தழைத்துவரக் குறிக்கோளின் தாகம் வேண்டும்!"4

என்று தனிமனிதனுக்கு இருக்கவேண்டிய குறிக்கோள் நிறைந்த வாழ்க்கையை அறிவுறுத்துவதோடு, இலக்குகளை உணர்த்தும் குறிக்கோள்கள் என்னென்ன என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

குறிக்கோள் உடையார் ஆணவம் எனும் குன்றேறிக் கொக்கரிக்க வேண்டியதில்லை என்பதை கவிஞர் மறவாமல் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு மனிதனும் செயல்படுமுன் தனது நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென ஆசிரியர் ஆராய்ந்துணர்ந்து வலியுறுத்தியுள்ளார்.

வளமான வாழ்வு

தமிழ்மொழியின் ஏற்றமிகு இலக்கியங்கள் பாக்களில் புலப்படுகின்றன. வள்ளுவரின் வாய்மொழி ஆசிரியரின் கவிதைகளில் பாவலர் தங்கராசன் சற்றே விலகி நின்று, இன்றைய வாழ்க்கைக்கு வேண்டியதை எண்ணிப் பார்க்கின்றார்.

"கற்றலினால் பயனென்ன? கற்றதைப்போல
கவினுலகில் கற்றபயன் காட்டவேண்டும்!
கற்றவற்றைச் சிந்தித்துக் கடைப்பிடித்துக்
கனிவார்ந்து ஒழுகுதலே "கற்பின்" மேன்மை!
பெற்றதிரு எல்லாமும் பெருமை சேர்க்கும்
பெரிது வந்து அமைகின்ற பேறுயாவும்
கற்றுவந்த சிந்தனையின் 'காய்த்தல்' ஆகும்
களிமனத்துப் பேருவகை காலம் வெல்லும்"5

சமுதாய மறுமலர்ச்சியில் தனது எதிர் நோக்கினை உணர்த்த விரும்பும் பாவலர், சமுதாயத்தின் மகிழ்வையே தன் மகிழ்வாகக் காண்கின்றார். சமுதாய வளர்ச்சி அறத்தை நிலைநாட்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் கவிஞரின் மனம் விரும்புகிறது.

குடும்பம்

இல்லறம் மேவும் குடும்பங்களே வீடுகள் ஆகும். அத்தகைய வீடுகள் நாட்டின் வளத்திற்கு உறுதுணை புரிகின்றன என்பதை கவிஞர் எண்ணிப் பார்க்கின்றார். குடும்பம் என்ன வென்பதற்கு மிகவும் நுண்ணிய விளக்க மொன்றை 'குடும்பம் ஒரு விளக்கு' எனும் தலைப்பிலான கவிதையில் தருகின்றார்.

"வீட்டிற்கு இருளகற்ற விளக்கு வேண்டும்
விளங்குமெழில் வீடதனில் குடும்பம் வேண்டும்!
பாட்டிற்குப் பண்ணமைவு ஒளிர்வே யாகிப்
பழகு தமிழ்ப் பாட்டதுவும் உயர்ந்து நிற்கும்
காட்டிற்குள் நனிமகிழ்வு செத்துப்போகும்
நல்லதொரு குடும்பம் நல்விளக்கே யாகும்!"6

வாழ்வின் வெற்றி

கவிஞரின் உலகளாவிய சிந்தனைகள் இப்பூவுலக வாழ்க்கையோடு நின்று விடவில்லை. மனிதன் வாழ்க்கைக்கு உகந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லும் கவிஞர் மனித உயிர் நாடவேண்டிய இலக்கையும் எண்ணிப் பார்க்கின்றார். வாழ்வின் வெற்றி எனும் கவிதை வரிகளில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விதியை எண்ணிப் பார்க்கின்றார்.

"வாழ்வெனின் வெற்றியாகும்
வந்தமை தோல்வி பற்றிக்
தாழ்வெனும் சொல்லின் ஆக்கம்
தனித்துமே துலங்கும் பெற்று!
சூழ்கடல் உலகம் தன்னில்
சொர்க்கமே காண்பா ருண்டு;
ஆழ்மனத் துள்ளே சோர்ந்து
அயர்வுறும் நிலையம் உண்டே"7

முடிவுரை

கவிஞர் தங்கராசன் அவர்களின் கவிதைகளில் வாழ்வியல் அறங்கள் பரந்து விரிந்து காணப்படுவதை அறிகிறோம். இவை, பாவலரின் சமுதாயச் சிந்தனைகள், வாழ்வியல் அறங்கள் எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கி நிற்கின்றன. 'மாதுளங்கனி' மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை உணர்த்தும் கவிதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

குறிப்புகள்

க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் ஆராய்ச்சி-2, ப.23.

பா.திருஞானசம்பந்தம், பழமொழியில் அறச் சிந்தனை, ப.443.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புற. பாடல்.31, ப.88

மு.தங்கராசன், மாதுளங்கனி, பக்.17: 18.

மேலது., ப.73.

மேலது., ப.88.

மேலது., ப.103.

துணைநூற்பட்டியல்

தங்கராசன் .மு - மாதுளங்கனி தமிழ்வேள் நாடக மன்றம் பிளாக்: 733; 03-368 இஷான் அவென்யு-5 சிங்கப்பூர்-2776.

திருநாவுக்கரசு க.த. - திருக்குறள் நீதி இலக்கியம் திருக்குறள் ஆராய்ச்சி, சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

- பழமொழியில் அறச்சிந்தனை தேசியக் கருத்தரங்கம் (தொகுதி-2), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

துரைசாமிப்பிள்ளை வ.சு.(உ.ஆ.), - புறநானூறு கழக வெளியீடு, சென்னை.

சூரியகாந்தி கவிதைத் தொகுப்பில் கவிஞர் மு. தங்கராசனின் சமுதாயப் பார்வை

சே. மாசிலாமணி

முது பெரும் தமிழாசிரியர் மு. தங்கராசன் அவர்கள் தனது 'சூரியகாந்தி' கவிதைத் தொகுப்பில் இன்றைய இளைஞர்களின் மனப்பாங்கினையும் அவர்களின் நிலைப் பாட்டினையும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக இன்றைய இளையச் சமுதாயம் எவ்வாறு உயாத்தவேண்டும் என்பதையும் கவிஞரின் பங்களிப்பாக இக்கட்டுரையில் காணலாம்.

"இருக்கும் வரை எழுதுவோம்,
இயன்றவரை எம்மனோராம்
எதிர்வரும் தலைமுறையினரிடம் சென்றடையச் செய்வோம்"

எனக்குப் போதும் என்ற மனம் வேண்டாம். இருக்கும்வரை சமுதாயத்தை மேம்படுத்தவும், இளைஞர்களின் மேம்பாட்டிற்காகவும் எழுதுவோம் என்று கூறுகிறார்.

பன்மொழி அறிவு

பல மொழிகளை ஒருவரோ அல்லது ஒரு சமூகமோ பயன்படுத்துவது மற்றும் பன்மொழிப் பயன்பாட்டை ஊக்குவிப்பதும் ஆகும். உலகமயமாக்கல், பண்பாட்டு வெளிப்பாட்டுத்தன்மை போன்ற காரணிகளால் பன்மொழிப்புலமையானது ஒரு சமூக நிகழ்வாக விளங்குகிறது.

தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றிய கால்டுவெல் முதல் பாட்டுக்கொரு புலவன் பாரதி வரை அனைவரும் பன்மொழி வித்தகர்கள் ஆவார்கள். 18ம் நூற்றாண்டிலேயே இராணி வேலுநாச்சியார் அவர்கள் தன் கணவனைக் கொன்றவர்களை உருது மொழியில் சரளமாகப் பேசி ஹைதர் அலி உதவியுடன் அவர்களைக் கொன்று இழந்த தன் நாட்டினையும், மக்களையும் மீட்டெடுத்தார் என்று பலர் அறிந்த உண்மை. ஒரு மனிதன் இருமொழிகளைக் கற்றுத் தேர்ந்தால் அவன் இரண்டு மனிதர்களுக்குச் சமம் என்பது முன்னோர்கள் கூறிய கூற்று. நமது கவிஞரும் இதையே வலியுறுத்தி,

"மொழி பல கற்றுத் தேர்ந்தால் செல்லும்
வழியெல்லாம் வாயில் திறந்து வழிவிடும்
விழி பல பெற்றுப் பார்வை மிகுந்தால்
எழில் பல தோன்றும் ஏற்றம் பெறலாம்!
எத்தனை மொழிகள் படித்தாலு ந்தான்
அத்தனை ஆற்றல் பெருகிப் பல்கி
முத்தனை அறிவும் திருவும் மூண்டு
வித்தாகத் திறன்கள் விளைந்திடக் காண்போம்!

என்ற கூற்றின் வாயிலாக இன்றைய இளைஞர்கள் பன்மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும் என்பதை காண முடிகிறது.

தாய்மொழிப்பற்று

இன்றைய இளைஞர்களின் மொழிப்பற்று கண்களை எவ்வாறு இமைகள் காக்கின்றதோ அவ்வாறே நாமும் நம் தமிழ்மொழியைக் காத்து

வருங்காலத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதை,

“விழிகளை இமைகள் காக்கும்
பொறுப்பினை விமலன் தந்தான்
விழிப்புடன் இருத்தல் வேண்டும்
வியன் இமை கடமையன்றோ?
மொழியதன் உயர்வும் தாழ்வும்
“முகவரிகள் “ பொறுப்பே ஆகும்
விழி என மொழியைக் காக்க
வீறுமை பெயர்தல் வேண்டும்
இளையோரின் மனப்பாங்கு இன்றை
இளைஞர்கள் விடலையாய்ச்
சுற்றித் தேய்ந்து விதியெனச் சொல்லிக் கொள்வார்”

என்று இளையச் சமுதாயம் தன் கடமையை மறந்து விதியின் மேல் பழி போடுகின்றார் என வருந்தினார்.

“கார் சூழ்ந்த வானில் என்று
கவின் நிலா தோன்றப் போமோ”

என்று கூறுவதன் மூலம் இளைஞர்கள் மாற வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

பணிவன்பு

இளைஞர்கள் எவ்வாறு பெரியோர்களிடம் பணிவுடனும், மரியாதை மதிப்புகளுடனும் பழகவேண்டும் என்று கூறுகிறார். பொறுமை, பணிவுடைமை, சகிப்புத் தன்மையுடன் பழக வேண்டும் என்று கூறுகிறார்.

பணிதல் என்பது பரஸ்பரம் மதித்தல் ஆகும். குனிந்திடும் கொள்கை அல்ல கும்பிடும் கரங்களே ஆகும் அத்தகைய பணிவால் மதிப்பும் மரியதையும் சமுதாயத்தில் உயரும். செல்வம், பொருள் ஏற்றம் பெற்று இருக்கும்போது நல்ல பணிதலால் உள்ளம் சிறப்பாக இருக்கும் என்பதை வள்ளுவர் அன்றே கூறினார்.

“கண்ணனைக் கண்ணின் நோக்கிக்
கனிந்தனன்,
இருண்ட குஞ்சி
முன்உறப்பணிந்து மேனி வநைது,
வாய்புதைத்து
நின்றான்”
(கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் : 40)

இளைஞர்கள் பலவித மேடுபள்ளங்கள் சூழ்ச்சி, வஞ்சகம் இவையெல்லாம் கடந்து நீங்கா உயரத்தை அடையவேண்டும் என்பதை பாதையில் மேடு என்று இருந்தால் பள்ளமும் இருக்கும் அதனைப் புரிந்து கொண்டு கஷ்டங்களும் விலிகளும் உண்டு என்றால் அதற்குச்சமமாக இன்பங்கள் வரும் என்பதை

“வாழ்ந்தவர் வீழ்ந்த துண்டு
வீழ்ந்தவர் எழுந்த துண்டு
சூழ்ந்திடும் நிலைகள் யாவும்
சுரண்டிடும் எண்ணம் சூழ்ச்சி
ஆழ்ந்த நல் அறிவுக்கூர்மை
ஆற்றதால் விளைந்த வீழ்ச்சி
வாழ்ந்தவர் வீழ்ந்து போவார்
வீழ்ந்தவர் வீறு கொள்வார்”

என்பதின் வாயிலாக வாழ்வின் அனைத்து துயரங்களையும் சவாலாக எதிர்கொள்ளவேண்டும் என்கிறார்.

உழைப்பே உயர்வு தரும் உழைப்பினால் கிடைத்த வெற்றியின் மகத்துவம் அளப்பரியது. ஓய்ந்திடாத உழைப்பினாலும், சுறுசுறுப்பான மனத்தினாலும் உயர்ந்த அறிஞர்கள் என்றும் வரலாற்றில் உறைந்திருப்பார்கள்.

“விழலுக்கு இறைத்த நீராய்
விளைப்பயன் ஏதும் இன்றி
உழன்றிடும் சமுதாயத்தை
ஒருகணம் எண்ணிப் பார்த்து
அழற்படு புழவா யீங்கு
துடித்த நல்ஆன்ம நேயம்
இழைந்திட உலகு காக்கும்
இயல்புளர் உழைப்பால் உயர்ந்தோர்”

நம் முன்னோர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதிற்காhக பல்வேறு இலக்கணங்களையும், இலக்கியங்களையும் எழுதி நமக்கு நீதி நெறியூட்டியுள்ளனர். ஆனால் நாம் தலைவிதி என நொந்து வாழ்கிறோம்

விதி என்பதற்கு பல பொருட்கள் உள்ளது. விதிமுறை எனபது தண்டனை அளித்தல் ஆகும். விதித்திடல் என்பது தண்டனை விதித்தல் ஆகும். விதியிது என்றால் அது தன்வினையின் (வேலை) உள்ள செயலே ஆகும்.

நமது கொள்கைகளில் மனித நேயம் வேண்டும் எதைச் செய்தாலும் அதில் நல்லன ஒளிர்தல் வேண்டும். தேடுதல் பொருளாக இருந்தாலும் அதிலும் ஒரு தர்மம் வேண்டும். நமது நாட்டில் தான் வீடும் உண்டு என்பதை உணர வேண்டும் என்று கவிஞரின் கவிதை வாயிலாக அறியலாம்

“விதியினை வெல்லக் கூடும்
விளங்கு நல் சான்றோர் சொல்வார்
விதிவசம் என்று சொல்லி
ஈங்கு நல் முனைப்பு கொள்வார்
விதியினை வென்றார் உண்டோ?
வினாக்களை தொடுத்து நிற்பார்
முதியதன் நுட்பத்தாலே
மாய்த்துமே வெற்றி கண்டார்!”

உலகில் எவ்வளவு பெரிய துன்பங்களையும் தன் அறிவால் போக்கலாம் என்பதை ‘மதியெனல்’ கவிதை மூலம் ஊக்கத்தை ஏற்படுத்துகிறார்.”

“உலகியல் மனித வாழ்க்கை
உழன்றிடும் இருளைப்போக்கி
உலகினை உய்யச்செய்யும்
உயர் தமிழ்ச்சான்றோர் போன்று
நிலவிடும் இருட்டைப் போக்கி
நிறையொளி நீளத் தந்தே
உலகெலாம் மகிழும் வண்ணம்
ஒரு ‘மதி’ வானில் தோன்றும்!”

வானில் உள்ள இருட்டையே போக்குவதற்கு ஒரு மதி தேவைப்படுவது போல நம்வாழ்வின் உள்ள இருட்டைப் போக்குவதற்கு நம் புத்தி (மதி) யின் தேவையை உணர்த்துகிறார்.

முது பெரும் தமிழாசிரியர் மு. தங்கராசன் அவர்கள் தம் வாழ்வை தொடக்கப்பள்ளி ஆசியராகத் தொடங்கி தன் உழைப்பால் பல்வேறு கவிதைகளையும், கட்டுரைகளையும், சிறுகதைகளையும் தமிழுக்குத் தொண்டு செய்து, நல்லாசிரியர் விருது வரை பெற்று உயர்ந்த கவிஞரின் சமுதாயப் பார்வையை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

மு.தங்கராசுவின் 'சூரிய காந்தி' கவிதைத் தொகுப்பில் இலக்கியச் செறிவு

வெ. மாரிச்செல்வி
முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

முன்னுரை

கவிதை என்பது சிலரது விரல்கள் வழி உலகைக் காட்டும் எழில்மிகு இயற்கை. இத்தகைய கவிதைகளை பல நூல்களாக்கி வைத்தவர் மு.தங்கராசு. இவர்தம் கவிதை நூல்களில் இலக்கிய நயத்துடன் சில இலக்கண நயங்களையும் கைகோர்க்க வைத்துள்ளார். கவிதை வரிகளின் பொருண்மை பொருள் புதையலாகத் தெளிகிறது. நமது கற்பனையும் விரிகிறது.

அன்னாரது கவிதைத் தொகுப்புகளிலிருந்து நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்பு சூரியகாந்தி எனும் கவிதைத் தொகுப்பாகும். இது 2013 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது . பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்ற மு.தங்கராசு, தமிழ் ஆளுமையில் சிறந்தவர் என்பதை அவரது வரிகள் காட்டுகின்றன. தமிழ்முரசு நாளிதழில் வாராந்தோறும் ஆரூடம் கணித்து எழுதிய 'சோதிட சிரோன்மணியார்' என்னும் பட்டம் பெற்ற அமரர் என்.பி.கே. இராஜமாணிக்கம் அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறார். சூரியகாந்தித் கவிதைத் தொகுப்பின் தலைப்புகள் சொல் வளம், இலக்கிய நயம் போன்றவற்றை அடிப்படையாள் கொண்டு அமைந்திருக்கின்றன. இவற்றை விளக்கமுறை ஆய்வாகக் காண்போம்.

மொழியின் செழுமை

மொழி என்னும் தலைப்பில் ஆறு கவிதைகள் அமைந்துள்ளன. இவையனைத்தும் மொழியின் சிறப்பினையும், பிற மொழிகளைப் படிப்பதால் விளையும் நன்மைகளையும் கூறுகின்றன. மேலும், மொழிப்பற்றுடன் கூடிய நாட்டுப்பற்றும் தெரிகிறது. தமிழன்னையைத் தமது வரிகளின் வழி வாழ்த்துகிறார். பன்மொழிப் புலமை வேண்டும் என்பது பாரதியாரின் கருத்தோடு ஒன்றுபடுகிறது.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" [1]

மேற்காணும் வரிகள் மெய்ப்பட வேண்டுமெனில், பன்மொழி அறிவு பெற வேண்டும். தனது தாய்மொழிப் பற்றினைக் கூறி, தமிழானது தரணி எங்கும் தழைக்க வேண்டியதற்கான பணிகளையும் கூறுகிறார்.

"மொழியதன் உயர்வும் தாழ்வும்
முகவரிகள் பொறுப்பேயாகும்
விழியினை மொழியைக் காக்க
வீறுமை பெறுதல் வேண்டும்"

[சூரியகாந்தி, ப -10,]

நம் மொழி சிறக்க நாம்தான் வீறு கொண்டு உழைக்க வேண்டும்.

நாடு எனும் தலைப்பு காட்டும் சிங்கை நாடு

நாடு எனும் தலைப்பில் அமைந்த கவிதைகள் சிங்கப்பூரின் சிறப்புகளைக் கூறுகின்றன. இக்கவிதைகளை படிக்குங்கால் சிங்கப்பூருக்குச் சுற்றுலா சென்று வந்த அனுபவம் கிடைக்கிறது. மேற்கண்ட வராது மண்ணுலக சொர்க்கபுரி எனும் தலைப்பின் கீழ் உள்ள கவிதையில், சிங்கை நாட்டின் வளமையும் சிறப்பும் வரிகளாக வடிக்கப்பட்டுள்ளன. அந்நாட்டு மக்கள் சொந்த வீடு, தொழிற்கூடச் செழிப்பு, பல்வேறு இனம்,மொழி கலந்த சமுதய அமைப்புக் கொண்டு வாழ்கின்றனர்.

"செப்பு மொழி நாண்கினுக்கும் ஏற்றம்-
உன்றன்
இருபத்தைந்து ஆண்டுகளின் மாற்றம்"

[சூரி, ப-18]

எனும் வரிகள் சிங்கை நாட்டின் தேசிய அலுவல் மொழிகளான தமிழ், ஆங்கிலம், மாண்டலின் சைனீஸ், மலாய் எனும் நான்கு மொழிகளைக் கூறியுள்ளார். இதன் வழி சிங்கப்பூரைக் குறித்த செய்திகள் தெரிகின்றன. மாணுயர் மலையகம் வாழ்க என்னும் தலைப்பின் கீழ் சிங்கப்பூரின் தலைவர்களையும் காட்டுகிறார்.

"மாண்புமிகு துங்கு அப்துல்
மன்னிய சீர் ரகுமான் என்பார்
மாண் உயர் மலேசியத்தின்
மன்னு புகழ் தந்தையானர்"

[சூரி, ப – 22]

இவ்வரிகள் 1955 முதல் 1957 வரை மலேசியாவின் முதல் பிரதம மந்திரியாகப் பதவி வகித்த அப்துல் ராகுமனைக் குறிக்கிறது. இவர் 'சுதந்திரத் தந்தை' எனவும், மலேசியத்தந்தை எனவும் இன்று வரை போற்றப்படுகிறார்.

மு.தங்கராசு காட்டும் சமுதாயம்

சமுதாயம் எனும் தலைப்பின் கீழ்க் காணப்படும் கவிதைகள் இன்றைய சமுதாயம்,வாழ்வின் உயர்வு தாழ்வுப் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. தமிழின் இன்றைய இளைய சமுதாயம் தனது சீர்மை குலைந்து சிதைவுறுவதைக் கூறுகிறார். பணிவன்பு என்னும் தலைப்பில் வள்ளுவரின் குறளை தம் வரிகளில் பொதித்துள்ளார்.

"நில்லாத வற்றை நிலையின் என்றுணறும்
புல்லரி வாண்மை கடை" [2]

ஒரு சொல் பலபொருள் எனும் தகைமையில் சில கவிதைகள் அமைந்துள்ளன. இதனை நன்னூல்,

"ஒரு பொருள் குறித்த பல சொல் ஆகியும்
பல பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்
அரிது உணர் பொருளன திரிசொல் ஆகும்" [3]

என்று கூறுகிறது. விதி,மதி,குடி எனும் சொற்களில் ஒரு சொல் பலபொருள் என்பதைக் கவியாக்கியுள்ளார்.

விதி என்னும் கவிதையைக் கூறுங்கால் ,
"விதியெனச் சொன்னால் இங்கு
விளை பொருள் வெவ் வேறாகும்"

[சூரி, ப - 37]

என்கிறார். விதி, மதி, பணி, குடி எனும் தலைப்புகளில் அதற்கான பொருள்களைக் காட்டுகிறார். 'மதி' என்பதற்கு அறிவு, நிலவு மதிப்பிடுதல் போன்றவற்றை,, அவற்றின் சான்று கலந்து கவிச்சாறாக்கியுள்ளார். 'குடி' என்னும் சொல்லாடலில், வள்ளுவர் என் கருத்தைப் புகுத்தி கள் அருந்துதல், குடும்பம், குடிமகன் போன்ற பொருள்களைக் கொடுத்துள்ளார்.

"பூவாத முல்லை" என்னும் கவிதையால் பூப்பு எய்தாத பெண்படும் பாட்டை வினா விடைக் கவியாக வடித்துள்ளார்.

"தேருக்குப் பெண்ணணங்கும் தெளியாமல் நின்றே
தெரிவையால் ஏதொன்றும் தெளியாமல் இன்பப்
போருக்கு புறம் பார்க்கும் பொற்றொடியால் உள்ளம்
பொருமியெழும் பெற்றவரக்குப் புன்சிரிப்பே ஈந்தாள்"

[சூரி- ப - 40]

என்ற வரிகளில், தெரிவை [26-32] வயதுள்ள பெண்ணானவள் எதிர் கொள்ளும் சமூகக் கேள்விகளை பூவாத முல்லை புலனாக்குகிறது .

'விழலுக்கிரைத்த நீர்' என்னும் தலைப்பில், சமூக மூட நம்பிக்கைகளையும் தலைவர்களின் போராட்டங்கள் வீணாவதையும் சாடியுள்ளார்.

பதிவு செய்த பாராட்டுப்பா

பொதுவாகக் குறிப்பிடும் போது பாராட்டு முறை கொண்டு அமைவது பாராட்டுப்பா ஆகும். எனினும் தங்கராசு அவர்கள் கூறும் பாராட்டுப்பா ஒருவரின் வரலாறையும் சிறப்பையும் கூறுவதாக அமைகிறது. தலைப்புகள் அவரது இலக்கியச் செழுமையைக் காட்டுகின்றன. தங்கமாம் அறிவுச் சொத்து எனும் தலைப்பில்,

"வடிவேலு என்பார் என்றன்
வயதுக்கும் மிக்கார் நண்பர்
அடிப்படை சிறிதும் மாறா
அமைப்பினில் நடந்தவற்றை
படிபடியாகத் தேர்ந்து
பதிந்தவை நெஞ்சில் தேக்கி
நினைத்தவை எழுதலானார்" [சூரி, ப – 58]

"வீரமானியென விளங்கி நிற்பார், பொது நலம் போற்றிடும் புண்ணியனார் வாழ்க நீடு, மன்னிய சீறதும் மாட்சிமை ஆகும்,புரை தீர்த்த பொய்யா நெறி, அப்பண்ணாவுக்கோர் அணிந்துரை" போன்ற தலைப்புகள் அவரது இலக்கியச் செறிவினைக் காட்டுகின்றன .

நாட்டைப் புகழும் நாடு வாழ்த்து

'நாடு வாழ்த்து' என்னும் தலைப்பின் கீழ், பல பண்டிகைகளும் திருவிழாக்களும் கூறப்பட்டுள்ளன. தமிழர் திருநாள் வாழ்க எனும் தலைப்பின் கீழ்,

"வள்ளுவர் ஆண்டின் தோற்றம்
வரும் தைத் திருநாளாம் இந்நாள்
சொல்லுவோம் தமிழர் போற்றும்
சுதந்திரத் திருநாள் என்றே"

[சூரி, ப - 118]

என்ற வரிகளில், வள்ளுவர் ஆண்டு ,பொங்கல் சிறப்பைக் கூறுகிறார். "திருவள்ளுவர் ஆண்டென்பது நடப்பு ஆண்டோடு 31 ஆண்டுகளைக் கூட்டக் கிடைப்பது ஆகும்".

"பொங்கலோ பொங்கல்" என்னும் தலைப்பு உழவர்களையும் அவர்தம் களைப்பு நீக்கும் பொங்கல் விழாவினையும் சிறப்பிக்கிறது.

" களைப்பெல்லாம் நீங்கி ஓங்கும்
களை பயில் சொல்லாம பொங்கல்"

[சூரி, ப - 121]

"விழா என்னும் திறந்த வாசல் வழி நம் மக்களை அறிந்து கொள்ள முடியும் என்பார் கவிஞர் தாகூர்"[5] அதன்படி, சிங்கப்பூரின் தீபாவளி வாயிலாக அம்மக்களைக் காட்டுகிறார்.

இறைமை கூறும் அன்பு நெறி

'இறைமை' என்னும் தலைப்பில் அனைத்து சமயக் கடவுளரையும் பாடுகிறார். கவியாக இறையை வடித்துள்ளார். இறைமையென்பதன் நோக்கு, அன்பு, பரிவு, அருள் என்பதனை அழகுற வடித்துள்ளார்.

இஸ்லாம் சமய நோன்பினை வள்ளுவர் கூறும் நோன்புடன் ஒப்புமைப் படுத்திப்பாடுகிறார். 'உண்மை நலத்தது நோன்பு' என்கிறார். இவ்விறைமைப் பாடல்கள் அனைத்தும் மோனை நடை கொண்டு அமைந்துள்ளன.

முடிவுரை

'சூரியகாந்தி' என்னும் கவிதைத் தொகுப்பு சமுதாயம், மொழி, நாடு, பாராட்டுப்பா, திருவிழாக்கள், நினைவஞ்சலி, இறைமை போன்ற தலைப்புகளின் கீழ் பல்வேறு கவிதைகளைக் கொண்டு அமைந்துள்ளன. அக்கவிதைகள் அனைத்தும் மோனை, எதுகை, இயைபு போன்ற இலக்கண நயங்களைக் கொண்டு அமைந்துள்ளன.

இறை அன்பின் ஆழம், சமுதாயநெறி, விழாக்கள், சிங்கப்பூரின் சிறப்புகள் போன்றவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

சொல்லாட்சி மிக்க கவிதைகளாகவும், பிறரைப் புகழ்வதிலும் கருத்தினைப் போதித்து கவிதை செய்துள்ளார். இவை அனைத்தும் இக்கவிதைத் தொகுப்பிற்கு உயிரோட்டம் கொடுக்கின்றன.

மேற்பார்வை நூல்கள்

பாரதியார், தேசிய கீதம் -3
விக்கிப்பீடியா. நெட்
திருவள்ளுவர், திருக்குறள், 331
பவணந்தி முனிவர், நன்னூல் சொல், 272
சு. சக்திவேல், நாடுப்புறவியல் ஆய்வு, பக்-235

கவிமொழியும் நம்பிக்கைகளும்
(சிங்கப்பூர் மு.தங்கராசன் கவிதைகளை முன் வைத்து)

ம. மீனாட்சி சுந்தரம்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

முன்னுரை

கவிஞன் சமூக மனத்தின் சாட்சியாகவும் காலத்தின் சாட்சியாகவும் இருக்கிறான் கவிஞன் என்பவன் தன்னிடமுள்ள கவியாளுமைப் பண்பினால் பிறரிடமிருந்து தனித்துக் காணப்படுபவனாக இருந்தாலும் அவனும் சமூகத்தின் ஓர் அங்கமாகவே வாழ்கிறான். அவனிடமிருந்து கிளைத்து வளரும் எண்ணங்களுக்கு, சமூகத்தில் அவன் காணும் காட்சிகளுக்கும் வாழ்பனுபவங்களுக்கும் பங்கில்லாமல் இல்லை. சமூகத்தின் எண்ணங்களைக் கவிதையில் வெளிப்படுத்தும் கவிஞன் அவ்வெண்ணங்களோடு மாறுபட்ட கருத்துடையவன் என்றும், அதனோடு உடன்பட்டவனென்றும் உறுதியாக எதுவும் கூறிவிட முடியாது. ஆனால், அவனது வெளிப்படுத்தல் மூலம் கவிஞனும், அவனது வரிகளும் அவன் வாழ்ந்த காலத்தின், சமூக மனத்தின் சாட்சியாக நின்று நிலவுகிறார்கள் என்பதை உறுதிபடக் கூறலாம். அவ்வகையில் சிங்கப்பூர்க் கவிஞரான மு.தங்கராசனின் கவிதைத் தொகுப்புகளை வாசிக்கும் போது, இவ்வுலகில் மனித வாழ்வு குறித்த அடிப்படையான நம்பிக்கைகள் அவரது கவிதை வரிகளில் தொடர்ந்து வெளிப்படுவதைக் காண முடிகிறது.

அந்த அடிப்படையான நம்பிக்கைகள் ஆசீவக, சமண, பௌத்த, வைதீக சமயக் கருத்துக்களோடு தொடர்புள்ளவை என்றாலும் அவற்றைக் காலந்தோறும் மனித குல வளர்ச்சியில் உருவான நம்பிக்கைகளாகவே கருத வேண்டும். மனித வாழ்வைத் தீர்மானிப்பதாகக் கருதப்படும் 'விதி' பற்றிய அந்நம்பிக்கைகளைக் கவிஞர் மு.தங்கராசனின் கவிதைகளின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"முறையதன் வழியே மூளும்"[1]

மனித சமூகம் தன் முயற்சிக்கு அப்பாற்பட்டு நடக்கும் நிகழ்வுகளுக்கு 'விதி' என்னும் பெயர் சூட்டி வழங்குவதை நாம் அறிவோம். காரணம் இன்றி நிகழும் ஒன்றிற்குக் காரணம் தேடிய மனிதத்திரளின் ஒட்டுமொத்த அனுபவத்தின் விளைவாய் கண்டறியப்பட்ட ஒன்றாக 'விதி' என்னும் கோட்பாடு விளங்கி வருகிறது.

மனிதனுக்கு ஏற்படும் இன்ப துன்பம், உயர்வு தாழ்வு, அவனுடைய செயல்கள், விளைவுகள் ஆகிய அனைத்துமே 'விதிக்குக்' கட்டுப்பட்டவை, 'விதியின்' படியே நிகழ்பவை. விதியானது மனிதன் பிறக்கும்போதே நிர்ணயிக்கப்படுகிறது. இந்தத் தலைவிதியை மனித முயற்சிகளால் மாற்றி விட முடியாது,

கடவுளால் கூட என்ற நம்பிக்கையை விதி பற்றிய ஆதி நம்பிக்கையாகக் கொள்ளலாம்.

இவ்விதியை தமிழ்ச் செவ்விலக்கியங்கள் 'ஊழ்' 'முறை' என வழங்குகிறது.

"ஊழில் பெருவழி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"[2]

"பெறுதலு மிழத்தலு மிடையூ றுதலும்
உறுமிடத் தெய்தலுந் துக்கசுக முறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலுஞ் சாதலும்
கருவிற்பட்ட பொழுதே கலக்கும்"[3]

" …….. பேரியாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோலாருயிர்
முறை வழிப்படூஉம் என்பது"[4]

என்று தமிழ் இலக்கியங்கள் மனித அனுபவத்திரளின் மையமான அக்கருத்தைப் பேசுகின்றன.

சமூகத்தில் நின்று நிலவிவரும் அக்கருத்தைக் கவிஞர் மு.தங்கராசன் தனது கவிதைகளில் தொடர்ந்து வெளிப்படுத்துகிறார். பிறப்பிலேயே ஒருவனது வாழ்வின் போக்கு நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது என்பதை

"இட்டபடி என்தலையில் எழுதி வைத்த
எனக்கூறும் முன்னோரின் இன்பதுன்பப்
பட்டறிவுப் பழமொழியே பதிந்து தோன்றும்"[5]

என்னும் வரிகளில் கூறுகிறார். இவ்விதியே மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அடிப்படை என்னும் நம்பிக்கையை,

"அகிலத்தை ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்ற
அருந்திரளே விதியமைப்பு ஆகும்
வட்டமது வார்மையப் புள்ளி தொட்டே
வந்தமைய வேண்டுமெனல் விதியின் வார்ப்பு" [6]

என்கிறார். விதியை மாற்ற முடியாது, பிறப்பினால் அமைவது, பிறக்கும் போதிருந்தே தொடர்வது என்னும் கருத்தை,

"அன்றெழுதி வைத்ததுவும் அழித்தெழுதப்
போமோ
அகிலத்தார் வழக்காற்றில் அலமலக்கும்
கூற்று" [7]

என்னும் வரிகளில் கூறுகிறார். மனிதன் விதியால் நிகழ்வதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. விதியை மாற்றும் வல்லமை மனிதருக்கில்லை நடக்கும் நன்மைக்கும் தீமைக்கும் விதியே காரணம் அக்காரணத்தின் வழி நிகழும் காரியமே மனித வாழ்க்கை என்பதை,

"விடுப்பது விழைவின் தாக்கம்
விளைவது விதியின் தூக்கல்!
நதியதன் போக்கை மாற்ற
நம்மாலே ஆகு மோகான்
விதியதன் வழியே செல்லும்
வியன்புவி மாந்த வாழ்க்கை!" [8]

என்கிறார். விதியை மனிதர்களால் மட்டுமல்ல இறைவனாலும் மாற்ற இயலாது. கடவுளும் விதிக்கு கட்டுப்பட்டவனே என்ற கருத்தும் சமூகத்தில் உண்டு. அக்கருத்தைத் தன் கவி வரிகளில்

"ஆண்டிடினும் ஆண்டவனாய் இருந்த
போதும்
ஆட்டி வைக்கும் விதிப்பயனை அடைய
வேண்டும்
வேண்டிடினும் விதிப்பயன்தான
விளைந்தே தீரும்
வேண்டாது நின்றிடினும் விதியே சூழும்" [9]

என்று வெளிப்படுத்துகிறார்.

தொடர்ந்து வரும் வினையே விதி

'விதி' என்பது ஒருவன் பிறக்கும் போது தானாக நிர்ணயிக்கப்படுவது அன்று. மனிதன் செய்த, செய்யும் வினையின் விளைவே என்ற நம்பிக்கையும் சமூகத்தில் நிலவுகிறது. ஓர் உயிர் அனுபவிப்பவை முன்னர் அந்த உயிர் செய்த வினையின் விளைவே, மனித வாழ்வில் ஏற்படும் நல்லனவற்றிற்கும் அல்லனவற்றிற்கும் அவனது செயல்களே காரணம். நல்வினையும் தீவினையும் இப்பிறப்பில் மட்டுமல்லாது பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையும் இச்சமூகத்தில் உண்டு. தத்துவவாதிகள் இதனை 'வினைக்கோட்பாடு' என்பர் இக்கருத்தை

"ஊழ்வினை வந்து உருத்;தது ஆகலின்" [10]

"உம்மை வினைவந்து உருத்தல் ஒழியாது
எனும் மெய்மைக் கிளவி" [11]

"முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்" [12]

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்
பிற்பகல் தாமே வரும்" [13]

என்று தமிழிலக்கியங்கள் கூறும் கவிஞர் மு.தங்கராசன் இவ்வினைக் கோட்பாட்டையும் தம் கவிதையில் காட்டுகிறார்.

"இப்பிறப்பில் நாமடையும் இன்ப துன்பம்
இனிதார்ந்த முற்பிறப்பின் பயனே யாகும்" [14]

என்கிறார்.

விமலனவன் விதித்ததே விதி

மேலே கூறப்பட்ட ஊழ் கோட்பாட்டிற்கும் வினைக் கோட்பாட்டிற்கும் மாறுபட்ட நம்பிக்கையும் சமூகத்தில் உண்டு. விதி என்பது இயற்கையால், வினையால் நிகழ்வது அன்று. இறைவனே மனிதனின் விதியை எழுதுகிறான் இறைவனே எல்லாவற்றிற்கும் காரண கர்த்தா. இறைவன் நினைத்தால் விதியை மாற்ற முடியும் என்பதே அந்நம்பிக்கை.

வினையை வகுக்கும் தெய்வத்தைத்
தொல்காப்பியர் ' பால்வரைத் தெய்வம்'

எனக் குறிப்பிடுவார்.

"கால முலக முயிரே யுடம்பே
பால் வரை தெய்வம் வினையே பூதம்" [15]

என்பது அந்நூற்பா அடிகள். இறைவனை நாடிச் செல்லும் மனிதக் கூட்டத்திற்கு இக்கருத்தே ஆணிவேர். கவிஞர் மு.தங்கராசன் இந்நம்பிக்கையை,

"இப்படித்தான் நடந்திடுதல் வேண்டும் என்றே
எழிலுலகை ஆட்டிவைக்கும் இறைவன் தன்னின்
எப்படித்தான் விதியமைத்து இறைவன் இந்த
எழிலார்ந்த பேருலகை இயக்குகின்றான்"[16]

என்கிறார். மனிதனது செயல்கள் அனைத்திற்கும் இறைவனே காரணம் என்னும் கருத்தில்

"நடப்பது நடந்தே தீரும்
நல்லிறை அருளின் தீர்ப்பு" [17] **என்கிறார்.**

இறைவனை வேண்டுவதன் மூலமாகவே நல்விதியைப் பெறலாம் என்ற வைதீக நம்பிக்கையை

"வேண்டுவது நம் பொறுப்பு, விழைவு நேர்தல்
வினைமாட்சி முடிப்பவனின் விழைவே யாகும்!
நீண்டுறைந்து நெக்குருகச் செய்வதெல்லாம்

நிலையாண்மைப் படைப்பாளன் நிகழ்த்தும் விந்தை!" [18]

என்னும் வரிகளில் பாடுகிறார்.

முடிவுரை

மனித வாழ்வின் செயல்களைத் தீர்மானிப்பது எது? என்னும் சிந்தனையின் விளைவாகத் தோன்றிய ஊழ்க் கோட்பாடு, வினைக் கோட்பாடு, இறைக்கோட்பாடு ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்த 'விதி' பற்றிய நம்பிக்கைகளைக் கவிஞர் மு.தங்கராசன் தன் கவிதைகளில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை இக்கட்டுரை விளக்க முயன்றுள்ளது. கவிஞர் 'விதி' பற்றிய இந்த மூன்று வித நம்பிக்கைகளைக் கொண்டவரா அல்லது சமூகத்தின் கருத்தையே தம் கவிதைகளில் கையாண்டுள்ளாரா என்பதற்கு அவரே இவ்வாறு பதில் கூறுகிறார்.

"மரபு வழி போற்றி முன்னோர்கள் சொல்லி வைத்துள்ள கருத்துக்களுக்குப் புதிய வடிவம் தந்துள்ளேன். வண்ணங்களும் வடிவங்களும் புதியனவாக இருக்கலாம்; எண்ணங்களும் எழுச்சிகளும் முன்னோர்தம் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே அமைகின்றன. எனது கவிதைகளின் நுகர்ச்சிகளும் அந்த அடிப்படையில் அமைந்தனவேயாகும்."

'விதி' பற்றி சமூகத்தில் நின்று நிலவும் மூன்றுவிதமான கருத்துக்களை மு.தங்கராசன் உய்த்துணர்ந்து வெளிப்படுத்தி, கவிதை என்பது சமூக மனத்தின் குரலாகவும் காலத்தின் குரலாகவும் இருப்பதை நிறுவியிருக்கிறார்.

குறிப்புகள்

மு.தங்கராசன், உதயம், விஜயா சபரி பதிப்பகம், முதற்பதிப்பு 1988

திருக்குறள், திருவள்ளுவர், குறள் எண்: 380,

சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை 27:159-62,

கணியன் பூங்குன்றனார், புறநானூறு, பாடல் எண்: 192,

மு.தங்கராசன், மாதுளங்கனி பூவழகி பதிப்பகம், முதற்பதிப்பு டிச'1989, மேலது "

மு.தங்கராசன், உதயம் விஜயா சபரி பதிப்பகம்முதற்பதிப்பு -1988.

மு.தங்கராசன், நித்திலப்பூக்கள், தி நேசனல் பிரிண்டர்ஸ், நெய்வேலி-803. முதற்பதிப்பு டிச'2001

மு.தங்கராசன், மாதுளங்கனி, பூவழகி பதிப்பகம், முதற்பதிப்பு டிச'1989.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் 7:52,

சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை (வஞ்சி மாநகர் புக்க காதை -26),

முன்றுரையரையனார், பழமொழி நானூறு (130),

திருக்குறள், திருவள்ளுவர், திருக்குறள் எண்:319,

மு.தங்கராசன், மாதுளங்கனி பூவழகி பதிப்பகம், முதற்பதிப்பு டிச'1989,

தொல்காப்பியம், தொல்காப்பியர்

மு.தங்கராசன், மாதுளங்கனி, பூவழகி பதிப்பகம், முதற்பதிப்பு டிச'1989,

மு.தங்கராசன், நித்திலப்பூக்கள், தி நேசனல் பிரிண்டர்ஸ், நெய்வேலி -803, முதற்பதிப்பு டிச'2001,

மு.தங்கராசன், மாதுளங்கனி, பூவழகி பதிப்பகம், முதற்பதிப்பு டிச'1989,

மு.தங்கராசன், பனித்துளிகள், பூவழகி பதிப்பகம், சென்னை-14.

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனாரின் படைப்புத் திறனில் சமூகச் சிந்தனையும் தமிழ் வளர்ச்சியும்

பேரா. பா. முத்தீஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி
போடிநாயக்கனூர்

புலம் பெயர்ந்த தமிழர்களில் தமிழைப் புனரமைத்தவர்களில் தசாவதார தமிழறிஞர் தங்கராசனார் அய்யா தலைத்தோங்கினார் என்பது இந்த மணக்கும் மல்லிகையில் மணம் கமழ்கிறது. இச்சிறுகதையில் இவர் வார்த்த வார்த்தைகள் தமிழ் எனும் உடம்பைக் கெடுக்கப் பொறுக்கி எடுத்த நொறுக்குத் தீனிகள் அல்ல. இது கல்வெட்டுச் சிந்தனையில் காலத்தால் அழியாத காவியம் எனக் கண்டுணர்ந்தேன். சிறுகதை எனும் சிறு கூண்டில் இந்தக் தமிழ்க்கிளியை அடைத்திட முடியாது. இவரின் எண்ணச் சிறகுகளை எடுத்து இயம்ப குறிப்பிட்ட வார்த்தைகளால் வடித்து எடுக்க இயலாது. இந்த 'மணக்கும் மல்லிகையின் தூளியும் தொட்டிலும்' புறத்தே தோன்றிய புழுகு மூட்டைகள் அல்ல. இது அகத்திலிருந்து பிறந்த அஸ்திவாரங்கள்

கதைக் கரு

சமூகத்தின் ஏக்கங்களையும் வாழ்வியல் சிந்தனைகளையும் சிறுகதைக்காக மட்டும் வடித்து தராமல், வருங்காலத்தில் வரும் வாழையடி வாழைகளுக்கு ஆக்கும் திறனை அள்ளித் தந்துள்ளார் என்பது நான் இவர் தமிழைச் சுவைத்ததில் திகைத்து நின்ற தருணங்கள். இவர் படைப்பில் பெயருக்காக பெயர் வைக்கமால் பெரும் சிந்தனையின் துணையோடு அரும்பெரும் கருத்தை, தன் ஆவலை, அணிகலன்களாய் 'அன்பானந்தன்' என பெயரிட்டு சிறுகதையில் அன்பும் ஆனந்தமும் மனித மாண்பிற்கு மகத்தானது என்ற உட்கருவைக் கதைக்கருவை, கனியமுதுடன் தலையாய தமிழால் மணக்கும் தமிழில் தந்த இவரது படைப்புத் திறனை உயர்த்திச் சொல்லி, உணர்வால் நிறைந்தேன். 'தூளியும் தொட்டிலும்' எனும் சிந்தனையில் தோரணத் தொட்டிலைவிட செவிலித்தாயின் தொங்கும் சீலையில் வாரணம் ஆயிரத்தின் வல்லமை கிடைக்கும், வரம் தரும், அன்பு வாய்க்கும் என்ற உட்கருவை உயர்த்தி பிடித்ததால் இச்சிறுகதையின் கதைக்கருவின் கண்ணியத்தைக் கண்டுணர்ந்தேன். தாய்ப்பால் ஊட்டினால் தங்கமேனி தரம் குறையும் என்ற மாய வாழ்க்கையை தன் தூய தமிழால் துடைத்தெறிந்ததை வாசிப்பில் துய்த்துணர்ந்தேன்.

படைப்பாளி செந்தமிழை மட்டுமே சுவாசிப்பாரோ?

படைப்பாளர் இப்படைப்பில் கையாண்ட தமிழ்ச் சொற்கள் தற்போதைய வழக்குச் சொற்களால் வார்த்திருக்கலாம். ஆனால்

இவரது பதிவுகள் அத்துனையும் அழகுத் தமிழிலே மிளிர்கிறது. “கையடக்க தொலைபேசி” எனப் பதிவு செய்தது “ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என எண்ணத் தோன்றுகிறது. வார்த்தைகளைத் தெளிந்தெடுத்து நம் தமிழ்ச் சிந்தனையில் தெளித்திருக்கிறார் என்பதால் இவரது படைப்புகள் முழுவதையும் நமக்குக் கிடைத்த “தமிழ்ப் புதையல்” என அறிய முடிகிறது. இவரது தமிழார்ந்த படைப்பை வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது நமக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே தெளிய முடிகிறது. எப்படி ஒரு படைப்பாளி தனது சிந்தை துளியளவும் மாற்று மொழிக்கு மண்டியிடக்கூடாது என்ற மனப்பாங்கில் ஆயுள் முழுவதும் ஆயத்தமாகி இருப்பது இவரது படைப்பில் பளிச்செனப்படுகிறது. தான் அறிந்த தமிழை அச்சு அசல் மாறாமல் அப்படியே அடுத்த தலைமுறைக்கு தந்திடும் எண்ணம் உள்ளது என்பதும், இவரால் இத்தரணியில் தமிழ்த் தலைத்தோங்கும் என்பதும், இவர் சொல் தமிழ்ச் சொல்லின் தலைமையிடம் என்பதும், படைப்பாளி செந்தமிழை மட்டும் சுவாசிப்பவர் என்பதும், இவரது சுவாசத் தமிழை நாம் நேசித்ததும் வாசித்ததும் காலம் நமக்கு தந்த கொடை என்பதும் ஆகச் சிறந்த உண்மை ஆகும்.

பெயர் சூட்டுவதில் பெருமிதம்

இச்சிறுகதையில் ஆசிரியர் கதை மாந்தர்களின் பெயர் சூட்டியதில் நான் பெருமிதம் கொள்கின்றேன். இப்படைப்பில் அன்பானந்தனின் தாய்க்கு அன்பழகி என்றும் செவில்த்தாயாய் உருவெடுத்த பணிப்பெண்ணிற்கு அழகம்மாள் என்றும் பெயர் சூட்டியதில் படைப்பாளியின் உண்மை முகத்தை கதை வடிவில் உருக்கித் தந்துள்ளார். இந்த அழகு அம்மாளுக்கு தாய்மை உணர்வு மிகுந்தோங்கி கிடக்கிறது என்பதால் அழகம்மாள் என்றும், குழந்தை மீது அன்பு மிகுந்திருந்தாலும் தாய்ப்பால் கொடுப்பதால் தன் மேனியழகு குன்றிடுமோ என்று எண்ணி காலச் சூழலில் கட்டுண்டு கிடக்கிறாள் என்பதால் அவளுக்கு ‘அன்பழகி’ என்றும் பெயரிட்டாரோ எனக் கருதத் தோன்றுகிறது.

இருட்டறையில் புட்டிப்பால் குடித்து கிடந்த புதல்வனுக்கு சூரிய ஒளியாய் வந்த அழகம்மாள் தாய்ப்பால் ஊட்டியதால் அவனுக்கு அன்பும் ஆனந்தமும் கிடைத்தது என்பதை சுட்டிக்காட்டி அந்தப் பிள்ளைக்கு ‘அன்பானந்தன்’ என்ற பெயரைப் படைப்பாளர் வைத்தார் என்று எண்ணத் தோன்றுகிறது. இல்லத்திற்கு செல்வத்தை ஈட்டி வரும் நாதனுக்கு ‘செல்வநாதன்’ எனப் பெயரிட்டது பெருமிதம் கொள்ள வைக்கிறது. குடும்பத்து மூத்த குடிமக்களுக்குச் பெயர் சூட்டும்போது பார்த்துப் பார்த்து பெயர் சூட்டினார் போலும், இல்லத்தில் அம்பிகை எனும் தாய்மைக் கோயிலின் தெய்வத்துடன் மணியோசையுடன் அன்போடு வாழ்ந்து வந்ததை நமக்கு சொல்ல அன்புமணி என்றும் கனகாம்பிகை என்றும் பெயர் சூட்டினார் போலும். இவரது படைப்பு ஆகச் சிறந்த படைப்பு என்பதையும் பெயர் சூட்டுவதில் பெருமிதம் கண்டதையும் நானறிந்தேன்.

ஏக்கத்தில் ஆக்கம்

இச்சிறுகதை கருத்தாவான அழகம்மாள் வறுமையின் பிடியில் வாடிக் கொண்டுள்ள

நாமும் செல்வச் செழிப்பாய் வாழ்ந்திடலாம் என்ற ஏக்கத்தோடு சம்பாதிக்க பல சந்தர்ப்பங்கள் வந்ததும், தான் பெற்ற செல்வத்தைப் பிரிந்து அன்பிற்கு ஏங்கும் அன்னப்பறவையாய் அயல்நாடு சென்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் மணித்துளிகளில் மகளுக்கு பதிலாக ஒரு மகவிற்கு தாய்ப்பால் கொடுத்து தாகம் தீர்த்ததும், "ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்" என்ற வார்த்தைகளை கொண்டு வந்து வடித்துச் சிற்பம் செய்ததும் அழகம்மாளுக்கு ஏக்கத்திலும் ஆக்கம் நிகழ்ந்தது என்று வாசிப்பவரை வசப்படுத்திய திறன் படைப்பாளியின் பல்வகைத் திறனை எடுத்தியம்புகிறது.

எப்படி சொல்வேனென்று இப்படிச் சொன்னாரோ?

தன் தாயை ஏழு மாதத்தில் பிரிந்து தன் தாயின் கைகளிலிருந்து தன் பாட்டியின் அரவணைப்பிற்கு புலம் பெயர்ந்ததாலும் தன் தாய் நாட்டை விட்டு காலத்தின் கட்டாயத்தால் பிழைப்புத் தேடி உயிர்கொடுத்த தந்தையோடு அயல்நாடு புலம்பெயர்ந்ததையும் தன் வளர்ச்சிப்பாதைக்கு வாய்ப்பு வந்த போதும் பெரியோரால் திருமணம் முடிந்தவுடனே பிரிந்து செல்ல வேண்டாம் என்று தடுத்தாட்கொண்டதால் பிறிதொரு நாள் மலேயாவிலிருந்து சிங்கப்பூருக்கு சென்றதும் என்று எத்தனையோ வடுக்களை எப்படி சிலையாய் வளர்ப்பது? தம் உள்ளுணர்வுக்கு எப்படி உயிர் கொடுப்பது? இரத்தத்தின் பரிசத்தில் யுத்தம் போட்டுக் கொண்டிருக்கும் எண்ணக் குமுறல்களை எப்படி சிறகடிக்கச் செய்வது? இதயத்தில் பூத்த எண்ணங்களை எப்படி சபையில் தோரணமாய்க் கட்டி அழகு பார்ப்பது? வளர்ந்த பருவத்தில் தன்னை வாட்டி வதைத்த வார்த்தை அம்புகளால் எப்படி வெற்றித் திலகத்தை முத்தமிடுவது? ஊனொடும் உயிரொடும் ஓடிக் கொண்டிருந்த தடைக் கற்களை எல்லாம் தட்டி எறிந்து வெற்றிப் படிக்கட்டுகளில் வீறு நடை போட்டதை எப்படி வெளிச்சத்திற்குக் கொண்டு வருவது? என்று சிந்தித்ததை, செயல்படுத்தியதை எப்படிச் சொல்வேன் என்று இச்சிறுகதையின் கதைமாந்தர்கள் வடிவில் இப்படிச்சொன்னாரோ? என எண்ணத் தோன்றுகிறது.

காலத்தால் அழிந்திடுமென இக்கல்வெட்டில் பதித்தாரோ?

வழக்காறு மொழிகள் வலுவிழந்து கொண்டிருக்கும் இச்சூழலில், தமிழ் வார்த்தைகள், மாற்று மொழிகளால் செல்லரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தன்னால் முடிந்த மட்டும் மூத்தோர் உதிர்த்த பழமொழி முத்துக்களை அடுத்தடுத்த தமிழ்ச் சமூகத்திற்கு அள்ளித்தரலாம் என்று எண்ணியோ காலத்தின் கோலத்தை தன் வார்ப்பில் வடிக்க,

" அவனின்றி ஓர்அணுவும் அசையாது"
"நினைப்பது நாமாயினும் முடிப்பது அவன்"
"எல்லாம் அவன் செயல்" என்ற பொன்மொழிகளை

தன் படைப்பில் பதிவு செய்துள்ளார். மேலும் அழகம்மாளுக்கு பல வாய்ப்புகள் வந்தும் தன் கை நழுவி போய்விட்டது என்பதை சொல்லவோ அல்லது ஆசிரியர் தன் சொந்த

வாழ்வில் தான் திருமணம் ஆன புதிதில் தந்தையாரின் அன்பிற்கு கட்டுப்பட்டு அயல்நாட்டுப் பணிக்கு ஆவலாய் இருந்தும் காலக் கைவிலங்கில் கட்டுண்டு கிடந்த தன் கதையைச் சொல்லத் துணிந்தாரோ என்னவோ?

"உடம்பு நிறைய எண்ணெய தேய்ச்சிட்டு மணலில் கிடந்து புரண்டாலும் ஒட்டுற மண்ணுதான் ஒட்டும்" என்ற உலக நியதியை தன் படைப்பில் உயர்த்திப் பிடித்துள்ளார்.

மேலும்,

"இல்லையோர் பிள்ளையென ஏங்குவோர் பலரிருக்க இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே"

எனும் திரைப்பாடலை இங்கு பதித்ததை நாம் சாதாரண வார்த்தைகள் என்று முடித்து விடக்கூடாது. இச்சிறுகதையில் அழகம்மாள் தன்னைத் தானே சாடிக் கொள்கிறார் என்பதற்காகவும், தன் குழந்தைச் செல்வம் அம்புஜத்தை எண்ணி வருந்துகிறார் என்பதிற்காகவும், இப்படைப்பாளர் இப்பாடலை பதிவு செய்ததாகவே நமக்கு தோன்றுகிறது.

சட்டியில் இருந்ததால் தான் இந்த அகப்பைக்கு வந்ததோ?

இப்படைப்பில் படைப்பாளரின் முக்கிய கதை மாந்தர் அழகம்மாளுக்கு வெளிநாடு சென்று தன்மானத்துடன் வருமானம் ஈட்டி தன் குடும்பத்தின் வறுமை நிலையை மாற்ற எண்ணி, முகவரை சந்தித்து வேலை கோரி வாய்ப்புகள் வரும்போது தமது குடும்பத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்க திருமணம் செய்து கொண்டு, தனது அவாவை உள் வைத்து பூட்டி உறங்க வைத்து மீண்டும் பணிவாய்ப்பு கிடைத்ததும் பிழைப்புக்காகத் தன் பிள்ளையைப் பிரிந்து வாழும் சூழலையும், தன் பிள்ளைகளுக்கு தான் விரும்பும் பெயரை வைத்திட முடியாது, தன் பெற்றோர் இட்ட தமிழ்ப்பெயரை மறுக்காது ஏற்றுக் கொண்ட செல்வநாதன் அன்பழகி தம்பதியின் "பெரியோர் சொல் கேளல்" எனும் பதிவினையும் ஆய்ந்தறியும் போது படைப்பாளர் தன் சொந்த வாழ்நாளில் "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்ற பொன்மொழிக்கு இணங்க வாழ்ந்த ஒழுக்கம், சட்டியில் இருந்ததால் தான் இச்சிறுகதையெனும் அகப்பைக்கு வந்தது என்பதை அறியலாம்.

ஆபரணத்தில் செய்கூலியும் உண்டு சேதாரமும் உண்டு

இந்த 'மணக்கும் மல்லிகையில் தூளியும் தொட்டிலும்' எனும் கதைக்கருவை காணும் போதும் கதை மாந்தர்களை வடிவமைக்கும் போதும் ஒரு தருணத்தில் ஏற்படும் இழப்பை, ஏக்கத்தை மற்றொரு கதை மாந்தரைக் கொண்டு நிவர்த்தி செய்திருப்பது இவரது படைப்புத் திறனாகும். அதாவது அன்பானந்தன் ஏக்கத்தை அழகம்மாள் சரி செய்தாள். அன்பழகி தனது நிலைப்பாட்டை உணர்ந்து கடைசியில், கதைச் சிதைவினை ஏற்படுத்ததாது அன்பெனும் வட்டத்திலே பயணித்தார். மேலும் அன்புமணி, செல்வநாதன் மற்றும் கனகாம்பிகை ஆகியோர்கள் தமிழ்ச் சமூகத்தின் அங்கமாக திகழ்ந்தார்கள். இவ்வனைத்தையும் உற்று நோக்கும் போது இந்த சிறுகதையெனும் ஆபரணத் தங்கத்தை செதுக்கியதில் படைப்பாளர் "இது சிறந்த படைப்பு" எனும் செய்கூலி பெற்றுவிட்டார். மேலும் இச்சிறுகதையின்

சாலச்சிறந்த கதாப்பாத்திரம் அழகம்மாள் தன் அம்புஜத்தையும் தன் குடும்பத்தையும் பிரிந்ததை சேதாரமாக கொடுத்து அன்பானந்தனை தங்கமாகச் சூடிக் கொண்டாள். ஆதலால் இப்படைப்பிற்கு செய்கூலியும் உண்டு சேதாரமும் உண்டு என்பது இப்படைப்பில் தெளிவாகிறது.

தெள்ளு தமிழின் தேன்சுவை தித்திக்கிறதே

படைப்பாசிரியர் கையாண்ட சொற்கள் பிறமொழி கலப்பின்றி பதிவாகியுள்ளது. தன் படைப்புகள் அத்துனையிலும் பொது நோக்கத்தை, சமூக நீதியை, நல்லொழுக்கப்பண்பை மற்றும் நேர்மறை சிந்தனையை பதிவு செய்து வைத்திருப்பது "குன்றின் மேலிட்ட விளக்காய்" மிளிர்கிறது. வார்த்தையின் கோர்வை, கதைப் படைப்பில் சமூகத்தின் மீது அவர் கொண்ட பார்வை, பெண்களின் இல்லச்சுமை மற்றும் உள்ளச் சுமையை எடுத்தியம்பியது, பழந்தமிழரின் வாழ்க்கை வழக்காறுகளைத் துளியும் சிந்தாமல் அள்ளிக் கொடுத்தது, இந்த மழைத்துளிகள் விழலுக்கு இறைத்த நீராகாமல் விளைச்சலுக்கு வழி செய்தது மேற்கண்ட அத்துனையிலும் பன்முகச் சிந்தனையாளர், தசாவதார தமிழறிஞர், சிங்கப்பூர்த் தங்கராசனாரின் தெள்ளு தமிழின் தேன் சுவை, வாசிக்கும் நம் நாவில் தித்திக்கிறது என்பதை இத்திறனாய்வில் தெரிந்து கொண்டேன்.

மாதுளங்கனி கவிதைத் தொகுப்பில் உழைப்பின் மகத்துவம்

பேரா. து. முத்துக்குமார்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

முன்னுரை

இந்த மாதுளங்கனி என்றும் இக் கவிதைத் தொகுப்பில் ஆசிரியர் மு.தங்கரசனார் ஆவார். சிங்கப்பூரில் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்து எழுத்தாளர்களில் தமிழருக்குத் தொண்டாற்றிய மிக முக்கியமான எழுத்தாளர் ஆவார். இப்பெருமகனார் கவிஞராக மட்டுமல்லாமல் சிறுகதைப் படைப்பாளிபாகவும் உள்ளார். மலர்க் கொத்து பூச்செண்டு போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் 'மகரத்தம்' 'மாதுளங்கனி' உதயம் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அளித்துள்ளார். அயலகத்தில் பெறும் படைப்பாளியாக மட்டும் இல்லாமல் எழுத்தாளர்களை படைப்பு ரீதியாக ஒருங்கிணைக்கும் உயர்வான பணியையும் செய்தார். கவிஞர். மு.தங்கரசனார் கவிஞர் மட்டுமல்லாது பல்துறை வித்தகராகவும் வலம் வந்தார். மேடைப் பேச்சாளர், நடிகர் பாடலாசிரியர் போன்ற பன்முக ஆளுமைத் திறனையும் கொண்டு படைப்புலகில் தனக்கென தனி முத்திரையை பதித்தவர் ஆவார். அன்னாரது தமிழ் இலக்கிய படைப்புகள் நாட்டின், சமூகத்தின் ஏற்றத்தினை நோக்கமாகக் கொண்டு வெளிவந்தன எனலாம். தனது படைப்புகளில் சமுதாய வளர்ச்சிக்கான கருத்துக்களை குன்றாமல் பார்த்துக் கொண்டார். தங்கராசனார் அவர்களது பல கவிதைகளை வாசிக்கும் பொழுது தன்னம்பிக்கையும், நாளும் குன்றாத புத்துணர்ச்சியும் மனதில் உருவாவனத் தவிர்க்க இயலவில்லை. மேலும் மு.தங்கராசனார் கவிதைகளில் உழைப்பு என்றும் வியர்வைக் கொள்கை வேரூன்றி வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. உண்மை உழைப்பு போன்ற உழைப்பாளர்களின் கொள்கை வழிப்பாதைகளை தனது கவிதைகளில் எவ்வாறு உருவாக்கியுள்ளார் என்பதனைக் காணலாம்.

கவிதைகளில் உழைப்பு பற்றிய கருத்துக்கள்

'இயல்பும் எதிர்ப்பார்ப்பும் எனுக் கவிதைகளில் இடம்பெறும் வரிகள் உழைப்பின் மேன்மையை எடுத்துக் காட்டுவதன் உள்ளது.

'ஊருக்கு உழைப்பார்தம்
உண்மையெதிர் பார்ப்பெல்லாம்
தேருக்கு பொன்னழகு
தேர்ந்து வரும் மாட்சிமைபோல்
பாருக்குள் சமுதாயம்
பதிந்துவர வேண்டுவதாம்.

பக்கம்-54

உழைப்பார்கள் என்றுமே தனக்காக மட்டும் உழைப்பதில்லை. உழைப்பின் மருத்துவம் என்பது அது ஒருசாரருக்கு மட்டும் பயன்படுவதாக இருக்காது என்பதாம் உழைப்பவர்களின் பெருமையும், மனநிலையும் பிறர் நலன் சார்ந்து உழைப்பது என்பதாம்.

கவிஞர் மு.தங்கராசானார் பாடல்களில் உழைப்பு

கவிஞர் மு.தங்கராசனார் பாடல்களில் உழைப்பு பற்றிய கருத்துக்களும், நடையும் பாரதியார் பாரதிதாசனார் போன்ற கவிதை ஆளுமைகளின் கவிதைகளை பூத்து அமைந்துள்ளதைக் காணலாம். 'புத்தாண்டு வரவு' கவிதையில்

'தாழ்ந்து வரும் தன்மையெலாம் உழைப்பால் ஓங்கித்
தகனவியெலாம் தழைத்துவரும்; தாழ்க்கை தீசம்'

-பக்கம்-6

'ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஓங்கு கல்வியுழைப்பை மறந்தீர்!

-பக்கம்-206.

இரு கவிஞர்களுமே தாழ்ந்து வரும் நிலைமைக்கு உழைப்பு என்ற ஒன்றினை மறந்ததுதான் காரணம் என்றும், ஓங்கிய உயர்விற்கு உழைப்பு எனும் செயல்பாடே காரணமென்றும் கூறுகின்றனர். மு.தங்கராசனின் உழைப்பு பற்றிய பாடல் கருத்துக்கள் தனது முன்னோடியான மகாகவி பாரதியாரின் உழைப்பு பற்றிய கவிதை கருத்தாக்கத்தோடும் ஒன்றிப் போவதைக் காணமுடிகிறது.

மேலும் மு.தங்கராசனாரின் சில உழைப்பின் மகத்துவத்தைக் சொல்லும் கவிதைகள் புரட்சிக்கவி பாரதிதாசனாரின் பாடல் வரிகளோடு இணைவதைக் காணலாம். உழைப்பு சார்ந்து வாழ்பவர் இச்சமுதாயம் உயர்ந்து வாழவேண்டும் என்பதாகும். உழைப்பவர்களின் மனதில் இருந்து இயக்கும் உண்மை உழைப்பு ஆகிய எண்ணங்கள் அவர்களையும் உயர்த்தி ஊர் மற்றும் உலகம் எனும் மனித சமுதாயத்தையும் உயர்த்துவதாக இருக்கும் என்பதனை இக்கவிதை வரிகளின் செய்தியாக அமைகிறது எனலாம்.

'எது பெருமை?
எது சிறுமை?
எனும் கவிதையில்
பாருக்கே உழைக்கும் நல் பான்மை ஓங்கிய
பழுதான சிறுமையெலாம் பறந்து போகும்!"

-பக்கம்-59

உழைப்பாளர்களின் குணமாக கவிஞர் மு.தங்கராசனார் கவிதைகளில் உணர்த்தும் விசயமென்பது உலகத்திற்கு உழைக்கும் மக்களின் பண்புகள் என்பது மற்ற எல்லா சிறுமைகளையும் இல்லாமல் போக்கும் குணமுடையதாம் என்கிறார். உழைக்கும் உழைப்பாளர்களே இவ்வுலகத்தினை உய்விக்க வந்தவர்கள் என்கிறார். உழைப்பு எனும் செயல்பாடு மனித மனங்களில் உள்ள எல்லா கள்ளங்களையும் நீக்கிவிடும் தன்மையைக் கொண்டிருக்கிறது என்கிறார். உலகத்தின் சிறுமைகளையெல்லாம் உழைப்பு எனும் ஆயுதம் போக்குகிறது என்கிறார்.

மு.தங்கராசனாரின் உழைப்போரே உயர்வர்' எனும் கவிதை வரிகள்

'உலகத்தின் பல்வேளாய் ஒளிர்த்து நிற்கும்
உயர்துறைகள் ஓவ்வென்றில் உழைத்த நல்லோர்
உலகத்தின் வளர்ச்சியினை உள்ளங் கொண்டு
உவமையிலா உழைப்பதனை ஒறுத்து தந்தே
உலகத்தின் நிலையின்ப ஊற்றும் கெல்லாம்
ஒண்மதியம் வளர்பிறைபோல் உயர்ந்து ஓங்கி
உலகத்தின் உயர்வுக்கால் உழைத்த சான்றோர்
ஓருமுகமாய்ப் புகழ்வெற்றார் உலக நோக்கில்

-பக்கம் -100

புரட்சிக்கவி பாரதிதாசனாரின் உழைப்பின் வல்லமையைச் சொல்லும் கவிதை வரிகள், 'மக்கள் நிகர்' கவிதையில்

"தொழிலெல்லாம் நின்று விட்டால்
எழிலெல்லாம் பறிகொடுக்கும் இந்தவுலகம்
எல்லாரும் தொழிலாளர்
எல்லாரும் ஆளவந்தார் என்றாக்குவோம்"

-பக்கம்-444

கவிஞர் மு.தங்கராசனார். அவர்களின் உழைப்பு பற்றிய கவிதை வரிகள் முன்னோடி கவிஞரான பாரதிதாசனாரின் கவிதைக் கருத்தோடு ஒத்துள்ளதைக் காணலாம்.

உழைப்பு ஒன்றே நம்மை உலக அளவிற்கு உயர்த்தும் இந்த உலகம் தொழில்புரிவதை, தொழிலாளர்களை இழந்து விட்டால், தனது இயக்கத்தினை நிறுத்திக் கொள்ளும் தொழிலாளர் எத்துறையில் உழைப்பினை மேற்கொண்டாலும் அத்துறை உலகில் உயரும், தொழிலாளர்களும் தனது உழைப்பினால் உலகில் உயர்வினை அடைவர் என பாரதிதாசனும் அவர்வழி மு.தங்கராசனாரும் உழைப்பின் காரத்தினை தங்களது கவிதைகளில் ஓரே மாதிரியாக வெளியிட்டுள்ளதைக் காணலாம்.

முடிவுரை

கவிஞர் மு.தங்கராசனார் சிங்கப்பூர் உழைப்பிற்கு பேர் பெற்ற நாட்டினில் வாழ்ந்திவர் தனது இலக்கியத்தின் பாற்பட்ட உழைப்பினால் இலக்கியத்துறையில் குறிப்பிட்ட இடத்தினை தக்க வைத்துள்ளார். தனது 'மாதுளங்கனி' எனும் கவிதைத் தொகுப்பினில் உழைப்பிற்கும், அதன் மகத்துவத்தை எடுத்துச் செல்வது போலவும், பலகவிதைகளை வடித்துள்ளதைக் இவ்வாய்வின் வழி கண்டோம். மனித வாழ்விற்கு, அவனது உயர்விற்கு உழைப்பு ஒன்றே மூலதனம் எனும் கருத்தினை இவரது கவிதைகள் ஆணித்தரமாகக் கூறுகின்றன. தனது கவிதை உலகில் முன்னோடிகளான மகாகவி பாரதியார். புரட்சிக்கவி பாரதிதாசன் போன்றோரின் கவிதைக் கருத்துக்களை ஒத்தும் கவிதைகள் படைத்திருப்பதை இவ்வாய்வின் வழி காணலாம்.

முதன்மைச் சான்றாதாரங்கள்

'மாதுளங்கிளி' மு.தங்கராசனார். பூவழகி பதிப்பகம், 29/2, சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

துணைமைச் சான்றாதாரங்கள்

மகாகவி பாரதியார் கவிதைகள், பாரதியார் சிந்து வெளியீடு சி.ஐ.டி.நகர், சென்னை - 600 035.

பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசன் தீ இந்து வெளியீடு, கிழக்கு சி.ஐ.டி. நகர், சென்னை-600 035.

புலம்பெயர் தமிழரின் நாட்டார் வழக்காற்றியல் பதிவுகள்

முனைவர் பெ.முத்துராஜ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் விழுமியங்களை விளக்கும் அறிவியலே நாட்டுப் புறவியலாகும். அந்நாட்டுப் புறவியலில் தொன்மக்காலப் பழங்குடிகளின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சமயம் இவை ஏட்டில் எழுதா வாய்மொழி இலக்கியங்களாக மரபு வழியாகப் பின்பற்றப்படுகின்றன. நாட்டுப்புறவியலைக் குறிக்கும் என்ற சொல் 1846 ஆம் ஆண்டில் வில்லியம் ஜான் தாமஸ் அவர்களால் உருவாக்கப் பெற்றது. இதற்குப் பிறகே இத்துறையில் முறையான ஆய்வுகள் தொடங்கிற்று என்ற இரட்டைச் சொல் நாட்டார் வழக்காற்றியலைக் குறிக்கிறது. நாட்டார் வழக்காற்றியல் என்பது மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கைகள், இலக்கியங்கள், கதைகள், பழமொழிகள், வாய்மொழி வரலாறு, விடுகதைகள், வாய்மொழிப் பாடல்கள், கதைகள் போன்றவற்றைச் சேகரித்து வகுத்து, தொகுத்து, ஆராய்ந்து ஆவணப்படுத்தும் அறிவுத் துறையாக மலர்ந்தது. இத்துறையின் வளர்ச்சியானது நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வுகள் மொழியியல், பண்பாட்டு மானுடவியல் அணுகுமுறைகளிலும் நிகழ்ந்து வருகிறது. இவ்வறிவுத்துறையின் முன்னோடியாக வில்லியம் ஜான் தாமஸ் விளங்கியுள்ளார். நாட்டார் வழக்காற்றியல் என்னும் சொல்லாட்சியை நா.வானமாமலை முதலில் பயன்படுத்தியுள்ளார். அதன் பின் பேரா.தே.லூர்து 1981 ஆம் ஆண்டு நாட்டார் வழக்காற்றியல் துறையைப் பாளையங் கோட்டை சவேரியர் கல்லூரியில் தொடங்கினார். இவ்வாறாக நாட்டுப்புற மக்களின் பண்பட்ட வாழ்வியலோடு இரண்டரக் கலந்த படைப்பாளர்கள் சமூக வரலாற்று எச்சங்களையும் மொழியியல் அடிப்படைக் கூறுகளையும் வாய்மொழி மரபுகளையும் நன்குணர்ந்தவர்கள். இவர்கள் நாட்டார் மணம் கமழும் வழிபாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், காதல் பாடல்கள், பன்மலர்ப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என்னும் பாடல்களைச் சேகரித்து, வகுத்து, வெளிப்படுத்துகின்ற தன்மைக்கும் புலம் பெயர்ந்த படைப்பாளர்கள் தன்மண்சார்ந்த பூர்வக்குடியின் கடந்த கால நிகழ்வுகளை ஆவணப்படுத்துகின்ற நிலை யென்பது வேறுபட்ட ஆய்வு நுணுக்கங்களளைப் பெற்று அமைகிறது. அந்த வகையில் திருச்சி மாவட்டம் தளுகை பாதர் பேட்டை என்னும் கிராமத்தில் பிறந்த மு.தங்கராசன் அவர்கள் தன்னுடைய மூன்று வயதில் புலம்பெயர்ந்து மலாயா சென்ற

போதிலும் தம்முடைய பூர்வக்குடியின் மணம் மாறாது நாட்டார் வழக்காற்றியல் பதிவுகள் தன்னுடைய நாட்டுப்புறத்தில் என்னும் நூலில் பதிவு செய்துள்ளவைப் பற்றி கண்டறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டார் வழக்காற்றியல்

நாட்டார் வழக்காறுகள் தொடக்க காலங்களில் வாய்மொழி மரபுகளைச் சேகரித்து ஆவணப்படுத்துவனாக மட்டுமே விளங்கின. பின்னர் பண்பாட்டு மானுடவியலின் ஓரங்கமாயின. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளை மையமாகக் கொண்டு நாட்டார் வழக்காற்றியல் என்ற தனி அறிவுத் துறை உருவானது. ஜேம்ஸ் ஃபிரேசர் என்ற மானுடவியலாளர் நாட்டார் வழக்காறுகள் தொடர்பாக 1908 ஆம் ஆண்டின் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். பண்பாட்டு நிலையில் உயர்ந்து விளங்கும் மக்களிடையே புராதனச் சிந்தனைகள், நடைமுறைகள் ஆகியன எஞ்சி நிற்கும் போது அது நாட்டார் வழக்காறாகும். இவ்வாறு கடந்த காலத்தின் மிச்சங்களைச் சுமந்து நிற்கும் ஒன்றாகவே நாட்டார் வழக்காறுகள் பார்க்கப்பட்டது. வாய்மொழி அல்லது எழுதப்படாத சான்றுகளை ஏற்றுக் கொள்வதற்கு வரலாற்றியியலாளர்கள் தயங்குகின்றனர். இத்தயக்கத்திற்குப் பின்வரும் மூன்று காரணங்களைக் குறிப்பிடுவர்.

1. எழுதப்படாதனவும் வாய்மொழி மரபும் நம்பத் தகாதனவாகும்.
2. ஆவணங்கள் பிற சான்றுகளின் துணையுடன் எழுதப்படும் உண்மைகளே நல்ல வரலாறாக இருக்க முடியும்.
3. கல்வியறிவில்லாத மக்கள் காலவரிசை முறையைப் பொருட் படுத்துவதில்லை இதனால் நாட்டார் வழக்காறுகளில் வரலாற்று உணர்வு இருப்பதில்லை.

நாட்டார் வழக்காறுகள் என்பது சமூகத்தில் திட்ட வட்டமான வரையறைகளை உருவாக்கி அதனடிப்படையில் எழுதப்படும் இலக்கிய உருவாக்கத்திலிருந்து முற்றிலும் வேறு பட்டவை. நாட்டார் பாடல்கள் சமூக மக்களின் இயைபுத் தன்மையோடு பணித்தளம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் அடிப்படையில் உருவாக்கப் படுகின்றன. இவ்வழக்காறுகள் பாமரர்கள், கிராமப்புறத்தார்கள் ஆகியவர்களின் வாழ்வியலோடு இணைக்கப்பட்டு அவர்களின் பொருளாதார, பண்பாட்டுப் பின்னடைவுகளோடும் இணைத்துப் பார்க்கப்படுகிறது. நாட்டார் பாடல்கள் மற்றும் கதைகளை மக்களின் சமூக வரலாறு மற்றும் மக்களின் வாழ்வியல் வெளிப்பாடாக வெளிப்பட்டன. நாட்டார் வழக்காற்றியலை நான்கு வகையாகப் பிரிப்பர்.

1. வாய்மொழி இலக்கியம்
2. பொருள்சார் பண்பாடு
3. நாட்டார் நிகழ்த்துக் கலைகள்
4. நாட்டார் சமயம், சடங்கு மற்றும் நம்பிக்கைகள்

நாட்டார் மக்களின் வாய்மொழி இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் கதைகள், கதைப் பாடல் என்று நிலையில் மட்டும் அடங்காது பொருள்சார் பண்பாடு, நிகழத்துக் கலைகள், நிகழ்த்தாக் கலைகள், சமயம், சடங்கு மற்றும் நம்பிக்கைகள் என்னும் அனைத்துக் கூறுகளும் உள்ளடக்கியதாகும்.

இறைவழிப்பாட்டுப் பாடல்கள்

பழந்தமிழ்ச் சமூகம் பலதலைமுறைகளைக் கடந்து வந்த போதிலும் நாகரிக மாற்றத்திற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் பலியாகாமல் தாக்குப் பிடித்து பாமரர்கள், படித்தவர்கள், ஏழை, பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா மக்களிடமும் நின்று நிலவி ஆழவேரூன்றி பழமைத் தன்மை சிதையாது தக்க வைத்துக் கொண்டது தெய்வ நம்பிக்கை, இந்நம்பிக்கை எல்லாவிதமான நம்பிக்கைளுக்கும் மூல நம்பிக்கையாக விளங்குகிறது.

நாட்டார் வழிபாடு என்பது பண்பாடு மரபு சார்ந்த அதிகாரப் பூர்வமற்ற நிறுவன மயமாக்கப்படாத தன்மையில் உள்ளது. இத்தெய்வ வழிபாட்டில் வீட்டுத் தெய்வவழிபாடு, குல தெய்வவழிபாடு, ஊர்த் தெய்வவழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வவழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு அவர்கள் இயற்கையிடமும் மரணத்திற்கும் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை என்று கூறுகிறார். சிறு தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாட்டோடு தொடர்பில்லாதது இருந்த போதிலும் நாட்டுப்புறத்தில் என்ற நூலில் விநாயகர், மாங்கல்யக்காரி, மாரியம்மன், சரஸ்வதி, அன்னைமரி பற்றிய பாடல்களும் இடம்பெற்றுள்ளன. சிறு, பெறு மதத் தெய்வப் பாடல்களும் இந்நூலில் இடம்பெற்றுக் காப்புச் செய்கிறது. ஆதி மனிதனின் நம்பிக்கைகளால் தான் தன்னல உணருவும், சமுதாய உணர்வும் மேலோங்கி நிற்கிறது. நாட்டார் மக்களின் அச்ச உணர்வினாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளை உணரமுடியாத பொழுது மனித மனமானது சிலவற்றிற்குக் காரணம் கற்பித்துக் கொள்கிறது.

“இயற்கைத் தோற்றங்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல், முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின எனக்கூறும் மாக்ஸ் முல்லரின் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது. மு.தங்கராசனின் நாட்டுப்புறத்தில் இறைவழி பாட்டின் திருக்காப்பாக விநாயகர் வழிபாட்டுப் பாடல் இடம்பெற்றுள்ளது. வேளாண் தெய்வத்தின் மூலவராகவே விநாயகர் பாடல் இடம் பெற்றுள்ளது.

“மாட்டுக் கொளப்படையில் மாவுருண்டை ஆயிரமாம்
ஆட்டுக் கொளப்படையில் அதிரசம் ஆயிரமாம்
எருதுக் கொளப்படையில் எள்ளுருண்டை ஆயிரமாம்
கன்னுக் கொளப்படையில் கடலுருண்டை ஆயிரமாம்,
குட்டிக் கொளப்படையில் கொழுக்கட்டை ஆயிரமாம்
இத்தனையும் ஒப்பதமாம் - எங்கள் சப்பாணிப் பிள்ளையார்க்கு”

- (நாட்டுப்புறத்தில், ப.27)

வேளாண்மைத் தொழிலுக்கு வேண்டப்பட்ட தெய்வமாகவும் செழிப்பிற்குரிய தெய்வமாகவும் விநாயகரை கருதுகின்ற தன்மையைப் பதிவிட்டுள்ளார். கொளப் படையில் (கொட்டகையில்) விநாயகருக்கு படைக்கப்பட்ட பலகார வகைகளைப் பட்டியலிட்டுள்ளார்.

நாட்டார் வழிபாட்டு முறைகளில் பெண் தெய்வங்களே மிகுதியாகப் போற்றப் படுகின்றன. இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலம் முதல் இன்று வரை செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் தெய்வ வழிபாடுகள் கருதப்பட்டன. அம்மன் என்ற பொதுப் பெயரால் வழங்கப்படும் பெண் தெய்வங்கள் பெண்மை மற்றும் தாய்மைப் பண்புகள் பெற்று விளங்குகின்றன. நாட்டார் மக்களிடம் தோன்றும் 'அம்மை நோய்' 'மாங்கல்யகாரி' என்ற பெண் தெய்வத்தின் திருவிளையாடலால் தான் தோன்றுகிறது எனக் கருதினர். அதற்கு நேர்த்திக் கடனாக, மாவிளக்கு ஏற்றுவது, கஞ்சி காய்ச்சி ஊற்றுவது, தாலி செய்து போடுவது, தீச்சட்டி ஏந்துவது, கரகம் சுமந்து வருவது என்று நேர்ந்து கொள்கின்றனர். அச்சூழலில் மாரியம்மனுக்குத் தாலாட்டுப் பாடுவதும் உண்டு.

"உச்சியிலே போட்ட முத்தை உடனே இறக்கிவிடு
முகத்திலே போட்ட முத்தை முன்னே இறக்கிவிடு
கழுத்திலே போட்ட முத்தை காணாமல் ஆக்கிவிடு
நெஞ்சிலே போட்ட முத்தை நிக்காம செஞ்சிவிடு
வயிற்றிலே போட்ட முத்தை வரிசையா இறக்கிவிடு
தோளிலே போட்ட முத்தை துணிவா இறக்கிவிடு
பாதத்து முத்தைஅம்மா நீ பாராம இறக்கிவிடு"

- (நாட்டுப்புறத்தில், ப.34)

சரஸ்வதி பூஜை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி பண்டிகை துர்கை அம்மனின் ஒன்பது அம்சங்களை வழிபட்டுக் கொண்டாடு கின்றன. முதல் மூன்று நாட்கள் துர்கையம்மனையும் அடுத்த மூன்று நாட்கள் லட்சுமி தேவியையும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியையும் வழிபடுவர். இவ்வழிபாட்டில் வீடுகளில் கொலுவைக்கும் மரபு காணப்படுகிறது. இம்மரபிலிருந்து மாறுபட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் வீடு வீடாகச் சென்று பெரிய அண்டாவில் எண்ணெய் சேகரித்துக் கொண்டு வந்து ஊர்க்கோவிலுக்குச் கொடுத்து வணங்கினர் என்று குறிப்பிடுகின்றார்.

"சரஸ்வதிக்கு எண்ணெய்
சந்தோசமாய் வார்த்தனுப்பு
பிள்ளையார்க்கு எண்ணெய்
பெருமையாய் வார்த்தனுப்பு
நல்லெண்ணெய் இல்லையென்று
நாளைவா என்னாதே
விளக்கெண்ணெய் இல்லையென்று
பின்னேவா என்னாதே
சாத்திக் கதவடைத்து அயல்வீடு போயிருந்து
ஆளில்லை என்று சொல்லி அப்புறம் வா என்னாதே"

- (நாட்டுப்புறத்தில், பக்.36-37)

"சிறுதெய்வ வழிபாடு வேதக் கடவுளோடு பெரும் பாலும் தொடர்பு கொள்ளாதது, முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதது. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை இல்லாதது" (நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.57) என்று சு.சக்திவேல் குறிப்பிட்டுள்ளார். நாட்டுப்புற மக்கள்

வழிபடும் தெய்வங்கள் இந்து தெய்வம் மட்டும் இல்லாது கிருத்துவத் தெய்வமும் இருக்க வேண்டும் என்றும் கொள்கையையுடையவர் மு.தங்கராசன்.

"மரியேஉன் காவலுல மனதிரக்கம் வைப்பாயே
காப்பாத்த வேணுமம்மா கன்னிமேரி மாதவே
பாவிக் கிரங்கும் பரிசுத்த மாதாவே
மாதாவே என்றால் மலையும் இளகுமம்மா
கர்த்தரே என்றால் கல்லும் கரையுமம்மா"

- (நாட்டுப்புறத்தில், ப.37)

தெய்வ நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. காலங்கள் தோறும் ஒரு இனக்குழுக்களில் இருந்து மற்றொரு இனக்குழுவிற்குப் பரவி தமிழ்ச்சமுதாயத்தில் வேரூன்றி நிலைத்திருக்கும் பண்பினை நாட்டார் நம்பிக்கைகள் பெற்றிருக்கின்றன.

தாலாட்டுப் பாடல்கள்

குழந்தை பெற்றெடுத்த தாயின் தன்னுணர்வுப் பாடலே தாலாட்டாகும். எனவே தான் தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு தாலாட்டு என்பார் தமிழண்ணல், தொட்டிலையாட்டி, நாவாட்டி, பெற்ற குழந்தையை தூங்க வைப்பதற்குப் பாடும் தாலாட்டுப் பாடல் நாவினிக்கும் தெள;ளு தமிழ் பாடலாகும். இத்தாலாட்டுப் பாடல்களை சில இடங்களில் ராராய் என வழங்கிவருகிறது. மேலும் தலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, ரோராட்டு, தொட்டில்பாட்டு, ஓலாட்டு, திருத்தாலாட்டு, எனப் பல்வேறு பெயர்கள் இன்றைய உலகியல் வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் வழங்கி வருகின்றன. தமிழில் தாராட்டு என்று கூறுவது போன்று மலையாளத்தில் தாராட்டு என்றும் தெலுங்கில் ஊஞ்சோதி என்றும் கன்னடத்தில் ஜோகுல என்று கூறுவர் என்;று சு.சக்திவேல் (நாட்டுப்புற இயல் ஆய்வு ப..43) குறிப்பிட்டுள்ளார்.

தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைகலை தான் தாலாட்டு என்று தமிழண்ணலும் தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல் அக்கடலில் விளைந்த வலம்புரிமுத்தே தாலாட்டு என்று ஆறு. அழகப்பனும் குறிப்பிட்டுள்ளனர். தாலாட்டுப் பாடல்கள் தாயரின் மனநிலைக்கேற்ப குறுகிய நெடிய வடிவங்களைப் பெறும் அவ்வாறு பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் குழந்தையை வர்ணிப்பதாகவும் குழந்தைகள் விளையாடும் மற்றும் பயன்படுத்தும் கருவிகள் பற்றியதாகவும் அமையும் குறிப்பாகத் தாய்மாமனின் பெருமையும் சிறப்பும் கற்பனை கலந்து உயர்;த்தி பாடப்பெறும்.

எண்ணெய் தேய்த்துக் தலைமுழுகி
ஈர்க்கிபோல் சேக்கொதுக்கி
இங்கிலீசுக்கார் எடுத்துவரும் இளராஜர் உன்மாமன்
தைலமிட்டுத் தலைமுழுகி தாமரைபோல் சேக்கொதுக்கி
சட்டைமேல் சட்டைபோட்டுச் சரிகைச்சட்டை மேல்போட்டு
புள்ளிச்சட்டை போட்டு வரும் போர்விஜயர் உன்மாமன்
காலையிலே எழுந்திரிச்சி கச்சேரிக்குப் போயிருந்து

பாராவைப் போட்டுவரும் பாண்டியனார் உன்மாமன்
நடுக்காட்டில் ஒருமடமாம் வெள்ளி செவ்வாய் பூஜைமடம்
பூஜைமடம் கட்டிவைத்த புண்ணியனார் உன்மாமன்

- (நாட்டுப்புறத்தில், ப.45)

'ஆணும் பெண்ணும் இணைந்து வாழுகின்ற வாழ்விலே பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிட வேண்டும் என்று அனைவரும் விரும்புவது இயற்கையே ஆப்பிள்ளைக் கனியமுது இல்லாவிட்டால் அவர்களது குலக்கொம்பு வளர வாய்பில்லாமல் போவதாலும் சமூகம் அவர்களை மலடி மலடி என்று தூற்றுவதாலும் பிள்ளைப் பேற்றை அனைவரும் விரும்புகின்றனர். என்று குறிப்பிட்டுள்ளார்.

சு.சக்திவேல் (நாட்டுப்புற இயல் ஆய்வு ப:45)

'மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த கண்ணோ?
எங்கள்குலம் மங்காமல் எதிர்த்தகுலம் ஏசாமல்
தங்கமணிப் பொக்கிவித்தைக் தானாள வந்தகண்ணோ?

(நாட்டுப்புறத்தில் ப.41)

தாய்மார்கள் மலடி என்ற சொல்லைத் தாங்கிக் கொள்ள முடியாது துன்பப்படுவார்கள். மலடி என்ற சொல்லை வேரரறுத்து குலம் தழைக்க வந்த கண்ணே என்று தாய் தன் எண்ண உணர்வுகளை வெளிப்படுத்துகின்றாள். தாலாட்டுத் தாய்க்குரிய இலக்கிய மாதலாய் அதில் தன்னுடன் பிறந்த தாய்மாமனின் பெருமையும் அவர்கள் செய்யும் சீர்வரிசைகளையும் தாய்வீட்டுப் பெருமைகளையும் கற்பனைத் தேர் ஏறி பச புனைவார் தாய், குழந்தை அழுகையை நிறுத்தாது அழுகிறது என்றெண்ணமே தாய் மாமன் வாங்கிவரும் பொருட்களின் சிறப்பைப் பாடுகிறான்.

'பால்சங்கு போட்டால் -என் கண்ணே உன் பவளவாய் நோகுமென்று
பொன்னாலே சங்கெடுக்கப் போயிருக்கார் உன்மாமன்
சங்கெடுக்கப் போனவுக உங்கள் மாமன் சந்திரரோ சூரியரோ.....?"

(நாட்டுப்புறத்தில் ப.45)

தாலாட்டுப் பாடல்கள் அடிவரையறையின்றிக் காணப்படும் ஏனெனின் குழந்தையின் தூக்கத்தைப் பொருத்து வடிவம் பெறும் சில குழந்தைகள் தாயுடன் சேர்ந்து குரல் கொடுப்பதும் உண்டு அவ்வாறு குழந்தைகள் தூங்குவதற்கு நேரம் எடுத்துக் கொள்ளும் போது நீண்ட வடிவத்தையும் உடனே தூங்கிவிட்டால் குறுகிய வடிவத்தையும் பெறும் வாய்மொழியாக பாடப்பெறும் தாலாட்டுப் பாடல்கள் பாடவேறுபாடுடன் காணப்படும் ஏனென்றால் நினைத்த போது நினைத்தவாறு பாடப் பெறுவதால்.

காதல் பாடல்கள்

தமிழ்ச் சமூகம் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாகக் கொண்டனர். இதை எழுத்திலக்கியங்கள் அகத்திணை, புறத்திணை எனப்பாகுப்படுத்தும் வயதொத்த இருவரின் உள்ள வேட்கையால் ஏற்படும் உணர்ச்சியின் வெளிப்பாடாக தோன்றுவது காதல் பாடல்கள் அக இலக்கியங்களில் சுட்டப் பெறும் காதலும்

நாட்டார் இலக்கியங்களிலும் சுட்டப்பெறும் காதலும் ஒன்றுபட்டும் முரண்பட்டும் அமைகிறது. சுட்டி ஒருவர் பெயர்கொளப்பெறார் என்ற அகமரபு சங்கக் இலக்கியங்களில் காணப்படும் ஆனால் நாட்டார் வழக்காற்றியலில் இடம் பெறும் காதலோ மாமன் பெயரைச் சுட்டி அழைப்பதும் உண்டு.

இலக்கியத் தோழியை இங்கே காண முடியாது காதலனும் காதலியும் நேருக்நேர் சந்தித்துத் தமது இன்ப துன்பங்களையும் விருப்பு, வெறுப்புக்களையும் பகிர்ந்து கொள்கின்றனர். இலக்கியக் காதலைப் போன்று நாட்டுப்புறக் காதலிலும் கைக்கிளையும், பெருந்திணையும் உண்டு" என்று சு.சக்திவேல் (நாட்டுப்புற இயல் ஆய்வு. ப.50) குறிப்பிட்டுள்ளார். இக்காதல் பாடல்கள் ஏதாவது ஒரு வேளாண் தொழில் செய்யும் போது பிறக்கின்றன நாட்டுப்புறத்தில் பதிவேற்றப்பட்;ட காதலோ வயல்வெளிகளில் மலர்கின்றது. காதலி மீது கொண்ட இன்ப வேட்கையால் காதலியை வர்ணித்துப்பாடும் தன்மையும் கேலி செய்து பாடுகின்ற பாடலும் காதல் மொழிக்கு மறுமொழியாக காதலி எதிர்ப்பாட்டு பாடுவதும் இடம் பெற்றுள்ளன. இக்காதல் பாடல்கள் கதைப்பாடல் போன்று தொடர்ச்சிய ஒருகாதல் காட்சியைப் படிப்போர் மனதில் படிமமாக்கியுள்ளார் மு.தங்கராசன்.

'இடுப்பு சிறுத்தவளே எண்குணத்துக்கு ஏற்றவளே
நடைமிடுக்கு உடையவளே நான்வாரேன் உன்னைத் தேடி"

என்று பாடுகிறான். அவன் பாட்டுக்கு பதில் தர மறுத்து நிற்கும் அவளிடம் மீண்டும் பாடுகிறான்

'வாயைத் திறவாயோ மறுவார்த்தை சொல்லாயோ
தாளைத் திறவாயோ தனிவார்த்தை சொல்லாயோ"
முத்தான வாய்திறந்து உத்தாரம் சொல்லாயோ"
'கொண்டைக்குப் பூவாவேன் கொசுவத்திற் பையாவேன்
நெத்திக்குப் பொட்டாவேன் நீலவிழிமயாவேன்
முந்தானித் தொங்கலியே முள்ளாகி ஒட்டுவேன் நான்
காலுக்கு மெட்டியாவேன் கைவளையல் தானாவேன்
பஞ்சணை மெத்தையில் படுக்கை மலராவேன்."

(நாட்டுப்புறத்தில் பக்.58-59)

'செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சிப் போனாலும்
செத்த இடத்தினிலே செங்கழுரீர்ப் பூவாய்ப் பூப்பேன்
மாணடு மடிஞ்சாலும் வைகுந்தம் சேர்ந்தாலும்
மாண்ட இடத்தினிலே மல்லிகைப்பூவாய்ப் பூப்பேன்"

(நாட்டுபுறத்தில். ப.60)

அவன் இவ்வளவு ஆழமாகத் தன் உறுதிமொழியைச் சொன்ன பிறகும் அவன் பாடலில் பரவசம் கொண்டாளோ பரந்த அவன் மார்பில் விழுந்தாளோ கெஞ்சிக் கொஞ்சியவனின்; நெஞ்சத்தில் இது காணும் மிஞ்சிக் கொண்டிருந்தவன் தஞ்சம் புகுந்தாள் என்று கூறிவிட்டு மற்றொரு வயற்புறத்தில் ஏற்றம் இறைக்கும் தலைவனைப் பின் தொடர்கிறார் ஆசிரியர். நாட்டார் காதல்

பாடல்கள் ஏற்றம் இறைக்கும் போதும் வயல்களில் களையெடுக்கும் போதும் நாற்று நடும் போதும் கதிர் அறுக்கும் போதும் பாடப் பெறும் பாடல்களாக தன் நினைவுகளை நாட்டுப் புறத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களுக்காகப் பாடப்படும் பாடல்களே ஒப்பாரி. இது பெண்களுக்கு உரியது. தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறுநிலை, புலம்பல். இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு. அழுகைப்பாட்டு எனப் பலவகையாகக் கூறுவர். நாட்டார் வழக்காறுகளில் தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர், எவரேனும் இறந்துவிட்டால் ஒருவருடைய அதாவது பெண்களின் உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடப்படுகிறது இறந்தவர்கள் பற்றிய நினைவுகள் அவ்வொப்பாரியில் பகிரப்படும் ஒப்பாரி எனப் பிரித்து ஒப்பச் சொல்லி அழும்பாட்டு எனப் பொருள் கூறியுள்ளது சென்னைப் பல்கலைக்கழக தமிழகராதி மன அமைதிக்காகவும் ஆறுதலுக்காகவும் துயரத்தைத் தாங்கிக் கொள்ள பெண்கள் புலம்புகின்றனர். ஒப்பாரிப் பாடலை சங்க இலக்கியங்கள் கையறுநிலைப் பாடல் எனக் குறிப்பிட்டுள்ளன. நாட்டுப்புறத்தில் ஒப்பாரிப்பாடலைப் புலம்பல் என்றே குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

தன் மகனை இழந்த தாய் மகனின் பெருமைகளையும் அவனுடைய குண நலன்களையும்பேணி வளர்க்கப்பட்ட விதத்தினையும் தாம் நேசித்த தன்மைகளையும் தாயின் குமுறல் நிறைந்த அவலப் பாடலாக வெளிப்படுத்துகிறாள்.

'கோடித் திரவியமே கொடுத்து வையாப் பாக்கியமே
அணையாத் திரவியமே அதிட்டமில்லா அச்சரமே
பொன்னே பொருளே பொருளிருக்கும் பெட்டகமே
நல்ல பொருளே நகையிருக்கும் நாணயமே"
'எறும் பூர விடமாட்டோம் எமனுக்குப் பறிகொடுத்தோம்
துறும்பு படவிடமாட்டோம் தூதனுக்குப் பறிகொடுத்தோம்.
காற்றடிக்க விடமாட்டோம் காலனுக்கே சம்மதித்தோம்
வெயில் பட விடமாட்டோம் வேலனுக்கே சம்மதித்தோம்"

(நாட்டுப்புறத்தில் பக்-98-99)

பிள்ளையில்லா வாழ்வு பேய் வாழ்வு என்பது பழமொழி தாய்ஒருத்தி தன் குழந்தையை சீராட்டி, பாராட்டி, ராராட்டி பொன்னைப் போன்று எறும்பு,துறம்பு படாத அளவிற்கு வளர்த்தவளுக்குத் தான் பிள்ளையுடைய பெருமை தெரியும் ஒப்பாரி என்பது ஒப்புச்சொல்லி அழாமல் உணர்ச்சியின் உள்ளக் குமுறலின் வெளிப்பாடாகும் நெஞ்சத்தின் அடி ஆழத்திலிருந்து வெடித்துக் கிளம்பு இசையுடன் கூடிய பாடலே ஒப்பாரியாகும்.

'இறந்தவர்களின் ஆவி ஒப்பாரிகளால் சாந்தியடைவதாகவும் ஒப்பாரி பாடாவிட்டால் ஆவிகள் துன்புறும் என்றும் இவ்வுலகம் விடடு மறுவுலகம்

செல்ல ஒப்பாரிகள் இறக்கைகளாக உதவுகின்றன என்றும் ஆவிகள் மூலம் தீங்கு வராமல் காக்கலாம் என்றும் மக்கள் நம்புகின்றனர்" என்று சு.சக்திவேல் (நாட்டுப்புற இயல் ஆய்வு ப.60) பதிவிட்டுள்ளார்.

திருமணமாகி அயலூரில் வாழ்க்கை நடத்தும் மகளொருத்தி தன் தந்தையின் இறப்புச் செய்திகேட்டு அவலச் சுவை ததும்ப ஒப்பாரிவைக்கும் காட்சி படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

'மலையைச் சுத்திக் கல்பொறுக்கி -என்
மாட்டலுக்கே கல்பதிச்சி - என்னை
மதிக்க இடமில்லாமே மடுவிலே
தள்ளுனீங்கோ- இந்த
மடுவை விட்டுத் தாண்டிவர-எனக்கு
மாமாங்கம் செல்லுமப்பா"

(நாட்டுப்புறத்தில் பக்:116)

செலவாக்குடன் வளர்ந்த என்னை செல்வாக்கு குறைந்த இடத்தில் என்னைத் திருமணம் செய்து கொடுத்து நான் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்துகின்ற தன்மை தன் தந்தை மீது ஏற்றி ஒப்பாரி பாடுகிறார்.. கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தி விதவையான கோலத்தை எண்ணி வீறுகொண்டு அழுகிறார். பூவும், பொட்டும் பொன்னாலான அணிகலன்களையும் அணிய முடியாமல் தவிக்கின்ற தவிப்பும் விதவைப் பெண்ணை சகுனப் பொருளாக்கி சமுதாயம் நோக்குகின்ற தன்மை இடியாய் இறங்குகிறது நெஞ்சில் அப்பெண்படும் வேதனையும் விரக்தியும் துன்பமும் சொல்லிமளாது எதிர்காலத் துன்பங்களை எண்ணி கதறி அழுகிறார்.

'நம்பினேன் உங்களை நல்லாபலா மரத்தை
நாருத்தம் பூமரத்தை
நல்லபலா அழிந்து நாருத்தம் பூஅழிந்து
நம்பினவன் வீணானேன்"
'சங்கிலி பூட்டி தயிறு கடையையிலே
மாங்கல்யம் கொக்கி விட்டு மடியில் விழக்காரியமோ
மிளகு சிறுதாலி முகப்பு வச்ச அட்டியலு
முகப்பு வச்ச அட்டியலை முடிஞ்சி வைக்க நாளாச்சோ
கடுகு சிறுதாலி கல்பதிச்ச அட்டியலு
கல்பதிச்ச அட்டியலைக் கழற்றிவைக்க நாளாச்சோ"

(நாட்டுப்புறத்தில் . ப.118)

கணவனின் இறப்புத் துயரம் தாங்கிக் கொள்ள முடியாமல் மனைவி கணவனின் இறப்புக்களையும் அவர் தன்னுடன் இல்லாததால் அடையப் போகும் துன்பங்களையும் பாடுவாள். இவ்வொப்பாரி பாடல்கள் இடத்திற்கேற்பவும் இறந்தவர்களுக்கு ஏற்பவம் மாறுபடும் தன்மை கொண்டது.

முடிவு

புலம் பெயர் தமிழரான மு.தங்கராசனின் நாட்டுப் புறத்தில் நாட்டார் வழக்காற்றியல் கூறுகளைப் புதிய கோணத்தில் விளக்கியுள்ளார்.

நாட்டார் வழக்காற்றியல் துறை படைப்பாளர்களுக்கும் புலம் பெயர் படைப்பாளர்களுக்கும் தன்னுடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதில் வேறுப்பட்ட தன்மை காணப்படுகிறது அதாவது தொடர் செய்யுள் போன்று பாடல்களைத் தொகுத்து விளக்கியுள்ளார்.

வழிப்பாட்டுப்பாடல்களில் விநாயகர், அம்மன், அன்னைமாரி என்ற கலவையைத் தந்துள்ளார். தாலாட்டுப் பாடல்களில்

பிள்ளையின் பெருமையும் பிறந்த வீட்டின் மேன்மையும் ஓங்கி ஒலிக்கின்றன.

காதல் பாடல்கள் வயல் வெளிகளிலும் ஏற்றம் இறைக்கும் போது பாடப்படுகிறது. இப்பாடல் தொடர்ந்து காதலி மீது பாடுவதும் அவனிடம் மறுமொழி கேட்பதும் மீண்டும் கெஞ்சுவது மிஞ்சுவதுமாய் காதல் பாடல்களைப் படிப்பவர் மனதில் காடசிகளாக பதிவு செய்துள்ளார்.

ஒப்பாரி பாடல்களில் மகனை இழந்த தாயும் கணவனை இழந்து மனையும் அடையும் துன்பங்களை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

நாட்டார் வழக்காற்றியல் என்பது கடந்த கால பதிவுகளைச் சேகரித்து ஆவணப்படுத்துவதாகும் இதை நன்குணர்ந்த ஆசிரியர் மு.தங்கராசன் கடந்த கால நினைவுகளை முறையாகச் சேகரித்து வகுத்து விளக்கிய விதம் சிறப்பிற்குரியது.

பயன்பட்ட நூல்கள்

மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ஜீவஜோதி பதிப்பகம் 254 தெம்பனிஸ் ஸ்திரிப் 21, 460 சிங்கப்பூர் 52, 254.

சு.சக்திவேல், நாட்டுப்புற ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-8.

மு. தங்கராசனின் 'வாகைப்பூக்கள்' நூலில் தன் வரலாற்றுப் பதிவுகள்

இ. முருகலெட்சுமி
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

முன்னுரை

மு. தங்கராசனின் படைப்புகள் பல உள்ளன. அதிலும் கவிதை நூல்களுக்கு அதிகமாக பூக்களின் பெயரையே நூலாசிரியர் சூட்டியுள்ளார். அதில் 'வாகைப்பூக்கள்' என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து முதல் ஐந்து பகுதியை மட்டும் ஆய்வுக்கு எடுத்துள்ளேன்.

'வாகைப்பூக்கள்' கவிதைத் தொகுப்பு பத்து விதமான தலைப்புகளில் எழுபத்திரெண்டு கவிதைகளை உள்ளடக் கியுள்ளது. இதில் தாய்மொழிப்பற்று, நாட்டுப்பற்று, கல்வியின் சிறப்பு, தன்னம்பிக்கை, தாய் தந்தையர் சிறப்பு போன்ற உணர்வுகளைப் பற்றி, அழகிய நடையில் அமைந்த கவிதைகள் மலரிலிருந்து தேன் சொரிந்து கொட்டுவது போல் அமைந்துள்ளன.

'வாகைப்பூ' என்றவுடன் நமக்கு நினைவிற்கு வருவது, பழங்காலத்தில் போரில் வென்ற வீரமறவர்கள் வாகைப்பூ சூடி வருவதைப் புறத்திணை இலக்கணத்தின் வழி அறிவோம். இவ்வாய்வில் வாகைப்பூக்கள் நூலின் வழி அறியும் செய்திகளைக் காண்போம்.

மொழிப்பற்று

நாம் எங்கு இருந்தாலும் நம் தாய்மொழியை மறக்கக் கூடாதல்லவா? நம் தாய்மொழியாம் தமிழுக்கு முதலில் வணக்கம் தெரிவிக்கிறார் மு. தங்கராசன்.

"எங்கள் தமிழ் இன்பத்தமிழ் என்றும் வாழ்கவே
சங்கத் தமிழ் சந்தத்தமிழ் என்றும் வாழ்கவே!"

(வாகைப்பூக்கள், ப. 3)

என்று தமிழை இன்பத்தமிழ், சங்கத்தமிழ், சந்தத்தமிழ் என்று பலவாறு புகழ்ந்து கூறுகின்றார்.

இலக்கியத்தின் செழுமையால் தமிழ்மொழி உலகில் உள்ள மொழிகளிலே உன்னதம் பெற்று நிற்கின்றது என்றும், காலத்தால் மூத்த கன்னித்தமிழே, உலக மொழிகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் இருப்பதைக் கவிதையில் கண்டு களிப்புறவும், நூலாசிரியரின் மொழிப் பற்றையும் அறியமுடிகிறது.

கல்வியில் முன்னேற்றம் அடைய வாழ்க்கையில் சோதனைகள் வரத்தான் செய்யும். படிப்பறிவை வரமாய்ப் பெற்று வாழ்க்கையிலே சிறப்புறத் தவறிவிட்டால் பிறகு வாழ்க்கையெல்லாம் வேதனைகள் மட்டுமே வரும் என்பதை,

"எதுகையும் மோனையும் இயைந்து வந்தால்
பொதுவாகச் சிறப்புற்று விளங்கும் பாக்கள்!

அதுபோல்தான் இருமொழிகள் கற்றுத் தேர்ந்தால்
மெதுவாகப் பட்டறிவு மிளிர்ந்து மேவும்!"

(மேலது., ப. 9)

எனக் கவிதையாக்கி உள்ளார். பாக்கள் எதுகையும் மோனையும் இயைந்து வந்தால் சிறப்பு பெற்று விளங்கும். அதுபோல, இருமொழிகள் எனத் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்தால், தனி மனித வாழ்க்கை சிறப்படையும் என்று இருமொழிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகிறார்.

பன்மொழி அறிவு

தாய்மொழி, ஆங்கிலத்துடன் பிறமொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர். ஒரு நாட்டு அரசனுக்கு அந்த நாட்டில் மட்டும் தான் மதிப்பு. ஆனால் கல்வி கற்றவனுக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு. ஒருவர் பன்மொழிகளையும் கற்றுத்தேர்ந்தால் செல்லும் வழியெல்லாம் வாயில் திறந்து வழிவிடும். வாழ்வில் ஏற்றம் பெறலாம் என்கிறார் மு. தங்கராசன். இன்றைய காலகட்டத்தில் பன்மொழிகளைக் கற்றுக் கொள்வது ஒரு சவாலான செயலாகவே உள்ளது. ஏனெனில் இன்றைய மாணவர்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியையும் கூடக் கற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமம் அடைகின்றனர். பன்மொழிச் சூழலில் வாழ்வோர்க்கு இரு மொழி அறிவு தேவை என்கிறார் நூலாசிரியர்.

தாய் தந்தையைப் போற்றுதல்

புத்தகம் படித்தல் வேண்டும். நூல் பல கற்றல் வேண்டும். பெற்ற நல் சுதந்திரத்தைப் பெரிதும் பேணிக் காக்க வேண்டும் என்பதை மாணவர்கள் தம் நெஞ்சில் பதியவைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார் தங்கராசன்.

"பாலூட்டும் போதில் நல்ல
பண்புகளைச் சொல்லிக் காட்டி
வால் ஆட்டும் பழக்கம் விட்டு
வளமையது மாறா நின்று
கால்காட்டும் கூடா நட்பு
கணித்தறியும் வழிகள் கூறி
நூல்காட்டும் நெறிகள் தம்மை
நுட்பமாய்ச் சொல்லும் அன்னை!
சோதனைகள் தோன்றும் பொழுதில்
சுதாரிக்கக் கற்றுக் கொண்டு
வேதனைகள் சிறிதும் ஆங்கே
வெளிக்காட்டா வண்ணம் காத்து
போதனைகள் செய்தே அன்பின்
பொலிவுகள் போற்ற வேண்டும்!"

(மேலது., ப. 22)

இத்தகைய வண்ணம், நன்மக்கட்பேறு பெற்று உலகம் போற்ற வாழும் பொன்மக்கள் பெற்றோர் ஆவர் என்று, தாய் தந்தையர்களின் கடமைகளையும் தமது கவிதைப் பகுதியில் குறிப்பிடுகின்றார்.

மு. தங்கராசனாரின் தன் வரலாறு

திட்டமிட்டு தீர்மானித்துக் குறிக்கோளுடனே இட்ட அடி எடுத்துவைத்து எழுச்சியோடு கட்டுப்பாட்டுடனே கண்ணியத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும். அதற்கு முதலில் நம்பிக்கை வேண்டும். நம்மையே நாமே நம்புகின்ற மனம் வேண்டும் என்று நம்பிக்கையைப் பற்றிய கவிதை, வாசகர்களாகிய நமக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது.

நமக்கு நம்பிக்கையை விதைத்த அவரே ஏன் பிறந்தேன்....? என்கிறார். நாம் ஏன் பிறந்தோம் என்ற வினா எல்லார்க்கும் எழுவதுண்டு. நானாகப் பிறந்திங்கு வந்தேனா? இல்லை, தான் பிறந்த காரணத்தைத் தாமறிந்து கொள்ளாத மாண்புமிகும் என் பெற்றோர் மரபுவழி செய்த பிழை என்ற விரக்தி மனப்போக்கினைக் காண முடிகிறது.

"பிறந்துவந்த நேரத்தில் பெரிதுவந்த என்பெற்றோர்
மறைந்துவிட்டார் மனக்கவலை;
'மறுமலர்ச்சிக் காலமிது!
திறந்த மனத்துடன் என்னைத் தினம்புகழ்ந்து மகிழ்ந்தார்கள்
அவர்கள் இறந்துவிட்டனர் என்னைஎமனென்றே இடித்துரைத்தார்! "

இது மறுமலர்ச்சிக் காலம். அதனால் என்னை திறந்த மனத்துடன் தினம் புகழ்கின்றனர் என்னவென்று? என்னை எமனென்று திட்டுகின்றனர். அதோடு நிற்கவில்லை. நான் பிறந்த நேரத்தில் யார் செய்த பாவமோ தெரியவில்லை. 'காலரா' என்ற கொடிய நோய் வந்து ஊர்மக்கள் பலபேரின் உயிர்பறித்துச் சென்றது. ஊர்மக்கள் பலபேர் பதைபதைத்து இறந்துவிட நேர்ந்ததால் நான் எமனானேன் என்று என்னை இகழ்ந்தனர். நான் என்ன செய்வதென்று அறியாத ஓராண்டுக் குழந்தை.

இதைப்படித்தவுடன் நினைவிற்கு வருவது ஒரு பழமொழி. 'உலைவாயை மூடிவிடலாம் ஆனால் ஊர் வாயை மூடமுடியுமா?' என்பது பழமொழி. உலைவாயை மூடுவதற்கு ஒருகரமே போதுமென்பர். பின்வரும் விளைவுகளை எண்ணாமல் விதைத்திடும் நிலைகுலைக்க வைக்கும் சொற்கோவையை வீசும் ஊர்மக்கள் நிலைவாயை அடைப்பதற்கு நீண்டகரம் வேண்டும் என்கிறார்.

நாம் தாழ்ந்தாலும் யேசும் நாம் உயர்ந்தாலும் யேசும் இது பொல்லாத உலகம். நாம்தான் கவனமாக இருக்க வேண்டும் என்று நினைக்கக்கூடிய வயது அவனுக்குக் கிடையாது என தன் வாழ்க்கைத் துயரத்தை மற்றொரு கதாப்பாத்திரத்தின் மீது ஏற்றிக் கொள்கின்றார்.

திருமணமும் மறுமணமும்

ஆட்டுப்பால் ஊட்டி வளர்த்த அன்னை வழி பாட்டி, உற்றார் உறவினர் பாடும் வசைப்பாட்டுக்குப் பதில் சொல்லும் எதிர்ப்பாட்டுப் பாடுவதற்கு முடியாமல் மனம் நொந்து என்னை மடிச்சுமையாய் வளர்த்தார்.

ஐயோ! பாவம். பாட்டிக்கும் வயதாகிவிட்டது. பெற்ற மகளும் இறந்துவிட்டாள். அந்தப் பிரிவைத் தன்னுள் வைத்து, ஆற்றமுடியாத பெருஞ்சோகம் அந்த பாட்டியை வாட்டி வதைத்தது. பெற்றவளை இழந்துவிட்ட பேரனுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று நினைக்கிறாள். அவ்வாறு நினைக்கும் போது அவளது சிற்றறிவுக்கு எட்டியது. சிறுமகளை மணமுடித்து சிற்றன்னை ஆக்கிவைப்பது என்று எண்ணுகிறாள். அவள் செய்தபிழை அங்கேதான்!

சிறுமகளைத் திருமணம் (மறுமணம்) முடிக்கச் சிந்தித்த தாயாருக்கு, தான் மறுதாரம் என்ற எண்ணம் பின்னாளில் அவள் மனதுக்குள் தோன்றும் என்ற உண்மையை ஒரு சிறிதும் உணராமல் உறுத்தலுடன் முடிவெடுத்தார்.

தன் உடன்பிறந்தவள் இரத்தத்தின் உயிர்தனைக் காப்பாற்ற உடன்பிறந்த இளையமகள் உடன்படுவாள் என்றெண்ணி, அந்தத் தாயானவள் தம் உடன்பிறந்தார் எல்லாரும் ஒருமுகமாகச் சம்மதிக்க, உடனிருந்தோர் வாழ்த்துக்கள் கூறித் திருமணமும் நடந்து உறவுகள் மலர்ந்துவிட ஆரம்பித்தன.

"காலத்தால் பருவமதும் கருணையதால் கனிந்துவரச்
சீலத்தால் சிற்றன்னை சீர்மகுடம் சூடியதும்
கோலங்கள் சீர்குலைக்கக் கொண்டவெறி தலையாட்டம்
ஞாலத்தோர் சொல்லிவைத்த நியாயங்கள் பொய்ப்பதில்லை!"

(மேலது., ப. 48)

கருவுற்ற சிற்றன்னை கடவுள்தம் கருணையால் திருமகள் போன்ற அழகான பெண்குழந்தையை ஈன்றெடுத்தார். அவளைக் கண்ணும் கருத்துமாய் திருவோடு தினம்போற்றி வளர்த்துவந்தார். நல்ல மகிழ்ச்சியோடு ஒரு சில ஆண்டுகள் கடந்து சென்றன. ஆனால், நான் ஊர்மக்களிடம் வாங்கிய பழிச்சொற்கள் என்னை விடவில்லை. என்னை ஓடஓட விரட்டின.

உடன்பிறந்தே கொல்லுகின்ற உறுநோய்க்கு ஆட்பட்டு, கண்ணும் கருத்துமாய் வளர்ந்து வந்த திடம்பெற்ற அக்குழந்தை, திரடுமென்று இறந்துவிட்டது. அவ்வளவுதான், உடன்பிறப்பையும் தக்கவைத்தக் கொள்ளமுடியாத உயிர் பறிக்கும் எமன் என்று, நாவில் அடக்கமில்லாச் சொற்களினால் என்னைச் சித்தி தினமும் ஆராதனை செய்தார்கள்.

அந்தக் காலம் இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலம். பகைநாட்டு அரசுகள் தாம் முடுக்கிவிட்ட பீரங்கி சரமாரி பாய, இராசயனக் கலவைகள் விளைந்துவிட்டன. அதனால் உயிர் பறிக்கும் அளவிற்கு நோய் நொடிகள் பரவ ஆரம்பித்தன. அடுத்தடுத்து இரண்டு மூன்று அரும்புகளை ஈன்றெடுத்து அத்தனையும் நோய்களினால் அடுத்தடுத்து இறந்துவிட்டன.

தொடுத்துவந்த ஏச்சுக்களை தொகுத்திடவும் கூடவில்லை. நான் எடுத்துவந்த இப்பிறப்பு எதற்கு? என நொந்து கொண்டேன். வேறு வழியின்றி உயிர் வாழ்ந்தேன்.

ஜப்பானியர் தோல்வி அடைந்தும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தும் சென்று விட்டனர். தப்பாமல் தலையெடுத்து ஆங்கிலேயர் தலையெடுத்து அரசால வந்தனர். ஓரளவிற்கு நோய் நொடிகள் குறைந்தன. மக்களும் மகிழ்ந்திருந்தனர்.

மீண்டும் என் அன்னையின் 'ஆசிர்வாதம்' பெற்றதனால் மறுபடியும் ஒரு பெண்குழந்தையை ஈன்றெடுத்து மகிழ்ந்தார்கள். எப்போதும் போல் இல்லாமல் இம்மகவு எழில்பெறவே நான் இறைவனை வேண்டிக் கொண்டேன். தப்பியது என்தலையும் என்று தனியமைதி கொண்டேன் நான்.

இவ்வாறாக, சிற்றன்னையின் கொடுமைக்கு ஆட்பட்ட சிறுவன் ஒருவன் காலப்போக்கில் சிந்தித்து எழுதிய அனுபவ முத்திரை இது எனத் தன் கடந்த கால வரலாற்றைப் பதிவு செய்துள்ளார் மு. தங்கராசன். மேலும், இதை எழுதும்போதே என் நினைவுகள் பல ஆண்டுகள் பின் சென்று வந்துவிட்டன. ஒரு சிறுவனின் மனம் அடைந்த துன்பத்தை இந்தக் கவிதை வெளிப்படுத்தியது. 'ஏன் பிறந்தேன்' என்ற இக்கவிதை பலபேரின் நினைவுகளை உட்படுத்திக் கொண்டுள்ளது.

இக்கவிதைக்குப் பின், பின்குறிப்பு ஒன்று இருந்தது. அதில் சின்னம்மா... என்று அவன் அழைத்ததில்லை என்று. ஏனெனில், அந்தச் சிறுவனின் மனம் அந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

இறுதியாக, அந்த சிறுவன் மன உறுதியோடு இருந்ததனால் 'வாகைப்பூவை' சூட முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. துன்பத்திலும் துணிவுடன் இருந்தான்.

"துன்பத்தில் துணிவு வேண்டும்
தூக்கத்தில் விழிப்பு வேண்டும்
இன்பத்தில் எளிமை வேண்டும்
ஏக்கத்தில் நியாயம் வேண்டும்
வன்மத்தில் வாய்மை வேண்டும்
வாட்டத்தில் ஊட்டம் வேண்டும்
ஜென்மத்தில் நேர்மை வேண்டும்
ஜெகமெல்லாம் போற்ற வேண்டும்!"

(மேலது., ப. 67)

கவிஞரின் வாகை சூடவேண்டும் என்ற ஆவல் 'ஏன் பிறந்தேன்' என்ற கவிதையின் வழியே பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது.

இந்த 'வாகைப்பூக்கள்' என்ற கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அனைத்தும், பல முத்துகளால் சேர்க்கப்பட்ட முத்துமணி மாலை போன்ற எண்ணம் வாசகர்களுக்கு உருவாகும் என்பதில் ஐயமில்லை.

முடிவுரை

வாகைப்பூக்களில் உள்ள மொழிப்பற்று, நாட்டுப்பற்று, கல்வியின்சிறப்பு, சிந்தனை உணர்வுகள் ஆகிய அனைத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாலையாகக் காட்சி யளிக்கின்றன. மலர்கின்ற பூக்கள் அனைத்தும் மாலையாகுவதில்லை. சில பூக்கள் உதிர்கின்றன. பல பூக்கள், அதிலும் நூல்களுக்கிடையே சிக்கும் பூக்கள் இறைவனின் கழுத்தில் மாலையாகுகின்றன. அதுபோல, மாணவச் செல்வங்களும் கடினமாக மன உறுதியுடனும் தன் நம்பிக்கையுடனும் உழைப்பவன் உயர்ந்த நிலையை அடைவான் என்பதில் எந்த மாற்றமும் இல்லை என்பதைக் கவிதையாக்கியுள்ளார் மு. தங்கராசன்,

'பூக்கள் எல்லாற்றிற்கும் மணமுண்டு
மணமில்லா மலர்களே கிடையாது
நறுமணங் கமழ்வதில் சற்று
கூடுதல் குறைவு ஏற்படலாம்!'

(வாகைப்பூக்கள், முன்னுரை)

சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி: மு.தங்கராசனின் 'தமிழ் எங்கள் உயிர்' நூலை முன்வைத்து...

வெ. முருகன்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

தொடக்கமாக...

தமிழர்கள் பல்வேறு தேசங்களுக்குப் பல காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். அவ்வாறு சென்ற மக்கள் அந்நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். அந்தவகையில் காலனிய காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக தமிழர்களைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பல நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். மலைகளில் தேயிலை, காப்பி போன்ற பயிர்களை விளைவிக்க, காடுகளைத் திருத்தி பயிர்களைச் செய்வதற்கு, நீண்ட நெடிய ரயில் பாதை அமைப்பதற்காக, சுரங்கத் தொழிலுக்காக எனப் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா போன்ற பல நாடுகளுக்கு கொண்டு சென்றனர். இதனைத் தொடர்ந்து 1819 ஆம் ஆண்டு முதல் இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து அதிகமான மக்கள் சிங்கப்பூரில் குடியேறினர். அவர்களின் உழைப்பால் அந்நாட்டை வளப்படுத்தினார். 1994 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 2873800 மில்லியன் மக்கள் சிங்கப்பூரில் வாழ்கின்றனர். இதில் 7.1 சதவீதத்தினர் இந்திய மக்கள். அவர்களுள் ஒன்றரை இலட்சம் மக்கள் தமிழர்கள். இந்த புள்ளி விவரங்கள் சிங்கப்பூரில் தமிழ்க் கல்வியின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பயன்படும்.

சிங்கப்பூரில் தமிழர்களின் சமூக அமைப்பு

இந்தியாவிலிருந்து தமிழர்கள் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக (1825 - 1873) அதிகமான எண்ணிக்கையில் கொண்டு வரப்பட்டனர். மற்ற இனத்து மக்களை விடச் சிங்கப்பூரில் தமிழர்கள் சிறுபான்மையினர். சிங்கப்பூரில், மலேசியாவில் உள்ளதைப் போன்று பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வந்தாலும் தமிழர்கள் அதிகம். எனவே தான் இங்கு தமிழ் மொழியானது ஆட்சி மொழியாக உள்ளது. கூலித் தொழிலாளர்களான தமிழர்கள் அதிகமாகக் குடியேறியதால் அவர்கள் பேசுகின்ற தமிழ்மொழியைக் 'கூலித் தமிழ்' என்றும் 'கூலிபாஷை' என்றும் 'கூலிக்காரன் பாஷை' என்றும் 'கூலித்தமிழ்'; என்றும் அழைக்கக்கூடிய நிலை சிங்கப்பூரில் இருந்தது. மேற்கூறிய கருத்துடன் மணி என்பவரின் கூற்றினை இங்கு இணைத்துப் பார்க்கும்போது, சிங்கப்பூரின் நிலையினைக் கூடுதலாக அறிந்து கொள்ளலாம். அதாவது, "ரப்பர் தோட்டப் பாட்டாளிகளாகக் கொண்டு வரப்பட்டவர்களுள் ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை ஐம்பது விழுக்காடாகச் சிங்கப்பூரிலும் மூன்றில் ஒரு பங்காக மலேசியாவிலும் இருந்தது" (தமிழ் இனி 2000 பக். 353) என்னும் கருத்தானது ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்துகிறது. அதாவது 'உயர்வான தமிழ்', 'தாழ்ந்த கூலிக்காரன் தமிழ்' என்பதுவே அது. இந்திய, தமிழகச் சூழலைப் போலவே சிங்கப்பூரிலும் 'படிநிலையாக்கம்'

காணப்பட்டது என்பது மேற்கூறிய கூற்றின் மூலம் தெளிவாகிறது.

பொதுவாக, உழைக்கும் வர்க்கத்து மக்கள் தம்முடைய தாய்மொழியைத் தவிர வேற்று மொழியை அறியாதவர்கள். இதனால் தமிழ்மொழி மட்டும் பேசுகின்ற மக்களை இழிவாகப் பார்க்கின்ற போக்கு சிங்கப்பூரில் நிலவியது. இதனை எம்.எஸ்.ஸ்ரீ.லட்சுமியின் கூற்று மேலும் உறுதிப்படுத்துகிறது. "சிங்கப்பூரில் தமிழர்களுக்குள்ளும் இருவேறுபட்ட வர்க்கங்கள் இருந்தன. ஆங்கிலம் கற்ற உயர்மட்ட தமிழர்களுக்கும், தமிழ் மட்டுமே கற்ற அடிமட்ட தமிழர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்து வந்தது. தமிழ் மட்டுமே கற்ற தமிழர்கள் பெரும்பாலும் தமிழர் பிரதிநிதித்துவ சபை (TRC) யின் ஆதரவாளர்களே! ஆங்கிலம் கற்ற உயர்மட்டத் தமிழர்கள் தமிழ் மட்டுமே கற்ற அடிமட்டத் தமிழர்களைத் தாழ்ந்த சாதியினராகக் கருதினர்" என்கிறார் (தமிழ் இனி 2000 பக்-353). இத்தகைய சமூகப் பின்புலத்திலேயே சிங்கப்பூரில் தமிழ்க் கல்வியையும், உயர்நிலை மாணவர்களுக்காக மு.தங்கராசன் எழுதிய 'தமிழ் எங்கள் உயிர்' என்ற நூலையும் அவருடைய தமிழ்ப்பணியையும் அறிந்து கொள வேண்டியதாகிறது. இவையே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கங்களாக அமைகிறன.

சிங்கப்பூரின் கல்விக் கொள்கையும் தமிழ்க் கல்வியும்

ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த சிங்கை 1959 இல் தன்னாட்சி உரிமையைப் பெறுகிறது. இதன்பின் இன்றைய மலேசியா, சிங்கப்பூர் இணைந்த நாடான 'மலேசியா' என்று அழைக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டில் மலேசியாவில் இருந்து 'சிங்கப்பூர்' என்ற தனி நாடாகப் பிரிந்தது. இவ்வாறு தனிநாடாக ஆனபின் அந்நாட்டின் அதிகாரத்துவ மொழிகளாக நான்கு மொழிகள் திகழ்ந்தன. அவை மலாய்மொழி, சீனமொழி, தமிழ்மொழி, ஆங்கிலமொழி ஆகியனவாகும். இதில் ஆங்கில மொழியானது அரசாங்கத்தின் நிர்வாக மொழியாக விளங்குகிறது. நாடாளுமன்றத்தில் மேற்கூறிய நான்கு மொழிகளில் எதில் வேண்டுமானாலும் உரையாற்றலாம். எனவே, தமிழ் மொழியானது இன்னும் அதிகாரப் பூர்வமுள்ள மொழியாகிறது. மேலும், சிங்கப்பூர் அரசாங்கமானது உயர் கல்வியை முடிக்கும் மாணவர்கள் குறைந்த பட்சம் இரண்டு மொழிகளைக் கற்று, அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியது.

இந்தப் பின்புலத்தில் ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைக் கற்பிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. மூன்று உயர்நிலைத் தமிழ் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அங்கு, தமிழ் கற்பிக்கப்பட்டது. 1966 முதல் உயர் நிலைக்கு தமிழ்ப்பாடம் கட்டாய மாக்கப்பட்டது. தொடக்கத்தில் பல்கலை மாணவர்களுக்கு தமிழ் வகுப்புகள் ஏவையும் நடத்தப்படவில்லை. பெரும்பாலும் 'முதியோர் கல்வி கழகம்' என்ற அமைப்பு நடத்தியவற்றில் கல்வி கற்றார்கள். பின்புதான் கல்வி அமைச்சினால் புதுமுக வகுப்பு தொடங்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் கல்லூரிகளில் முறையாகத் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது. 1986 இல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்முதல் மொழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1991 ஆம் ஆண்டில்லிருந்து சில தொடக்கப் பள்ளிகளிலும் வகுப்புகள் தொடங்கப்பட்டன.

தமிழ்க் கல்விக்கான பாடநூல்கள்

தொடக்கத்தில் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் முறையான பாடத்திட்டமோ, பாடநூல்களே இல்லாமலேயே தமிழ் கற்பிக்கப்பட்டு வந்தது. 1961 ஆம் ஆண்டுதான் சிங்கப்பூரில் பள்ளிகளுக்கென்று முறையான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும், 1972ஆம் ஆண்டுவரை மலேசியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட பாட நூல்களே இப்பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டன. 1983

ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் உள்ளூர் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ்ப் பாட நூல்கள் இங்குப் பயன்படுத்தப்பட்டன. 'பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம்' என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட பின்னரே தமிழ்ப் பாட நூல்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் இருந்துதான் சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி அது பெரும் இடத்தினையும் பார்க்க வேண்டியிருக்கிறது

தமிழ் எங்கள் உயிர் நூல் பற்றியும் நூலாசிரியர் பற்றியும் சுருக்க அறிமுகம்

'தமிழ் எங்கள் உயிர்' நூலின் ஆசிரியர் மு.தங்கராசன். இவர் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் (1951 - 2001) தமிழாசிரியராக, தலைமையாசிரியராக, சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தமிழ்ப் பாட நூலாக்கக் குழுவின் எழுத்தாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 23க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளவர். அவற்றுள் ஏழு சிறுகதைத் தொகுப்புகளும், எட்டு கவிதைத் தொகுப்புகளும் அடங்கும். இது தவிர கட்டுரை நூல்களும், நாடகங்களும் என ஏராளமான நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ் எங்கள் உயிர் எனும் இந்நூலில் வெவ்வேறு தருணங்களில் எழுதிய 23 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் என்பதைவிடக் கல்வி அமைச்சுத் தமிழ்ப்பிரிவு, சமுதாய அமைப்புகள், விழாக்குழுக்கள் போன்றவை நாடளவில் நடத்தப்பட்ட அனைத்துப் பள்ளிகளுக்கான பேச்சுப்போட்டிகள், சொற்போர் போன்ற வற்றிற்குப் பேசுவதற்குத் தயார் செய்யப்பட்ட தயாரிப்புகளாகும். இத்தகைய தயாரிப்புகளைப் பாதுகாத்து வைத்தவற்றுள் காலத்திற்கு ஏற்றவற்றை மட்டுமே இவள் தொகுத்துள்ளார். இந்நூலில் தங்கராசன் ஒவ்வொரு கட்டுரையையும் படைக்கச் சில அடிப்படையான நெறிமுறைகளைக் கடைப்பிடித்துள்ளார். அதில் முன்னுரையைத் தலைப்பை ஒட்டிய விளக்கமாகவும், இடையில் பேசுபொருள் பற்றித் தெளிவாக ஒரு சில பத்திகளிலும், பொருண்மைக்கு ஏற்ப இலக்கியச் சான்றுகள், மரபுத்தொடர்கள் போன்றவை அமையும்படி இப்பேச்சுக்களை அமைத்துள்ளார். மேலும், சமுதாயச் சிந்தனை, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, கல்வி, இருமொழிக் கல்வியின் முக்கியத்துவம் என்று பல்வேறு பொருண்மைகளில் எழுதியுள்ளார். கல்வி கற்கும் மாணவர்களை கருத்தில் கொண்டே இந்நூலினை எழுதியுள்ளார். குறிப்பாக, தமிழ்க் கல்வி கற்கும் மாணவர்களையே கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பயன்படும் படியாகவே எழுதியுள்ளார். இதுபற்றிக் கூறும்போது "உயர்நிலை ஒன்று இரண்டாம் படிவங்கள் பயிலும் மாணவர்களுக்கு உரிய ஒரு கட்டுரைத் தொகுப்பு நூல். மொழி, கல்வி, நாடு, சமுதாயம், உணர்வுகள், சிந்தனைகள் முதலிய பல்வேறு சிறந்த அமைப்பில் இருபத்திமூன்று தலைப்பிலான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வகுப்புகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் பயிற்சிகளுக்கும் தேர்வுகளுக்கும் கொடுக்கக் கூடிய. எதிர்பார்க்கக்கூடிய தலைப்புகளை ஒட்டிக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன" (தமிழ் எங்கள் உயிர் - மு.தங்கராசன், பக்—III) என்று தங்கராசன் கூறுவதன் வழியே அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூலைப் பொருத்தவரை மாணவர்களுக்கான பயிற்சிக் காகவும், போட்டிகளுக்கும் எழுதப்பட்டவை. எனவே, எடுத்துக்கொண்ட தலைப்பை அதனை ஒட்டிய விளக்கமாகவும், தொடக்கமாகவும், அமைத்து நடுவினில் தலைப்பு சார்ந்த செய்திகளை மிகவும் அழுத்தமாகவும், தெளிவாகவும் அமைத்துள்ளார். இத்துடன், அதற்கு ஏற்ற மேற்கோள் விளக்கம், பாடல்கள், செய்யுள்கள், எடுத்துக்காட்டுட தொடர்கள், பொருத்தமான கருத்தினை வலியுறுத்தக் கூடிய ஆன்றோரின்

அனுபவ மொழிகளான பழமொழிகள், புள்ளி விவரங்கள் முதலியவை இடம்பெறுமாறு அமைத்து முடிவாக ஏற்கனவே சொல்லியுள்ள கருத்துக்களின் சாரங்களில் அழுத்தமாக முத்தாய்ப்பாக முடிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி 2000 ஆண்டுகள் பழமையான இலக்கியவளம் கொண்ட மொழி. இது இடத்திற்கு ஏற்ப, காலத்திற்கு ஏற்பத் தன்னை தகவமைத்துக் கொள்ள கூடியது. இக்கட்டுரைத் தொகுப்பின் இறுதியாகச் சொன்னவற்றோடு பொருத்திப் பார்க்க வேண்டும். வாழ்வியல் தேவைக்காகப் புலம்பெயர்ந்து சென்று பிற இனத்தவரோடு இணங்கி வாழவேண்டிய வாழ்வியல்சூழல், அந்நாட்டின்மொழி, பண்பாடு, அரசியல் சூழ்நிலைகளைக் கடந்தே தன்னைத் தகவமைத்துக் கொள்ள முடியும். இந்த அம்சத்தினைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது. மேற்சொன்ன சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வரலாற்றையும், அதற்கான பாடத்திட்ட உருவாக்கத்தையும், அதன் பின்புலத்தையும் அறியும்போதுதான் இந்நூலின் சாரம் புரியவரும். தங்கராசன் 1991 முதல் 1996 வரை சிங்கப்பூர்க் கல்வி அமைச்சில் பாடநூலாக்கக் குழுவில் எழுத்தராக பணியாற்றியுள்ளார். மேலும், பல பத்தாண்டுகள் தமிழாசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணியாற்றிய அனுபவத்திலிருந்து இந்நூலிலுள்ள கட்டுரைகளை எழுதியுள்ளார். இந்நூலின் நாடு, மொழி, கல்வி, சமுதாயம், உணர்வுகள் என்று சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து, அது தொடர்பான கட்டுரைகளை அமைத்துள்ளார். மேலும், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு இருமொழிக் கொள்கையை வலியுறுத்திக் கொண்டிருப்பதால் இந்நூலில் உள்ள 23 தமிழ்க் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. ‘ஒரே தலைப்பில் கட்டுரை தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் எவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்தப் புரிந்துணர்வு ஏற்பட்டால் தமிழ்மொழி வழி சிந்தித்து ஆங்கிலத்திலும், ஆங்கிலமொழி வழி சிந்தித்து தமிழிலும் கட்டுரைகள் எழுதும் ஆற்றலை மாணவர்கள் இயல்பாகக் கைவரப் பெறுவார்கள். இந்த நோக்குடன் தமிழ் எங்கள் உயிர் கட்டுரைத் தொகுப்பு உள்ளது” (தமிழ் எங்கள் உயிர் - மு.தங்கராசன், பக்—III) என்று கூறுவதன் மூலம் நூலாசிரியரின் தொலைநோக்கு நமக்குத் தெளிவாகிறது.

முடிவாக...

இந்நூலில் உள்ள கட்டுரைகளில் சுருங்கச் சொல்லுதல், தெளிவுரச் சொல்லுதல், சான்று காட்டிச் சொல்லுதல், அடுக்கிச் சொல்லுதல் போன்ற உத்திகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இலக்கிய வரிகள் தொடங்கி மக்கள் வழக்கில் உள்ள நாட்டுப்புறப் பாடல்கள், சினிமாப் பாடல்கள் என எல்லாவற்றையும் கொடுத்து, தன் கருத்தை வலியுறுத்தச் சரியான இடத்தில் எடுத்துக்காட்டியிருப்பது பொருத்தமாக அமைந்துள்ளது. போட்டிகளுக்கு உரிய கால அளவு கருதி மிகச் சுருக்கமாகச் சில கட்டுரைகள் அமைந்துள்ளன. சிங்கப்பூரில் தமிழ்ப் பயிலும் மாணவர்களை மட்டுமே கவனத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அதற்கேற்ப தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளில் எழுதப்பட்டுள்ளமை சிறப்பான பணியாகும். சிங்கப்பூர் மாணவர்கள் மட்டுமல்லாமல் ஏனைய பகுதி மாணவர்களையும் கவனத்தில் கொண்டு இருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். பேச்சுப் போட்டிக்கான அமைப்பிலே இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. வாசிப்பிற்கும் ஏற்ப இக்கட்டுரைகள் அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பதைத் தவிர மற்றபடி சிறப்பாகவே இக்கட்டுரைத் தொகுப்பு அமைந்துள்ளது.

பயன்பாட்டு நூல்கள்

முனைவர் ந.கடிகாசலம் (ப.ஆ.) தமிழ் எங்கள் உயிர் - மு.தங்கராசன் (நூ.ஆ) அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், - சமகாலச் செல்நெறிகள்

முனைவர் ச.சிவகாமி, (ப.ஆ.) தமிழ் இனி 2000, பா.மதிவாணன் ஆய்வுக் கோவை 2010 இரா.மோகன், மு.மணிவேல், கி.நாச்சிமுத்து, தூ.சேதுப்பாண்டியன் (ப.ஆ.)

புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளரின் மொழி ஆளுமை

முனைவர் இரா.முருகானந்தம்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, மேலூர்

முன்னுரை

தமிழ்மொழி பன்முகத் தன்மையுடையது. இஃது அனைத்துத் துறைகளிலும், நாடுகளிலும் தனித்த அடையாளத்துடன் விளங்குகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ் இலக்கியங்கள் அடைந்துள்ள வளர்ச்சி இன்றியமையாதது. இன்றைய நவீனப் படைப்பாளர்களிடம் புலப்படும் மொழி வளம், சொல்வளம் வீரியம் மிக்கது, கற்பனை மிக்கது, அணிகள் விரவியது, உள்ளுரையும் படிமங்களும், குறியீடுகளும், இருண்மையும் மிக்கது. மேலும் பேச்சுநடையில் அமைந்த வழக்காறுகள், பலமொழிகள், வட்டார வழக்குச் சொற்கள், பிறமொழிச் சொல்லாடல்கள் மற்றும் சங்க இலக்கியச் சொற்றொடர்கள் என பல்வேறு உத்திகளைக் கொண்டும் விளங்குகிறது. அவற்றுள் பிற நாட்டு நவீன தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் தமிழ்மொழியின் மாண்பினைச் செம்மையாக அவர்தம் படைப்புகளில் வெளிக்கொணர்ந்துள்ளனர். இவ்வகைப் படைப்புகள் புலம்பெயர் தமிழர்களால் எழுதப்பட்டவையே ஆகும்.

இப்படைப்பாளுமைகள், தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு காரணங்களுக்காக அயல் நாடுகளில் சென்று குடியேறி, பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்தாலும் தங்கள் வாழும் மண்ணின் மரபுக்கேற்ப, தமிழ் இலக்கியங்களை அவற்றின் செம்மை மாறாது படைக்கின்றனர். இவ்வகையில், தமிழ் நாட்டிலிருந்து பல தலைமுறைகளுக்கு முன் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, எனப் பல்வேறு நாடுகளுக்கும் குடியேறிய மக்களின் வாழ்க்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டும், சங்கத் தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்களைம் மறவாது பதிவு செய்கின்றனர். அவ்வகையில், சிங்கப்பூர்வாழ் தமிழ்ப் படைப்பாளுமை மு.தங்கராசனின் மொழி ஆளுமை மற்றும் மொழி உணர்வுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆளுமைப் பண்பு

தொழில் நுட்பம், கலை, பேச்சு, மொழி, விளையாட்டு என அனைத்து திறமைகளும் வாழ்வில் இன்றியமையாத திறமைகளாக நாம் உணர்ந்திருப்பினும், இவற்றிற்கும் அப்பால் பேசக்கூடிய மையப்பொருளாக விளங்குவது ஒரு தனிமனிதனுடைய ஆளுமைப் பண்பேயாகும். “ஒரு தனி மனிதன் தனது சுற்றுச் சூழலோடு உறவு கொள்ளும் சிறப்பான முறையை அவரது சிந்தனை, உணர்வுகள், நடத்தை ஆகியவற்றின் ஒட்டுமொத்தமே அவரது ஆளுமைப் பண்பு” ப - 1(ஆ.மே). எனவே, ஆளுமைப் பண்பு என்பது தம்மை ஒட்டுமொத்தமாக அடையாளப்படுத்தக்கூடிய உச்சபட்ச நிலையே எனக் கருதமுடிகிறது. மேலும், நாம் அன்றாட வாழ்வியல் சூழ்நிலைகளில் நாம் எதிர்கொள்ளும் மாந்தர்கள், சமூகப்

பிரச்சினைகள், சந்திக்கக்கூடிய சமூக உறவுகள் போன்றவற்றை எவ்வாறு கையாளுகிறோமோ அவற்றைப் பொருத்தே ஒருவரின் ஆளுமைப் பண்பினைப் புரிந்து கொள்ள முடியும்.

வேதாந்தத்தின் அடிப்படையில் 'பஞ்சகோசா எனும்' ஐந்து வகையான ஆளுமைப் பண்பின் அடிப்படையில், ஒரு தனி மனிதனின் ஆளுமைப் பண்பினை புரிந்து கொள்ள முடியும். அவை:

1. "அன்னமைய கோசா (உடலியல் ஆளுமை)
2. பிரணமய கோசா (ஆற்;றல் ஆளுமை)
3. மனோமய கோசா
4. விஞ்ஞானமயகோசா அறிவு ஆளுமை
05. ஆனந்தமய கோசா மகிழ்வு ஆளுமை"2 (பக்-17-18 ஆ.மே)

என ஐவகைப் பண்பின் மூலம் தனிமனிதனின் ஆளுமைப் பண்பினை அறியலாம். இவற்றுள், சிங்கப்பூர் வாழ் தமிழ்ப் படைப்பாளர் மு.தங்கராசன் அவர்களின் ஆளுமையை அறிவு ஆளுமை எனும் பண்புநலன்களின் மூலம் அவரது ஆளுமையை உணரமுடிகிறது. இவ்வறிவு ஆளுமை என்பது, "தக்க அறிவினைப் பெற்று அதன்படி பகுத்துணர்ந்து சிந்தித்து செயல்படுவதைக் குறிக்கும், இஃது பொதுவான கல்வி மட்டுமின்றி அறநூல் களையும் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் நல்ல இலக்கியங்களையும் தத்துவ மேதைகளின் நூல்களைப் படிப்பதும் பேச்சுக்களை கேட்பதும் இவ்வகை ஆளுமை சிறக்க உதவும்" (ப-18ஆ.மே) எனும் கருத்தின் அடிப்படையில், புலம்பெயர் எழுத்தாளர் மு.தங்கராசன் அவர்களின் 'மணக்கும் மல்லிகை' எனும் சிறுகதையின் வாயிலாகப் படைப்பாளரின் மொழி ஆளுமை, மொழி உணர்வினை உய்த்துணரலாம்.

கதையும் கதை அமைப்பு முறையும்

தமிழ்மொழி மிக மிக வேகமாக வளர்ந்து வருகின்ற காலம் இது. இன்றைய நவீன படைப்பாளர்களின் படைப்புகளோ மிக நுணுக்கமான பொருள் பற்றியவையாகப் படைக்கப்பட்டு வருகின்றன. இவ்வகைப் படைப்பாளர்கள் ஒருவரே பல்வேறு துறைகளில் புலமை பெற்றவறாக இருக்க இயலாது. அவர்களது சமூகம், பண்பாடு, பழக்கவழக்கம், உள இயல்பு போன்ற பண்புகளின் அடிப்படையில், அவரது துறையில் சிறந்து விளங்க முடியும். இன்றைய நிலையில், "ஈயிரமாயிரம் படைப்பாளர்கள் உருவாகின்றார்கள். நல்ல கற்பனைத் திறன் கொண்ட இறைஞர்கள் ..... அடையாலம் தெரியாமல் தொலைந்து போகின்றார்கள். காரணம் ..... அவர்களிடம் வேண்டிய அளவுக்குத் திறமை இருப்பினும் மொழி வளமில்லை, நடையழகில்லை, ... அவர்களுடைய படைப்பில் மணமில்லை .... பொதுமக்கள் பாராட்டும் வண்ணம் சிறப்பு விளைவதில்லை"4 (ப-88 மொ.ப) என்பதைக் காண்கின்றோம். ஆனால், புலம்பெயர்ந்த தமிழ்ப் படைப்பாளரான மு.தங்கராசன்; அவர்களின் படைப்பாக்கமானது பன்முகத் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. மேலும், இவரது படைப்புகளில் சொல் வளம், பொருள் வளம் கொண்டு வாசகர்களைச் சிந்திக்க வைக்கக்கூடிய சொல்லாட்சித் தேர்வும், இலக்கண வளமும், தமிழர்களின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், பழமொழிகள், கதைமாந்தர்களின் உரையாடல்களின் தன்மை, வட்டார மொழிகளின் தாக்கம், சங்கச் சான்றோர்களின் அறக்கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், கதைமாந்தர்களின்

பெயர் வைப்புமுறை, கதைக்குத் தலைப்பிடும் முறை, கதையின் தொடக்கம் மற்றும் முடிவுகள் அமையும் விதத்தைப் பொருத்து அவர் அத்துறையில் தனித்த ஆளுமையைப் பெற்றுள்ளார் என்பதை அறியமுடிகிறது. மேலும், மொழிப்பற்றாளரான இவரின் 'மணக்கும் மல்லிகை' சிறுகதைத் தொகுப்பிலுள்ள 'கொடுமை, தியாகச் செம்மல், இலவு காத்த கிளி, தூளியும் தொட்டிலும், தீர்வும் தீர்ப்பும்', ஆகிய கதைகளின் தொடக்கம் அதிகாலைப் பொழுதுடன் கருத்தச் செறிவு மிகுந்து பரந்துபட்ட மொழி ஆளுமைத் தன்மை உடையதாகக் காணப்படுகிறன்றன.

"உலகத்தாய் இருட்போர்வையை விளக்கிக் கொண்டு மெல்ல் மெல்ல கண்மலர்ந்து கொண்டிருந்தாள். சேவல் கூவிக் கொண்டிருந்தது பொழுது 'பொல்' எனப் புலர்ந்து கொண்டிருந்தது". (ப-16) "அதிகாலை ஐந்து மணி ..... அசந்து படுத்துக்கொண்டிருந்த செந்தாமரை கண்மலர்ந்து எழுந்தாள்" (ப-28) "பேராசிரியர் ஞானசேகரன் ..... அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் தமது காலைக் கடனை முடித்துக்கொண்டு கல்லூரிக்குப் போகத் தயாராகி விடுவார்" (ப-41), "உலகம் நித்திரா தேவியின் அரவணைப்பிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டுக் கொண்டிருந்தது. ..... ஆதவன் அடிவானில் உதயமாகிக் கொண்டிருந்தான் பொழுது 'பொல்' எனப் புலர்ந்து கொண்டிருந்தது. அதிகாலை ஆறரை மணி ஆகியிருக்கக்கூடும். அன்புமணி அற வழிபாடு செய்து கொண்டிருந்தார்" (ப-61) என்று, வேருடைய கதையின் தொடக்கம் அதிகாலைப் பொழுதினை அடியொற்றியுள்ளது. மேலும், புலம்பெயர்த் தமிழர்களின் வாழ்வியல் முகப்பு விடியலை நோக்கியதாகவும் கதையின் தலைப்பு, கதை மாந்தரின் பெயர் வைப்பு முறையும் தமிழ்மணம் கமழும் வண்ணம் அமைக்கப்பெற்றிருப்பது அவரின் தமிழ்மொழி ஆளுமையும், தமிழர் என்ற உணர்வையும் காட்டுகின்றன. மேலும், மல்லிகை என்றாலே மணக்கும் தன்மை உடையது. சிறுகதையின் தலைப்பு தமிழ் மணம் கமழும் தன்மை கொண்டு 'மணக்கும் மல்லிகை' என்னும் சிறுகதையின் ஒவ்வொரு தலைப்பும், தமிழ்மொழியின் சுவையை மிகுவித்துக் காட்டுகின்றன. அவற்றுள் 'வாழையடி வாழை' எனும் கதையில் தாய்மையின் மாண்பை எடுத்துரைப் பதிலிருந்து தாய்மொழியையும் தாய்மையையும் ஒன்றாகப் பாவிக்கும் பண்புடையவர் இவர் என்பது தெளிவுபெறுகிறது.

மொழியும்-கதை மாந்தர் பெயர்த் தெரிவும்

மக்கள் எவ்வளவுதான் நவீன உலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், தமிழர்கள் தம் மொழியினையும், பண்பாட்டினையும் அயலகப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு ஆட்படாமல் தம் படைப்புகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில், புலம்பெயர் படைப்பாளுமை மு. தங்கராசனின் படைப்புகள் யாவும், என்றும் மாறாத தமிழ்மணம் கமழும் தன்மையுடன் வரும் தலைமுறைக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன.

புலம்பெயர் படைப்பாளர்களுள் தாய்மையைப் போற்றும் விதமாக 'வாழையடி வாழை' கதை உள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டின் சிறப்பான முத்தை

நினைவில் கொண்டு 'முத்தம்மாள்' என்றும், அயலகப் பணிப் பெண்ணாக (வேளைக்காரி) வளம் வரும் கதாபாத்திரத்திற்கு 'அழகம்மாள்' என்றும், செந்தாமரை – ஆதவன் - கமலக்கண்ணன், அன்புமணி - அன்பழகி, மாதவி – தனலெட்சும் - பூங்கோதை, அரங்கநாதர் - ஆனந்தி- அரவிந்தன்- ஆதிசங்கரி எனவும் கதை மாந்தர்களின் பெயர் தெரிவு முறைமை, தூய தமிழ் மனம் கமழும் தன்மையுடையதாகக் காணப்படுகின்றன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதைப் போல, தாய்மைக்கு முத்தம்மாள் என்றும் பிளைப்பு தேடி அயலகம் செல்லும் பணிப் பெண்ணிற்கு அழகம்மாள் என்றும், பெயர்த் வைத்திருக்கும் முறை இவரின் மொழி ஆளுமைக்கும் மொழி உணர்விற்கும் சான்று பகர்கின்றன.

சிறுதையில் - இலக்கிய நயம்

தமிழ்மொழி வாழ்வின் உறுதிப் பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பனவற்றை இயம்புகிறது. இவ்வமைப்பில் தமிழர்கள் அறத்தொடு நின்று, தம் வாழ்விற்குத் தேவையான பொருட்களை ஈட்டி, அறத்தின் வாயிலாக ஈட்டிய பொருளை இன்பம் துய்த்தால் வீடு பேற்றினை அடைய முடியும். மேலும் தமிழர்களின் வாழ்வியலின் மையப் புள்ளியாகவும் அறம் என்பது தலையாய பண்பாகவும் தமிழர்கள் கொண்டுள்ளனர். இதனைச் சங்கச் சான்றோர்கள் அற இலக்கியங்களாக மானிட வாழ்விற்கு இட்டுச்சென்றுள்ளனர். இன்றைய நவீன காலத்திலும் "மனித வாழ்க்கையில் ஒழுக்கங்களை இன்றியமையாது பின்பற்ற வேண்டும்"5(ப-48த.இ.வ) எனும் கருத்தினை உள்ளீடாகக் கொண்டு, உலக மயமாதல் எனும் சூழலில் ஏற்பட்ட "அரசியல் மாற்றம், அரசுகள் மாற்றம், சமயநிலை மாற்றம், மக்கள் சிந்தனை மாற்றம் ஆகியவற்றின் காரணமாக ……. அறநெறிக் காலம் தலை தூக்கியது. இந்த காலகட்டத்தில் தான் இலக்கியங்கள் அறத்தை வழியுறுத்துவதைத் தமது தலையாய நோக்கமாகக் கொண்டன"6 (ப-49த.இ.வ). இன்றைய சூழலில் மனிதன் மேலைநாட்டு நாகரிகத்திற்கு மாறினாலும் தமிழ்ப் படைப்பாளர்கள் தமிழர்கள், தமிழ்மொழி என்ற உணர்வுகள் காணப்படுகிறது. அதிலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் படைப்பாளர்கள் மேலை நாடுகளில் இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம் என்ற நிலைகளில் ஆட்பட்டாலும், அவர்களின் எழுத்துக்களின் வீரியம் சற்றும் குறையாத தமிழ்மொழி உணர்வோடும், சங்கச் சான்றோர்களின் கொள்கைப் பிடிப்பும் கொண்டவர்களாக உள்ளனர் என்பது அவர்களது படைப்புகளின் வழியே அறியமுடிகிறது.

அவற்றில், உலகப் பொதுமறையும் அவ்வையின் முதுசொல்லும், அறநெறிக் கதைகளும், சங்கப் பாடல்களின் கருத்தாளமிக்க சொற்றொடர்களும் இறைநெறிச் சொற்களும் தத்தம் படைப்புகளில் நினைவு கூறுகின்றதை காணலாம். அவற்றுள் 'மணக்கும் மல்லிகை' சிறுகதையில் "ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே" (ப-08), அவனன்றி ஓர் அனுவும் அசையாது" (ப-65), பொருந்துவன போமின் என்றாற் போகா" (ப-68,112) "போகாத இடந்தனிலே போக வேண்டாம்" (ப-137), தீயாரைக் காண்பதும் தீதே", ஒன்றை

நினைக்கின் அது வாழ்ந்திட்டொன்றாகும்", நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" (பக்-139-140), "புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின் கொய் சொல்லுக" (ப-140), "மேன் மக்கள் மேன் மக்களே"(ப-105), "கண்ணோடு கண் நோக்கொக்கின் வாய்சொற்கள் என்ன பயனுமில" (ப-123).

இவ்வாறு, புலம்பெயர்த் தமிழ்ப் படைப்பாளராக இருந்தாலும், கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதைப் போல மு. தங்கரானின் படைப்புகளில் தமிழ் இலக்கியத்தின் தாக்கம் விரவிக் கிடப்பதன் மூலம், இவரின் தமிழ்மொழி உணர்வும், ஆளுமையும் புலப்படுகின்றன.

தமிழரின் பழமொழிப் பயன்பாடு

தமிழரின் வாய்மொழி இலக்கியமாக, அன்றாடம் வாழ்வியல் கூறுகளில் பயன்படுத்தப்படுகின்ற ஒன்றாக பழமொழி விளங்குகிறது. இஃது, "நுட்பம், சுருக்கம், ஆழம், மென்மை முதலான தனக்கே உரித்தான பல சிறப்பு இயல்புகளைக் கொண்டிருக்கும்"[7] (ப-182வ.நோ.த.இ.வ). இப்பழமொழியை அந்தந்த வட்டார வழக்குகளுக்கு ஏற்பவும் மக்களின் வாழ்வியல் பண்பாடு, கலாச்சாரம், சமயம் போன்ற சூழ்நிலைக்கு ஏற்பவும் பயன்படுத்தியுள்ளனர். மேலும், தமிழர்கள் பிளைப்புத் தேடி எந்த அயல் நாட்டிற்கும் புலம் பெயர்ந்து சென்றாலும், எம்மொழியைப் பயின்றாலும் அவர்களிடம் தம் தாய்மொழியின் தாக்கம், வழக்காறுகளில் தானே முன் வந்து தோன்றும் இயல்புகளை காணமுடியும். இஃது தமிழருடைய உணர்வோடு, உயிரோடு கலந்த ஒன்றாகும். இதனை,

"பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" (ப-130), "பெத்த மணம் பித்து பிள்ளை மணம் கல்லு"(ப-34), "விரலுக்கு தக்க வீக்கம்" (ப-37), "செவிடன் காதில் ஊதிய சங்கு" (ப-39), "எள் என்றால் எண்ணையாக நின்றாள்" (ப-70), "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தான் பிள்ளை தானே வளரும்" (ப-76) என்று, மணக்கும் மல்லிகை சிறுகதையில் தமிழர்களின் பழமொழிக்கும் பஞ்சமே இல்லை என்று கூறும் அளவிற்கு, தம் படைப்புகளில் மொழி உணர்வோடு தம் மொழி ஆளுமையைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் எனும் நிலையில், இப்படைப்பாளர் ஒரு சில பழமொழிகளைக் காலம், இடச்சூழ்நிலைக்கு ஏற்ப, சொற்களின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு பொருள் மாறாமல் எடுத்தியம்பியுள்ளார்.

விரலுக்கேத்த வீக்கம் என்பதை "விரலுக்கு தக்க வீக்கம்" (ப-37) என்றும், காலம் பொன் போன்றது என்பதை "பொழுதைப் பொன்னெனப் போற்று" (ப-41) என்றும், "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதைக் கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" (ப-88) என்றும், தமது மொழி ஆளுமையை இடச்சூழலுக்கு ஏற்பப் பொருள் வடிவம் மாறாமல், தமிழ்மொழியின் கொள்கைப் பிடிப்போடு, தம் படைப்புகளில் பயன்படுத்தியதன் மூலம், படைப்பாளர் மொழி ஆளுமையும் மொழி உணர்வும் மிக்கவர் என்பது புலனாகிறது.

உலகமொழிகளில் தேமதுரத் தமிழ் உணர்வு

தமிழ் மொழிக்கென்று ஓர் இனிய பண்பும் ஆளுமையும் இயற்கையாகவே உண்டு.

இதனை, யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்; தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்திடல் வேண்டும்; தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று தமிழின் சிறப்பையும், மாண்பையும் தமிழ்ச் சான்றோர்கள் போற்றியுள்ளனர். இக்கூற்றுகள் வலுப்படுத்தும் வகையில் புலம்பெயர்த் தமிழ்ப் படைப்பாளர்கள் நிறைவேற்றி வருகின்றனர். உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், மூத்த மொழியாகவும் தமிழ்ச் செம்மொழி விளங்குகிறது. உலகில் முதல் மனிதன் தோன்றிய காலத்தில் அவன் பேசிய மொழி தமிழ் மொழியாகும்.

உலகின் தொன்மை வாய்ந்த ஏழு மொழிகளுள் தமிழ்மொழியும் சிறப்புற்று விளங்குகிறது. இஃது உயர் தனிச் செம்மொழிக்குரிய பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக, வள்ளுவரின் முப்பால் உலகப்பொது மறையாகப் போற்றப்படுகிறது. இன்று வெளிநாடுகளில் கல்வித்துறை, அரசியல், சட்டம், ஆட்சி மொழி எனும் பல்வேறு நிலைகளில் நிலைபெற்று விளங்குகிறது. அவற்றை எடுத்துக்காட்டும் விதமாக 'மணக்கும் மல்லிகை' சிறுகதையில்,

"சிங்கப்பூர் வாழ் தமிழ் மக்களுக்கு ..... பொது நல மனப்பான்மையுடையவர் என்பதால் 'தமிழ் கூறு நல்லுலகுக்குப்'; பெரும் பேரிழப்பு என்ற செய்தி தமிழ் முரசு எனும் நாளிதழில் வெளியாகி இருந்தை", "நீசூன் முதல் செம்பவாங் கம்போய் மலாயி வரைஎடுத்துக்கொண்டால், செம்பவாங் தமிழர் சங்கம்... மரணநிதி தமிழர் சபை, தமிழ்வேள் நாடக மன்றம், பெப்ரா இசைக்குழு, .. நாராயண குருகுலம் போன்ற தமிழ் அமைப்புகள் செயல்பட்டன. மேலும், நீசூன் பகுதியில் டாக்டர் இராமசாமி அவர்கள் ..... நூலகத்தை இயங்கச் செய்ததற்கு இலக்கியப் பற்றுடைய இளைஞர்களை உருவாக்கி ஊக்குவித்தார்" பக் 41-49. மேலும், தமிழர்களின் படைப்புகள் யாவும் அன்றைய சூழலில் வெளிவந்த நாளிதழ்களில் கட்டுரைகளாகவும், கவிதை களாகவும், சிறுகதைகளாகவும் வெளிவந்தன. "தமிழ் இலக்கியத்தை வளர்த்ததில் முன் நின்றவை பத்திரிகைகளே. 1924 முதல்... தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகத் தொடங்கின. 1950 முதல் ... எழுத்தாளர்களின் சிறுகதைகளை வெளியிடத் தொடங்கின. சிறுகதைப் போட்டிகளை நடத்தின. சிறுகதை எழுதும் முறையைப் பற்றி பாடங்கள் ஞயிறு சிறப்பு மலர்களில் வெளியாயின. இவற்றுள் தமிழ்நேசன், தமிழ்முரசு .... குறிப்பிடத்தக்கனவாகும்"[8] (ப-310த.இ.வ.). இவ்வாறு, தமிழர் எங்குச் சென்று குடியேறினாலும் தமிழர்களுக்கான சொந்த இலக்கியத்தைப் படைத்தனர். அவ்வகையில் மு.தங்கராசனின் படைப்புகள் ஒரு மைல் கல் எனலாம்.

"ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுகளின் இறுதிப் பகுதியில், தமிழ்முரசு நாளிதழ்..... தடைபட்டிருந்தது. அந்தக்காலக் கட்டத்தில் தமிழ்மலர் என்ற பத்திரிகை சிங்கப்பூரில் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் தலைதூக்கலாக வந்துகொண்டிருந்த தமிழ் மலர், தமிழ்முரசு நாளிதழ் .... சரிவுக்குள்ளானது..... தமிழ்மீதும் தமிழர்மீதும் கொண்டிருந்த தாக்கத்தினால் தன்னுடைய சம்பாத்தியத்தை முதலீடாகக் கொடுத்தார். ... தமிழ் இலக்கியம் அவரது

தாபத்தை தணித்தது. தமிழ் இசை ... இதயத்துக்கு இதமளித்தது. டாக்கடர் இராமசாமி அவர்கள் அப்போதைய ரேடியோ சிங்கப்பூரில் 'வானொலி வைத்தியர்' என்றொரு நிகழ்ச்சியில் பங்கேற்று வந்தார்..... நிகழ்ச்சியில் .... வழங்கிய தொகை ... அற்பமாக இருந்தாலும் தமிழ் மொழியில் அந்த நிகழ்ச்சி தொடர வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அது அவரின் தமிழ்ப் பற்றைப் புலப்படுத்தியது" பக்-51-52 எனும் கூற்றுகளின் மூலம், மு.தங்கராசன் புலம்பெயர் தமிழ் படைப்பிலக்கியச் செம்மலாகத் திகழ்ந்துள்ளார். மேலும், அவர் தமிழ்மொழி மீதும், தமிழர்கள் மீதும் மிகுந்த பற்றாளராகவும் திகழ்ந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

புதிய சொல்லாக்கம்

புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளர்கள் தமிழ்மொழியின் மீது கொண்டுள்ள பற்றும் ஆளுமையும் செழுமையனதாக இருந்ததால், அவர்கள் வாழும் புறவயச்சூழலுக்கு ஏற்ப தம் படைப்புகளில் புதிய புதிய சொல்லாடல்களைப் படைக்கின்றனர். "தமிழ் மொழியின் செற்றொகுதி - வளர்ச்சியினை மொழியின் சொல் மாற்றம் என்ற வகையில் விளக்கலாம். இயற்செற்களின் பிறமொழிச் சொற்களிலும் தொடர்ச்சியான பொருள் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. பொருள் மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட பொருளமைப்பைக் காட்டி நிற்கின்றன" (ப-62த.மொ. வ) எனும் கருத்திற்கு இணங்க புலம் பெயர்த் தமிழர்கள் தம் படைப்புகளின் வழியாக, அவர்கள் வாழும் புறவயச்சூழலுக்கு ஏற்ப, புதிய புதிய தமிழ்ச் சொல்லாடல்களை உருவாக்கியுள்ளனர். அவை:

"யுவதிகள்" (ப-07), "ஆயாசப் பெருமூச்சு", (ப-07), "ஏதிலியாய்" (ப-06), "தூபம் போட்ட"(ப-10), "பாவாத்மாக்களாக கருதப்படுவர் கடைந்தேறவே முடியாது" (ப-09), "விக்கித்துப்போவார்" (ப-11, 39, 54), "மானசீகமாக, கைங்கர்யம்" (ப-17), "அத்தாப்புக்குடிசை" (ப-32, 46, 45), "கைத்தூவாலையை" (ப-38), "மாத சஞ்சிகைகள்" (ப-47), "தாதியர்கள்" (-47, 54), "அபிலாசையை" (ப-65, 131), "மானசீகமாக தாத்பரியமான" (ப-129), என்று, தமிழரின் உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டு, தாம் வாழும் பண்பாட்டுச்சூழலுக்கு ஏற்பப் புலம்பெயர் படைப்பாளர்கள் தமிழில் புதிய சொல்லாடலைப் படைக்கின்றனர். இச்சொற்களின் வடிவம் இடத்திற்கு இடம் வேறுபட்டாலும் காலச்சூழ்நிலையை ஏற்று, பொருள் அமைப்பில் உருவானவையாக உள்ளன எனலாம். இவ்வகையான புதிய சொல்லாடல்கள் இவர்தம் சிறுகதைகளில், வட்டாரமொழிக் கலப்போடு, மண்சார்ந்த மக்களின் வழக்காற்றிற்கு ஏற்ப இயல்பாக அமையும். இவ்வகையில் மு.தங்கராசனின் படைப்புகள் மொழி வளம் மிக்கன என்பது புலனாகிறது.

முடிவுரை

புலம்பெயர்த் தமிழ்ப் படைப்பாளர் மு.தங்கராசனின் 'மணக்கும் மல்லிகை' சிறுகதையின் மூலம் படைப்பாளர் தமிழ் மொழி உணர்வும், தமிழர் என்ற மாண்பும், தமிழ் மொழி இலக்கியத்தின் மீது அவருக்கிருந்த மொழிப் புலமையும் விளங்குகின்றன. மேலும், தமிழ்நாட்டில் பிறந்து சிங்கப்பூர்வாழ் தமிழராக வாழ்ந்து

வந்தாலும், இவரது படைப்புகள் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று சொல்லும் அளவிற்கு மொழிப்புலமை கொண்டு, சாலச் சிறந்தவனவாகக் காணலாகின்றன.

பயன்பட்ட நூல்கள்

எஸ்.சுந்தரசீனிவாசன், ஆளுமை மேம்பாடு, தாமரை பப்ளிகேஷன்ஸ் பி (லிட்).

முனைவர் கி.இராசா, தமிழ் இலக்கிய வரலாறு – 41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை-600 050, 3-ம் பதிப்பு- 2020.

தெ.பொ.மீ தமிழ் மொழி வரலாறு சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை-625 001, பதிப்பு- 1982.

கா. பட்டாபிராமன் மொழிப் பயன்பாடு. 41 பி, சிட்கோ. இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை-600 098, 4-ம் பதிப்பு-2009.

முனைவர். பாக்யாமேரி வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை-600 050, 3-ஆம் பதிப்பு- 2020.

சுருக்கக் குறியீடுகள்

ஆ.மே. - ஆளுமை மேம்பாடு

த.இ.வ. - தமிழ் இலக்கிய வரலாறு

த.மொ.வ. - தமிழ் மொழி வரலாறு

மொ.ப. - மொழிப் பயன்பாடு

வ.நோ.த.இ.வ. - வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

அமுதத்தமிழ் : கல்வியும் அறமும்

செ. மெல்வின் ராஜா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

"ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கே உன்னை அற்பணி" என்ற ஆன்றோரின் மொழிக்கிணங்க, தமிழாசியர் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட திரு.மு.தங்கராசன் சிங்கைத் திருநாட்டில், தாய்மொழிப் பற்றையும், அறவுரைகளையும் மிகச் சிறப்பானமுறையில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கியுள்ளார். அவைமட்டுமல்லாமல் வாழ்வியல் நெறிகளையும், அறக்கருத்துக்களையும், வாழத் தேவையான உண்மைகளையும் எளிய முறையில் மாணவர்களுக்குச் சென்றுசேரும் வகையில் தமது **'அமுதத் தமிழ்'** என்னும் நூலின் மூலமாக எடுத்துரைத்தனைக் கண்டு சொல்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

தாய்மொழிப் பற்று

சிங்கப்பூர், தென்கிழக்காசிய நாடுகளுள் ஒரு சின்னஞ்சிறிய தீவாகவும், பொருளாதாரச் செழிப்புமிக்க நாடாகவும், பன்மொழிச் சமூகமாகத் திகழ்கின்ற நாடாகவும் விளங்குகின்றது. சீனம், மலாய், தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய பல மொழிகள் பேசப்பட்டாலும் 1930 ஆம் ஆண்டுக்குப் பிறகு, பள்ளிகளில் நான்கு விதமான கல்விமுறைச் செயல்பாடுகள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் எனத் தனித்தனியே பள்ளிகள் இருந்தன. இவை சிங்கப்பூர் மக்களிடையே இணக்கமான ஒரு பொதுத் தொடர்பு மொழிக்கு வழி செய்யவில்லை. மாறாக, மக்களிடையே பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக் காரணமாக அமைந்தன. 1960 களில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தன. இருமொழிக்கல்வியை அறிமுகப்படுத்தியது. இன்றைய சூழலில் தமிழ்மொழியைக் கற்பதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பும் வசதியும் பெருக்கியுள்ளன. ஆனால், அண்மைச் சூழலில் தமிழ்மொழிப் புழக்கம் குறைந்து வருவதை உணர்ந்த மு.தங்கராசன் அவர்கள், **"தாய்க்கு இணையாக ஆன்றோரால் குறிக்கப் பெற்றவை தாய் மொழியும் தாய்நாடும் ஆகும். அன்பு பாலூட்டி வளர்ப்பாள் தாய், அறிவு பாலூட்டி வளர்க்கும் தாய்மொழி, பந்த பாசங்களை உணர்த்துவாள் தாய், பண்பாட்டுப் பெருமிதங்களை உணர்த்தும் தாய்மொழி, அத்துடன் சிந்தனைச் செறிவுகளை ஊட்டி மகிழும் தாய்மொழி"** எனச் சிங்கை மாணவர்களுக்குத் தாய்மொழியின் சிறப்பை எடுத்துக்கூறும் அவர், பாரதி மற்றும் பாரதிதாசனின் கவிதைகளையும் மேற்கோள்காட்டி, தாய்மொழியாம் தமிழ்மொழியின் அவசியத்தை உணர்த்துகிறார்.

தமிழ்மொழிக் கல்வி

சிங்கையின் இருமொழிக் கல்விக் கொள்கைக்குப் பின்னாக, கல்விக் கூடங்களிலும் வெளியிடங்களிலும் ஆங்கிலமொழியின் ஆதிக்கம் அதிகரித்ததின் காரணமாகவும், இரண்டாம் மொழியாகத் தமிழ்ப் பயிற்றுவிக்கப்படும் காரணத்தினாலும், சிங்கை வாழ் தமிழர்களால் தாய்மொழியாகிய தமிழ்மொழியைப் பயன்படுத்தச் இயலாத சூழல் ஏற்பட்டது. இதன் காரணமாக, தமிழ்மொழிக் கல்வியை இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து குடியேறிய தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கத் தொடங்கினார்கள். இந்நிலையில், பிறமொழி ஒன்றில் கட்டுரை அல்லது கவிதை எழுதப்போகும் ஒருவர், தன் தாய்மொழியில் அதனைக் கற்பனை செய்து, சிந்தித்துத் தெரிந்து கொள்ளமுடியும் என்பதனை உணர்ந்த ஆசிரியர்,

> **"தாய்மொழியும் ஆங்கிலமும் தகைமையுடன் எல்லோரும்**
> **ஆய்ந்திங்கு இருமொழியில் ஆற்றல்கள் பெற்றால்**

பாய்ந்துவரும் பான்மையெலாம்
உன்னைத்தேடி வந்தணையும்
தோய்ந்துவரும் செல்வவளம் தெல்லுலகம்
புகழ்ந்தேத்தும்!"[2]

என, இருமொழிக் கல்வியில் தாய்மொழி அனைத்திற்கும் அடிப்படை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். எனவே, அந்நிய தேசத்தில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ்மொழியில் புரிதல் அவசியம் என்பதை ஆசிரியர் திறம்பட விளக்கியுள்ளார்.

மாணவர்களுக்கு

மு.தங்கராசன் அவர்கள் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சிங்கை மாணவர்களின் எதிர்காலம் குறித்தும், உலகமயமாக்கலில் சிக்கித் தமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் இழந்து தவிக்கும் மாணவர்களுக்கு, நல்ல பல அறிவுரைகளைத் தமது பேச்சின் மூலமாகவும் எழுத்தின் மூலமாகவும் வாழங்கியும்கள்ளார். சமயக் கல்வியும் அறநெறிக்கல்வியும் அவர்களை மேன்மையுள்ளவர்களாக மாற்றும் என்ற நம்பிக்கை கொண்டு, அவற்றைத் தம் படைப்புகளின் மூலம் உலகரியச் செய்தார்.

சமயக்கல்வி

நம் முன்னோர்கள் இலக்கிய, இதிகாச நூல்கள் மூலமாகப் போதித்த இறைவழிபாடு, தத்துவங்கள், சம்பிரதாயப் பெருமிதங்கள், சன்மார்க்க நெறிகள், சமயக்கோட்பாடுகள் ஆகியவற்றைக் கைவிட்டதன் காரணமாக, பழமையின் அடிச்சுவடே இல்லாமல், புதுமையின் சின்னமாய் மாறியிருக்கும் சிங்கப்பூர், பல இன, சமுதாயக் கலப்புள்ள ஒரு நாடகப் பரிணமித்தாலும், பண்பாடுகளில் முரண்பட்டு இனம், சமயம், மொழி என வேறுபடுத்திக் கொண்ட இன்றைய இளம் தலைமுறை மாணவர்கள், நாகரிக மோகத்தில் சிலர், யாரிடம் எப்படி என்ன பேசவேண்டும் என்று தெரியாமலும், மதுப் பழக்கத்திற்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டும், உலக ஆர்ப்பரிப்புகளிலும், ஆணவங்களிலும், ஆசாபாசங்களிலும் தமக்கான சவக்குழியை நோக்கி ஓடும் மாணவ சமூகத்தைத் திருத்தும் வகையில் பள்ளிப் பாடத்திட்டத்திலேயே சமயக்கல்வியை அரசே ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.

சமயங்கள் அனைத்தும் மனிதனை நற்பண்புகள், நல்லொழுக்கம் நிறைந்தனவாக உருவாக்க விரும்புகிறன. எனவே சமயக்கல்வி **"நமது நாட்டின் பண்பார்ந்த – அன்பார்ந்த – பணிவார்ந்த – கட்டொழுங்கு மிக்க சமுதாயம் உருவாக்கும்"** என்பதுடன், நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளையும், மணிமேகலை கூறும் மது, மாமிச வெறுப்பையும், கன்பூசியஸ் தத்துவத்தையும், பாரதம் மற்றும் இயேசுவின் கதைகளையும் போதிப்பதின் மூலமாகவும் மாணவர்களுக்கு ஒழுக்கம் நிறைந்த கல்வியை, அவர்களின் இளம் வயதிலேயே கற்பதன் மூலம், பசுமரத்து ஆணிபோல் மனதில் பதியும் என்று உணர்ந்து, அறிவார்ந்த சமுதாயத்தைச் சமயக் கல்வி உருவாக்க வழிவகுக்கும் என இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

அறநெறிக் கல்வி

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு', "கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றயவை" என்ற சான்றோரின் கூற்றுகளுக்கு இணங்க, கல்வியும் செல்வமும் மக்களால் தேடப்படும் இரண்டு முக்கியப் பொருள்கள் ஆகும். கல்வி கற்கும்போது முக்கியமாக அறநெறிக் கல்வியைக் கருத்தூன்றிக் கற்க வேண்டும். அறநெறி தவறினால் துன்பம் ஏற்படும் என்று நம்பி, அனைவரும் பிறருக்குத் தீங்கு செய்யாமல் அன்பைப் பெருக்க வேண்டும் எனக் கீழ்நிலைப் பள்ளிகளில் போதித்தாலும், அதனை உணராது இன்றைய சிங்கப்பூரில், பெற்றோரின் அருமைகளை உணராமலும், பெற்றோரைக் கைவிட்டு, அவர்களை ஆதரவற்றவர்களாக விடுகின்றவர்களைக் கடுமையாகச் சாடுகிறார் மு.தங்கராசன். **"மூத்தோரைப் பேணிக் காத்தல் இளையோரின் தலையாய கடன் என்பது கன்பூசியஸ் அவர்களின் தத்துவம்".** எனவே, அறநெறிக் கல்வியின் முக்கியத்தை உணர்ந்து மாணவர்கள் படிக்கும்போது

பெற்றோர்களையும், முதியவர்களையும் மதித்து எப்படி நடக்கவேண்டும் என்பதை அது போதிக்கிறது. "**பல இனச் சமுதாயக் கலப்புள்ள நாடுகளில் வாழ்ந்துவரும் நாம் பிறப்பில் பேதமில்லை என்ற அறநெறி உணர்த்தும்**" என, சிறப்பாகத் தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

முடிவுரை

மு.தங்கராசன் அவர்கள் சிங்கப்பூரில் தமிழாசிரியராகத் தமது பணியைத் தொடங்கியவர்.அந்நிய தேசத்திலும் தம் மண்ணின் பெருமையை மறவாது,தான் மட்டுமல்லாமல் தம்மைச் சார்ந்தவர்களையும் ஒழுக்கத்தோடு கூடிய கல்வியைக் கற்க வேண்டினார். ஒழுக்கம் ஒருவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை உணர்ந்து, திறம்படத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற பழமொழிக்கேற்ப, சிறுவயதில் படிப்பு மட்டும் போதாது; நல்ல பழக்க வழக்கங்களையும் சேர்ந்தே கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர். எனவே, மற்ற ஆசிரியர்களை விட ஒரு தமிழாசிரியரால் மாணவ சமுதாயத்திற்கு அருகில் சென்று அறவுரை கூறமுடியும் என்பதை மெய்பித்துக் காட்டியவர். இதற்கு அவர்தம் படைப்புக்களே சிறந்த சான்றுகள்.

பார்வை நூல்கள்

மு.தங்கராசன் - அமுதத் தமிழ்?

ஔவையார் -கொன்றைவேந்தன் – 39.

மு.வரதராசன் திருக்குறள் – 400 உரை.

சிங்கப்பூரில் தமிழ்வழிக் கல்வி நேற்று இன்று நாளை – சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம். சிங்கப்பூர்.

சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி – சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம். சிங்கப்பூர்.

மு.தங்கராசன் கவிதையில் கையாண்ட தானம்

சு. ராஜா

முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவானைக்காவல், திருச்சி

முன்னுரை

தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். அதாவது, நமக்கு மிஞ்சியது போக, மற்றவற்றைத் தானமாகவும், தர்மமாகவும் செய்யுங்கள் என்று கூறினார்கள். தானம் பல வகைப்படும். என்னென்ன தானம் செய்தால் என்ன பலன் கிடைக்கும் என்று மு.தங்கராசன் அவரது கவிதையில் அழகாக, புரியும் வகையில் கொடுத்துள்ளார்.

அன்னதானம்

மனிதன் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக உள்ளது உணவு. அதன் பொருட்டுப் பிறர்க்குத் தானம் செய்தலும் அதன் பலன்களும், தானத்தில் சிறந்தது அன்னதானம். அன்னம் இட்டவீடு சின்னம் கெட்டுப்போகாது.

பொன், பொருள் எவ்வளவு கொடுத்தாலும் மனம் திருப்தி கொள்வதில்லை. ஆனால், ஒருவன் வேண்டுமென்று கேட்டவாயால், போதுமென்று சொல்லி மனநிறைவோடு எழுவது சாப்பிடும்போது மட்டுமே தானம் செய்த குறுகிய நேரத்திலேயே பலனை தெரியப்படுத்துவது அன்னதானம். அன்னதானம் செய்தால் பூர்வ ஜென்ம கர்மவினைகள் தீரும். பித்ருக்களின் ஆசிர்வாதம் கிடைக்கும்.

ஆசிரியர் பற்றி

ஓய்வுபெற்ற மூத்த தமிழ் ஆசிரியரும் தமிழ் எழுத்தாளருமான மு. தங்கராசன் இன்றையத் தமிழாசிரியர்கள் பலருக்குத் தமிழ்க் கற்பித்த ஆசானாகவும், கவிதைத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு, மாணவர்களுக்கான கற்றல் வளங்கள், நாடகத் தொகுப்பு எனக் கிட்டத்தட்ட 23 நூல்களுக்கு ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்.

”வாழ்நாள் முழுதும் எழுதி தமிழ்த் தொண்டு ஆற்றியவர் திரு தங்கராசன். பல எழுத்தாளர்களை ஊக்குவித்து புத்தக வெளியீடுகளுக்கு ஏற்பாடு செய்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தமிழ்ப் பணி ஆற்றியவர் அவர்.”

இந்தியாவில் பிறந்த அவர், மூன்று வயதில் மலாயாவிற்கு அழைத்து வரப்பட்டார். கிட்டத்தட்ட 1960களில் தமது ஆசிரியர்ப் பணியைத் தொடங்கிய அவர், அன்றைய செம்பவாங் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பள்ளி, உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி, ரங்கூன் ரோடு உயர்நிலைப் பள்ளி, நேவல் பேஸ் உயர்நிலைப் பள்ளி முதலான பல பள்ளிகளில் ஆசிரியர்ப் பணி ஆற்றியுள்ளார்.

தானங்களும் அதன் பலன்களும்

1. மஞ்சள் தானம் – மங்களம் உண்டாகும்
2. பூமி தானம் – இகபரசுகங்கள்
3. வஸ்த்ர தானம் (துணி) – சகல ரோக நிவர்த்தி
4. கோ தானம் (பசுமாடு) – பித்ருசாப நிவர்த்தி. இல்லத்தின் தோஷங்கள் விலகும். பலவித பூஜைகளின் பலன்கள் கிடைக்கும்.
5. திலதானம் (எள்ளு) – பாப விமோசனம்
6. குல தானம் (வெல்லம்) – குல அபிவிருத்தி – துக்கநிவர்த்தி
7. நெய் தானம் – வீடுபேறு அடையலாம்- தேவதா அனுக்ரஹம்
8. வெள்ளி தானம் – பித்ருகள் ஆசிகிடைக்கும்

9. தேன் தானம் – சுகம்தரும் இனியகுரல்
10. சொர்ண தானம் (தங்கம்) – கோடி புண்ணியம் உண்டாகும்
11. தண்ணீர் தானம் – மனசாந்தி ஏற்படும்
12. கம்பளி (போர்வை) தானம் – துர்சொப்ன துர்சகுன பயநிவர்த்தி
13. பழவகைகள் தானம் – புத்ரபவுத்ர அபிவிருத்தி
14. பால் தானம் – சவுபாக்கியம்
15. சந்தனக்கட்டை தானம் – புகழ்
16. அன்னதானம் – சகல பாக்கியங்களும் உண்டாகும்.

மனதிலிருந்து தானம்

இல்லாதவன், ஒருவனிடம் தானம் கேட்கும் தருணத்தில், இருப்பவன் இல்லை என்று கூறும்போது, அவன் இறந்தவனுக்குச் சமமாக்க் கருதப்படுகிறான். நம் இந்து மதம் ஒன்றைக் கூறுகிறது. தானம் செய்யாமல் கூட இருந்துவிடு; ஆனால் தானம் செய்பவதைத் தடுக்காதே.' அது பெரிய பாவம் என்று.

எல்லோருக்கும் கொடுக்கும் மனம் என்பது அமைந்துவிடுவதில்லை. அப்படி உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் அந்த மனம் வந்துவிட்டால், தானம் என்ற சொல் இல்லாமல் போய்விடும். சமத்துவம் விளைந்து விடும். ஏனென்றால், இரக்கமுள்ள மனிதன், தன்னிடம் கேட்கும் முன்பே கொடுத்துவிடுவான்.

"இல்லாதார் இருப்பவரை எதிர்ந்து நோக்கும்
இயல்பதனை இரந்திடுதல் என்றே சொல்வார் !
இல்லாதார் நிலையறிந்து இருப்போர் ஆங்கு
இயன்றவரை ஈந்திடுதல் தானம் என்போம்" !

அந்தக்கால தானம்

அக்காலத்தில் தானம் என்ற சொல் கொடை என்ற பெயரில் இருந்து, இன்று தானமாய்த் திரிந்துள்ளது. அன்று ஆண்ட மன்னர்கள் அளித்த தானம் ஒருநாள் பயன்பாட்டிற்கானது அல்ல. அது பெறுபவரின் ஆயுளுக்கும் பயன்படும் வகையில் அளிக்கப்பட்டது. முத்து, பவளம், வைரம், வைடூரியம் மற்றும் பலநிலை தானங்கள் வழங்கப்பட்டன. குலசேகர ஆழ்வாருக்கு மீனாட்சி முத்துமாலையைப் பரிசு அளித்து இவற்றை நினைவு படுத்துகிறது.

"அக்காலப் புரவலர்கள் அளித்த தானம்
அணிமணிகள் பொருட்செல்வம் " ஆவும் " மற்றும்
எக்காலம் நிலைத்திருக்கும் இயைபி னோடு
எழிலார்ந்த விளைநிலமும் இனிய தாகும்
முக்காலம் போற்றுமெழில் முத்து மாலை
முழுமதியின் ஒளிதோற்கும் முழுமை வைரம்
திக்கெலாம் புகழ்மணக்கத் தெரிந்து தேரும்
திருமலியும் தானங்கள் தெளிந்த நேராம்" !

மன்னர்கள் அளித்த தானம்

கடையேழு வள்ளல்கள் அளித்த தானங்களை எடை போட்டு பார்ப்பது அரிது. அவற்றை அன்றைய நம் தமிழ் இலக்கியங்கள் வகை பிரித்து நமக்குக் காட்டுகின்றன. இன்னும் பல மன்னர்கள் தானத்தில் சிறந்து விளங்கியுள்ளனர்.

பதிற்றுப்பத்து போன்ற நூல்கள் சேரமன்னர்கள் தானம் வழங்கும் வள்ளல் தன்மைகளை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன. உதாரணமாக, சிபிச் சக்கரவர்த்தி தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவிற்காகத் தன் கால் தசைகளை அறுத்து, துலாக்கோலில் வைத்து தன்னுடைய வள்ளல் தன்மையை நிலைநாட்டியுள்ளார் எனச் சிலப்பதிகாரம் முதற்கொண்டு, பல தமிழிலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

"கடையேழு வள்ளல்கள் கவிந்த நல்ல
காண்மனத்தின் கருணையதில் கனிந்த தானம்
எடைபோட்டுப் பார்க்கவொணா இயல்பின் தன்மை
இதயத்தின் ஈரத்தைக் காட்டும்; தோற்றும்"!

உயிர்தானம் - அது உயர்தானம்

சிலர் தம் உடல் குறையால் மனம் விரும்பி வாழச் சக்தியற்று, நம் முன்னே வாழ்கின்றனர்.

கண்ணிழந்து உடல் உறுப்பு இழந்து வாழும் எவ்வளவு பேரை அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கின்றோம். உலகில் பிறந்த இந்தப் பிறப்பில் நம்மிடம் உள்ளதைத் தானம் வழங்குவதை விடப் பேரு வேறு எதிலும் புண்ணியம் கிடைக்கப் போவதில்லை. கண் தானம், இரத்ததானம் இன்னும் பல உள்ளுறுப்புத் தானங்கள் உலகில் மற்றவர்களை வாழவைக்கவென உள்ளன.

"இருதயமும் எழிலுயிரின் இன்ப நாடி
என்னும் " சிறு நீரகமும் " இரத்த நாளம் ;
உறுபார்வை உறுப்பதுவாம் கண்ணும் மற்றும்
உரித்ததொரு உடலமைவுக் குறையைப் போக்க
திருவுளத்தி னோடமையும் தெளிந்த தானம்"!

எதிர்பார்ப்பு இல்லா தானம்

பொதுவாக, இன்றும் நம் நாட்டில் எதிர்பார்ப்பை முன்னிறுத்தியே தனமானது கொடுக்கப்படுகிறது. ஆனால், அன்று நம் நாட்டில் நம் முன்னோர்கள் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் தானம் வழங்கினர். அதனைத் தம் முற்பிறப்பின் கடமை என்றும் கருதினர். இன்னும் ஆராய்ந்து நோக்கினால் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனின் மனமும், உதவி செய்யும் உள்ளமும் குறைந்து கொண்டே வருகின்றன எனலாம். உலகம் போற்றும் வகையில் வாழ்ந்த மன்னர்கள், புரவலர்கள் போன்றோர் இன்று இறந்தும் பல மக்களின் மனதில் வாழக் காரணம் அவர்கள் செய்த தானமே யாம்.

"இன்றைக்கு நம்நாட்டை இயைந்த மட்டில் ;
எத்தகைய எதிர்பார்ப்பு தானம் தன்னில் ?
அன்றைக்கு நம்முன்னோர் அளித்துந் தந்த
அறிவார்ந்த முற்பிறப்பின் அடியாய்த் தோன்றி
நின்றமையும் உடற்குறையின் நிலைமை எண்ணி
நெடிதுவளர் நாள்தோறும் வருந்தித் தோயும்
கன்றிமனத் தளர்வதனால் காலம் தள்ளும்
கண்ணியரைக் காக்குமன தானம் வேண்டும்"!

சமுதாய தானம்

நாம் நமது சந்ததியினருக்காகச் சேர்த்து வைக்கும் சொத்து அவர்களுக்கு மட்டுமே பயன்படும். ஆனால், இந்தச் சமுதாயத்திற்காக நாம் செய்யும் தானமானது, நம் வம்சத்திற்குப் புண்ணியத்தை சேர்க்கும். நாம் ஒருவருக்குச் செய்யும் தானத்திற்கு பிரதிபலனாக வேறு ஒன்றை எதிர்பார்த்தால், அதற்குப் பெயர் தானம் அல்ல, "வியாபாரம்".!

முடிவுரை

பழங்காலம் தொட்டே தானமானது நம்மிடம் இருந்து வருகிறது. இன்றும் மனிதம் உயிர்ப்புடன் இருப்பதற்கான ஒரே சாட்சி தானம் தான். தனக்குத் தேவையானது போக மீதமுள்ள அனைத்தும் மற்றவர்க்கு உரியது என்பதைப் பல மதங்கள் அறிவுறுத்துக்கின்றன. கவிஞர் திரு மு. தங்கராசன் அவர்கள் அதை மிகத் தெளிவாக, தனது கவிதைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தானம் செய்யும் மனம் இறந்த பின்னும் வாழ்கிறது. தானம் செய்யா மனம் வாழும்போதே இறக்கிறது என்பதே படைப்பாளியின் ஆணித்தனமான கருத்து.

"ஆமமையும் தானங்கள் அனைத்தும் ஈண்டு அறிவியலுக் கேற்றார்போல் அளித்துக் காத்து
தாமமையும் தருமத்தின் தலைமை யாவோம்
தனக்குவமை இல்லாத தானம் செய்தே"!.
"நாமளிக்கும் தானங்கள் 'நமக்கோ' ; அல்ல
நம்மவர்க்கோ நாளடைவில் ஆகக் கூடும்!
சேமமது சமுதாயச் செழிப்பு நோக்கம்
செறிவுடைய அமைப்பதனில் செய்வோம் தானம்"!

துணைமை ஆதாரங்கள்

மகரந்தம் – பூவழகி பதிப்பகம், சென்னை.

புறநானூறு - ஔவை. சு.துரைசாமி பிள்ளை – கழக வெளியீடு.

மு. தங்கராசன் சிறுகதைகளில் மொழிநடை

முனைவர் செ. ரெஜினா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்

ஆய்வுச் சுருக்கம்
நமது எண்ணங்களையும் கருத்துக்களையும் மொழியின் வாயிலாக வெளிப்படுத்துகிறோம். ஒவ்வொரு தனி மனிதனும் தன் திறனுக்கு ஏற்ற வகையில் மொழியைப் பயன்படுத்துகிறான். மொழியானது பயன்பாட்டில் பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. இவ்வேறுபாடு மொழி சார்ந்த – மொழி சாராத என்ற இரு வகைகளில் அமையலாம். அவரவர் ஆளுமைத் திறனுக்கேற்பவும் மொழிப் பயன்பாடு சமூக மற்றும் மொழித் திறனுக்கேற்பவும் வேறுபடுகின்றது. ஒரு மனிதன் பயன்படுத்தும் மொழியமைப்பினையும் மொழிப் பயன்பாட்டையும் ஒருங்கிணைத்து நோக்கி, அதன் தன்மையினைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இதன் வாயிலாக மு. தங்கராசனின் மொழியறிவு, ஆளுமைத் திறன், தனித்திறன், மையப் பொருண்மை, அதை வெளிப்படுத்தும் பாங்கு, எளிமை, தெளிவு, செறிவு மற்றும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை ஆகியவற்றை அறிய உதவுகிறது.
கடவுச் சொற்கள் குமுகாயம், நேவல்பேஸ், அறிவாலயம், கையூட்டு

முன்னுரை

பொதுவாக 'நடை' என்பது மனிதனின் செயலைக் குறிப்பதற்கும், அவனது ஒழுக்கத்தினைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும். இச்சொல் கலைச்சொல்லாக இன்றைய மொழி இலக்கிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவர் தனது எண்ணத்தை வெளியிடும் முறையையே 'நடை' என்கிறோம். மொழியமைப்பின் அடிப்படையில் எழுத்து, சொல், தொடர் மற்றும் வாக்கியம் போன்றவை நடையமைப்பாக அமைகின்றன.

இலக்கியப் படைப்பாளிகளைப் பாகுபடுத்திப் பார்ப்பதற்கு 'நடை' உதவுகிறது. மொழியைப் பற்றிய ஆய்வு இலக்கியத்தோடு தொடர்புடையதாகக் கருதினாலும் அது இலக்கிய ஆய்வாகக் கொள்ளப்படமாட்டாது, அது மொழி ஆய்வாகக் கொள்ளப்படும். ஆனால், நடையைப் பற்றி ஆய்வு செய்கின்ற போது அவ்வாய்வு இலக்கியத்தோடு நெருக்கமான தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. 'நடை' இலக்கியத்திற்கு மட்டும் உரியது என்பதால், அதனைத் தனித்தனி ஆசிரியர்களுடன் நடையைப் பெரிதும் இணைத்துப் பார்க்கின்றனர். உதாரணமாக, ஜானகிராமனின் நடை, மு.வ.வின் நடை, கலைஞரின் நடை, அண்ணாவின் நடை, ஜெயகாந்தனின் நடை என்றெல்லாம் குறிப்பிடும் அளவிற்கு படைப்பாளிகளிடம் தனிநடையும், தனிப் பண்புகளும் வெளிப்பட்டு நிற்பதைப் போன்று மு. தங்கராசனின் மொழி நடையையும் அமைந்துள்ளது.

சிறுகதைகளில் நடைப் போக்கு

'நடை' என்பது ஆடை உடுத்தி வந்த மனிதன் எனலாம். ஆசிரியரின் சிறுகதைகளில் நடைப்போக்கு படிப்பவர்களுக்குச் சலிப்பூட்டாமல் இருக்கிறது. படித்தவுடன் புரிந்து கொள்ளும் வகையில் கதைப் போக்கு எளிமையான நடையில் உள்ளது. சிறுகதைகளில் மக்கள் நடைமுறை வழக்கில் உள்ள சொற்களை மிகுதியாகப் பயன்படுத்திச் செல்வது சிறப்பான ஒன்றாகும். மேலும், சிறுகதையைப் படிப்போர்

நேரில் கேட்பது போலவே சிறப்பான சொற்களை அமைத்திருக்கிறார். நடை என்பதற்குப் பல்வேறுபட்ட இலக்கணங்கள் பலராலும் தரப்பட்டுள்ளன என்பதை,

"சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,
நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல்,
ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல்
முறையின் வைப்பே, உலக மலையாமை,
விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்து
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே"

(நன்னூல்,எழுத்து: நூ.13)

என்று பல இயல்புகள் நூலிற்கு அழகென்பார் பவணந்தி முனிவர். சிறுகதை இலக்கியத்தில் கதை சொல்லப்படும் முறையிலும், கருத்து வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்தும் சொல், தொடர் அமைப்பு முறையினாலும் நடைச் சிறப்பை அறியலாம்.

பேச்சு வழக்குச் சொற்கள்

சிறுகதைகளில் பெரும்பாலும் பேச்சு வழக்குச் சொற்களையே மிகுதியாகப் பயன்படுத்தி யுள்ளார். படைப்புகளில் உயிர்த்;துடிப்பான கதை மாந்தர்களை வெளிப்படுத்தப் பேச்சு மொழியை முதன்மையாகக் கையாண்டுள்ளார். சிறுகதைகளில் பயன்படுத்திய பேச்சு வழக்கு நடைக்குச் சில சான்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. "உங்களுக்கு ஆயுசு நூறுங்க: இப்பத்தான் உங்களைப் பத்திப் பேசிக்கிட்டுருந்தோம்: இதோ வந்துட்டீங்க...!" (கற்பனை மலர்கள் - அபூர்வ நண்பர்கள்: ப.38)

மேலும் இவை போன்ற பேச்சு வழக்குச் சொற்களைச் சிறுகதைகளில் காண முடிகிறது.

பிறமொழிச் சொற்கள்

சிறுகதைகளில் இடம்பெறும் பிறமொழிச் சொற்களான ஆங்கிலமும், வடமொழிச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். பேச்சு வழக்கில் ஆங்கிலச் சொற்கள் நீக்க முடியாத அளவிற்குச் செல்வாக்கினைப் பெற்றுள்ளன. வாசகரும், கதை மாந்தருக்கும் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தவும், சூழலோடு ஒன்றவும் பிறமொழிச் சொற்களைக் கையாள்வதைக் காண முடிகின்றது.

ஆங்கிலச் சொற்கள்

கதைகளில் தேவையான இடங்களில் ஆங்கிலச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். அவ்வாறு பயன்படுத்துவதால் எளிதாகக் கதையை அறிந்து கொள்ள முடிகிறது. சிறுகதைகளில் பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்களான, "வாழ்க்கையின் அழைப்பில்"

சுவையான தொடரில் இருந்து கொண்டிருக்கின்றபோது தொலைபேசியில் அலறவே, இது ஒரு தொலைபேசியா? அல்லது தொல்லை பேசியா...? என மனதுக்குள் அலுத்துக் கொண்டே எழுந்து சென்று "ரிசீவரைக்" கையில் எடுத்து "கலோ" என்றார் எதிர் தரப்பில் இருந்து பதில் இல்லை; பதிலே இல்லை...! (எண்ணிப்பார். பக். 1)

கட்டுமானத் தொழில் துறையில் "காண்ட்ராக்ட்" எடுத்து "லேபர் சப்ளை" செய்யும் கம்பெனிகளின் வழி, "அத்துதக் கூலிகளாய்" வேலைக்குச் சேர்ந்து எப்போதும் உள்ள அந்த எளிமை வாழ்க்கைகையே இப்போதும் தொடர்ந்து மேற்கொள்வது என்பதுதான் அந்த முக்கூட்டு மாநாட்டின் முடிவு...! (கற்பனை மலர்கள், அபூர்வ நண்பர்கள் - ப.35)

ஆங்கிலச் சொற்களைக் கதைப்போக்கு யதார்த்தமாக இருக்க வேண்டும் என்ற நோக்கிலும், பேச்சு வழக்கில் ஆங்கிலச் சொல்லைக் கலந்து பேசும் மக்களைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

வடமொழிச் சொற்கள்

இலக்கியத்தில் பயன்படுத்தும் வடவெழுத்துக்களை நீக்கித் தமிழாக்க விதி வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

“ வடசொற் கிளவி வடவெழுது ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மோ”
(தொல். சொல். நூ.401)

சிறுகதைகளில் பேச்சு வழக்கில் இடம் பெறும் சொற்களைப் பயன்படுத்துவது போல வடமொழிச் சொற்கள் கதையோட்டத்தினைச் சிறப்பாகக் கொண்டு செல்லவும், கதை படிக்கும் வாசகருக்கு ஆர்வத்தை ஊட்டவும் வடமொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

“எதிர்வீட்டில் இருந்து “சுப்ரபாதம்” ஒலித்துக் கொண்டிருந்தது. திருமதி கனகாம்பிகை பறக்கும் காப்பியைக் கொண்டு வந்து டாக்டர் நல்லசிவத்துக்குக் கொடுத்துவிட்டுக் கொண்டிருந்தார்” (கற்பனை மலர்கள், திருவிளக்கும் தெருவிளக்கும், ப.1) என்றும், “கடன் தொல்லைகளைச் சமாளிக்கவும், வந்தமைந்து நிற்கின்ற மாதத்தின் குடும்பச் செலவுகளை “ஜீரணிக்கவும், ஆன வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) ஒன்றை மனத்துக்குள் போட்டுக் குழப்பிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். மேலும், “மனக் கணக்கின் மன்னன்” என்று மற்றவர்கள் போற்றும் ஆதவன் மனத்துக்குள்ளேயே பட்ஜெட் ஒன்றை உருவாக்கிக் கொண்டும், உருவகித்துக் கொண்டும் இருந்ததனால் உணர்ச்சியற்ற ஒரு பிம்பம் போலத் தன் வீட்டிற்கு நடந்து கொண்டிருந்தான்” (கற்பனை மலர்கள், விடியல் - ப.77 - 78)

மேலும், இன்று மாலை ஆறரை மணிக்கு “சுமங்கலி பூஜை” என்ற நினைவு கூர்தலைத் தோழிகள் இருவரும் பரிமாறிக் கொண்ட நிலையில் அவரவர்கள் வீட்டின் இரும்புக் கவசக் கதவுகளை மட்டும் பூட்டிக் கொண்டு “பை பை” சொல்லிய வண்ணம் மறைந்தனர்....! (கற்பனை மலர்கள், தூரத்துப் பார்வையில் - ப.108)

ஜீரணம் - செரிமாணம்
பூஜை - வழிபாடு
உத்தியோகம் - வேலை

மேலும் சுமங்கலி, மங்களம், பிரசாதம் இவை போன்ற வடமொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

விருப்பச் சொற்கள்

நம் அன்றாட வாழ்வில் அடிக்கடிப் பேசக் கூடிய சொற்கள் விருப்பச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனையே, “இல்லை.., ஒரு பேச்சுக்காகக் கேட்டேன்... அவ்வளவுதான்....! ஆமாம் சுமங்கலி அவசரமாக ஓடிவந்து என்னவோ இரகசியமாகச் சொல்லிவிட்டுச் சென்றார்களே... அதை நீ கவனித்தாயா..? என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.....!” (மேலது., 116) இப்படி விருப்பச் சொற்களைக் கையாண்டுள்ளனர்.

தொடர்நிலை

ஒவ்வொரு படைப்பாளியும் தனக்கெனச் சில குறிப்பிட்ட தொடர் அமைப்புகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகின்றனர். இத்தொடர் அமைப்புக்களை இனம் காணுவதன் மூலம் படைப்பாளியை இனம் காண முடிகிறது. ஒரே மாதிரியான தொடர் அமையுமானால் படிப்பவர்க்குச் சலிப்பூட்டுதலும், அவ்வாறின்றி படிப்பவரின் விருப்பத்திற்கேற்ற வண்ணம் சிறிய தொடர்களாகவும், நெடிய தொடர்களாகவும் அமைந்தாலும் ஆசிரியர் தாம் சொல்ல வந்த பொருளைத் தெளிவாகவும், திறம்படவும் கூற முடியும். இது படைப்பாசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் நோக்கமாக அமைகிறது.

படைப்புக்களின் இனிமை கருதி முரண் தொடர், உவமைத் தொடர், அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி, பழமொழித் தொடர் போன்றவைகள் படைக்கப்பட்டன. இவற்றிற்குச் சில சான்றுகள் பின்வருமாறு):

முரண் தொடர்

சொல்லும் பொருளும் மாறுபடத் தொடுப்பது ‘முரண்’ ஆகும்.

"சொல்லிலும் பொருளினும் முரணுதல் முரணே"

(தொல், பொருள், செய்யு. நூ.400)

எனும் தொல்காப்பிய நூற்பாவால் அறிய முடிகிறது.

சிறுகதைகளில் முரண் நயங்கள் கையாளப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக, "ஏழாண்டுகளுக்கு முன்னம் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான நான் வேலை செய்யும் கம்பெனிக்குத் தலைமை நிர்வாகியாகப் பதவி உயர்வு பெற்று ஒரு தமிழர் வந்தார்" (கற்பனை மலர்கள், தூரத்துப் பார்வையில் - ப.117) என்றும், வீட்டுக்கு வீடு வாசற்படி... என்று பழமொழி சொல்வார்கள், கேள்விப்பட்டதில்லையா? இன்பங்கள் ஏற்று மகிழும் இதயத்துக்குத் துன்பங்களையும் துணிவோடு எதிர் கொள்ளும் வலிமை இருக்க வேண்டும்; பொருட்படுத்திக் கொள்ளாவிட்டால் துன்பம் ஒரு பொருட்டாகாது" (கற்பனை மலர்கள், தூத்துப் பார்வையில் - ப.120) என்றும், ஜானகிக்கு இரட்டை மகிழ்ச்சி.... அல்ல, அல்ல... "முப்பேறு" மகிழ்ச்சி... ஆம் தனக்குத் தான் நினைத்ததே நடந்தது ஒரு மகிழ்ச்சி, லியாப் மெங் தாய்மைப் பற்றினை எய்தினாள் என்பது ஒரு மகிழ்ச்சி, அவளுக்கு ஒரே பிரசவத்தில் ஆணும் பெண்ணும் கிடைத்து விட்ட இருமகவுப் பேறு மகிழ்ச்சி...! (கற்பனை மலர்கள், நம்பிக்கை - ப.147) இவை போன்ற முரண் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

உவமைத் தொடர்

ஒரு கருத்தினை மற்றொரு கருத்தோடு ஒப்புமைப்படுத்துவது உவமையாகும். தெரிந்த பொருளைச் சிறப்பாகக் கூறவும், பிறருக்கு எடுத்துச் சொல்லும் பொழுது அழகுபடச் சொல்லவும் உவமை பயன்படுகிறது.

"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"

(தண்டி.,38)

என்று தண்டியாசிரியர் உவமைக்கு விளக்கம் தந்துள்ளார்.

இத்தகைய உவமைத் தொடர்கள் சிறுகதைகளில் கையாளப்படுள்ளன.

அடுக்குத் தொடர்

அடுக்குத் தொடர் என்பது பிரித்தால் பொருள் தரக் கூடியது. ஒரு சொல் அசை நிலையாகவோ அல்லது பொருள் நிலையாகவோ அல்லது இசை நிலையாகவோ இரண்டு, மூன்று, நான்கு என அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும்.

இதனை நன்னூலார்,

"அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கொரு சொல்
இரண்டு மூன்று நான் கெல்லைமுறை அடுக்கும்"[20]

(நன்னூல், நூ.395, ப.352)

என்னும் நூற்பாவில் விளக்கம் தந்துள்ளார்.

ஆசிரியரின் படைப்புகளில் அடுக்குத்தொடர் உணர்வு மற்றும் செயல் வெளிப்பாடு ஆகியவை கதை மாந்தரின் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

"இந்தத் தறுதலைக்கு யார் பெண் கொடுப்பார்கள்?" என்று பழனிசாமியின் தந்தை இராமசந்திரனே அவ்வப்போது தன் மனைவி கண்ணம்மாளிடம் சொல்லிச் சொல்லி அயர்ந்து போவார். "இவனுக்குன்னு எங்கோ ஒருத்தி பிறந்திருப்பாள், வந்து வாய்ப்பாள், கவலைப்படாதீங்க" என்று கண்ணம்மாள் அடிக்கடி ஆறுதல் சொல்வார்".

இவை போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் அளவிற்கு அடுக்குத் தொடர்களைக் கையாண்டுள்ளார்.

இரட்டைக் கிளவி

சொற்களைப் பிரித்தால் பொருள் தராதது இரட்டைக் கிளவி. இதனைத் தொல்காப்பியர்,

"இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா"

(தொல்.சொல். நூ.48)

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் அறிகிறோம்.

"அழகுமணி மண்டபத்தில் பொதுமக்கள் திரள் மிகுந்த ஆர்வத்தோடு நகைச்சுசவை மிளிரும் சிலம்பொலியாரின் பேச்சில் இலயித்துக் கொண்டிருந்தது "சிலம்பு" கணீர்கணீர் என ஒலித்துக் கொண்டிருந்தது" (கற்பனை மலார்கள், திருவிளக்கும் தெருவிளக்கும், ப.9)

என்றும், காலத்தின் மிகமிக விரைவான எத்தனையெத்தனை காரியங்கள் நடந்து முடிந்து விடுகின்றன... (கற்பனை மலார்கள், அபூர்வ நண்பர்கள், ப.15) என்றும், அதோ...! "மார்க்கெட் ஸ்ட்ரீட்" முனையில் இருக்கும், ஷண்முக விலாஸ் உணவகம். இப்போது பிற்பகல் இரண்டு மணி ஆகியிருந்தது சனிக்கிழமையல்லவா....? அலுவலகம் "மதியம்" முடிந்து, அலுவலகப் பணியாளர்கள் மத்தியான உணவுக்குப் பெரும்பாலும் வீட்டுக்குச் சென்று விடுவார்கள். உணவகத்தில் கூட்டம். இல்லை. இருவரும் "பரபரப்பு" இல்லாமல் அமைதியாக "இலைச் சாப்பாட்டை" இனிது சுவைத்து மகிழ்ந்தனர் (கற்பனை மலர்கள், ஆத்மார்த்தங்கள் அழிவதில்லை - ப.47), மேலும், அடிக்கொரு தடவை அகலக்கரை "பார்டர்" முந்தானையைச் சரி செய்து கொண்டு மிகவும் பரபரப்பாக ஏராளமாக எஞ்சியிருந்த பிரசாத வகைகளைப் "பொங்குஸ்" போட்டுக் கொடுத்துத் கொண்டிருந்தாள்...! (கற்பனை மலர்கள், தூரத்துப் பார்வையில் - ப.114) என்றும், எங்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய தனராஜ பூபதி என்றைக்குமே சோர்ந்து காணப்பட்ட தில்லை. எப்போதும் துறுதுறு வென்று சுறுசுறுப்பாகப் பம்பரம் போல் இயங்குவர். (கற்பனை மலர்கள், தூரத்துப் பார்வையில் - ப.119) இவை போன்ற இரட்டைச் சொற்கள் சிறுகதைகளில் காணப்படுகின்றன.

பழமொழித் தொடர்

பழமொழிகள் ஓசை நயத்திற்கேற்பத் தொடரமைப்புகள் மாறுபடுகின்றன. ஓசை நயத்தின் மூலமே அவை கேட்போரைக் கவர்கின்றன. கருத்தை விட ஓசையே இங்கெல்லாம் முதலிடம் பெறுகின்றது. பழமொழிகளில் எதுகை அல்லது மோனை அல்லது இரண்டும் தவறாமல் இடம் பெறுகின்றன. பழமொழிகள் பெரும் பான்மை நீண்ட தொடர்களாக இருப்பதில்லை, பழமொழி என்ற சொல்லை 'முதுமொழி' என்று தொல்காப்பியர் கூறுவார். முதுமொழியானது யாப்பின் ஏழு பகுதிகளில் இறுதியாகச் சொல்லப்படும் ஒன்றாகும்.

அவை நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை, மென்மை போன்ற பலவும் விளங்குமாறு தோன்றிக் கருதின பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன 'முதுமொழி' என்று கூறுவார்.

இதனை,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப"

(தொல்.பொருள்.செய்யு. நூ.176)

எனும் நூற்பாவால் உணர முடிகிறது.

சிறுகதைத் தொகுப்பில் உள்ள ஆறு கதைகளும், மனித குலத்தின் எண்ணங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. "எலி வளையாக இருந்தாலும் தன் வளையாக இருப்பதுதான் நல்லது என்ற உள்ளுணர்வு ஆறுமுகத்துக்கு எப்போதும் இருந்து வந்தது" (கற்பனை

மலர்கள், விடியல் - ப. 80, என்றும், "வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணம் பண்ணிப் பார்" என்றொரு விளங்குமொழி காலம் காலமாக வழங்கி வரும் கருத்துக்களின் நுட்பத்தை ஆதவன் இப்போது தான் உய்த்து உணர்ந்தான" (மேலது., ப. 86) என்றும், வீட்டுக்கு வீடு வாசற்படி... என்று பழமொழி சொல்வார்கள், கேள்விப்பட்டதில்லையா? இன்பங்கள் ஏற்று மகிழும் இதயத்துக்குத் துன்பங்களையும் துணிவோடு எதிர்கொள்ளும் வலிமை இருக்க வேண்டும். பொருட்படுத்திக் கொள்ளாவிட்டால் துன்பம் ஒரு பொருட்டாகாது" (கற்பனை மலர்கள், தூத்துப் பார்வையில் - ப.120) என்றும், வீட்டுக்கு வீடு வாசற்படி... என்று பழமொழி சொல்வார்கள், கேள்விப்பட்டதில்லையா? இன்பங்கள் ஏற்று மகிழும் இதயத்துக்குத் துன்பங்களையும் துணிவோடு எதிர்கொள்ளும் வலிமை இருக்க வேண்டும் பொருட்படுத்திக் கொள்ளாவிட்டால் துன்பம் ஒரு பொருட்டாகாது" (கற்பனை மலர்கள், தூத்துப் பார்வையில் - ப.120)

மேலும், இதுபோன்ற பழமொழிகள் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளதோடு, உணர்ச்சி நடை, வருணனை நடை, இயற்கை வருணனை போன்றவைகளும் இடம் பெற்றுக் கதைகள் மெருகூட்டப்பட்டுள்ளன.

தொகுப்புரை

சிறுகதைகளில் மக்கள் நடைமுறை வழக்கில் உள்ள சொற்களை மிகுதியாகப் பயன்படுத்திச் செல்வது சிறப்பான ஒன்றாகும். மேலும், சிறுகதையைப் படிப்போர் நேரில் கேட்பது போலவே சிறப்பான சொற்களை அமைத்திருக்கிறார். சிறுகதை இலக்கியத்தில் கதை சொல்லப்படும் முறையிலும், கருத்து வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்தும் சொல், தொடர் அமைப்பு முறையினாலும் நடைச் சிறப்பை அறிய முடிகிறது.

நடைகளால் சிறப்படைந்த படைப்பாளிகளில் ஒருவராய் பறைசாற்றி நிற்கிறார். புதுமையைப் படைக்க விரும்பும் மு. தங்கராசன் தனது படைப்பில் பலவகை நடைகளைக் கையாண்டுள்ளார். மொழிநடை வாயிலாக மக்களின் பேச்சுவழக்கையும், பழமொழிகளையும், பிறமொழிச் சொல்லாட்சிகளையும் படைத்துக் காட்டும் திறன் சிறுகதை வட்டாரத்தில் ஆசிரியரை இனம்காட்டத் துணைசெய்யும். கதைமாந்தரின் பண்பை வெளிப்படுத்தவும் மனவுணர்வைப் படம்பிடித்துக்காட்டவும் உத்தியைக் கையாண்டுள்ளார். தான் பெற்ற, கண்ட பிறரது அனுபவக் கீறல்களை இச்சிறுகதையில் வெளிப்படுத்தியதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

நடைகளால் சிறப்படைந்த கதைகள் படைப்பாளனின் திறமைகளைப் பறைசாற்றி நிற்கும். புதுமையைப் படைக்க விரும்பும் ஆசிரியர் தனது படைப்பில் பல்வகை நடைகளைக் கையாண்டுள்ளார். மொழிநடை வாயிலாக மக்களின் பேச்சு வழக்கையும், பழமொழிகளையும், பிறமொழிச் சொல்லாட்சிகளையும் படைத்துக் காட்டும் திறன் சிறுகதை வட்டாரத்தில் ஆசிரியரை இனம்காட்டத் துணைசெய்யும். கதைமாந்தரின் பண்பை வெளிப்படுத்தவும், மனவுணர்வைப் படம்பிடித்துக்காட்டவும் உத்தியைக் கையாண்டுள்ளார். தான் பெற்ற, கண்ட, பிறரது அனுபவக் கீறல்களை இச்சிறுகதையில் வெளிப்படுத்தியதை ஆசிரியரின் கதைகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மு.தங்கராசனின் 'நாட்டுப்புறத்தில்' ஒலிப்புறும் தாலாட்டு

முனைவர் அ.ரேவதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முத்துப்பேட்டை, இராமநாதபுரம்

முன்னுரை

நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் மிகவும் தொன்மையானது தாலாட்டாகும். தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கிறது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்ற நல்முத்து பிறக்கின்றது. தாய் தன் குழந்தையினைப் பற்றிய கற்பனையில்தான் தாலாட்டு பாடுகிறாள். "குழவி மருங்கினும் கிழவதாகும்"[1] எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். (ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம், புறத்திணையியல், ப.29) சங்க இலக்கியத்தில் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. ஒருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தார் வாஞ்சையைவிட, ஏன்? உலகளக்கும் அருளினையும் விட, பிள்ளைப் பாசமே ஆழமானாதாக, வலிமைமிக்கதாக, உணர்ச்சி மயமானதாகவும் கருதப்படுகிறது. தாயும் சேயும் என்ற உறவுப்பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு. தாயின் எதிர்பார்ப்புகள், தாய்மையின் தவிப்பு, இறைவனின் நாமங்கள் போன்றவை தாலாட்டில் இடம் பெறுகின்றன. உள்ளம் கவர்கின்ற தெள்ளுதமிழ் நாட்டுப்புறப் பாடல்களிலே தாலாட்டுப் பாடல்கள் என்னுந்தோறும் இனிக்க வல்லன. நாவினிக்கக் கூடிய நங்கையரின் தாலாட்டு கேட்குந்தோறும் நெஞ்சினிக்கும் திறத்தை உடையன. மனிதனைப் புனிதனாக்கும் மழலைச் செல்வம் பெறற்கரிய ஒரு பெரும்பேறு. அத்தகைய பேறு பெற்ற மழலைச் செல்வத்தின் சிறப்பைத் தாலாட்டுப் பாடல்கள் வழி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

தாலாட்டு சொற்பொருள் விளக்கம்

தால் + ஆட்டு என்ற இரு சொற்களின் சேர்க்கைதான் தாலாட்டு. தால் என்றால் நாக்கு. குழந்தையின் அழுகை ஒலியை அடக்கக் தாய் இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டிக் குலவையிடுகிறாளே அதற்குத்தான் தாலாட்டு என்று பெயர். தாலு என்ற சொல்லுக்கு நாக்கு என்பது பொருள். குழந்தைகளை உறங்க வைப்பதற்குத் தாய்மார்கள் நாவசைத்துப் பாடும் சிறு பாடல்களுக்குத் தாலாட்டு என்று பெயர். தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு. மலை மீதிருந்து பாயும் வெள்ளருவி போல, பனிபடர்ந்த புலர் விடியலில் மலரும் கதிரொளி போல, உள்ளங்கவர் இசை தாயுள்ளத்தின் ஊற்றாகிறது. தாலாட்டும் கவிதையாகிறது. "நடையழகில் ஜெயங்கொண்டாரையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மாணிக்கவாசகரையும் நாகரிக வழக்கத்தில் சங்கப்புலவர்களையும் ஒப்புமையாகப் பெற்றுப் பெருமையுடன் விளங்குகிறது தாலாட்டு"[2] என்று, தாலாட்டின்

சிறப்பைக் கூறுவர் தமிழண்ணல். (தமிழண்ணல், தாலாட்டு, ப.21) "தாய் ஆழங்கான முடியாத அன்புக்கடல் இக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு என்பார்"[3] ஆறு அழகப்பன். (ஆறு.அழகப்பன், தாலாட்டுகள் ஐநூறு, ப.17) "தாயின் அன்பையும் சேயைச் சுற்றியெழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டு"[4] என்கிறார் நா.வானாமாமலை. (நா.வானாமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.70).

இவ்வாறு, பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களைக் கொண்டு பார்க்கும்போது குழந்தைகளை உறங்க வைப்பதற்குத் தாய் பாடும் இசைப் பாட்டே தாலாட்டு என்பதை அறிய முடிகின்றது.

அகராதி தரும் விளக்கம்

தாலாட்டு என்ற சொல்லுக்குப் பல அகராதிகள் விளக்கம் கூறுகின்றன. ஓராட்டு என்ற சொல் கழகத்தமிழ் அகராதியில் காணப்படுகின்றது. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி ஒரு விளையாட்டு என்றும், பிள்ளைக் கவியுறுப்பினொன்றும் எனச் சொல் விளக்கம் தருகிறது. குழந்தைகளை உறங்கச் செய்யும் பாட்டு என்ற சொல்லாட்சியை லிப்கோ தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதியில் காண முடிகிறது.

தாலாட்டின் தனிச்சிறப்பு

தொட்டில்தான் மனிதனின் தொடக்கப் பள்ளி தாய் தான் குழந்தையின் முதல் ஆசிரியர். இவ்வுலகத்தைக் குழந்தைக்கு அறிமுகம்செய்யும் சிறப்புக்கு உரியவள் அதனைப் பெற்ற தாய். தாய் பாடும் இனிய பாடலின் இசையில் குழந்தை தன்னை மறந்து உறங்குகின்றது. குழந்தைக்குத் தாலாட்டுப் பாடலின் பொருள் புரியாது; எனினும், அதன் இசையில் மயங்கி அழுகையை மறந்து உறங்கிவிடுகிறது. கவிதைச் சுவைஞர்களைக் கைகட்டி நிற்க வைக்கும் அளவுக்குத் தாலாட்டு சிறந்து விளங்குகிறது.

பாடுவோர்

தாலாட்டுப் பாடுவதில் பெரும் பங்கு வகிப்பவள் பெற்ற தாயாவாள். நாகரிகம் வளர்ந்து விட்டதாகக் கூறும் இக்காலத்தில், திருமணமாகி குழந்தை பெற்றவுடன் தாய் தாலாட்டுப் பாடுவதை அவ்வளவாக விரும்புவதில்லை. அச்சமயத்தில் குழந்தையின் அம்மம்மா (தாயின் அம்மா), அப்பம்மா (தந்தையின் அம்மா), பெரியம்மா ஆகியோர் பாடுவர். ஆனால், அதே தாய் நாலாவது குழந்தை அல்லது ஐந்தாவது குழந்தை பெற்ற நிலையில் அதற்கேற்ப வயதும் அதிகரித்த பிறகு முன்பிருந்த தயக்கம், கூச்சமெல்லாம் விலகி, தானே தாலாட்டுப் பாடுகிறாள். குழந்தையைத் தொட்டிலில் இட்டும் மடியில் வைத்தும் தோளிலிட்டும் தாலாட்டுப் பாடுவதுண்டு.

கேட்போர்

குழந்தைக்காகத் தாலாட்டுப் பாடுவதெனினும் மற்றவர்கள் அதைக் கேட்க வாய்ப்புண்டு. கணவனுக்கும் குடும்பத்தின் பிற அன்பர்களுக்கும், பக்கத்து வீட்டிற்கும் கேட்பதாகத் தாலாட்டு அமைகிறது. தாலாட்டு என்பது, சாடை பேசுதல் என்ற குறிப்புப் பொருளை உள்ளடக்கி அமைந்திருப்பதையும் காணலாம். தன் கணவனுக்கோ, சுற்றத்தாருக்கோ அவர்களைப் புகழ்ந்தோ, இகழ்ந்தோ செய்தியேதும்

அறிவிக்க வேண்டின், அதற்குத் தாலாட்டுப் பாடல்களையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

குழந்தையின் கண் அழகை வருணித்துத் தாலாட்டு பாடுதல்

குழந்தை அழுது கொண்டிருப்பதை எந்தவொரு தாயும் சகித்துக் கொள்ளமாட்டார். பிள்ளை அழுதுவிட்டால் பின் அவர்களுக்கு எந்த வேலையும் பெரிதாக இருக்காது. பாலூட்டி, சீராட்டி, கொஞ்சிக் குலாவி, ஆராரோ பாடித் தூங்க வைத்த பின்னர்தான் ஆறுதல் அடைவார்கள். அப்படித் தாலாட்டித் தூங்கவைக்கப் பாடும் போது, அவர்களுக்கு அந்தக் கற்பனையும் அடுக்கிச் சொல்லும் அழகு தமிழும் அதற்கேற்ற இசை நயத்துடன் தாலாட்டுப் பாடுகின்றாள். இதனை,

"உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி
தூங்காத கண்ணுக்குத் தூசிகொண்டு மையெழுதி
தோட்டில்கட்டி எங்க துரைக்கண்ணனைப் போட்டுவிட்டா
தோட்டிலுக்கும் கீழே துணையிருப்பாள் மாரியம்மா!" [5]

(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ப.40)

என்ற இப்பாடலில், கண்ணே கானமயிலே, பொன்னே கண்ணுக்கு இணையாகப் பூத்த மரத்தில் தேனெடுக்கச் சுற்றிவரும் வண்டு என்று குழந்தையின் கண்ணழகைக் கற்பனை செய்து, வர்ணித்து உறங்கச் சொல்லிப் பாடுகிறார்கள். உறங்காத கண்ணுக்கு, தூங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மைதீட்டி, சீவிச்சிங்காரித்துத் தொட்டில் கட்டிப் போட்டுவிட்டால், அந்தக் குழந்தையின் பேரழகைத் தொட்டிலுக்குக் கீழே அமர்ந்த வண்ணம் பார்த்து இரசித்துக் கொண்டிருப்பாள் அன்னை என்று, குழந்தையின் கண் அழகை வர்ணித்துத் தாலாட்டுப் பாடுவதைக் காணமுடிகின்றது.

குலம் காக்க வந்த செல்வம்

குழந்தை அழாமல் இருப்பதை அறிந்த தாய், உடனே தாலாட்டை நிறுத்திவிடக் கூடாது என்று கருதியதால், தாலாட்டுப் பாடலை நிறுத்தாமல் தொடர்கிறாள்.

"மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த கண்ணோ?
எங்கள் குலம் மங்காமல் எதிர்த்த குலம் ஏசாமல்
தங்கமணிப் பொக்கிஷத்தைத் தானாள வந்த கண்ணோ?"[6]

(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ப.41)

தாய்மார்கள் மலடி என்ற சொல்லை நெஞ்சைத் துளைக்கும் ஒரு நெருஞ்சி முள்ளாகவே கருதுவார்கள். வேறெந்த வகையான வசையினையும் கூடப் பொறுத்துக் கொள்வார்கள். மலடி என்று மட்டும் யாராவது ஏசிவிட்டால், பேசிவிட்டால் அவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த கண்ணே என்று, வினாவையே விடையாக்கிப் பாடுகின்றார்கள். எங்கள் குலம் எங்களோடு மறைந்து விடாமலிருக்கச் சந்ததி இல்லாமலேயே வாழ்ந்து சரியாகிவிட்டார்கள் என்று, அண்டை அயலகத்தார் குறை சொல்லாமல், பழி சொல்லாமல் இருக்க, எங்களின் வாரிசாக வந்த செல்வம் என்றும்

மனம் குளிர்ந்து பாடுவதைக் காண முடிகின்றது.

குழந்தையின் பேரழகு

தன் மகனின் கரிய நிறத்தைக் கடுகுநிறம், காயாம்பூ மேனி என்றெல்லாம் சொல்லி, வேண்டுமென்றே வம்புக்காக அழுதுகொண்டு தூங்காமல் இருக்கிறான். இன்னும் அந்த அன்னைக்குத் திருப்தி ஏற்படவில்லை.

"வெள்ளி தலைமுழுகி விடிந்தால் சனிமுழுகி
சனிமுழுகிப் பெற்றெடுத்த – என் கண்ணே நீ
தங்கமணிப் பொக்கிஷமோ தானாளவந்த கண்ணோ?
எங்கள் குல மாணிக்கமோ – என் கண்ணே நீ"[7]

(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ப.43)

என்ற இப்பாடலில், வெள்ளிக்கிழமை தலைமுழுகி விடிந்தால் சனிக்கிழமை நல்ல நேரத்தில் பெற்றெடுத்த குழந்தையோ, தங்கப்பெட்டகமோ, நீ எங்கள் வழி வந்த எழில் முத்தோ, தவம் கிடந்து கிடைத்த முத்தோ என்றெல்லாம் கேள்வி கேட்டு, கேள்விகளையே பதிலாக்கித் தன் பிள்ளையின் பேரழகையும் பெற்ற வகையினையும் பெரிதுவந்து பாட்டாலேயே பாடுகின்றாள்.

மாமன் புகழ்

குழந்தை, பாட்டு கேட்பதில் சளைக்காது போலிருக்கிறது. பாட்டுக்குப் பக்கத் தாளமாக அந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. தாயார் பாடிக் கொண்டே இருந்தாள். மாமாவின் சிறப்புகளை யெல்லாம் சொன்னால் மனம் குளிர்ந்து உறங்கிவிடக் கூடும் என்று நினைத்து மாமாவின் சிறப்புகளை பாட்டியல் இட்டு பாடத் தொடங்குகிறாள்.

"எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகி
ஈர்க்கி போல் சேக்கொதுக்கி
இங்கிலீசுக்கார் எடுத்துவரும் இளராஜர் உன் மாமன்
தைலமிட்டுத் தலைமுழுகி தாமரைபோல் சேக்கொதுக்கி
சட்டைமேல் சட்டைபோட்டு சரிகைச் சட்டை மேல் போட்டு
புள்ளிச் சட்டை போட்டுவரும் போர் விஜயர் உன்மாமன்"[8]

(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ப.45)

என்று, மாமன் குளிப்பதையும், வகிடு எடுத்துத் தலைசீவும் விதத்தையும், கார் எடுத்து வரும் அழகையும், கோர்ட்டுக்குப் போய் வரும் கம்பீரத்தையும், உடையுடுத்தும் உயர்வையும், பூஜைமடம் கட்டி வைத்த புண்ணியத்தையும் மாமாவின் சிறப்புகளாகக் கூறிப் பாடுகிறார்கள். மாமாவின் சிறப்புகளெல்லாம் கூறி குழந்தைக்குத் தாலாட்டுப் பாடல் பாடுகின்றாள் தாய்.

இலக்கியத் தகவல்கள்

தாய் தன் குழந்தையைத் தாலாட்டும்போது, இலக்கியங்களைக் கூறித் தாலாட்டுகிறாள். இலக்கியங்களில் வரும் வள்ளி வேலன் கதையைக் கூறுகிறாள்.

"பச்சை நிறம் வள்ளி பவளநிறம் தெய்வானை
நீலநிறம் வேலவரு என் கண்ணே
நின்னுதவம் செய்தாரோ?
நீண்டமரம் நெல்லி நெடியமரம் மாவிலுப்பை
செந்தில் வேலவரும் என் கண்ணே
வேங்கை மரம் ஆனாரோ"[9]

(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ப.49)

முருகனின் கதையைச் சொல்லுகின்றார். பச்சை நிற வள்ளியையும், பவளநிறத்

தெய்வானையையும் மணப்பதற்கு முருகன் நின்று தவம் செய்தாரோ என்றும், வேங்கைமரமான விபரத்தையும், குறவேடம் கொண்ட கூற்றினையும் படிப்படியாகப் பைந்தமிழ்ப் பாட்டில் வடித்துச் சொல்வதை கேட்கத் தெவிட்டாமல் இருக்கின்றது. வள்ளிக்கொடி படர்ந்து கிடக்கின்ற மலைப் பிரதேசத்திலே கொடி போன்ற வள்ளி தோன்றினாள். கொடிபடர்ந்த வள்ளிக்குக் கொழு கொம்பு தேடும் பருவம். அதாவது, வாலைப் பருவம். வள்ளிக்காக முருகன் குறவேடம் கொண்டாரோ என்று பாடுவது கவிஞர்கள் தம் கற்பனைத் திறன்களை யெல்லாம் ஒருங்கே மிஞ்சும் உயர்ந்த கற்பனையாகத் திகழ்கின்றது.

இவை மட்டும் இல்லாமல் பக்தி சம்பந்தப்பட்ட கதைகளும், கர்ண பரம்பரைக் கதைகளும் நம் தமிழன்னையருக்குத் தண்ணீர்பட்ட பாடு. ஆகவே, கதைக்குக் கதையாகவும் பக்திக்குப் பக்தியாகவும் சிவபெருமான் சரிதையையும், திருமுருகன் திருவிளையாடலையும் கூறி, தன் பிள்ளைக்கு சிறுவயதிலேயே இலக்கியச் செய்திகளையும் உடன் தாலாட்டில் தன் தாய் புகுத்துவதைக் காணமுடிகின்றது.

முடிவுரை

தாய்மையானது, இந்த உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசாகத் தாலாட்டு விளங்குகிறது. தாலாட்டுப் பாடல்கள் மூலம் தாயின் சிறப்புகள், மாமனின் புகழ் மட்டும் இல்லாமல் தாலாட்டுப் பாடல் பாடும்போது தவமிருந்து குழந்தை பெற்றதன் சிறப்பும் கூடக் கூறப்படுகிறது. தாலாட்டுப் பாடல்களில் தாய் தனக்குக் குழந்தை வரம் கொடுத்த தெய்வங்களை மறவாமல், நன்றிப் பெருக்குடன் புகழ்ந்து பாடுகின்றாள். தாய் தன் குழந்தையை உறங்க வைக்கும்போது, பல்வேறு இலக்கியப் பதிவுகளையும் கூறித் தாலாட்டிற்குப் பெருமை சேர்ப்பதையும் இக்கட்டுரையில் காண முடிகின்றது.

பார்வை நூல்கள்

மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில், ஜீவஜோதி பதிப்பகம், சிங்கப்பூர்.

தமிழண்ணல், தாலாட்டு, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

ஆறு.அழகப்பன், தாலாட்டுகள் ஐநூறு, பாரி நிலையம், சென்னை.

நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.

“வாகைப் பூக்களில்” விரியும் மரபும் புதுமையும்

டாக்டர் லாவண்யா ஜெயராம், M.A., D.F.L., (B.Ed.Special), Ph.D
உதவி பேராசிரியர் (சுய நிதிப் பிரிவு), மதுரை கல்லூரி, மதுரை

நுழைவாயில்

வளர்ந்து வரும் இன்றைய இலக்கிய உலகில் நாவல், சிறுகதை என்று ஒரே கருவி கொண்டு ஒற்றையடிப்பாதை போல் சென்று கொண்டிருக்கும் இலக்கிய வளர்ச்சியில் மாற்றத்துடன் வளர்ந்து வருவது கவிதை. கவிதை என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது எனலாம். கவிதையினை எளிய வடிவத்தில் அனைவரும் புரிந்து கொள்ளுமாறு ஒரு புது வடிவத்தை உருவாக்கியவர் பாரதியார். ”தமிழ்க் கவிதை வரலாற்றில் புதுக்கவிதையின் தோற்றத்திற்கு தன்னுடைய உரைநடைக் கவிதைகள் மூலமாகவே பாரதியார் முதன் முதலாகக் கொஞ்சம் வித்திட்டார்” என ந. வீ. ஜெயராமன் குறிப்பிடுகிறார். .அதன் அடிப்படையில் பார்க்கும்போது வாகைப் பூக்கள்’ என்ற தலைப்பே பழங்காலத்தில் படையெடுப்பும் உங்களுக்காக வெற்றியின் பெருமிதமாக பெருமிதம் அடையுமாறு சூடப்படும் பொறுப்பு எனலாம். அதுதான் வாகைப்பூ என்பது. இதனை வாசிக்கும் போதே “புகுமுக முன்னம்” என்று வாயிலுக்குள் நுழையும் போதே அவரது மேற்கொள் வரிகளில் மணம் கமழ்கிறது வெற்றிக்குரிய பூவினை ஆசிரியருக்கு காணிக்கையாக்கி இந்த ஆய்வுக் கட்டுரையினைத் தொடங்குகிறேன்.

கவிதையில் பாடு பொருள்

கவிஞர் மு. தங்கராசன் எழுதக்கூடிய விதத்திலே மரபுக்கவிதை போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுத்தாலும் இலக்கணம் மாறாமல் எளிய இனிய வடிவத்தில் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வண்ணம் புதுக்கவிதை போன்ற சாயலில் அமைந்திருப்பதுதான் இந்த ‘வாகைப் பூக்கள்’ என்ற கவிதைத் தொகுப்பு. இதனை மரபு மீறாத கருத்துக்கள் நிறைந்த ஒரு தொகுப்பு என்றே சொல்லலாம். மரபுக்கவிதையும் புதுக்கவிதையும் இங்கே கைகுலுக்கி நிற்கின்றன. எவ்வாறு இருந்தாலும் கவிதை எப்போதும் கவிதை தான். அது கருத்துக்கள் நிறைந்த சமுதாயத்திற்குப் பயனளிக்கக்கூடிய வகையில் இருப்பது தான் இந்த வகைப் பூக்கள் என்ற வாகைப் பூக்கள் தொகுப்பு.

வாகைப் பூக்கள் என்ற நூலில் 72 கவிதைகளை ஆசிரியர் எழுதியுள்ளார். கவிதைகள் அனைத்தும் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் நிரம்பி இருப்பதைக் காணலாம். இது தமிழ்மக்களுக்குச் சிந்தனையைத் தூண்டுவதாகவும் உணர்வினை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது. இந்நூலில் கல்வி, நாடு, சமுதாயம், மொழி உணர்வுகள், சிந்தனை, விழாக்கள், வாழ்த்துக்கள், உரைவீச்சு, கவியரங்கம் என்று பற்பல பாடு பொருள்களை ஆசிரியர் அமைத்துப் பாடியிருக்கின்றார்.

தொன்மை மிகு மொழிகளிலேயே தூய மொழி என்ற தொன்மைக் குறியீடாக அதன் சிறப்புகளோடு கவிதை விளங்குகின்றது.

தமிழை உயிர், உடல், உணர்வு, மானம் என வியப்பூட்டும் வகையில் ஆசிரியர் தனது சிந்தனையினை அமைக்கின்றார். தமிழை வர்ணனை செய்யும்போது தங்கும் தமிழ், இயங்கும் தமிழ், சிந்து தமிழ், தெளிந்த தமிழ் கன்னித்தமிழ், தெரிந்த தமிழ் என்றெல்லாம் பலவகைகளில் போற்றுகிறார் கவிஞர்.

கவிதையின் போக்கு

இன்றைய காலகட்டத்திற்குத் தகுந்தார் போன்று கவிதையில் போக்கு அமைந்துள்ளது. அதாவது, இருமொழி என்ற அடிப்படையில் ஆங்கிலம் மட்டும் அல்லாது பிற மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் மிகவும் நேர்த்தியாகக் கூறுகின்றார்.

கவிஞரின் சொல்லாடல்

'அமைப்புள்ள கவிதைகள் மொழியின் ஓர் ஆதார சுருதியை மீள முடியாத ஒரு அடிப்படையை நமக்குச் சொல்கின்றன' (தமிழவன் தமிழ் கவிதையும் மொழிதல் கோட்பாடும் பக்கம் 63 1994). இதற்கிணங்க கவிதையானது தொடக்கம் முதல் முடிவு வரை எந்த ஒரு வார்த்தை தேடலும் இல்லாமல் சீர்பட கூறவந்த கருத்துகளை கவிஞர் பல இடங்களில் அழுத்தமாகவும் வலியுறுத்தியும் முக்கியத்துவம் கொடுத்தும் கூறுகின்றார்.

'மொழி காக்க இனம் காக்க
கண்ணிமை போல்'

அந்த வகைகளில் கவிஞர் அவர்களின் கவிதைகளில் உள்ள சொல்லாட்சித் திறனை அறியமுடிகின்றது.

தலைப்பு

கவிஞர் சில நேர்த்தியை கையாண்டிருக்கிறார். கவிதையை தலைப்பே எழுதி வருவதாக உள்ளது. கவிதையின் கருத்தை பல இடங்களில் வெளிப்படுத்துகின்றன. தலைப்பு சிந்திக்க வைப்பதாகவும் படிக்கத் தூண்டுவதாகவும் உள்ளது.

மொழிப்பற்று

தனது கவிதையினை பாடும்போது பல இடங்களில் நாடு, சமுதாயம், மனிதர்கள் என ஒவ்வொரு நிமிடமும் உலகின் பற்றோடு கவிதைகளின் வார்த்தைகளால் ஓங்கிய குரலில் உயிருக்கு நிகராய் கொள்ள வேண்டும் என்கிறார்.

கவிதை நடை

ஆசிரியர் தன்னுடைய கவிதை நடையில் எதுகை, மோனை, இயைபு என இலக்கணம் மாறாமல் பல இடங்களில் கவிதையிலே கையாளுகின்றார். மேலும், அடுக்குத் தொடரை இவர் பயன்படுத்தி இருக்கின்றார்.

படிப்படி (ப.7), தினம்தினம் (ப.5) என்று அடுக்குமொழி வரிகளில் ஓர் அழுத்தத்தைக் கொடுக்கின்றது. தமிழ்மொழி மட்டுமல்லாது பன்மொழிப் புலமை பெற்றிருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் பல இடங்களில் வலியுறுத்திக் கூறுகின்றார்.

எதுகை

காலம், ஞாலம், சீலம் (ப.6) மொழிக்குள் தமிழ் மொழி என்ற எதுகை வருமாறு பாடுகின்றார்.

'காலத்தால் மூத்ததால் கன்னித் தமிழே
ஞாலத்தின் மொழிகளுக்கு வழிகாட்டியாகும்'

கல்வியின் சிறப்பைக் கூறும்போது பாரெல்லாம் புகழ் மணக்கும் (ப.6) கற்றவர்களின் முக்கியத்துவத்தை இங்கே குறிப்பிடுகின்றார். "கல்வியில் முன்னேறுவதற்கு" என்ற தலைப்பில் முடியும், நம்பிக்கை, முனைவதும் போன்ற வார்த்தைகள் ஒரு 'Positive Energy' தருவது போன்று உள்ளன.

இயைபு

புத்தகத்தின் முக்கியத்துவத்தை வாசிக்கும்போது இயல்பு என்ற அடிப்படையில் அனைத்து வரிகளிலும் பெரும்பாலும் 'வேண்டும்' என்ற வார்த்தை கையாளப்படுகின்றது. இவ்வார்த்தையின் கொண்டே பல இடங்களில் கவிதையினை முடிக்கின்றார். இதனைக் கேட்கும்போதும் படிக்கும்போதும் பாரதியாரின் மனதில் உறுதி வேண்டும் என்ற வாக்கியம் நினைவிற்கு வருகின்றது.' வேண்டும் 'என்ற வார்த்தை வலிமை பொருந்திய வார்த்தை. கவிஞரின் மனக் குறிக்கோள் இவ்விடத்தே காட்டப்பட்டு உள்ளது. "புதுமை ஞாலம் பூமியில் தோன்ற வேண்டும்" (ப.27) என்கிறார்.

உவமை

"தொடுத்து வில் வாங்கி நிற்கும் வேடன் போன்று" (ப.8)

என்ற வரிகளிலே உரிமையினைக் கையாள்வதன் மூலம் நாம் கட்டாயமாகக் கற்றல் வேண்டும் என்ற வரிகளை வலியுறுத்துகின்றார்.. எதுகையும் மோனையும் போல் ஆங்கிலமும் தமிழும் (ப.9) என மொழியின் வளமையை நாம் எவ்வாறு பெருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

'குடும்பத்தில் வெப்ப தாக்கம்
குறைந்து செய்வதுண்டு
தடுமாற்றம் என்னும் பூச்சியின்
தாக்கமும் அமையக்கூடும்.'

மொழி என்ற விதத்தில் இவர் அனைத்து மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். அதிலும் தமிழும் ஆங்கிலமும் ஒருசேர ஒருவர் கற்றல் இருக்க வேண்டும் என்பதைப் பல இடங்களில் தனது கவிதைகளில் குறிப்பிடுகின்றார்.

சிங்கப்பூருக்கு வள்ளுவர் வந்தால் சிறப்பாக இருந்திருக்கும் எனத் தனது கற்பனையில் சிறப்பாக எழுதியுள்ளார். அதிலும் மகிழ்ச்சி, அன்பு, செங்கோல் நிறைந்த இடம் சிங்கப்பூர் எனவும், வளமிக்க பூமி என்பதையும் (ப.15) பெருமையோடு மகிழ்ச்சியோடும் குறிப்பிடுகின்றார். மலேசியா தேசம் பற்றி வாழ்த்தி (ப.20) பாடியுள்ளார். இயற்கை வளங்களை குறிப்பிடும் இயற்கை குறியீடு கவிதையில் பல இடங்களில் காணப்படுகின்றது எழில் மலைநாடு என்றெல்லாம் வர்ணனை வார்த்தைகளை வைக்கின்றார்.

கருத்து

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதனை மிகவும் வலியுறுத்துகின்றார். நல்ல குடிமக்களின் ஒற்றுமையான சமுதாயத்தையும் வளர்க்க வேண்டும் என்பதில் அவருடைய நோக்கம் இருக்கின்றது.

கற்பனை

ஆஹா (ப.16) என வியந்து, கூறுவதன் மூலம் அழகுமலை நாடு என இயற்கையின் அழகினை ஆச்சரியக்குறியுடன் குறிப்பிடுகின்றார்.

சமுதாயம்

மனிதனின் வாழ்க்கையில் தேவையான மனிதாபிமானம், மனிதநேயம், மானம், உழைப்பு என்பதைத் தன்னுடைய 'அன்பே வழிகாட்டி' என்ற கவிதையில் கவிஞர் கூறுகின்றார். மனிதனுக்குத் தன்னம்பிக்கை என்பது என்ன என்பதற்கான ஒரு வரையறையையும், தன்மீதும் தம் அயலவர்களின் மீதும் கட்டாயம் நம்பிக்கை தேவை என்பதையும் பல இடங்களில் வலியுறுத்திப் பேசுகின்றார்.

சமுதாய ஒற்றுமை

தேவையற்ற வீண் கதைகள் பேசி இருக்கக் கூடாது. வாழ்க்கையினை நல்ல விதத்தில் செலவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். மேலும், ஒற்றுமை மிக்க சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்கிற காலத்தின் அருமை தெரிந்த டைம்ஸ் பிரஷர் என்ற ஆங்கில வாக்கிற்கிணங்க அவ்வப்போது அழுத்தமாகப் பல இடங்களில் கவிதைகளில் காட்டுகிறார்.

நிலையாமை தன்மை

வாழ்க்கையை ஆழமாகச் சிந்தித்து நிலைக்கக்கூடிய நிலை இல்லாதவை எவை எவை என்பதை,

'யாருக்கு யார் தான் முந்தி
யாருக்கு தெரியும் நீ இங்கே'

எனத் கவிதையில் நிலைத்திருக்கக் கூடியது பூமி என்றும் மானுடர்கள் நிலை இல்லாதவர்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

வாழ்க்கை

வாழ்வில் ஒருவக் உயர அடிப்படையாக அவரது மனதில் சிந்தனை என்பது இருத்தல் வேண்டும். இதனை அருள், பொருள், கருணை, இரக்கம் உயர்ந்த தன்மை என்று,

"தெளிந்த நல் ஆற்றுநீர் தீர்த்தம்
வெளிப்படை உள்ளம் விளங்கும்"

என உவமைப்படப் பேசுகிறார்.

சோக உணர்வு

"அடுத்தடுத்து அரும்புகளை ஈன்றெடுத்து இரண்டு மூன்று
அடுத்தடுத்து நோய்களினால் அத்தனையும் இறந்து பட"

என அன்னையை இழந்த சிறுவனின் சோகத்தைக் காட்டுகிறார். அப்போதுதான் இறுதியில் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டவராய் பிறப்பு எதற்கு (ப.49) என்ற உள்ளுணர்வு ஏற்படுகின்றது என்றும் குறிபிபிட்டிருக்கிறது.

நிறைவுரை

படைப்பாளி, தம் கவிதைகளில் மூலம் அனுபவத்தையும் உணர்ச்சிகளையும் சொல்லிக் வாசகர்களிடையே மனதில் எழுதிக் காட்டும் முறையினைக் கையாண்டிருக்கிறார். தனிமனித மன விவகாரங்களையும் அடிமன உளைச்சல்களையும் கனவுநிலை எண்ணங்கள், கற்பனைகள் என பலவற்றையும் கவிஞர் தங்கராசன் அவர்கள் வெளிப்படுத்தி யிருக்கிறார். ஒரு சமுதாயத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டலாக இருப்பதோடு மட்டுமல்லாமல், இளைய தலைமுறையினர் பின்பற்றி வாழ்வதற்குச் சிறப்பு வாய்ந்த இவருடைய கவிதைகள் வாசகர்களை ஈர்க்கும் தன்மை உடையதாக இருக்கின்றன.

மு. தங்கராசனின் 'அபூர்வ நண்பர்கள்' என்ற சிறுகதையில் சமுதாயச் சிந்தனை

முனைவர் சா. வினோலியா சாலொமி சந்திரகாந்தம்
உதவிப் பேராசிரியர் (ப. நி.), தமிழ்த்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை

'மு.தங்கராசனின் அபூர்வ நண்பர்கள் என்ற சிறுகதையில் சமுதாயச் சிந்தனை' என்ற தலைப்பில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

"உலகத்தில் 'தூர நோக்கு'பற்றிச் சிந்தித்துக் கொள்வார் மிகச்சிலரே...! மற்றைய பெரும்பாலோர் அற்றைய நடப்புகளில் ஆர்வம் காட்டி, அதனிலேயே உழன்று, 'தூரத்துப் பச்சை' நோக்கிக் காலத்தைக் கடத்தி விடுவார்கள்" (கற்பனை மலர்கள் ப. 15) என்று கதையை ஆரம்பிக்கிறார் ஆசிரியர். மனிதாபிமான வாழ்க்கையில் 'பந்தங்கள்' என்பதற்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து வாழ்ந்த மூன்று சாட்சியங்கள் என மூன்று நண்பர்களைக் குறிப்பிடுகிறார் மு. தங்கராசன். எதிர்பார்ப்புகளை விட ஏமாற்றங்களே இவ்வுலகைப் பெரும்பாலும் ஆட்டிப்படைக்கின்றன. ஆட்கொள்ளுகின்றன. இதற்கும் அந்த மூவரே சிறந்த எடுத்துக் காட்டுகள். மூவரும் ஏறக்குறைய இருபதாண்டுகால நட்பின் முதிர்ச்சி உள்ளவர்கள். ஒருவருக்கொருவர் உறுதுணையாய் வாழ்க்கையில் நடைபயின்றவர்கள்.

நண்பர்கள்

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டின் தொடக்கத்தில் 'நேவல் பேஸ்' என்னும் நாவாய் தளத்தில் 'அப்ரெண்டீஸ்' என்னும் அடிப்படைப் பயிற்சிபெறும் தொழிலாளர்களாக வேலைக்குச் சேர்ந்தவர்கள். பயிற்சி பெறும் காலக்கட்டத்திலேயே பழகிக் கொண்டவர்கள். பலபேர் நேர்முகப்போட்டிக்கு வந்து பயிற்சிப் பணிகளில் சேர்ந்தார்கள். அவர்களுள் "வெல்டர்" பணிக்கு மனுச் செய்த லீகூன்சாய் என்பவரும், 'பெலம்பர்' தொழில் துறைக்கு மனு செய்த பிச்சை முத்துவும் 'எலக்ட்ரசியன்' ஆக மனு செய்த இஸ்மாயிலும் அடங்குவார்கள். (கற்பனை மலர்கள் பக். 18,19)

ஒரே காலக் கட்டத்தில் ஒரே பணிமனையில் வேலைக்குச் சேர்ந்தாலும் ஒத்த உயர் கருத்துடையவர்களே ஒருங்கிணைவார்கள். பயிற்சிப் பட்டறையில் பழகி, பழுதுபார்க்கும் கப்பல்களில் பணிசெய்யும்போது நெருக்கம் ஆகி குடும்ப நண்பர்களாகி விட்டவர்கள். இந்த மூவரில் மூத்தவர் லீகூன்சாய். அடுத்தவர் இஸ்மாயில். இளையவர் பிச்சைமுத்து. இரண்டு மூன்று வயது ஏற்றத் தாழ்வுடையவர்கள்.

வேலைவாய்ப்பு

எங்கெங்கோ வேலைதேடி இறுதியாக 'நேவல்பேஸ்' கப்பற் பட்டறையில் தொழில் செய்ய வேலைக்குச் சேர்ந்தவர்கள். நிலையான வேலையையும் நிரந்தர வருவாயையும் பெரும் பேறாகக் கருதியவர்கள். மூவரும் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள். ஒரே பகுதிக்குக் குடிபெயர்ந்து வாடகை வீடுகளில் குடியேறினர். ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக வாழப் பணம் தேவை. அதை ஈட்டுவதற்கு வேலை தேவை.

குடும்பச்சூழல்

வெல்டர் லீகூன்சாய்க்கு ஆறுபிள்ளைகள். எலெக்ட்ரீசியன் இஸ்மாயிலுக்கு நான்கு பிள்ளைகள், பெலம்பர் பிச்சை முத்துவுக்கு மூன்று பிள்ளைகள். ஒவ்வொருவருக்கும் கடைசி மட்டும் ஒரே பையன். குடியும் குடித்தனமுமாய் இருந்த இந்த குடும்பங்களுக்குக் குறைந்த பட்ச வருவாய் போதுமானதாக

இல்லை. 'இல்லதன் இல்லவள் மாண்பானால்" என்னும் உலகப் பொதுமறை கூறும் தத்துவத்தின்படி அந்தக் குடும்பத் தலைவிகளின் சாமர்த்தியத்தாலும் சாதுரியத்தாலும் குடும்பங்கள் தழைத்தன. 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்ற ஆன்றோரின் அமுதவாக்கு மூவருக்கும் ஓர் அமைதியைத் தந்தது. "பிள்ளைகளைப் படிக்க வைப்பது முதற்கொண்டு தங்களின் மாமன் மாமியர்க்குச் சேவை செய்வது வரை அனைத்தையும் எந்தக் குறையும் நேராதவாறு இல்லத்தரசிகள் இனிது கவனித்துக் கொண்டார்கள்" (கற்பனை மலர்கள் ப.22) இதில், வள்ளுவர் கூறிய 'வாழ்க்கைத் துணை நலம்' சிறப்பாக வெளிப்படுவதைக் காண முடிகிறது. வருவாய் குறைவு எனினும் அதற்குள் குடும்பத்தை இனிதே நடத்தும் குடும்பத் தலைவிகள் பாராட்டப்படுவது சரியான செயலாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். தம் பிள்ளைகளையும் குடும்பத்தையும் மட்டுமல்ல; மாமன் மாமியர்க்குச் சேவை செய்தனர் என்ற செய்தி மகிழ்ச்சி அளிப்பதாகும். இக்காலத்தில் தம் பெற்றோரை முதியோர் இல்லத்தில் விடும் பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து வருந்த வேண்டிய நிலை உள்ளது.

மூன்று குடும்பத்தின் முந்திய தலைமுறையினர் 'முக்தி' பெற்றுவிட்டனர். அவர்களின் பிள்ளைகளின் கல்வி, துணை தேடித் தரும் செயல்பாடுகள் என அடுத்தடுத்த பெருஞ்செலவுகள் காரணமாக நீறுபூத்த நெருப்பாகக் 'கடன்' பிரச்சினையும் அதிகம் ஏற்பட்டது. நாணய விவகாரங்களில் 'நாணயம்' தவறாத, நாநயம் பெற்று விளங்கியதனால் அறிமுகமாகி வட்டித் தொழில் புரியும் செட்டியார்களும், 'வரையும் பத்திரம்' எழுதாமலேயே பணம் தந்து உதவினார்கள். 'எடுப்பது பிச்சை கொடுப்பது தருமம்' என்பது போல, இவர்கள் வட்டிக்கு வாங்கிவந்த கடனில் வேலையிடத்து நண்பர்களுக்குக் 'கைமாத்துக்' கொடுத்து உதவுவதும் உண்டு. கைமாத்து வாங்கியவர்கள் திரும்பக்கொடுக்காமல் ஏமாற்றியவர்களும் உண்டு. மூன்று குடும்பங்களிலும் முதல் பெண்பிள்ளைகளின் திருமணத்தில் பண நெருக்கடிக்கு ஆளாயினர். பெண் பிள்ளைகளைப் புக்ககம் அனுப்பிய பின் பெரும்பாரம் நீங்கியது போல மூன்று குடும்பத்தின் தம்பதியர்களும் பெருமூச்சு விட்டனர். கடைசிப் பிள்ளையைக் கருத்தில் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

பணிநிறைவு

"ஐம்பத்தைந்து வயதை முன் பின்னாகக் கடக்கும் இந்த மூவரும் சேமநிதி இருப்பை எடுத்து 'கடன் உதவி' களைத் தீர்த்து, கண்ணியமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். மூவரும் 'மெடிக்க லிபிட்' என்று செம்பவாங் ப்யார்ட் டாக்டரே உறுதிப் படுத்தியதால், தொழில் நீடிப்பு 'எக்ஸ்டென்ன்' கிடைக்கப் பெற்று வேலை செய்து வந்தார்கள்." (கற்பனை மலர்கள் பக். 26,27)

"முன்னவர்களின் வேடிக்கையான ஒரு கேள்வி. குழந்தை பிறந்திருக்கிறது என்று கூறினால் "உனக்கா? ஊருக்கா?" என்று கேட்பார்களாம். 'உனக்கா?' என்பதன் பதில் ஆண்மகவு. "ஊருக்கா?" என்பதன் பதில் பெண்மகவு." (கற்பனை மலர்கள் ப. 27) மூன்று குடும்பங்களிலும் ஆண்பிள்ளைகள் தம் துணைகளைத் தாமே தேடிக் கொண்டனர். இறுதிக் காலம் வரை இருக்க வேண்டியது இந்தப் 'பிள்ளை' யோடு தானே என்று எண்ணி, 'இருந்த இருப்பை' எல்லாம் அள்ளிக் கொடுத்து அடுக்கு மாடி வீடு ஒன்று வாங்கினர். ஆனால் பெற்றோர் பழைய வாடகை வீடுகளிலேயே தொடர்ந்து வாழ்ந்தனர்.

பிரிவுத்துயர்

மூன்று இல்லத் தலைவியரும் ஒரு சனிக்கிழமைச் சந்தையில் பொருட்கள் வாங்கி, வாடகைக் காரில் வீடு திரும்பும் போது மணல் லாரி காரில் மோதி மூவரும் பலியானார்கள். 'மனைவியரைப் பறிகொடுத்து விட்டு, தனிமைத் துன்பம் தகிக்க மாளாத் துயரடைந்தார்கள். "எங்களோடு வந்து இருங்கள்" என்று பெண் பிள்ளைகள் எவரும் மன ஆறுதலுக்காக ஒரு

வார்த்தை சொல்லவில்லை. பையன்கள் மட்டும் தங்கள் தந்தையர்களைத் தங்களோடு வந்து தங்கியிருக்கும்படி அழைத்தார்கள். ஓராண்டு நினைவஞ்சலிக்குப் பிறகு அது பற்றி யோசிப்போம் என்றனர் தந்தையர்கள். பையன்கள் வற்புறுத்தவில்லை. மருமகள்களும் மறுத்து எதுவும் கூறவில்லை." (கற்பனை மலர்கள், பக். 30-31) பாசத்தைக் கொட்டி, பணத்தைக் கொட்டி வளர்த்த பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் பெற்றோரின் வயது முதிர்ந்த காலத்தில் அவர்களை பராமரிப்பதைச் சுமையாகக் கருதும் அவலம் ஒழிய வேண்டும், நாம் குழந்தைகளாயிருந்த போது நம் பெற்றோர் நமக்காகச் செய்த தியாகங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். "மூத்தோரைப் பேணிக்காத்தல் இளையோரின் தலையாயக்கடன்" என்பது கன்ஃபூசியஸ் அவர்களின் தத்துவம் (மு. தங்கராசனின் அமுதத்தமிழ், ப. 103) 'உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கெடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்ட படியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக' (உபாகமம் 5:16) என்கிறது விவிலியம்.

கப்பற்பட்டறை ஆட்குறைப்பு இயக்கத்தில் ஈடுபட்டது, ஏற்கனவே பணி ஓய்வு பெற்ற இந்த மூவரும் வேலையிழந்தனர். தம்மைந்தர் தாயார்களின் தலைத் திவசத்துக்கு வந்து போய் ஆறுமாத காலம் கடந்து விட்டபோதும் ஒரு நாளாவது தம் தந்தையருக்கு ஆறுதல் சொல்லவோ, அனுசரணையைக் காட்டவோ வரவில்லை என்பதால் அந்த மூவரும் ஆதங்கத்தோடு பேசிக் கொண்டனர். கட்டுமானத் தொழில் துறையில் 'காண்ட்ராக்ட்' எடுத்து, 'லேபர்சப்ளை' செய்யும் கம்பெனிகளில் அத்துக்கூலிகளாய் வேலைக்குச் சேர்ந்து அன்றாடச் செலவுகளுக்கு கூலி பெற்றனர். அந்த வேலையை 'மானம்' கருதி விட்டு விட்டனர். வாடகை வீடுகளைக் காலிசெய்து மகன்கள் வீடுகளுக்குச் சென்றனர். 'வந்து விட்டதே தொல்லை' என்ற எண்ணத்தை அவர்கள் பார்வைகளில் கண்டனர். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்" (குறள் 969) என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, அங்கிருந்து வெளியேறினர். ஸ்ரீ நாராயணமிஷினின் பொறுப்பில் இயங்கி வரும் "வயோதிக நோயாளிகள் இல்லத்தில் வேலை வாய்ப்பு பெற்றனர். பிச்சைமுத்து சமையல் உதவியாளர், இஸ்மாயில் தோட்டக்காரர், லீகூன்சாய் உள்ளகத் தூய்மையாளர் எனப் பொறுப்பேற்றுச் செயல்பட்டனர்.

முடிவுரை

இந்த உலகத்தில் மனிதாபிமானமும் நன்றியுணர்ச்சியும் அறவே செத்தொழிந்து போய்விடவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டுகளாய் இந்த மூவரின் ஆளுகைக்குட்பட்டு பணிபுரிந்து, தொழில் நுட்பங்கள் கற்றுக் கொண்ட பலர், அவ்வப்போது இவர்களைப் பார்த்துப் போக வந்தனர். 'கையுறை' யாகச் சில பொருட்களைக் கொண்டு கொடுத்தனர். வயோதிக நோயாளிகள் இல்லத்தில் தங்கிப் பணிபுரியும் நண்பர்கள் மூவரும் தினமும் மாலை ஆறுமணிக்குக் குளித்து, இறை வழிபாடு செய்து, ஆறே முக்கால் மணிக்கு ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். இறுதிவரை நண்பர்களாக இருந்த இவர்கள் 'அபூர்வ நண்பர்கள்' என்பதை ஆசிரியர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

கவிஞர் மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் இரா. விஷ்ணுப் பிரியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
என். ஜி. எம் கல்லூரி, பொள்ளாச்சி

முன்னுரை

சிங்கப்பூரின் மூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கக் கூடியவர் மு. தங்கராசன். இவர் கவிதை, நாடகம் எனப் படைப்புலகில் தனக்கென ஒரு தனித்த இடத்தைப் பிடித்தவர். தமிழாசிரியராக, சமுதாயத் தொண்டராக, கலைஞராக, சிறுகதை யாசிரியராக, கவிஞராக வளர்ச்சி அடைந்தவர். தமிழ்ப்பற்று மிக்கவர். 2008 இல் கவிமாலையின் கணையாழி விருது பெற்றதோடு, 2012 இல் நல்லாசிரியர் விருதும் பெற்றவர். 23க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். தனது 86 ஆவது வயது வரை தமிழோடு நிறைவான வாழ்வை வாழ்ந்தவர். பல ஆண்டுகள் செம்பவாங் வட்டாரத்தில் வாழ்ந்து, அங்குள்ள தமிழ்ச் சமுதாய மக்களின் இன்ப துன்பங்களில் நேரடியாகப் பங்கேற்றுள்ளார். அவரது படைப்பில் நான்காவது கவிதைத் தொகுப்பாக 1989 இல் பூவழகி பதிப்பகத்தின் வாயிலாக 'மாதுளங்கனி' வெளி வருகின்றது. "மாதுளங்கனி" கவிதைத் தொகுப்பில் முப்பத்தைந்து தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. கவிதைகளில் பெரும்பாலானவை நெடுங் கவிதைகள். ஒவ்வொன்றிலும் நூறு வரிகள் வரை அடங்கியுள்ளன. இக்கவிதைகள் ஒவ்வொன்றும் சமுதாயத்திற்குத் தேவையான சிந்தனைகளை வெளிப்படுத்துவதோடு, பல்வேறு நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் விதமாகவும் அமைந்துள்ளன என்பதை விளக்கும் விதத்தில் இக்கட்டுரை அமைகின்றது.

குடும்பம்

சமுதாயத்தில் ஓர் ஆணும், பெண்ணும் சேர்ந்து நடத்துகின்ற வாழ்க்கையைக் குடும்பம் என்பர். இவ்வாழ்க்கை சிறப்புப் பெறக்காரணம் இல்லில் இருந்து அறம் செய்வதேயாகும். அதனாலேயே இதனை இல்லறம் என்றனர். இல்லில் இருந்து அறம் செய்வதாலேயே, குடும்பத் தலைவியை இல்லாள் என்றனர். இச்சொல்லை இல்+ ஆள் எனப் பிரித்து இல்லத்தை, வீட்டை ஆள்கின்றவள் என்று பொருள் கொண்டாலும் தவறாகாது. வீட்டிற்கு ஒளியாக அமைபவள் பெண்ணே.

இதனை,

"வீட்டிற்கு இருளகற்ற விளக்கு வேண்டும்;
விளங்கு மெழில்வீடதனில் "குடும்பம்"
வேண்டும்!..."
"மங்கையரைக் "குலவிளக்கு" என்றே கூறி
மதித்திடுதல் நம் தமிழர் மரபே யாகும்!"
"நல்லதொரு குடும்பம் நல்விளக்கே
யாகும்!"

“மனையறத்தின் மாண்பெல்லாம் மனத்துள்போற்றி
மதித்துவரல் புரிந்துணர்வின் மாட்சியாகும்!”

என்ற இவ்வரிகளில் கவிஞர் பெண்மையின் நிலையையும், குடும்பத்தின் அமைப்பையும் விளக்குகின்றார். கணவன் மனைவி உறவு என்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும்போது சிறப்படைகின்றது. “குறையில்லாக் குடும்பங்கள் இருப்பதுண்டா?” என்கின்றார். இரண்டு உள்ளங்கள் ஒத்து நடக்கும்போதுதான் உறவுகள் பறிமாறப்படுகின்றன. இந்தியாவின் பண்பாட்டை இக்குடும்ப அமைப்பே காக்கின்றது. இன்றைய திருமணங்களில் பல ஆடம்பரமாக நடந்து முடிந்த பின், ஒரு மாத முடிவிற்குள் பல திருமணங்கள் விவாகரத்து வழக்குகளில் சிக்கித் தவிக்கின்றன. இதற்கு அடிப்படை இல்லற வாழ்வில் புரிதல் இல்லாமையும், விட்டுக் கொடுத்து வாழாமையுமேயாகும். இதனையே வள்ளுவரும்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

(குறள்.45)

என்று குறிப்பிடுகின்றார். ஒரு குடும்பத் தலைவனுக்கு, அக்குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை ஈட்டித் தருவது கடமை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்பது பழமொழி. பொருள் உள்ளவரையே இவ்வுலகம் போற்றும். அக்கடமையைச் சரிவரச் செய்யாதவர்கள் செல்லாக் காசிற்குச் சமம் என்பதை,

“அருங்குடும்பம் அணிந்தொளிரக் கடமை ஆற்றும்
ஆண்மையிலா அங்கத்தினர் செல்லாக்காசே!”
“வெறுங்குடும்பம் எனும் கிலையில் விளைந்து மேவும்
வினையாக்கம் கொள்ளாதார் செல்லாக்காசே!”

என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். மேலும், பெண்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்; இல்லையெனில் அவர்களும் செல்லாக்காசுதான் என்பதைத்

“தற்காத்துக் கொள்ளாத தன்மைப் பெண்ணாள்
தாரணியில் தன் மதிப்பை இழந்தகாசே!”

எனக் குறிப்பிடுகின்றார்.

மழலைச் செல்வம்

கடவுளுக்கு அடுத்த படியாக நாம் நினைக்கும் ஓர் உயர்ந்த உள்ளம் ஒன்று உண்டெனில், அது குழந்தைச் செல்வமே ஆகும். “ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு அவன் ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும். ஒரு குழந்தையாவது பெற்றிருக்க வேண்டும். ஒரு நூலாவது எழுதி இருக்க வேண்டும்.” (http.//தினமலர்; com.) என்கின்றது இத்தாலியப் பழமொழி. குடும்பத்தில் நடக்கின்ற சண்டைகள் பல சமாதானம் பெறுவதற்கும், மனக்குழப்பம் நீங்கி மனம் அமைதிபெற்று மகிழ்வடைவதற்கும் மழலைச் செல்வமே காரணம். ஒரு வீடு பணத்தினால், செல்வத்தினால் மட்டும் செழுமை பெறாது. அதனால் பலன் இல்லை; பயன் இல்லை. முழுமையான செல்வம் மழலைச் செல்வமே. இதற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. இதனை,

"இல்லறத்தின் நற்பண்பு இனிமை போற்றி
இயைந்து வரும் நற்குடும்பம் என்னும் வீட்டில்
நல்லறத்தின் நற்பயனாய் நயந்து தோன்றும்
நன் மக்கட் பேறுகளே நாட்டின் செல்வம்"

என்றவாறு, இம்மழலைச் செல்வத்தைப் புகழ்ந்து உரைக்கின்றார். மக்கட் பேற்றின் சிறப்பைப் பாண்டியன் அறிவுடை நம்பியும்,

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை – தாம் வாழுநாளே"

(புறம்:188)

என்ற வரிகளில் அறிவுறுத்துகின்றார். இதனை உணர்ந்தால் நமக்கு செல்வத்தின் மீது பற்று ஏற்படாது. இன்றைய கால கட்டத்தில் பொருளாதாரத்திற்காகப் பெற்றோர்கள், வேலைக்குச் செல்லும் போது குழந்தைக்கும், தாய்க்குமான பாச அரவணைப்பு பல நேரங்களில் இல்லாது போய் விடுகின்றது என்பதையும் மறுக்க இயலாது.

குறிக்கோள்

நாம் ஒரு குறிக்கோளை அடைய வேண்டுமானால் அதனைப் பற்றிய எண்ணம் நம் மனதில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்கான வெற்றியைக் காணமுடியும். தன்னம்பிக்கையின் தனித்த அடையாளமாகத் திகழும் விவேகானந்தர், நாம் 'குறிக்கோளை அடையும் வரைப் போராட வேண்டும்; என்று கூறுகின்றார். இப்பூமியில் பிறந்தால் மட்டும் போதாது; எப்படி வாழ வேண்டும்; எதற்காக வாழ வேண்டும் என்ற சிந்தனை நம் மனதில் எழவேண்டும். ஆடு, மாடுகளைப் போல, கல்லையும், மண்ணையும் போல வாழ்ந்தால் பயன் இல்லை. இதனை நாம் உணர வேண்டும். இவருடைய 'குறிக்கோள்' எனும் கவிதை இதனைப் பதிவு செய்கின்றது.

"எப்படியோ வாழ்த்திடுவோம் என்றே எண்ணி
இலக்கின்றி இருந்திடுதல் என்றும் தீதரம்!
எப்படியும் வாழ்ந்திடலாம் என்ற ஒன்று
இழி தகைமை ....."

மனிதனின் நிலையா வாழ்க்கையானது நிறைவுடைய வாழ்க்கையாக மாறுவது அவனுடைய கையிலேயே உள்ளது என்பதை இவ்வடிகளில் பதிவு செய்கின்றார். தற்காலப் புதுக்கவிதை யொன்று,

"நாள் கட்டுப்பாட்டைச் சுட்டிக் காட்டும்
ஒரு சிவப்பு முக்கோணச் சின்னம்.
நேற்று – கரைந்து போன கனவு
நாளை - நம்ப முடியாத கற்பனை
இன்று – கையில் இருக்கும் காகிதம்
ஆற்றல் மிக்கவர் காகிதம்
தன்னை காவியம் ஆக்கலாம்."

(முனைவர் வை. இராமன், கவிஞர். மீராவின் கவிதை நயம், ப. 32)

என்று குறிப்பிடுகின்றது. ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மனதில் எழுந்தால், சாதனையாளராகச் சரித்திரத்தில் இடம் பெற

முடியும் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

விடா முயற்சி

விடாமுயற்சி என்பது வெற்றியின் இரகசியம். நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதமும் இதுவே. முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கும்போதுதான் ஒருவன் தோல்வியடைகிறான் என்பது சாணக்கியரின் வாக்கு. ஆகையால், எந்த ஒரு செயலையும் பாதியில் விட்டுவிடக் கூடாது. முழுமையாக அச்செயல் நடக்கும்வரைப் போராட வேண்டும். புதையலைத் தேடி ஒருவன் முக்கால்குழி தோண்டிய பின் சோம்பேறியானால், பின்னால் வந்து குழியைத் தோண்டும் இன்னொருவன் அப்பலனைக் பெறுவான் என்கின்ற கதையைப் போல அமைந்து விடும்.

"மலை சரிந்து வீழ்ந்தாலும் மசியா நிற்கும்
மனவலிமை தொடர் முயற்சி மாண்பேயாகும்!
"நாமார்க்கும் குடியல்லேம் நமனையஞ்சோம்"
நாவரசர் நமக் களித்த அமுத வாக்கு!"
"நெஞ்ச வலிமையால் எதையும் ஈங்கு
வளைத்திட முடியுமம்மா!"

என்பதைக் கவிஞர் பறை சாற்றுகின்றார். ஔவையாரும் 'ஊக்க மது கைவிடேல்' என்று கூறியிருக்கின்றார். தன்னம்பிக்கையைவிடக் கூடுதலான ஊக்கம் வேறு எதுவும் இல்லை. தோல்வியைக் கண்டு துவளாமல், நம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். குமர குருபரரும் தமது நூலான

"நீதிநெறி விளக்கத்தில்"

"மெய் வருத்தம் பாரார்பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்று குறிப்பிடுகின்றார். இவை போன்ற அறிவுரைகளை நாம் பின்பற்றினால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.

இலாப நட்டம்

வாழ்க்கையிலும், தொழிலிலும் இலாப நட்டம் என்ற ஒன்று இல்லாமல் இல்லை. இலாபத்தைப் பார்த்து மனம் மகிழ்கிறோம். நட்டத்தைப் பார்த்து மனம் கலங்குகிறோம். வெற்றி என்ற ஒன்று இருப்பின், தோல்வி என்ற ஒன்றும் இருக்கும். நல்லது, கெட்டது, பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் என்ற ஒன்று வாழ்வில் நடைபெறாமல் இருக்காது. கவிஞர் தனது இலாப நட்டம் என்ற கவிதையில்,

"எதிர்பார்ப்பு என்றொன்று இருப்பதாலே;
எண்ணியது நடக்காத ஏக்கம் தோன்றும்!
எதிர்பார்த்து இயங்குவதே மனித நெஞ்சம்;
இல்லையெனின் "ஏமாற்றம்" என்பதில்லை!"

என்று தமது எண்ணத்தைச் சுட்டுகின்றார். விளாம்பழத்தைத் திரட்டி உருண்டை ஆக்கியவர் யார்? கலாப்பழத்தைக் கறுப்பு நிறம் ஆக்கியர் யார்? என்று எப்படி கூறமுடியாதோ அதைப் போல ஒருவரின் நல்வினை, தீவினையால் நடக்கக்கூடியன நிகழும். எதையும் எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக் கூடாது. உடல், அறிவு, செல்வம் எனப் பலவற்றிலும் ஒருவர் சிறப்புற இருக்க வேண்டும் என்று எண்ணினாலும், அதை முழுமையாக அடைய முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை,

“வளம்பட வேண்டாதார் யார் யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
கார் எனச்செய்தாரும் இல்”

(நாலடியார். 103)

என்ற அடிகள் தெளிவு படுத்துகின்றன.

எதிர் பார்ப்பு

மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்ப்பு என்ற ஒன்று இருக்கும். வாழ்வில் நாம் நினைத்த ஒன்று கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருக்கும். எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கையில் பிரச்சினை வராது. மனம் அமைதி உறும். ஒன்று நடக்காத போது எந்த ஒரு செயலிலும் ஏமாற்றம் நிகழாது. இராவணனின் எதிர்பார்ப்பு சீதையிடம் நடபெறவில்லை. சூர்ப்பனகையின் எதிர்பார்ப்பு இராமனிடம் நடைபெற வில்லை. இதுபோன்ற எதிர்பார்ப்புகள் அவர்களின் மன ஏமாற்றத்தோடு நிற்பதில்லை. அவர்களின் அழிவுக்கும் காரணமாக அமைகின்றது. இலவங்காய் பழுக்குமென்று கிளி நம்பினால் அது வெடித்து பஞ்சாய் மாறும். **‘இலவங்காய் பழுக்காது’.** இக்கிளியைப் போல் மனிதர்கள் ஒன்றை நினைத்து ஏமாற்றம் அடைகின்றனர். குரங்குக்குட்டி நீண்ட கொடியைப் பார்த்து பாம்பு என நினைத்தால் ஏமாற்றமே. பேருக்கும் புகழுக்கும் ஆசைப் படக்கூடாது. இவ் ஏமாற்றத்தை,

“எதிர்பார்ப்பு என்றொன்று இருப்பதாலே
எண்ணியது நடக்காத ஏக்கம் தோன்றும்!
எதிர்பார்த்து இயங்குவதே மனித நெஞ்சம்;
இல்லையெனின் “ஏமாற்றம்” என்பதில்லை!”

என்று வரிகளில் கூறுகின்றார்.

உழைப்போரே உயர்வர்

உழைப்பில்லாமல் உயர்வு இல்லை. மந்திரத்தாலும், தந்திரத்தினாலும் வாழ்க்கையில் பயன் இல்லை. மனத்திண்மையோடு உழைத்தால் வாழ்வில் உயரலாம். வாய்ப்பு வரும்வரை நாம் காத்திருக்காது வாய்ப்பை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நெஞ்சில் உரம் வேண்டும். மனம் புண்பட்டாலும் வீழாது, தாழ்வு மனப்பான்மை இன்றித் தன்மானத்துடன் இருக்க வேண்டும் அப்போது அவ்வாழ்வு சொர்க்கமாக இருக்கும். குறுக்கு வழியில் செல்பவர்களின் புகழ் நீடிக்காது. ஒரு நாள் குலையும். கடின உழைப்பு இல்லையெனில் தரணியில் புகழ் இல்லை. தன்மீது நம்பிக்கை இல்லாதவர்கள் தன்மானத்தை இழந்தவர்களாவர். அவர்களின் பாதையும் தவறானதாகவே அமையும். இதனை,

“மந்திரத்தால் மாங்காய்கள் வீழும் காட்சி
மண்ணுலகில் என்றேனும்
மலர்ந்ததுண்டா? ”

என்ற வரிகளில் கவிஞர் எடுத்தாள்கின்றார்.

உழைப்பு உண்மையாக இருந்தால் உயர்வு தானாய்த் தேடிவரும். வாழ்க்கைப் பயணத்தில் நாம் சாதனை என்னும் சிகரம் அடைய, நமக்கு வேண்டிய மூலதனம் உழைப்பு மட்டுமே.

“உழைப்பிலாதெ வரும் இந்த உலகினில்
உயர்ந்ததில்லை;
உழைப்புதான் உயர்வு நல்கும் உன்னதம்
வாழ்வின்வெற்றி!”
“எங்வெவர்க்கும் இவ்வுலகில் உயர்வுதோன்றல்
எழுந்துவரும் தன்முனைப்பு உழைப்பேயாகும்!”

என்று, நீண்டு செல்கின்றது உழைப்பு குறித்த இக்கவிதை. கவிஞரின் வெற்றிக்கு உழைப்பு

மூலதனமாய் இருந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள்: 619)

என்ற குறளில் இதனை அறிய முடிகின்றது. நாம் சோம்பேறித்தனமாக இருந்தால், மற்றொருவர் உழைப்பில் வாழ்ந்தால், பிறப்பிற்கான பலன் இல்லாமல் போய்விடும் என்பதைக் கவிஞரின் வழி அறிய முடிகின்றது. இறையருளால் எதுவும் நடக்கும் என்று நினைக்கக் கூடாது. இதற்குப் பதிலடியாக,

"இறைவனே கதியென்றாகி இருந்திடா
எழுச்சி வேண்டும்
இறைவனின் அருளும் தோன்றி
இயைந்திடும் வாழ்வின் வெற்றி!"

என்ற வரிகளில் உரைக்கின்றார்.

கல்வி

கல்வியானது இன்ன சமூகத்தினருக்கு மட்டும் உரியது என்று ஒதுக்கி விட முடியாது. அனைவருக்கும் பொதுவான ஒன்றாகக் கல்வி விளங்குகின்றது. பிறருக்குக் கொடுப்பதால் குறையாது. விலங்குகளினும் மனிதன் வேறுபட்டு நிற்பதற்கு இப்பண்பே அடிப்படை. அறிவின் ஆற்றல் விரிவடையவும், பிறரால் மதிக்கப்படவும், செல்வம் தழைக்கவும், தன்னம்பிக்கை வலுப்பெறவும், நமக்கு ஊன்றுகோலாக விளங்குவது கல்வியே. கல்லாத மாந்தர்கள், வெற்றியடையாத புகழையுடையவர்கள், மனதில் உள்ளதை வெளிப்படுத்தாத மதிப்பிழந்த சொற்கள், அவைக்கு பயந்து திறமையை வெளிப்படுத்தாத சொல்லாளன், ஒழுக்கம் இல்லாதவன், கனிவில்லாத காரியங்கள் செய்பவன் போன்றவர்கள் செல்லாத காசிற்குச்சமம் என்று சுட்டி, கவிஞர் தமது கருத்தை உரைக்கின்றார்.

"கற்றலினால் பயனென்ன? கற்றதைப்போல்
கவினுலகில் கற்ற பயன் காட்ட வேண்டும்!
கற்றவற்றைச் சிந்தித்துக் கடைபிடித்துக்
கனிவார்ந்து ஒழுகுதலே "கற்பின்" மேன்மை!"

என்ற கவிப்பாடல் அடிகளின் கருத்து

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் : 391)

என்ற வள்ளுவரின் கருத்திற்கு உடன்பட்டுச் செல்வதைக் காண முடிகின்றது.

விதி

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களோடு வாழ்பவர்கள் மீதோ அல்லது தெய்வத்தின் மீதோ சுமத்தி விடுகிறார்கள். ஏதாவது பிரச்சினை வரும்போது 'எல்லாம் என் தலைவிதி' என்று குறைகூறுகின்றனர். விதியை யாராலும் வெல்லமுடியாது. இவ்வுலகில் நமக்கு வரவேண்டியது வந்தே தீரும். அறிவால் வென்றார் யாரும் இல்லை. இருந்திருப்பின் இறப்பு என்பதே கிடையாது. இதனை,

"மதியதனால் விதிவசத்தை மாற்றக்கூடும்;
மன்னுபுகழ் பகுத்தறிவின் மாண்பு கூறும்!
"விதியமைப்பை மதியுறைவால் வென்றார்
உண்டா?
வெல்திறமும் விளைந்திட்டால் இறப்பே
இல்லை"

என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். "விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே, அதன்பொருட்டுத்

தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை." (பி.எஸ். ஆச்சார்யா, ஸ்வாமி விவேகானந்தர் வாழ்வும் வாக்கும், ப. 48) என்ற செய்தியின் வழி இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

முடிவுரை

குடும்பத்தை எப்படி வழிநடத்த வேண்டும்; குழந்தைப் பேற்றின் முக்கியத்துவம் என்ன?; கல்வியின் இன்றியமையாமை, உழைப்பின் உன்னதம்; வாழ்க்கையில் நாம் எதை நோக்கிப் பயணிக்கின்றோம்; அடைய வேண்டிய குறிக்கோள் என்ன? ஒன்றைச் சாதிக்க வேண்டுமெனில் நாம் எதை விடக்கூடாது எனப் பலகருத்துக்களை உள்ளடக்கியதோடு, சமுதாயம் மேம்படு வதற்குத் தேவையான இன்ன பிற கருத்துக்களையும் ஆசிரியர் தனது கவிதைகளில் பதிவு செய்திருக்கின்றார். இவற்றைப் பின்பற்றினால் வாழ்வில் உயரலாம்; நலம் பெறலாம் என்பதை இங்கு அறிய முடிகின்றது.

‘பொய்கைப்பூக்கள்’ கவிதையில் சமுதாயச் சிந்தனை

முனைவர் கி.வேணுகா
முதல்வர்(பொ.), செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முன்னுரை

இயற்கையை இனிமையாக நுகரும் கவிஞர் நல்லியல்புகளை, மனக்கோட்டந் தவிர்க்கும் நற்கருத்துகளைத் தம் படைப்புகள் மூலம் வலியுறுத்துவர். கன்னித்தமிழைக் கண்ணாய்க் கருதும் கவிஞர் பெருமக்களுள் பாவலர் மு.தங்கராசனும் ஒருவர். இவர் மூத்த தமிழாசிரியர். வாழ்க்கையில் பழுத்த அனுபவம் மிக்கவர். நாடகம், சிறுகதை, கவிதைப் படைப்பாளர்; கலையார்வம் கொண்டவர். இவருடைய கவிதைத் தலைப்புகள் சில இலக்கிய வரிகளை நினைவூட்டுவதாக உள்ளன. கவிஞரின் உள்ளத்துயர்வை வெளிப்படுத்துகிறது மு.தங்கராசனின் ‘**பொய்கைப்பூக்கள்**’ என்னும் கவிதைத் தொகுப்பு.

கவிதை

கவிஞன் உணர்ச்சி அனுபவத்தைப் பெற, ஒலிநயம் துணைசெய்வதை உணர்ந்து, தளைகள் என ஓர் அமைப்பினையும், அடிவரையறையும் ஏற்படுத்திய நிலையில் மரபுக்கவிதை தோன்றியது. எதுகை, மோனைகளின் பொருட்டு வேண்டாத சொற்களை அடைமொழி களாக்கியும், அசைநிலை என்ற பெயரில் வேற்றெனத் தொடுத்தும் தவிர்க்க நேரிடுவதை உணர்ந்தவர்கள், சொற்சுருக்கம் கருதிப் புதுக்கவிதை என்ற ஒரு வகைமையினைத் தோற்றுவிக்கலாயினர்.

சமுதாயம்

சமூகம் என்பது, “தனிமனித உறவுகள் பின்னிப் பிணைந்து அமைந்திருக்கும் இழைமம் (Tissue) ஆகும்”[1] என்று மோரிசு கின்சு பெர்க்கு என்னும் அறிஞர் கூறியுள்ளார். அதேபோன்று, மனிதனுக்குச் சமூகவியல்பு (Sociality) இயற்கையிலேயே இருக்கிறது. இந்தச் சமூக இயல்பு காரணமாக அவன் பிறரோடு கூடிப் பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவ்வாறு கூடிப் பழக முற்படும் போது சமூகம் தோன்றி விடுகிறது என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.

மனிதன் பிறக்கும்போதே பிறருடைய கூட்டுறவு, துணை போன்றவை தேவைப்படுகின்றன. தனிமனிதனின் சிறு சிறு தொகுதியே சமுதாயம் ஆகும். தனிமனிதன் சிறப்பாகச் செயல்பட்டால்தான் சமுதாயம் சிறப்பாகச் செயல்பட முடியும் எனவே, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமுதாய அறம் என்பது இன்றியமையாததும், கடைப்பிடித் தொழுக வேண்டியதும் ஆகும்.

மனிதனை “ஒரு சமூகப் பிராணி”[2] என்று கூறுகிறார் அரிஸ்டாட்டில். தனித்த நிலையில் மனிதன் வாழ்ந்த போது அவனது நடத்தைகள் சாதாரணமாக இருந்தன. “தனிமனிதன் பாதுகாப்பற்ற சூழலில் குழப்பமடைந்து வந்தான். இதனால் மனிதன் தன்னை ஒத்த மனித உறவுகளை ஒரு பின்னல் போல் அமைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கினான்”[3]. இத்தகைய மனித உறவுகளைக்கொண்ட பின்னல்களே சமூகம் எனப்பட்டது.

நாணயம்

கவிஞரின் உலகளாவிய சிந்தனைகள், சமுதாயப் பொறுப்புகள் இக்கவிதைத் தொகுப்பில் வெளிப்படுகின்றன. மனிதன் வாழ்க்கைக்கு உகந்த கருத்துகளை எடுத்துச் சொல்லும் கவிஞர், மனிதனின் சுயமரியாதையை ‘நாணயம்’ என்னும் கவிதை வரிகளில் எடுத்துரைக்கின்றார்.

“நாணயம் இல்லாவிட்டால்
நானிலம் மதிக்கா தென்றும்
நாணியம் இல்லா தாயின்
நாட்டினர் இகழ்வார் என்றும்!
‘நா’நயம் இருந்தால் தானே
நற்பண்பு தழைத்து ஓங்கும்

நாணயம் தலையா? பூவா?
நாட்டிடும் போட்டியாகும்!"[4]

என்ற கவிதை வழி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆத்திரம்

இன நலிவையும் மொழி நலிவையும் ஆத்திர மொழிகளால் எடுத்தியம்பும் பாவலர், சமுதாயம் வளரப் பாடுபடும் தலைவர்களைப் பாடும்போது உள்ளம் நெகிழ்ந்து பாராட்டுகிறார்.

"நேர்மையில் நில்லா தோங்கும்
நெறியதைக் காணும் போதில்
நீர்மையில் நிற்பார் 'கோபம்'
நெறிந்திடும் நியாயம் உண்டு
சேர்மையில் இலாபம் எண்ணாச்
செறிந்திடும் பண்பு யாவும்
கூர்மையில் கொள்ளுங் கோபம்
கொண்டில் தரும மாகும்"[5]

என்ற கவிதை மூலம் கூறப்பட்டுள்ளது.

குடும்பம்

தனிமனிதன் எவ்வாறெல்லாம் குடும்ப வாழ்க்கை நலமுற, சமுதாயம் வளம்பெறப் பாடுபடலாம் என்பதை விடாமுயற்சி, நேர்மை, ஆணைபலம் என்னும் பல கவிதைகளில் கவிஞர் எடுத்துரைத்துள்ளார்.

மனிதனைக் கருத்தில் கொண்டு புனையப்பெற்ற கவிதைகளாயினும், அவை யனைத்தும் தனிமனிதனை உலகளாவிய சிந்தனைகளுக்கு இழுத்துச் செல்கின்றன என்றே கூற வேண்டியுள்ளது. இது,

"உலகெங்கும் வாழ்கின்ற ஊரின் மக்கள்
உறுத்தலுடன் எதிர்பார்க்கும் உள்ளத் தோய்வு
நிலவுமகிழ் நீர்மையெலாம் மங்கலங்கள்
நின்றொளிரும் நினைவுகளின் ஆகமங்கள்
உலவுமெழில் சிந்தனைகள் உயர்ந்த தென்றால்
உளமார்ந்த உள்ளுணர்வு ஓங்கி யோங்கும்
குலவி மகிழ் குடும்பத்தார் கொடுத்து வைத்த
கொள்வரமாய்க் கொண்டதனைப் போற்றலாமே!"[6]

என்ற கவிதை மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தாய்த்தமிழ்

ஆசிரியர், தாம்கண்ட தமிழின்பத்தினைச் சிந்திக்கின்றார். அதுவும் தமிழ்ப்பாவின்பம் அவரை மேலும் கவர்ந்திழுப்பதை, அவர் எண்ணிப் பார்க்கின்றார்.

"தமிழ்மொழியைத் தாய்மொழியாக் கொண்டோரெல்லாம்
தமதினத்தார் தனைக்காணின் தயக்கம் இன்றித்
தமிழ் மொழியில் பேசுகின்ற தகைமை என்றும்
தனித்தொளிரும் பண்புள்ளம் தளிரல் வேண்டும்
அமிழ்தாய தமிழ்மொழியின் அருமை போற்றி
அன்றாடம் புழங்கிவரும் ஆண்மை தோன்றும்
தமிழ்மொழியாம் தாய்மொழியின் பற்று கொண்டு
'தமிழ் பேசும்' தார்மீகம் வளர்தல் வேண்டும்"[7]

என்றவாறாக, சமுதாயச் சிந்தனைகளை மட்டும் கவிஞர் குறிப்பிடவில்லை; தமிழையும், தமிழரையும் மறக்கவில்லை என்பதையும் இக்கவிதை சுட்டுகிறது.

முடிவுரை

தனிமனிதன் சிறப்பாகச் செயல்பட்டால் தான் சமுதாயம் சிறப்பாகச் செயல்பட முடியும். எனவே, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சமுதாய அறம் மற்றும் மொழிப்பற்றுப் பற்றி கவிஞர் தன் 'பொய்கைப்பூக்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

அடிக்குறிப்புகள்

வாழ்வியல் களஞ்சியம் (தொ.08), ப .590.

மேலது, ப.618.

கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.84.

மு.தங்கராசன், பொய்கைப் பூக்கள், ப.30.

மேலது., ப.66.

மேலது., பக்.107, 108.

மேலது., ப.59.

'உதயம்' கவிதைத் தொகுப்பில் மனிதநேயச் சிந்தனைகள்

முனைவர். பா. ஜான்சன்
உதவிப்பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

மனிதநேயம் என்ற சொல்லிற்கு 'மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு' என்று க்ரியா அகராதி விளக்கமளிக்கிறது. மனிதன் தன்னையொத்த பிற மனிதனிடத்துச் செலுத்தும் அன்போடு மனிதர் அல்லாத பிற உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பு, பரிவு, இரக்கம் ஆகியவற்றை மனிதநேயமாகக் கருதலாம். இலக்கியங்கள் தொன்றுதொட்டு வாழ்வியல் அறங்களை மனிதர்க்கு அறிவுறுத்துகின்றன. இக்கட்டுரை, சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளரான மு. தங்கராசனின் படைப்புகளில் ஒன்றான 'உதயம்' என்னும் கவிதைத் தொகுப்பினை ஆய்வுக்களமாகக் கொண்டுள்ளது. இக்கவிதைத் தொகுப்பில் முப்பத்திரண்டு கவிதைகள் உள்ளன. இக்கவிதைகளில் இழையோடும் மனிதநேயச் சிந்தனைகள் இங்கு ஆராயப்படுகின்றன.

மனிதநேயம்

இன்றைய காலத்தில் மனிதநேயம், பேச்சளவிலும், எழுத்தளவிலும் மட்டும் காணப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழ் இலக்கியப் பயணத்தில் தொன்று தொட்டு மனிதநேயச் சிந்தனைகள் தொடர்ந்து வருகின்றன.

> **"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால்**
> **வேறொன்றும் அறியேன் பராபரமே" எனத் தாயுமானவரும்,**
> **வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"**

என்று வள்ளலாரும், "அன்பின் வழியது உயிர்நிலை அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்" என்று கூறுகிறார் வள்ளுவர். இவர் பாடிய பாடல்கள் மனித நேய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

அன்பு, பாசம், பற்று, ஈவு, இரக்கம், கருணை, பண்பு, சகோதரத்துவம், தாய்மை போன்றவை மூலம் மக்களிடம் மனிதநேயத்தை உணரமுடிகிறது. கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை நேசிப்பதும், சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு மனிதனோடு மனிதன் இணைந்து அன்பு செலுத்தி மகிழ்வோடு வாழ்வதுமே மனித நேயமாகும்.

அமைதி

அமைதி என்பதற்குப் பல பொருள்கள் தமிழில் உள்ளன. எனினும், இது போர், பகைமை, வன்முறை என்பவற்றுக்கு எதிர்ச்சொல்லாகவே பயன்படுத்தபட்டுள்ளது. தற்காலப் பயன்பாட்டில் அமைதி என்பது, பகைமை இல்லாத ஒரு நிலையைக் குறிக்கும் கருத்துருவாகும். இங்கே பிற மனிதர் உடனான தொடர்புகளும் மதிப்பு, நீதி, நல்லெண்ணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் குறிக்கின்றன. இதே புரிதலின் அடிப்படையில், ஒருவர் தனது சொந்த உணர்வுகளின் அடிப்படையில் அமைதி

பெறுதல் என்ற நிலையும் உண்டு. இது மன அமைதி அல்லது நிம்மதி என்பதோடு தொடர்புபட்டது. பல வழிகளிலும், அமைதி என்பதன் அடிப்படையான பொருளில், முரண்பாடுகளின் மூலங்களாகப் பாதுகாப்பின்மை, சமூக நீதியின்மை, பொருளியல் ஏற்றத்தாழ்வு என்பன சுட்டிக்காட்டப்படுகின்றன.

மாசு மருவில்லா மனமும், போதுமென்ற நிறைவும் இனிய பண்பும் பெற்றுக் கடவுளைத் தினமும் வழிபடுவதன்வழி செல்லரிக்கும் சிந்தனைகள் இல்லாத சிந்தனையில் அமைதி தவழும் என்கிறார் எழுத்தாளர் மு. தங்கராசன்.

"கறைபடி யாமல் உள்ளம்
கனிந்திடின் அமைதி காணும்
நிறைமனம் இருக்கப் பெற்றால்
நிலைபெறு அமைதி நீளும்
முறைநெறிப் பண்பும் போற்ற
முகிழ்மனம் சாந்தி யாகும்
இறைவழி பாட்டின் மூலம்
இயைந்திடும் அமைதி காண்போம்!"

(உதயம் கவிதைத் தொகுதி- 'அமைதி' பக். 26)

என்று அமைதி காண்பதற்கு மூலமாக நொல்லொழுக்கங்களும் இறைபக்தியும் இருக்கின்றன என்பது இங்குச் சுட்டப்படுகிறது.

"கவலையும் கலக்கம் மற்றும்
கடுத்திடும் எரிச்சல் அச்சம்
கவணதாய் வளைந்து மேவும்
கனிவிலாப் பொ
றாமை என்னும்
அவலங்கள் மனத்தில்
அமைதியை இழந்து நிற்பர்"

(உதயம் கவிதைத் தொகுதி- 'அமைதி' பக். 27)

சில குணங்களும் சில தீயப்பழக்க வழக்கங்களும் மனித அமைதியைச் சீர்குலைக்கும் தன்மை கொண்டவை என்பதை மேற்குறிப்பிட்ட கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

இங்கிதம்

மற்றையோர் தம் உணர்வுளை மாண்புற மதித்து மனம் நோகாதவாறு, முகமலர்ச்சியுடன் இனிமை கலந்த சொற்களைப் பேசுதல் என்பதே இங்கிதமாகும் என்கிறார் மு.தங்கராசன். விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தண்மை, புரிந்துணர்வு, பணிவன்பு, தொல்லை தாராமை ஆகியவனவெல்லாம் இங்கிதம் என்ற சொல்லுக்குள் அடங்கும்.

"இன்சொலால் ஈரம் அளைஇப்
படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்"

(குறள் : 91)

என்பதே வள்ளுவர் வாய்ச்சொல். பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் கூட – அதை இதமாகச் சொல்ல வேண்டும். இனிய சொல்லாவிட்டாலும் இன்னாச் சொல்லைக் கைவிடுக என வேண்டுகிறார் வள்ளுவர்.

"தன்னிலை உணர்வின் ஆக்கம்
தமரவர் சுற்றுச் சார்பு
பொன்னிலை உள்ளம் கொள்ளல்
பொன்றிடாத் திறமேயாகும்
முன்னிலை அறிந்தே எந்த
மொழிதலும் இருத்தல் வேண்டும்
தன்னிலை அந்தப் பண்பே
நயந்தரும் இதமென் றாகும் இங்கிதம்"

(உதயம் கவிதைத் தொகுதி- 'இங்கிதம்' பக். 27)

பிறரை எந்தவிதத்திலும் நோகச் செய்யாமல் இதமாகப் பேசிடும் பண்பினையே இங்கிதம் என்று கவிஞர் கூறுவதை இப்பாடல்வரிகளின் மூலமாக உணர இயலும். ஒருவரிடம் பேசும்போது அவர் மனநிலை அறிந்தே நாம் சொற்களைக் கையாள வேண்டும். பிறர் மனம் புண்படும் வகையில் பேசுவது மனிதநேயமற்ற செயலாக அமைந்துவிடும்.

"முறிபடப் பேசும் மூர்க்கம்
மூண்டிடக் கூடா தென்றும்
பிறர்மனம் நோக்கச் செய்யாப்
பெற்றியும் இதமே யாகும்"

(உதயம் கவிதைத் தொகுதி- இங்கிதம்- 39)

கடுஞ்சினங்கொண்டு பிறரின் மனத்தை முறியப்படுத்தும் சொற்கள் கூறுவதைத் தவிர்த்து, இதமான சொற்களைப் பயன்படுத்தும் செயலும் மனித நேயத்தின் வெளிப்பாடே.

ஊரோடு ஒத்து வாழ்தல்

'ஊரோடு ஒத்து வாழ்' என்பது மூதுரை. தற்காலச் சூழலில் 'உலகோடு ஒத்து வாழ்' என்பதே பொருத்தமானதாக இருக்கும். மனிதர்கள் எவருமே உலகில் தனித்து வாழ்தல் சாத்தியமற்றது. நாம் இந்த மானுட சமுதாயத்துக்குள் சங்கமமாக வேண்டும். உலக நடையினைப் புரிந்துகொண்டு அதனோடு மோதாமல் ஒத்துப் போகக்கூடியதாயின் ஒத்து ஒழுகுதல் வேண்டும். ஒத்து ஒழுக இயலாதது எனில், அதனை நாம் விரும்பும் நிலைக்கு மாற்ற முயலுதல் வேண்டும். இங்ஙனமின்றி முரண்பட்டு நின்றும், கலகங்களை வளர்த்தும் வாழ்தல் கூடாது.

இந்த உலகில் எல்லாவற்றுக்கும் மேலானது மனிதநேயமே. ஆதலால், உலக மாந்தர்க்கு நல்லது செய்யும் வழியில் வாழ்தலே ஒழுக்கமுடைய வாழ்க்கை. உலக மானுட சமுதாயத்துடன் ஒத்து உடன் நின்று வாழ்தலே ஒழுக்கமுடைமை.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள் 140)

என்று வள்ளுவர் இணைந்து வாழ்தலின் சிறப்பினைக் கூறுவது இங்கு நோக்கற்பாலது.

"ஒருவருக்கு ஒருவரிங்கு துணையாம் என்றே
உறுங்காவல் காப்பெண்ணி ஒருகோட் டுக்குள்
திருவுடனே ஒற்றுமையின் தெளிவுத் தேர்ந்த
திகழ்பழமை கற்காலத் திறமும் சொல்லும்
உறுமவற்றின் துன்பத்தால் உலையா தோங்க
ஒருகாவற் படையாக உயர்ந்து நின்றார்
வருந்துன்பம் வளர்காவல் படையால் நீங்கும்
வந்தொளிர்ந்த வரலாற்றின் சுவடு காண்போம்."

(உதயம் கவிதைத் தொகுதி- 'காவல்' பக். 53)

மனித வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் நீங்கி, அனைவரும் இன்புற்று வாழ ஒருவருக்கொருவர் துணைபுரிந்து வாழும் பண்பினை உடையவர்களாகத் திகழ வேண்டுமென்றும், வரவிருக்கும் துன்பங்களை ஒருமித்து எதிர்கொள்வோமாகில், அவை நம்மைவிட்டு ஓடி மறைந்துவிடும் என்றும்

ஒற்றுமையின் வலிமையைக் கவிஞர் நினைவூட்டுகிறார்.

ஒருமைப்பாடு

உலகில் அமைதி நிலவுவதற்கும் சமதர்ம சமுதாயம் மலர்வதற்கும் மக்களின் ஒருங்கிணைப்பும் மனங்களின் ஒருமைப்பாடும் இன்றியமையாத தேவைகள். நாடு நன்னாடாகவும் வளத்தில் பொன்னாடாகவும் திகழ்வதற்கு முழுமுதற்காரணமாக விளங்குபவர்கள் அந்நாட்டு மக்களே ஆவர்; இதைத் தான் ஔவையார்,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறம் 187)

என்று பொருண்மொழிக் காஞ்சி துறையில் பாடியிருக்கிறார்.

மு. தமிழரசனின் கவிதைகளில் மனித ஒருமைப்பாட்டின் அவசியத்தைக் குறித்தும் மனித சமூகத்தையும், நாடுகளையும் முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வது அது யாங்ஙனமெல்லாம் துணைபுரியும் என்பதைக் குறித்தும் விரிவாகப் பேசுகிறார்.

"ஒருகரத்தால் ஓசையிங்கு ஒலித்தல் உண்டா?
உறுக்கரங்கள் இணைந்தாங்கு ஒலித்தா லன்றோ
திருவிளங்கு முழங்கோசை தேயம் காணும்
தெளிவுணர்த்தும் தத்துவத்தைத் தேர்ந்து நாளும்
செறுக்கதனால் மனைத்துய்யும் செறியும் துள்ளல்
சென்றொழித்து ஒருமைப்பா டோங்கச் செய்தால்
உறுங்களங்கம் ஏதுமிங்கு உறையா வாழ்வு
உண்மையிலே பெற்றுமகிழ் உயர்வைக் காண்போம்"

(உதயம் கவிதைத் தொகுதி- 'ஒருமைப்பாடு ' பக். 138)

ஒருகரத்தைத் தட்டி ஓசையெழுப்ப இயலாததுபோல, ஒருவராகத் தனியாக நின்று முன்னேற்றத்தைக் காண்பது இயலாதது. மனச்செறுக்கை அகற்றி ஒருமித்து நின்று செயல்படும்போது எவராலும் தடுக்க இயலாத உயர்வைப் பெற்று மகிழமுடியும் என்று அறிவுறுத்துகிறார் கவிஞர்.

அடக்கம்

அடக்கம் என்பதை ஒரு ஒழுக்கமாக நம் முன்னவர்கள் கருதி இருக்கிறார்கள். மனித வாழ்க்கைக்குச் சிறந்த அடக்கம் தேவை. பழங்காலத்தில் அடக்கம் என்ற ஒரே சொல் பல ஒழுகலாறுகளையும் வற்புறுத்தியது. திருக்குறள்படி பணிவுடமையும் அடக்கமுடைமையிலேயே அடங்கியிருக்கிறது. அடுத்துத் தன்னடக்கம், நாவடக்கம், பொறிகள் அடக்கம், புலனடக்கம் என்றெல்லாம் சொல்லப் பெறுகின்றன. மனிதன் அடைந்து ஒழுக வேண்டிய நற்பண்புகள் பலப்பல. அவற்றுள் தலையாயது தன்னல மறுப்பு. கிரேக்கச் சிந்தனையாளன் சாக்ரட்டீஸ் மனிதன் மேற்கொள்ள வேண்டிய முதல்நிலைப் பண்புகளாகத் தன்னடக்கத்தையும் புலனடக்கத்தையும் கூறினான். மு. தங்கராசனின் உதயம் தொகுப்பில் அமைந்துள்ள 'அளவு' என்ற கவிதை அடக்கமுடைமையின் அவசியத்தையும், வாழ்க்கையின் அனைத்துத்

துறைகளிலும் எல்லை வகுத்து வாழவேண்டியதன் கட்டாயத்தையும் நமக்குப் போதிக்கிறது.

"ஆசையில் அளவு வேண்டும்
அதுகடந் தேகு மாயின்
நீசத்திற் கிடமும் தோன்றும்
நீர்மைகள் செத்துப் போகும்..
தேடலில் அளவுப் பண்பு
தீய பேராசை நீக்கும்
நாடலில் அளவு நாட்டம்
நயத்தகு நாக ரீகம்
ஊடலில் அளவு மீறின்
உறுத்தலால் பிளவு நேரும்"

(உதயம் கவிதைத் தொகுதி- 'அளவு' பக். 33)

அளவாக ஆசைகொள்ளுதலே சிறந்தது. பேராசைப் பண்பு தீமைகள் நடப்பதற்குக் காரணமாகிவிடும். பொருள்தேடுவதிலும் கூட நமக்கு எல்லை வேண்டும். போதுமென்ற நிறைவான மனத்துடன் இருப்போமாகில் தீமைகள் எளிதாக நம்மை அண்டாது. எல்லை மீறிய ஊடல் நிரந்தரப் பிளவிற்குக் காரணாமாகிவிடும் என்றும் இங்கு எச்சரிக்கப்படுகிறது.

தொகுப்புரை

தமிழறிஞர் மு. தங்கராசனின் உதயம் கவிதைத்தொகுதியில் காணலாகும் மனிதநேயச் சிந்தனைகளைப் பின்வருமாறு காட்டலாம்.

மனித வாழ்வில் அமைதி காண்பதற்கு நல்லொழுக்கங்களும் இறைபக்தியும் இருக்கின்றன. சக மனிதர்களின் உணர்வுளை மாண்புற மதித்து மனம் நோகாதவாறு இனிய சொற்களைப் பேசுவதும் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் ஒரு செயலாகும்.

மனித வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் நீங்கி, அனைவரும் இன்புற்று வாழ ஒருவருக்கொருவர் துணைபுரிந்து வாழும் பண்பினை உடையவர்களாகத் திகழ வேண்டும். மனித மனங்களிலுள்ள மனச்சிறுக்கை அகற்றி, ஒருமித்து நின்று செயல்படும்போது எவராலும் தடுக்க இயலாத உயர்வைப் பெற்று மகிழமுடியும்.

ஒழுக்கங்களுள் சிறந்ததும் , தலையாயதும் தன்னடக்கம் என்ற ஒழுக்கமாகும். மனிதன் மேற்கொள்ள வேண்டிய முதல்நிலைப் பண்புகளாகத் தன்னடக்கமும் புலனடக்கமும் இருக்கின்றன.

பார்வை நூல்கள்

மு. தங்கராசன்- உதயம், விஜயா சபரி பதிப்பகம், சென்னை, 1996.

திருக்குறள்- திருவள்ளுவர், கொற்றவை பதிப்பகம், 2009.

புறநானூறு மூலமும் உரையும் - உ.வே.சா (உ,ஆ), டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை., 2002.

முனைவர் சே.ஜெயக்குமாரி, செவ்விலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள், 2010.

மு.தங்கராசனின் 'உதயம்' கவிதையில் பண்புகள்

மு. ஜான்சி
உதவிப் பேராசிரியர், கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
முத்துப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம்

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாறானது காலப்போக்கில் புதிய இலக்கிய வடிவங்களை ஏற்றுப் பல பரிமாண நிலைகளைக் கடந்து வளர்ந்து வருகிறது. யாப்பின் பிடியில் பா வகைகள் நடை மாறி புதுக்கவிதையாகத் தொடங்கி, பலவகைகளில் மாறி, சமூகத்தில் பேரிடம் பெறுகின்றது. உண்மைகளையும், உணர்வுகளையும், நாடு, விழாக்கள் மற்றும் உருவகங்கள் அடிப்படையில் 30 கவிதைகளைப் படைத்து, மாபெரும் புகழை அடைந்த மு.தங்கராசனின் கருத்துச் செறிவினை எடுத்தியம்புமாறு இக்கட்டுரையின் பொருண்மை அமையப்பெறுகின்றது.

பண்புகள்

பண்பு என்ற சொல் பண்பாடு, பண்படுதல், பண்படுத்தல், பண்புடமை என்பனவற்றில் பிறந்தவையாகும். பண்பு என்பதற்குக் குணம், தகுதி, விதம் என பல பொருள் உண்டு. அன்பினால், உணர்வினால் பாடறிந்து ஒழுகுதல் பண்பாடு எனலாம். "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" எனக் கலித்தொகை (பா-133 யின்) வரிகளில் அறியமுடிகிறது. 'பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாடே பண்பாடு என்கிறோம்' எனத் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (தமிழும் பிற பண்பாடும் ப-1984: 9) குறிப்பிடுகின்றார். ஓரினத்தின் பண்பாடு அதன் உண்மைகள், உணர்வுகள், மொழி, விழாக்கள், ஒருமைப்பாடு, குடிமை, அரசியல், சமுதாய நிலை, உருவகங்கள், நடை, குறிக்கோள் போன்றவற்றின் வாயிலாகக் குறிப்பிடலாம்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" - குறள்:996

பண்புடையவர் இடத்தில் வாழ்க்கை எப்போதும் நிலைத்து நிற்கும் என்பதைத் திருவள்ளுவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

உதயம்

அகிலத்தின் அதிகாலை நேரத்தை, விடிகாலைப் பொழுதில் கதிரோன் எழுவதை அடிப்படையாகக் கொண்டதே உதயமாகும். புத்துணர்ச்சி தரக்கூடிய ஒரு சொல்லாக உதயம் என்ற சொல் இடம்பெறுகிறது. எழிலார்ந்து உதித்தெழுந்த மாபெரும் படைப்பாக மு. தங்கராசன் எழுதியது உதயம். உள்ளடங்கி இருப்பவற்றுள் உள்ளத்தை உறுத்தியது உதயமாகும். உதயம் என்ற சொல்லுக்குச் சந்திரோதயம், சூர்யோதயம், இதயம், அத்தவுதயம், திரிதயம், புண்ணியோதயம் எனப் பல பொருளுண்டு. "உதயத்தி னெற்றி சேர்ந்த வொண்சுடர்" - (சீவகசிந்தாமணி : 2153) என்னும் வரிகளில், உதயம் என்ற சொல் சுட்டப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த கலைவாணனால், தேச விடுதலைக்காகப் பாடப்பட்ட காப்பியமாக உதயம் இருக்கிறது. காந்தியின் சடலம் எரிக்கப்பட்ட போது அதிலிருந்து புறப்பட்ட நெருப்பின் எழுச்சியே உதயம் எனப்படுகிறது என்று தம் நூலுக்கான

பெயர்க்காரணத்தில் குறிப்பிடுவதை அறியமுடிகின்றது.

"அதிகாலை அடிவானம் செம்மை கோலம்
அன்றாடம் பார்த்துமகிழ அழகுச் சலம்
உதயத்தில் கோயில் மணி ஒலிக்கும் மாங்கே
உறுமனத்துக் கறையாவும் ஒழியும் ஈங்கே"

- உதயம் ப.49

என்ற கவிதை வரிகளில், உதயத்தின் செம்மைக் கோலத்தை மு.தங்கராசன் அழகாகச் சித்திரித்துள்ளார்.

அமைதியும் அளவும்

இயற்கையோடு இயந்த மனம் கொண்டு வாழ்ந்தால் இனிமையும் எளிமையும் பெற்று, வாழ்க்கை அமைதியடையும் என்கிறார். இதனை,

"இயற்கையில் படிந்து நெஞ்சம்
இணைந்திடும் இயல்பைக் கண்டால்
வயப்படும் அமைதி சூழும்
வழுவிலா மனத்தைக் காண்போம்"

- (அமைதி ப.26)

என்ற கவிதையில் மு.தங்கராசன் சுட்டியுள்ளார். எதற்கும், எப்போதும், என்றென்றும் ஓர் அளவு வேண்டும். ஆசை என்றாலும், பொருள் தேடுதல் என்றாலும், உணவு என்றாலும் ஓர் அளவு என்பதே சிறந்தது என்கிறார். இதனை, "எதற்குமோர் அளவு வேண்டும்". "ஆசையில் அளவு வேண்டும்"; "தேடலில் அளவுப் பண்பு" – (அளவு- ப : 32,33) என்ற கவிதை வரிகளில் ஊடலிலும், வாடலிலும், நாடலிலும், வெறுப்பதிலும், நிறுப்பதிலும் அளவு வேண்டுமென்று மு.தங்கராசன் தம் படைப்புகளில் சித்திரித்துள்ளார்.

அழகும் நிறைவும்

தமிழ்மொழியில் அழகு என்பதற்கு வடிவு, எழில், பொழில், அணி, கோலம், சிங்காரம், அலங்காரம் என்று பொருள்படும். மனிதனின் பண்பான மனமே அழகாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். வறுமையிலும் செம்மையுடன் வாழ்தலே சிறப்பு என்று ஔவையார் மொழிகின்றார். இதனை,

"வறுமையிலும் செம்மையுடன் வாழ்தல் என்றும்
வறிஞர்க்கு அழகாரும் என்றார் அவ்வை"

என்றும்,

"பழக்கத்தைப் பண்பாக கொண்டே போற்றும்
பண்பழகு மிக்காரைப் பாரே ஏற்கும்"

(அழகு -ப.73)

என்ற வரிகளின் வாயிலாக, அழகு என்பது நற்பேரே. நல்லரசு, தருமப் பண்பு, இதயத் தூய்மை என்று மு.தங்கராசன் எடுத்தியம்பகின்றார்.

மனநிறைவு என்பது பொன், பொருள் நிறைவாகக் கிடைப்பதில் இல்லை. இறைவனின் படைப்பில் முறையான முழுமுதற்பயன் பெறுதல், கறைபடியா வாழ்வு, நேர்மை, உண்மைத் தன்மைதான் வாழ்வின் நிறைவு என்று எடுத்துக்கூறுகிறார். இதனை, "கறைபடி யாமல் இம்மை கனிந்திடு வாழ்வுச் செம்மை நிறைந்திடல் ஆயின் மறுமை ஆர்க்கும்" – (நிறைவு ப:114) என்ற கவிதை வரிகள் நித்திய நிறைவினை அழகாக எடுத்தியம்புகிறது.

எழுச்சியும் ஏற்றமும்

ஒருங்கிணைக்கும் பண்பு நாட்டிற்கு நல்ல உறவைச் சேர்க்கும். நம்பிக்கை நெகிழும் வண்ணம் மக்கள் அனைவரும் செயல்பட வேண்டும். ஒழுங்குநெறி அரசியலும், வாய்மையும், சத்தியமும், நேர்மை குணமும்தான் மனிதகுலம் வாழக்கூடிய நாட்டிற்கு வேண்டுமென்று மு.தங்கராசன் தம் கவிதைகளில் கூறுகின்றார். சிறுவிரல்கள் ஐந்து போன்று மனித இனம்

சேர்ந்து செழிப்புடன் வாழ்ந்தால், சுதந்திரம் என்பது, நம்மிடம் நிலைத்து நிலைத்து நிற்கும் என்றும் எழுச்சி வாயிலாக ஏற்றம் கிடைக்குமென்றும் விளம்புகின்றார். இதனை,

"உலகனைத்தும் ஒருங்கிணைக்கும் உறுமையத் தற்றம்
ஒருவட்டச் சீர்மையதாய் ஒளிரும் தோற்றம்" - எழுச்சியும், ஏற்றமும் - ப:116
சிறுவிரல்கள் ஐந்தபிங்கு சேரச் சேர்ந்தே
செழும்உள்ளங் கையதனின் செழிப்பும் ஆகும்" – (மேலது - பா:119)

என்ற கவிதை வரிகள் விளக்குகின்றது.

குடிமைப் பண்பு

நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்காதே; நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்று குடிமக்கள் ஒவ்வொருவரும் கேட்கவேண்டும் என்று கூறியவர் அறிஞர் கென்னடி. நீர்வற்றிய காலத்து நெடுங்குளத்தை நீங்குகின்ற நீர்ப்பறவையான பண்பு குடிமையல்ல என்றும், அக்குளத்தை விட்டகலாநின்று, அருந்துன்ப இன்ப வாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்கின்ற நீர்ப்பூக்களின் நிலைப்பண்பே குடிமை என மு. தங்கராசன் தம் கவிதைகளில் சுட்டுகிறார். இதனை,

"நீர்ப்பூக்கள் பொய்கையனில் நிலவக் காண்போம்
நெடிதுவளம் நீராக்கம் இருக்கும் போதும்
நீர்ப்பூக்கள் நீர்ப்பறவை நீர்மை காணும்
நெடும்புவியின் நிலைமக்காள் குடிமை யாதம்"

- (குடிமை ப:134)

என்ற வரிகளில் குடிமைப் பண்பை அறியமுடிகிறது.

ஒருமைப்பாட்டு உணர்வு

திரை கடலோடித் திரவியம் தேடு என்னும் பொன்மொழிக்கிணங்க, நாம் வாழ்கின்ற நாட்டையே தங்கள் சொந்த நாடாகக் கொண்டு, ஆங்காங்கே நிலையூன்றி வாழ்ந்தவர்களே மனிதர்கள். ஒரு மனிதனுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு ஆகிய நற்குண நற்செய்கைகள் நாட்டின்கண் நாளும் இருந்தால் போதும், அனைவரும் இனிதாக வாழலாம். ஒருமைப்பாட்டின் மகத்துவத்தை நாளும் கைக் ள்ளலாம் என்கிறார். இதனை,

"ஒற்றுமைக்கோர் வித்தாகும் ஒருமைப்பாடே
உலகுக்கோர் சத்தாகும் உண்மைப் பாங்கு"

(ஒருமைப்பாடு - ப:137.)

என்றும்,

"கருவிலுரு வாகும்நம் கலப்பி னோர்க்கும்
கனிவார்ந்த திருவாகும் கனிந்த பண்பு
ஒருமைப்பா டெனும்நல்ல உயர்ந்த பாங்கு
உருவாகத் தினம்போற்றி உணர்ந்து வாழ்வோம்"- (மேலது ப:140)

என்ற வரிகளில் அறியமுடிகிறது.

விழாக்களின் கொண்டாட்டம்

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும்,கோலுயரக் கோனுயர்வான்"

என்றுள்ளாள் ஔவை

இதனை அடியோர் பற்றி சிறப்புறத் தம் கவிதைகளில் பதித்துள்ளார் கவிஞர் இதனை,

"பயிர்த்தொழில் செய்யும் நல்லார் பாரினில்
எங்கும் உள்ளார் அயர்வினைப் போக்கிக்
கொள்ளும் அறுவடை நன்னாள்
பொன்னாள்"

(பொங்கல் ப:153)

என்ற வரிகளில் அறியமுடிகிறது.

உருவகங்களின் பண்பு

கால ஓட்டத்தில் பகுத்துணர்வால் ஏற்பட்ட ஒலிவடிவமும், சித்திர வடிவமும், வரிவடிவங்களாகப் பரிணமித்து எழுத்துக்கள் தோன்றலாயின. பயிற்சியினால் இப்பிறப்பில் அமைந்தொளிரும் வல்லெழுத்து. பண்பு முயற்சியினால் எழும் பிறப்புக்கியைபாகும் நல்லெழுத்து எழுத்தமையும் சிறப்பெல்லாம் எழுதுகின்ற வல்லானின் இயல்பதனின் இயைபேயாகும் எனத் துணிவு கொண்டு வாழலாம் என்றும் எழுத்துக்கள் தான் நம் ஆயுதம் என்றும் மு.தங்கராசன் இயம்புகின்றார்.

ஆதிகால மனிதன் தன்னுடைய காலமாற்றத்தால் பல்வகை அறிவியல் நோக்கிற்கு மாறினர். காய்கறிகள் வெட்டும் கத்தியைக் கற்காலக் கருங்கல்லில் கூர்மையால் கண்டறிந்தனர். இவ்வாறு, பலவற்றை ஆய்ந்தறிந்த பிற்காலத்தாரின் அறிவுக்கூர்மை கண்டு பல ஆய்வு உண்மை வெளியிட்டு முன்னேற்றப் பாதையில் வித்திட்டது மனிதகுலம் என்று எடுத்துரைக்கின்றார் கவிஞர்.

வளர்பிறையாய்த் தோன்றி, வண்ண வானில் ஊர்ந்து, வாழ்வாங்கு வாழக்கூடிய மக்கள், வளர்புவியில் வாழ்வு நலப்பூரணத்தை பெற்ற வடிவமாக, அறிவியலின் அடிப்படையில் சீர்பெற்று வாழ்வதாக மு.தங்கராசன் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். இதனை,

"சார்ந்து வரும் எழுத்துக்களே சார்பெழுத்து ஆகும் சார்ந்திருந்து துணைபுரிவோர் சகநட்பும் ஆவார்"

– (எழுத்து ப: 166)

என்றும்,

"காய்கறிகள் வெட்டுவதற்கு கத்தி கண்டார் கற்காலக் கருங்கல்லில் கூர்மை யாலே" – (கடவுளும் மனிதனும் - ப.169)

என்ற வரிகளில் எழுத்துகள் பற்றியும் மனிதனின் உள்நோக்கு பார்வையையும் எடுத்துச் சுட்டியுள்ளார்.

முடிவுரை

கவிதையானது சிந்தனையில் பூத்துச் செந்நாவில் பழுத்துச் செவியினிலே வந்து கனியக்கூடியது. அத்தகைய அளவில் கருத்துக்களை உதிக்கச் செய்த மு.தங்கராசன் அவர்கள், 'உதயம்' என்ற தலைப்பில் தம்முடைய அழகுணர்ச்சியையும், பண்பான குணத்தன்மையினையும் சிறந்த சொற்களையும் தகுந்த இடங்களில் பயன்படுத்தி, கவிதையாக உருவாக்கிக் கொடுத்தமையை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

தங்கராசன் .மு, உதயம், முதற்பதிப்பு 1988, விஜயா சபரிபதிப்பகம், சென்னை - 96.

பாக்கியமேரி, தமிழ் இலக்கிய வரலாறு, ஜூன், 2011, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 96.

சுப்பிரமணியன், எம்.சிவ, திருக்குறள், 2011, கமர்சியல் பதிப்பகம், தென்னிந்தியா.

அண்ணாமலை. சுப, கலித்தொகை, ஏப்ரல் 2003, கோவிலூர் மடாலயம், கோவிலூர் 07.

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் கட்டுரைகளில் 'வேதாகமத் தாக்கம்'

பா. ஜில் டேனியல் தங்கராஜ்
உதவிப்பேராசியர் மற்றும், பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, அமெரிக்கன் கல்லூரி, மதுரை

'சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின் கட்டுரைகளில் வேதாகமத் தாக்கம்' என்னும் தலைப்பில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. அவர் எழுதிய 'அமுதத் தமிழ்' என்ற கட்டுரைத் தொகுப்பில் சமுதாயம், உணர்வுகள் என்ற பிரிவுகளில் அமைந்துள்ள கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சமயக்கல்வி

சமயங்கள் மனிதனுக்கு அவன் வாழ வேண்டிய வழியைக் கற்றுக் கொடுக்கின்றன. சிறு வயது முதலே வீட்டிலும் பள்ளியிலும் சமயக்கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. 'தப்பு செய்தால் சாமி கண்ணைக் குத்திவிடும்' என்றும், கூறி அடக்கி வைத்தும் வீட்டில் பெற்றோர் கற்றுக் கொடுக்கின்றனர். குழந்தைகள் விலையுயர்ந்த பொருட்களை வாங்க ஆசைப்படும்போது 'கடவுளிடம் கேள், அவர் வாங்கித் தருவார்' என்றும், 'நோயுற்ற குழந்தையிடம் கடவுளிடம் கேள், அவர் சுகம் தருவார்' என்றும் பெற்றோர் கூறுவதுண்டு. அன்றைய இதிகாச நூல்களே இன்றைய சமயக் கல்விக்கு ஆதாரங்களாய் அமைந்தொளிர்கின்றன. சமயத் தொடர்பான இதிகாச நூல்களே சன்மார்க்க நெறிகளை மனித குலத்துக்குப் போதித்திருக்கின்றன. ஒவ்வொரு மதக் கோட்பாடுகளின் வாயிலாகவும், அவ்வம் மதத்துக்குரிய நெறிகளைப் பின்பற்றுவதன் - கடைப்பிடிப்பதன் மூலம் - மனித சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் தூய்மை பெறுகின்றார்: வாய்மை பெறுகின்றார் என்பது ஆர்ப்பாட்டமில்லாத அமைதிப் பேருண்மையாகும்' (அமுதத்தமிழ்- ப.97). விவிலியத்தில் மனிதன் எப்படி தனக்கடுத்தவரோடு பழக வேண்டும், குடும்பத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகள் எல்லாம் கூறப்பட்டுள்ளன. கடவுளே தன் மக்களைத் தான் அவர்களுக்குக் கொடுக்கப் போகும் தேசத்துக்கு, அவர்களை வழிநடத்த மோசே என்ற தலைவனை ஏற்படுத்தி, அவர் கையில் மக்கள் வாழவேண்டிய முறைகளைக் கட்டளைகளாக எழுதிக் கொடுத்தார்: மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். (யாத்திராகமம் 20 – 35 அதிகாரங்கள்)

இறைவழிபாடு, சன்மார்க்க நெறிகள், சமயக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பத்தாம் பசலித் தனமாகக் கருதும் இளைய சமுதாயத்தினரின் பண்பாடுகளற்ற பாழ்மனம் தெளிந்து – தெரிந்து – பக்திமனம் உருவாக வேண்டும்: அதன்வழி உருப்படியானதொரு நற்குடி மக்கள் உருவாக வேண்டும்"

(அமுதத்தமிழ் பக் 97,98) வேதாகமம், 'பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6) என்று கூறுகிறது. 'சமயக்கல்வி உணர்த்தும் சன்மார்க்க நெறிகளைப் பயின்றால் நமது நாட்டில் பண்பார்ந்த – அன்பார்ந்த – பணிவார்ந்த – கட்டொழுங்கு மிக்க சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை' (அமுதத்தமிழ் பக். 99) என்கிறார் ஆசிரியர்.

பகுத்தறிவு

பகுத்தறிவு மனித இனத்துக்கு இறைவனால் அளிக்கப்பட்ட ஒரு பெரிய வரப்பிரசாதம். "உணர்ந்தான்: ஒளிர்ந்தான்: மனிதனாக! விலங்கனைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வேறுபட்டு விளங்கினான் மனிதன்: மனிதனாக"! (அமுதத்தமிழ் ப. 96) கடவுள் உண்டாக்கிய நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை மனிதன் பறித்து உண்டதால் அவன் மிருகம் போன்று இல்லாமல் பகுத்தறிவு உள்ளவனானான். 'இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்' (ஆதியாகமம் 3:22) என்றார் கடவுள்.

நல்லொழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

(திருக்குறள் 131)

என்றார் வள்ளுவர். ' "மதம் ஏதாயாள் எந்து? மனுஷன் நன்னாயால் மதி" என்று மலையாள தேசத்தில் வாழ்ந்த மார்க்க நெறிப் பெரியார் ஸ்ரீ நாராயண குரு என்பவர் கூறினார். சமயப் பெரியார்களும், மதக்குரவர்களும் இதனை இலக்காகக் கொண்டுதான் சமயப் பணி புரிந்து வருகிறார்கள்' என்கிறார் ஆசிரியர். (அமுதத்தமிழ் பக். 100,101)

வேதாகமத்தில் இயேசுவும் மக்கள் நல்வழியில் நடக்கவே அவர்களுக்குப் போதனை செய்தார். 'அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார். அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்.....' (மத்தேயு 5,6,7 அதிகாரங்கள்) இதனை மலைப்பிரசங்கம் என்று கூறுவார்கள். நற்கிரியைகள் செய்ய வேண்டும், சகோதரன் மீது கோபம் கொள்ளக் கூடாது, கோபம் கொள்வது கொலை செய்வதற்குச் சமமாகும். கடவுள் இருக்கிறார். அவர் உதவி செய்வார். மனுசர் உங்களுக்கு எவற்றைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவற்றைச் செய்யுங்கள் என்று போதனை செய்தார். இவைபோல பல நல்ல காரியங்களை வேதாகமம் மக்களுக்குப் போதிக்கிறது.

'என்பு தோல் போர்த்த உடம்பினுள் இருக்கின்ற மனிதன் உணர்ச்சிகளுக்கு ஆட்படக் கூடியவன். இது இயற்கையின் நல்லருள். ஆயின் உணர்ச்சிகள் காரணமாகவே ஒழுக்கக் கேடுகள் விளைந்து விடக் கூடாதல்லவா? இதனை எச்சரித்து எப்போதும் மனித குலத்தை நன்னெறிப் படுத்துவதற்காகவே இதிகாசக் கதைகளும், நான்மறை வேதங்களும் சமய முதுகுரவர்களால் உருவாக்கப்பட்டன.' (அமுதத்தமிழ் ப.101) வேதாகமத்திலும் யோசேப்பு என்ற இளைஞனைத் தவறான நோக்கத்துடன் நெருங்கிய பெண், அவன் வேலை பார்த்த எஜமானின் மனைவி

என்றாலும் விலகி ஓடினான். அதனால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால், பின்னர் அந்த எகிப்து தேசத்திற்குப் பிரதம மந்திரி ஆனான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. (ஆதியாகமம் 39 – 50 அதிகாரங்கள்)

இயேசுவும், 'ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு (மத்தேயு 5: 28,29) என்று மக்களுக்குப் போதனை செய்தார்.

'வழிதவறிச் செல்லும் மகனைப் பார்த்து "பெத்த வயிறு பத்தி எரியுதடா" என்று தாய் அங்கலாய்த்துக் கொள்கின்றாள். உடனே மகன் கேட்கின்றான், "ஏன் பெத்தே, யார் உன்னைப் பெக்கச் சொன்னா?" என்று ஆர்ப்பரிக்கின்றான். அந்த மகனைத் திருத்துவது எப்படி? "மாதாவின் காலடியே சொர்க்கம்" என்றார் மார்க்க நெறி வல்லார் அண்ணல் நபிகள் நாயகம். இந்த மறை மொழியை - இறைமொழியைக் கற்பிப்பதன் மூலம் திருத்தலாம்: கற்பதன் மூலம் திருந்தலாம் ' என்கிறார் ஆசிரியர் மு. தங்கராசன் (அமுதத்தமிழ் பக் 101,102)

வேதாகமத்தில் ஏசாயா என்ற தீர்க்கன் 'தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: ஏன் என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! என்கிறார். (ஏசாயா 45:10) சாலொமோன் என்ற ஞானி 'தகப்பனைப் பரியாசம் பண்ணி, தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்' (நீதிமொழிகள் 30:17) என்கிறார்.

'உலகில் எந்த ஒரு மதமும் "குடி, கூத்தாடு: மாமிசம் உண்: மானுடத்தில் வெறி கொள்" என்று கூறவில்லை' (அமுதத்தமிழ் பக். 102) என்கிறார் ஆசிரியர்.

வேதாகமம் 'மதுபானம் இரத்த வருணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது நீ அதைப் பாராதே: அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்: உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்' (நீதிமொழிகள் 23:31-33) 'மதுபானப் பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப் பிரியனும் தரித்திரராவார்கள்' (நீதிமொழிகள் 23: 20,21) என்று போதிக்கிறது.

பெற்றோரை மதித்தல்

"இல்லாது பிறவாது அள்ளாது குறையாது" என்பது நம் முன்னோர் நமக்கருளிய அமுத வாக்கு. பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் தலைக்கடன் என்பதனை வலியுறுத்தவே, "தந்தை தாய்ப் பேண்" என்ற சொற்றொடராக்கம் அறநெறி நூல்களில் காணப்படுகிறது. "தந்தைச்சொல் மிக்க மந்திரமில்லை: தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்றும் பழந்தமிழ் நீதி நூல்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன." (அமுதத்தமிழ் பக். 146,147) என்று தன் கட்டுரையில் குறிப்பிடும் கவிஞர் மு. தங்கராசன், பிள்ளைகள் பெற்றோரைப் பேண வேண்டும் என்று ஒரு

சட்டம் கட்டாயம் இயற்றப்பட வேண்டும் என்கிறார்.

வேதாகமம், "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" (உபாகமம் 5:16) என்று கட்டளையாகக் கூறியுள்ளது. கனம் பண்ணுவது என்பது அன்புடன் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் மனம் மகிழ நடந்து கொள்வதாகும்.

முடிவுரை

சமயக்கல்வி மனிதனுக்கு நல்வழி காட்டி, நற்பண்புகளை வளர்க்கிறது. நல்லொழுக்கத்திற்கு ஆதாரமாக விளங்குகிறது. மொத்தத்தில் மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும்? எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக் கூடாது என கற்றுக் கொடுக்கிறது என்பதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். வேதாகமமும் அவர் கூறியுள்ள செய்திகளையே வலியுறுத்தியிருப்பதால் ஆசிரியர் கருத்துகளில் வேதாகமத் தாக்கம் வெளிப்படுகிறது.

கவிஞர் மு.தங்கராசனின் 'பனித்துளி' கவிதைத் தொகுப்பின் வழி வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் ந. ஜெயசுதா
உதவிப் பேராசிரியர் என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

கவிஞர் மு.தங்கராசன் ஓய்வுபெற்ற முத்தமிழ் ஆசிரியர் தமிழ் எழுத்தாளர். கவிஞரின் மனைவி திருமதி ரெ.செல்லம்மாள். இவர்கள் நான்கு மகன்களும் இரண்டு மகள்களும் பதினான்கு பேரக்குழந்தைகளையும் கொண்ட ஒரு பெருங்குடும்பத்தார்.

இவர் இக்கால இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, நாடகம் எனத் தன் புலமையைப் பல வகையில் நிலை நாட்டியுள்ளார். படைப்புலகில் தனக்கான பல விருதுகளையும் பெற்ற பெருந்தகை. தமிழ் முரசு, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நல்லாசிரியர் விருது நிகழ்ச்சியில் 2013ஆம் ஆண்டு வாழ்நாழ் சாதனையாளர் விருதுவென்ற மூவருள் இவரும் ஒருவர் என்ற சிறப்புக்குரியவர். இவருடைய சாதனைகளுக்கு வித்தாக முன்னோர்களைத் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

நமது முன்னோர்கள் மனித நேய நுட்பங்கள் எதனையும் விட்டு வைக்காது எல்லாவற்றையும் பற்றிப் பாடியிருக்கின்றார்கள். வண்ணங்களும் வடிவங்களும் புதியனவாக இருக்கலாம், எண்ணங்களும் எழுச்சிகளும் முன்னையோர் தம் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே அமைகின்றன என்று கூறி, தனது கவிதைகளின் தாக்கங்களும் அந்த அடிப்படையில் அமைந்துள்ளன என்று பதிவு செய்கின்றார் கவிஞர். முன்னோர் வழி வந்த கவிஞரின் கவிதைக் கருத்துக்கள் எவ்வாறு நமது வாழ்வியலோடு பொருந்துகிறது என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வாழ்வில் நிம்மதி

வாழ்வில் நிம்மதி தருவது எது? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தவறான கண்ணோட்டத்தில் தாறுமாறாகச் செல்கிறோம். மனிதனுக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் வாழ்வில் தேவை என்பதை புரிந்து கொண்டு, அதனை அடைவதற்கான வழிகளை பல முறைகளில் தேடுகிறான். தேடல் என்ற நிலையில் செல்வம் முதன்மை பெறுகிறது. வாழ்வில் நிம்மதி பெற செல்வம் ஒன்றே என்ற கருத்தைக் கொண்டு ஓடோடுகின்றான் நிம்மதியிழந்து.

"பணமெனும்மாயைக்கீங்கு
பண்பினைஅடகுவைத்தே
இனங்கெழுபான்மைபோற்றா
இயல்பினார்க் கமைதி எங்கே?"

(பனித்துளி ப. 20)

என்பதன் வழி நிரந்திரம் இல்லாத செல்வத்திற்காக நிம்மதி இல்லாமல் வாழ்கின்றோம் என்பதை உணர்த்துகிறார். .

மேலும் நிம்மதியற்ற நிலையைக் கவிஞர் பட்டியலிடுகிறார்.

“அஞ்சியே அன்றாடந்தான்
அமைந்திடும்மனத்தின்பூசல்
எஞ்சியேஇருக்கும்துன்ப
எமனவன்மிரட்டல்வீங்கும்
துஞ்சிடும்போதும்வந்தே
துரத்தியேவிரட்டியோட்டும்”

(பனித்துளி ப.18)

நாம் எந்த ஒரு செயலுக்கும் அஞ்சியே வாழக்கூடிய நிலை. தூங்கும்போது கூட மனதின் போராட்டங்களுக்கு எல்லை என்பதே இல்லை எனவும், நிம்மதி இல்லாத மனமுடையவர்கள் இவ்வுலகில் கோடான கோடியாக உள்ளனர்; இவர்கள் இயற்கையோடு வாழும் வாழ்வை அழித்து, நாகரிகம் என்ற வகையில் செயற்கை முறையில் பல முன்னேற்றங்களைத் தேடி நிம்மதியை இழக்கிறோம் என்பதை,

“இயற்கையின்இயல்பைவெல்லும்
இயந்திரயுகத்தின் தோற்றம்
செயற்கையின்நாகரிகம்
செழிப்பதில்சிரத்தைகொண்டே
முயற்சியில்முனைந்துநிற்பார்
முழுமனஅமைதிகாணார்”

(பனித்துளி ப.22)

என்ற வரிகளின் மூலம் உணர்த்துகிறார்.

நிம்மதி தேடி அலையும் மனிதன் நிம்மதியில்லா நிலையைக் குறிப்பிட்டும் அதற்கான வழியையும் குறிப்பிடுகிறார் .

“தம்மதிநிறைவால் ஈண்டு
தக்கனகொண்டால் வாழ்வார்!”

என்ற வரிகளின் வழியே தம் அறிவின் வழி கொண்டு தன்னை வழிப்படுத்தி கொண்டு வாழ்ந்தால் மன நிறைவு அடையலாம் என்கிறார். ஆம் ,'நெஞ்சதன் அமைதித் தீர்ப்பே நிம்மதி என்றே ஆகும்!' என்ற அவரின் வரி மன அமைதி நிம்மதி என்பதை வலியுறுத்துகிறது.

“இந்த மன அமைதிக்கு வள்ளுவர்,,
யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்” (குறள் 341)

ஒருவன் எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ, அந்தந்தப் பொருட்களால் அவன் துன்பம் அடைவதில்லை என்பது கருத்து. ஆகவே, துன்பத்திற்குக் காரணம் ஒன்றின் மீது ஆசையால் கொண்ட பற்றுதான், எதிலும் பற்றற்றவனாக இருந்தால் நிம்மதியான வாழ்வைஅடையலாம் என்பதை உணர்ந்து வாழலாம்.

ஏமாற்றம்

வாழ்வில் ஆயிரம் மாற்றங்கள் வந்தாலும் மாறாமல் வருவது ஏமாற்றம் எனலாம். ஏனெனில், பிறந்தது முதற்கொண்டு ஒவ்வொன்றையும் எதிர்பார்த்து வாழ்வதால் ஏமாற்றங்கள் ஏற்படுகிறது. இந்த எதிர்பார்ப்பால் வரும் ஏமாற்றத்தை கவிஞர், எதிர்பார்ப்பு மாந்தர்தம் இயல்பே யாகும்

“இதுசெய்தால் அதுவிளையும் என்ப
தெண்ணல்
எதிர்பார்ப்பு என்றாகும்; இல்லா தீங்கு
"எவர்கைதான் நீளுமென" இயம்பப்
போமோ?
எதிர்பார்ப்பு என்றொன்று இருப்ப
தால்தான்
“ஏமாற்றம்" என்பதுவும் இங்குண் டாச்சு

எதிர்பார்ப்பு இல்லையெனக் கொண்டா லீங்கு
ஏமாற்றம் என்பதற்கும் இடமே யில்லை!"
(ப. 31)

என்ற வரிகளில் எதிர்பார்ப்பே ஏமாற்றம் என்பதை வலியுறுத்துகிறார். ஆம்; பிறந்த குழந்தையை அம்மா போல இல்லை அப்பா போல என்று சொல்ல முனையும்போது ஆரம்பத்திலேயே அக்குழந்தை தன் சுயத்தை இழந்து விடுகிறது. பின் வளரும் போதும் படிக்கும் போதும் அவரைப்போல இவரைப்போல என்று எல்லை மீறிய எதிர்பார்ப்புகளை மனதினுள் புதைத்து விடுகின்றனர், நினைத்தது நிறைவேறாத போது ஏமாற்றத்தைப் பெறுகிறோம். எனவே, பிள்ளைகளிடம் குறிக்கோளுடன் இருக்கச் சொல்லலாம். கடமைகளைச் செய்யலாம். அதை விடுத்து எதிர்பார்ப்புகளின் பாரம் இல்லாமல் இயல்பாய் விட்டால் எதையும் ஏமாற்றம் இல்லாது சாதிப்பார்கள் இன்றைய இளைஞர்கள்.

நோயற்ற வாழ்வு

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" (திருமந்திரம் -திருமூலர்)

மனிதன் உயிர்வாழ உடம்பே ஆலயமாகத் திகழ்கிறது. சித்திரம் எழுத சுவர் மிகமிக அவசியம். அதைப்போல உயிர் வாழ உடம்பு அவசியம். நாம் வாழும் வாழ்க்கை நோயற்ற வாழ்வாக இருக்க வேண்டும். பொதுவாக, நாம் இறைவனிடம் வேண்டும் போது, அப்பா! இறைவா!. நோய் நொடி இன்றி வாழவை என்று வேண்டுவது இன்றும் வழக்கமாக உள்ளது. வாழும் வாழ்வு நலமாக வாழ வேண்டும் என்பதை உணர்ந்துள்ளனர் .

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கு ஏற்ப வாழ்ந்து நோயின்றி நிறை செல்வதோடு வாழ வேண்டுமென முன்னோர்கள் உரைத்துள்ளனர். அதன்வழியே நம் கவிஞரும் இக்கருத்தையே வலியுறுத்துகிறார்.

"நோயற்ற வாழ்வுக்கு நோன்பு"
(பனித்துளி பக்.124)

என்ற வரிகள், இயற்கை முறையில் வாழ்ந்த மக்கள் தன் உடல்நலத்தின் மீது அக்கறை கொண்டு மாதத்தில் அல்லது வாரத்தில் ஒரு நாள் உண்ணா நோன்பு இருந்து, நோயற்ற வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பதைச் சுட்டுகின்றன. மேலும்,

"உடலதுவும் உள்ளத்தால் பிணைந்த ஒன்றே உள்ளத்தில் சோர்வென்றால் உடல் சோரும்
உடல்தனில் நோயென்றால் உள்ளம் சோர்ந்த
உற்சாகம் ஊக்கங்கள் இழந்து நிற்கும்..."
(பனித்துளி ப.125)

என்ற வரிகள், 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற சான்றோர் வாக்கின் படி உடலும் உள்ளமும் இணைந்தே இயங்குகிறன்றன. உள்ளம் சோர்ந்தால் உடல் சோர்வு பெரும் .எனவே மனநோயின்றி வாழச் சொல்கிறார்..

"கடுவெளி சித்தரும், 'கோபம் கொள்ளாதே மனமே"

என்று மனதை பக்குவப்படுத்துகிறார். வள்ளுவமும், 'மன நலம் மண்ணுயிர்க்கு' என்பதில் உடல் நலத்திற்கு மனநலம் முக்கியம் என்பதை பறைசாற்றுகிறது. மனநலம் போல உடல் நலத்திற்கு உணவின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுகிறார். இதனை,

"அளவறிந்து உண்டிடுக ; அதுதான் நல்ல ஆரோக்கியம் தருமென்று"

(பனித்துளி ப.126)

சத்துகள் பலவற்றைச் சார்ந்து நிற்கும் சமநிலையான உணவுகளில் கவனம் வைத்துப் (பனித்துளி ப. 125)

என்ற வரிகளில் உணர்த்துகின்றன உடம்புக்கு தேவையான சத்தான உணவுகளை அளவோடு உண்டு வாழ்ந்தால் எந்த நோய்களும் இன்றி நலமுடன் வாழலாம் என்கிறார் படைப்பாளி. பிணியில்லா வாழ்வை வாழ உடல் நலதைப் பாதுகாக்க சொல்கிறார். உணவே தான் மருந்து என்பதை உணர்த்துகிறார். இதையே தான் வள்ளுவரும்,

"வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்கிறது.

உண்ட உணவு செரித்த பிறகு மறு வேளை உணவை உண்ணும்போது உடல்நலத்திற்குக் கேடு இல்லை. அதனால், உடுமலை நாராயணகவி,

"பாத்துக்கோங்க நல்லாப் பார்த்துக்கோங்க -கொஞ்சம்
பக்குவமாக ஒடம்பெப் பார்த்துக்கோங்க"

(கவிவளம் ப. 8)

என்றும்,

"பாதி வயத்துச் சோறு அதில பாதி நீரு
பசியெடுத்தக தின்னுங்க -மாட்டுப்
பாலு முட்டை கீரை பாதங் கொட்டை - நல்ல
பழவர்க்கம் அதிகமாக உண்ணுங்க"

(கவிவளம் ப. 9)

என்றும் உடம்பிற்கான உணவு முக்கியத்துவம் குறித்து வலியுறுத்துவதை இதன் வழி அறியலாம்.

அறிவுக்கு உணவு

உடல் நலத்திற்கு எவ்வாறு நல் உணவு தேவையோ, அவ்வாறு அறிவுக்கும் நல்ல நூலான உணவு தேவை என்பதை,

"நெறியுணர்த்தும் நல்லுணவாம் நீதி நூல்கள்
நன்னூல்கள் நல்லறிவுக்கு உணவேயாகும்
நற்றமிழின் இலக்கியங்கள் ஆகும் நல்ல
தொன்னூல்கள் அனைத்தும் தாம் தூய்மையான
தொகையறிவுக்கு உணவாகி" (பக் 161)

நல்லோரான முன்னோர்களின் அறிவுரைகள் எந்நாளும் நமக்கு வேண்டும் . அவர்கள் வகுத்த வழியிலும் இயற்றிய நூல்களின் துணையிலும் வாழ்ந்து வந்தால் நல்லறிவுபெற்று வளமான வாழ்வை வாழலாம். அறிவை வளர்க்க இலக்கியம் தொட்டு ஆன்மிகம் வரையிலான நல்ல நூல்கள் நம்மை செம்மைப்படுத்துவதை எடுத்தியம்புகிறார்.

துணைநூல்கள்

மு.தங்கராசன் - பனித்துளி,
சமணமுனிவர்கள் - நாலடியார்,
மு..வரதராசனார் (உ.ஆ) - திருக்குறள்,
பத்மதேவன் (உ.ஆ விவேகசிந்தாமணி),
பொ .மா.பழனிசாமி , க.தனலட்சுமி (ப.ஆ) - கவிவளம்,
திருமூலர்- திருமந்திரம்.

மு. தங்கராசனின் 'வாகைப்பூக்கள்' கவிதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள்

முனைவர் இரா.ஜெயந்தி
உதவிப் பேராசிரியர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

மனிதன் தன் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் நோக்கத்தில் சைகை மொழி தோன்றியது. நாகரிகம் வளர்ந்த பிறகு சைகை மொழியிலிருந்து பேச்சுமொழிக்கு மாற்றம் பெற்றது. பேசக் கற்றுக் கொண்ட பிறகு பேச்சுமொழி எழுத்துமொழிக்கு அடித்தளமிட்டது. எழுத்துமொழியை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்கள் பல்வேறு எண்ணப்பதிவுகளை தம் எழுத்துக்களில் வெளிக்கொணர்ந்தனர். ஆரம்ப காலகட்டத்தில் செய்யுள் நடையிலிருந்த எழுத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. மரபுக்கவிதைகள் வசன கவிதைகள், புதுக்கவிதைகள் ஏற்பட்டன. கவிதைகள் பல்வேறு கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்கும் பணியை செவ்வனே செய்தன. இத்தகைய வரிசையில் கவிஞர் மு. தங்கராசவின் 'வாகைப்பூக்கள்' கவிதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது .

'வாகைப் பூக்கள்' கவிதைத் தொகுப்பு நூல்

பழங்கால மன்னர்கள் படையெடுத்துச் சென்று வெற்றிபெற்றுத் திரும்பும்போது வெற்றியின் பெருமித அடையாளமாக 'வாகைப் பூ அணிவது மரபு . போர்க்களம் செல்லும் போர் வீரர்களை 'வாகை சூடி வா' என்று வாழ்த்தி அனுப்பும் மரபும் இருந்தது. அதைப் போன்றே இத் தொகுப்பு நூலில் பல அரிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் தமிழ்மக்கள் அனைவருக்கும் இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று ஆகியனவற்றை ஊட்டுவனவாக அமைந்துள்ளதோடு, அவர்களின் சிந்தனையைக் சூடேற்றி செயல் படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. கவிதைகள் சொற்சுவை, பொருட்சுவை, தமிழ்மொழியின் சிறப்பு ஆகியவற்றின் ஆளுமையைக் காட்டும் விதமாகவும் படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழியின் சிறப்பு

மக்கள் அனைவரும் தம் தாய் மொழியையும், பிறந்த பொன் நாட்டையும் தம் இரு கண்களாகப் போற்றிப் புகழ்வார்கள். கவிஞரும் தமிழ் மொழியின் சிறப்பினை வியந்து பாராட்டுகின்றார். தமிழ்மொழி யானது சங்கங்களில் தோன்றிய தோற்ற வரலாறு குறித்தும் அனைத்து மொழிகளுக்கும் அடிப்படையாக விளங்கும் தன்மை குறித்தும் தம் கவிதை வரிகளில் எடுத்துரைக்கின்றார் . இதனை,

"எங்கள் தமிழ் இன்பத்தமிழ் என்றும் வாழ்கவே!
சங்கத்தமிழ் சந்தத்தமிழ் என்றும் வாழ்கவே!
எங்கள் தமிழ்
பொங்குமின்பம் தங்குந்தமிழ் புகழ்மணக்க வாழ்கவே!
வங்கம்முதல் குமரியிடை வளர்ந்ததமிழ் வாழ்கவே! "

(வாகைப்பூக்கள் ப.3)

தமிழின் சிறப்பாகிய தொன்மை, தூய்மை, சந்தம் நாகரிகச் சிறப்புகளைத் தம் கவிதை வரிகள் மூலம் இக்கவிஞர் குறிப்பிடுகின்றார்.

மொழிப்பற்று

மொழி என்பது கருத்துப் பறிமாற்றத்திற்கான கருவியாக அமைகின்றது. மனிதர்கள் அனைவரும் அவரவர் மொழியின் மீது இயற்கையாகவே பற்று உடையவராகத் திகழ்வார்கள். அதைப்போலவே கவிஞரும் தம்

மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராக விளங்குவதை அறியமுடிகின்றது. இதனை,

"ஒவ்வொரு நிமிடந் தோறும்
உள்ளத்தில் மொழியின் பற்று
ஒவ்வொரு மனிதர் தாமும்
உயிருக்கு நிகராய்க் கொண்டால்
ஒவ்வொரு நாட்டில் என்றும்
உயிர்ப்புடன் வாழ்ந்து மேவும்."

(வாகைப் பூக்கள் ப.4)

என்னும் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. இவற்றின் வழி நாடு, மொழி, இனம் ஆகிய அனைத்தும் முன்னேறுவதற்கு மொழிப்பற்று இன்றியமையாத் தேவையாக விளங்குவதை மனிதர்கள் அனைவரின் உள்ளங்களிலும் பதியவைத்துச் சிந்திக்கச் செய்துள்ளார்.

பாரதியார் தமிழ்மொழிப்பற்றின் சிறப்பினைத் தம் கவிதை வரிகளில் எடுத்துக்கூறுவதைக் காணமுடிகின்றது. இரு கவிஞர்களும் தமிழ்மொழியின் சிறப்பினை உலகறியச் செய்யவேண்டும் என்ற உயர்தோங்கிய சிந்தனையைக் காணமுடிகின்றது. இதனைப் பின்வரும் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

(பாரதியார் கவிதைகள்)

இரு கவிஞர்களும் தமிழ்மொழியின்மீது மிகுந்த பற்றுடையவர்களாகத் திகழ்ந்ததை நுண்ணிதின் அறிய முடிகின்றது.

தாய்மொழியும் ஆங்கிலமும்

ஒரு மனிதனுக்குத் தாய்மொழியைப் போலவே ஆங்கிலமொழி அறிவும் அவசியமான ஒன்றாகும். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் இம்மொழியின் சிறப்பையும் கவிஞர் எடுத்துக் கூறுகின்றார்

"எம்மொழியும் எம்மொழிபோல் இனிதாவதில்லை
தம்மொழியைப் புகழ்ந்துரைக்கும் தார்மீகங் காண்போம்!
இம்மொழியின் இலக்கியங்கள் ஏற்றம் கண்டே
செம்மொழியாய் முஉதறிஞரு செப்பினர் அன்றே"

(வாகைப் பூக்கள் ப.6)

"தாய்மொழியும் ஆங்கிலமும் தகைமை போற்றி
ஆய்ந்திங்கு இருமொழியில் ஆற்றல் பெற்றால்
பாய்ந்துவரும் பான்மையெலாம் உன்னை நாடித்
தோய்ந்துவரும் செல்வவளம் தேசம் போற்றும்."

(வாகைப் பூக்கள் ப.9)

என்னும் வரிகள் குறிப்பிடுகின்றன.

தேசம் போற்றும் அளவு சிறந்து விளங்க ஆங்கில மொழியின் தேவையை அனைவரிடமும் விளங்கச் செய்கின்றார்.

புத்தகம் படிப்பதன் அவசியம்

ஒரு நாடு முன்னேறுவதற்கு அந்த நாட்டில் உள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றார்.

"புத்தகம் படித்தல் வேண்டும்: புரிந்துகொள் ஆற்றல் வேண்டும்!
நித்தமும் படித்தல் வேண்டும், நீடிய பொறுமை வேண்டும் !
வித்தகம் போன்றே தோன்றும் !
வினைத்திறம் வளர வேண்டும் !"

(வாகைப் பூக்கள் ப.11)

புத்தகப் படிப்பானது மனிதனை அனைத்து விதங்களிலும் உயர்த்தும் சிறப்பிற்கு உரியது என்றும், அதனை உணர்ந்து செயல்படுத்த வேண்டும் என்றும் சமுதாய மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றார்.

கல்வியின் சிறப்பு

மனிதனை மனிதனாக இருக்கச் செய்வது கல்வி, இது அறியாமை இருளைப் போக்கக் கூடிய கல்வி அனைவருக்கும் அவசியமானது. ஒன்றாகும். அனைவரும் கல்வியின் சிறப்பை அறிந்து, கல்வி கற்றால் மேன்மை நிலையை அடைய முடியும் என்பதைத் தம் கவிதை வரிகளில் சுட்டிக் காட்டுகின்றார். இதனை,

"சொற்றிறத்தால் வென்று வந்தே
சோர்விலா தொளிர்வா ரம்மா!
படித்ததனால் ஞானம் பெற்றே
படிப்பறி யாதார் என்னும்
இடித்துரை தன்னில் நீங்கி
எழிலுலகம் போற்ற வாழ்வார்! "

(வாகைப்பூக்கள் ப..7)

என்றும்,
கல்விச்சிறப்பு குறித்து,

"இளமைக் காலத்தில் கல்வியை
கல்வியைப் புறக்கணித்தவன்
இறந்த காலத்தை இழந்தவன்
எதிர்கால வாழ்விலும் இறந்தவன்."

என்றும் சுட்டுக்கிறார். இக்கருத்தானது தன்வழி கல்வி மனிதனை அனைத்து விதத்திலும் தயார்படுத்துவதாக அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

நன்மக்களின் உருவாக்கம்

நல்ல சமுதாயம் உருவாவதற்குச் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பது பெற்றோரின் கடமையாகக் கருதப்படுகிறது. நன்மக்கட்பேற்றின் சிறப்பினை வள்ளுவரும்,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. " **குறள் (61)**

என்கிறார்,

நல்ல அறிவுடைய மக்களைப் பெறுவதே எல்லா சிறப்புக்களையும் விட மிகச்சிறந்த பேறாகக் கருதுதப்படுகின்றது. நன்மக்கட்பேறு குறித்துக் கவிஞரும் தம் கவிதை வரிகளில் பின்வருமாறு கூறுகின்றார்.

"நன்மக்கட் பேறு பெற்று
நானிலம் போற்ற வாழும்
பொன்மக்கள் பெற்றோர் ஆவார்
புரிந்திடும் எடுத்துக் காட்டு
தன்மக்கள் தழைத்து இந்தத்
தாரணி ஏற்றிப் போற்றும்
நன்மக்கள் நாட்டுக் காக
நயந்திடும் நல்லோர் ஆவார்"

(வாகைப்பூக்கள் ப.22)

நன்மக்களைப் பெற்றவர்கள், உலக மக்கள் அனைவரும் போற்றக் கூடிய அளவு சிறப்பை உடையவர்களாகக் கருதப் படுவார்கள் என்றும், நன்மக்களை உருவாக்கும் கடமை பெற்றோர்களுக்கு உண்டு என்றும் சமுதாயப் பொறுப்புகளைச் சுட்டுக்காட்டுகின்றார்.

செய்ந்நன்றி அறிதல்

இளமைப் பருவம் முதலே ஒருவர் மற்றவர்க்குச் செய்த நன்றியை மறவாமல், அதை நினைத்துப் பார்க்கும் பண்பை வளர்த்தெடுக்கும் பணியைச் செவ்வனே செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று சமுதாய முன்னேற்றச் சிந்தனையை முன்வைக்கின்றார். இதனை,

"உதட்டளவில் நன்றி சொல்லும்
உள்ளங்கள் இருப்ப துண்டு
பதற்றமே சற்றும் இல்லாமல்
பான்மைகள் முகத்தில் தோன்றும்"

(வாகைப்பூக்கள் ப.41)

என்கிற வரிகள் உறுதிப்படுத்துகின்றன. நன்றி மறக்கும் செயலை மிகவும் கீழ்மையானதாகக் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியம், மகாபாரதம், திருக்குறள், அற இலக்கியங்கள் ஆகிய அனைத்தும் செய்ந்நன்றி அறிதலின் சிறப்பினை வலியுறுத்துகின்றன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

(குறள்.61)

ஒருவர் எத்தகைய செயலைச் செய்தாலும், அவரை மன்னிக்க முடியும். ஆனால், செய்நன்றியை மறந்தால் அவரை மன்னிக்கவே

முடியாது என்று வள்ளுவரும் செய்ந்நன்றி மறத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அன்பு செய்தலின் அவசியம்

உலகம் அனைத்தும் அன்பு என்னும் ஒற்றைச் சொல்லால் சுழல்கின்றது. ஓரறிவு உயிரினம் முதல் ஆறறிவு உயிரினமாகிய மனிதன் வரை அனைத்து உயிரினங்களும் அன்பு செய்வதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றன. கவிஞரும் அன்பு செய்வதின் அவசியத்தை தம் கவிதை வரிகளில் எடுத்துக் கூறுகின்றார்.

"அகிலத்தின் உயர்வுக்கு அன்புதான்
பகிர்ந்துண்ணும் பண்புக்குக் கருணைதான் கைகாட்டி
மகிழ்ச்சியுடன் உலவுதற்கும் மறுமலர்ச்சி வாழ்வுக்கும்
முகிழ்த்து வரும் அன்புள்ளம் முளைத்து வரும் திசைகாட்டி"

(வாகைப்பூக்கள், ப.41)

என்பதன் வாயிலாக,

உலக உயர்விற்கு அடிப்படைக் காரணமாக விளங்கும் அன்பின் ஆழத்தை பறைசாற்றி சிந்திக்கத் தூண்டுகின்றார்.

மாணவர் மாண்பு

மாணவர்கள் வருங்காலச் சமுதாயத்தின் அடிப்படையாக விளங்குபவர்கள். அவர்களின் தன்மைகளைக் கவிஞர் தம் கவிதை வரிகள் பகர்கின்றன.

"மாணவர் என்றால் இளமை
மாணவர் மான் அவர் எனவும்
மாணவப்பருவம் என்றும் ஆகும் துடிப்பு
மாணவர் என்றேஇம் மன்பதை போற்றும்"

(வாகைப்பூக்கள், ப.26)

மாண்பால் உயர்ந்தவர்கள் மாணவர்கள் உலகம் போற்றும் அளவு அவர்களின் உயர்வு முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி, சமுதாய முன்னேற்றத்திற்கான வழிமுறையைக் குறிப்பிடுகின்றார்.

மு.தங்கராசன் சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்கும் தமிழ்மொழியின் சிறப்பு, தமிழ்மொழிப்பற்று, தாய்மொழி ஆங்கில மொழியின் சிறப்பு, புத்தகப் படிப்பின் அவசியம், கல்வியின் சிறப்பு, நன்மக்கட்பேறு, செய்நன்றி அறிதல், அன்பு செய்தலின் அவசியம், மாணவர் மாண்பு போன்றவற்றைத் தம் கவிதைகளில் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளதை இக்கட்டுரை பதிவு செய்துள்ளது.

"பூச்செண்டு" சிறுகதையில் படைப்பு உளவியல் - ஓர் பார்வை

மு. ஜெயலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை

ஆய்வுச்சுருக்கம்

உளவியல் உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் ஆராய்கிற ஓர் அறிவியல் ஆகும். இலக்கியம் ஒரு படைப்பாளியின் கைதேர்ந்த செய்திறனால் மட்டுமல்ல; பிரத்தியேகமான ஒரு மன எழுச்சியினாலும் அமைவதாகும். ஒரு மனத்தின் வழியாக இன்னொரு மனத்துடன அது பேசுகின்றது. மனித வாழ்வின் அனுபவங்களையும் ஆழமாகவும் அழகாகவும் சித்திரிக்க முயலுகிறது[1] (ஆய்வு தி. சு. நடராசன். திறனாய்வுக் கலை ப.88) இதன் அடிப்படையில் தங்கராசனின் படைப்பான "பூச்செண்டு" சிறுகதைக் தொகுதியில் காணலாகும் படைப்பாக்க உளவியலை வெளிக்கொணர்வதே இக்கட்டுரை.

பூச்செண்டு - சிறுகதைகள் 'விளையாட்டு பொம்மை'முதல்'திலகவதி'வரை எல்லையாக அமைந்துள்ளது. இலக்கியம் ஏற்படுத்துகிற உறவையும் தாக்கத்தையும் காணுதல்.

விளையாட்டு பொம்மை

இந்தச் சிறுகதையில் செல்லப்பன் கதையில் நல்லவனாகவும் ஒழுக்கம் உள்ளவனாகவும் பெண்கள் மீது அதிக மதிப்பு உள்ளவனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளன். பூவாயி கணவனுக்கு அடங்கி நடப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது. லாரி டிரைவரான செல்லப்பன், தான் வேலை பார்க்கும் தோட்டத்தில் அனைத்து பெண்களும். வேலைக்குச் சென்றாலும் தன் மனைவி எவ்வித வேலைக்கும் அனுப்பாமல் வீட்டுக்குள்ளேயே அனைத்து வசதிகளும் செய்து கொடுத்து அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறான். அவனுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. ஆரம்ப காலகட்டத்தில் செல்வச் செழிப்புடன் இருந்த குடும்பமானது திடீரென ஏற்பட்ட செல்லப்பன் மறைவினால் தலைகீழ் மாற்றம் ஏற்படுகிறது. பூவாயி இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது. மன அழுத்தம் மற்றும் உழைப்பினால் பலவீனமடையும் பூவாயி இறந்து விடுகிறாள். குழந்தைகளும் அனாதை ஆகின்றன. இறக்கும் வேலை பார்க்கும் தோட்டத்து பெரிய கிராணியிடம் தான் சேமித்து வைத்துள்ள செல்வத்தை கொடுத்துவிட்டு, தன் குழந்தைகளையும் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ளும்படியும் அவள் வேண்டிக்கொள்கிறாள். ஆனாலும் பெரிய கிராணி வேலைக்கார சிறுவன் போல நடத்துகிறாள். இந்நிலையில் பொன்னியை வரப்பில் அமர வைத்துக் கொண்டு தோட்ட வேலை செய்கிறான். அந்நேரம் கிராணி பேத்தி ஒரு பொம்மையுடன் தோட்டத்துப் பக்கம் வருகிறாள். அதைப் பார்த்து பொன்னி பொம்மை வேண்டும் என்று அடம் பிடிக்கிறாள். ஒரு காலகட்டத்தில் கிராணியின் பேத்தியிடம் பிடிங்கி விடுகிறாள். இதனால் குழந்தை அழுகிறது கிராணியான வந்து நிகழ்வை பார்த்துவிட்டு அடிக்க கையை ஓங்கிய கிராணியை தள்ளிவிட்டு தங்கை பொன்னியைத் தூக்கிக் கொண்டு அந்த இடத்தைக் கடந்து பல மைல் தூரம் சென்று தாகம் எடுக்கையில் அருகில் உள்ள தோட்டத்தில் பணிபுரியும் பணியாளிடம் தண்ணீரானது கேட்கும்பொழுது உண்மை அறியும் பணியாள்; இனிமேல் தன்னுடன் இருங்கள் என்று தங்க வைத்துக் கொள்கிறார். கதாநாயகனின் இறப்புக்குப் பின்பு குழந்தைகளின் வாழ்க்கை போராட்டம் மனதைப் பாதிக்கின்றது.

புது பாடம்

சிறுகதையும் சோக உணர்வுகளையே மிகைப்படுத்தி நிற்கின்றது. கதாநாயகன் வீடு

வாடகைக்கு தேடி அலைகிறான். ஒரு வீடு வாடகைக்கு கிடைக்கிறது. மாடி வீடாக இருக்கிறது. அந்தச் சுற்றுப்புறச் சூழலை ஆராய்ந்து பார்க்கின்றான். வீட்டில் ஒரே இரைச்சலாகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் உடன் காணப்படுகின்றது. ஒரு அமைதி சூழலாகச் சித்திரிக்கப்படுகிறது. டீக்கடைக்குச் செல்லும் கதாநாயகன் ஒரு முதியவரைப் பார்க்கிறான். அவர் வெள்ளை ஆடை அணிந்து கையில் தடியுடன் ஒரு மிராசுதாரர் போன்று காட்சி அளிக்கிறார். அவரைப் பார்த்தவுடன் கதாநாயகன், டீக்கடைக்காரர் யார் இவர் என்று விசாரிக்கிறார் டீக்கடைக்காரர் கதை சொல்வது போல நகர்கிறது. முதியவர் முதலில் ஒரு திருமணம் செய்து 3 பிள்ளைகளை பெறுகின்றார். மூன்று பெண்குழந்தைகள் ஆடம்பரமான வாழ்க்கை வருமானத்தை முழுவதும் ஆடம்பரமாக வாழ்ந்து தீர்க்கிறார். இச்சூழ்நிலை சட்டைக்காரர் இனத்தவர் பெண்ணை இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொள்கிறார். அவருக்கு 6 பிள்ளைகள் பிறக்கின்றன. மொத்தம் 9 பிள்ளைகள் இளையதாரத்திற்கு. முதல் இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்கின்றனர் காலம் செல்லச் செல்ல வயோதிகத்தின் காரணமாக வருமானம் தடைபடுகிறது. இரண்டு குடும்பமும் வறுமையில் தள்ளப்படுகின்றன. மூத்த தாரம் கூலி வேலை செய்து இரண்டு பெண்களைக் கட்டிக் கொடுக்கிறார் ஒரு பெண் தாயோடு இருக்கிறது. இரண்டு ஆண்பிள்ளைகளும் தருதலைகள். ஊரில் குற்றச் செயல்கள் பல புரிந்து சிறைத் தண்டனைக் கைதிகளாக அடைக்கப் படுகின்றனர். வயதின் காரணமாக முதியவர் படுக்கையில் படுத்த படுக்கையாக, இரண்டு மனைவிமார்களும் அவரைக் கவனிப்பதற்கு எவ்வித வசதியும் இல்லாமல் படுக்கையில் கிடத்தி வைத்திருக்கிறார்கள். அவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்தவர் படுக்கையில் கிடந்து புண்ணோடும் ஆடை இல்லாமலும் உணவு இல்லாமலும் சிரமப்படுகிறார். இறுதியில் ஒரு நாள் இறந்து போகின்றார். சிறையில் கூடிய இரு பிள்ளைகளும் வந்து ஈமக்கிரியை செய்துவிட்டுச் சென்று விடுகிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இந்த கதாநாயகன் வாழ்க்கை என்பது ஒரு பாடம். அது சரியான முறையில் படித்து வாழ வேண்டும் என்ற சிந்தனை மனதிற்குள் எழுகின்றது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இவர் நன்றாக இருக்கும் பொழுது பணம் வாங்கி அனுபவித்தவர்கள், இறப்புக்கு கூட வரவில்லை என்று கூறுவதும் அவன் காதில் விழுவதாகக் கதை முடிகின்றது. இது ஒரு அவலச்சுவை நிறைந்த கதைப் படைப்பாகவே அமைகின்றது.

அன்னைக்காக

இச்சிறுகதையும் மனதை பாரமாகும் கதையாகவே அமைகின்றது. இக்கதையின் கதாநாயகன் அருளானந்தர். இவர் ஒரு மருத்துவமனையில் பணியாளராகப் பணிபுரிகிறார். அவ்வூரிலுள்ள ஆறு முதல் அறுபது வயதுக் கிழவி வரை இவரை அனைவரும் கை ராசிக்காரர்கள் என்று சொல்லும்படியாக இவர் பார்க்கும் அனைத்து நோய்களும் குணமடைகின்றன. எவ்வித உணர்ச்சிக்கும் ஆளாகாமல் இன்ப துன்பங்களை வெளிக்காட்டாமல் நடுநாயகமாக விளங்கிய அவர், திருமண வயது கடந்து விட்ட பின்பும் திருமணமாகாத நிலையில் ஊராரின் வற்புறுத்தலுக்கு இணங்க திருமணம் செய்து கொள்கிறார். ஐந்து வருடங்கள் குழந்தை இல்லாமல் இருக்கின்றார். அப்போதும் அவர் உணர்ச்சிகளை, கவலையை, வருத்தத்தை வெளிக்காட்டவில்லை. ஐந்து வருடங்களுக்குப் பின்பு மனைவி கர்ப்பம் தரித்துக் குழந்தை பெற்றெடுக்கிறாள். மக்களுக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம் ஐயோ என்ற கூக்குரல் ஒருபக்கம். குழந்தை பிறந்தவுடன் மனைவியானவள் இறந்து விடுகின்றாள். ஊர் மக்கள் அனைவரும் கைராசிக்கார டாக்டர். இவருக்கு இவ்வாறு ஆகிவிட்டதே என வருத்தப்படுகின்றனர். ஆனால் அப்போதும் அருளானந்தர் எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் அமைதியாகவே காணப்படுகின்றார். பிறந்த குழந்தையின் பெயர் கண்ணன். அவன் பிறந்த உடனேயே தாயை விழுங்கிய பிள்ளை என்று ஏச்சுக்கும்

பேச்சுக்கும் ஆளாகின்றான். அனைவராலும் ஒதுக்கப்படுகிறான். அன்புக்கு ஏங்கி நின்றான். இருப்பினும் அவன் தன் அன்னையுடன் அடிக்கடி பேசிக் கொள்கிறான். மனதளவில் தாயே என்னை விட்டு இறந்ததும் குற்றம் நான் பிறந்ததால் நீ இருந்தாய் என்று ஊர் மக்களிடம் தூற்றுகின்றனர். இருப்பினும் நான் உனக்கு செய்ய வேண்டிய கடமைகள் நிச்சயம் செய்வேன் என்று அடிக்கடி பேசிக் கொள்கிறான். வளர்ந்து பெரியவனானதும் படிக்கின்றான். நன்றாக படித்து வேலைக்குச் செல்கிறான். ஆனால், அவனுடைய கனவு நாளாக அமைந்தது முதல் நாள் முதல் மாதச் சம்பளம். சம்பளப் பணத்தில் அன்னைக்காக மலர்வளையம் வாங்குகிறான். கல்லறைக்கு போக விரும்புகின்றான். மலர்வளையம் வாங்கிக்கொண்டு முச்சந்தில் எதிர்பாராமல் வந்த லாரியில் அடிபட்டு இறந்து விடுகின்றான். அவனுடைய கனவும் அதோடு சிதைகின்றது. இதை தந்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒரு இமைப் பொழுது நடந்துவிட்டது என அவர் வருத்தம் அடைகிறார். அவன் மகன் வாங்கிட்டு வந்த மலர் வளையத்தை அவனுடைய இறப்புக்கு வைப்பதாகக் கதை முடிகிறது. கண்ணன் இறக்கும் தருவாயிலும் அவனுடைய ஆன்மா பேசுவதாக எழுதப்பட்டுள்ளது தாயே என் குற்றம் என்ன பிறக்கும் பொழுதும் நான் உன்னைக் காணமுடியவில்லை. இறக்கும் பொழுதும் நான் உன்னை காண முடியவில்லை என்று கூறுவதாகக் கதை முடிகின்றது

மஞ்சள் கயிறு

இக்கதை தொடங்கும் பொழுது ஒரு கனத்த சூழ்நிலையை உருவாக்குகிறது வெள்ளிக்கிழமை என்றாலே திலகாவிற்கு வெறுப்பு உண்டாகிறது என்று தொடங்குகிறது கதை. அவள் விதவைப் பெண்ணாக காட்சி தருகிறாள். வெள்ளிக்கிழமை அனைத்து பெண்களும் மங்களகரமாகக் கோயிலுக்குப் போய் வரும்பொழுதும் சந்தோசமாக இருப்பதை கண்டும் வெள்ளிக்கிழமை வராமல் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். காரணம் திருமண நாளன்று அவளுடைய கதாநாயகன் செல்லப்பன் இறந்ததாகும் திலகாவின் கல்யாண நாள். கோலாகல ஏற்பாடுகள் நடைபெறுகிறது மேளதாளம் ஏற்பாடு செய்யப்படுகிறது. அலங்கார மேடை அமைக்கப்படுகிறது. திருமணத்திற்கு வேண்டிய அனைத்துச் சடங்குகளும் செய்வதாக ஆசிரியர் காட்டுகிறார். விடிந்தால் திருமணம் என்ற சூழ்நிலையில் நண்பனின் சதியால் விபத்தில் நல்லன் கதாநாயகன் இறந்து விடுகின்றான். இறந்து விடுவது போல மருத்துவமனை டாக்டர்கள் போலி நாடகம் ஆடுகிறார்கள் அவன் முழுமையாகக் குணம் அடைந்து, பின்பு சில மாதங்கள் கழித்து திலகாவிடம் நண்பன் நாகராஜன் தான் விபத்தை உருவாக்கி உள்ளான், என்ற உண்மையைக் கூறி, உன் கணவன் உயிரோடு தான் இருக்கிறான் என்று அவர்களிடம் நல்லவனை ஒப்படைக்கின்றனர். மீண்டும் அவர்களுக்குத் திருமணம் நடைபெறுகிறது. மஞ்சக்கயிறு இருப்பதாகக் கதை முடிவடைகிறது.

அவள்

சிறுகதையில் வரும் நல்லுசாமி என்பவன் அவ்வூரில் ஒரு மரியாதைக்குரிய நபரின் பிள்ளையாக அறியப்படுகிறான். நல்லுசாமி ஒரு தத்துப் பிள்ளையாக வருகின்றான். நல்லுச்சாமி அவ்வளவு ஒன்றும் அழகன் இல்லை; அசிங்கம் என்றும் சொல்ல முடியாது. ஒல்லியாக, கருப்பாக எடுப்பான தோற்றம் உடையவன் அல்ல. அதனாலேயே அவனுக்குப் பெண் அமையவில்லை. பல இடங்களில் பெண்தேடித் துவண்டு போயிருந்தார். இச்சூழ்நிலையில் அந்த ஊரில் ஒரு பெண் இருப்பதாகப் பார்க்கச் செல்கிறார்கள். அப்பெண் நல்லுச்சாமி ஏற்றுக்கொள்கிறாள். நல்லுச்சாமிக்குச் சந்தேகம். எப்படி என்னை ஏற்றுக்கொண்டாள். நான் தான் அழகு இல்லையே என்று நேரடியாகப் பெண்ணிடம் கேட்டு விடுகிறான். அதற்கு அப்பெண் அழகு என்பது முக்கியமல்ல. அக்கறை என்பது தான் முக்கியம். ஒருவர் மீது ஒருவர் அக்கறை செலுத்தினால் இல்வாழ்க்கை நிறைவடையும் என்று கூறிவிடுகிறார். இதைக் கேட்டு நல்லுச்சாமிக்கு மகிழ்ச்சி. மறுவாரமே

திருமண ஏற்பாடு செய்யப்படுகிறது. தோரணங்கள் கட்டப்படுகின்றன. மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன. இந்நிலையில் திருமணத்திற்குத் தேவையான பொருளை வாங்குவதற்கு நல்லுச்சாமி தன் நண்பன் நாகராஜன் வண்டியில் செல்கிறான் சென்றுவிட்டுத் திரும்பும் பொழுது வழிநெடுகிலும் நாகராஜனிடம் தன் வருங்கால மனைவியைப் பற்றியே பேசி புலகாங்கிதம் அடைகின்றான். அவள் ஒரு அதிசய பிறவி என்று கூறிச் சிரிக்கின்றான. திடீரென அவனுடைய சிரிப்பொலி நிற்கின்றது. வாயில் நுரை தள்ளப் பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்கின்றான். உயிர் மட்டும் இருக்கின்றது. என்ன நடந்தது என்று தெரியாமல் நாகராஜன் அவசர அவசரமாக வண்டியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றார். மலம் ஜலத்துடன்; படுத்துக்கிடந்த நல்லுச்சாமியை மருத்துவர் சோதிக்கின்றார். அவன் இறந்து விட்டதாக அறிவிப்புக் கொடுக்கின்றார். விடிந்தால் திருமணம் என்ற சூழ்நிலையில் வீடு அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும்பொழுது இச்செய்தியானது திருமண வீட்டை அலைக்கழிப்புக்கு உண்டாக்குகிறது. அவள் திக் பிரமை பிடித்தவள் போல் நிற்கின்றாள். மங்கல வாத்தியங்கள் அனைத்தும் ஒப்பாரியாக மாறுகின்றன. திருமணத்திற்குக் கொண்டுவரப்பட்ட மாலைகள் பிணமாலையாக மாறி அவன் உடம்பில் விழுகின்றன. அதிகமகிழ்ச்சியும் துக்கமும் மாரடைப்பு உண்டாகும் என்ற விதத்தில் நல்லுச்சாமி இறந்து விடுகின்றான். இந்த இழப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை இறுதியில் திருமண ஊர்வலம் செல்கிறது. அவள் வாசல் படி தாண்டாமல் இறுதி ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தூரத்தில் ஒரு பாடல் ஓசை. பாட்டு பாட வாயெடுத்தேன் என்ற பாடல் ஓசை கேட்கின்றது. அவள் கண்ணீர் நிறைந்த கண்களோடு நல்லுச்சாமியின் போட்டோவில் போடப்பட்டிருந்த மாலையை எடுத்துத் தன் கழுத்தில் அணிந்து கொண்டு அவனுக்காக அவள் வாழ எண்ணுகிறாள்.

ஆசை

இக்கதையில் நண்பர்கள் இருவரும் சென்னையில் உள்ள நாட்டிய அரங்கத்தில் நாட்டியம் காண்பதற்குச் செல்கின்றார்கள் அப்போது செயற்கையாக செய்யப்பட்டிருந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் அதிகமான காதலர் கூட்டத்தை அவர்கள் காண்கிறார்கள். அதில் பத்திரிகை நண்பருக்கு ஈடுபாடு செல்லவில்லை. அவர் பல விதத்திலும் எரிச்சலடைகிறார். இறுதியாக, ஒரு பக்கம் செல்கையில் திடீரென ஒரு மங்கலான ஒளியில் ஒரு பெண் கலைந்த கேசத்துடனும் உதிர்ந்த மலருடனும் கலைந்த ஆடையுடனும் இறந்து கிடக்கிறாள். பக்கத்தில் அவனுடைய காதலன் என்று எண்ணும்படியான ஒரு இளைஞன் கதறி அழுது கொண்டிருக்கின்றான். இவ்வாறு கதை செல்கின்றது. பத்திரிகை நிருபர் உண்மை என்ன என்று தெரிந்து கொள்வதற்காக அப்பெண்ணைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு, வீட்டிற்குச் சென்று விசாரிக்கிறார். விசாரணையின்போது பெரிய பணக்காரர் நீலகண்ட அவருக்கு ஒரே ஒரு குழந்தை பிரேமா அவள் செல்வச்செழிப்புடன் வளர்க்கப்படுகிறாள். திடீரென ஒருநாள் அவருக்கு காய்ச்சல் ஏற்படுகிறது படுத்த படுக்கையாக. ஒரு மாதத்திற்கு மேலும்பிழைப்பாளோ என எண்ணும்படி மருத்துவ சிகிச்சையில் இருந்து வருகிறாள். மருத்துவர் நீலகண்டன் மனைவிடம் மறைத்து ரகசியமாக ஏதோ கூறிவிட்டுச் செல்கின்றார். இந்நிலையில் பிரேமா பரிபூரணக் குணம் அடைந்தவுடன் அவர் உறவுக்காரர்கள் பெண் கேட்டு வருகிறார்கள் பெற்றோர்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லி தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் மிக விருப்பமாக பெண் கேட்கவே, வேறு வழியின்றி பிரேமா தன் காதலனை, காதலை வெளிப்படுத்த எண்ணுகிறாள். அதேபோல காதலனை பெண் கேட்க வரும்படிக் கூறவே அவனும் பெண்கேட்டு வந்து பிரேம்மாவின் பெற்றோரிடம் சம்மதம் வாங்குகிறான். அன்றிரவு அவர்கள் சென்னை நாட்டிய அரங்கத்திற்குச் செல்கின்றனர். இருவரும் தனிமையில் சந்தித்துக் கொள்கிறார்கள்.

விடிந்தால் திருமணம் என்ற சூழ்நிலையில் அவர்கள் இருவரின் சந்திப்பு உடல் வேட்கைக்குத் தூண்டவே இருவரும் உடல் உறவில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு ஈடுபடும் பொழுது பிரேமா திடீரென இறந்து விடுகிறாள். காரணம் யாதெனில் திடீர் ஏற்பட்ட காய்ச்சலால் அவளுடைய உடல் நிலை தாம்பத்தியத்திற்கு ஈடு கொடுக்காது என்ற தகவலைத் தான் மருத்துவர் அவளின் பெற்றோரிடம் கூறி விட்டுச் சென்றிருந்தார். அதனால் அவர்கள் பெற்றோர்கள் திருமணத்தைத் தடுத்து வந்தனர். பிரேமாவைத் தன் காதலைச் சொல்லும்போது இறைவன் விட்ட வழி என்று நினைத்தே பெற்றோரும் சம்பாதிக்கின்றனர். ஆனால், திருமணத்திற்கு முன்னரே இவ்வாறு ஏற்படும் என்பது அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மண ஊர்வலத்தில் செல்லவேண்டிய பிண ஊர்வலத்தில் செல்வது எண்ணி காதலன் கண்ணீர்விட்டு கதறி என அழுகின்றான் இக்கதை முடிவடைகிறது.

வாரிசு

செல்லம், மாணிக்கம் இருவரும் தோட்டத்தில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்கள். இருவருக்குமிடையே அளவுக்கு மீறிய அன்போடு கூடிய காதல் உருவாகியிருக்கிறது இருவரும் வேலை பார்க்கும் தளத்தில் அவ்வப்போது இடைவெளி கிடைக்கும் பொழுது ஒருவருக்கொருவர் கூடியும் ஊடியும் வருகின்றனர். சிறிது கால இடைவெளிக்குப் பின்பு இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர். இல்லற வாழ்க்கை நிறைவாக செல்கின்றது. காலங்கள் பல கடந்து செல்கின்றன. இருவருக்கும் வாரிசு உருவாகவே இல்லை. இதனால் மாணிக்கத்தின் தாய் தங்கமாள் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி, குழந்தைப்பேறு இல்லாததால் செல்லம்மாவைச் சிறிது சிறிதாக ஏச ஆரம்பிக்கின்றாள். மறு திருமணம் செய்துகொள்ளும்படி மாணிக்கத்தை வற்புறுத்துகிறாள். மலடி என வசை பாடுகிறாள். தாங்க முடியாத ஒரு காலகட்டத்தில் செல்லம்மா தூக்கிட்டு தற்கொலைக்கு முயல்கிறாள். மாணிக்கத்தால் காப்பாற்றப்படுகிறாள். மாணிக்கம் ஒரு முடிவெடுக்க டவுனில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று செல்லம்மா ஊசி போட்டுக்கொள்கிறாள். பத்து மாதங்கள் கடந்து சென்றதும் அழகான ஆண் குழந்தை. வாரிசைப் பெற்றெடுக்கிறாள். தங்கம்மா நாள் முழுவதும் குழந்தை உடனே கழிக்கின்றாள். தங்கம்மா மன நிலையைக் கண்ட மாணிக்கம் கோழிமுட்டை பொறிக்கும் கருவியைக் கற்பனை செய்து கொள்கின்றான். தன் தாயின் நிம்மதிக்காகத் தான் இவ்வாறு செய்ததாக எண்ணி கொள்கின்றான். முட்டைக்கும் இயந்திரத்ச்க்கும் உள்ள உறவு நிலை செல்லம்மாவுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்று எண்ணிக் கொண்டு, அடிக்கடி குழந்தையைக் கவனித்துக் கொள் என்று கூறுவதாக கதை முடிவடைகிறது. செயற்கைக் கருத்தரிப்பு மூலம் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளான்; உண்மையான வாரிசு உருவாகவில்லை என்பதே இக்கதையின் முடிவாக அமைந்தது.

அந்த உண்மை

இக்கதையில் கதாநாயகன் ராஜசேகரன் பலுதூக்கும் வீரனாகச் சித்திரிக்கப் பட்டுள்ளார். அதற்காகவே தன்னை ஆயத்தப்படுத்தி வருகின்றான். அவ்வாறான சூழ்நிலையில் அவனுக்குப் பாலுணர்வு மிக அதிகமாகி இன்ப வேட்கை ஏற்படுகிறது. அதை அவனால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் அவன் டாக்டரை ஆலோசனை செய்து தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளத் தூண்டப்படுகின்றான். அதேபோல பலமுறை இன்ப வேட்கையைத் தவிர்ப்பதற்கு ஊசி போட்டுக் கொள்கிறான். இந்நிலையில் உலக அளவிலான பலுதூக்கும் போட்டியிலும் வெற்றி பெறுகிறான். அவனுடைய ரசிகை மலர்விழி. இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. திருமணம் ஆக மாறுகிறது. திருமணத்தன்று முதல்நாள் இரவில் இந்த இன்பவேட்கை காரணமாக மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறான். மலர்விழி மயங்கினாள். இருந்தாலும் அவருடைய இன்ப வெறி அடங்கவில்லை. பின்பு தன்னைத்தானே நினைத்து வெட்கப்படுகிறேன். இவ்வாறு தன்

மனைவியைக் கொடுமைப் படுத்தப்படுத்தப் படுபதை எண்ணி ராஜசேகரன் மறுநாள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறான். தன்னுடைய குற்றம் காரணமாகவே தான் தற்கொலை செய்து கொண்டதாக டைரியில் எழுதி வைத்துவிட்டு இறந்து விடுகிறான். பூவும் பொட்டும் வளையலும் மங்களகரமாக வரும் மனைவியானவள் கலங்கி செய்வதறியாமல் மங்களம் இழப்பதாகக் கதை முடிவடைகிறது. இதைப் போன்றே புனிதவதி, திலகவதி கதைகளும் அவலச்சுவை உடையதாகவே முடிவடைகின்றன.

முடிவுரை

படைப்பாளி மு. தங்கராசன் தன் படைப்பில் மணமக்கள் திருமணம் முடியும் முதல் நாளோ அல்லது மறுநாளோ இருவரில் ஒருவர் இறந்து விடுவதாகவும் ஒருவர் இறந்ததுக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்வதாகவும் அமைத்துச்செல்கிறார். படைப்பு உளவியல் பார்வையின் அடிப்படையில் படைப்பாளி தன் வாழ்நாளில் தன் சுயவாழ்க்கையிலோ அல்லது தன் நண்பர் வாழ்க்கையிலோ ஏதோ ஒரு வகையில் பாதிப்பை உணர்ந்துள்ளாரோ என எண்ணத்தோன்றுகிறது. காரணம் ஒரு சிறுகதைத் தொகுப்பு முழுவதையும் ஒரே மாதிரியான கதைப் பின்னலையும் அவலச்சுவையையும் பதித்துச் செல்வது படைப்புக்கான காலச் சூழல் மற்றும் படைப்பாளி மனநிலையை ஒப்பிடத்தூண்டுகிறது.

பார்வை நூல்

மு.தங்கராசன். 'பூச்செண்டு' சிறுகதைக் தொகுப்பு, தை நூலகவெளியீடு-19. முதற் பதிப்பு-1985.

மணக்கும் மல்லிகை சிறுகதைத் தொகுப்பில் குடும்பச் சூழல்கள்

திருமதி ஜெயஜோதி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

மு. தங்கராசன்

இவர் தமிழாசிரியர். சிங்கப்பூரில் வசிப்பவர். அங்குள்ள கலைமகள் தமிழ்ப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழ்முரசு, தமிழ் நேசன் ஆகிய நாளிதழ்களில் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதிக் கொண்டு, தம் படைப்புகளை வெளியிட்டவர். பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். மணக்கும் மல்லிகை என்னும் இந்நூல் இவருடைய ஏழாவது படைப்பாகும்.

மணக்கும் மல்லிகை

தமிழர்களின் பண்பாட்டில் மங்களப் பொருட்களில் மல்லிகையும் ஒன்று. மல்லிகை என்றாலே அதன் மணம் நினைவுக்கு வரும். மல்லிகையைப் பிடிக்காதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு” என்பார் பேரறிஞர் அண்ணா. மணக்கும் மல்லிகை சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 9 சிறுகதைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாசத்தைக் கொண்டிருப்பவையாக அமைந்துள்ளன.

வாழையடி வாழை

மு. தங்கராசன் ஐயாவின் மணக்கும் மல்லிகையின் முதல் சிறுகதை. மனிதவாழ்வில் வாழையடிவாழை என்பதை பல நிலைகளில் பின்பற்றலாம். எவ்வாறு என்றால் சிறந்தவர்களின் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு உதாரணமாக வாழையடி வாழை என்ற சொல்லைப் பயன்படுத்துவர். வாழை எப்படி தன்னைக் கொண்டு தன்னுடைய இனத்தை அடுத்தடுத்து வளர இடம் கொடுக்கிறதோ, அதைப் போல் மனிதர்களும் வாழவேண்டும் என்பர்.

இக்கதையில் அன்னையர் தினக் கொண்டாட்டம் சிறப்பிடம் பெறுகின்றது. தாய் முத்தம்மாள், மகன் தனிகாசலம் பிறந்து ஐந்து ஆண்டுகளில் முத்தம்மா விதவையாகி விட்டாள். வேலைக்குப் போய்விட்டு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில், முத்தம்மாளின் கணவர் மண்லாரி மோதி மரணமுற்றார். இளம் வயதில் விதவையான முத்தம்மாள் தன்னுடைய குழந்தையை வளர்க்கும் நோக்கில் மறுமணம் செய்து கொள்ளவில்லை. மகனின் நலம் கருதி, தன்னுடைய ஆசைகளையெல்லாம் விட்டுத் தள்ளியதாய், சீதாலட்சுமி என்னும் பெண்ணை, தன் மகனுக்கு மணம் முடிக்கிறாள்.

இனிதே சென்ற வாழ்வில் சின்ன அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. தணிகாசலம் – சீதாலெட்சுமி தனிக் குடித்தனம் சென்றார்கள். அவர்களுடன் மனைவியின் தாயார் இருந்து வந்தார். சில ஆண்டுகள் சீதாலெட்சுமி சுகபிரசவம் ஆகி வீடு திரும்பினாள். தணிகாசலத்தின் மாமியார் ஆரத்தி எடுத்து வரவேற்றார்.

இக்காட்சிகளைக் கண்ட முத்தம்மாளின் மனம் வேதனைப்பட்டது. நமக்கும் ஒருநாள் வரும். அதுவரை பொறுமையாக இருப்போம் என்பது போல் இருந்தாள்.

தாயின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல், குடும்பம் என்றால் ஆயிரம் இருக்கும்; எல்லாவற்றையும் அனுசரித்துச் செல்வதுதான் வாழ்க்கை. தாயின் இதயத்தைக் கேட்டாலும் எடுத்துக் கொடுக்கும் மகனின் மனநிலையை வயதான இதயத்தை எடுத்துச் செல்லும் போது, வழியில் மரம் தடுக்கிவிட்டுக் கீழே விழும் மகனை, 'மகனே அடிபட்டுவிட்டதா' என்று கேட்கிறதாம். எப்போதும் தன்னுடைய மகனுக்காகவே வாழும் நிலையை இக்கதையின் எண்ணங்களிலிருந்து அறியலாம்.

வாழையடி வாழை கதையில் தாயின் அன்பினைப் புரிந்துகொள்ளாத தணிகாசலம் அன்னையர் தினவிழாவில் கலந்து கொண்டு என் அன்னைக்குச் செய்யவேண்டிய சிறப்பைச் செய்யவில்லையே என்று மனம் வருந்துகின்றான். இறுதியில் தன்னுடைய மகனை எடுத்துவந்து தன்னுடைய தாயின் காலில் போட்டு ஆசீர்வாதம் வாங்கச் செய்கிறான். தன் தாயின் கண்ணிரால் குழந்தை ஆசீர்வதிக்கப்படுவதை எண்ணி மகிழ்கின்றான்.

வெளிநாடுகளில் பிள்ளைகள் பெற்றோரை விட்டுக் கல்வி, வேலை, வியாபாரம் என்று செல்கிறார்கள். பெற்றோரின் உண்மையான அன்பைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில், தணிகாசலம் இறுதியில் தாயின் அன்பை உணரும் வகையில் கதையை முடித்துள்ளார் ஆசிரியர். "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்னும் புறநானூற்றுப் பாடலை எடுத்துச் சொல்லி, நம் உருவாக்கத்துக்கே அன்னைதான் மூலக் காரணம் உன்பதை உய்த்துணரும் வகையில் அமைந்துள்ளார்.

"அம்மா…! நாளைக்கு அன்னையர் தினம். அதிகாலையில் பூசை செய்தற்குரிய மாலைகள், உதிரிப்பூக்கள், பழங்கள் எல்லாம் வாங்கி வந்துவிட்டேன்." என்று கூறுவதிலிருந்து அன்னையர் தினத்தை முதன்மைப்படுத்துவதாகச் சிறுகதையில் கூறப்பட்டுள்ளது. (மு. தங்கராசன் - வாழையடிவாழை).

"சீதாலெட்சுமியின் பிடிவாதத்தால் தனிக்குடித்தனம் போக நேர்ந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிரிந்துப் போன தணிகாசலம் அதே வட்டாரத்தில் தனிக்குடித்தனம் நடத்திவந்தான். அவனுடன் அவன் மனைவியின் தாயார் இருந்துவந்தார்." (மு. தங்கராசன் - வாழையடிவாழை).

இதன் மூலம் தணிகாசலம் மனைவியுடனும், தாயாருடனும் வாழ்ந்து வருகிறார் என்பதை அறியமுடிகின்றது.

"ஒருதாய்க்கு ஒரே செல்வ மகன். அவனைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டாள் தாய்" என்று கூறுவதிலிருந்து திருமணத்திற்குத் தயாராக மகன் இருக்கிறான் என்பதை உணர முடிகின்றது. (மேலது– ப – 12).

கொடுமை

கொடுமை என்னும் சிறுகதை துரைசாமியின் குடும்பச் சூழலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும்.

துரைசாமியின் மனைவியின் பெயர் சாலாட்சியம்மாள். இவர் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர். இவருடைய மனைவி குடும்பப் பொறுப்புக்கு உரியவராகத் திகழ்பவர்.

“துரைசாமி அலுவலகத்திற்குப் புறப்பட்டு விட்டார். மஞ்சல் குங்கும மலர்ப் பொலிவோடு அவரை எதிர்க்கொண்டு, வாயில வரைவந்து வழியனுப்பி வைக்கும் வழக்கப்படியான கடமைநிறைவுக்குப் பின் சாலாட்சியம்மா கதவைத் தாழிட்டுக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார். திருமணம் செய்துகொண்டு வந்ததிலிருந்து சாலாட்சியம்மாளை வேலைக்கு அனுப்பியதில்லை. குடும்பப் பொறுப்பு மட்டுமே அவருக்கு” (மு. தங்கராசன் கொடுமை – ப – 17) என்று கூறியுள்ளார்.

“துரைசாமி தம்பதிகளுக்குக் கருணை உணர்வு மேலோங்கியது. இருவருக்கும் கண்கள் கலங்கிவிட்டன. கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல் உள்ளத்தால் ஒருமித்த கருத்துடைய வாழ்விணையர். இப்போது துரைசாமி தம்பதிகளின் விழிகள் பேசிக்கொண்டன.” (மேலது– ப – 22) என்று கூறுவதிலிருந்து கருத்து ஒருமித்து வாழும் தம்பதிகளாகத் திகழ்கின்றனர் என்பதை உணரமுடிகின்றது.

இலவுகாத்த கிளி

கமலக்கண்ணன், செந்தாமரை ஆகிய இருவரும் கணவன் மனைவியராகத் திகழ்பவர்கள். இவர்களுக்கு ஆதவன் என்ற ஒரு மகன் இருந்தான்.

“செந்தாமரையின் மகன் ஆதவன். அவனுடைய தந்தையைப் பற்றிக் கேட்டு அவளை நச்சரித்துக் கொண்டிருந்தான். அதனால் செந்தாமரை என்றைக்கும் இல்லாத அளவுக்கு அவனைச் சற்றுக் கடுமையாகவே கோபித்துக் கொண்டாள்” என்பதிலிருந்து செந்தாமரையின் மகன் ஆதவன் தந்தையைப் பற்றிக் கேட்கும் விதமாகக் கதாப்பாத்திரத்தினை அமைத்துள்ளார் ஆசிரியர் என்பது புலனாகின்றது. (மு.தங்கராசன் - இலவுகாத்தகிளி– ப- 28).

தியாகச் செம்மல்

டாக்டர் இராமசாமி, வழக்கறிஞர் நெடுஞ்செழியன் ஆகியோர் சிறுகதையின் கதாப்பாத்திரங்களாகத் திகழ்கிறார்கள்.

“வீட்டில் இருக்கும் மற்றவர்கள் மனைவிமக்கள் எல்லோரும் படுக்கைக்குச் சென்றுவிட்டாகள்.” என்பதிலிருந்து இராமசாமியின் குடும்ப அமைப்பினை அறியமுடிகின்றது. (மு.தங்கராசன் - தியாகச்செம்மல் - ப- 56).

தூளியும் தொட்டிலும்

இந்தச் சிறுகதையில் அன்புமணி, கமலாம்பிகை, செல்வநாதன், செல்வநாதனின் மனைவி அழகம்மாள் ஆகியோர் கதைமாந்தர்களாகத் திகழ்கின்றனர்.

“அன்புமணியின் அருமைத் துணைவியார் கனகாம்பிகை” என்று கூறுவதிலிருந்து கணவன் மனைவியராகத் திகழ்கின்றனர் என்பதை உணரமுடிகின்றது. (மு. தங்கராசன் - துளியும் தொட்டிலும் - ப -61).

“அன்புமணியின் மகன் செல்வநாதன். செல்வநாதனின் மனைவிதாயாரும் பேறுபெற்றிருந்தார்கள்” என்று கூறுவதிலிருந்து பெண்களின் நிலையினைக் காணமுடிகின்றது.

“அழகம்மாள் தமிழ்நாட்டில் ஒருநடுத்தரக் குடும்பத்தில் பிறந்து நல்ல பண்பு நலன்களோடு வளர்ந்தவள். வளர்க்கப்பட்டவள். அழகம்மாளின் தந்தையார் ஏதோ ஒரு கம்பெனியில் கிளார்க்காக வேலை பார்த்துவந்தார். குறைந்தபட்ச வருமானத்தில்

கண்ணியத்தோடு குடும்பத்தை நடத்திவந்தார். அழகம்மாள் ஒற்றைக்கொருமகள். அவளைப் பத்தாம் வகுப்புவரை அதாவது எஸ்.எஸ்.எல்.சி. வரைபடிக்கவைத்தார்" என்று கூறியுள்ளார். இதன்மூலம் அழகம்மாள் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் அவருடையமகள் பத்தாம் வகுப்பு படித்து முடித்து இருக்கின்றாள் என்பதனையும் அறியமுடிகின்றது. (மேலது., ப – 63).

தீர்வும் தீர்ப்பும்

இராஜசேகரன் என்ற கதாப்பாத்திரம் உறுதியான முடிவுகளை எடுப்பதில் வல்லவராகப் படைக்கப்பட்டுள்ளது. "இரஜசேகரன் லலிதாவையும் அவளது தாயார் மாதவியையும் தனியே அழைத்து வந்து அமரச் செய்து மூன்று வகையான தீர்வுகளையும் முறையே விளக்கமாகக் கூறினார்." என்பதிலிருந்து, மனைவி தாயார் என்று குடும்பமாக வசித்துவருபவர் இராஜசேகரன் என்பதும் தெளிவாகிறது. (மு.தங்கராசன், தீர்வும் தீர்ப்பும், ப -85).

எச்சிற்கனி

"பெரியதனியார் வீட்டில் இப்போது அவர் மட்டும் தன்னந்தனியராய் இருந்தார். உண்மையில் அந்தவீட்டில் அரங்கநாதர், அவர்தம் மனைவி ஆனந்தி, மகன் அரவிந்தன் ஆகியோர் இருக்கின்றனர்." என்று கூறுவதிலிருந்து ஒரு குடும்ப அமைப்பு முறை காட்டப்பட்டுள்ளது. (மு. தங்கராசன், எச்சிற்கனி– ப – 102).

சுடுபால் குடித்த பூனை

"தேவகி ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். உடை மாற்றிக்கொண்டு வெளியே வந்தாள். அம்மாவும், அப்பாவும் அமைதியாக உட்காந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்கள்." என்று கூறுகின்றார். இதன் மூலம் தாய் தந்தையர் என்ற குடும்பமுறை இடம்பெற்றுள்ள பாங்கு சிறப்பிற்குரியதாகும். (மு. தங்கராசன் - சுடுபல் குடித்த பூனை, ப – 126).

தொகுப்புரை

வாழையடி வாழை, கொடுமை, இலவுகாத்தகிளி, தியாகச் செம்மல். தூளியும் தொட்டிலும், தீர்வும் தீர்ப்பும், எச்சிற்கனி, சுடுபால் குடித்த பூனை என்ற ஒன்பது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பே மணக்கும் மல்லிகை.

சிங்கப்பூரில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற மனிதர்களின் குடும்ப அமைப்பினைப் பற்றி ஆசிரியர் கூறியுள்ள பாங்கு சிறப்பிற்குரியதாகும்.

தியாகச் செம்மல் என்னும் சிறுகதையில் இராமசாமியின் தியாகப் பண்பினை அறிய முடிகின்றது.

குடும்பம் என்ற அமைப்பு இல்லையேல் மனிதர்களின் வாழிடம் சிறப்படையாது என்பதை விளக்கிச் சொல்கிறார் ஆசிரியர்.

மு.தங்கராசனின் 'பதமியம்'

முனைவர் சை. ஜெஸிமா
உதவிப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, மேலூர்

முன்னுரை

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்" (நன்னூல் நூ.எ.128) என்று பவணந்திமுனிவர், 'பதம்' என்ற சொல்லை வரையறுக்கிறார். 'பதம்' என்ற சொல் பக்குவம், கூர்மை, மிதமான தன்மை (க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி ப.892) என்று பொருள்படும். நயம், முதிர்ச்சி, பொருளாழம் என்றும் பொருள்படக்கூடியது. சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் கவிதைகளும், கவிதைப்பதக் கையாளுகையும் பக்குவம், கூர்மை, மிதம், நயம், முதிர்ச்சி, பொருளாழம் மிகுந்ததாக உள்ளன என்று கூறினால் மிகையாகாது. எனவே, "எல்லாப் பதமும் 'பதம்' மிகுந்தனவே" என்று கூறும் அளவுக்கு மு.தங்கராசனின் கவிப்பதங்கள் உள்ளன. இவரின் பதம் மிகுந்த கவிச்சொற்கள், சொல்லின் இயல்பை உணர்த்துவதுடன், அதன் இயல்பும், பொருளும் காலத்திற்கேற்ப மெருகேறும் தன்மை வாய்ந்தன என்பதை உணர்த்துவது போல் உள்ளன' எனும் கருதுகோளை முன்வைத்து மு.தங்கராசனின் 'பொய்கைப் பூக்கள்' எனும் நூலில் இடம்பெறும் கவிதைகளை, "மு.தங்கராசனின் 'பதமியம்' எனும் தலைப்பில் இக்கட்டுரை ஆராய விழைகிறது.

நூல் - ஆசிரியர் - அறிமுகம்

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசன் 1960 இல் ஆசிரியப்பணியைத் தொடங்கியப் பன்முகப்பொறுப்பாளர். முப்பத்தொன்பது நூல்களை எழுதியவர். கணையாழி விருது (2008), வாழ்நாள் நல்லாசிரியர் விருது (2012) போன்ற விருதுகளைப் பெற்றவர். நாடகம், சிறுகதை, கட்டுரை முதலிய பல்துறையில் தடம் பதித்தவர். 1992இல் வெளிவந்த 'பொய்கைப்பூக்கள்' எனும் கவிதைத்தொகுப்பு இவரின் பத்தாவது நூல் ஆகும். இந்நூல் ஐம்பது கவிதைகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் கருத்துக்கள் அனைத்தும் மிகத் தேர்ந்த சொல்லாட்சியுடன் தமிழ்ப்பற்று, உலக அமைதி மீதான பற்று, வாழ்விற்கு வழிகாட்டும் அறிவுரைகள் என்ற கோணங்களில் விரிந்து கிடக்கின்றன. இவற்றுள், பதம்மிகுந்த கருத்துக்களைத் தன்னுள் கொண்ட பதங்களான 'குடி', 'நாணயம்', 'கண்ணாடி', 'நகைச்சுவை', 'ஆத்திரம்' ஆகியன கருதுகோளை நிரூபிக்க, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1. **குடி**

குடி' எனும் சொல் பெயர்ச்சொல்லாக நிற்பின், 'குடும்பம்', 'மக்கள்' என்ற பொருளைக் குறிக்கும். வினைச்சொல்லாக நிற்பின், 'அருந்து' எனும் ஏவல் வினையைக் குறித்து

நிற்கும். சமூக நோக்கில் கண்டால், 'கள் அருந்துதல்' எனும் வினையின் பண்பை உணர்த்தி நிற்கிறது. இவற்றை மு.தங்கராசனின் கவிதைகளில் காண முடிகிறது.

"குடி" என்ற கவிதையில் " 'குடி'யெனச் சொன்னால் குடியினைக் கெடுக்கும் கள்ளாம்' ... 'அருந்தெனக்' குறித்து நிற்கும்... 'குடும்பமாம்' என்றும் ஆகும்'... 'குடிமகன்' மாண்பு ரைக்கும்!... குடிப்பதால் மதிப்பு போகும்... 'குடிகுடி' யென்றே அன்னை குழந்தைக்கு வளர்ப்பார் ஊட்டி',.. அடி 'குடி' யாகும் போழ்தில் அமைந்திடும் "சரிவு" எல்லாம்!" (மு.தங்கராசன், பொய்கைப்பூக்கள், அடிகள்:1-5,8,11-ப.29) என்ற அடிகளில், 'குடி' என்ற சொல் பல்வகைப்பட்ட பொருளுடன் இருபது முறை கவிதையில் இடம்பெறுகிறது.

'குடும்பம்', 'அருந்து' 'பருகுதல்' என்னும் சொற்கள் முறையே பெயர், ஏவல், தொழிற்பெயர் ஆகிய பொருள்களை உணர்த்துவதுடன், 'குடியினைக்கெடுக்கும் கள் ' என்ற பொருளையும் கவிஞர் முதல் அடியிலேயே உணர்த்துகிறார். எதுகையாகக் 'குடி' என்பதுடன் 'அடி' எனும் சொல்லைப்பயன்படுத்தும் போது, 'குடி' குடிமகனின் வாழ்வில் 'அடி'ப்படையானால், வாழ்க்கை சரிந்துவிடும் (அடி 'குடி' யாகும் போழ்தில் அமைந்திடும் "சரிவு" எல்லாம்!") அதாவது, 'வாழ்க்கை' சீர்குலைந்துவிடும் என்று காலத்திற்கேற்ப அறிவுரை கூறும் தொடராக இவ்வடி இருந்தாலும், 'குடி' என்ற சொல்லைக் கண்டவுடன் 'சீர்குலைவு' என்று மேலும் ஒருபொருளை உணர்த்தும் சொல்லாகக் கவிஞரின் கவிதை அடிகளில் அடையாளம் காணமுடிகிறது. மேலும், பதத்தின் இயல்பும் பொருளும், காலத்திற்கேற்ப மெருகேறும் தன்மை வாய்ந்தன என்பதையும் இச்சொற்பயன்பாடு உணர்த்தி நிற்கிறது.

2. **நாணயம்**

'நாணயம்' என்பது 'பணத்தின் மதிப்பு', 'மனிதன் மதிப்பாக, கண்ணியத்துடன் நடந்து கொள்ளுதல்' என்று இருபொருள்படும். இச்சொல்லுக்குக் கழகத்தமிழ் அகராதி, 'உண்மை, உயர்வு, உரோசம், கட்டுப்பாடு, நேர்மை, வழக்கம், வாக்குப்பிசகாமை, முத்திரையிடப்பட்ட காசு, இயற்கை நிகழ்ச்சி, விலங்கின் மூக்கிலிடும் கயிறு' என்று பொருளுரைக்கிறது (ப.601). 'நா, நயம்' என்று பிரித்தால் 'பேசும்பொழுது நயம்மிகுந்த சொற்களைப் பயன்படுத்துதல்' என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு, நயம்மிகுந்த சொற்களைப் பயன்படுத்து வதால் எய்தும் நற்பெயரே 'கண்ணிய மிக்கவன்;', 'நாணயமிக்கவன்' என்பனவாகும். இவையனைத்தும் மனிதனுக்குக் கிட்டும் சமூக மதிப்புகளின் அளவுகோல்களைக் குறிக்கும் சொற்கள் ஆகும். கவிஞர் மு.தங்கராசன் நாணயம் என்பதற்குரிய பொருளை, "சொல்லிலே உறுதிகாக்கும் சோர்விலாப் பண்பு ஒன்று, சொல்லுமேல் சொற்கள் யாவும் சுகம்தரும் 'தென்றல்' ஒன்று, வெல்லுநற்சொல்லும் பாங்கில் விளைந்திடக் கூறும் ஒன்று... 'நா' நயம் இருந்தால் தானே நற்பண்பு தழைத்து ஊங்கும்" (அடிகள்:6-8,3:ப.30)என்ற அடிகளில் கூறுகிறார். இவ்வடிகள், கழகத்தழிழ் அகராதி கூறிய பொருள்களில் 'வாக்குப் பிசகாமை' என்ற பொருளை 'நாணயம்' என்ற சொல்லுக்குரிய

பொருளாக வரையறை செய்கின்றன. அதுமட்டுமின்றி, 'சொன்ன சொல்லிலே உறுதியாக நிற்றல்' என்பதே 'நாணயம்'. இதற்காகவே 'நா' நயம்' என்று சொல்லைப் பிரித்துப் பொருள் பெறவைக்கிறார். அவ்வாறு இருப்பது, பிறருக்குச் சுகத்தைத் தரும் சொல்லும் பாங்கில் அச்சொல் நமக்கும் வெற்றியைத் தரும் என்றும் கவிதையடிகள் பொருளுணர்த்துகின்றன.

இவற்றின் வழியாக, 'சொன்ன சொல்லிலே உறுதியாக நிற்றல்' என்ற பொருள்படும் 'நாணயம்' என்ற சொல், பிறருக்குச் சுகத்தைத் தரும், நமக்கும் வெற்றியைத் தரும்' என்ற பயன்பாடுகளை உள்ளார்ந்து கொண்டுள்ளது. 'நாணயம்' என்ற சொல்லின் பதத்தை (பொருளாழம், நயம்) நுகரும்படியாக இவரின் கவியடிகளும், பத ஆளுகையும் உள்ளன என்று கூறமுடிகிறது.

3. **கண்ணாடி**

'கண்ணாடி' எனும் சொல் கண்மேல் இடும் ஆடி, முகம் காட்டும் ஆடி என்னும் பொருள்களில் நாம் வழங்கி வருகிறோம். அதிலும், முகம் பார்க்கும் கண்ணாடி, தன்முன் இருக்கும் பொருளை அப்படியே காட்டும் தன்மை உடையது என்னும் அளவிலேயே இன்றுவரை, 'கண்ணாடி' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம். மு.தங்கராசனின் 'கண்ணாடி' என்ற தலைப்பிலான கவிதை சற்றுப் பொருளாழமிக்கக் கவிதையாக இருப்பதாக எண்ணத்தோன்றுகிறது. "நிறமிலாப் பொருளே யாகும்: நிறத்தினைக் காட்டி நிற்கும். கரவிலா நிலையில் நின்று கருப்பொருள் மூலம் காட்டும், அறமெலாம் போற்றும் நல்ல அகமதன் உணர்வு தன்னை பிரதியாய்ப் பலிக்கும் ஆடி பெரிதமை முகமே ஆகும்! திருவெலாம் பெற்றுத்தேரும் தெளிந்தநல் அறிவு தோன்றும். உருவெலாம் முகத்தில் தோயும் உன்னத உனர்வின் ஆக்கம் மருவிலா மனத்தின் தூய்மை, மாண்பொளிர் ஆகித் தேர்ந்து தரும் நிறைமுழுமைத் தோற்றம் தகுதிக் 'கண் ணாடி' ஆகும்" (அடிகள் 5-12:ப.33) என்ற அடிகளில் 'கண்ணாடி' பொருளின் நிறத்தையும் காட்டும்; நிறமற்றதையும் நிறமற்றதாகவே காட்டும். எனவே, கண்ணாடி 'கரவு' அற்ற பண்பை உடையது என்று அச்சொல்லின் பண்பைக் கவிஞர் உணர்த்தி இருக்கிறார்.

மேலும், 'மனத்தின் உணர்வுகள், அறிவின் தெளிவால் ஏற்படும் உன்னத உணர்வுகள், மனத்தின் தூய்மை ஆகிய அனைத்தையும் காட்டுவது கண்ணாடி என்றும் கூறுகிறார். இவ்வாறு, கண்ணாடியின் பண்பை உணர்த்தும் போக்கில் முகத்தையே கண்ணாடியாக உருவகப்படுத்தும் போக்கினையும் இறுதி அடிகளில் (நிறைமுழுமைத் தோற்றம் தகுதிக் கண்ணாடி ஆகும்) காணமுடிகிறது. அதாவது, "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதைப்போல், மனத்தின் உணர்வுகள், மனத்தூய்மை, அறிவின் தெளிவு முதலிய யாவற்றையும் முகம் எதிரொலிப்பதால், முகத்தையே கண்ணாடியாக உருவகப்படுத்தும் போக்கினையும் இக்கவிதையில் உணரமுடிகிறது.

தகுதிக் 'கண் ணாடி' என்று பிரித்துக்கூறுவதால், அறிவின் தெளிவு, உணர்வில் உன்னதநிலை, மனத்திலே தூய்மை முதலியன அடையப்பெற்ற கண்நோக்கு நிலையே பிறரைப்பற்றிச் சரியாக எடைபோடும் தகுதியை உடையது என்பதை உணர்த்தவே

“தகுதிக் ‘கண்ணாடி’ ” என்று குறிப்பிடுவதாகக் கருத இவ்வடிகள் இடம் கொடுக்கின்றன. எனவே, தகுதி உடைய கண்கள் சரியாக எடைபோடும் அதுவே ‘கண்ணாடி’ என்றும் புரிந்துகொள்ள இவ்வடிகள் இடம் தருகின்றன.

எனவே, ஒரு சொல்லுக்குப் பல கோணத்தில் பொருள் உணர்த்தும் மு.தங்கராக்ணின் பத ஆளுகைப் பாங்கு சிறப்பிற்குரியது. இவரின் ‘பத ஆளுகை’, சொல்லின் பொருளுக்குப் பதம் சேர்க்கிறது. ஒருசொல்லின் பண்பை மெருகூட்டி இருக்கிறது. ‘ஒருவரின் முகம்’ அறிவின் தெளிவு, உன்னத உணர்வு நிலை, மனத்தூய்மை முதலியவற்றைப் பிறருக்குக் கண்ணாடி போல் உணர்த்தும் என்றுணர்த்தி “ஆடிமுகம்” எனும் புதிய சொல்லை உருவாக்க வைத்திருக்கிறது. சிறந்த கண்நோக்கு நிலையே ‘கண்ணாடி’ எனும் புதுப் பொருளைப் பெற வைத்திருக்கிறது.

4. **நகைச்சுவை**

‘நகைச்சுவை’ என்பது சிரிப்பு, மகிழ்ச்சியால் விளையும் ஒருவகை மெய்ப்பாடு என்பது நாம் அறிந்ததே. இந்நகைச்சுவை, ‘எள்ளல், இளமை, பேதமை, மடன் என்ற நான்கின் காரணமாகப் பிறக்கிறது என்று தொல்காப்பியம் கூறுகிறது (நூ.எ.1198). அதாவது, பிறரின் ஏளனத்திற்கு ஆளாதல் (எள்ளல்), இளமையால் மடம்பட நடந்து சிரிக்கப்படுதல் (இளமை), அறிவின்மையால் பிறர் சிரிக்கும்படி நேர்தல் (பேதைமை), ஒன்றை மற்றொன்றாக மாற்றியுணர்தல் (மடன்) எனும் காரணங்களால் ‘நகைச்சுவை’ தோன்றுகிறது. மு.தங்கராசன் ‘நகைச்சுவை’ குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘நகைச்சுவை’ என்றே சொல்வார்: நகைத்திடும் வண்ணம் தோன்றா!, ‘நகைச்சு’வை என்ப தேபோல் நயமுளார் சிரித்து வைப்பார்! ‘நகை’ச்சுவை ஆணும் பெண்ணும் நமைந்திடக் காண்போம் இன்று! ‘ந’கைச்சுவை அமுதம் போற்றும் நன்மையில் சிலிர்ப்பார் உண்டே! ... சிரிப்பலை என்ப தொன்று செறிந்திடும் கருத்து நுட்பம்! சிரித்திடச் சொல்லும் ஒன்று சிந்தனைக்கேதும் இல்லா... கருப்பொருள் ஒன்றே ஆயின், கண்ணியக் கனிவும் வேண்டும் உருப்பொருள் உலையா தோங்கி உறுத்துவந் தூட்டும் நல்ல திருப்பொருள் திளைத்து ணர்ந்தே திவ்வியமாகச் சேர்த்து “மறு”ப்பொருள் வைத்துச் சொல்லல் மயங்குநகைச் சுவையே யாகும்” (அடிகள்1-6,9-12:ப.37). இவ்வடிகளில், இன்று, நகைச்சுவைக்காகப் பேசிய பேச்சில்; நகைச்சுவை இல்லாதபோதும் மெப்பனைக்குச் சிரிப்பர் என்று ‘ஒப்பனை நகைச்சுவை’யைத் தம் கவிதைகளில் கவிஞர் அடையாளம் காட்டுகிறார். உண்மையான நகைச்சுவை என்பது செறிந்த கருத்து நுட்பத்துடன், சிந்தனையைத் தூண்டும் ஒன்றாக, ஏதேனும் சிறந்த கருவைத் தன்னுள் கொண்டிருக்கும். இவையனைத்தும் இணைந்து மறைபொருளாக, மறுபொருளாக நம் சிந்தனையைச் சிலிர்த்து விடும். அதுவே, பிறரை மயங்கவைக்கும் நகைச்சுவையாக மிளிரும் என்று நகைச்சுவை பிறக்கும் காரணத்தைக் கவிஞர் குறிப்பிடுகிறார். இக்கருத்து, தொல்காப்பியம் கூறிய எள்ளல், இளமை, பேதைமை, மடன் முதலிய நான்குடன், ஒப்பிட்டுக் காணும் அளவுக்கு பதம் மிக்க பொருளைத் தன்னுள் கொண்டுள்ளது. மேலும், உண்மையான நகைச்சுவையின் பண்பையும் உணர்த்துகிறது. இவரின் பத

ஆளுகை பல்வகையான பொருளையும் தருகிறது. ('ந' கைச்சுவை அமுதம் போற்றும் நன்மையில் சிலிர்ப்பார் உண்டே!) நங்கையின் கையில் சமைத்த அமுதம் போன்ற உணவினை உண்டவர் அடையும் சிலிர்ப்பைப் போல நகைச்சுவை சிலிர்ப்பைத் தரும். அமுதத்தின் சுவையை, அதனை உண்டவரால் அறுதியிட்டுக் கூறமுடியாதது போல நகைச்சுவையின் மறைபொருளை உணர்ந்தவரின் உணர்வையும் அறுதியிட்டுக் கூறமுடியாது என்பன வற்றைத் தம் பதக்கோவையால் கவிஞர் மு.தங்கராசன் உணரவைக்கிறார். ஆணும் பெண்ணும் விரும்பும் நகை உயர்ந்ததல்ல. ('நகை'ச்சுவை ஆணும் பெண்ணும் நமைந்திடக் காண்போம் இன்று!) சிந்தனையைத் தூண்டும் செறிந்த கருத்து நுட்பம், சிறந்த கரு, மறைபொருள், மறுப்பொருள், சிந்தனைச் சிலிர்ப்பு, பிறரை மயங்கவைத்தல் முதலிய பண்புகளைக் கொண்ட நகைச்சுவையே உயர்ந்தது என்று "நகைச்சுவை" என்ற கவிதையில் கவிஞர் உணர்த்துவதை உணரமுடிகிறது.

இவற்றின் வழியாகக் கவிஞர், நகைச்சுவை பிறக்கக் காரணம், உண்மையான நகைச்சுவையின் பண்புகள் ஆகியவற்றை உணர்த்துவதுடன், கவிஞரின் தேர்ந்த பத ஆளுகை, சிறந்த சொற்கோவை, நகைச்சுவையை உணர்த்த சொல்லின் பதமறிந்து, பதம் பிரித்து உணர்த்தும் பதம் மிகுந்த கருத்துக்கள் ஆகியவற்றை உணர முடிகிறது.

5. **ஆத்திரம்**

தொல்காப்பியம், 'வெகுளி' பிறக்கும் காரணங்களாக "உறுப்பறை (உறுப்புகளை வெட்டுதல் போன்ற துன்புறுத்தும் செயல்கள்) குடிகோள் (குடிமக்களை வருத்துதல்), அலை (தடிகொண்டுஅடித்தல்), கொலை (கொல்ல முயலுதல்)" (நூ.எ.1204) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. வெகுளி பிறக்க வேறுசில காரணங்களையும் மு.தங்கராசன் தன் கவிதைகளில் கூறுகிறார். இதற்கு, 'ஆத்திரம்' எனும் கவிதையில்,' கோபம்' எனும் சொல்லைக் கவிஞர் பயன்படுத்துகிறார். "நேர்மையில் நில்லா ... நெறியதைக் காணும் போதில் நீர்மையில் நிற்பார் கோபம்" (அடிகள் 9-11:ப.66).' 'கரவுக்குள்' அணிந்த தாபம், கவிந்ததால் விளைந்த கோபம்" (அடிகள் 17-18:ப.67). தாபமே தாக்கும் நெஞ்சம் தகைந்ததால் பெற்ற தோல்வித் தூபமே துலங்கி நிற்கும் பண்பினில் தூய்மை நோக்கார் கோபமே என்றும் கொள்வார்"(அடிகள்.25-28:ப.67-) என்ற அடிகளில், நேர்மையில்லா நெறியில் நிற்பவரைக் கண்டாலும், வஞ்சனை, களவு, பொய், உலோபம் முதலியவற்றைக் குறிப்பிடும் 'கரவு' காரணமாகவும், துன்பத்தால் தாக்குண்ட நெஞ்சம் பெற்ற தோல்வி புகைவதாலும் கோபம் பிறக்கும் என்று குறிப்பிடுகிறார். 'கோபம்' என்பது மனிதப் பண்பின் தூய்மையைக் கெடுக்கும் என்பதை இதன் வழியாக உணர்த்துகிறார்.

கோபத்தில் இருப்பவர்கள், தன்னைத்தானே "தனிமையில் சபித்துக் கொள்வார்"(அடி.25:ப.67). "தன்னிலை மறைக்கும்... உறவைத்தாக்கும்... பணிவன்புபோக்கும்... இவ்வுலகு அழியக் காண்போம்"(அடிகள் 33-36:ப.68) என்று கூறுகிறார். கோபத்தை நீக்குவதால் அடையும் நன்மையைக் கோபத்தை அணைக்கத் தெரியும் உளம் படைத்தவர்களால் உளம் நிறைந்த அல்லல் அழிந்திடும் (அடி 27:ப.68) என்று

கூறுகிறார். கோபத்தினால் அடையும் தீங்கைக் கூறும் போக்கில், கோபத்தைத் தவிர்க்கும் வழிமுறைகளை, "முன்கோபத்தால் எழுந்ததே …பிரிவின் ஆக்கம்"… நாத்திரம் நயந்து போற்றல், நயந்திட வேண்டும் நாளும்"(அடிகள் 31:ப.68), "தன்கோ பத்தின் தன்மை தகுநிலை மீறாவண்ணம், சொன்கோ நயத்தைப் போற்றின், சுழல் 'பூ'ந்தரையே வெல்லும்…"உள்ளத் தோய்வு நனிந்திவண் பரிமாற்றங்கள் சென்றுமே கருத்தில் நேர்ந்தால் செறுபகை தானே நீங்கும்" (அடிகள்3-4:ப.66) என்ற அடிகளில் கூறுகிறார். அதாவது, கோபத்தின் அளவு மீறாமல், கோபம் கொள்ளத் தகுதியுடைய விடயத்திற்குக் கோபப்பட வேண்டும். கோபத்துடன் பேசும் பொழுது, உணர்ச்சி வசப்படுவதால், அவ்வுணர்ச்சிகளே பரிமாறப்படுகின்றன. உணர்ச்சிவசப்பட்ட பேச்சே பிறரின் கோபத்தைத் தூண்டுகின்றது. துன்பத்தை உண்டாக்குகிறது. அடுத்தவர் மனதிற்கு, உணர்ச்சி வசப்பட்டு செய்யும் செயல்கள் சென்றடையாமல், கருத்துக்கள் மட்டும் சென்றடைந்தால் பகைநீங்கும். மன அமைதி கிட்டும். எனவே, கோபத்தில் பேசும் பொழுது நாவிலிருந்து எழும் சொற்களைக் கோர்ப்பதில் கவனத்துடனும், சொல்லின் 'பதம்' உணர்ந்தும் பேச வேண்டும் என்று இவ்வடிகளில் கவிஞர் அறிவுறுத்துகிறார்.

இவற்றின் வழியாக, மு.தங்கராசன், கோபம் பிறக்கக் காரணம், கோபத்தால் அடையும் தீங்கு, அதைத் தவிர்ப்பதால் அடையும் நன்மைகள் முதலியவற்றைக் கூறும் போக்கில், கோபத்திலும் பதமுடையவற்றிற்குப் பதமானமுறையில் பதம் மிகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்திக் கோபப்படவேண்டும் என்று கோபப்படும் முறை, கோபத்தில் பேசும் நயம், நயமிகு வார்த்தைப் பயன்பாட்டுத்தேவை போன்ற கருத்துக்களை உணர்த்துவதாகக் கூறமுடிகிறது.

முடிவுரை

மு.தங்கராசனின் கவிச்சொற்கள் பதம் மிகுந்தனவாக உள்ளன. இவரின் கவிப்பத ஆளுகை, சொற்களின் இயல்பினை முழுமையாக நுகரும்படியாக இருப்பதுடன், சொல்லின் இயல்பும், பொருளும் காலத்திற்கேற்ப மெருகேறும் தன்மை வாய்ந்தன என்பதையும் உணர்த்தி நிற்கிறது. ஒரு சொல்லுக்குப் பல கோணத்தில் பொருள் உணர்த்தும் மு.தங்கராசனின் பத ஆளுகைப் பாங்கு, சொல்லின் பொருளுக்குப் பதம் சேர்க்கிறது. அதாவது, பக்குவம், கூர்மை, மிதம், நயம், முதிர்ச்சி, பொருளாழம் முதலிய பண்புகளை உடையது பதம்மிகுந்த 'சொல்' என்றுணர்த்தி இருக்கிறது. ஒருசொல்லின் பண்பை மெருகூட்டியும் இருக்கிறது. புதுப் பதத்தை உருவாக்க வைத்திருக்கிறது. புதுப் பொருளைப் பெற வைத்திருக்கிறது. சிறந்த சொற்கோவை, சொல்லின் பதமறிந்து, சொல்லைப் பிரித்து உணர்த்தும் பதம் மிகுந்த கருத்துக்கள் ஆகியவற்றை இவரின் கவிதைகளில் உணர முடிகிறது. கோபத்தில் பேசும் நயம், நயமிகுவார்த்தைப் பயன்பாட்டுத்தேவை போன்ற கருத்துக்களையும் உணர்த்தி நிற்கிறது.

மொத்தத்தில், இவரின் பத ஆளுகை, சொற்களின் பதங்களைத் தெளிவிக்கும் தன்மை, பதம்மிக்க சொற்பிரிப்புகள், சொற்கோர்ப்புகள் முதலியன கவிஞர் இயற்றிய அனைத்து நூல்களையும் இணைத்து 'மு.தங்கராசனின் பதமியம்' என்ற புது ஆய்வினை மேற்கொள்ள "பொய்கைப் பூக்கள்" எனும் கவிதைத் தொகுப்பு இடம்தருகிறது. இதற்கான, முன்னோடி ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

ஏட்டின் எழுதாப் பாடல் தொகுப்பாளி மு. தங்கராசன்: நாட்டுபுறத்தில் எனும் நூலை முன்வைத்து

முனைவர் த.ஸ்.ஸாம்தாஸ்
உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம்
கணியம்பாடி, வேலூர் மாவட்டம்

முன்னுரை

சிங்கப்பூர் மு. தங்கராசன் அவர்கள் சிறந்த எழுத்தாளரும், ஓய்வுபெற்ற மூத்த தமிழாசிரியரும் ஆவார். இவர் சிறுகதைகள் மட்டுமின்றி நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டவராவார். சிங்கப்பூர் நிகழ்ச்சிகளை அதிகம் தன் நூலில் பகிரும் ஆசிரியரும் ஆவார். இந்நூலை இவர் வித்தியாசமான முறையில் எழுத முற்பட்டுள்ளார் எனலாம்.

இறை வழிபாடு

சமயம் என்ற ஒன்று தமிழர்களிடம் எப்பொழுது தோன்றியது என்று அறுதியிட்டு கூற இயலாது. ஆனால், இறை நம்பிக்கை மக்களிடையே பண்டுதொட்டு இருந்து வந்துள்ளது. தொடக்க காலங்களில் விநாயகரை முதற் கடவுளாக எண்ணினர். எந்த ஒரு காரியம் செய்வதற்கும் முன்பு பிள்ளையார் சுழி போடுவது இயற்கை அதனை இன்றும் நம்மால் காண முடிகிறது. இந்நூலிலும் முதல் தலைப்பாக ஆசிரியர் இறை வழிப்பாட்டைத் தேர்வு செய்திருக்கிறார்.

உழவுத் தொழிலுக்கு வேண்டப்பட்ட தெய்வமாகக் கருதப்பட்டவர் விநாயகர் ஆவார். மஞ்சளை அரைத்துப் பிள்ளையார் பிடித்து வழிபட்டு, உழவர்கள் தங்கள் நிலத்தைச் சீர் செய்து, உழவுத் தொழில் செய்வது வழக்கம் என்ற செய்தியை ஆசிரியர் நமக்குத் தெளிவுப்படுத்துகிறார். இதனை,

> **“ஆனை முகத்தோனே ஐங்கரனார் தன்மகனே,**
> **பானை வயிற்றோனே பார்வதியாள்தன் மகனே”**

இப்படி, விநாயகருக்குப் பலவகையான பாடல்களை நாட்டுப்புற மக்கள் பாடியிருக்கிறார்கள் என்பது ஆசிரியரின் எழுத்து நயத்தில் நம்மால் உணர முடிகிறது.

சிறுதெய்வ வழிபாடுகளில் மிகவும் பிரபலம் வாய்ந்தது மாரியம்மன் வழிபாடு ஆகும். தன்னுடைய குறைகளை நிவர்த்தி செய்யும் விதமாக அம்மனிடம் வேண்டி வழிபட்டால் நன்மையே நடக்கும் என நம்பினர். தான் வேண்டியது நல்லபடியாக நடந்தேறினால் உனக்கு மாவிளக்குப் போடுகிறேன், கஞ்சி காய்ச்சி ஊத்துகிறேன், தாலி செய்து போடுகிறேன், தீச்சட்டி ஏந்துகிறேன், முடிக் காணிக்கை செலுத்துகிறேன் என்று வேண்டிக் கொள்வார். “யார் கடன் ஆனாலும் மாரி கடன் ஆகாது” என்பது பழமொழி. இப்படி வேண்டியது நடந்தேறிய பின் தன் காணிக்கையைச் செலுத்தவில்லை என்றால் அம்மன் வேறு விதமாகச் சோதனைகளைத் தருவாள் என நம்பினர்.

கிராமப்புறங்களில் அம்மைநோய் மாரியம்மனால் வருவதாக நம்பிக்கை உள்ளது. அம்மைநோய் கண்டவர்களுக்குச் செய்யும் சடங்கு முறைகளையும் ஆசிரியர் தெளிவுற எடுத்துரைக்கிறார்.

கலைமகள் என்று அழைக்கப்படுபவர் சரஸ்வதி. கல்விக்கு அதிபதியாக சரஸ்வதி தேவி கருதப்படுகிறார்.

> **“தாயே சரஸ்வதியே சதுர்முகத்தோன் தேவியரே”**

என்ற பாடல் மூலம் சரஸ்வதி பிரம்மனின் துணைவி என்பதை நம்மால் எளிதாக அறிய முடிகிறது. நாட்டுப்புறங்களில் கொண்டாடப்படும்

விழாக்களில் சரஸ்வதி பூஜை பிரசித்திப் பெற்ற ஒன்று. வீடுவீடாக எண்ணெய் சேகரித்து ஊர்க்கோவிலுக்கு கொடுத்து, பாடப்புத்தகங்களை வைத்து பூஜித்து, பிரசாதம் கொடுக்கும் வழக்கம் முன்னரே இருந்ததாக ஆசிரியர் கூறுகிறார். இந்து தெய்வங்கள் மட்டுமின்றி கிறிஸ்தவ மதத்தினரும் இறைவழிபாடு செய்ததனையும் குறிப்பிட்டுள்ளார்.

"மரியேஉன் காவலுல மனதிரக்கம் வைப்பாபே
காப்பாத்த வேணுமம்மா கன்னிமேரி மாதாவே
பாவிக்கிரங்கும் பரிசுத்த மாதாவே"

என்ற பாடல் வரியிலிருந்து, மாதா கன்னி மேரியிடம் எங்களை நீ தான் காப்பாத்தி வழி நடத்த வேண்டும் என்று மக்கள் முறையிடுகின்றனர். இவ்வுலகில் உள்ள எல்லோரும் ஒரே இனம் என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்திகிறார். "கடவுள் ஒன்றே" ஆனால் நம் வணங்கும் விதம் தான் வேறு. ஆகையால், எல்லா மதக் கடவுளையும் ஆசிரியர் விளக்க ஆசைப்பட்டாலும் அவருக்குப் போதிய பாடல்கள் கிட்டாத காரணத்தால் வேறு மத தெய்வங்களை அவர் குறிப்பிடவில்லை.

" கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

என்பதற்கிணங்க, பண்டுதொட்டு இன்று வரை கடவுள் நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே அதிகம் நிலவி வருகிறது என்பதை ஆசிரியர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

தாலாட்டு

குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டு ஆகும். தாலாட்டு நாட்டார் பாடல் வகைகளில் குறிப்பிடத்தக்கது. தாலாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இத்தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையை உடையன.

குழந்தை என்பது ஒரு தாயின் வரப்பிரசாதம். அக்குழந்தை அழுதால் தாயின் மனம் பதைபதைக்கும். தாலாட்டி, சீராட்டி வளர்க்கும் குழந்தையின் அழுகையை நிறுத்தக் கற்பனையால் பாடல்களைப் பாடுவது வழக்கம்

"மானே மருக்கொழுந்தே – கண்ணே நீ
மலர்விரிந்த மல்லிகைப்;பூ!
காட்டுக் குயிலே – கண்ணே நீ
கண்டெடுத்த பாட்டுக் குயில் ....."

குழந்தையை விலங்குகள், பறவைகள், பூக்களோடு உருவகப்படுத்தித் தாலாட்டு பாடல் பாடுவது இயற்கையே. இங்கு ஆசிரியர் மான், காட்டுக் குயில், மரிக் கொழுந்து, மல்லிகை ஆகியவற்றோடு ஒப்புமைப்படுத்தி ஒருதாய் பாடுவதாகக் கூறியுள்ளார்.

குழந்தை இல்லாத பெண்ணை "மலடி" எனக் கூறுவது உலக வழக்கு. அச்சொல் ஒரு பெண்ணின் மனதை எவ்வாறு குத்திக் கிழிக்கும் எனப் பிறர் எண்ணுவதில்லை. பெண் மனம் மென்மையானது; அம்மனதைக் காயப்படுத்த மிகச் சுலபமான சொல் "மலடி". இப்படிப் பெயரெடுத்த ஒரு தாய் தன் குழந்தையின் வருகையால் அப்பெயர் மறைந்ததை எண்ணி,

"மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த கண்ணோ?
எங்கள் குலம் மங்காமல் எதிர்த்தகுலம் ஏசாமல்
தங்கமணிப் பொக்கிஷத்தைத் தானாள வந்த கண்ணோ? ....."

என்று, தாலாட்டு பாடலோடு தன் உள்ளக் கருத்தையும் வெளிப்படுத்துவதாக நாட்டுப்புற பாடல்கள் அமைந்துள்ளன என ஆசிரியர் கூறுகிறார்.

ஒரு குழந்தைக்குத் தாய்மாமன் உறவு என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக சமுதாயத்தில் கருதப்படுகிறது. ஒரு குழந்தை பிறந்தது முதல் திருமணம் வரை முக்கியத்துவம் வாய்ந்த உறவு தாய்மாமன் உறவு. அப்படிப்பட்ட தாய்மாமன் குழந்தைக்குப் பல பொருட்கள் வாங்கி வருவது உண்டு. அதனை,

"பால்சங்கு போட்டால் - என் கண்ணே உன்
பவளவாய் நோகுமென்று
பொன்னாலே சங்கெடுக்கப்
போயிருக்கார் உன்மாமன் ....."

என்று, தாய்மாமன் பெருமை பேசுவதாக ஆசிரியர் தாய்மாமன் உறவை உயர்த்தி காட்டும் பாடலை இதில் சுட்டியுள்ளார்.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்பது உண்மையே. குழந்தையின் அழுகையைத் தணிப்பதற்கும் தூங்குவதற்கும் தாலாட்டுப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் கையிலிருந்த மிகப் பெரிய பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

காதல்

காதல் என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் ஒருவித அன்பு என்று சொல்லலாம். ஒருவர் தாய், தந்தை மீது கொண்டுள்ள அன்பிற்கும், காதலன், காதலி மீது கொண்டுள்ள அன்புக்கும் வித்தியாசம் உண்டு. சங்க இலக்கியங்கள் முதல் நாட்டுப்புற இலக்கியங்கள் வரை காதல் பரவியுள்ளதை நம்மால் அறிய முடியும்.

"காதலுக்கு கண்ணில்லை" என்பது பழமொழி. நாட்டுப்புறத் தலைவன் தலைவியின் கூந்தலையும், நடையையும் வர்ணித்துப் பாடுகிறான்.

"எண்ணெய்த் தலையழகி இருதோளும் பெண்ணழகி
திரும்பி நடக்கையிலே சீவன்பறி போகுதட ....."

உள்ளத்தில் எழும் எண்ணங்களையே பாடல்களாகப் பாடுவதில் கிராமப்புற மக்கள் தலைசிறந்தவர்கள் என்பதை இப்பாடல் வழியாக ஆசிரியர் நமக்கு உணர்த்துகிறார். மேலும், இப்பாடல்கள் பெண் அல்லது ஆணின் அங்க அமைப்புகளைக் கொண்டோ அல்லது அவர்களின் குணநலன்களைக் கொண்டோ பாடப்படுகிறது.

"இடுப்பு சிறுத்தவளே என்குணத்துக்கு ஏற்றவளே
நடைமிடுக்கு உடையவளே நான்வாரேன் உன்னைத்தேடி"

சிறிய இடையைக் கொண்ட பெண்ணே, தன் குணத்தோடு ஒத்தவளே, நன்னடையை உடையவளே, உன்னைத் தேடி நான் வருவேன். விடியற்காலையிலே வயலில் களை எடுக்கின்றாய். இப்பொழுது நான் நிற்கட்டுமா, செல்லட்டுமா என தலைவியைப் பார்த்துக் காதல் வசப்படக் கேட்பதாக அமைந்துள்ளது. எவ்வளவோ பாடல் இருக்க ஆசிரியர் இப்பாடலைத் தேர்வு செய்துள்ளது. அவரது கலைநயத்தைக் காட்டுகிறது.

காதல் அதிகமாகி தூக்கம் வராமல் தவித்த காதலனின் மனதை வெளிப்படுத்துவதாக,

"உறக்கம் பிடிக்கலையே
உன் மயக்கம் தீரலையே
பஞ்சு மெத்தை குத்துதடி
பாலும் புளிக்குதடி ....."

என்னும் பாடலை ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்தக் காதலால் உறக்கம் வராதது பலருக்கும் நிகழும் நிகழ்வு. இதனை அழகான பாடலாக வடிவமைத்தது சிறப்புமிக்க செயலாகும்.

பல்சுவை

பல்வேறு நயங்களில் பல்வேறு சுவைப்படப் பாடல்கள் விரவி வருவது பல்சுவை பாடல்கள் என்பர். பாடும்தோறும் புதுச் சிந்தனையைப் பிறப்பிக்கச் செய்யும் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள். இறைவனை வாழ்த்தும் வாழ்த்துப் பாடலோடு தொடங்கி கொஞ்சும் தாலாட்டுப் பாடல் வரை இடம் இவை பெறுகின்றன.

"மலட்டாறு பெருகிவர மாதுளையே பூச்சொரிய
புரட்டாசி மாதத்திலே பொன்போல் வந்தவனே ....."

என்று, பத்து வருடமாகக் குழந்தை இல்லாமல் இப்போது குழந்தைப் பாக்கியம் கிடைத்ததை எண்ணி மகிழ்வதாக இப்பாடல் அமைகிறது. ஒரு குடும்பத்தில் குழந்தை என்பது முக்கியமான விஷயம். குடும்பம் தழைக்கக் குழந்தை முக்கியம் என்பதை இப்பாடல் வழியாக நமக்கு புலப்படுகிறது.

கிராமப்புறங்களில் காது குத்தும் நிகழ்ச்சி ஒரு சிறப்பு மிக்க விழாவாகும். கிராமப் புறங்களில் எந்த ஒரு விழாவானாலும் அதில் பாடல்கள் முக்கியத்துவம் பெறுவது இயல்பு.

“மாம்பிஞ்சு கொண்டு மதுரை சிமிக்கி கொண்டு
காதுகுத்த வாராக கனகமுடி உங்களம்மான் - என்ராசா..”

இவ்வாறு, காதணிவிழா எவ்வாறு நடைபெறும் என்பதையே ஒரு பாடல் மூலம் தெளிவாகப் பாடியுள்ளனர்.

தாலாட்டுப் பாடலைக் கேலி, கிண்டல் மூலம் வித்தியாசமான முறையிலும் பாடியுள்ளனர் என்பதை,

“கோர்ட்டுக்குத் தொந்து குறிச்சிமேல் உக்காந்து
கேசை விசாரிக்கும் கெவர்னரோ உங்களப்பா? .....”

என்ற இப்பாடல் மூலம் அறிய முடிகிறது. நேரத்திற்குத் தகுந்தாற் போல பாடல்களை மாற்றி அமைப்பவர்கள் கிராமப்புற மக்கள் என்பதை அறிய முடிகிறது. இன்றைய காலத்தில் இப்பாடல்களைக் கேட்பது மிகவும் அரிதாக உள்ளது.

உறவு

நாட்டுப்புற மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழ்பவர்கள். அவர்களது உறவு முறை பரந்து விரிந்து காணப்படுவது இயல்பு. உறவுமுறையே அவர்களது வாழ்வின் அடையாளமாகத் திகழ்ந்தது. ஆனால், நகர்ப்புறங்களில் இவ்வாறான உறவுமுறை தற்போது குறைந்து வருவதை நம்மால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

ஒரு பெண்ணின் காதலை உணர்ந்த சுற்றத்தார் சூசகமாகப் பாடல்களைப் பாடி வந்தனர். “அசடனையும் அறிவுக் கூர்மை உள்ளவனாய் மாற்றி விடும் காதல்” என்பது சார்லஸ் டிப்டின் கருத்து. காதலித்த காதலனே தன்னைப் பெண் கேட்க வந்த பெருமையைப் பாடும் பாடல்களையும் நாட்டுப்புற மக்கள் பாடியுள்ளனர்.

“கன்னிக் கிசைந்த கணவர்தான் என்றுசொல்லி
மங்கைக் கிசைந்த மணவாளர் என்றுசொல்லி ...”

என்னும் பாடல் மூலம் விளக்கியுள்ளனர். திருமணத்தில் ஜாதகம் பார்த்தல் என்னும் நிகழ்ச்சி முதல் திருமணம் நடந்தேறும் வரை ஒவ்வொரு நிகழ்வும், உறவுமுறையும் பாடல்களாகப் பாடியுள்ளனர் என்பதை ஆசிரியர் அழகாக விளக்கியுள்ளார். இன்றைய காலத்தில் எந்த ஒரு நிகழ்விலும் உறவுகள் அனைவரும் கூடிச் சிறப்பிப்பது கடினமாகவே உள்ளது.

முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு மக்களால் பாடப்பட்டனவ. இதற்கான பாடல்களைத் தொகுப்பது மிகவும் அரிய செயல். சிங்கப்பூர் மு. தங்கராசன் அவர்கள் தன்னுடைய கடின முயற்சியால் இப்பாடல்களைச் சேகரித்துள்ளது நம்மால் உணர முடிகிறது. இவரின் தமிழறிவும், இலக்கியப் புலமையுமே இவரது படைப்புக்குக் காரணமாகிறது.

மு.தங்கராசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

திருமதி அ.ஸ்ரீ ஜனனி
உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை)
நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை

முன்னுரை

மு.தங்கராசன் சிங்கப்பூரில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். அவர் "சூரியகாந்தி" என்ற தம் கவிதைத் தொகுப்பில் மக்களுக்குத் தேவையான சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளைப் படைத்தளித்துள்ளார். அவற்றைப் பகுத்துணர்ந்து, அவற்றில் இடம் பெறும் சமுதாயச் சிந்தனைகளை எடுத்துரைத்து, அதன்வழி சமூகம் நலம் பெற விழைவதாக இக்கட்டுரை அமைகிறது.

தியாக உணர்வு

நாட்டின் சுதந்திரத்திற்காகத் தொண்டாற்றியவர் பலர். அவர்களைப் பாரதியார்,

"வீரசுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ? " [1]

எனக் கூறுகிறார். மேலும், சுதந்திரத்தைப் பெறப் பல சித்ரவதை, குண்டடிகள், தியாகவடு பெற்றவர்கள், போராட்ட வீரர்கள் என்பதைப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்,

"சிறை வாழ்க்கை வேற்றாரின் கொடிய சட்டம்
சித்ரவதை குண்டடிகள் யாவும் தாங்கித்
தேகமெலாம் தியாகவடுப் பெற்று நின்
சிங்கங்காள்!"[2]

என்று கூறியுள்ளார்.இத்தகைய போராட்ட வீரர்களை நினைவுபடுத்தி, அனைவரும் போற்றவேண்டும் என மு.தங்கராசன்,

"அடிமைத்தளை விலங்கொடித்து அருமை நாட்டை
அம்மண்ணுக் குரியோரே ஆளச் செய்ய
படிமைத்தளம் அமைத்திங்கு பாரே போற்றும்
படியிங்கு உருவாக்கும் படையைத் தோற்றி
விடிமைக்கு வழி வகுத்த வீறு பெற்றார்.
விளைபயனை நாடறிந்து விதிர்ந்து போற்றும்!" – (ப.26)

என்ற கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார்.

அரசியல் முன்னேற்றம்

அரசியலில் உள்ளோர் சிறப்புற ஆட்சி செய்திட்டால் நாடு பல வகைகளில் முன்னேற்றம் பெறும், உயர்வடையும்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்ற வைக்கப் படும்"[3]

என்பது வள்ளுவர் கருத்து. இதனையே மு.தங்கராசன் அவர்களும்,

"முறையென்றும் பிறழாத முதிர்ச்சி யோடு
முன்னின்று நாடாள்வோர் முறைமை ஆட்சி

நிறையென்னும் நற்குடியால் போற்றப் பட்டால்
நெடிது வளர் அரசுவர லாற்றில் நிற்பார்"
(ப.26)

என முறை பிறழாமல், நல்ல அறிவு பெற்று முறையான ஆட்சி செய்பவர், நல்ல குடிமக்களால் 'நிறைவான பணி செய்யக்கூடியவர்' எனப் போற்றப்பட்டால், அரசியல் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்பார் என்று மு.தங்கராசன் அவர்கள் தம் கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார்.

"காட்சிக் கெளியன் கடுஞ் சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"[4]

என வள்ளுவப் பெருந்தகை, மக்கள் காண்பதற்கு எளியனாகவும், கடுஞ்சொற் கூறாதவனாகவும் இருந்தால், அத்தகைய மன்னனை உலகோர் போற்றுவர் என்பார். ஆனால், மு.தங்கராசன் அவர்களோ, குறை காணாத அரசியல் மற்றும் கறை படியாத கரங்கள் கொண்ட கண்ணியமானவரை மக்கள் அனைவரும் போற்றுவார்கள் என்று தம் கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார். இதனை,

"குறை காணா அரசியலின் குன்றம் என்றே குவலயத்தார்
புகழ்ந்திடுவார்குன்றாப்போற்றல்
கறையென்றும் படியாத கரங்கள் கொண்ட கண்ணியரைக் காண்மக்கள் கனிந்து போற்றும்!" (ப.26)

என்ற கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

கல்வி முன்னேற்றம்

கல்வியில் முன்னேற்றம் காண வேண்டியது இன்றியமையாததாகும். கல்வி முன்னேற்றமடைந்த நாடு சிறப்புறும். கல்வி கற்றவர் சொல்லையே அறிஞர் ஏற்றுக்கொள்வர் என்பார் வள்ளுவர்.

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார் "[5]

என்று கூறும் கருத்தை மு.தங்கராசன் அவர்கள், இளைஞர்கள் கல்வி கற்கும் கடமையை அறியாது உள்ளார்கள் என,

"கடமையை உணரா நெஞ்சம்
கல்வியில் நாட்டம் இல்லை!" – (ப.28)

என்ற தம் கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார்.

பணிவுடைமை

பிறரிடம் பணிவாக நடப்பது எல்லோர்க்கும் நன்மை தரும். செல்வர்கள் பணிவாக நடப்பது, செல்வமாகிப் பெருமையைத் தரும் என்று கீழ்வரும் கவிதைகளில் பதிவு செய்துள்ளார்,

"சிறப்புடன் செழிக்குங் காலை
நல்லுளப் பண்பாம் சால்புப்
பணிவன்பு நயத்தல் வேண்டும்"
(ப.28)

இதனையே வள்ளுவப் பெருந்தகை,
"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"[6]

என்று தம் குறளில் கூறியுள்ளார்.

பொதுநலச் சிந்தனை

வீட்டுக்கு மட்டுமே உழைத்து வாழாமல், நாட்டுக்காக உழைத்து, நல்லோர்கள் வாழ்ந்ததனால், நல்ல பயனை அனைவரும் அடைந்திட முடிந்தது என்று கீழ்வரும் கவிதை வரிகளில் புலப்படுத்துகிறார் மு.தங்கராசன் அவர்கள்.

"வீட்டுக்கு மட்டுந்தான் விழையும்பல்லோர்
வெறுமையினை எதிர்ந்திடுவார்

நாட்டுக்கு உழைத்திட்ட நல்லோர் என்றும்
நானிலமே புகழ்பாட நண்ணித் தேர்வார்"
– (ப.26)

சாலைப் பாதுகாப்பு

சாலைகளில் பயணம் செய்யும் போது, மிகுந்த கவனமுடனும், எச்சரிக்கையாகவும் செல்ல வேண்டும். சாலையைக் கடக்க அனைவருக்கும் சமமான நெறியைச் சாலைகளிலுள்ள பாதுகாப்பு விளக்குகள் காட்டுகின்றன. அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்பதை மு.தங்கராசன் தம் கவிதை வரிகள் புலப்படுத்தும்,

"சாலையைக் கடந்து செல்லும்
சமத்துவ நெறியைச் சொல்லும்
வேலையை முறையாய்ச் செய்யும்
விளங்குபொன் எழிலாய் நிற்கும்
சாலைகள் பாது காப்புச்
சாரணி விளக்கு காட்டும்" – (ப.31)

உழைப்பின் மேன்மை

உழைப்பவர் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை. உழைப்பிற்குச் சிறப்பு உண்டு. என்பதை வள்ளுவப் பெருந்தகையும்,

"வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைகுறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு "[7]

என்பார். இதனையே மு.தங்கராசன் அவர்களும், உழைப்பினால் வெற்றி அடையலாம், உழைப்பவரை என்றும உளப்பூர்வமாக வாழ்த்த வேண்டும். உழைப்பவர் இவ்வுலகில் இல்லையென்றால் உற்பத்தி என்பது இருக்காது என்பார். இதனைக் கீழ்வரும் கவிதை வரிகள் மூலம் அறியலாம்.

"உழைப்பினால் ஒளிரும் வெற்றி
உன்னதம் அடையக் காண்பீர்
உழைப்பவர் தம்மை என்றும்
உளப்பூர்வம் வாழ்த்த வேண்டும்! (ப.35)

மனிதநேயம் போற்றல்

மனிதநேயம் உடையவர் உழைப்பால் இவ்வுலகைக் காப்பர். உயிர்களிடத்தில் அன்பு மனிதநேயத்தை உருவாக்கும் என்பதை வள்ளுவப் பெருந்தகை,

"என்பி லதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம்"[8]

என்பார். இதனையே மு.தங்கராசன் அவர்களும்,

"விளைபயன் ஏதும் இன்றி
உழன்றிடும் சமுதா யத்தை
ஒருகணம் எண்ணிப் பார்த்து
அழற்படு புழுவா யீங்கு
துடித்தநல் ஆன்ம நேயம்! (ப.35)

என, எந்த பயனும் இல்லாது இருக்கும் சமுதாயத்தை நினைத்து, வருந்தி நன்மை விளைய தீயில்படும் புழுவாய் துடிப்பதுதான் ஆன்ம மனிதநேயம் என்று பதிவு செய்துள்ளார்.

குடிப்பழக்கம் விட்டொழித்தல்

குடிப்பழக்கத்தினால், சான்றோர் பழிக்கு ஆளாவார், புகழை இழப்பார் என்பதை,

"உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார் "[9]

என வள்ளுவப்பெருந்தகை கூறியதனை, மு.தங்கராசன் அவர்களும்,

"குடித்திடும் எல்லோ ருக்கும்
குடும்பமும் இருப்ப துண்டு
குடிப்பதால் மதிப்பு போகும்!" (ப.35)

என்று தம் கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார்.

தொகுப்புரை

மு.தங்கராசன், தம் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகளாக, சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாக உணர்வைப் போற்ற வேண்டும்; அரசியல்வாதிகள், முறைபிறழாது, குறையில்லாது, கறைபடியாத கரங்களோடு ஆட்சி செய்ய வேண்டும். இளையோர்க்குக் கல்வியில் நாட்டம் வேண்டும்; சாலை பாதுகாப்பும், பணிவன்பும் வேண்டும்; குடிப்பழக்கம் பழியைத் தரும்; சமுதாயத்தில் நன்மை விளைய ஆன்மநேயம் வேண்டும் என எடுத்துரைத்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

பாரதியார் பாடல், சுதந்திரத்தின் பெருமை, ப.56.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் பாடல்கள், ப.439.

திருக்குறள், குறள் எண்: 388, ப.80.

மேலது., குறள் எண்: 386, ப.80

மேலது., குறள் எண்: 404, ப.84

மேலது., குறள் எண்: 125, ப.26

மேலது., குறள் எண்: 612, ப.126

மேலது., குறள் எண்: 77, ப.16

மேலது., குறள் எண்: 921, ப.188

மு. தங்கராசனின் 'மாதுளங்கனி' கவிதை உணர்த்தும் சமூகச்சிந்தனை

முனைவர் இர. ஷீலாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

முன்னுரை

கவிஞரின் உலகளாவிய சிந்தனைகள் இவ்வுலக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத தேவையாகி விட்டது. சமுதாயம் மலர வேண்டுமெனில் தனி மனிதனும் தன் வாழ்க்கையில் மலர வேண்டும். அந்த வகையில் இக்கவிதைத் தொகுப்பில் ஆசிரியர் பல்வேறு நிலைகளில் நின்று சமூகம் வளர நாடு, குடும்பம், தனி மனிதன் என ஒவ்வொருவரும் வளர வேண்டும் என்ற நிலையில் இக்கவிதையில் தத்துவங்களைத் தன் சிந்தனைத் திரட்டாகத் தந்துள்ளார்.

மனித வாழ்க்கை சிறப்புற்றுத் திகழ வேண்டுமெனில் தனிமனிதன் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பல்வேறு நிலைகளில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை ஒன்றிணைக்கும் நோக்கில் தன்னுடைய குறிக்கோள், விடாமுயற்சி, நேர்மை, இறுமாப்பு நீக்குக, ஆணை பலம், இலாப நட்டம், வீடும் நாடும் முதலான கவிதைகளின் வாயிலாகச் சமூகச் சிந்தனைகளைச் சமூக வளர்ச்சிக்கு அவர் எடுத்து இயம்பியதைக் காண முடிகின்றது.

வீடும் நாடும்

ஒரு தனி மனிதன் என்பவன் சமுதாயத்தை வளர்த்து எடுக்க வேண்டுமெனில் அவன் சில பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது என்பதனைத் தனது கவிதை வாயிலாக ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

"இல்லத்தின் நற்பண்பு இனிமை போற்றி
இயைந்துவரும் நற்குடும்பம் என்னும் வீட்டில்
நல்லறத்தின் நற்பயனாய் நயந்து தோன்றும்
நன்மக்கட் பேறுகளே நாட்டின் செல்வம்"

ஒரு தனிமனிதன் என்பவன் இல்லறத்தைச் சிறப்பாக நடத்தும் இயல்பு பெறுகின்றபோதே அவன் நாட்டில் சிறப்புற்றுத் திகழ முடியும் என்கிறார். மேலும்,

"சான்றோரால் புகழ்பாடும் 'சதகம்' பெற்றுச் சரித்திரத்து நாயகராய்ச் சமைதல் வேண்டும்"

என்று கூறுவதன் வாயிலாக, சான்றோராகத் திகழ்வதனைச் சுட்டிக்காட்டுகின்றார். இல்லறம் சிறப்பாக இருக்கும் குடும்பங்களே வீடுகள் ஆகும். அக்குடும்பத்தால்தான் நாட்டின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என்பதனையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுவதனை நாம் அறிய முடிகின்றது.

குறிக்கோள்

ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாதது போல் குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வெறும் வெற்று வாழ்க்கையாகி விடும். எனவே, நம்

வாழ்க்கையில் நாம்செய்யும் ஒவ்வொரு செயலும் ஓர் இலக்கு நோக்கிய குறிக்கோள் கொண்டதாக இருக்க வேண்டும். எப்படியும் வாழலாம் என எண்ணாது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் திட்டங்கள் தீட்டி நாம் வாழும்போது வாழ்வு சிறப்படையும்.

"குறிக்கோளை இலட்சியமாய்க் குறித்துச் சொல்வார்
கொள்கையதை நோக்காகக் கொள்ளல் வேண்டும்
குறிக்கோளைச் செயலாக்கும் திட்டம் தீட்டும்
குற்றமிலா அரசியலார் வெற்றி காண்பார்"

மேலும், தனிமனிதனுக்கு என்னென்ன குறிக்கோள் இருக்க வேண்டும் என்று உணர்த்தும் ஆசிரியர் இலக்குகளை அடைய என்னென்ன குறிக்கோள்கள் தேவை என்பதனையும் தமது கவிதை வாயிலாக வெளிப்படுத்துகின்றார். குறிக்கோள் உடையார் ஆணவம் என்னும் உச்சியில் ஏறிக் கர்வம் கொள்ள வேண்டியதில்லை என்பதனையும் எடுத்துரைக்கின்றார். இலக்கு நோக்கி குறிக்கோளை அடைய விரும்பும் ஒவ்வொருவரும் தனது நிலையை எண்ணி, அதற்கு ஏற்றாற்போல் இலக்கை நிர்ணயிக்க வேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்துகிறார். அவ்வாறு செய்யாதவர்களின் கதி என்னாகும் என்பதனை வரலாற்று நிகழ்வு கொண்டு அச்சுறுத்துகின்றார்.

"தன் வலிமை தானறிந்து குறிக்கோள் உற்றுத்
தக்கதொரு நிரலமைத்துத் தனகத்து; மாற்றான்
தன் வலிமைத் தரமறிந்து செறியும் தன்மை
தானறிந்து பொருதுதலே இலகென்றாகும்
பின் வலிமை தானறிந்து குறிக்கோள் கொள்ளார்
புன் வலிமை தனக்குண்டு என்னும் போக்கிப்
பிறர் வலிமை என்றென்றும் பொய்த்துப் போகும்
புவனத்தின் சாத்திரங்கள் பொலிந்துணர்த்தும்"

என்று தனது திறமை அறிந்து குறிக்கோளுடன் இலக்கை நோக்கி வெற்றி பெற வேண்டும் என்பதன் மூலம் சமுதாய மக்களின் நிகழ்வை எடுத்தியம்புகின்றார்.

தனிமனிதன் செயல்

ஒரு தனிமனிதன் எவ்வாறெல்லாம் குடும்பம் நலம் பெறப் பாடுபட வேண்டும். சமுதாயம் நலம்பெறப் பாடுபட வேண்டும் என்பதனைத் தனது விடாமுயற்சி, நேர்மை, ஆணைபலம் முதலான கவிதை வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்திச் செல்வதனைக் காண முடிகின்றது.

இவருடைய கவிதைகள் அனைத்தும் தனிமனிதனை உலகளாவிய சிந்தனைக்கு இழுத்துச் செல்வதனையும் நாம் காணலாம்.

"தளர்வில்லாத் தொடர்முயற்சி வெற்றி தன்னைத்
தரணியின் வரலாறு தரித்துச் சொல்லும்"

கொள்கையிலே பிடிப்பு உள்ளோர் குன்றுபோல் உயர்ந்து நிற்பார் என்பதனையும், முயற்சியின் பயனால் கொள்கையில் சிறந்து விளங்குவார் என்பதனையும் அதன் மூலம் வெற்றி கிட்டும் என்பதனையும் எடுத்துரைத்துச் சமூக வாழ்வுக்கு வழிகாட்டுகின்றார்.

இலாப நட்டம்

தனிமனிதன் ஒவ்வொரு நாளும் தாம் கணக்கிடும் வரவுக் கணக்கில் தொடங்கி தம் வாழ்க்கையில் தம்மை வழி நடத்திச் செல்லும் உலக நடப்பு நிகழ்வுகள்வரை உணர்த்தி நிற்கிறது.

"வரவென்றால் செலவிருக்கும் வாழ்க்கை என்றால்
வருமின்ப துன்பங்கள் வழக்கமாகும்
உறவென்றால் உறுபகையும் ஒளிந்திருக்கும்
உலகத்தின் நடப்பிதுதான் உண்மை காண்போம்
கரவொன்றும் இல்லாமல் கனியும் நெஞ்சம்
கவினார்ந்து ஒளிர்ந்திடினும் கணித்துப் பார்க்கும்
தரமென்றும் தகைந்தொளிரும் இலாப நட்டம்
தழைத்து வரும் யாரிதனைத் தடுக்கவல்லார்"

வாணிபத்தில் இலாப நட்டம் என்பது வரும் போகும் என்பது உலக நியதி. நம் வாழ்க்கையில் சருக்கல்கள் நட்டம் ஆகும். நல்வாழ்க்கை இலாபம் ஆகும். அரசியலில் இலாப நட்டம் என்பது தேர்தல் நேரத்தில் வரும் வெற்றி தோல்வி. காதலர்கள் வாழ்வில் இலாப நட்டம் என்பது எது என ஒவ்வொருவரின் வாழ்விலும் இலாப நட்டம் என எடுத்துரைக்கும் ஆசிரியர்,

"எல்லோரும் விரும்புவது இலாபம் ஆகும்
எப்போதும் இலாபங்கள் இயைவ துண்டே
எல்லோரின் விருப்பம்போல் இலாபம் மட்டும்
இருந்து வந்தால் எதிலுந்தான் தோல்வியில்லை
எல்லோரும் எண்ணுவது இயல்பேயாகும்
என்றாலும் எழுதுவது இறைவன் அன்றோ
நல்லோரும் நட்டங்கள் எதிர்வதுண்டு
நல்லிறைவன் தீர்ப்பையார் மாற்ற வல்லார்"

இலாபத்தில் நட்டம் இருப்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. அவை இன்பத்தில் மறைந்து போய்விடுகின்றன. எனவே, மனிதர்களாகிய நாம் இலாபத்தில் வரக்கூடிய நட்ட நிலைகளை எண்ணி வாழ்க்கை நிலையை மேம்படுத்த எண்ணுகையில் துன்ப நிலை எல்லாம் இன்ப நிலையாய் மாறும் என்கிறார்.

குடும்பம் ஒரு விளக்கு

இல்லறத்தோடு வாழ்க்கை வாழும் குடும்பங்களே வீடுகள் ஆகும். அந்த வீடுகளே நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றன என்று எண்ணிப் பார்க்கிறார் ஆசிரியர். குடும்பம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தர முயல்கிறார்.

"வீட்டிற்கு இருளகற்ற விளக்கு வேண்டும்
விளங்குமெழில் வீடதனில் குடும்பம் வேண்டும்"

குடும்பங்கள் வாழும் வீடுகள்தான் நாடாகின்றன என்பதனை 'வீடும் நாடும' என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

சமுதாயச் சிந்தனைகள்

கவிஞர் தாம் எழுதிய கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகளைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். சமுதாயம் பரந்து காணப்படுவதை அவர்தம் கவிதைகளின் பல்வேறு நிலைகளில் காணலாம். தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சியினைக் காண முடிகின்றது. வள்ளுவரின் வாக்குகள் அவர்தம் கவிதைகளில் படிந்து உள்ளதை அறிய முடிகின்றது. அத்துடன், அவ்வரிகளைத் தமது கவிதைகளிலும் எடுத்தாண்டுள்ளார்.

அவ்வாறு எடுத்தாளுகையில் வள்ளுவரின் குறளினின்று சற்று விலகிநின்று வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எண்ணிப் பார்த்து விளக்கியுள்ள தன்மையினை நாம் காணமுடிகின்றது. 'வளமான வாழ்வுக்கு' நலமான சிந்தனைகள் என்னும் தலைப்பில் அமைந்த கவிதைகளில் வள்ளுவர் கூறிய,

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறியன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பதனை அடி ஒற்றி,

"கற்றலினால் பயனென்ன கற்றதைப் போல்
கவினுலகில் கற்றபயன் காட்ட வேண்டும்
கற்றவற்றைச் சிந்தித்து ஒழுகுதலே 'கற்பின்' மேன்மை"

என்ற கவிதை வரிகளைக் காட்டியுள்ளார். மேலும், அச்சம் உடையார்க்கு அரண் இல்லை என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதை மூலம்,

"அஞ்சுவதற்கு அஞ்சென்றான் குறளின் ஆசான்
அஃதிலார் பேதமையின் அவைவில் ஆழ்வார்
அஞ்சாமை எழும் நிறைவில் அஞ்சியஞ்சி
அடி வைப்பான் கோழையென்று ஆகித் தேர்வான்!"

என்று இன்றைய வாழ்வுக்கு இன்றிமையாத கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார். இது வள்ளுவரின்,

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

என்பதோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது ஆகும்.

சமுதாய மறுமலர்ச்சியில் தனது எதிர்நோக்கினை உணர்த்த விரும்பிய கவிஞர் தம் மகிழ்வாக சமுதாயத்தின் மகிழ்வையைக் காண்கிறார். அறத்தை நிலைநாட்டும் வகையில் சமுதாய வளர்ச்சி இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார். இதனை அவரது 'புத்தாண்டு மலர்ச்சியில்' கவிஞனின் எதிர்நோக்கு என்னும் கவிதை வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

"ஊர் மகிழ்வை உளங்கொண்டு உழைப்பு நல்கி
ஓங்கிவரும் பெருமுனைப்பில் உயர்ந்து வந்தால்
நேர்நிகழ்வு நியாயங்கள் தருமம் வெல்லும்
நீர்மையெலாம் நிலை புவியில் நிலைக்க வேண்டும்"

சமுதாய மறுமலர்ச்சியில் அறிவாற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆசிரியர் அறிவின் துணைகொண்டு புத்துலகம் படைப்பதனைப் பூம்புனல் கண்ட மகிழ்ச்சிக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளதனைக் காணலாம்.

"மதியதனால் நல் வாழ்வில் மலர்ச்சி காண்போம்
மடமையெனும் இருட்பேயை மடியச் செய்வோம்
புதியதொரு நல்லுலகம் பொலியச் செய்வோம்
பூம்புனலாய் மகிழ்ச்சி எங்கும் பொங்க வைப்போம்"

என்று குறிப்பிடுகின்றார்.

சமுதாயம் காணும் கவிஞர் தமிழையும் தமிழரையும் மறக்கவில்லை. தமிழ் இன்பத்தையும், தமிழ்ப் பாவின்பத்தையும் மிகுதியாக எண்ணிப் பார்க்கிறார்.

“எதுகை யெலாம் இயைந்து வர
எழுந்து வரும் மோனையதைப்
பதுமையினான் அமைந்து பெரும்
பான்மையினான் சீரசைகள்”

மேலும் ‘செல்லாக்காசு’ என்ற கவிதையின் வாயிலாகத் தேசத்தையும் மொழியையும் காக்க இயலாதவர்கள் செல்லாக்காசு என்று குறிப்பிடுகின்றார்.

“இனங்காக்க மொழி காக்கா எதுவும் இங்கே
இயற்றாத தலைமுறையினர் செல்லாக்காசே!’
என்று குறிப்பிடுகின்றார். மேலும்,
‘தன் திறமை தானறிந்து தகைமையோடு
தரணியிலே தழை யாதார் செல்லாக் காசே
கண் திறமை இல்லாதார் கருத்தின் ஓட்டம்
காலத்தின் கரைசலதில் செல்லாக் காசே
விண் திறமை எனப் போற்றல் விளங்கி நிற்கும்
விரிவார்ந்த கட்புலமை செல்லாக்காசா?
மண் திறமை புலனாகும் மாட்சியாகும்
மாணுலகப் புரட்சியெலாம் செல்லாக்காசே?”

இப்பூமியில் வாழ்வோர் தம் திறமை அறிந்து செயல்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். இலாப நட்டம் எனனும் கவிதை மூலம் இன பலம் குறைந்து விட்ட நிலையினை கடிந்துரைக்கின்றார்.

“பணபலத்தால் எதையும் தான் பலிக்கச் செய்யும்
படியமையில் நின்றிலவும் பழக்கம் காண்போம்
இன பலத்தின் ஐக்கியத்தால் எந்த ஒன்றை
இதுகாறும் அடைந்துள்ளோம்”

என்கிறார். மொழி, இன நலிவினைப் பற்றி ஆத்திரம் கொள்ளும் ஆசிரியர் சமுதாயம் வளரப் பாடுபடும் தலைவர்களை எண்ணிப் பார்க்கின்றார். அவர்களைப் பற்றி பாடுகின்ற பொழுது மிகவும் உருக்கமாகத் தமது கவிதை வாயிலாகப் பாராட்டுகின்றார். காலம் சென்ற தமிழவேள் அவர்களுக்கு ஒரு நினைவஞ்சலி படைக்க நினைத்த ஆசிரியர் தமிழவேள் நினைவாஞ்சலி என்னும் கவிதை வாயிலாக அவரை எண்ணி உருகுகின்ற வரிகள் பின் வருமாறு அமைகிறது.

“ஏன் மறைந்தாய் என நானும் எண்ணிப் பார்த்தேன்
எத்தனையோ சிந்தனைகள் எழுந்து நிற்க
ஏன் மறைந்தாய் என்பதற்கு எந்த ஒன்றை
ஏற்பதென இன்றுவரை இயைந்த தீர்ப்பாய்
ஏன் மறைந்தாய் என்று நான் ஏற்றுக்கொள்ள
இயலாது தவிக்கின்றேன். எனக்கு மட்டும்
ஏன் மறைந்தாய் எனக் கூறக் கனவில் தோன்றி
என் தலைவா என் மனத்தைத் தேற்றுவாயா?”

என்று புலம்பும் அவரது நெஞ்சக் குமுறலை அறிய முடிகின்றது. சமுதாயத்தில் ஒருவரின் இழப்பு தனிமனிதனையும் சமுதாயத்தையும் பாதிக்கிறது.

அவர்கண்ட ஒருவர் மறைந்தது அவரைப்போல் ஒருவர் நமக்கு கிடைப்பாரோ என ஏங்கும் உள்ளமாகக் காண முடிகின்றது. அயல்நாட்டை நாடும் உள்ளம் மலேசியா அமைச்சர் ஒருவரின் பணியைப் பாராட்ட எத்தணிக்கும்போது அது நம்நாட்டுத் தலைவர் அல்லவே என்று ஒதுக்கி விட மனம் எண்ணாது, நாட்டுப்பற்று என்பது எந்நாட்டில் இருந்தாலும் அவர்களுக்கு உருவாக வேண்டும். அந்த வகையில் மலேசியாவில் இருந்தாலும் நாட்டுத்

தலைவராக அவர் செய்த பணியினைப் பாராட்ட விளையும்போது,

"தமிழன்னை அருள் பெற்ற தகைமையோடு
தருகின்றான் வாழ்த்துகைக்குத் தோல்வி
இல்லை"

என்று கவிஞர் தான் தயங்கலாம் என்றாலும் தமிழன்னை அருள்பெற்ற தங்கராசன், சமுதாயம் பாராட்டும் உயர்ந்த ஒரு மாபெரும் தலைவரைத் தயங்காது பாராட்டுகின்றார் எனில், நாட்டின் மீது அவர் எந்த அளவு பற்றுடையவர் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. நாட்டுப்பற்று அவரிடம் உள்ள சமுதாயச் சிந்தனையை நமக்கு வெளிப்படுத்துகின்றது.

வாழ்வின் வெற்றி

மனித வாழ்க்கைக்கு மிகச்சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லும் கவிஞர், மனித உயிரானது இவ்வுலகில் நாட வேண்டிய சில இலக்குகளையும் எண்ணிப் பார்க்கின்றார். அந்தவகையில் தனது வாழ்வின் வெற்றி என்ற கவிதை வரிகளில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விதியினை எண்ணி,

"இது வேண்டும் அது வேண்டாம் என்றே
நாளும்
இடைக்கிடையே எண்ணுகின்றோம்
பேசுகின்றோம்
எது நடக்க வேண்டுமென்று எழுத்து கூறும்
எல்லாமும் அது வழியே எழுந்து நிற்கும்"

என்கிறார். மனித வாழ்க்கை என்பது இறைவன் வகுத்த ஒன்றே ஆகும் என்று நம்பும் ஆசிரியர், அனைத்தையும் எண்ணிப் பார்த்து விந்தையாக வியப்புற்று நிற்கிறார். சமுதாயத்தில் விதியை மதியால் வெல்ல முடியுமா? என்பதற்கேற்ப இறைவன் வகுத்த செயலை எண்ணி வியக்கும் ஆசிரியரின் நிலை சிறப்பானது.

ஒற்றுமை – வேற்றுமை

வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்பதற்கிணங்க, ஆசிரியர் இருவேறு தலைப்பில் ஒற்றுமை வேற்றுமையினை எடுத்தியம்புகின்றார். மனிதன் ஒருவருக்கு ஒருவர் மனத்தாங்கல் இன்றி வாழ்தல் வேண்டும் என்பதனைச் சுட்டும்போது,

"இனக் கலப்பில் எழுந்து வரும்
இவ்வாறான
இணக்கமிலா வேற்றுமைகள் என்றும்
தோன்றும்
குணக்கேட்டைக் கொன்றொழித்து நாட்டின்
நன்மை
கொழித்து வரக் குடிமக்கள் பாடுபட்டு
இனப்பூசல் தோன்றாத இலங்கு நீர்மை
என்று மிவண் இனிதோடு இயைந்து
போற்றி
மனத்தாங்கல் விட்டொழித்து மாண்பின்
நின்றால்
மணிக் கதவம் திறந்து வர மருட்சி நீங்கும்"

என்று கூறும் அவர் ஒற்றுமையினை எடுத்தியம்பும்போது,

"உள்ளத்தின் உணர்வுகளால் ஒத்துப்
போனால்
உறுத்து வரும் பூசலெலாம் ஒழிந்து போகும்"

என்கிறார். மேலும்,

"ஒரு கரத்தால் கை தட்டல் ஓசை தன்னை
ஒலித்து வர இயலாது உண்மை ஆமாம்
இரு கரங்கள் இணைந்தால் தான் ஒலிக்கும்
ஓங்கும்
இதுபோல தான் வாழ்க்கை நலம்"

என்று ஒற்றுமையினால் ஏற்படும் நன்மைகளையும் வேற்றுமையினால் ஏற்படும் பூசல்களையும் விளக்குகின்றார்.

முடிவுரை

கவிஞரின் உலகளாவிய சிந்தனைகள் இப்பூவுலக வாழ்க்கையோடு நின்று விடவில்லை. மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை, சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சிறந்த நூலாக ஆசிரியரின் இந்நூல் செயல்பட்டாலும், கவிஞரின் இலக்கியச் சிந்தனையின் முதிர்ச்சியினை நமக்கு உணர்த்தி நிற்கின்றது. சமுதாயப் பிரதிபலிப்பின் தன்மையாகக் கவிதையின் ஒவ்வொரு பகுதியும் மக்களுக்குப் பல்வேறு நற்சிந்தனைகளை உணர்த்தி வழிவகுக்கிறது.

மு. தங்கராசனின் சிறுகதைகளில் களமும் கதையாடலும்

ப. ஷேக் செய்யது அலி
முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.ப.சு. தமிழியல் ஆய்வு மையம்
ம.தி.தா. இந்துக் கல்லூரி பேட்டை, திருநெல்வேலி

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் புனைவுலகில் கவனிக்கத்தக்க கூறுகளான பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை இலக்கியத்தின் ஊடாகப் பதிவு செய்கிறார் மு. தங்கராசன். சிங்கப்பூர் நாட்டின் பொது நூலகத்தின் சிறுகதை தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் நாடகத் தொகுப்புகளையும், வரலாற்று ஆவணமாக எழுத்துலகில் அடையாளமிட்டுள்ளார். மு.தங்கராசனின் சிறுகதைத் தொகுப்பான 'கற்பனை மலர்கள்' ஆய்வுப் பொருண்மையாக விளக்கப்படுகிறது.

புனைவின் விடயங்கள்

"சுவையான ஒரு அனுபவம், வாழ்க்கையின் ஒரு வெற்றி, அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று ஒரு நல்ல நிகழ்வு சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்"[1] என்ற புரிதல் கொள்ளலாம். மேற்கூறியது போல், சிறுகதை சுவையான அனுபவம் என்றாலும், அதனூடாக காலத்தைப் பதிவுசெய்வது என்பது அடிச்சுவட்டின் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. அவருடைய சிறுகதைத் தொகுப்பின் வழியாகத் தனிமனித உணர்வுகளையும், இரு மொழியினரின் உறவுப் பிணைப்பையும் சுட்டியிருக்கிறார் தமிழ்க்கடவுள். வழிபாட்டு நம்பிக்கை என்பது மொழிக்கு அப்பாற்பட்டவை எனவும் தன் புனைவின் வழிக் காட்டிட முயல்கிறார் ஆசிரியர்.

படைப்பிலக்கியத்தின் காலச்சுவடு

தமிழ் இரண்டாவது ஆட்சிமொழி என்றும், வேற்றுமொழி நாட்டில் விருப்பப்பாடத்தில் தமிழ் இடம் பெற்றுள்ளது என்பதன் காலச்சுவட்டை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். இலக்கியம் என்பதன் பொருள் காலத்திற்கேற்றாற் போல் பொருள், இடம் பெயருமே தவிர, அது படைக்கப்பட்ட காலத்தின் அடிச்சுவட்டை அதன் தாக்கமாகப் பெற்றுவரும் என்பதனை மு. தங்கராசனின் படைப்பு வெளிப் படுத்துகிறது. இதனை,

"சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் தமிழ் பேரவை என்ற ஓர் அமைப்பை உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். இதன் வழி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ்மொழி - தமிழ் இலக்கியம் வளர்ச்சி பற்றிய மாநாடு நடத்துவார்கள்".(ப.11) என்ற வரிகளின் வழியாக அறியலாம். சிங்கப்பூர் மாணவர்களின் பங்கு, தமிழ்மொழி வளர்ச்சி குறித்து இருந்ததை அறிய முடிகிறது. இரண்டாண்டுக்கொருமுறை நடைபெற்றது என்று காலத்தைப் பதிவு செய்வதில் முக்கியத்துவம் தந்துள்ளார். இதனைப் போன்று,

"சிங்கப்பூரில் ஆறாம் உலக தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த வேண்டும் என்ற திட்டம் 1982- இல் உருவானது"[2] என்ற வரிகளின் வழியாக, மேலும் தமிழ் வளர்ச்சி குறித்தும்

அதன் கடந்த கால செய்திகளையும் உறுதிப்படுத்துகிறார். இதனைப்போன்று ஆசிரியர் "அபூர்வ நண்பர்கள்" சிறுகதையில்;

"ஒரு தலைமுறையின் காலக்கட்டம் என்று சுலபமாக ஒரே வரியில் சொல்லி விடலாம். வாழ்க்கைக் காலம் என்பது ஒரு வரியில் அடங்கக் கூடியதா? " (பக் .17,18) என்ற வரிகளின் வழியாக, காலத்தின் தேவையைப் பெரிதும் கருதுகிறார். தன்னுடைய படைப்பிலக்கியத்தில் தன் வாழ்க்கைக்காலம் முழுவதையும் பதிவு செய்ய முயற்சித்துள்ளார். ஆனால், அதற்குட்பட்ட காலம் கைகூடவில்லை என்பதைப் போன்ற ஏக்கத்தை அவற்றுள் அவதானிக்க முடிகிறது.

"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் (1950) ஆண்டின் தொடக்கத்தில் "நேவல் பேஸ் " என்னும் நாவாய் தளத்தில் "அப்ரெண்டீஸ்" என்னும் அடிப்படைப் பயிற்சி பெறும் தொழிலாளர்களாக வேலைக்குச் சேர்ந்தவர்கள் "(ப.18,19) என்று தங்கராசனின் படைப்பிலக்கிய ஆளுமைகளில், காலத்தின் வரையறைகளை பெருமளவில் தந்துள்ளார். வேற்று மொழி நாட்டின் தொழில் தளங்களையும்; அதற்கு நிகரான ஆண்டையும் பதிவு செய்வது என்பது எதிர்கால நோக்குகளில் பெரும் பழமையான ஆவணமாக விளங்கும் எனப் புரிந்துணர முடிகிறது. இதனைப் போன்று, "ஒருங்கிணைக்கப் பெற்ற மலேசியாவில் ஒரு மாநிலமாகத் திகழ்ந்த சிங்கப்பூர் 1965-ஆம் ஆண்டு தனிக்குடியரசாயிற்று"[3] என்ற வரிகளின் வழியாக, சுதந்திர நாடாகச் சிங்கப்பூர் அறிவிக்கப்பட்டதற்கும் குறிப்பிட்டுக்கூற ஒரு ஆண்டு (காலம்) தேவை என்பதனைப் போன்றும் மு.தங்கராசனின் படைப்புகள் காலத்தின் அடிச்சுவட்டைப் பெற்றுச் செல்கின்றன.

தனிமனித உணர்வுகள்

எழுத்துலகின் நல்ல பிம்பமாகவும், கதை சொல்லியாகவும் விளங்க, படைப்பாளிக்கு நகர்த்தி கொண்டு செல்வதற்கு ஏதுவான பாத்திரப்படைப்பே முக்கியமானதாகும். அவ்வாறான கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டமாகத் தனிமனித உணர்வுகளைப் பின்னிப் பிணைந்து முடுக்கி விட்டுள்ளார் மு.தங்கராசன். அதனுடைய வேகமானது 'ஆத்மார்த்தங்கள் அழிவதில்லை' என்ற சிறுகதையில் தெரிகிறது. "நாற்பத்தைந்து வயது ஆகிவிட்ட முக்காள் கிழவனுக்குப் பெண் கொடுக்க யார் சம்மதிப்பார்கள்? சமுதாய அமைப்பு ரீதியில் நன்கு சிந்தித்துப் பார்த்துப் பேசுங்கள்." (ப.65) என்ற வரிகளின் வழியாக, திருமணம் ஆகாத ஆண் இனத்தினுடைய தனி உணர்வினை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். தனிமனித உணர்வுக்கும் சமுதாய அமைப்பின் தலையீட்டை வெளிகொள்ளுகிறார். இதன் வழியாக தனிமனித உணர்வு ஒன்று தனிப்பட்ட மனிதனின் உணர்வு அல்ல என்ற பெரும் உளரீதியான இடர்ப்பாட்டை இவ்விடத்தில் சுட்டுகிறார் ஆசிரியர். ஆண் பாத்திரத்தின் மன உணர்வினைக் கொடுத்த படைப்பாளர் பெண்ணின் குணாதிசியங்களுள் முக்கிய மானதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை, "மாதவியும் பரிமளாவும் நீண்ட நேரம் பேசி கொண்டிருந்த பின் பிரிந்து சென்றார்கள். மாதவி மனச்சுமையின் இறக்கத்தை மானசீகமாக உணர்ந்தாள்." (ப.103) என்ற வரிகளின் வழியாக மகளிரின் பண்பாக, ஒரு செய்தியை மற்றொருவரிடம் கடத்துவது என்பதனைச் சான்றாதாரமாக ஆக்கி, இவ்விடத்தில் நிறுவுகிறார். மேலும், அவர்களுக்குள் பரிமாறிக் கொள்வதன் நோக்கமாக அடைபட்ட பெண்களின் விடுதலையானது, இன்றளவும் அவர்கள் பேசிக் கொள்வது மட்டுமே என்ற புரிதலைத் தொட்டுச்

செல்கிறார். மனச்சுமையும் இறக்கி மானசீகமாக உணரக்கூடிய மனவெழுச்சியைப் படைப்பாளர் வெளிக்கொணர்வது என்பது தனிமனித உணர்வுகளின் ஊடாக, சமூகப் பெரும் கருத்தை முன்நிறுத்துகிறார். இதனைப் போன்று பெண்ணின் இயல்பாக,

"ஆதவனின் தாய் தெய்வானை இறந்து மூன்று மாதங்கள் முழுமையாக முடியவில்லை. மாதவியின் "தலையணைகள்" மெதுவாக ஆதவனின் காதுகளில் ஒலிக்கவும் ஓதவும் தொடங்கின." (ப.85,86)

என்ற வரிகளின் வழியாக, தாய்வழிச் சமூகச் சிந்தனைகள் மறைந்து, ஆணாதிக்கத் தலைமுறைகள் வழிநடத்துகின்றன என்ற கோட்பாட்டை மறுதலிக்கிறார் ஆசிரியர். ஆணாதிக்கச் சமுதாயத்தின், மறைமுக ஆதிக்க வர்க்கமாக பெண்ணினம் செயல்படுவதை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். தனிமனித உணர்வுகளின் வெளிப்பாடே ஒட்டு மொத்தச் சமுதாயம் என்பதைத் கருத்தில் கொள்ள முடிகிறது. இதன்வழியாக சிறுகதைகளின் களமும், கதையாடலும் என்ற தலைப்பின் ஊடாக, கதையாடலில் பெரும் வகையான களத்தினை வெளிப்படுத்துவது என்பது தனித்துவமாக வெளிப்படுகிறது. மேலும் ஆசிரியருக்கு பெண் இனம் மீது தனிப்பட்ட கசப்புணர்வின் வெளிப்பாடோ என்றும் கூடக் கருதமுடிகிறது.

இருமொழியினரின் உறவுப் பிணக்கம்

தமிழ்ச் சிறுகதைகளின் கருத்தோட்டமானது சிங்கப்பூர் இலக்கிய உலகிலும் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டது. இலக்கியமானது இருமொழியினர் என்ற பெரும் வேறுபாட்டைக் கடந்து, முற்றிலுமாக உறவுப்பிணைப்பை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது. மு.தங்கராசனின் எழுத்துகளும் இவ்வுறவுப் பிணைப்பை அழுத்தமாகப் பதிவு செய்கின்றன. இதனை, 'தூரத்துப் பார்வையில்...!' சிறுகதையானது,

"மிஸஸ். யாப் கன்னங் குழியச் சிரித்துக்கொண்டே மலர்முகம் காட்டிய போது இருவரும் பரஸ்பரம் "குட்மார்னிங்" சொல்லிக் கொண்டார்கள். புன்முறுவல் பூத்து கொண்டார்கள்." (ப.107) என்ற வரிகளின் வெளிப்பாடானது காட்டித் தருகிறது. தமிழ்மக்கள், சிங்கப்பூர் மக்கள் என்று வெவ்வேறு மொழி, இனம், பண்பாடு கடந்த மக்களின் உறவுப்பிணைப்பை இதன்வழி உணர முடிகிறது. 'மலர்முகம்' என்ற உவமையின் வழியாக ஆசிரியர் மிகுந்த புன்னகையையும் அன்பையும் எடுத்துரைக்கிறார். மேலும், குட்மார்னிங் என்ற ஆங்கிலச் சொல்லை அழுத்தமாகப் பதிவு செய்வதன் காரணமாக, வழக்கமான சொல்லாடலாக இது கருத்தில் கொள்ளப்படுகிறது. இருமொழியினரின் உறவுப்பிணக்கமானது மக்களைத் தாண்டியும் எழுத்தாளர்களிடமும் பரஸ்பரம் கொண்டுள்ளது என்பதனை,

"மலேசிய இதழும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் சிங்கப்பூர்ப் படைப்புகளைப் பிரசுரித்தன. இருநாடுகளுக்கும் இடையே எழுத்துப்பாலம் திடமாக இருந்தது"[4] என்ற வரிகளின் வழியாக அறியலாம். மக்களை ஒன்றிணைக்க வேண்டி எழுத்தும், எழுத்தாளரும் பாலமாகத் தகவமைத்துக் கொண்டதை இதன்வழி அவதானிக்க முடிகிறது. இதனைப் போன்று "நம்பிக்கை" சிறுகதையின் கதையாடலில்,

"இருவேறு இனத்தைச் சேர்ந்த இவ்விரு குடும்பத்தாரும் இடையே அத்தகையதொரு நெருக்கமும், பாசபிணைப்பும் எவ்வாறு

ஏற்பட்டிருக்கக் கூடும்....? காலத்தின் முதிர்ச்சியில் கனிந்து வந்த அன்போ"(ப.133) என்ற வரிகளின் வழியாக, மனித வேற்றுமை கடந்த உறவுகளை ஆசிரியர் பதிவு செய்துள்ளார் என்று புரிந்துணர முடிகிறது.

தமிழ்க்கடவுள் வழிபாட்டு நம்பிக்கை

சிங்கப்பூரின் மிகவும் பிரசித்துப் பெற்ற வழிபாட்டுத்தலம் என்பது 'முருகன் கோவில்' என்று அனைவரும் அறிந்ததேயாகும். இதனை,

"இவரை அதிகம் வழிபடுபவர்கள் தமிழர்களே இதனால் இவர் தமிழ்க்கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார்"[5] என்ற வரிகளின் வழியாகச் சுட்டுகிறார். 'முருகன்' தமிழ்க் கடவுள் என்பதனைப் புரிந்துணர்ந்து கொள்ள வேண்டும். இதனூடாக மு. தங்கராசனின் படைப்புகளின் வழியாக தமிழ்க்கடவுள், தமிழ்ப்பண்பாடு இரண்டையும் கதைக்களத்தின் கதையாடலாக நிறுவுகிறார்.

"ஜானகியும் லியாவ் மெங்கும் முதல் நாளின் திட்டப்படி, செம்பவாங் பகுதியில் எழுந்தருளிக் கோயில் கொண்டிருக்கும் புனிதமரம் ஸ்ரீ பால சுப்பிரமணியர் ஆலயத்திற்குச் சென்றார்கள்." (ப.146)

என்ற வரிகளின் வழியாக, இருமொழியினர் என்ற பிரிவு இருந்தாலும், கடவுள் நம்பிக்கை என்பதில் ஒற்றுமையாக இருப்பதைக் காணமுடிகிறது. தமிழ்க்கடவுள் என்று முருகனை அடையாளப்படுத்துவது வேற்றுமொழியினரின் நம்பிக்கையைச் சிதைப்பதற்குச் சமம். முருகக்கடவுளைத் தமிழ்க்கடவுள் என்ற குறுகிய வரையறைக்குள் உட்படுத்துவது என்பது எத்தனை அபத்தம் என்ற புதிய புரிதலைத் தொட்டுச் செல்கிறார் ஆசிரியர்.

"நம்பிக்கை தொழுதாரை நல்லிறை நாளும் காக்கும்" (ப.148)

என்ற வரிகளின் வழியாக, நம்பிக்கையோடு வணங்கக் கூடிய எந்தவோத் இறைவணக்கமும் நாளும் காத்துவிடும் என்கிறவொரு மதம் கடந்த மகத்துவதத்தை எடுத்துரைத்துள்ளார். மு.தங்கராசனின் படைப்பானது சிங்கப்பூர் முருகனின் நம்பிக்கை மட்டுமல்லாது, பொது வெளித்தளத்திலும் நம்பிக்கைக் கொள்ளுதலைக் கூறுவது தெரிய வருகிறது.

முடிவுரை

சிங்கப்பூர் படைப்பின் தாக்கமானது இக்கட்டுரையில் வெளிப்படுகிறது. காலத்தின் தேவையைப் புரிந்துணர்வது என்பது மொத்தமான மனித வாழ்க்;கை ஓட்டத்தை நிர்ணயிக்கிறது. இதனை மு.தங்கராசன் தன் வாழ்வை மையமிட்டுப் பதிவு செய்துள்ளது பாராட்டிற்குரியது. மேலும், கடவுள் வேற்றுமை, மக்கள் ஒற்றுமை குறித்துக் கற்பனை மலர்கள் வெளிப்படுத்திய தகவலானது அபரிமிதமானது. தலைப்பிற்கேற்றார் போல் இவை அனைத்தும் விதவிதமான மணமுடைய மலர்கள் போன்றவை தான். ஆனால், 'கற்பனை மலர்கள்' என்பதில் ஆசிரியரின் படைப்பு கற்பனையானது தானா?' என்றோர் ஐயத்திற்கு அதனை உட்படுத்துவது முரணாக அமைகிறது.

குறிப்புகள்

மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.267.

மா. இராமையா, மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ப.485.

மேலது., ப.

சீதாலெட்சுமி, சிங்கப்பூரில் சிறுகதை இலக்கியம்: அரிமா நோக்கு, வரலாறும் முன்னேற்றமும். ப.65 (ஜனவரி 2010.)

முருகன் - தமிழ் விக்கிப்பீடியா, www.murugan, Wikipedia.

மு.தங்கராசனின் 'உதயம்' – வார்த்தைகள் கட்டமைக்கும் சமூக அறம்

முனைவர் பெ.ஹென்றி ஜூலியஸ்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

ஆய்வுச்சுருக்கம்

"மு.தங்கராசனின் 'உதயம்' - வார்த்தைகள் கட்டமைக்கும் சமூக அறம்" என்பதே இக்கட்டுரைக்கான ஆய்வுத் தலைப்பாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 'உதயம்' என்பது, கவிஞர் மு.தங்கராசனின் கவிதைத்தொகுப்பு நூல்களுள் ஒன்று. ஆசிரியர் மொத்தம் பதினொறு கவிதை நூல்களைப் பல்வேறு தலைப்புகளின் கீழ் வெளியிட்டிருப்பினும், கட்டுரையின் ஆய்வுச்சுருக்கம் கருதி, இவ்வாசிரியரின் கவிதைநூல்களுள் ஒன்றான 'உதயம்' எனும் இக்கவிதைத் தொகுப்பு மட்டுமே ஆய்விற்கான முதன்மைச் சான்றாதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'உதயம்' கவிதைத் தொகுப்பில் சமூகம், அரசியல், வரலாறு, அறம், தத்துவம், மனிதம், பெண்ணியம், இறையியல், உலகாயுதம், தமிழ்மொழி, பொதுவுடமை, பகுத்தறிவுவாதம் எனப் பல்வேறு தளங்களில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவையனைத்திலும் ஆசிரியரின் சமூக நோக்கு மேலோங்கி நிற்கின்றது. இது கவிஞரின் கவித்துவ மாண்பினைப் புலப்படுத்துகிறது. கவிஞரின் சமூகநோக்கில் சமூகத்திற்கான அறம் மற்றும் தனிமனித அறம் குறித்தான சிந்தனைகள் வலுப்பட்டுள்ளன. இதன்பொருட்டு இக்கவிதைத் தொகுப்பில் ஆசிரியர் மையப்படுத்த விரும்பிய அறம் தொடர்பான சிந்தனைகளே இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

முன்னுரை

'அறம்' அல்லது 'ஒழுக்கநெறி' என்பது சமூகத்தில் ஒருவரின் நடத்தைத் தொடர்பான பார்வைகளைக் குறிக்கின்றது. "அறம் என்னும் சொல், குறிக்கும் பொருள்கள் பல எனினும் 'நற்பண்பு' அல்லது 'ஒழுக்கம்' என்னும் பொருளிலேயே பெரும்பாலும் வழங்கி வந்துள்ளமை கருதத்தக்கது"[1]. இதை சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பு எனலாம். "ஒழுக்க நெறிகள் எல்லாச் சமுதாயத்திலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. காலம், நம்பிக்கைகள், பண்பாடு என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன. ஒழுக்கநெறிகள் சமூகம், மெய்யியல், சமயம், தனிமனிதரின் மனச்சாட்சி போன்றவற்றால் வரையறுக்கப் படுகின்றன"[2]. மேலும், 'அறம்'; என்பது நல்ல பண்பை உணர்த்துவது. நீதி வழுவாத் தன்மையைக் குறிப்பிடும் சொல். 'அறம்' என்னும் சொல்லுக்கு அகரமுதலி, கடமை, தருமம், கற்பு, புண்ணியம், அறநூல், அறக்கடவுள், அறச்சாலை, தருமதேவதை, யமன், தகுதியானது, சமயம், ஞானம், நோன்பு, இதம், இன்பம், நல்வினை எனப் பொருள் உரைக்கின்றது[3].

தமிழர் வாழ்வியலில் அறம்

தனி மனிதனையும் சமுதாயத்தையும் செந்நெறிபடுத்தும் ஒழுக்க நெறியாக அறத்தை மக்கள் கருதினர். இவ்வுலக வாழ்வு சிறப்பதற்கும் முன்னேற்றம் அடைவதற்கும் மனப்பண்பிற்கும் அறவாழ்வு இன்றியமையாததாக அமைகின்றது. மக்கள் தம் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகையான வாழ்வியல் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் அறமே தலையானது. தமிழர்களின் வாழ்வியலானது இல்லறம், துறவறம், காதலறம், போரறம்,

அரசியலறம் எனப் பல்வேறு நிலைகளில் அறம் சார்ந்து கட்டமைக்கக்கட்டிருந்தது. அவ்வகையில் காலந்தோறும் தமிழ் இலக்கியங்களின் வழியாகப் பதிவுற்ற அறம் தொடர்பான செய்திகளை இங்கு எடுத்துக்காட்டுவதன் வழியாக தமிழர்கள் தம் வாழ்வியலில் எங்ஙனம் அறச்செயல்பாடுகளுடன் தொடர்பட்டிருந்தனர் என்பதையும், காலந்தோறும் அறத்திற்கான பொருண்மையினையும் புரிந்துக்கொள்ள முடியும்.

காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

தமிழரின் சிந்தனைமரபில் சங்க இலக்கியம் தொடங்கி நவீன இலக்கியம் வரை அறம் தொடர்பான பனுவல்கள் படைப்பாக்கம் பெற்றுள்ளன. குறிப்பாக, அறம் தொடர்பான பொருண்மைகள் காலத்திற்கு ஏற்றவாறு கற்பிக்கப்பட்டு வருவதனைப் படைப்பிலக்கிய பதிவுகளின் வழி உய்த்துணர முடியும். இக்கருத்தினை வலுப்படுத்தும் விதமாகச் சில இலக்கியச் சான்றுகளைப் பின்வரும் பகுதியில் எடுத்துக்காட்டி விளக்கலாம்.

முதலாவதாக, சங்க இலக்கியத் தொகுப்பிலுள்ள புறநானூற்றில் இடம்பெற்றுள்ள “சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல”[4] எனும் பாடல்வரியினை எடுத்துக் கொள்வோம். இது சோழன் நலங்கிள்ளியின் மறமாண்மை பாராட்டி கோவூர்கிழார் பாடியது. இப்பாடலில் ‘பொருளும் இன்பமும் அறத்துவழிப் படூஉம்’ என்னும் சிறந்த ஒழுகலாற்று நெறியினை இப்புலவர் முன் வைக்கின்றார். சிறப்பு மிகுந்த முறைமையால் பொருளும் இன்பமும் அறத்திற்குப் பிற்பட்டனவாகவே கருதப்படும் என்ற கருத்து இப்பாடலினுள் உரைக்கப் பட்டுள்ளது. “மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே”[5] இது புறநானூற்றில் குமணனின் கொடைத்திறத்தைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது. பசி என்று வந்தவர்களுக்குத் தன் தலையைக் கொடுக்கத் துணிந்த கொடையெனும் மாண்பினையையே சிறந்த அறமாக என இங்குப் போற்றப்பட்டுள்ளது. “ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே / சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே / …….. களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”[6] எனும் புறநானூற்றுப் பாடல் வரிகள் அவரவர் கடமையை அவரவர் சரியாக ஆற்றுவதே சிறந்த அறநெறியென வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்மொழியின் முதல் காப்பியமான சிலப்பதிகாரம் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்”[7] என அரசியல் அறத்தை வலியுறுத்தியுள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக எழுந்த மணிமேகலையில் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே / உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக், / கயக்கறு நல்லறம் கண்டனை”[8] என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. இவ்வுலகில் பசித்தவர்களுக்கெல்லாம் உணவு வழங்குவதே சிறந்த அறம் என இக்காப்பிய வரிகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. சமயநெறிக் காலத்தில் திருக்கோயில் பணி செய்தல், விருந்தோம்பல், யாவருக்கும் ஈதல் போன்றவைகள் அறமாக முன்னிருத்தப் படுகின்றன. மகாகவி பாரதி “ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”[9] சிறந்த அறமாகச் சுட்டுகின்றார். இவ்வாறாக காலந்தோறும் மனித வாழ்வியலுக்கான அறச்சிந்தனைகள் கற்பிக்கப்பட்டு வந்துள்ளமையைப் பரவலாகக் காணமுடிகின்றது.

மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது மனிதச் சமூகத்திற்குத் தேவையான ஒழுக்க நெறிகள் அறமாக முன்வைக்கப்பட்டு, அவை முறையாகத் தமிழர் வாழ்வியலில் வலியுறுத்தப்பட்டுள்ளமையை நாம் அறிந்துக் கொள்ளலாம். அவ்வாறே, அறச்சிந்தனைகளைக் காலந்தோறும் தம்முடைய படைப்புகளில் வலியுறுத்தப் படைப்பாளிகள் தவறவில்லை. இவ்வரிசையில் கவிஞர் மு.தங்கராசன் அவர்களும் தம்முடைய ‘உதயம்’ எனும் கவிதை நூலில் சமூகத்திற்குத் தேவையான அறக்கருத்துக்களைப் பல்வேறு நோக்கு நிலையுடன் பதிவுசெய்துள்ளார்.

இதனை விளக்கும் முயற்சியே கட்டுரையின் பின்வரும் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

'உதயம்' முதன்மைப்படுத்தும் அறநெறிச் சிந்தனைகள்

கவிதை என்பது வெறுமனே வார்த்தைகள் கட்டமைக்கும் சித்து விளையாட்டல்ல. 'வார்த்தைகளுக்குள் இழையோடிடும் மதிநுட்ப அரசியலே கவிதை' என்பது கட்டுரையாளரின் எண்ணம். ஒவ்வொரு படைப்பாளியும் தனக்குள் மௌனம் காத்து, மௌனத்தில் விருட்சம் பெற்ற தங்களுடைய எண்ணங்களுக்குப் பல்வேறு விதங்களில் வடிவம் கொடுக்க எண்ணுகின்றனர். அதுவே 'படைப்பாக்க நுட்பம்' பெற்று பனுவலாகி நிற்கின்றது. படைப்பாளியின் படைப்பாக்க நுட்பம், அவன் வெளிப்படுத்தும் கருத்துக்களின் மறை அரசியலாகி, வாசகனின் வாசிப்பு அனுபவத்தில் விரிவடைகின்றது.

'உதயம்' எனும் கவிதைத் தொகுப்பு ஆசிரியரின் வாழ்க்கையனுபவம், தமிழ்மொழிப்பற்று, சமூகநோக்கு, பகுத்தறிவு / பொதுவுடமைப் பார்வை, இறையியல் அனுபவம் போன்ற தளத்தில் நீக்கமற நிலைபெற்று படைப்பாக உருபெற்றுள்ளது. ஆசிரியரின் கவிதைகளுக்குள் மையம் கொண்டிருக்கும் இயங்கியலை வாசிக்கும் சுவைஞர்கள் ஒவ்வொரும் நுட்பாக உணர்ந்துகொள்ள இயலும். அவ்வகையில் இக்கவிதைகள் ஒவ்வொன்றிற்குள்ளும் அறநெறிச்சிந்தனைகள் இயங்கிக்கொண்டு இருப்பதை இக்கட்டுரையாளர் தன் வாசிப்பு அனுபவத்தில் பெறுகிறார்.

முதலாவதாக, இக்கவிதைத் தொகுப்பில் பேசப்பட்டுள்ள சமூகம் சார்ந்த அறக்கருத்துக்கள் சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகளை மையமிட்டதாக அமைந்துள்ளன. தனிமனிதன், சமூகப் பண்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கம் தான். இருப்பினும்; முதல் வகையின்கீழ் பண்பாட்டு நிறுவனத்தின் புறவடிவங்களாகக் கருதத்தக்க குடும்பம், சமயம், சாதி, இவைகளுக்கு இடையிலான இணக்கங்கள், முரண்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். புறவடிவங்களுக்கு இடையில் முரண்கள் உருவாகும் போது அவை சமூக ஒருமைப்பாட்டை / ஒற்றுமையைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடுகின்றன. இம்முரண்களைத் தவிர்க்கும் விதமாகச் சமூக அறங்கள் வலியுறுத்தப்படுகின்றன. இதனையே மு.தங்கராசன் அவர்களும் தம்முடைய கவிதைகளில் செய்துள்ளார்.

'உதயம்' கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'பிழையில்லாச் சமுதாயப் பெருமையாகும்'[10] எனும் வரியானது, ஆசிரியர் காண விரும்பும் சமுதாயத்தை நம் கண்முன் நிறுத்துகின்றது. குற்றங்கள் எதுவில்லாத சமுதாயம் மனித இனத்திற்குப் பெருமை எனக் குறிப்பிடுகிறார். "ஒருமைப்பா டெதனாலே ஓங்கும் என்றால் / உலகாய தத்துவத்தை ஓர்ந்து நேரல்! / திருவாகும் மனிதகுலப் பிறப்பே ஆகும் / திகழ்மாந்தர் பிறப்பொன்றாம் தேரும் பேதம்"[11] எனும் வரிகளின் வழியாகப் பிறப்பின் ஓர்மையைக் கவிஞர் குறிப்பிட விரும்புகின்றார். மனிதப் பிறப்பு ஒன்றென எண்ணும் மனித குலத்தில் ஒருமைப்பாடு நிலைபெறும் என்பது கவிஞரின் கருத்து. இக்கருத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் அமைந்த "ஒற்றுமைக்கோர் வித்தாகும் ஒருமைப் பாடே / உலகுக்கோர் சத்தாகும் உண்மைப் பாங்கு!"[12] எனும் கவிதைவரிகளைக் குறிப்பிடலாம். இதனினுள்ளும் மனித ஒருமைப்பாடே உலகம் நிலைத்தற்கு உகந்த வழி என்பதைக் கவிஞர் வலியுறுத்தியுள்ளார்.

இரண்டாவதாக, இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள தனிமனிதம் சார்ந்த அறக் கருத்துக்களைக் காண்போம். தனிமனிதனுக்கான வாழ்க்கை நெறி, நெஞ்சத் தூய்மை, மனையறம், இணையில் ஓர்மை, பெருங்கருணை, வறுமையில் செம்மை, சகிப்புத் தன்மை, அடக்கமுடைமை, பிறர் மனைநோக்கா நிலை, நல்ல பண்பு

எதுவென்பது, அறவாழ்வு எவ்வாறு அமையப்பெற வேண்டும் என்பவை போன்றான அறக்கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளார். தனிமனிதம் சார்ந்து கவிஞர் சுட்ட விரும்பும் அறக்கருத்துக்களை இனிவரும் பகுதிகளில் காண்போம்.

"நினைந்திடும் நெஞ்சத் தூய்மை / நேர்மையும் இணையே யாகும்!"[13] என்ற கவிதைவரிகள் 'இணை' எனும் தலைப்பீன்கீழ் இடம்பெற்றுள்ள கவிதையில் இடம்பெற்றுள்ளன. 'இணை' என்ற தலைப்பானது, குடும்ப உறவுகளால் பிணைக்கப்பட்ட ஆண், பெண் எனும் இணைகளைக் குறிப்பிடும் நோக்கிலே தெரிவு செய்யப் பெற்றிருப்பினும், இக்கருத்தை வலுப்படுத்தும் விதமாகக் கவிஞர், பல்வேறு அறம் தொடர்பான இணைகளை உருவாக்கி, தாம் சொல்ல விரும்பிய செய்தியைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேற்கண்ம் கவிதைவரிகளில் சுட்டப்பட்டுள்ள நெஞ்சத்தூய்மை / நேர்மை இரண்டும் வெளிப்படையான இணை குறிகள். இவ்விணை குறிகள் 'குடும்பம்' என்ற பண்பாட்டு நிலைகளனுக்குள் ஒன்றிணைந்துள்ள ஆணுக்கும் பெண்ணுக்குமான அறத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

இதன் தொடர்ச்சியாக, இறைவனை மையமிட்டு அறத்தை வலியுறுத்தும் போக்கு இவருடைய கவிதைகளில் காணமுடிகின்றது. சான்றாக, "உலகத்தின் ஏற்றத் தாழ்வு / எண்ணாத இறைகருணை இனிதே ஏற்போம்"[14] எனும் கவிதை வரிகளை இங்கு எடுத்துக்காட்டலாம். இறையை மையமிட்ட அதிகார அரசியல் உலகமெங்கும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது மறுக்க இயலா உண்மை. இவ்வதிகார அரசியல், மனித ஒருமைப்பாட்டை கேள்விக்குள்ளாக்குகின்றது. இக்கருத்தைத்தான் கவிஞர் மு.தங்கராசன் அவர்கள் தம் கவிதையில் விமரிசனம் செய்துள்ளார்கள். இறைவன் பெயரால் உருவாக்கப்படும் பிரிவினைகளைக் களைந்து, இறைகருணை எல்லா சமயக்கடவுளுக்கும் ஒன்றென பறைச் சாற்றியுள்ளார். "அழகெல்லாம் எங்கே என்றால் / இதயத்துத் தூய்மையிலே இருக்கும் என்போம்"[15] எனும் கவிதை வரிகளும் மனிதம் வேண்டுகின்ற இதயத்தூய்மையை வலியுறுத்தி நிற்கின்றன. கவிஞரின் பார்வையில் மனிதரிடத்து காணப்படும் புற அழகைவிட, அக அழகே மேலோங்கியது. வள்ளுவர் சுட்டும் அகத்தூய்மை, புறத்தூய்மை தொடர்பான கருத்துக்கள் கவிஞரின் கருத்துடன் நோக்கத்தக்கன. வள்ளுவரின் கருத்தின்படி, 'அகத்தூய்மை என்பது வாய்மையால் அமையப்பெறும்'[16]. அதாவது, மனிதர்களின் நன்நடத்தைமுறையால் (அறத்தால்) அகத்தூய்மை அமையப்பெறும் என்பது வள்ளுவரின் கருத்து. வள்ளுவரின் இவ்வாக்கைத்தான் மு.தங்கராசனும் தம் கவிதையின் வழி விளக்கமுற்பட்டுள்ளார்.

'நீர்மை' எனும் சொல்லுக்குள் விரிவடையும் அறமும் கவியும்

'நீர்மை' எனும் சொல்லுக்குச் சிறந்த குணம், எளிமை, அழகு, ஒளி, நிலைமை, ஒப்புரவு என்ற பல்வேறு பொருண்மைகள் உண்டு. பயின்று வரும் சூழலுக்கு ஏற்ப இச்சொல்லுக்கான பொருண்மைகள் வேறுபடுகின்றன. சான்றாக, "நிறை உடைமை, நீர்மை உடைமை கொடையே"[17] எனத் தொடங்கும் ஏலாதி பாடலில் 'நீர்மை' எனும் சொல் 'நல்லியல்பு' எனும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைப்போன்றே வள்ளுவத்தில் இடம்பெற்றுள்ள "சீர்மை சிறப்போடு நீங்கும் பயன்இல ஃ நீர்மை உடையார் சொலின்"[18] எனும் குறளில் 'நீர்மை' எனும் சொல் 'நல்ல பண்பு உடையவர்' என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்"[19] என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுவதன் வழியாக, தமிழுக்கு 'நீர்மை' என்ற பிறிதொரு பொருளும் உண்டு

என்பதையும் அறியலாம். எவ்வழிபடினும், 'நீர்மை' எனும் சொல் நேர்மை, நல்லபண்பு, சிறந்த குணம் போன்ற அறத்துடன் தொடர்புபட்ட சொல்லாட்சியேயாகும். கவிஞரின் 'உதயம்' கவிதைத் தொகுப்பின் இயங்கியலாக அறமே முதன்மைபடுகின்றது என்ற கருத்து இக்கட்டுரையின் முன்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டது. 'நீர்மை' எனும் சொல் அறத்துடன் தொடர்புடைய சொல்லாக இருக்கின்ற காரணத்தால் கவிஞர் இப்படைப்பு முழுவதிலும் முப்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் 'நீர்மை' எனும் சொல்லைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி, தாம் உணர்த்த விரும்பிய அறக்கருத்துக்களை வலுப்படுத்தியுள்ளார். ஆசிரியர் பயன்படுத்தியுள்ள 'நீர்மை' எனும் சொல்லை இங்குக் கவிதைச் சூழலுடன் எடுத்துக்காட்டி விளக்குவதின் வழியாக, இப்படைப்பில் விரிவடைந்துள்ள அறச்சிந்தனைகளை விரிவாக அறிந்துக்கொள்ளலாம்.

நீர்மையைக் கவிஞர் "நிலை மறவாத நீர்மை"[20], "அலட்சியப் படுத்தா நீர்மை"[21], "அமர்க்களப் படுத்தா நீர்மை"[22] என்றெல்லாம் குறிப்பிடுகிறார். இக்கவிதைவரிகளில் நீர்மை எனும் சொல்லை கவிஞர் வகைப்படுத்தி பார்த்திருப்பதுபோல தோன்றும். ஆனால், அது அவ்வாறில்லாமல் கவிதைக்கான சூழலுடன் பொருத்திப் பார்க்கும்போது 'ஒழுக்கம்' என்ற அறநெறியைப் பல்வேறு நிலைகளில் மையப்படுத்தி பேசியிருப்பதை உய்த்துணர முடியும். மேலும், "நீர்மையாம் அமைதி காண்போம்"[23], "நீர்மையும் அமைதியும் தழைக்கும்"[24] என இருவேறு இடங்களில் கவிஞர் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இந்தக் கவிதைவரிகளைப் படிக்கும்போது, எதனால் அமைதி உண்டாகும்? என்ற வினாவும், நீர்மையாலே அமைதி உண்டாகும் என்ற பதிலும் கிடைக்கப் பெறுகின்றன. சிறந்த நடத்தை முறைகளால் அல்லது அறவழிப்பட்ட வாழ்வியல் முறைகளால் மட்டுமே இவ்வுலகத்தில் / மனித சமூகத்தில் அமைதி கிடைக்கப்பெறும் என்ற அறக்கருத்தையே ஆசிரியர் இங்குத் தெளிவுப்படுத்துகின்றார்.

இதன் தொடர்ச்சியாக, "விண்ணுலக வேந்தரர் போற்றும் நீர்மை"[25] எனக் குறிப்பிடுகிறார். இதன் நோக்கம், விண்ணுலக வேந்தர்களால் மிகவும் போற்றப்படும் குணங்களுள் ஒன்றாக நீர்மை உள்ளது என்பதைத் தெளிவுறுத்தவே. விண்ணவர்களால் மனிதர்கள் போற்றப்பட வேண்டுமென்றால் மனிதர்கள் அறவாழ்வை தேர்ந்தெடுத்து, அதன்வழி நிலைத்திருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தவே கவிஞர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனலாம். அடுத்தநிலையில் "நெடிதுயர்ந்த பண்புக்கு நீர்மை காவல்"[26] எனக் குறிப்பிடுகிறார். அதாவது, மனிதர்களின் உயர்ந்த பண்புக்குத் துணையாக நிற்பது அவருடைய சிறந்த குணங்களேயாகும் என்கிறார். சிறந்த குணங்கள் அறவழி நெறிபடுகின்றன என்பதை உணர்த்துவதே இங்கு கவிஞரின் நோக்கம். மேலும், "விரிவுலகின் உதயங்கள் விளைக்கும் நீர்மை"[27] எனக் கவிஞர் குறிப்பிடுகிறார். அதாவது, பரந்து விரிந்துள்ள உலகத்தில் முரண்களைக் களைத்தெறிந்து, புதிய சமூக உருவாக்கத்திற்கு வித்திடுவது மனிதர்களின் அறநெறிவழிப்பட்ட சமூக நடத்தைகளே என்பது கவிஞரின் கருத்து. மேலும், கவிஞர் "இறையருளின் நீர்மை வேண்டும்"[28] என தன் விருப்பத்தை வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளார்.

மேலும் கவிஞர் மு.தங்கராசன் அவர்கள், "நிலங்காக்கும் நீர்மையினை நெஞ்சில் பூட்டி"[29] எனக் குறிப்பிடுகிறார். அதாவது, சிறந்த அறத்தினை, ஒழுக்கத்தினை, பண்பினை நெஞ்சில் நிறுத்தி, அதனின்று வழுவாமல் வாழும்போது இந்நிலம் காக்கப்படும் என்ற கருத்தினை முன்நிறுத்துகின்றார். மேலும், "நெஞ்சத்தால் களங்கமிலா நீர்மை"[30] எனக்

கவிஞர் குறிப்பிடும்போது, இதயத்தூய்மையே மனிதனின் தலையாய அறப்பண்பு என்பதை நாம் அறியலாம்.

தாய்மை போற்றும் மனப்பாங்கும் அறநோக்கும்

கவிஞர் மு.தங்கராசன் இரண்டு வயதாக இருக்கும்போதே தன்னுடைய தாயை இழந்தவர். தாயின் இறப்பிற்குப் பின்னர், சிற்றன்னையின் பெரும் அன்புறவில் வளர்ந்தவர். தன்னுடைய சிற்றன்னை, தந்தையைத் திருமணம் செய்யும்போது "பாவாடை கட்டவொண்ணாப் பதந்தெரியா"[31] நிலையில் இருந்தார் எனக் குறிப்பிடுக்கின்றார். தம் எண்ணம், தம் வாழ்வு எதுவென்றுகூடத் திட்டமிடத் தெரியாத அந்நாளிலே தன் சகோதரிக்காகவும், தன் சகோதரியின் மகனுக்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்து, அறத்தில் சிறந்த தன் சிற்றன்னையைக் கவிஞர் தம் கவிதையில் போற்றத் தவறவில்லை. சிற்றன்னையின் ஒப்பற்ற தாயுள்ளத்தையும், அவரின் அர்ப்பணிப்பு மிக்க அற வாழ்வையும் தம் கவிதையில் எடுத்துக்காட்டி, அறவாழ்விற்குத் தன் சிற்றன்னையை ஒப்பற்ற அடையாளமாக நிலைநிறுத்தியுள்ளார். இதற்குச் சான்றாக, 'அமைதி' எனும் உட்தலைப்பில் அமைந்த கவிதை வரிகளைச் சுட்டலாம். "தனிமையில் இருந்தே இன்பம் / தந்திடும் அமைதி காணத் / தன்மையை விரும்பிச் சென்றார் / தனியராய் இருந்து சின்னாள் / இன்மையும் எதிரக் காணா/ இருந்திடும் வெறுமைச் சூழ் / தனிமையே இனிமை என்றார் / தகிடுத்தும் துன்பம் பெற்றார்" [32].

இக்கவிதையானது 'உண்மைகள்' எனும் பெரும் பிரிவின் கீழ் இடம்பெற்றுள்ளது. இக்கவிதையுள் அமைதி அமைதியின்மை, அமைதி சூழும் மனம் வழுவிலா மனம் எனும் இரு எதிர்மைகள் கவித்துவத்தில் விரிவடைந்துள்ளன. இதனுள் மனித உறவுகள், குடும்பம் போன்ற மேற்சொன்ன எதிர்மைகளைப் பிணைத்து, அதன்வழியாக மனித வாழ்வியலுக்கான அறத்தை முதன்மைப்படுத்தியுள்ளார். குறிப்பாக, அடக்கமின்மையால் மனிதர்களிடத்தே ஏற்படும் மன அமைதியின்மையைக் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக, செல்வ நிலையாமையை வலியுறுத்தி, செல்வத்தின் மீது மனித மனம் பற்றுக்கொள்ளும்போதும், அதனை இழக்கும்போதும் நேர்ந்திடும் துன்பங்கள், மன அமைதியின்மை போன்றவற்றையும் தம் கவிதையில் தெளிவுபடுத்தியுள்ளார். இதன்தொடர்ச்சியாக, புத்தரின் மன அமைதியை எடுத்துக்காட்டி, புத்தர் அமைதி எனும் 'இணை இருமை'களை உருவாக்கியுள்ளார். இந்த 'இணை இருமைகள்' கவிதையில் 'உண்மை'யின் ஆழத்தினை மேலும் அர்த்தப்படுத்தியுள்ளன.

உண்மையான அமைதியைப் பிரதிபலித்திடும் இக்கவித்துவத்தில்தான் கவிஞர் தன் தாயைச் சிறப்பித்துள்ளார். அமைதிக்கான தனித்ததொரு அடையாளமாகத் தன் தாயைக் கவிஞர் சுட்டியுள்ளார். மேற்சுட்டிய கவிதைவரிகளில் மெல்லிதாக இழையோடிருக்கும் சில சொற்களை மட்டும் பார்த்தால் கவிஞர் தன் தாயைப் போற்றும் மன உள்ளத்தைப் புரிந்துகொள்ளமுடியும். இதற்கு முன்பகுதியில் எடுத்துக்காட்டிய கவிஞரின் வாழ்க்கைப் பின்புலம் மிக அவசியமாகின்றது. கவிஞரின் சிற்றன்னை தன் வாழ்நாள் முழுவதும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது, அமைதி நிறைந்த முகமும், அமைதியான மனவுள்ளமும் உடையவராக இருந்தார் என்பதனைக் கவிதையை வாசிக்கும் அனைவருக்கும் புலப்படும். குறிப்பாக, மேலே எடுத்துக்காட்டிய கவிதைவரிகளில் தனியராய் இருந்து சின்னாள் / இன்மையும் எதிரக் காணா/ இருந்திடும் வெறுமைச் சூழ: / "தனிமையே இனிமை என்றார் / தகிடுத்தும் துன்பம் பெற்றார்" எனும் வரிகள் கவிஞரின் தாயின்

மனவுணர்வினைப் பிரதிபலிக்கின்றன. கவிஞரின் தாயானவள் எதிர்நோக்கு எதுவுமின்றி, தனித்திருந்து தன் உடன்பிறந்த சகோதரியின் பிள்ளையைத் தன் மகனாக எண்ணி, தன் வாழ்வை அர்ப்பணிப்பு உணர்வுடன் அளித்த, அத்தாயின் மனவுணர்வினை, அறவாழ்வினை நம் கண்முன் காட்சிப்படுத்துகின்றன.

அறமும் பெண்மையும்

தமிழ்க் கவிஞர்களுள் பெரும்பான்மையானோர் தங்களுடைய படைப்புகளில் பெண்ணின் பெருமைகள், பண்பு நலன்கள் குறித்து அதிகமாகப் பேசியுள்ளனர். அவர்களுள் குறிப்பாக, தமிழில் ஆகச்சிறந்த மிகப்பெரும் கவிஞர்களாகப் போற்றப்படும் பாரதியும். பாரதிதாசனும் பெண்ணையும், பெண்மையையும் போற்றி, தம் கவிதைகளில் கொண்டாடியுள்ளனர் என்று கூறினால் மிகையாகாது. இருவரும் பெண்ணினுடைய மனவுணர்வினைப் பிரதிபலித்த நிஜ படைப்புருக்களாகக் காட்சிப்பட்டனர். அங்ஙனம், கவிஞர் மு.தங்கராசனின் கவிதைகளிலும் பெண்ணும், பெண்மையையும் போற்றப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இங்கு பெண், பெண்மை எனத் தனித்தனியாகக் குறிப்பிடுவதன் நோக்கம், 'பெண்' என்று சொல்லும்போது அது நேரிடையாகப் பாலினத்தை அடையாளப்படுத்தும் சொல்லாகவும், பெண்மை என்று சொல்லும்போது பெண்ணுக்கான உணர்வுகள், உரிமைகள், பண்பாட்டுச் செயல்வடிவங்கள் போன்றவற்றைச் சுட்டுவனவாகவுமுள்ளன. இவ்வகையில் கவிஞரின் பார்வையில் பெண், பெண்மை குறித்தான புரிதல்கள் அவர்தம் கவிதைகளில் பிரதிபலிப்பதை இனிவரும் பகுதிகளில் காணலாம்.

"பெண்ணுக்கு ஒரு பெருமை / பெருங்கருணைத் தாயுள்ளம்"[33] எனக் கவிஞர் சுட்டும் இக்கவிவரிகளில் பெண்ணின் பண்புநலனை நேரிடையாகப் போற்றும் மனப்பாங்கினைப் பார்க்க முடிகின்றது. பெண்மையின் அடையாளம் தாய்மை என்பதையும் தாய்மை என்பதே பெண்ணானவள் இந்தச் சமூகத்திற்கு வழங்கிட்ட பெருங்கருணை என்பதாகப் புரிந்துக்கொள்ளலாம். அதேநேரத்தில், பெண்ணுக்கான உரிமை குறித்து இக்கவிஞர் பேசும்போது "கற்றோரின் அறிவுரைகள் கனிந்து ஏற்காது / கன்னியவள் 'பெண்ணுரிமை கண்டதென்ன?"[34] என்ற வினாவினையும் முன் வைக்கின்றார். பெண்ணுரிமை என்பது வெறும் வாய்ச்சொல் அல்ல;$ பெண்ணுக்கான வாழ்வுரிமை. இதனைப் பெறும்போது பெண்ணானவள் தனக்கான சுயமதிப்பீடுகளை இழக்கக்கூடாது எனக் கவிஞர் விரும்புகிறார். கற்றலின் வழி கிடைக்கப்பெறும் நல்லறிவை அறவழிப்படுத்தி, 'பெண்ணடிமை' என்னும் அறியாமையினைக் களைந்திடுவதே சரியான போக்கு என்பதைக் கவிஞர் தம் கவிதையில் சுட்டுகிறார். கவிஞர் எக்கருத்தினை கவித்துவப்படுத்தினாலும் அதனுள் அறச்சிந்தனைகளை முறைப்படுத்தி நல்குவதை அவருடைய கவிதைகள் முழுவதிலும் காணமுடிகின்றது. இதற்கு மேற்குறிப்பிட்ட கவிதைவரிகளே சான்று பகர்கின்றன.

தமிழ் மொழியின் பெருமையும் அறமும்

கவிஞர் மு.தங்கராசன் தம்முடைய 'உதயம்' கவிதைத் தொகுப்பில் தமிழ்மொழியின் பெருமையினைப் பேசத் தவறவில்லை. தமிழ் மொழி எழுத்துக்களின் ஆதி வடிவம், எழுத்து உருவாக்கமுறைகள், வளர்ச்சி நிலைகள், இலக்கண நூல்கள் போன்றவற்றை 'எழுத்து' எனும் கவிதையின் வழியாகக்; குறிப்பிட்டுள்ளார். 'உதயம்' எனும் இக்கவிதைத்தொகுப்பில் சில கவிதைகளைத் தொடங்குவதற்கு முன்பாக கவிஞர் அவர்கள் அக்கவிதை குறித்த சில குறிப்புக்களை உரைநடையாகத் தரும் போக்கினை இத்தொகுப்பில் கையாண்டுள்ளார். அவ்வகையில் இக்கவிதை குறித்தான குறிப்புகளில் "தமிழ் மொழியிலுள்ள உயிர் - மெய், உயிர்மெய் - ஆய்த எழுத்துக்களும்,

மொழி – முதல் - சார்பு - இன எழுத்துக்களும் சமுதாயப் பண்பாட்டின் அடிப்படையிலும், தத்துவார்த்தங்களின் நிலை விளக்கமாகவும் இமைந்தொளிர்வது உலகாயத நிலையில் ஒரு பெரும் விந்தையாகும்"[35] எனக் குறிப்பிடுகின்றார். உலக மொழிகளில் இல்லாத தனித்துவம் தமிழில் இருப்பதனையே கவிஞர் இங்குச் சுட்டுகின்றார்.

இதன் தொடர்ச்சியாக, "ஒருடம்பில் ஒருயிர் தான் ஒன்றிடவும் கூடும் / ஒருவனுக்கு ஒருத்தியென்னும் உயர்பண்பு நாடும் / சீரலகின் தத்துவத்தைச் செறிந்துணர்த்திக் காட்டும் / செந்தமிழின் எழுத்தமைப்பு செழும் பண்பைக் காட்டும்"[36] எனும் கவிதை வரிகளை இங்கு எடுத்துக்காட்டலாம். இவ்வரிகளில் தமிழின் எழுத்தமைப்பைக் குறிப்பிடும்போதே ஒருவனுக்கு ஒருத்தியென்னும் தமிழர்ப் பண்பாட்டின் உயர் கற்புநெறியினையும் சுட்டிக்காட்டியிருப்பது சிறப்பிற்குரியதாக அமைகின்றது. இதன் தொடர்ச்சியாக வரும் " சார்ந்து வரும் எழுத்துக்களே சார்பெழுத்து ஆகும் / சார்ந்திருந்து துணைபுரிவோர் சகநட்பும் ஆவார்! / நேர்ந்துவரும் இன்பதுன்ப நெகிழ்ச்சிகளில் ஊர்ந்து / நிலைக்கிளையாய் ஏற்றுஇன எழுத்தாகி நிற்பார்"[37]; கவிதை வரிகள் யாவும் எழுத்துக்களின் வகைமைபாட்டினைச் சுட்டிக்காட்டக் கூடியதே. அதனினுளும் கவிஞர் மு.தங்கராசன் அவர்கள், ஒவ்வொரு மனிதருக்கும் சக நட்பாக அமைந்திருக்கும் சமூக அமைப்பினையும், சமூக உறவுகளின் வழிக் கட்டமைக்கப்படும் இன எழுச்சியையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதுவே கவிஞரின் படைப்பிலக்கியச் சிறப்பிற்கு மிகை சான்றளிக்கக் கூடியதாக அமைகின்றது.

அறமும் பகுத்தறிவும்

"பகுத்தறிவு என்ற சொல்லுக்கு பகுத்தறிதல், பகுத்துணர்தல் என தமிழ் அகரமுதலிகள் பொருள் உரைக்கின்றது. பகுத்தறிவுள்ளவன் என்பதற்குப் 'பகுத்துப் பார்ப்பவன்' என்ற விளக்கமும் கொடுக்கப்படுகிறது. பகுத்தறிவு என்றால் விவேகம், வியாசம் எனவும் பொருள் கூறப்படுகிறது. இந்த இரண்டும் வட சொற்களாகும். எனவே பகுத்தறிவு என்பது ஒரு பொருளைப் பகுத்து வகைப்படுத்தி, அறிதல் என்பது பொருள் ஆகும். பகுத்தறிவு எனப்படுவது, பொருட்களின் நிகழ்வுகளின் கருத்துக்களின் கூறுகளை அவதானித்து, ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து சான்றுகளோடு புறவய நோக்கில் எண்பிக்கக்கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழிமுறையையும் இதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலையும் குறிக்கின்றது"[38]. பகுத்தறிவின் நோக்கம் மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவதே ஆகும். அவ்வகையில் பகுத்தறிவாதத்தை முன்னிறுத்தும் போக்கினை மு.தங்கராசனின் இக்கவிதைத் தொகுப்பில் காணமுடிகின்றது.

"பகுத்தறிவின் உதயத்தால் பலித்த ஏற்றம் / பரம்பரம்பரையாய்ப் பழங்கதையாய் இருந்து வந்த /பகுத்துணர்வே இல்லாத பழக்கக் கொள்கை ஃ பகுத்துணர்ந்து பாழறிந்து பதரின் நீக்கம் / தொகுத்திட்ட நூலறிவு துலக்கம் பாதை / தொடர்ந்திட்ட அவலங்கள் தொலைத்த போக்கு"[39] எனும் கவிதைவரிகள் ஆசிரியரின் பகுத்தறிவிற்குச் சான்று பகர்கின்றன. பகுத்தறிவுச் சிந்தனையால்தான் சமூகம் ஏற்றமும் மாற்றமும் பெறும் என்கிறார். புனையப்பட்ட பழங்கதைகளும் பகுத்தறிவால் துலக்கம் பெற்று, ஏற்றத்தாழ்வொன்னா சமூகம் உருவாகும் என்பதே கவிஞரின் எண்ணம். சமூகத்தில் "பேருக்கு பொதுநலங்கள் பிதற்றாத்தன்மை"[40] உருவாகவேண்டும் எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

"அணையாத ஜோதிவிளக் கருளித் தந்த / ஆன்மீக நெறியாளர் அரிய சான்றோர் / வினையாகி நின்றொளிக்கும் விளங்கிக்

காணும் / வெவ்வேறு திறத்தமையும் விளைவின் மாந்தர் / தனையெண்ணித் தாம் வருத்திச் சாதிபேதத் / தன்மைகளை ஒழிந்துவிட முனைந்த சான்றோர் / இணையாகும் சமத்தவத்தை எடுத்துச்சொல்லி"[41] என்ற கவிதைவரிகள் இறைநெறியியல் வழியாகக் கற்பிக்கப்படும் சமத்துவத்தைப் பிரதிபலிக்கின்றன. இக்கவிதை முழுவதுமாக வள்ளலாரின் இறையனுபவத்தையும், அறவாழ்வையும் படைப்பாக்கி நமக்குத் தந்துள்ளார். இதனது நோக்கம் வள்ளலாரின் அறவாழ்வை மனிதர்கள் ஒவ்வொருவரும் பின்தொடரவேண்டும் என்பதேயாகும். இதன் தொடர்ச்சியாக, "நாட்டினது முன்னேற்றநம் நாளும் எண்ணி / சட்டத்தை மதிக்குசம தருமப்பண்பே / சார்ந்துவரும் குடிமைசன் மார்க்கந் தானே"[42] எனக் குறிப்பிடுகின்றார். மனிதசமூகம் அனைத்திற்கும் சட்டமும் நீதியும் சமமானது பொதுவானது என்றும், சமதருமப் பண்பு அறவழிநெறிப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார் கவிஞர். மேலே எடுத்துக்காட்டிய அனைத்துக் கவிதைகளிலும் கவிஞரின் அறநெறிச் சிந்தனை மேலோங்கி நிற்கின்றன.

முடிவுரை

கவிஞர் மு.தங்கராசன் அவர்களின் 'உதயம்' கவிதைத் தொகுப்பு அறத்தை வலியுறுத்தும் 'கவிதை அறநூல்' என்று கூறினால் அதுமிகையாகது. அவ்வகையில் கவிஞர் எத்தளத்தில் நின்று, எதைப் புனைந்தாலும் அதனினுள் அறம் நிச்சயமாக ஊடாடி நிற்கும் என்பது அவரது படைப்பை வாசிக்கும் யாவருக்கும் புரியும். இக்கவிதைத் தொகுப்பில் ஆசிரியர் பேசிய அறச்சிந்தனைகள் எக்காலத்திற்கும் பொருந்தும் தன்மையன. எனவே கவிஞரின் இக்கவிதைத் தொகுப்பு காலத்தால் அழியாத, ஆகச்சிறந்த படைப்பாக நிலைத்திற்கும் என்பது உண்மை.

உதயம் கவிதைத் தொகுப்பினை வரலாற்றுப் பின்புலத்தில் (சிங்கை வரலாறு), சமூகவியல் இயங்கியல் பார்வையில், தத்துவார்ந்த நிலையில், பொதுவுடைமைவாதப் பின்புலத்தில், உளவியல் பார்வையில், இறையியல் பின்புலத்தில் இன்னும் நுணுக்கமாக ஆய்வு செய்வதற்கு இடமுண்டு. குறிப்பாக, இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இருமைகளை மட்டும் கருத்தில்கொண்டு ஆய்வு செய்யலாம்.

அடிக்குறிப்புக்கள்

நா.பாலுசாமி(மு.ப.ஆ.), 'வாழ்வியற்களஞ்சியம்'(பகுதி.2), ப.40.

https://ta.wikipedia.org >wiki > dt. 15.10.2021

நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி (செம்பதிப்பு), ப.154.

ஞா.மாணிக்கவாசகன்(உ.ஆ.), 'புறநானூறு', பா.எண்.31, ப.56.

மேலது, பா.எண்.65, ப.229.

மேலது, பா.எண்.312, ப.

சு.செல்லப்பன்(உ.ஆ.), 'சிலப்பதிகாரம்', பதிகம், பா.வ.எண்:55, ப.22.

புலியூர்க்கேசிகன்(உ.ஆ.), 'மணிமேகலை', பாத்திரம் பெற்ற காதை, பா.வ.எண்:96, ப.114.

பாரதியார் கவிதைகள், ப.36.

மு.தங்கராசன், 'உதயம்', ப.173.

மேலது, ப.138.

மேலது, ப.50.

மேலது, ப.42.

மேலது, ப.49.

மேலது, ப.72.

அ.மாணிக்கம்(உ.ஆ.), 'திருக்குறள் தெளிவுரை', குறள்.எண்.298, பக்.60-61.

‘ஏலாதி’, பா.எண்.6.

அ.மாணிக்கம்(உ.ஆ.), ‘திருக்குறள் தெளிவுரை’, குறள்.எண்.195, பக்.40-41.

பிங்கலமுனிவர், ‘பிங்கல நிகண்டு’, நூ.எண்.580, ப.492.

மு.தங்கராசன், ‘உதயம்’, ப.35.

மேலது., ப.38.

மேலது., ப.40.

மேலது., ப.26.

மேலது., ப.79.

மேலது., ப.52.

மேலது., ப.56.

மேலது., ப.51.

மேலது., ப.84.

மேலது., ப.130.

மேலது., ப.149.

மேலது., ப.172.

மேலது., ப.28.

மேலது., ப.104.

மேலது., ப.173.

மேலது., ப.164.

மேலது., ப.165.

மேலது., ப.166.

http://nakkeran.com > what –is –meant – rationalism, dt.15.10.2021.

மு.தங்கராசன், ‘உதயம்’, ப.50

மேலது., ப.50.

மேலது., ப.59.

மேலது., ப.133.

தமிழறிஞர் மு. தங்கராசனின் 'தமிழ் எங்கள் உயிர்' கட்டுரைத் தொகுப்பில் தமிழுணர்வு

முனைவர் பெ. கி. கோவிந்தராஜ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மஜ்ஹருல் உலாம் கல்லூரி
ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம், தமிழ் நாடு

முன்னுரை

இந்நூற்றாண்டில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் வளர்ச்சிக் கூறுகளுள் ஒன்று உரைநடைத் தமிழாகும். காலந்தோறும் மொழிநடை மாறிக் கொண்டே வருகிறது. உரையாசிரியர்கள் காலத்தில் வளர்ந்தோங்கிய உரைநடை வீச்சு இன்று மேன்மேலும் செழுமைபெற்று, எளிமையுடனும் எழிலுடனும் விளங்குகின்றது. எண்ணத்தையும் உணர்ச்சியையும் உரியமுறையில் பிறர் உளங்கொள எடுத்துரைக்கும் போது தான் படைப்பாளரின் மொழி ஆளுமைத்திறன் நன்கு புலனாகும். உயிர்த்துடிப்புடன் தம் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் சிலருக்கே அமைகின்றது.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித்
தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு"

(கு. எ.424)

என்றார் வள்ளுவர்.

அரிய பொருளை எளிமையாகச் சொல்ல வேண்டும். பிறர் கூறும் நுட்பமான பொருளையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்விரண்டுமே அறிவு என்றார் வள்ளுவர். உணர்த்தும் திறனும், உணரும் திறமும்தான் அறிவாகும்.

தூய சொற்களின் கூட்டுறவால் மலர்வது அழகிய மொழிநடை கருதும் பொருளுக்கேற்பச் சொற்களைத் தேர்வதில் விழிப்பும், புலமையும், பயிற்சியும் தேவை. இலக்கண, இலக்கிய, பிறமொழிப் புலமைப் பின்னணியோடு உருவாகும். நூலின் நடை நன்மை இன்புறுத்தும்; நூற்பொருள் அறிவுப் புலமையைச் செழுமையாக்கும். நாடறிந்த நற்றமிழ்த் தமிழறிஞரும் பல்துறைப் புலமையாளரும் உரை வீச்சில் வல்லவருமான சிங்கப்பூர்த் தமிழறிஞருமான மு.தங்கராசனின் கட்டுரைத் தொகுப்பு என்னும் இந்நூலில் வெளிப்படுகிற தமிழுணர்வைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பண்பாடு

பண்பாடு என்பது அகத்தில் தோன்றுவது ஆகும். நாகரிகம் என்பது புறத்தோற்றத்தில் அறியப்படுவது ஆகும். ஆங்கிலத்தில் பண்பாடு Culture என்றும், நாகரிகம் Civilization என்றும் வேறுபடுத்தி அழைக்கப் பெறுகின்றது. தமிழில் நாகரிகம் எனும் சொல் கண்ணேட்டம் எனும் பொருளில் பழந்தமிழில் இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளது. "நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்". நண்பர்கள் நஞ்சு உண்ணத் தரமாட்டார்கள்; தந்தால் வாங்கி உண்பது நாகரிகம் என்றனர். இன்றோ அச்சொல்லின் பொருள் நடை, உடை, பாவனைகளைக் குறித்து நிற்கிறது பண்பாடு ஒரு வாழ்வியல்

நெறி எனக் கலித்தொகை கூறும் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" (கலித்.16) இக்கருத்தை நற்றிணை, "பயனும் பண்பும் பாடறிந்து ஒழுகல்" (நற்.160 என நவில்கிறது. மக்களை விலங்குகளிலிருந்து பிரித்தறியச் செய்வது பண்பாடு. பண்பாடுடைய மக்கள் இருப்பதால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பார்கள். இக்கருத்தை ஆசிரியர் மு. தங்கராசன் "தமிழ் எங்கள் உயிர்" என்னும் கட்டுரைத் தொகுப்பில் கீழ்க்காணுமாறு உரைக்கிறார். மாணவர்கள் முன்னேறுவதற்கு முதன் முதலில் அவர்களுக்குத் தனித்த பல சிறப்பு மிக்க பண்புகள் இருக்க வேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு, ஏற்ப ஒழுக்கம் உயர்வு தருவதால், நாம் அதனை நம் உயிரினும் மேலாகக் கருதிப் போற்ற வேண்டும். எவ்வளவுதான் நாம் கற்றிருந்தாலும் கல்வி என்னும் விருட்சத்தின் உச்சாணிக் கிளையிலேயே கூடு கட்டியிருந்தாலும், ஒழுக்கம் (பண்பாடு) என்று ஒன்று இல்லையாயின், கிளை முறிந்து, நாம் கீழே விழுவது திண்ணம். ஆகவே ஆசிரியர் பண்பாடோடு நடந்துக் கொள்ளவேண்டும் என்கிறார். (தமிழ் எங்கள் உயிர் ப.70)

கூடி வாழ்தல்

உலகின் தனிமனித வாழ்க்கை என்பது எவருக்கும் இல்லை. எந்தவொரு தனி மனிதனும் பிறர் உதவியின்றித் தான் ஒருவரே இந்த உலகில் தனித்து இயங்கிட முடியும் என்று சொல்லவே முடியாது ஒருவருக்குப் பிறர்தம் உதவி "ஒருபொருள் ஞாலத்து உளநாள் வரையும் வேண்டப்படும்" என்பது உலகியல் சான்றோர்களின் தெள்ளிய தீர்ப்பாகும். காக்கைகள் போல் கூடிவாழ்தல் வேண்டும் என்பதனை,

"உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே"

(கு இ ப. 17)

என்னும் பாடல், தங்கள் வருத்தத்தைப் பகிர்ந்து நமக்கு உணர்த்துகிறது. உணவை உண்ணும்போது, ஒரு காக்கை அனைத்து உறவுகளையும் கரைந்து அழைத்து உண்ணும். தம் இனத்தில் ஒரு காகம் இறந்திடின் கூட்டமாகச் சேர்ந்து அழும். அத்தகு ஒற்றுமைக்குப் பெருமையூட்டும் காக்கை வாழ்வின் சிறப்பை அழ வள்ளியப்பா காட்டுகிறார். மேலும், ஒருங்கிணைந்து வாழும் வாழ்வின் செம்மையையும், உழைப்பின் பெருமையையும் தேன்கூடு காட்டுகிறது என்பதை ஆசிரியர்,

"சேர்ந்தொன்றால் வாழ்வதனால்
சேமம் பெருகு மெனத்
தெரிவிக்கும் தேனீயின்
தேன் கூடு பார்"
"தேனினை வண்டினைப் போல்
தீற்தமிழ்க் காவியம் போல்
மானிடர் நானிலத்தில் – கூடி
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்"

(கு.இ. ப. 91)

எனவும் காட்டுகிறார். தேனீக்களின் கூடு, கூடி வாழும் பண்பு ஆகியவற்றை எளிய இனிய கவிதை வரிகளில் எடுத்துரைத்து, மாணவர்களின் உள்ளத்தில் ஒன்றுபட்ட வாழ்வின் சீர்மையினைப்

புலப்படுத்துகிறார். இதேபோல் எறும்புகள் கூடி வாழும் சிறப்பினை நாக முத்தையா என்னும் ஆசிரியர் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்.

"எறும்பு நல்ல எறும்பு
இணைந்து வாழும் எறும்பு
கூடி வாழும் பண்பு
கொண்டிருக்கும் எறும்பு"

(சி. அ, ப. 54)

எனச் சுட்டிக்காட்டி, மாணவர்களின் உள்ளத்தில் கூடிவாழும் பண்பினை விதைக்கிறார்.

மக்களனைவரும் மாக்களோடனையராய் வாழ்ந்த கற்காலத்தில், மனித குலத்தின் அன்றாட இன்றியாமையாத் தேவைகளின் அடிப்படையில் முளைவிட்ட ஒற்றுமை, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, செழித்து அடர்ந்து, படர்ந்து, விரிந்து காட்சியளிக்கின்றது. கற்காலத்தில் கனிந்த இந்த ஒற்றுமைதான் இன்றைய இருபதாம் நூற்றாண்டுப் பொற்காலத்தில் மனிதகுலம் அடைந்திருக்கின்ற மகத்தான அறிவியல் - அரசியல் – பொருளியல் முன்னேற்றங்களுக்கும், நாகரீக முதிர்ச்சிக்கும் அடிப்படைக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்." கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" - என்று கூடி வாழ்ந்த நன்மை உணராமலாச் சொன்னார்கள் நமது முன்னோர்கள்....? என்று தமிழ் எங்கள் உயிர் என்னும் கட்டுரைத் தொகுப்பில், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை விளக்குகிறார். (தமிழ் எங்கள் உயிர் ப. 7)

மொழி

ஒரு நாட்டு மக்களின் நாகரிக நிலையை " உள்ளங்கை நெல்லிக்கனி போல்" பிற மக்களுக்கு எடுத்துக்காட்டுவது அம்மக்களின் மொழியே ஆகும். அம்மொழியை அறிந்த சிறந்த அறிஞர்களால் மட்டுமே, அம்மக்களின் நாகரிக நிலையை முழுமையாக அறிய முடியும். மொழி என்பது தொடர் பாடலுக்கு பயன்படுகின்ற ஒரு முறைமை ஆகும். இது ஒரு தொகுதிக் குறியீடுகளையும் அவற்றை முறையாகக் கையாளுவதற்கான விதிமுறையும் கொண்டுள்ளது. மொழியானது நுண்பொருள் பாகுபாடும், பகுத்தறிவை வளர்க்கக்கூடிய இலக்கணம் கொண்டதாகவும் இருந்தால் அதுவே சிறந்த மொழி.

மொழியானது பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடம் பெயர்தல் மற்றும் காலத்திற்கேற்ப மாற்றம் எனப் பல மாறுதல்களை உள்ளடக்கியது. எந்த ஒரு மொழி மாற்றம் அடையாமல் இருக்கிறதோ அந்த மொழி சிறந்த மொழி எனப்படும். காலத்திற்கு ஏற்றார் போல் மாறும் மொழியே வாழும் மொழி" ஆகும். தமிழ்மொழி காலந்தோறும் வளர்ச்சி பெற்ற மொழி ஆகும். பல தமிழறிஞர்கள் தமிழ் மொழியை ஆய்வு செய்து அதனை வளரச் செய்துள்ளனர். இதற்கு (எ.கா) வீரமாமுனிவர் போன்றவர்களை குறிப்பிடலாம்.

பழங்காலத்தில் வாழ்ந்த வந்த முதற்கால மக்கள், இக்காலப் புலவர்களைக் காட்டிலும் மொழி அறிவில் சிறந்தவர்களாக விளங்கினர். காட்சி, கருத்து என்றும் இரு வகைப் பொருள்களையும் நுணுக்கி ஆராய்ந்து, அவற்றின் சிறப்பியல்புக்கு ஏற்ப அழகிய பொருட்களை, குறிகளாக வேறுபடுத்தல், ஒன்றுபடுத்தல், இனப்படுத்தல் என்னும் மும்முறையில் அமைந்திருக்கின்றனர். தமிழ்மொழியில் இடுகுறியின்மை என்பது மிகச் சிறந்த ஒன்று. இதைதான் தொல்காப்பியர்,

“எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே” என்கிறார். ஆனால், பல சொற்கள் ஒன்று சேர்ந்தால் மட்டுமே பொருள் தோன்றாது. அவற்றை ஆழ்ந்து ஆராய வேண்டும். இதனை தொல்காப்பியம்,

> “**மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா**”
>
> **(தொல் -877)**

இடுகுறியில்லாமல் ஒரு தாய்மொழியை உருவாக்கியது. இது அக்கால நுண்மக்களின் அறிவைக் காட்டும். அதோடுமட்டும் அல்லாமல் தமிழில் எல்லாச் சொற்களும் இயற்கையாக அமைந்தவையாம்.

“ஆடையின்றிப் பிறந்த மனிதன் ஆசையின்றிப் பிறக்கவில்லை!” என்றார். கவிஞர். மனிதன் தன் வேட்கையினை – விழைவினை – கருத்தினைப் புலப்படுத்துவதற்கும், புரிந்து கொள்ளச் செய்தற்கும் மொழி என்றவொன்று தேவைப்பட்டது. சைகைகளின் மூலமும், ஒலி வழியும் கருத்துக்களை உணர்த்திக் கொண்டான். வந்தவன் ஒலியையே மொழியாக்கிக் கொண்டான், ஒலியானது வரிவடிவம் பெற்று எழுத்தாகி, சொல்லாகி, சொற்றொடராகி, மொழியாகி மலர்ந்து மணந்து, இவ்வாறு தோன்றிய உலகின் பழமை வாய்ந்த மொழிகளுள் பைந்தமிழாம் பழகு தமிழும் ஒன்று!

பழம் பெருமை வாய்ந்த மொழிகளுள் உலகில் சிறந்து, செழித்து, செம்மாந்த நிலையில் இலங்கி வருவது செந்தமிழ் மொழியாகும். ஒரு மொழி வளம்பெற்று விளங்கிட வேண்டுமென்றால், அம்மொழிக்கு இலக்கியங்கள் நிறைந்திருக்க வேண்டும். எண்ணிலடங்கா இலக்கியச் செல்வங்கள் இருப்பதனாலேதான், “என்று தோன்றினளோ இந்த மூதாதை” எனவும், ”மூவாச் சாவா முத்தமிழ்” எனவும் கற்றறிந்த பெருமக்கள் போற்றிப் புகழ்ந்து கூறுகின்றனர். உலக மொழிகளிலேயே தமிழ்மொழியில்தான் இலக்கியங்களும், இதிகாசங்களும், மறை நூல்களும் மிகுந்து காணப்படுகின்றன. மனிதன் மனிதனாக வாழவேண்டும். என்பதற்குரிய மகத்தான கருத்துக்களைச் சொல்லத்தான் இலக்கியங்களும், புராணங்களும், வேத நூல்களும் தோன்றின என்பது மொழிநூல் வல்லார்தம் கருத்தாகும். இதனை ஆசிரியர், மொழியின் இன்றியாமையைத் தாம் எழுதிய கட்டுரை தொகுப்பாகிய தமிழ் எங்கள்“ உயிர் என்னும் நூலில் விளக்கியுள்ளார். (தமிழ் எங்கள் உயிர். ப. 36).

முடிவுரை

உலகில் அறிவோடு அருளியல் வாழ்நெறிகளையும் போற்றிய நடப்பியல் தேசியவாதி சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசன் அவர்கள். இவருடைய தமிழ் எங்கள் உயிர் என்னும் கட்டுரைத் தொகுப்பில், பல்வேறு துறைகளைச் சார்ந்த கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆழ்ந்தகன்ற தமிழ்ப்புலமை இவரிடம் காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள் முதல் மகாகவி பாரதியார் பாடல்கள்வரை மேற்கோள் காட்டி, நுட்பமாக விளக்குகின்ற ஆய்வியல் திறன் வெளிப்படுகிறது. ஆங்கிலமும் தமிழும் நன்கறிந்த சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசன் அவர்கள், தாய் மொழியின் மாண்பை அனைவரும் அறியவும் வகைச் செய்தவர். இவர் மண்ணில் நல்ல வண்ணம் வாழ முற்பட்டாலும் உலகத்தோடு ஒட்டி ஒழுகி வாழவேண்டிய நிர்பந்தத்தில் உள்ள மனிதன் தான் என்ற வட்டத்தை உலகு என்ற

வட்டத்தோடு பொருந்தியும் உரசல் இல்லாது இயக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பதையும் தமது கட்டுரைத் தொகுப்பில் விளக்குகிறார். மேலும், அடிப்படைத் தேவைகளாம் உணவு, உடை, உறையுள் போன்று தேவையாகிப்போன மொழியன் வளமும் வீச்சும் காலந்தோறும் தோன்றிய இலக்கியத்தில் வழி உணரப்பெறும். மனிதனின் பரிமாண வளர்ச்சிக்கேற்ப அவனது மொழியிலும் பலவளர் சிதை மாற்ற நிலைகள் காணப்பட்டன என்கிறார் ஆசிரியர்.

பயன்பட்ட நூல்கள்

மு.தங்கராசன், தமிழ் எங்கள் உயிர், தமிழவேள் நாடக மன்றம், பிளாக் 733.# 03-308, யஸியுன் அவனிவு, சிங்கப்பூர் 760 733.

அழ. வள்ளியப்பா, குழந்தை இலக்கியம், வானதி பதிப்பகம் 1979, 23, தீன தாயள தெரு, சென்னை 17.

திருவள்ளுவர், திருக்குறள், நர்மதா வெளியீடு, தி. நகர் சென்னை-17.

புலியூர்க்கேசிகன் (தெளிவுரை), தொல்காப்பியம், சுபா பதிப்பகம், பிளாக் எண் 11 ஜெயழனட சுதர்சனா, அபார்ட்மென்ட்ஸ் மாடம்பாக்கம், சென்னை – 73.

மு.தங்கராசனின் சிறுகதைகளில் 'பெண்கள் குறித்த மரபுவழிக் கருத்தாக்கங்கள்'

முனைவர் ம.செங்கோல் மேரி
தமிழ் உயராய்வு மையம், உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

மனிதகுலத்தின் வளர்ச்சிக்கான அங்கமாகத் திகழும் பெண், அவள் பின்பற்ற எத்தணிக்கப்படும் பண்பாம்சங்களானவை சகமாகப் பயணிக்கக்கூடிய மற்றொரு பாலினத்தின் எண்ணக் கருத்தாக்கத்திற்குள் பல்வேறுபட்ட சிந்தனாவாதங்களை விதைத்து வளர்த்தெடுக்கப்பட்டு இன்று வரை நிலைபெற்று நிற்கின்றன. இத்தகு அம்சங்களோடு வளர்ந்தெழும் மானுடம் உலகின் எத்திசைக்குச் செலினும் தம் எண்ண ஊடாட்டத்தில் விதைக்கப்பெற்றுள்ள ஒழுக்கக் கண் கொண்டுதான் நோக்கவியலும் என்பதே எதார்த்தம்.

தொன்மையான இலக்கண நூல்களும், அவற்றை அடியொற்றி எழுந்த இலக்கியங்களும் பெண் குறித்த ஒழுக்க முறைகளை வரையறைப்படுத்திச் செல்கின்றன. இத்தகு அடிகோலினை அளவையாகக் கொண்டே ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண் என்பவள் அணுகப்பட்டாள். சங்க அகப்பாக்களில் உடைமைப் பொருளாகவும், நுகர்வுப் பொருளாகவும் சித்திரிப்புற்ற பெண்மை, புறப்பாக்களில் தன் தந்தை, தமையன், மகனின் வீரத்தை உலகோர்க்கு உணர்த்தும் நோக்கில் மூதின் மகளிரென, வீரமிக்கவர்களாகக் காட்சிப்படுத்தப்பட்டார்கள். அதற்கடுத்துத் தோற்றம் பெற்ற கீழ்க்கணக்கு நூல்களும், பக்திப்பனுவல்களும் சிற்றின்பத்திற்கான பெண்மையைத் துறந்து வாழ்தலைக் கடனென வலியுறுத்தின.

காலங்காலமாக முன்னோரால் அவரவர் எண்ண அலைகளுக்குள் திணிக்கப்பட்ட சிந்தனா முறைகளானவை, சமகாலகட்ட அதிர்வலைகள் தாக்குறும்போது புதிய மறுமலர்ச்சி எண்ணங்கள் தோற்றம் பெறுவதற்கான வழி பிறக்கும். சான்றாக, தொல்காப்பியர் தம் இலக்கணத்தில், **"அச்சம் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய"** என்கிறார். இந்நான்கு குணாம்சங்களும் சிறந்து இருக்கவேண்டும் என்றும், இவையே பெண்மைக்குரிய இலக்கணங்களாகவும் சுட்டிக்காட்டுகின்றார். இத்தகைய தமிழ்மரபில் கிளைத்தெழுந்த பாரதி, பெண் விடுதலை குறித்தும் பெண் சமத்துவம் குறித்தும் உச்சத் தொனியில் குரல் எழுப்பியபோது, 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்கிற மாற்றுக் கருத்தினை முன்வைத்தான். ஆயினும், அவனையும் அறியாமல், அவன் எண்ண ஆழத்தில் பதிந்திருந்த பெண் சார்ந்த வார்த்தை அடுக்குகள், அதாவது தன் சிந்தனாவாதத்திற்கு முரண்பட்ட பதிவுகளை அவன் தன் கவிகள் தாங்கி வருவதும் கண்கூடு. பாஞ்சாலி சபதத்தில், **"நெட்டை மரங்களென நின்றார்கள் பெட்டை புலம்பல்கள்"** என்கிற வரி, மேற்கூறிய கருத்தினை விளக்குவதற்கு அரண் சேர்க்கும்.

இவை போன்ற மரபார்ந்த பொருண்மைகளை உள்வாங்கித் திகழும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுள் மு.தங்கராசன் அவர்கள் குறிப்பிடத்தகுந்தவர். பழந்தமிழர் கடல் கடந்து வாணிபம் செய்திருப்பினும், ஆங்கிலேயரின் ஆட்சியின்போது, குறிப்பாக பல நாடுகளில் காலனிய ஆதிக்கம் மேலோங்கி திகழ்ந்த சூழலில், காலனிய தேசங்களில் பணிசெய்வதற்கென்றே அழைத்துச் செல்லப்பட்டோரில் தமிழர் அதிக எண்ணிக்கையில்

இடம் பெற்றனர். மலேயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழர்கள் தினக்கூலிகளாகவே பிழைப்பு நடத்தினர். இவ்வாறு பணியாற்றிய அடுத்தடுத்த தலைமுறையினரே கல்வியும் புகழும் அடைந்து, உயர்பதவிகளில் கோலோச்ச முயன்றது. இவர்கள் தங்களது வாழ்வியலை இலக்கியமாக வடிக்கத் தொடங்கினர். அவ்விலக்கிய வடிவங்களுள் ஒன்றான சிறுகதை வடிவத்தினைப் பெரிதும் கையிலெடுத்த மு.தங்கராசன் அவர்கள், கதையின் மையப்பொருண்மைகளை சிங்கப்பூரில் வாழும் மனிதர்களின் வாழ்வியல், சகமனிதர்களோடு கொண்டுள்ள உறவு சார்ந்த புரிதல்களைக் கருவியாகக் கொண்டே படைத்தளித்துள்ளனர். சிங்கப்பூரில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய இவர், படிப்படியாக வளர்ச்சி பெற்று பள்ளி முதல்வராக, சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட அதிகாரியாகவும் பணி மேம்பாடடைந்தவர். இவர் கவிதைகள், கட்டுரைகள், நாடகத் தொகுப்புகள், சிறுகதைகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் வளங்கள் எனப் பல இலக்கிய வடிவங்களில் நூல்களைப் படைத்துள்ளார். இவர் தம் படைப்புகளுள் ஒன்றான 'மலர்கொத்து' எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகளினூடாகத் திகழுரும் பெண்கள் குறித்த மரபுவழிக் கருத்தாக்கங்களை இனங்காட்டுவதாக இக்கட்டுரை அமைவுபடுகிறது.

முரண்பட்ட தாய்மை

இலக்கியவாசிப்பின் நெடியை இத்தொகுப்பின் முதல் கதையிலேயே இனங்காட்டியிருக்கும் ஆசிரியர், துணிச்சல்மிக்க தாய்மை உணர்வைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடாமல், பெண் என்பவள் ஆணைச் சார்ந்து வாழ்பவளாகவும் சித்திரிக்கின்றார். 'உயிர் நண்பன்' என்கிற கதையில் தவறான வழியில் பொருள் சேர்க்கும் தயாநிதியை, அவனது நண்பன் அஞ்சப்பன் திருத்தி நல்வழிப்படுத்துகிறான். தன் மகனின் தீயவழிமுறை கண்டு அதிர்ந்த தாய் அவனை விட்டுப் பிரிகின்றாள். யாரையும் அண்டிப் பிழைக்காமல் சாலையைப் பெருக்கி, பணம் ஈட்டும் தாயைக் கண்ட தயாநிதி மன்னிப்புக் கோரியும் அவனை விடுத்து விலகிச் செல்கின்றாள். தன்னம்பிக்கையோடு உயரிய எண்ணங்கொண்ட தாய்மையைச் சித்தரித்தவர் திருமணம் முடித்த மகன் ராஜன், தன் மனைவி தங்கத்தோடு தனிக்குடித்தனம் செல்கின்றான். அவனின் தாய் தனித்து விடப்படுகிறாள். தான் பெற்றெடுத்த பிள்ளையைக்கூட தாய் கண்களில் காட்ட மறுக்கின்ற மகனின் பாசத்திற்காகவும் அருகாமைக்காகவும் ஏங்குபவளாக 'அன்னையின் குமுறல்' கதையில் இடம்பெறும் தாய் சித்திரிக்கப்பட்டிருப்பதன் வழி, இருவேறுபட்ட குணாம்சம் கொண்ட தாய்மையை இனங்காட்டுகிறார்.

உணர்வுகளை வேரறுக்கும் சொற்பதங்கள்

அயல் தேசங்களில் வசிக்கும் பெண்கள் உணர்வு ரீதியாகவும், பொருளாதார நிலையிலும் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக வாழ்கின்றனர்; என்கிற நோக்கில் புனைவுகள் அமையப் பெற்றிருப்பினும், 'மலடி' என்கிற பழஞ்சொல்லாடல் பெண்ணொருத்தியின் உயிரைப் பறித்திடும் நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளார். **"குத்தல் குத்தூசியாகத் தைத்தது.. அறிவு நேத்திரமிழந்து கிழவி 'மலடிக்கு மசக்கையும் வந்துவிட்டதா' என்றுரைத்தாள் வெடுக்கென்று" (மு.தங்கராசன், மலர்க்கொத்து,ப.28.)** இவ்வார்த்தையைக் கேட்ட அப்பெண், ஊருணியில் தன் உயிரை மாய்க்கிறாள். அவள் கணவனோ 'நான்தான் மலடு' என அரற்றுகிறான். பாதிக்கப்படுபவள் பெண்ணாகவே இருப்பதையும், எத்தகைய நாகரிக மேம்பாடு அடையப்பெற்றாலும் பெண்களுக்கென்றே உருவாக்கப்பெற்ற பதங்கள் எவ்வித மாற்றப்பாடும் இல்லாமல் பிரயோகிக்கப்படுவதையும் இக்கதை உணர்த்துகிறது.

உடல்சார்ந்த கற்பிதம்

பெண்ணிற்கு மட்டுமே வலியுறுத்தப்பட்ட, வலியுறுத்தப்படுகின்றன ஒன்று கற்பு என்கிற சித்திரம். சிரித்துச் சிரித்துப் பேசுபவரின் கற்பு ஆண்களின் பார்வையில் வினாக்குறியை எழுப்புகிறது. 'சிரித்தவள்' எனும் இக்கதையில் 'செல்வமதி' எனும் பெண், கற்பு குறித்தான மதிப்பீட்டைத் தகர்த்து, தன் உடல் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் வேட்டையுடையவளாகச் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றாள். மோகன், குணசீலன், சுந்தர் ஆகிய பல ஆடவர்களோடு நெருக்கமாகப் பழகுகின்றாள். **"அதற்குப் பிறகும் என் உடல் தகிப்பைத் தாங்க முடியவில்லை – என்னால். வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். என் உடல், சுகம் கேட்டது. 'ருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவுவது போல' தேக சுகம் கண்ட என் உடல் அதை நாடுவதில் வியப்பென்ன இருக்கிறது?" (மலர்க்கொத்து, சிரித்தவள், ப.32.)** என்கிறாள் செல்வமதி. 'தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல் கிழத்திக்கு இல்லை' என்கிற தொல்காப்பியரின் வரி, தலைவி தன் உளத்தெழும் இச்சையை தலைவன் முன் உரைத்தல் கூடாது என்கிறது. இருப்பினும், சங்க இலக்கியத்தில், 'கன்றும் உண்ணாது கலத்தினும்படாது எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது பசலை உணீர்' எனும் பாடலும், 'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்' எனும் பாடலும் தலைவி தன் விருப்பத்தை இலைமறைகாயாகச் சொல்வதைச் சுட்டிச் செல்கிறது. இம்மரபின் தொடர்ச்சியாகவே இக்கதையில் இடம்பெறும் தலைவி தன்னிடம் நெருங்கும் ஆடவரிடம் உள இச்சையை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாகவே சித்திரிக்கின்றார்.

'குப்பையிலே குன்றுமணி' எனும் சிறுகதையில் ஆண்களின் தவறுகளை மன்னித்து அருள் செய்யும் உயரிய குணாம்சம் கொண்ட உண்மைத் தன்மை கொண்டோராகவும், பெண்கள் தங்கள் உடல் இச்சைகளை நிறைவுசெய்ய எத்தகு கீழ்நிலைக்கு வேண்டுமானாலும் நகர்வர் என்பதாகவும் மையப்பொருண்மை அமைவுபடுகிறது. வேலன் தன் மனைவியின் தகாத உறவைக் கண்களால் கண்டும் எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாமல், வெறுப்பையோ, வெகுண்ட வார்த்தைகளையோ பிரயோகிக்காமல் அமைதியாக, அத்தவறினை ஆமோதிக்கின்றான். அதோடல்லாமல், **"அத்தான்...! என்று என் மனைவி என் காலில் விழுந்து 'மன்னியுங்கள்' என்று கதறினாள், 'அண்ணா!' என்று அழை. நான்தான் மன்னித்துவிட்டேனே; போ தங்கையே போ சுகமே வாழுங்கள்" (மலர்க்கொத்து, குப்பையிலே குன்றுமணி, ப.52.)** என்று தன் மனைவியின் விருப்பத்திற்கு ஏற்ப, நண்பனோடு அவளை இணைத்து வாழ வைக்கின்ற மகா புருஷனாகச் சித்திரிக்கின்றார்.

முறிந்த பால்

பாலுறவு சார்ந்த சிக்கல்களைத் துணிந்து எதிர்கொள்ளும் பெண்களைச் சித்திரித்த ஆசிரியர், ஆண்களால் வஞ்சிக்கப்பட்ட பெண்களின் நிலையையும் சுட்டிக்காட்டுகின்றார். மோகனாவிடம் நெருங்கிப் பழகிய திருத்தவதாசன். ஆசை வார்த்தைகளைக் கூறி துய்த்த பின், சாதகப் பொருத்தம் இல்லை என்றுரைத்த அம்மாவின் சொல்லை மனத்தில் நிறுத்தி, சேர்ந்து வாழ்ந்த மோகனாவை விடுத்துப் பிரிகின்றான். அவன் பயணப்பட்ட ரயில் விபத்துக்குள்ளானதை அறிந்த மோகனா வாழ்வை இழந்துவிட்டோமே என்று எண்ணிச் சித்தம் கலங்குகின்றாள். ஆனால், திருத்துவதாசனே முறைப்பெண்ணை மணந்து மகிழ்வுடன் தொடர்கிறான் வாழ்வை. மோகனாவோ சித்தம் சிதைந்த நிலையில் சாலையோரவாசியாகின்றாள். இவளின் வாழ்வியலை முறிந்த பாலோடு ஒப்பிடுகின்றார் ஆசிரியர்.

இத்தொகுப்பினுள் இடம்பெற்ற சிறுகதைகளுள் மிக நீண்ட கதையான 'இறைவன்தான் சாட்சி' எனும் சிறுகதை தவிர, பிற கதைகள் அனைத்தும்

வடிவம், உள்ளடக்கப் பொருண்மையில் அமைதி பெற்று இலங்குகின்றன. கதையின் முடிவுகள் தொக்கி நிற்காமல் முழுமையடைவதாக அமைவுற்றுள்ளன. இருப்பினும், கதையினூடாக பொருத்தமற்ற சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக 'மதலைக்கோர் மழலையில்லை', 'கற்பூரத்தைக் கையூட்டாக்கினாள்', 'தவித்தாள் தளிருடலாள்', 'தணற்புழுவாக', 'மாமியின் மனக்கசப்பு மறுமலர்ச்சி பெற்றது' போன்ற சொற்றொடர்கள் சந்தத்திற்காகவே புனையப்பெற்றுள்ளன.

முடிவுரை

மரபுவழிப்பட்ட மனத்திடம் மிக்கப் பெண்மையைக் காட்சிப்படுத்திய ஆசிரியர், தான் வாழ்ந்த தேசத்தில், அன்றைய காலச் சூழலில் எதிர்கொண்ட சாமானியப் பெண்களின் பாலியல் சார்ந்த சிக்கல்களையும், உணர்வுகளையும், ஏக்கங்களையும் சித்திரித்ததோடல்லாமல் கற்பு பிறழ்ந்து வாழும் பெண்களின் வாழ்வியல் நசிந்துதான்போகும் என்கிற மனோபாவத்திலேயே ஒவ்வொரு கதாப்பாத்திரத்தையும் பேச முயன்றிருக்கிறார்.

சிங்கையில் தமிழ்ச் சமுதாயமும் பண்பாடும்

முனைவர் செ. சோபியா பெஞ்சமின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

மு.தங்கராசன் அவர்கள் தனது அமுதத்தமிழ் என்ற கட்டுரைத் தொகுப்பில் சிங்கப்பூரின் சமுதாயப் பார்வையில், அவையடக்கத்தை ஒவ்வொரு கட்டுரையின் முதலில் தவறாமல் ஆரம்பித்து, தான் கூற வந்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். நமது தேசிய விழாக்கள் என்ற தலைப்பில் சிங்கப்பூர் நாற்புறமும் நீரினால் சூழப்பட்டது என்றும் சிங்கப்பூர் இயற்கை வளம் அற்றது என்பதையும் நமக்கு கூறுகிறார்.

சமய பேதங்கள் இல்லை என்பதை எடுத்துக் கூறுகிறார். சிங்கப்பூரில் வாழும் தமிழ் மக்கள் சீனர்கள், மலாய்க்காரர்கள் அவர்களின் கலாச்சாரம் பண்பாடு பற்றி கூறும் ஆசிரியர் சிங்கப்பூர் மக்களின் கலச்சாரப் பண்பாட்டைக் கூறவில்லை.

விழாக்கள்

சிங்கப்பூரில் வாழும் மக்களின் சில விழாக்களை சிங்கப்பூர் அரசாங்கம் தேசிய விழாக்களாக நியமித்து விடுமுறை அளித்துள்ளது. தீபாவளி, நோன்புப் பெருநாள், சீனப்புத்தாண்டு, கிறிஸ்துமஸ் என இந்த விழாக்களுக்கு விடுமுறை அளித்துள்ளன வரவேற்கிறோம். என்றாலும் சிங்கப்பூர் மக்களின், விழாக்கள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.

சிங்கப்பூர் பிற நாட்டு மக்களுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அவர்களின் உணர்வுகள் மதிக்கப்படுகின்றன என்று கூறி, விழாக்கள் கொண்டாடப்படுகின்ற விதத்தினையும் சிறப்பாக எடுத்து இயப்புகின்றார்.

இளையோர்களின் மனநிலை

இன்றைய இளைஞர்களின் பண்புகளை வேதனையுடன் கூறிச் செல்கிறார். கண்ணதாசன் பாடல் வரிகளையும், திருக்குறளையும் கட்டுரையில் எடுத்துகாட்டி உணர்த்துகிறார். கண்ணதாசன் பாடல் வரிகளிலிருந்து குழந்தையாக இருக்கும் பொழுது நன்கு உறங்க வேண்டும்; வளர்ந்து விட்டால் தூங்குவதற்கான நேர காலம் இருக்காது என்கிறார். ஓடியாடி விளையாடும் போது உறக்கம் வராது, பள்ளிப்பருவத்தில் தூக்கமிருக்காது, இளம் வயதில் பலவித எண்ணங்கள், மனம் நிலையில்லாமல் அலையும் தன்மையைக் கூறுகின்றனர். மேலும், இளம்வயது இளைஞர்கள் பெரியவர்களின் புத்திமதிகளை நேருக்கு நேராக இகழ்ந்து அவர்களின் மனதைத் துன்பப்படுத்துகின்றனர். அது எல்லா இடங்களிலும் நடக்கிறது. காலத்தால் அழியாத 'திருக்குறளும்' மனம் போன போக்கில் எந்த ஒரு செயலையும் செய்யக்கூடாது என்பதைக் கூறிற்று. மேலை நாட்டுக் கலாச்சாரத்தின் மீது மோகங் கொண்டு, தறி கெட்டு அலைகின்றனர். இளம் வயதினரை ஆட்டிப் படைக்கும் போதைப் பொருள் பழக்கம், பண நுகர்தல் மற்றும் உல்லாச ஆடல் என அநாகரிகப் பழக்கங்களில் சிக்கி, தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டு இருக்கின்றனர்.

இவர்களை நல்வழிப்படுத்த சிங்கப்பூர் அரசாங்கம் இராணுவச் சேவையைக் கட்டாயப்படுத்தி உள்ளது. அதன் காரணமாக குற்றச் செயல் புரிவோரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்து உள்ளதாகக் கூறுகிறார். அதுமட்டுமின்றி, அந்தச் சட்டத்தை பெண்களுக்கும் நடைமுறைபடுத்த வேண்டும் என்றும் கூறகிறார். வாழ்க்கையில் கறையில்லாமல் வெள்ளை ஆடை போல தூய்மையாக வாழ மூதறிஞர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.

இந்த கட்டுரையின் வாயிலாக, சிங்கப்பூரில் கலாச்சரத்தின் சீர்கேட்டை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். அதுமட்டுமின்றி சீர் கேட்டை தடுப்பதற்கான வழிகளையும் சிங்கப்பூர் அரசு மேற் கொண்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இன்றைய இளையோர் தம் மனப்போக்கு என்ற கட்டுரையில் திரைப்பட மயக்கம், ஃபேஷன் என்ற பெயரில் நாகரிகம் அற்ற செயல், இறையருளின் பெயரால் பண்பற்ற செயல்களை செய்தல், மனக்குழப்பம், அகத்தூய்மை – புறத்தூய்மை அற்றோராய் அறிவு மயக்கம் கொண்டவர்களாய், குறிக்கோள் இல்லாதவர்களாய் எழுபத்தைந்து விழுக்காடு மக்கள் வாழ்ந்து வருவதாக ஆசிரியர் பதிவு செய்கிறார். “உண்டாலம்ம இவ்வுலகம் “என்னும் புறநாறூற்றுப் பாடற் பொருளால், இனம் சார்ந்த மரபுவழிப் பண்பாடுகளை இருபத்தைந்து விழுக்காடு மக்கள் கடைப்படிப்பதால் தான் சமுதாயக் கணிப்பில் தமிழரும் உயர்ந்து நிற்கிறோம்; இன்று இளையோர்களின் மனப்போக்கு அழிவை நோக்கியதாக உள்ளது என்பதைச் சித்திரித்துக் காட்டுகிறார்.

முதியோர் கல்வி

ஆசிரியர், சிங்கப்பூர் என்பதை சிங்கை என்று அழைக்கிறார். பதினெண் கீழ்க்கணக்குப் பாடலையும், பட்டினத்தார், புறநானூறு பாடல் வரிகளையும் கொண்டு பெற்றோர், கல்வி கற்கும் முறையில் எவ்விதம் தங்கள் குழந்தைகளுக்கு உறுதுணையாக இருக்கின்றனர் என்பதைக் கூறி, முதியோர்க் கல்வி என்ற கட்டுரையை எழுத முனைந்துள்ளார்.

மாணவப் பருவத்தில் படிக்காமல், நெல்மணிகளுக்குப் பதிலாக நெல்மணியின் இடையில் இருக்கும் பதரைப்போல், கல்வியை இழந்து வளர்ந்து வருகின்றனர். கவலைகளற்ற, களங்கமற்ற மனதில்தான் கல்விபதியும் என்பதை எண்ணாமல் காலத்தை இழந்துவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மீண்டும் படிக்க எண்ணும் போது, அவர்களுக்காகச் சிங்கப்பூர் அரசு முதியோர்க் கல்வியை ஏற்படுத்தியது, அதில் பயனடைந்தோர் எண்ணிக்கை அதிகம் என்று ஆசிரியர் முதியோர்க் கல்வியின் பெருமையை நமக்கு எடுத்துக்காட்டிள்ளார்.

பள்ளிப்பருவத்தில் படிக்க முடியாத குடும்பச் சுமையின் காரணமாக கல்வியை இழந்தவர்கள், வேலை செய்துகொண்டே முதியோர் வகுப்புக்களில் சேர்ந்து படித்துத் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இருக்கிறார்கள். அது மட்டுமின்றி, சிங்கப்பூர் அரசாங்கம் தாய்மொழிக் கல்வி, சமுதாயக் கலப்புக் காரணமாக உலகத் தொடர்பு மொழி ஆங்கிலம் மற்றும் கலை, இசை, தொழில், விளையாட்டு என அனைத்துக் கல்விக்கும் முதியோர்க்களுக்கு முன்னுரிமை வழங்குவதைக் கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

சமயக்கல்வி

சமயக்கல்வி என்ற கட்டுரையில், மனித குலம் தோன்றி வளந்து வந்த விதம், நன்மை தீமைகள் அறிந்த விதம் இவை யாவும் இறைவனால் அளிக்கப்பட்டவை என்றும், உலகத்தின் மொழியாகச் சைகை, செய்கை, ஒலிக்குறிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தினர் என்றும், அந்த ஒலிக்குறிப்பு ‘அணுத்திரள் ஒலி எழுத்து ஆகியது” என்ற நன்னூலாரின் நூற்பாவிற்கு இனங்க வரிவடிவம் பெற்றது.

சில மொழிகள் தோன்றி சிறு காலத்திலேயே இல்லாமல் போயின. பழம் பெருமை வாய்ந்த மொழிகளாகத் தமிழ், சீனம், கிரேக்கம் இருக்கின்றன என்று கூறுகிறார். அதில் காலத்தால் அழியாத தமிழ் எண்ணற்ற இதிகாச,காப்பிய நூல்கள் பல அவற்றுள் கரையான் கையால் அழிக்கப்பட்டு எஞ்சியுள்ள நூல்களும் மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் படித்தாலும் படிக்க முடியாதவையாக உள்ளன. அந்த இதிகாச நூல்கள் தான் சமயக்கல்வின் ஆதாரம்.

“சமயக் கல்வி சம்பிரதாயங்களின் வழி மனித சமுதாயத்தைத் திருத்தக்கூடிய ஆற்றல் பெற்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.”

என்ற சமயக் கல்வியின் மேன்மையைக் கூறிச் செல்கிறனர். அமெரிக்க அதிபர் ரீகன் கூறிய கருத்துக்களை முன்வைக்கிறார்.

"சமயத்தை உதறி விட்டால் கிரீக், ரோம் நாகரிகங்கள் வீழ்ச்சியடைந்ததைப் போன்று அமெரிக்க நாகரிகம் வீழ்ச்சி அடைந்து விடும்" சமயக் கல்வி மனிதனை மனிதனாக மாற்றும் ஒரு பற்றுக்கோடாக ஆசிரியர் மு.தங்கராசன் கூறுகிறார். அந்ததந்த சமய நம்பிக்கையுள்ளோர், அந்தந்தச் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடந்தால், சமுதாயம் சிறப்பான இடத்தை நோக்கி நகரும் என்பது அவருடைய கருத்தாக உள்ளது.

நல்லொழுக்க வளர்ச்சியில் சமயக் கல்வியின் பங்கு அளப்பறியது. நீரூற்றுக்கள் எல்லாம் இறுதியில் கடலில் சங்கமிக்கின்றன. அது போல உலக மதங்கள் எல்லாம் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தில் சங்கமிக்கின்றன. மனிதனின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தவே இதிகாசக் கதைகளும் நான்மறை வேதங்களும் உருவாக்கப்பட்டன. பெற்றோர்களின் பேச்சுகளுக்குச் செவிகொடு, ஊனைத்தின்று ஊனை வளர்க்காதே என்று உலக மதங்கள் கூறுவதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

அதற்கு ஆதரவாக நபிகள் நாயகம், மணிமேகலை, கன்ஃபூசியஸ் போன்றவர்களின் கருத்துகள் முன்மொழியப்படுகின்றன. இயேசு கிறிஸ்து கூறிய உபதேசங்கள், மகா பாரதமும், இராம கதையும், பிற இதிகாசங்களும் உணர்த்துகின்ற உண்மைத் தத்துவங்கள் எண்ணிலடங்கா என்று சமயங்கள் மக்களுக்கு போதிக்கின்ற, நல்வழிபடுத்துகின்ற கருத்துக்களை ஆசிரியர் கூறுகிறார். அதனால், அவரின் அனைத்து மதங்கள் பற்றிய அறிவினை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

சமயக் கல்வி கூறும் இறுதிக் கருத்து, "எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமே அல்லாது யாமொன்றறியோம் பராபரமே" என்ற இராமலிங்க வள்ளலாரின் தத்துவத்தை முன்மொழியாக ஆசிரியர் கட்டுரையில் நிறைவு செய்கிறார்.

தமிழரும் தழிழர்ப் பண்பாடும்

'உலகுக்கே நாகரிகம் கற்றுக்கொடுத்த இனம் தமிழ் இனம்' என்று பெருமையாக ஆரம்பித்து, வணிக தொடர்பும், கலாச்சாரத் தொடர்பும் கல் வெட்டுகள் எனப் பலவற்றை எடுத்து இயம்பி உள்ளார். மேலும், உலக நாடுகளில் உள்ள கல்வெட்டுகளும் தமிழ்ப் பண்பாட்டைப் பறைசாட்டுவதாகக் கூறுகிறார். தமிழர், சீனர்களின் பண்பாட்டுப் பெருமிதங்களை எடுத்துக் கூறுகிறார். பணிவன்பு என்பது பழந்தமிழர்களின் பாரம்பரியச் சொத்து; அதற்கு உதாரணமாக, கிராம்ப் புறங்களில் அமைந்திருக்கும் குடில்கள் மிகத் தாழ்வாக அமைக்கப்பட்டிருக்கும். காரணம் பணிந்து வா, குனிந்து போ என்பதற்காக என்று கூறினர். பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் தமிழர்ப் பண்பாட்டிக்கு ஒரு பெரும் ஊன்றுகோள்களாக விளங்குவதை நாம் அறிய முடியும்.

தமிழ்ச் சமுதாயத்தில் காண விரும்பும் முன்னேற்றம்

இளைஞர்களில் ஓரளவு கல்வி கற்றவர்கள் முதல் உயர்கல்வி கற்றோர் வரை அனைவருமே ஆங்கிலத்தில் பேசுவதையே கௌரவமாகக் கருதி உரையாடுகின்றனர், தமிழ்ப் பேசத் தெரியாது என்பது மிகப் பெரிய கௌரவமாகப் பார்க்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். இந்த நிலை நீடித்தால் "வெல்லத் தமிழ் மெல்ல இனிச்சாகும்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை அடிகள் உலகில் செயல்பட்டு நிற்க நேரும். அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட 'மேண்டரின்' இயக்கம் நாடளாகிய நிலையில் நல்ல முன்னேற்றம் கண்டது. பிற இன, சமுதாயத்தினரின் மொழிப்பற்றைப் பார்த்தாவது தமிழ்ச் சமுதாயம் இன்று பின்பற்ற வேண்டும் என்று வேதனைப்படுகிறார்.

இளைய சமுதாயத்தினர் தமிழ் மொழி நூல்களைப் படிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிறார். ஆங்கில மொழியில் திளைத்துக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாய இளைஞர்கள் பழமையைப் பராமரித்துப் பதியனவற்றில் ஏற்புடையவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்ந்து மகிழும் முன்னேற்றத்தைக் காண விரும்புகிறேன் என்று இயம்புகின்றார்.

தொகுப்புரை

கவிஞர் மு.தங்கராசன் சிங்கப்பூர் வாழ் நல்லாசிரியர். அவருடைய அமுதத் தமிழ்க் கட்டுரைத் தொகுப்பில் சமுதாயம் என்ற தலைப்பில், சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கை முறைகளை, ஒழுங்குகளைச் சித்திரித்துள்ளார். ஒவ்வொரு கட்டுரை ஆரம்பிக்கும் பொழுதும் அவையடக்கத்தைப் பின்பற்றி, பணிவன்புடன் மன்னிக்க வேண்டுகிறேன், கூறத் துணிந்தேன் என்ற வாக்கியங்களைக் கூறிச் செல்கின்றார். நமது தேசிய விழாக்கள் என்ற தலைப்பில் சிங்கப்பூரில் பல்வேறு மக்கள் குடியிருக்கிறார்கள் என்றும், அவர்களின் மதம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் அனைத்தும் மாறுபட்டாலும் அவர்களின் விழாக்கள் வரவேற்கப்பட்டு சிங்கப்பூர் அரசாங்கத்தால் விடுமுறை அளிக்கப்பட்டதாக்க் கூறப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் பூர்வீக மக்கள் அவர்கள் பண்பாடு, கலாச்சாரம், மொழி, மதம் கூறப்பட அவர் விழையவில்லை. ஏனெனில், அவர் தமிழராக இருப்பதால் சிங்கப்பூரில் தமிழ் மக்களின் வாழ்வியலைச் சித்திரிப்பதிலேயே அவரின் கட்டுரைகள் முழுவதும் இடம் பெற்றுள்ளன. இளைஞர்களின் மனப்போக்கு முற்றிலும் வேறுபட்டதாக, மாறுபட்டுவிட்டதாக வேதனை அடைகின்றனர். பண்டைகால இதிகாச, புராணக் கதைகள் நல்வழிபடுத்தும் நோக்கத்துடன் படைக்கப்பட்டதவை. அவற்றையெல்லாம் இக்கால இளைஞர்கள் பெருமைப்படுத்துவதில்லை என்று கூறுகிறார். கல்வி என்ற தலைப்பில் முதியோர்க் கல்விக்கான காரணம், முதியோர்க் கல்வியில் ஆர்வம் மிகுந்தவராய் இருக்கக் காரணத்தைக் கூறி, சிங்கப்பூர் அரசாங்கம் முதியோர்க் கல்வியை நடத்தி ஊக்குவிப்பதாகக் கூறுகிறார். சமயக் கல்வி மக்களை நல்வழிப்படுத்தும் ஒரு கருவியாகச் செயல்பட்டதாக விளக்கம் அளிக்கிறார். மனிதனில் நல்லொழுக்க வளர்ச்சியில் சமயங்களின் கொள்கைகள், நம்பிக்கைகள் வலுச்சேர்கின்றன என்பதை விளக்குகிறார். தமிழரும் தமிழ்ப் பண்பாடும் என்ற தலைப்பில் தமிழரின் நிலை தாழ்வதையும், தமிழ் மொழி அழிவை நோக்கிப் போகிறது என்பதையும் சுட்டுகின்றார். தமிழரும் தமிழர்களும் காக்கப்படுகின்றனர் என்றால், அது இருபத்தைந்து விழுக்காடு மக்களின் நன்னெறி வாழ்க்கை என்பதை எடுத்து இயம்புகின்றார். தமிழ், தமிழர்கள், பண்பாடு முதலானவற்றின் கலாச்சாரக் களஞ்சியமாக அவரின் கட்டுரைகளை எடுத்துக் கொள்ளலாம்.

கவிஞர் மு. தங்கராசனார் கவிதைகளில் சமூக அறச் சிந்தனைகள்

திரு ம. ஞானசேகரன்
மூத்த தமிழாசிரியர், உட்லண்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி, சிங்கப்பூர்

சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழ் இலக்கியங்கள் பல்வேறு கோணங்களில் பல்கிப் பெருகினாலும், பெரும்பாலும் அறம் என்பது அதன் அடிப்படைகளில் இன்றியமையாத ஒன்றாக உள்ளது என்று கூறலாம். மனிதனாகப் பிறந்தவன் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே அறிஞர்களின் சிந்தனையாகும். "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே," என்பார் நன்னூலார். அவ்வகையில், கவிஞர் மு. தங்கராசனாரின் நூல்களில் அறச் சிந்தனைகள் எவ்வாறெல்லாம் விதைக்கப்பட்டுள்ளன என்பது குறித்த சிந்தனையின் விளைவே இக்கட்டுரையாகும்.

தங்கராசனார், ஆசிரியர் பணியாற்றியதாலோ என்னவோ அவருடைய கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளன என்றே கூறலாம். "இல்லறம் பற்றிய கருத்துகளை ஐயன் வள்ளுவன் வழி நின்றும், தாய்மொழிப் பற்றினைப் பற்றிப் பேசும்பொழுது தமிழ்க் கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன் வழி நின்றும்..."[1] கவிஞர் தம் படைப்புகளை வழிநடத்திச் சென்றுள்ளதாகக் கூறுகிறார் ரேவதி.

கவிதை, சிறுகதை, நாடகம் எனப் பலதுறைகளையும் தொட்டு எழுதியுள்ளவர். பொய்கைப்பூக்கள், வாகைப் பூக்கள், நித்திலப் பூக்கள் எனப் பெரும்பாலும் தம் நூல்களுக்கு மலர்களைச் சார்ந்தே பெயரிட்டுள்ளதும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக, 'பனித்துளிகள்' என்ற அவருடைய கவிதை நூலில் கவிதைகளுக்கு அவர் இட்டிருக்கும் தலைப்புகளைப் பார்த்தாலே சமுதாயத்தின் மேல் அவர் கொண்டிருந்த அக்கறை புலப்படும். குழந்தை, செயலூக்கமும் செயலாக்கமும், இதுதான் வாழ்க்கை, உள்ளத்தூய்மை, பொறாமை, பொறுமை, புரிந்துணர்வே வெல்லும், கோலம், ஈரம், சாதனை செய்வோம், மனமது செம்மையானால், நோயற்ற வாழ்வு என அவருடைய தலைப்புகள் விரிகின்றன.

'பொய்கைப் பூக்கள்' என்ற நூலை எடுத்துக்கொண்டால் மதிப்பு, குடி, நாணயம், தெளிவு கொள்வோம், உலக சமாதானம், உலகம் அமைதி பெற, எதிர்நீச்சல் இன்பம், ஆத்திரம், ஆனை பலம், ஆடம்பரம், மனித நேயம் போற்றல், மங்கலம் என்ப மனைமாட்சி, உழைப்பே உயர்வு நல்கும், உள்ளம் பெரும் கோவில், நெறி நின்றார் நீடு வாழ்வார் எனத் தனி மனிதனும் சமுதாயமும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற சிந்தனையில் அமைந்த தலைப்புகளாகவே உள்ளன.

'வாகைப் பூக்கள்' என்ற நூலில் கல்வியின் சிறப்பு, உரிமையும் கடமையும், நற்குடி மக்கள் உருவாக்கம், மாணவர் மாண்பு, புதியதோர் உலகம் செய்வோம், அன்பே வழிகாட்டி, வாழ்க்கை நெறி, போதுமென்ற மனம்..?, செய்நன்றி மறவாமை, மதியெனல்..., நரையும் திரையும், செய்ந்நன்றி மறந்தால், ஒற்றுமை உலகை வெல்லும் எனத் தனி மனிதன், சமுதாயம், நாடு என்பனவற்றையெல்லாம் கடந்து உலகளாகவிய சிந்தனைகள் மிளிர்கின்றன. இவற்றிலிருந்து, 'வாழ்ந்தால் மட்டும் போதாது; அது வையகம் போற்றும் வாழ்வாக இருக்கவேண்டும்' என்பதே அவருடைய பேரவா என்று கூறலாம்.

குழந்தையின் சிறப்பையும் அவசியத்தையும் விளக்குவதற்காகத் திருவள்ளுவர், தம்

திருக்குறளில் ஓர் அதிகாரத்தையே ஒதுக்கியிருப்பதை அனைவரும் அறிவர்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

(குறள் எண்: 61)

இன்றைக்குக் குழந்தைப் பேற்றினை அதிகரிப்பதற்குச் சிங்கப்பூர் அரசாங்கம் பெருமுயற்சி எடுத்து வருகிறது.

"குழந்தையைப் பெற்றார் நெஞ்சம்
குழைந்திடும் இன்பம் காண்பார்
மழலையின் முகத்தைப் பார்த்து
மகிழ்ந்திடும் நிலையைக் காண்போம்
குழலிசையின் அமுதம் கூட்டும்
குழந்தையின் மழலைப் பேச்சில்"[2]...

என, பனித்துளிகள் என்ற நூலில் 'குழந்தை' என்ற தலைப்பில் வரும் கவிதையில், குழந்தையின் சிறப்புகளைப் பலவாறாக எடுத்துரைத்து, குறிப்பாகச் சிங்கப்பூரில் வாழும் மக்களுக்கு அதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார்.

"அறிவறிந்து செல்படுதல் ஆண்மை யாகும்
அளவறிந்து செயல்படுதல் அமைவே யாகும்
செறிவறிந்து செயல்படுதல் சீர்மை யாகும்
சிறப்பறிந்து செயல்படுதல் தீர்க்க மாகும்
நெறியறிந்து செயல்படுதல் நேர்மை யாகும்
நின்றெரியும் விளக்கதனின் நீர்மை யாகும்
குறியறிந்து செயல்படுதல் கூர்மை யாகும்
கொள்கைவழி நின்றிடுதல் கோன்மை யாகும்"[3]

என்பது 'பனித்துளிகள்,' என்ற அதே நூலில் செயலூக்கமும் செயலாக்கமும்..! என்ற தலைப்பிலான கவிதையில் இடம்பெற்ற சில வரிகளாகும். ஆண்மை, அமைவு, சீர்மை, தீர்க்கம், நேர்மை, நீர்மை, கூர்மை, கோன்மை என பல்வேறு நல்லொழுக்கங்களின் சொற்பொருள் விளக்கமாக அமைந்துள்ளது இக்கவிதை. தனிமனிதனாக இருந்தாலும் சமுதாயமாக இருந்தாலும் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதனை விளக்கும் இக்கவிதையைப் படிக்கும்போது கலித்தொகையில் இடம்பெற்றுள்ள, 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்,' என்ற பாடல் நினைவுக்கு வராமலிருக்காது. கவிஞர் சங்க இலக்கியத்தில் எந்த அளவுக்குத் தோய்ந்திருக்கிறார் என்பதையும் அதன் பாதிப்பு அவருடைய கவிதையில் எந்த அளவுக்கு இடம்பெற்றுள்ளது என்பதையும் இதன்மூலம் அறியலாம்.

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையோர் சொல்நோன்றல்"

... ...

(கலித்தொகை, 133)

ஒரு சமுதாயம் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் திகழ்ந்திட வேண்டுமென்றால் உள்ளத் தூய்மை மிகவும் முக்கியம். அதற்கு இறைவழிபாடு, நல்ல குடும்ப வாழ்க்கை, பேச்சில் நன்னயம், சொன்னயம், கண்ணயம், அரசியலில் தூய்மை, உரசியல் இல்லா தனிமனித வாழ்க்கை, மற்றவர் மனம் நோகா அளவில் வாழும் வஞ்சகமில்லா நெஞ்சகத் தூய்மை, இப்படிப் பலவும் தேவை என்பதையும் அவருடைய கவிதையில் தெளிவுபடுத்தியுள்ளார்.[4]

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்று சிலப்பதிகாரம் கூறும். விதிப்பயன் விளந்தே தீரும் என்று 'பொய்கைப் பூக்கள்' என்ற தம் கவிதை நூலில் கூறுகிறார்5 நமது கவிஞர். 'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்' (திருமந்திரம் 1823) என்பார் திருமூலர். இதனை வழிமொழிவதாக உள்ளது, 'உள்ளம் பெரும் கோவில்!' என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிஞரின் கவிதை. இவ்வுலகில் பிறந்து வந்த எழில் போற்றுவது என்பது எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் இரக்கமிக்க சிந்தையில்

உள்ளது என்கிறார்6. மேலும், அழுக்காறு கொள்ளாத அன்பு நெஞ்சமே சன்னி தானம் என்றும் தெளிவுபடுத்துகிறார்.

உழைப்பு இல்லாமல் உலகம் இல்லை. உழைப்பைப் போற்றாத சமூகம் ஒருநாளும் உயராது. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ என்பார் பட்டினத்தடிகள். பாரதியாரும் தம் புதிய ஆத்திசூடியில் 'கிளை பல தாங்கேல்' என்று கூறுவதும் உழைக்காமல் சோம்பி இருத்தலை ஊக்குவித்தல் கூடாது என்பதை வலியுறுத்தவே ஆகும். இதனைப் பெரிதும் விளக்கும் விதத்தில் இடம்பெற்றுள்ளது 'பொய்கைப் பூக்கள்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள 'உழைப்பே உயர்வு நல்கும்' என்ற தலைப்பிலான கவிதை.

"பகற்கனவு காண்பதிலே பலிக்கா வெற்றி
பாடுபடும் உழைப்பதிலே பதித்து ஊன்றி
அகல்விளக்கும் அறிவியலின் முன்னேற் றத்தில்
அமைந்தொளிரும் நல்லுலகில் ஆகக் காண்போம்
இகழுணர்வு என்றுந்தான் கொள்ளா நின்று
எதிரும்நல் வாய்ப்புகளை இயைந்து போற்றின்
புகழ்வாழ்வு பெறத்தக்க புருஷ வாழ்வுப்
போற்றுதலைப் பெற்றிடலாம் பொலியும் வாழ்வு"[7]

இன்றைக்கு உலகம் அறிவியலில் வளர்ச்சியின் உச்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், மனித நேயமோ காணாமல் போய்க்கொண்டிருக்கிறது என்று பலரும் கூறுகின்றனர். அதனைப் பறைசாற்றும் வகையில் முதியோர் இல்லங்கள் ஆங்காங்கே முளைத்துக்கொண்டிருக்கின்றன. பெற்ற தாய் தந்தையரையே சுமையெனக் கருதும், பொருளைப் போற்றும் சமூகமாக உலகமே மாறிக் கொண்டிருக்கிறது. வசதி வாய்ப்புகளோ பெருகிக் கொண்டிருக்கின்றன. மனங்களோ சுருங்கிக்கொண்டிருக்கின்றன. தனிமனித சுதந்திரம் என்ற பெயரில் தவறான அணுகுமுறைகள் அரங்கேறுகின்றன. வயதான காலங்களில் பெற்றோர்களைத் தனித்துவிடும் போக்கு அதிகரித்து வருகின்றது. இவற்றையெல்லாம் மாற்றுவதற்கான மருந்தாக 'தாய் தந்தையர் சிறப்பு' என்ற தலைப்பில் வாகைப் பூக்கள் என்ற நூலில் அமைந்துள்ளது ஒரு கவிதை.

"அவனியில் அம்மா அப்பா அருமையாய் வாய்த்தல் என்றால்
தவப்பேறு என்றே ஆகும் தந்தைதாய் உறவு என்றும்
உவந்திடும் இன்ப மாகும் உறுத்தலாய் எண்ணிப் பார்த்தால்
நுவலுதல் எளிய தாமோ நோற்றலால் அமைந்த தன்றோ?"[8]

மொழி இழந்தால் முகவரியை இழக்க நேரிடும்; வாழும் நிலத்தையும் இழக்க நேரிடும் என்று கூறுவர். இன்றைக்குப் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவதில்கூட பல குடும்பங்களில் மொழி காப்பாற்றப்படுவதில்லை. இதன் அவசியம் உணர்ந்து கவிஞர் தம் சூரியகாந்தி என்ற நூலில், மொழி என்ற என்ற தலைப்பில், தமிழ் மொழியைப் போற்றும் விதத்திலும் அதனை வலியுறுத்தும் விதத்திலும் பல்வேறு கவிதைகளை இயற்றியுள்ளார். இன்றைக்குத் தமிழர்கள் சென்று கால்வைக்காத இடமில்லை என்று கூறும் அளவில், உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவி வாழ்கின்றனர். அந்த நாடுகளிலெல்லாம் தமிழர்கள் தங்கள் பெயர் பொறிக்கும் அளவில் பற்பல சாதனைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். எந்த இடத்தில் வாழ்கிறோமோ அந்த இடத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் வாழ வேண்டும். அதனால் தான் ஔவையார் ஓர் இடத்திற்குப் பெருமை அவ்விடத்தில் வாழும் மக்களைப் பொறுத்தது என்று கூறுவார்.

"நாடா கொன்றோ ; காடா கொன்றோ
அவலா கொன்றோ ; மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை ; வாழிய நிலனே"

(புறம் 147)

என்பது ஔவையாரின் அமுத மொழி. வாழும் மக்கள் தாம் வாழும் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் நாட்டுப் பற்றினை வெளிப்படுத்தும் வகையிலும் நாடு என்ற தலைப்பில் பல்வேறு கவிதைகளை இயற்றிச்

சேர்த்துள்ளார். மண்ணுலக சொர்க்கபுரி, இனிய வளம் துறைமுகமே, சிங்கைத் திருமகளே வாழ்க! சிங்கப்பூரின் சீர்மைகள் என்றெல்லாம் புகழ்ந்து அதன் சிறப்புகளைச் சீர்தூக்கி மகிழ்ந்திருக்கிறார்.

பிறர்க்கென வாழும் உள்ளம் உடையவர்களால்தான் இந்த உலகம் இன்னும் நிலையாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் புறநானூற்றுப் பாடல் (புறம் 182) கூறும் உண்மை. அன்று தொட்டு இன்று வரை இப்படிப்பட்ட உள்ளம் உடையவர்களின் சிந்தனைகள், அறக்கருத்துகள் யாவும் தனிமனிதனையும் தாண்டி சமுதாயம் நோக்கியதாக உள்ளன. அதனால்தான், அவர்களுடைய கருத்துகள் இலக்கியங்களாகக் காலங்கள் பல கடந்தும் கண்டங்கள் பல கடந்தும் சாகா வரம் பெற்றவைகளாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன. “இறந்த பிறகும் நீங்கள் மறக்கப்படாதிருக்க வேண்டுமென்றால் ஒன்று சிறந்த படைப்புகளை எழுதுங்கள்; அல்லது பிறர் உங்களைப் பற்றி எழுதும் அளவுக்கு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழுங்கள்”[9] என்றார் பெஞ்சமின் ஃபிராங்க்ளின். அந்த வகையில், கவிஞர் மு. தங்கராசனார் மேற்கொண்ட இரண்டுக்குமே சொந்தக்காரராக இருக்கிறார் என்று உறுதியாகக் கூறலாம்.

பார்வை நூல்கள்

கி. ரா. ரேவதி, கவிஞர் மு. தங்கராசன் கவிதைகள் ஓர் உள்ளடக்கப் பார்வை (எம்.ஃபில் பட்ட ஆய்வு), எழுதியதால் பேசுகிறேன், லட்சுமி வெளியீடு, ஜனவரி 2001.

மு. தங்கராசன், பனித்துளிகள், பூவழகி பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 1992, ப. 46.

மேலது., ப. 49.

மேலது., ப. 64.

மு. தங்கராசன், பொய்கைப் பூக்கள், அன்னை சாரதா பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 1992, ப. 116.

மேலது., ப. 120.

மேலது., ப. 126.

மு. தங்கராசன், வாகைப் பூக்கள், தமிழவேள் நாடக மன்றம், சிங்கப்பூர், முதற் பதிப்பு-2003, ப. 43.

வானம் வசப்படுமே, மீடியா கார்ப் ரேடியோ, சிங்கப்பூர், ஸ்டாம்ஃபோர்ட் பிரஸ், ப. 64.

‘வாகைப்பூக்கள்’ கவிதைகள் - பன்முக ஆய்வு

முனைவர் ஜோ. பிரின்ஸ்
உதவிப் பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

ஆய்வுச் சுருக்கம்
சிங்கப்பூர்த் தமிழாசிரியர் மு.தங்கராசன் சிறந்த தமிழ்ப்படைப்பாளர். சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் தமிழ்மொழியும் இலக்கியமும் உயர்ந்து வாக்குச் தமிழாசிரியராகப் போதியாற்றி வந்தார். எழுதுவதில் ஈடுபாடு கொண்டு 23 நூல்களை வெளிட்டுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்களில் முத்திரை பதித்தவர்.

முன்னுரை

இவருடைய பதினெட்டாவது நூலாகப் பரிணபித்தது ‘வாகைப்பூக்கள்’ எனும் நூல் வாகைப்பூக்கள் நூலில் பத்துவகையான வெவ்வேறு தலைப்புகளில், முத்தானவை தனிப்பாடல் தலைப்புகளில் 72 கவிதைகளை எழுதியுள்ளார். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அனைத்தும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று ஆகியனவற்றைத் தமிழ்ப்பொது மக்களுக்கு ஊட்டுவனவாக உள்ளன. சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றின் ஆளுமையைக் காட்டுகின்றன. கவிஞர் மு.தங்கராசனின் வாகைப் பூக்கள் எனும் இத்தொகுப்பு மொழி, கல்வி, நாடு, சமுதாயம், உணர்வுகள், சிந்தனைகள், வாழ்த்துக்கள், உரைவிச்சு என்னும் கூறுகளைக் கொண்டதாக அமைகிறது.

மொழி பற்றிய சிந்தனை

தாய்மொழியைக் கண் என்பர்; பிற மொழிகளைக் கண்ணாடி என்பர். நமது அறிவின் முதல் திறவுகோல் நமது தாய்மொழியாகும். பிறந்தது முதல் நம் தாய்மொழியிலே பேசுகிறோம். மொழி என்பது அறிவின் சாளரம். நமது கருத்துக்களையும் தேவைகளையம் பிறருக்குத் தெரிவிக்க மொழி உதவுகிறது. மொழியின் மூலமே நாம் அறிவினைப் பெறுகிறோம். நமது தாயிடமிருந்து நாம் கற்கும் மொழியைத் தாய்மொழி என்கிறோம். ஒரு தாய் தன் குழந்தையுடன் உரையாடும் மொழி தாய்மொழியாகும்.

கவிஞர் மு.தங்கராசன் உள்ளத்தில் மொழிப்பற்று வேண்டும் என்கிறார். ஒவ்வொரு மனிதரும் தாய்மொழியை உயிருக்கு நிகராகக் கொள்ள வேண்டும்; உணர்வில் ஒன்ற வேண்டும் உன உணர்விற்கு எழுச்சியாக அமைவது தாய்மொழி என்று கூறி, அதைத் தினம் தினம் போற்ற வேண்டும் என்கிறார். இதனை “உணர்வெல்லாம் மொழியில் ஒன்றி உணர்த்திட வேண்டும் என்றும் இணச் எழு இன்பம் போற்றும் எழுந்திடும் உற்சாக கட்கள் தினம் தினம் போற்றுகின்ற நிகழ் ஒலி மொழியியல் என்றும் முனைந்திடும் எழுச்சின் மூலம் மும்முரம் மொழியைக் காப்போம்” என்கிறார்.

தமிழ்மொழி பல மொழிகளுல் சிறப்பானது. இலக்கியச் செழுமை வாய்ந்தது. உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் வயிகாட்டியாகத்

திகழ்வது. இம்மொழியின் இலக்கியங்கள் எல்லாம் ஏற்றம் கண்ட செம்மொழி என மூதறிநர் சொல்கின்றனர் என்கிறார்.

இதனை, 'காலத்தல் பூத்தவை' கன்னித்தமிழே ஞாலத்தின் மொழிகளுக்கு வழிகாட்டியாக சிலத்தல் சிறந்ததொள்ரும் தமிழே என்றும், காலத்தும் தன்னல் மொழியாகத்திகழும்" 1 என்றும் கவிதைப் பகுதியின் மூலம் அறியலாம்..

கல்விச்சிந்தனை

"கல்வி என்பது குழந்தைகளை உடல் மற்றும் மன வளர்ச்சியும் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்ச்சிக்கு உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும்."2

கல்வி என்பது ஒரு சமூக நிறுவனமாகும் இளைய தலைமுறையை வழிநடத்துவதிலும் சமுதயாத்தில் பங்களிப்புச் செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப்பங்கு வகிக்கிறது. அறிவு திறமை போன்றவற்றைத் தந்து, ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி, பண்பாடு, நடத்தை போன்றவற்றைத் தந்து மனிதனை முழுமையாக ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்கிறது.

வாழ்வில் போதனைகள் ஏற்படும் போது கல்வியறிவால் அச் சோதனைகள் மாற்றலாம். வாழ்க்கை சிறப்பதற்குக் கல்வி மிகவும் அவசியமாகும். கல்வியால் நம்பிக்கை ஏற்படும் சோதனைகளை வீழ்த்தி, வாழ்வில் வெற்றி பெறலாம் என்கிறார் கவிஞர். இதை "அடுத்துவரும் சோதனையை அடித்து வீழ்த்தி, விடுதலை வேட்கையுடன் கற்றால் வெற்றி"[3] என்ற வரிகள் மூலம் அறியலாம்.

இருமொழிக்கல்வி

இருமொழிகளில் கற்பிக்கப்படுவது. இருமொழிக்கல்வியைப் பெறும் குழந்தைகள் இருமொழிகளிலும் புலமை பெறுகின்றன. இது மிகவும் பிரத்தியேகமான கல்வியாகும். இருமொழிக்கல்வி என்பது இருமொழிகளில் அறிவை அடிப்படையாகக் கொண்டது. இருமொழிகளில் பயிலும் குழந்தைகள் இரண்டு வெவ்வேறு மொழிகளை ஒருங்கிணைப்பதற்கான அறிவைப் பெறுகின்றன. கவிஞரும் இருமொழிகள் படித்துணர்ந்தால் இந்த நல்நாடே இருகரங்கள் குவித்துன்னை வணங்கி ஏற்கும். பட்டறிவு மிளிரும் என்கிறார். இதனை,

"அது போலதான் இருமொழிகள் அறிவ சேர்ந்தால் பொதுவாகப் பட்டறிவ மிதிர்ந்து பேசும்"[4] என்ற வரிகள் மூலம் அறியலாம்.

சிங்கப்பூர் பற்றிய சிந்தனை

சிங்கப்பூர் சிறந்த நாடு மறுபில்லை; நால்லாட்சி வழங்கும் நாடு. இங்கு வளம் என்றென்றும் தழைக்கும் நாடு. அனைத்துல நாடுகளும் விரும்பும் நாடு. அணி சேராக் கொள்கையை உடைய நாடு, சின்னஞ்சிறு நாடாக இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் திகழும் நாடு. இந்த உலகமே நன்னாடு எனக் கொண்டாடும் நாடு என்கிறார் கவிஞர். இதனை "கவிதைத் திரு நாடென்றால் சிறந்த நாடு பங்கமில்லா நால்லாட்சி பதியும் நாடு"[5] என்ற பாடல் துளிகள் மூலம் அறியலாம்.

புதிய உலகைப்படைப்போம்

புதிய உலகைப் படைப்பதில் அனைவரும் முனைப்புடன் செயல்படுவோம். புதுமைச் சிந்தனைகள் அனைவர் மனதிலும் தோன்ற வேண்டும். அறியாமை எனும் இருள் நீங்கி அகிலம் சிறக்க வேண்டும் என்கிறார். புரியாமை நீங்கிப் புது ஞானம் தோன்ற வேண்டும். ஒரு புதிய சமுதாய மறுமலர்ச்சி

பூமியில் தோன்ற வேண்டும் என்கிறார் கவிஞர். இதனை, "புரிந்து கொள் புதுமை ஞாலம் பூமியில் தோன்ற வேண்டும்" 6என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

அன்புச் சிந்தனை

மனித நேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. மேலும், மற்றொருவரின் நன்மைக்காக பரிபூரணமான அக்கறையும் தன்னை மற்ற விசுவாசம் கொண்ட ஓர் எழுச்சியான மனநிலையை அன்பு எனலாம்.

கவிஞர், அன்பினால் ஆகாததும் உண்டோ என்கிறார். அதிகார பலத்தினால் சாதிக்க முடியாததை, ஆணவத்தால் சாதிக் முடியாததை அன்பினால் சாதித்து விடலாம் என்கிறார். கல்மணமும் உண்மையான அன்பினால் கரைந்து விடும்இ பகைமை அகலும்இ துன்பத்தை துடைக்கும்

"இயலாத கரியங்கள் இயைந்துருகும் அன்பினால் முயன்றுமே சாதித்த சாதனைகள் ஏராளம்"7 என்ற வரிகள் மூலம் அறியலாம்.

செய்நன்றி மறவாமை

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க ஒருவர் செய்த உதவியை நாம் என்றும் மறக்கக் கூடாது. ஆனால், தீமையை அப்பொழுதே மறந்து விடவேண்டும் என்று கூறுகிறார். கவிஞரும் உதட்டளவில் நன்றி சொல்லும் உள்ளங்கள் உலகில் உண்டு. அப்படி இருக்கக் கூடாது. செய்த உதவியைப் பெரிதாகக் கருதவேண்டும். செய் நன்றி மறந்தாரை உலகத்தார் மதிப்பதில்லை பெற்ற உதவி சிறியதாக இருந்தாலும் அதனையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்.

"செய்நன்றி மறந்தார் தம்மை சொகத்தினோர் மதிப்பதில்லை" 8 என்ற வரிகள் மூலம் அறியாலாம்.

ஒற்றுமை

ஒற்றுமை உலகை வெல்லும்; ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. தமிழர்கள் ஒற்றுமையுடன் இருந்தல் வேண்டும் என்கிறார். ஒற்றுமை உலகை வெல்லும். அன்பைப் பெருகச் செய்யும். இனத்திற்குள் ஒற்றுமை உணர்வு மிக அவசியம் என்கிறார் கவிஞர். இதனை,

"ஒற்றுமை உலகை வெல்லும். உணர்ந்தால் சான்றோர் சொன்னார்"9 என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

ஆய்வு முடிவுகள்

வாகைப்பூக்கள் நூலில் பத்துவகையான வெவ்வேறு தலைப்புகளில் முப்பத்திரண்டு கவிதைகளைக் கவிஞர் எழுதியுள்ளார். இவருடைய கவிதைகள் அனைத்தும் இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்றைத் தமிழ்ப் பெருமக்களுக்கு ஊட்டுவதாக அமைகின்றன.

அடிக்குறிப்புகள்

மு.தங்கராசன், வாகைப்பூக்கள். (ப.6).

UNOSCO (1975) A system approach to teaching and learning procedures: A guide of Educators in Developing countries, Paris.

மு.தங்கராசன், வாகைப்பூக்கள், (ப.8).

மேலது., (ப.9).

மேலது., (ப.12).

மேலது., (ப.27).

மேலது., (ப.40).

மேலது., (ப.42).

மேலது., (ப.64).

'மஞ்சள் கயிறு' முன்வைக்கும் தமிழ்ப் பண்பாடு

பேரா. மா. மீனாட்சிசுந்தரம்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

முன்னுரை

கரும்புத் தோட்டங்களிலும் மிளகு தென்னந் தோப்புகளிலும் வேலை செய்வதற்காக வங்காள விரிகுடாவைக் கடந்து, 1800 லிருந்து தென்னிந்தியர்கள் சிங்கப்பூர் வரத்தொடங்கினர். பொருளாதார ஏற்றம் கருதியோ தத்தம் நாடுகளில் நிலவிய போரிலிருந்தும் பஞ்சத்தில் இருந்தும் தப்புவதற்கு, தம் வாழ்வில் மாற்றம் கருதியோ அவர்கள் வந்தனர். குடியேறிய இடத்தில் என்ன துன்பங்கள் இருப்பினும் அரும்பாடுபட்டு தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டுமென மனத் துணிவுடன் அங்கே வாழத் தலைப்பட்டனர். 1890ஆம் ஆண்டளவில் ஒப்பந்த பிணைப்புக்கு உட்படாத உழைப்பாளர் ஆகிய தமிழர்கள் கணிசமான அளவுக்குக் குடியேறிவிட்டனர். மலேய சட்டமுறைக் கூலிகளாக உழைக்க வந்தோர் ஒப்பந்தத் கெடு முடிந்த பின்னரும் நீடித்து தங்க முற்பட்டனர். அவர்கள் வம்சத்தினரும் அங்கேயே வாழ தொடங்கினர். வளர தொடங்கினர் என்றும் திரு முருகானந்தம் கூறுவது கவனிக்கத்தக்கது. தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி தமிழ் தஞ்சை 1986 (ப- 105) சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள் தமிழ் பண்பாட்டின் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். அவ்வகையில் மு.தங்கராசன் அவர்களின் 'பூச்செண்டு' எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் 'மஞ்சள்கயிறு' எனும் சிறுகதைத் தமிழ் பண்பாட்டின் பிரதிபலிக்கும் விதத்தை ஆய்வதே இக்கட்டுரையாக அமைகிறது.

தலைப்புப் பொருத்தம்

பக்குவப்பட்ட நிலத்தைப் பண்ணை நிலம் என்போம். அனுபவங்கள் மூலம் ஏற்படக்கூடிய பக்குவத்தைப் பண்பு என்றும் அதுவே நிலையாக தொடரும் போது பண்பாடாக மாற்றப்படுவதையும் நம்மால் உணர முடியும். பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் என நெய்தல் கலியில் நல்லந்துவனார் கூறுகிறார். தமிழர்களின் வாழ்வியலில் நிலையற்ற பண்பாக 'மஞ்சள் கயிறு' தாலி தலைமுறைகளின் நீட்சி ஆகும். வாரிசும் குழந்தைப்பேறு இன்றளவும் போற்றப்படுவதைக் காணலாம். அவைகளையே சிறுகதையின் தலைப்புகளாக சூட்டியுள்ளார் ஆசிரியர். பண்பாடு என்பது வெகுமக்கள் திரள் சார்ந்ததே அடிப்படை பண்புகள் சிலவற்றிலும் கூறுகளுடனும் விலங்கும் மக்கள் திரளை அடையாளப்படுத்துவது, பண்பாட்டு வேர்களைக் கண்டு, அவற்றின் வாழ்வினையும் வீழ்ச்சியையும் அடையாளம் காட்டும் கதைகளாக இவற்றை நாம் காணலாம்.

மஞ்சள் கயிறு

இக்கதை தமிழ் முரசு இதழில் 29.03.1959 அன்று வெளிவந்தது. கோலாலம்பூர் பந்தின் வட்டார தமிழர் திருநாள் விழாவினையொட்டி, சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. கதையின் தொடக்கத்திலேயே இதன் உயிர்நாடியான கதையின் கருவினை முன்வைத்து, அதன் நீட்சியாகக் கதைப் பின்னலை வடிவமைத்து அதனை மையமிட்ட கதையை முடித்து வைக்கும் படைப்பாளியின் நேரத்தினைச் சிறுகதையில் காணலாம். தொடக்கத்தில் இறுதிவரை தான் சொல்ல வேண்டிய கருத்துக்களை தொய்வில்லாமல் மெருகுடன் நகர்த்தி செய்வதும் இதன் தனிச்சிறப்பு தான். **"இரவு எட்டரை மணி ஆகி இருக்கும். நிலமடந்தை இருள் எனும் கரிய போர்வையை இழுத்து மூடி பார்த்து கொண்டிருந்தான். ஒரே**

கும்மிருட்டு"(பக் - 31) என்று வர்ணனையுடன் தொடங்கினாலும் அடுத்த சில வழியிலேயே கதையின் தலைவி திலகத்தினை அறிமுகம் செய்கிறார். திலகத்தினை அறிமுகம் செய்யும் போது, **"திலகா திலகம் இழந்து வெள்ளைப் புடவை உடுத்தி வீதியில் போவோர் ஒரு வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் விழிகளில் நீர் பெருகி இருந்தது" (ப.31)** திலகா யார், ஏன் திலகம் இழந்து விரக்தியுடன் கண்ணீர் பெருகியும் காணப்படுகிறாள் என்று படிப்போரின் மனதில் ஓர் ஆர்வத்தினைத் தூண்டக் கூடியதாக அமைந்து, இதற்கு பின் என்ன நடக்கும் என்ற எண்ணத்தையும் தூண்டி விடக்கூடிய தொடக்கமாக அமைந்துள்ளது. **"குங்குமம் அழிந்து கூந்தல் அவிழ்ந்து மஞ்சள் மறைந்து மனங்களில் இருக்கும் திலகாவுக்கு இன்று உலகமே சூனியமாக காட்சியளித்தது" (ப. 31)**

பெண்ணுக்கான இந்த அடையாளம் சமுதாயத்தால் கூர்மையான அக்கறையோடு கவனிக்கப்பட்டு வரும் இது உயர் கூட்டத்தின் எல்லாவகையான அனைவருக்குமான தொடர்ச்சியாக இருப்பதை காண முடிகிறது. இந்தத் தொடர்ச்சி என்பது உடல் சார்ந்தது மட்டுமன்று மக்கள் திரளின் எல்லா வகையான அசைவுகளிலும் என்றும் அதன் இயக்கங்களிலும் உள்ளார்ந்ததாக இயங்கிக்கொண்டே இருக்கிறது. குங்குமம், மஞ்சள் என்பன பெண்ணுக்குரிய மங்களகரம் என்பதாகும். அதை இழந்தால் அவளுக்கு உலகமே சூனியம்ஆகிவிட்டதை காட்டுகிறார் ஆசிரியர்.

ஊரார் ஏசல்

திருமணத்திற்கு முன் திலகா பெண்களுக்கே முன்மாதிரியானவளாக காட்சிப்படுத்தப்படுகிறாள். பழக்க வழக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். அந்த ஊரிலிருக்கும் அவள் வயதொத்த சிறுவர் சிறுமிகளுள் பண்பின் திலகமாக விளங்கினாள் (பக் 33 34). இன்று பண்பின் சிகரம் என வம்சம் தொட்ட திலகா, தன் கணவனை 39 நாட்களில் இழந்தவுடன் பலவிதமான ஏசல்களுக்கு ஆளாக்கப்படுகிறாள். திலகா திலகம் இழந்தாள்... திரு இழந்தாள்.... வண்ணச் சேலை வெள்ளைப்புடவை ஆக மாறியது. மஞ்சள் கயிறு அறுந்தது. பின்னல் கோணல் கொண்டையாக மாறியது. நாக பாசம் இருந்தது கெண்டைக்கால் பெருத்து இருந்து செவ்வாய் தோஷத்தில் பெரியவள். ஆனால் புருஷனை 40 நாளில் தின்று விட்டாள். பாவம் நல்ல பையன் நல்ல ஆணின் சாவுக்கு நரக பாசமும் செவ்வாய் தோஷமும் காரணம் என்று அங்கலாய்த்து கொண்டார்கள் சம்பிரதாயத்தை நம்பும் ஆஸ்திகவாதிகள்(ப -39). இந்தச் சமூகத்தின் கருத்தியல் தொடர்ச்சியாக இதை நாம் காணலாம். நல்ல நிலையில் இருக்கும்போது வாழ்த்துவதும் அதிலிருந்து மாறும்போது இழிவான கருத்துக்களால் அவர்கள் மனநிலையை சிதைப்பது இந்த சமூகம் முன்னெடுத்துச் செல்வதை பறைசாற்றுகிறது. இது அப்பாவித் தனமானது; மூடநம்பிக்கை கொண்டது. மாறிவரும் உலகத்தைப் பார்க்க மறுப்பது. சமகாலச் சமூகத்தால் பரிதாபத்தோடு மன்னிக்கப்பட வேண்டியது. இந்தச் சமூக உளவியல் அடிமைப்பட்ட நாடுகளில் மட்டுமே நடைமுறை சாத்தியமாகும்.

நாகராஜனின் சூழ்ச்சி

கதைப் பாத்திரங்களில் எதிர்நிலைப் பாத்திரங்களின் செயல்பாடுகள் கதையோட்டத்திற்கும் ஆர்வத்திற்கும் சிறந்தது எதிர்நிலை பாத்திரங்கள்தான் தலைமைப் பாத்திரத்தின் தன்மைகளை வெளிக்கொண்டு வருவன. அவ்வகையில், கதை தலைவனான நல்லான் **அவன் ஒரு நல்லவன் பெயருக்கேற்ற குணத்துக்கு ஏற்ற பெயர் (ப- 34).** என்று அறிமுகப்படுத்துகிறார் ஆசிரியர். அதே வேளையில் **நாகராஜன் ஒரு முரடன் மூர்க்கன் கொடிய சித்தம் படைத்தவன் அயோக்கியர்களுக்கு அவன்தான் ஆசிரியன் (ப 39),** என்ற அறிமுகம் இவனைப் பற்றிய பலவிதமான எதிர் எண்ணங்கள் உருவாகின்றன. தன் தங்கையின் கணவன் நல்லான் என்பதையும் விட, தன் காதல்

தோல்விக்கு இவன் தான் காரணம் என்கின்ற எண்ணம் அவனைத் தீர்த்துக்கட்டக் கூடிய மனநிலையை ஏற்படுத்திவிட்டது. அதன் விளைவாக அவனின் சூழ்ச்சியால் நல்லான் கொல்லப்படுகிறான். நல்லான் தன் மைத்துனன் நாகராஜனை மனமார மன்னித்து விட எண்ணினாலும் டாக்டர் தன் கடமையிலிருந்து தவறாமல் நீதியை நிலைநாட்டிவிட்டார். நாகராஜனின் சூழ்ச்சிக்குத் தீனி போட்டது ஊர்களின் பேச்சுதான். திலகாவுக்கு நாகபாசம் செவ்வாய் தோஷமும் இருக்கிறது. 40 நாளில் கணவன் இறந்து விடுவான் என்று ஊரில் உள்ளவர்கள் மூடநம்பிக்கையில் முணுமுணுத்துக் கொண்டிருந்தது அறிந்த நாகராஜன் தன் எண்ணத்தை பூர்த்தி செய்து கொண்டான்.

கதையின் முடிவு

இச்சிறுகதை மங்களகரமாக தொடங்கி இறுதியில் மங்களகரமான முடிவுடன் முடிகிறது. அக்காலத்தில் முடிவு என்பது எப்போதும் நல்ல விதமாகத்தான் முடிய வேண்டும் என்கிற எண்ணம் படைப்பாளியின் மனதில் உதிக்க வேண்டும். தன்னால் அறுத்து எறியப்பட்ட மஞ்சள் கயிறுக்கு மீண்டும் மவுசு ஏற்பட்டுவிட்டதை எண்ணி மட்டில்லா மகிழ்வு கொண்டாள் மங்கை. நல்லாள் இப்போது திலகாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு மின்னியது (ப 42).

முடிவுரை

பண்பாடு என்பது தொன்மையான அசைவுகளின் தொடர்ச்சியாகும். இது உயிர் திரள்களின் காலம் சார்ந்த அசைவுகளின் வெளிப்பாடு (தொ. பரமசிவன் மஞ்சள் மகிமை (ப12) காலச்சுவடு 2019). பண்பாடு என்பது சொல்லும் சொல் அல்லாத மரபுகளும் சார்ந்தது. மரபு என்பது பண்பாட்டின் வேர்கள் ஆகும். மஞ்சள் கயிறு என்பது பன்னெடுங்காலமாக நம் பண்பாட்டின் அடையாளமாக இன்றுவரை தொடரப்பட்டு வருவதை நம்மால் அறிய முடிகிறது.

நாடகப் படைப்பாக்கங்களில் புலனாகும் "நாடகக் கட்டமைப்புக் கூறுகள்"

முனைவர் சு. மேகலா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அமெரிக்கன் கல்லூரி,மதுரை

முன்னுரை

சிங்கப்பூர் வாழ் தமிழ் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமானவர், நல்ல கவிஞர், எழுத்தாளர், நாடகப் படைப்பாளர் எனப் பன்முகப் பாங்குடையவர் தகைமிகு தமிழாசிரியர் மு. தங்கராசன். தமிழ்மொழி சிறக்க வேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டு, சமுதாய அமைப்புகள் பலவற்றிலும் தலைமைத்துவம், செயலாண்மைப் பொறுப்பேற்றுப் பாடுபட்ட தகைமையாளர். "தமிழகவேள் நாட மன்றம்" ஒன்றை நிறுவி, அரை நூற்றாண்டுக் காலம் கட்டிக் காத்ததோடு, மன்றத்தின் அரங்கேற்றங்களாகப் பல்வேறு நாடகங்களை எழுதியும், இயக்கியும், நடித்தும் வந்த சிறப்புக்குரியவர். சரித்திர, சமூக நாடகங்கள் பலவற்றை எழுதிய பெருமைக்குரியவர். மேலும், சிங்கப்பூர் வானொலி – தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தப் பெருந்தகையாளர். இத்தகு பெருமைக்குரிய தங்கராசு ஐயாவின் நாடகப் படைப்பாக்கங்களில் புலப்படும் நாடகக் கட்டமைப்புக் கூறுகளை வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழில் நாடகம் என்ற சொல்லாட்சி

தமிழில் நாடகம் என்ற சொல்லுக்குப் பதிலாகக் கூத்து என்ற சொல்லே இலக்கியங்களில் காணப்படுகிறது. கூத்தர்களே புராண, இதிகாச நாடகப் பாத்திரங்கள் ஏற்று நடித்தனர். கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை முதலிய பத்துப்பாட்டு நூல்கள் நாடகம், இசை சார்ந்த கலைஞர்கள் மன்னர்களை வாழ்த்திப் பரிசில் பெறுவதை எடுத்துக்காட்டுகின்றன. "நாடகம் (Drama) என்ற சொல்லுக்கு டிறாமா (Drama) என்கிற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்துவர். நாடகம் என்னும் சொல் வடமொழியின் அடியாக வந்தது என்றும் இது சமஸ்கிருதச் சொல்லாகிய நாட்டியா-விலிருந்து வந்தது என்றும் கூறுவர். அதனுடைய வேர்ச்சொல்லான 'நட்' என்பது புராதனத் திராவிடச் சொல்லாக இருக்கலாம் எனச் சில பேராசிரியர்கள் கருதுவார்கள். நாம் பெரிதும் பயன்படுத்துகின்ற டிறாமா (Drama) என்னும் சொல்லையே எடுப்போம். இதன் கருத்து 'செய்யப்பட்டது' 'நிகழ்த்தப்பட்டது' என்பதாகும். இது ஒரு கிரேக்கச் சொல்லின் அடியாக வந்தது. 'நிகழ்த்தப்பட்டது' என்ற சொல்லினடியாகவே என்னும் சொல் ஆங்கிலத்தில் வந்தது"என்கிறார் கா.சிவத்தம்பி. தி.க.சண்முகம் இதற்கு கூறும் விளக்கமானது வேறுபட்டு அமைகிறது. "நாடு+அகம் = நாடகம், நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது நாட்டின் சென்ற காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு+அகம் = நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது" என்கிறார்.

இலக்கியத்தில் நாடகச் சொல்லாடல்கள்

இலக்கியத்தில் நாடகம் என்ற சொல் சங்க இலக்கியத்திலும் அதற்குப் பிந்தைய இலக்கியங்களிலும் பலப்படப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'நாடக மகளிர்' (புறம்.125) எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

“பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்” (பட்டினம்.113) என்று பட்டினப்பாலை நாடகம் நிகழ்த்துவோர் பற்றிக் கூறுகிறது.

ஆனால், சிலப்பதிகாரம் நாடகம் கணிகையரால் நிகழ்த்தப்படுவதாகக் குறிப்பிடுகிறது. “நாடகம் ஏத்தும் நாடகக் கணிகை” (சிலம்பு.பதிகம்.15:16) என்றும், மணிமேகலையில் நாடகம் பற்றி, “நாடக மடந்தையர் நலங்கெழு வீதி”(மணி.15) என்று கூறப்பட்டுள்ளது.

“நாடகம் கண்டு வாழாதவர் வாழ்க்கை எல்லாம் சவரர் வாழ்க்கையே” (சீவகம்.230) என்றும் சுட்டுகின்றன. காலந்தோறும் நாடகக் கலை வளர்ச்சி பெற்று வந்ததையே இவை வெளிப்படுத்துகின்றன

ஐரோப்பிய வருகைக்குப் பின் நாடக உருவாக்கம்

இலக்கிய வகைமை போலவே நாடகமும் இயற்றப்படுவதற்கு ஐரோப்பியரின் வருகையே காரணமாக இருந்துள்ளது எனலாம். ஆனாலும், தமிழில் இயற்றப்பட்ட முதல் நாடகமாகப் பூம்புலியூர் நாடகம் என ஆய்வாளர்கள் கொள்கின்றனர். “கி.பி.1119 ஆம் ஆண்டு கமாலயப் பட்டர் என்பார் பூம்புலியூர் நாடகம் என்ற நாடக நூல் ஒன்றை இயற்றியுள்ளார்” என்கிறார் பொன். இளங்கோவன். இவ்வாறு இயற்றப்பட்ட நாடகத்திற்கு முன்னோடி இருந்தாலும் அதற்குப் பின் பெரிதாக நாடக நூல்கள் இயற்றப்படவில்லை. பூம்புலியூர் நாடகமே முதல் நாடகம் என்று குறிப்பதற்கு உரிய சான்றுகள் இருந்தாலும் தமிழில் தோன்றிய முதல் நாடகமாக சீர்காழி அருணாசலக் கவிராயரின் நாடகமே அஷ்வகோஸால் கூறப்படுகிறது. “இவ்வகையில் 1771இல் சீர்காழி அருணாசலக் கவிராயர் என்பவரால் எழுதப் பெற்ற ‘இராம நாடகக் கீர்த்தனைகள்’ முதல் நூலாகக் கருதப் பெறுகிறது. இதைத் தொடர்ந்து பெரிய புராணக் கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை, திருவிளையாடற் கீர்த்தனை முதலான நாடகக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளன” என்கிறார் இவர். இதற்குப் பின்னரே தமிழில் நாடகங்கள் பரவலாக வெளிவரத் தொடங்கின.

நாடக வகைகள்

பல அறிஞர்கள் தமிழில் நாடகங்கள் எழுதியுள்ளனர். அவை பல திறத்தனவாகவும், சுவையுடையனவாகவும், வடிவினவாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு, உருப்பெற்ற நாடகங்களை வரலாற்று நாடகம், புராண நாடகம், சமூக நாடகம், இசை நாடகம், என்று பாகுபடுத்துவதுண்டு. இந்நாடகங்கள் வசன நடையிலும் கவிதை நடையிலும் அமைந்தவையாகும். இத்தகைய நாடகங்கள் எழுதப்பட்டும், சில மாற்றங்களுடன் மேடையேற்றப்படும் நாடகங்களாகவும் அமைந்திருக்கின்றன.

வரலாற்று நாடகங்கள்

வரலாற்று நாடகம் என்பது நடந்த நிகழ்ச்சியினை வரலாற்றிலிருந்து தருவித்து பொருட்சுவை, சொற்சுவையுடன் அழகியல் நுட்பத்துடன் வடித்துத் தருவதாகும். “வாய் வழியே வழங்கி வந்த வரலாற்றுக் கதைகளையும் நாடகமாக எழுதியுள்ளனர்.

புராண நாடகங்கள்

சமயங்களிலிருந்தும், புராணங்களிலிருந்தும் கதைக் கருக்களை எடுத்துக் கொண்டு நாடகமாக இயற்றி நடிப்பது புராண நாடகமாகக் கொள்ளப்படுகிறது

சமூக நாடகங்கள்

சமூக நாடகங்கள் தற்காலத்திய சமூகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நடிக்கப்படுவதாகும். காசி விசுவநாத முதலியார் எழுதி நடித்த 'டம்பாச்சாரி விலாசம்' இதற்கொரு சிறந்த சான்று. ஆசிரியர்.

தங்கராசுவின் கவிதைகள் அனைத்தும் சமூக நாடக வகையைச் சார்ந்தவையாகும்.

இசை நாடகங்கள்

இசையோடு சேர்த்து நடிக்கப்படுவது இசை நாடகங்கள் எனப்படும். இவை கவிதை வடிவில் காணப்படுவனவாகவும் அமைகின்றன. தமிழின் முதல் இசை நாடகம் என்று ப.வ.இராமசாமி ராஜூ எழுதிய பிரதாப சந்திர விலாசம் கூறப்படுகிறது.

நாடகக் கட்டமைப்புகள்

கட்டமைப்பு என்பது ஒரு இலக்கியத்தைச் செறிவானதாக அல்லது பொருளுடையதாகச் செய்யும் ஒன்றாகும். கட்டுதல் என்றால் ஒன்று சேர்த்தல். ஓர் இலக்கியத்தின் பல்வேறு கூறுகளை ஒன்றிணைத்து அவ்விலக்கியத்தைப் பொருளுடையதாக்குதல் எனக் கொள்ளலாம். நாடகத்தின் தொடக்கம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியனவற்றுள் ஒன்றினைப் பெற்று அமைவது இயல்பாகும். ஒவ்வொரு நாடகமும் அங்கம், களம், காட்சி என்ற பகுதிகளைக் கொண்டு அமைகின்றது. அங்கம் முதன்மை உறுப்பாகவும், களம் உள் உறுப்பாகவும் கொண்ட நாடகங்களும் அங்கம் முதன்மை உறுப்பாகவும் அரங்கு முதன்மை உறுப்பாகக் கொண்டு ஒரு நாடகமும், அங்கம் முதன்மை உறுப்பாகவும் காட்சி உள் உறுப்பாகவும் கொண்ட நாடகங்கள் என அங்கம், களம், அரங்கு, காட்சி என்ற பகுப்பில் நாடகங்களின் பகுதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு நாடகமும் ஒரு குறிப்பிட்ட கதைக்கருவை சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நாடகங்கள் பல்வேறு கூற்றுகளை உள்ளடக்கியதாகவும், அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப் பொருள்களை உள்ளடக்கியதாகவும், மேலும் சந்தி என்று கூறப்படுகின்ற தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்ற ஐந்து நிலைகளை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றன. இத்தகைய நாடகக் கட்டமைப்புக் கூறுகள் ஆசிரியரின் நாடகங்களில் செறிந்து காணப்படுகின்றன.

நாடகத் தொடக்கம்

நாடகங்களின் தொடக்கத்தில் வாழ்த்து மற்றும் வணக்கம் இடம்பெற வேண்டும். இவற்றைப் பாயிரம் என்று கூறுவது மரபாகும். நவீன இலக்கியத்தில் பாயிரம் என்பது நூன்முகமாகக் கொள்ளப்படுகிறது. ஆசிரியருடைய நாடகமான 'தாமரைப்பூ' விலும் முன்னுரையும், அணிந்துரையும், ஆய்வுரையும், வாழ்த்துரையும் உள்ளன.

நாடகப் பகுதிகள்

நாடகப் பகுதிகள் என்பது நாடகத்தின் முதன்மைப் உறுப்புகள் மற்றும் உள்உறுப்புகளைப் பற்றிக் கூறுவதாகும். ஆசிரியரின் 'வானவில்'என்ற நாடகம் 'அரங்கம்' என்ற முதன்மை உறுப்பைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. மேலும் 'ஏணி(னி)ப்படி' மற்றும் 'மணமகன் யார்?' போன்ற நாடகங்களில் 'காட்சி' என்ற உள் உறுப்பைக் கொண்டதாகவும் இயற்றப்பட்டுள்ளது.

நாடகங்களின் கதைக்கரு

மனிதனுடைய வாழ்க்கையில் முக்கியமானதும் வாழ்க்கைக்கு முக்கியமானதும் 'மனிதநேயம்' மட்டுமே. மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையில் வரும் துன்பங்கள் வானவில்லினைப் போன்று மறைந்து விடும் என்ற கதைக்கருவை மையமாகக் கொண்டதுதான்'வானவில்' என்ற நாடகம்.

இக்கால இளைஞர்கள் அதிலும் குறிப்பாக, சிங்கப்பூர் இளைஞர்கள் ஆடம்பர வாழ்க்கையை மட்டுமே விரும்பக்கூடியவர்களாக உள்ளனர். அந்த ஆடம்பர வாழ்க்கைக்காக ஏழ்மை நிலையில் தம்முடைய உறவுகளைப் பார்ப்பதனையும், தம்முடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக உழைத்த ஏழ்மையான பெற்றோர்களைப் புறக்கணிக்கவும் செய்கின்றனர். சமூகத்தில் புரையோடியிருக்கும் இந்த நிலையினை

மாற்ற நினைத்து ஆசிரியர் தம்முடைய "ஏணி(னி)ப்படி" என்ற நாடகத்தில் இதனைக் கதைக்கருவாகக் கொண்டுள்ளார்.

மனிதன் எவ்வாறு சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்கிறான் என்றும், அத்தகைய மாற்றத்தினால் மற்றவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதனைக் கூட நினைக்க மறந்து விடும் அவல நிலையில் மனிதன் உள்ளதனை தம்முடைய "மணமகன் யார்?" என்ற நாடகத்தின் கதைக்களமாகக் கொண்டுள்ளார்.

உறுதிப்பொருட்கள் நான்கு

இலக்கியம் முழுமை பெற வேண்டுமாயின் அது நான்கு விதமான உறுதிப்பொருட்களை எடுத்துக்கூறுபவையாக இருக்க வேண்டும். ஆசிரியர் தம்முடைய ஒவ்வொரு படைப்புகளிலும் இவ்வுறுதிப்பொருட்களை எடுத்துக்கூறியுள்ளார்.

அறம்

காப்பியங்களும், தமிழ் நூல்களும் அறம் போதித்தலை முக்கியக் கடமையாகக் கொண்டுள்ளன. "தமிழிலக்கியங்களில் அறம் என்ற சொல் ஒழுக்கம், உயர்ந்தோர் வழக்கு (வழக்கியலணை) நடுவுநிலைமை, நீதி உடைமை, புண்ணியம் போன்ற பொருள்களில் வழங்கி வருவதைக் காணமுடிகிறது" என்று க.த.திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார். நாடகங்களும் நல்லொழுக்கம் முதலியவற்றை வலியுறுத்தி, தீமையைச் செய்வோர் தமது செயலை உயர்த்திக் கூறினாலும் அவர்களுக்கு செம்மையுடையோர் தீமையை உணரச் செய்து நல்வழிக்குக் கொணர வேண்டும் என்பதை, "நல்லொழுக்கத்தை நனி விரித்துரைத்தலு நல்லொழுக் கமுளார் நன்மை யெய்தலுந் தீயொழுக்கத்தின் றீமையைச் செப்பலுந் தீயொழுக் கமுளார் தீதுற் றழிதலுந் தீயர்தந் தீமையைச் சிறப்பித் துரைப்பினுஞ் செம்மையோ ரதனைச் சினந்துரை யாடலு மரியநாற் பொருளினு ளறத்தின் பாலவாம்" (நாடக. 22) நாடகத்தின் நோக்கம் நல்லொழுக்கத்தை விரித்துரைத்தல் வேண்டும். நல்லொழுக்கம் உடையார் நல்ல நிலை எய்துவதையும் தீயொழுக்கம் உள்ளவர்கள் தீயகதியடைவதையும் நாடகங்கள் வெளிப்படுத்த வேண்டும். நல்லொழுக்கங்களைக் கடைபிடித்து மனிதர்கள் தம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் அதையே பெரியோர் போற்றுவர். "மற்றைய மக்கட்கும் உயிர்கட்கும் தன் நினைவால், சொல்லால், செயலால் தீங்கின்றி நடத்தலே ஒழுக்கம் என்று பெயர் பெறும்" என்று ஒழுக்கமுடைமைக்கு விளக்கம் கூறுகிறார் ஜி.வரதராஜன். அவ்வாறு, பிறர்க்கு தீங்கிழையாதிருத்தல் மட்டுமல்ல, மனதாலும் நினையாதிருத்தலே ஒழுக்கம் என்பதாகும். இத்தகைய ஒழுக்கம்தான் மிகச்சிறந்த அறமாகக் கருதப்படும் என்ற கொள்கை உடையவராக ஆசிரியர் திகழ்கின்றார். 'வானவில்'; என்ற நாடகத்தில் சுந்தர் என்ற தலைமைக் கதாபாத்திரம் 'குடி'க்கு அடிமைப்பட்டு தன் இன்ப வாழ்க்கையைத் தொலைக்கிறான். இறுதியில் மனந்திருந்தி இல்வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக மாற்றுகின்றான். தன் முடமான மனைவியிடம் அன்பு செலுத்தக் கற்றுக்கொண்டு மனிதநேயமிக்க தலைவனாக மாறுகிறான். (வானவில் - ப.எண் 112) மனிதநேயமே தலைசிறந்த அறமாக ஆசிரியர் கூறுகின்றார்.

சந்தி

ஒரு நாடகம் தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்ற ஐந்து நிலைகளைக் கொண்டு அமையும். இவ்வாறு ஒரு கதை தொடங்கி முடிவதைக் குறிப்பதே சந்தி எனப்படுகிறது. சந்தி என்பது நாடகக் கட்டமைப்புக் கூறுகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதை, நாடகவியல், "முகமே பிரதி முகமே கருப்பம் விளைவு துய்த்தலோ டைவகை யாகும்" (நாடக.32) எனக் குறிக்கிறது.

“அரிஸ்டாட்டில் காலத்தில் தொடக்கம், மையம், இறுதி என்று மூன்று நிலைகளாக நாடகத்தைப் பகுத்துப் பார்த்த இலக்கணம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என ஐவகை நிலைகளை வகுத்தது” என்று குறிப்பிடுகிறார் சிவ.இளங்கோ. இவ்வைந்து நிலைகளையும் நாடக நூல்கள் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியரின் நாடகங்கள் அனைத்தும் இத்தகைய சந்தி அமைப்புகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன.

தொடக்கம்

ஒரு நாடகத்தின் தொடக்கம் இனிமையுடன் தொடங்க வேண்டும் (நாடக.33). “வானவில்” நாடகத்தில் (பூவைத்தொட்டு வணங்கி) கொடுங்கண்ணா.....கொடுங்க.....மகிழ்ச்சி ததும்பல் (ப.எண் - 1) என்ற மகிழ்ச்சியுடன் ஆரம்பமாகிறது. மேலும், ஏணி(னி)ப்படி என்ற நாடகமானது பெரியசாமி – குமாரசாமி என் மகள் சாந்தியோட வருகையை மகிழ்ச்சியா கொண்டாடுறதா முடிவு பண்ணியிருக்கேன் (ப.எண் - 116) என்று மகிழ்ச்சியோடு ஆரம்பமாகிறது

வளர்ச்சி

நாடகத்தின் வளர்ச்சி நிலையை பிரதி முகம் (நாடக.34) எனக் குறிக்கிறது நாடகவியல். தொடக்கத்திற்கு அடுத்து கதை வளர்வதாகும். இதனையே வளர்ச்சி என்கிறோம். “வானவில்” என்ற நாடகத்தில் சுந்தர் என்ற பணக்காரக் கதாபாத்திரம் மீனா என்ற முடமான பெண்ணின் சங்கீதத்தில் மயங்கி காதலைத் தெரிவிக்கிறான். காதல் என்ற மொட்டு மலராக விரிகின்றது.மீனாவின் அண்ணன் காதலுக்கு பச்சைக்கொடி காட்ட நாடகம் விறுவிறுப்பாக செல்கின்றது. இதனையே நாம் வளர்ச்சி என்கிறோம்.

உச்சம்

நாடகங்களின் உச்ச நிலையை நாடகவியல் கருப்பம் ‘கருவு முதிர்ந்துழி’ (நாடக.35) என்கிறது. கதையின் உச்சம் ஓர் ஏற்றத்தைக் கொண்டிருப்பதாகும். “வானவில்” என்ற நாடகத்தில் மீனாவின் அண்ணன் சுந்தரின் காதலுக்கு இசைவினைத் தெரிவிக்க விறுவிறுப்பாக சென்ற நாடகமானது, திடீரென்று ஒரு திருப்பத்தினை அடைகின்றது. சுந்தரின் அப்பா பெரிய முதலாளி. அவர் அக்காதலுக்கு மறுப்புத் தெரிவிக்கின்றார். மறுப்பினையும் மீறி நடைபெற்ற திருமணத்தின் சில நாட்களிலேயே சுந்தர் குடிக்கு அடிமையாகி, நேசித்த மீனாவையே வெறுக்க ஆரம்பிப்பதோடு கதை உச்சத்தினைத் தொடுகின்றது.

முடிவு

நாடகங்களின் கதை முடிவை எட்டுவதை நாடகவியல் ‘காய்ந்த கதிரினை யறுத்து நற்பொலி’ (நாடக.37) செய்தல் எனக் குறிக்கிறது. ஆசிரியரின் வானவில் நாடகத்தில் குடிக்கு அடிமையான சுந்தர் மனந்திருந்தி மீனாவை நேசிக்க ஆரம்பிக்கிறான். அனைவரும் மகிழ்ச்சி அடைவதோடு நாடகம் முடிவினை அடைகின்றது. ‘தாமரைப்பூ' என்ற தொகுப்பில் உள்ள அனைத்து நாடகங்களுமே இப்படிப்பட்ட சந்தியினை உள்ளடக்கியதாகவே உள்ளன.

முடிவாக

இலக்கியம் செறிவானதாக இருக்க வேண்டுமென்றால் அவ்விலக்கியம் இலக்கண விதிகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்று கூறுவது மரபு. ஆசிரியருடைய நாடகப்படைப்புகள் அனைத்தும் நாடகக் கட்டமைப்புக் கூறுகளுடன் பொருந்தி வரும் திறனைக்கொண்டு, ஆசிரியரின் நுண்மான் திறத்தையும், அத்திறம் அவர்தம் படைப்புகளில் அவரையுமறியா வண்ணம் இழையோடிருக்கும் திறத்தையும் இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

‘மணக்கும் மல்லிகை’ சிறுகதைத் தொகுப்பில் காட்சிப்படுத்தப்படும் இளைஞர்களின் வாழ்வியல் சிக்கல்கள்

ரா. ஜெனிபர்
தமிழ் உயராய்வு மையம், உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

தொடக்கமாக

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற சான்றோர்களின் வாக்கினுக்கு ஏற்ப, தமிழர்கள் கடல்கடந்து சென்று பொருளீட்டியுள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகிறது. சிங்கப்பூரைப் பொருத்தவரை, ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் ரப்பர் தோட்டங்களில் பணிபுரிவதற்கு இங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள், ஏனைய காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்து சென்றவர்கள் என, சிங்கப்பூர் மக்கள் தொகையில் சிறுபான்மையினராகத் தமிழர்கள் உள்ளனர். சிங்கப்பூரில் சீனர்கள் அதிக அளவில் உள்ளனர். எனவே, பல்வேறு நாட்டினர், மொழியினர் வசிக்கக் கூடிய நாடாகச் சிங்கப்பூர் உள்ளது. சிங்கப்பூரில் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் போன்றவற்றின் வளர்ச்சியில் தமிழர்களின் பங்களிப்பு அளப்பரியது. எனவே தான், சிங்கப்பூரில் தமிழ் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் தமிழர்கள் அடையக்கூடிய வாழ்வியல் சிக்கல்களைச் சிங்கப்பூர்வாழ் தமிழர்களும் சந்திக்கவே செய்கின்றனர். தனிமனிதர் சந்திக்கின்ற இன்னல்கள், போராட்டங்கள், வாழ்வியல் சிக்கல்கள், மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களைப் பிறருக்குக் கடத்தக்கூடிய ஊடகங்கள் இன்றைக்கு ஏராளமாக இருந்தாலும், இலக்கியம் எனும் ஊடகம் தனித்துவமானது. இதில் மனித மனங்களை அழகியலோடும் கவித்துவத்தோடும் சொல்லமுடியும். இவ்வளவு சிறப்புடைய இலக்கியத் துறையில் சிறுகதைவடிவமானது சிக்கலானது. அவ்வடிவத்தைக் கையாள்வதற்கு எனத் தனித்த மேதமை வேண்டும். சிறுகதை எனும் வடிவத்தை மு. தங்கராசன் கையாண்டுள்ள விதத்தினையும் அவரது ‘மணக்கும் மல்லிகை’ சிறுகதைத் தொகுப்பில் காட்சிப்படும் இளைஞர்களின் வாழ்வியல் சிக்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட விதத்தினையும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

‘இளைஞர்’ எனும் சொல்லுக்கு அகராதி தரும் பொருள்

இளைஞன் என்ற சொல்லுக்குக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியானது” இளமைப் பருவத்தில் இருக்கும் ஒருவன்” என்றும், “வாலிபன் “ என்றும் பொருள் தருகிறது. க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி ப-163) இதே பருவத்தில் பெண்பாலரைக் குறிக்க இளைஞர் என்ற சொல் பயன் படுத்தப்படுவதைக் காண முடிகிறது. ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற லழரவா என்ற சொல்லைப் போலவே தமிழில் இளைஞர் எனும் சொல்பயன்படுகிறது.

சிங்கப்பூரில் தமிழ்ச் சமூகமும் இளைஞர்களும்

சிங்கப்பூரில் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் புலம்பெயர்வுடன் தம்முடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றையும் கொண்டு சென்றுள்ளனர். எனவே, தமிழகத்தில் காணப்படுவதைப் போலவே சிங்கப்பூரிலும் சாதியப் பாகுப்பாடுகள், வர்க்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. வேறுபாடுகள்

காணப்படும்போதே அதற்குள் சிக்கல்களும் தோன்றுவது இயல்பாக அமைந்து விடுகிறது. இத்தகைய சூழலில், "சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பாலோர் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பவில்லை" (எம். எஸ்.ஸ்ரீ. லெட்சுமி – தமிழ்இனி-ப.360) என்ற கூற்று, ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகிறது. அதாவது, தனித்துவமான அடையாளங்களுடன் (தலித் இலக்கியம், பெண்ணிய இலக்கியம், மலையக இலக்கியம்) படைப்பிலக்கியங்கள் வெளிப்படவில்லை. மாறாக, பொதுத்தன்மையான தனிமனித வாழ்வு பற்றியும் அன்றாட நிகழ்வுகள், காதல், குடும்பம் போன்றவற்றையும் அவற்றில் ஏற்படுகின்ற சிக்கல்களையே பெரும்பாலான சிறுகதையாளர்கள் தமது கதைகளில் எழுதியுள்ளனர். "சிங்கப்பூர் புனைகதைகளுள்ளும் அடிமட்டத் தமிழர்களைப் பற்றியும் அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் அதிகமாக எழுதியவர் மா. இளங்கண்ணன் ஆவார்" என்று (தமிழ் இனி 2000 – ப.360) லட்சுமியின் கருத்து ஏற்புடையதே. ஏனென்றால், தனித்துவமான கூறுகளைப் பெரும்பாலானோர் கவனப்படுத்தத் தவறியுள்ளனர்.

சிங்கப்பூரில் இளைஞர்கள் கட்டற்ற வாழ்க்கையை வாழ்கின்றனர். பெரும்பாலானோர் பள்ளிப்படிப்பைப் பாதியில் கைவிட்டு, போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். சரியான வழிகாட்டுதலும் வேலை வாய்ப்புகளும் இல்லாமையால் திருட்டு, போதைப்பொருள் கடத்தல் போன்ற, தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடுகின்றனர். வறுமைநிலையினால் பரத்தமையில் ஈடுபடக்கூடிய சூழல் உருவாகிறது. மேலும், சினிமா பிரபலங்களின் மீதான மோகம் இளைஞர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. அதனால், சினிமாப் பிரபலங்களின் பெயர்களைத் தம்முடைய பெயரின் முன்னொட்டாகவோ, பின்னொட்டாகவோ வைத்துக்கொண்டு, சிகையலங்காரம் மற்றும்,ஆடைகளில் ஒழுங்கற்ற தன்மையில் இருக்கின்றனர். அதிகமான வட்டிக்கடன், குடிப்பழக்கம், நாலுநம்பர் சூதாட்டம் போன்ற, பல்வேறு சமூகச் சிக்கல்களைச் சிங்கப்பூர்வாழ் இளைஞர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய சமுதாயச் சிக்கல்களை தம் சிறுகதைகளில் மு. தங்கராசன் பதிவு செய்துள்ளார்.

'மணக்கும் மல்லிகை'த் தொகுப்பில் வெளிப்படும் இளைஞர்களின் வாழ்வியல் சிக்கல்கள்

மு. தங்கராசன் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்களுள் மூத்த எழுத்தாளரும் முதுபெரும்கவிஞரும் ஆவார். இவர் கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரைகள் என பல்வேறு துறைகளில் தமது பங்களிப்பினைச் செய்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஆசிரியர்பணி, தமிழ்மொழிப்பாட நூலாக்கக் குழுவில் எழுத்தாளர் என பல்வேறு செயல்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். 'மணக்கும் மல்லிகை' எனும் சிறுகதைத்தொகுப்பு தங்கராசனின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் மொத்தம் ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் இளைஞர் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகளைப் பேசுவதாக உள்ளன.

இளைஞர் சமுதாயம் சாதுர்யமாகத் திருடுவதை 'கொடுமை' எனும் சிறுகதையில் பதிவுசெய்துள்ளார். எவ்வாறென்றால் சிங்கப்பூர்த் தமிழர்களிடையே அதிகமாகக் காணக்கூடிய ஆன்மிக நம்பிக்கை என்பது, மிகவும் மூடநம்பிக்கையாக வளர்ந்துள்ளது. இந்தக் கதையில் உள்ள துரைசாமி, விசாலாட்சியம்மா என்ற தம்பதியர் ஒரு வீட்டில் வசித்து வருகின்றனர். ஒரு நபர் கதவைத் தட்டி நான் பக்கத்து அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருக்கிறேன். "நான் அவசரத்தில் வீட்டுச்சாவி மணிபர்ஸ் எல்லாவற்றையும் எடுத்துவிட்டேன் என்று நினைத்து கதவை இழுத்து

அடைத்துவிட்டேன். என்கையில் எதுவும் இல்லை" என்று கூறி கடனாகப் பணத்தை திருடுவதைப் பதிவுச் செய்கிறார். இத்தொகுப்பில் மூன்றாவது கதையாக 'இலவுகாத்த கிளி' என்ற கதை அமைந்துள்ளது. இதில், இளைஞர்கள் பெண்களை எவ்வாறு மனதளவிலும் உடலளவிலும் ஏமாற்றுவதைப் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகிறார். அலுவலகத்தில் வேலை செய்வது போன்று, நேர்த்தியாக ஆடை உடுத்திக் கொண்டு பைலும் கையுமாக நேர்த்தியாகத் தன்னைக் காட்டி கமலக் கண்ணன், 'செந்தாமரை' எனும் பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்து கொள்கிறார். செந்தாமரை, சிராங்கூன் சாலையில் உள்ள கடையில் பணிப் பெண்ணாக வேலைபார்த்து வருகிறாள். அடிப்படையில் கமலக்கண்ணன் போதைப் பொருள் ஏஜண்ட் இளைஞர்களை சந்தித்துப் போதைப் பொருட்களை விநியோகம் செய்கிறவன் ஆவான். இதனை அறிந்த அவள் மனைவி இதைக் குறித்து கேட்கும் பொழுது, அவளிடம் சண்டையிடுகிறான். மேலும், அவனுக்குத் தினமும் 10 வெள்ளி கொடுக்க வேண்டும் . அவ்வாறு இல்லையென்றால் அவளிடம் தினமும் தினமும் சண்டையிடுகிறான். அவ்வாறு ஒருநாள் பணம் தராததால் கர்ப்பிணியான செந்தாமரையிடம், "செலவுக்குக் காசு கொடுக்கும் சிங்காரிகள் பலர் எனக்காகக் காத்திருக்கிறார்கள். இன்றோடு சரி, இனி என்னை இங்கு எதிர்பார்க்காதே! வேண்டுமானால் விவகாரத்து எழுதிக் கொடு! குட்பை" (மு.தங்கராசனின், மணக்கும் மல்லிகை ப-33) என்று கொஞ்சமும் மனிதாபிமானமும் இல்லாமல் நடந்து கொள்வதையும், இளம்பெண்கள் இத்தகைய ஏமாற்றுப் பேர்வழிகளை நம்பி வாழ்க்கையை இழப்பதையும் இக்கதையில் எழுதுகிறார்.

சிங்கப்பூரில் இளைஞர்கள் போதைப்பொருள், திருட்டு போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். தான் நம்பிய ஆடவர், பெண் என்றும் பாராமல் துரோகச் செயல்புரிகின்றனர். இத்தொகுப்பில் எட்டாவது கதையாக அமைந்திருப்பது 'சுடுபால் குடித்த பூனை' எனும் கதையில் நடத்துநராக பணிசெய்யக் கூடிய தேவகி என்னும் பெண்ணை பலநாட்கள் பின்தொடர்ந்து காதலிப்பதாகக் கூறி, அவளை நம்பவைத்து திருட்டுச் செயலில் ஈடுபடுவதைப் பதிவு செய்துள்ளார் மு.தங்கராசன். இக்கதையில் தர்மராஜூ என்ற இளைஞர், தான் காதலித்த இளம்பெண்ணை "நாளைக்கு நீ உன்னிடம் இருக்கும் ஆடையாபரணங்களை அணிந்து கொண்டு ஒரு கல்யாணப் பெண் போல் அலங்கரித்துக் கொண்டு வர வேண்டும்" (மு.தங்கராசன் மணக்கும் மல்லிகை, ப-122) என்று கூறிய ஆசை வார்த்தையை நம்பி அப்பெண் செல்ல, புதரில் மறைந்திருந்த தர்மராஜூன் கூட்டாளிகள் அவற்றைக் கொள்ளையடிக்கின்றனர். பின்னர், காவல் துறைக்கு புகாரளிக்கச் செல்கையில், திருட்டுக்கும் தர்மராஜூம் பங்கு இருப்பதைப் பார்த்து தேவகி அதிர்ச்சியடைகிறாள். இவ்வாறு, தான் காதலித்த பெண்ணை நம்பவைத்து ஏமாற்றுகின்ற முறையினை இக்கதையில் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

முடிவாக

சிங்கப்பூரில் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் தங்கராசனுக்குச் சிறுகதை எழுதக் கைகொடுத்துள்ளது. தொடர்ந்து மாணவர்களோடும் இளைஞர்களோடும் அதிகநேரம் இருக்கக் கூடிய பணி ஆசிரியர் பணி. அங்கு, இளைஞர்கள் எதிர்கொள்ளக் கூடியச் சிக்கல்களைப் பார்ப்பவராகவும் முகம் கொடுப்பவராகவும் இருக்கிறார். இத்தகைய பின்புலத்தில் பதின்ம வயதில் உள்ள இளைஞர்களின் சிக்கல்களையும், திருமணம் எனும் பெயரில் இளைஞர்கள் செய்கின்ற மோசடி, நம்பிக்கைத் துரோகம் முதலியவற்றையும் பதிவு செய்துள்ளார். மேலும், அன்றைய சிங்கப்பூர்த் தமிழர்கள் (இளைஞர்கள்) எதிர்கொண்ட விவாகரத்துப் பிரச்சினைகளையும், பெண்கள் எளிதில்

ஏமாறுவதையும் படம்பிடித்துக் காட்டுகிறார். நூற்றாண்டினைக் கடந்துள்ள தமிழ்ச்சிறுகதை வரலாற்றில், சிறுகதைகள் பல்வேறு சோதனைகளையும், பேசப்படாத சிக்கலான விடயங்களையும் எடுத்துக்காட்டி வருகின்றன. அந்தவகையில், மு. தங்கராசன் புதுப்புதுக் கதைக்களங்களைத் தமது கதைகளில் சுட்டிச் செல்கிறார். கதைகளுக்கும் சரி, பெயர்வைப்பதில் இவர் பழமையான முறையையே கையாளுகிறார். மேலும், சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்வியல் சிக்கல்களை இன்னும் துல்லியமாகப் பதிவிட வேண்டிய தேவை மு. தங்கராசன் போன்ற மூத்த படைப்பார்களுக்கு உண்டு.

துணை நின்ற நூல்கள்

மு. தங்கராசன், மணக்கும் மல்லிகை, பதிப்பகம் தமிழவேள் நாடக மன்றம், முதற்பதிப்பு – 2001.

பா.ரா.சுப்பிரமணியன், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா வெளியீடு, சென்னை முதற்பதிப்பு, 2000.

மதிவாணன்(ப.ஆ.), தமிழ்இனி 2000

நாட்டுப்புறத்தில் காதல்

அ. தேன்மொழி
உதவிப் பேராசிரியர் - தமிழ்
மங்கையர்க்கரசி மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் இடம்பெறக்கூடிய பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவை அவர்களின் பண்பாட்டினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. நாட்டுப்புற மக்களிடையே வழக்கில் உள்ள பாடல்கள் அவர்களின் எண்ண வெளிப்பாடாகவும் கருத்துப் பெட்டகமாகவும் உள்ளன. இதில் காதல் பாடல்களைக் காதலன் பாடுவது, காதலி பாடுவது, எதிர்ப்பாட்டு, போட்டிப்பாட்டு என வகைப்படுத்தலாம். இது எண்ணுந்தோறும் இதயம் இனிக்கச் செய்வது. இயற்கையாகப் பாடும் பாடல்களே இன்பம் பயப்பனவாக உள்ளது. உயிர்ப்புணர்வோடு உள்ளத்து ஆசைகளை எடுத்தியம்புவது. இவ்ஆய்வுக் கட்டுரையில் மு. தங்கராசனின் நாட்டுப் புறத்தில் (2020) என்ற நூலில் இடம் பெற்றுள்ள காதல் பாடல்கள் விளக்கப்பட்டுள்ளது.

காதலி வருணனை

நாட்டுப்புறத்தில் வயல்புறத்தில் ஏற்றம் இறைத்துக் கொண்டும் விதை விதைத்துக் கொண்டும் இருக்கும் நம்மவர்கள்,

> "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
> மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்கடுகாம்..."

(நாட்டுப்புறத்தில், ப.56)

என்று பாவேந்தர் கூறிய பைந்தமிழ்க் கருத்துக்கொப்பக் காதல் வேகத்தில் வேலைகளை கழனியில் மும்முரமாக செய்துகொண்டிருக்கின்றனர். காதலன் தன் காதலியை வருணித்துப் பாடும் உணர்வுப் பெருக்காக,

> "எண்ணெய்த் தலையழகி இருதோளும் பெண்ணழகி
> திரும்பி நடக்கையிலே சீவகன்பறி போகுதடி!
> நடையா நடையழகி நாதாங்கிக் காதழகி
> கோவில் சிலையழகைச் சொல்லுதடி உன்னழகு!"

(நாட்டுப்புறத்தில், ப.56)

எண்ணெய் மினுக்கக் கூந்தல் முடித்து நடத்துவரும் நாயகியைப் பார்த்தவுடன் கற்பனை கரைபுரண்டு ஓடுகிறது. இருதோளும் இளமையின் எடுப்பாகத் திகழ்கிறது. நீ திரும்பி நடந்தால் திசையெட்டும் உன்னைத் திரும்பிப் பார்க்கும் இடை அசைய நடக்கும் உன் நடையொரு தனி அழகு உன் காதுகள் நாதாங்கியைக் காட்டுகின்றன என்று வருணிக்கின்றான்.

பொன்னாகப் புகழ்தல்

காணக்கண் கோடி வேண்டும் என காதலியின் அழகை மாநிற மேனியாள், அந்த மேனியிலே ஆதவனின் ஒளி படுகின்றது. அவன் நின்று கொண்டிருப்பதோ வயல் வரப்பின் மேலே, அவளின் இந்தப் பேரெழிலை அவன் கற்பனை செய்து பார்க்கிறான். "தங்கத்தைக் காய்ச்சித் தரையிலே விட்டாற் போல்... பொன்ன உருக்கி பூமியிலே விட்டாற்போல்..." என்றுதான் அவனால் உவமை கூற முடிகிறது. "உன்னைச் சுவரில் சித்திரமாக எழுதி அழகு பார்க்கலாம். படமாக

வரைந்து பதுமையாக அழகு பார்க்கலாம்..." தங்கத்தைக் காய்ச்சித் தரையில் விட்டால் ஆதவனின் ஒளியும், மண்ணின் நிறமும் சேர்ந்து பெண்ணின் அழகுக்கு அழகு செய்யும். அழகி என்று மட்டும் குறிப்பிட விரும்பவில்லை அவனது காதல் நெஞ்சம். அழகுக்கு அழகு செய்யும் பேரழகு படைத்தவள் நீ என்பதைத்தான் இந்த வரிகளால் சொல்லுகிறான். இதனை,

"சுவரில் எழுதலாம் சித்திரம்போல் பார்க்கலாம்
படத்தில் எழுதலாம் பதுமைபோல் பார்க்கலாம்
தங்கத்தைக் காய்ச்சி தரையில் விட்டாற்போல்
பொன்னைக் காய்ச்சி பூமியிலே விட்டாற்போல்"

(நாட்டுப்புறத்தில், ப.57)

என்ற பாடல் அடி உணர்த்துகிறது.

என் குணத்துக்கு ஏற்றவளே

காதலன் காதலியை உடுக்குபோல் இடைசிறுத்து உன்னதமாய் அழகு மிளிரும் என்னவளே, என்னுடைய பண்புகளுக்கு ஏற்றவளே, மிடுக்காக நடைநடந்து நீ என்னைத் தேடிவர வேண்டாம், நான் உன்னைத் தேடி வருகிறேன் என்று கூறுவதோடு காலை நேரம், மறைந்தும் மறையாத விடியற் காலை இருளிலே நீ களை எடுக்கும் வயற்பரப்புக்கு நான் வந்து உனக்காகக் காத்திருக்கிறேன். உன்னைப் பார்த்து விட்டுப் போய்விடட்டுமா? என்று அவளது விருப்பத்தை வினவுகிறான் என்பதனை,

"இடுப்பு சிறுத்தவளே என்குணத்துக்கு ஏற்றவளே
நடைமிடுக்கு உடையவளே நாவாரேன் உன்னைத்தேடி
காலைக் கருக்கலிலே களையெடுக்கும் பொன்மயிலே
நீலக் கருங்குயிலே நிற்கட்டுமா போகட்டுமா?"

(நாட்டுப்புறத்தில், ப.58)

என்ற பாடல் அடி விளக்குகிறது. இதே பொருளில் கவிப்பேரரசு வைரமுத்து "குறுக்கு சிறுத்தவளே என்னை குங்குமத்தில் கரைத்தவளே" என்று தனது கவிதை வரிகளை அமைத்துள்ளார்.

ஒரு வார்த்தை சொல் கண்ணே

காதலன் காதலியைக் கொஞ்சுகிறான், கெஞ்சுகிறான், அவள் மிஞ்சுகிறாள் அத்தான் என்று ஒரு வார்த்தை சொல் கண்ணே என்று தாளைத்திறவாயோ தனிவார்த்தை சொல்லாயோ என்பதனை நான் எவ்வளவோ பேசிவிட்டேன் பதிலுக்கு நீ ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லையே. முத்துப்பற்களை கொண்டிலங்கும் உன் மோகன வாய்திறந்து பதில் சொல்ல மாட்டாயா? என்று வருந்தி கேட்கிறான். இதனை,

"வாயைத் திறவாயோ மறுவார்த்தை சொல்லாயோ
தாளைத் திறவாயோ தனிவார்த்தை சொல்லாயோ
முத்தான வாய்திறந்து உத்தாரம் சொல்லாயோ"

(நாட்டுப்புறத்தில், ப.58)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இங்கு தாளைத் திறவாயோ என்று காதலன் தன் காதலியின் மனக்கதவைத் திறக்கச் சொல்கிறான். மேலும், முத்தான வாய்திறந்து உத்தாரம் சொல்லாயோ என்பது "ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தான் என்று அந்த சொல்லில் உயிர் வாழ்வேன்" என்ற வைரமுத்துவின் பாடல் வரிகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

நெத்திக்குப் பொட்டாவேன்

காதலன் காதலியை நோக்கி, நான் நீ விரும்பி சூடுகின்ற மலராகி விடுவேன். உன் சேலையின் கொசுவத்தோடு இணைந்து இடையில் தொங்கும் பையாய் இருப்பேன். கிராமப்புறப் பெண்கள் சுருக்குப்பையை வெற்றிலைப் பாக்கு, சில்லறைக் காசு முதலியவை வைக்கப் பயன்படுத்துவர். திருமணமான பெண்கள் காலில் பெருவிரலுக்கு அடுத்த விரலில் அணிந்துகொள்ளும் மோதிரம் போன்ற ஒரு வகை அணிசெய் பொருளுக்கு மெட்டி என்று கூறுவது மரபு. கிராமப் புறங்களில் வெள்ளியால் செய்த பாதசரம், பாதக் கொலுசு, காப்பு, மெட்டி போன்ற அணிகலன்களை அணிந்து கொள்ள வேண்டும். கலகலவென்று உன்றன் சிரிப்பொலியோடு போட்டி போடுமே அந்தக் கைவளையல் ஆகிவிடுவேன் என்று தன் உறுதியினை அவன் அவளின் ஒவ்வோர் அணிசெய் பொருட்களுக்கும் உவமை சொல்லிப் பாடுகின்றான். இதனை,

"கொண்டைக்குப் பூவாவேன்
கொசுவத்திற் பையாவேன்
நெத்திக்குப் பொட்டாவேன் நீலவிழி மையாவேன்
முந்தானித் தொங்கலிலே முள்ளாகி ஒட்டுவேன் நான்
காலுக்கு மெட்டியாவேன் கைவளையல் தானாவேன்
பஞ்சணை மெத்தையிலே படுக்கை மலராவேன்"

(நாட்டுப்புறத்தில், ப.59)

என்ற பாடல் அடி வெளிப்படுத்துகிறது. இப்பாடல் காதலன் எப்போதும் தன் காதலியுடன் இருப்பதையே விரும்புகிறான் என்பதைப் புலப்படுத்துகிறது.

அன்பின் ஆழம் உறுதியானது

காதலி காதலனிடம் இளமைப் பருவம் கடந்தால் வண்டாய் பறப்பாய் என்று கூற, அதற்கு மறுமொழியாக காதலன் சாகும்வரை உன்னைவிட்டுப் பிரியமாட்டேன். இறந்து இந்த உடல் அழிந்தாலும் மண்ணில் புதைக்கப்பட்ட நன்காட்டில் நான் செங்கழுநீர்ப் பூவாகப் பூத்திருப்பேன். மாண்டபின் வைகுந்தம் சென்று சேர்ந்தாலும் (முக்தி பெற்று இனி இவ்வுலகில் பிறவாது போனாலும்) உன் உடல் புதைக்கப்பட்ட இடந்தனில் மல்லிகையாய்ப் பூத்து வந்து என் அன்பின் ஆழத்தை இந்த உலகுக்கு உணர்த்துவேன் என்று உறுதி கூறுகின்றான்.

"செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சிப் போனாலும்
செத்த இடத்தினிலே செங்கழுநீர்ப் பூவாய்ப் பூப்பேன்
மாண்டு மடிஞ்சாலும் வைகுந்தம் சேர்ந்தாலும்
மாண்ட இடந்தனிலே மல்லிகையாய்ப் பூப்பேன்!"

(நாட்டுப்புறத்தில், ப.60)

என்று தன் காதலின் ஆழத்தைப் புலப்படுத்துகிறான். மாண்டு மடிஞ்சாலும் செங்கழுநீர்ப் பூவாய்ப் பூப்பேன் என்பதை ஒத்த வரிகள் வெள்ளித்திரை திரைப் படத்தில் "நான் சாம்பல் ஆனாலும் என் காதல் வாழுமே. அந்த சாம்பல் மீதும் உனக்காகச் சில பூக்கள் பூக்குமே" என்று காணப்படுகிறது.

காதலனின் தவிப்பு

காதல் நினைவாகவே எப்போதும் இருப்பதனால் எனக்கு உறக்கம் பிடிக்க வில்லை. பஞ்சுமெத்தை முள்ளாகக் குத்துகிறது. பால் புளிக்கிறது, பாயசமும் கசக்கிறது என்று தன் ஏக்கநிலையை அவளுக்கு உணர்த்துகின்றான் காதலன். இதனை,

"உறக்கம் பிடிக்கலையே
உன்மயக்கம் தீரலையே

பஞ்சு மெத்தை குத்துதடி
பாலும் புளிக்குதடி
பாயசமும் கசக்குதடி"

((நாட்டுப்புறத்தில், ப.65)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. காதலர்களுக்கு இயற்கை நிகழ்வுகள் யாவும் மாறுபட்டே காணப்படும். இங்கு காதலனுக்கு பஞ்சு மெத்தை குத்துகிறது, பால் புளிக்கிறது, பாயசம் கசக்கிறது என்று உலக நிகழ்வுகள் யாவும் மாறுபட்டே தோன்றுகிறது. இது போன்றதொரு பொருண்மையில் கவிப்பேரரசு வைரமுத்தும் தம்பி திரைப்படத்தில் "சுடும் நிலவு சுடாத சூரியன் ஓடும் நிமிஷம் உறையும் வருஷம்" என்ற வரிகளை அமைத்திருப்பார்.

தண்ணீர் விடுதூது

காதலி தன் மனத்தின் ஆசைகளைக் காதலனுக்கு எடுத்துக்கூற ஆற்று நீரைத் தூதாக அனுப்புகிறாள். தன் எண்ணக் குவியலைப் பாட்டாகப் பாடிக்கொண்டே சொல்கிறாள்.

"ஓடுகின்ற தண்ணியிலே ஓரச்சிவிட்டேன் சந்தனத்தை
சேர்ந்திச்சோ சேரலையோ செவத்தமச்சான் கைகளிலே
கலங்காத தண்ணியிலே கரைச்சிவிட்டேன் சந்தனத்தை
ஒட்டுச்சோ ஒட்டலையோ உங்களோட கைகளிலே"

(நாட்டுப்புறத்தில், ப.67)

என்ற பாடல் விளக்குகிறது. 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான தூது இலக்கியத்தின் கருத்தை மையமிட்டதாக இக்காதல் பாடல் வரிகள் உள்ளன. அச்சமில்லை அச்சமில்லை என்ற திரைப்படப் பாடலிலும் இதே வரியில் ஒத்தகருத்தமைந்த பாடல் இடம்பெற்று பட்டிதொட்டிகளெல்லாம் அனைவரையும் முணுமுணுக்கச் செய்தது.

நினைக்கையில் ஓடிவந்தால் ஆகாதோ?

காதலன் காதலியைத் தேடிவரும் பொழுது அங்கு பலரும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். காதலியால் காதலனிடம் ஆசையாக மனம்விட்டுப் பேச முடியவில்லை. காதலனை எண்ணித் தனது உள்ளக் குமுறலைத் தனது இயலாமையை மனம் ஒன்றி எந்த ஒரு செயலையும் செய்ய முடியாத நிலையினை ஏக்கத்துடன் பாட்டாகப் பாடுகிறாள் என்பதனை,

"பருத்தி எடுக்கையிலே பலரறிய வந்தமச்சான் - நான்
ஒருத்தி நெனைக்கையிலே ஓடிவந்தால் ஆகாதோ?
மஞ்சள் குளிக்கையிலே மதிலேறி பார்த்த மச்சான் - என்
நெஞ்சம் நினைக்கையிலே நேரில்வந்தால் ஆகாதோ?
காரவீட்டுத் திண்ணையிலே கறிக்கு மஞ்சள் அரைக்கையிலே
என்னபொடி போட்டயோ இழுத்தரைக்க முடியலையே?

(நாட்டுப்புறத்தில், ப.67)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகிறது. இதே பொருண்மையில் ஆட்டுக்கார அலமேலு என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற பாடலும் ஈங்கு நினைவு கொள்ளத்தக்கது.

நிறைவுரை

படிப்பறிவு இல்லாத நாட்டுப்புற மக்களிடையே வெளிப்படும் அன்பு உண்மையானது. ஏமாற்றாதது. எதையும் விரும்பியவர்களுக்காக விட்டுக் கொடுப்பது. அவர்களது காதல் உணர்வு வேலை செய்யும் இடத்தில் இயற்கையாகத் தோன்றி வளர்வது. காதலியின் மனக்குறிப்பை காதலன் வெளிப்படுத்துவதும், காதலனின் உணர்வை அறிந்து காதலி செயல்படுவதும் ஈங்கு குறிப்பிடத்தக்கது. மனம் ஒத்த

இருவரும் தங்கள் மனக்குறிப்புகளைப் காதல் பாடல் வழி வெளிப்படுத்துகின்றனர். ஒரு பெண் ஆடவனை விரும்பினாலும் தன் காதலை முதலில் கூறுவது இல்லை. முதலில் காதலை வெளிப்படுத்துவது ஆண்மகனே. இது சங்க இலக்கியங்களோடு ஒப்புநோக்கத்தக்கது. மு.தங்கராசனின் நாட்டுப் புறத்தில் என்ற நூலில் இடம்பெற்ற காதல் பாடல்களின் ஆவணப் பதிவு போற்றிப் பாராட்டுதலுக்குரியது.

தாலாட்டுப் பாடல்கள் காட்டும் வாழ்வியல்

முனைவர் பா. நேருஜி
உதவிப் பேராசிரியர் - தமிழ்
செந்தமிழ்க் கல்லூரி
தமிழ் உயராய்வு மையம், மதுரை

.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் உள்ளடக்கியது நாட்டுப்புறவியல். இது மக்களின் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. தாலாட்டு என்பதில் தால் என்றால் நாக்கு என்றும் நாக்கை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு என்றும் பெயர் ஆகும். குழந்தைகளைத் தூங்க வைக்கப் பெண்களால் தாலாட்டுப் பாடப்படுகிறது. எண்ணுந்தோறும் இனிக்கவள்ளது. மனிதனைப் புனிதனாக்கும் மழலைச் செல்வம் ஒரு பெரும்பேறு. தாலாட்டுப்பாடல் கற்பனையும் அடுக்குச் சொல்லும் கலந்து இராகத்துடன் பாடப்படுகிறது. இதில் பொதுவாகப் பெண்களின் தாய்வீட்டுப் பெருமை கணவனின் வீட்டுப் பெருமை குழந்தையின் சிறப்புகள் இடம்பெறுகின்றன. ஆண்களால் தாலாட்டுப் பாடப்படுவது இல்லை. மு. தங்கராசு அவர்களின் நாட்டுப்புறத்தில் (2020) என்ற நூலில் இடம்பெற்றுள்ள தாலாட்டுப் பாடலில் வாழ்வியல் சிந்தனைகள் இவ்ஆய்வுக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

குழந்தையைத் தெய்வம் காக்கும்

குழந்தையைத் தெய்வம் காக்கும் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. உறங்காத கண்ணுக்கு ஊசி கொண்டு மை தீட்டி சீவி சிங்காரித்து தொட்டிலில் போட்டுவிட்டால் அந்த குழந்தையின் பேரழகை தொட்டிலுக்கு கீழே அமர்ந்த வண்ணம் அன்னை மாரியம்மா பார்த்து ரசித்துக் கொண்டிருப்பாள் எனத் தாய் பாடுகிறாள். இதனை,

> "உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி
> தூங்காத கண்ணுக்குத் தூசிகொண்டு மையெழுதி
> தொட்டில்கட்டி எங்க துரைக் கண்ணனைப் போட்டுவிட்டா
> தொட்டிலுக்கும் கீழே துணையிருப்பாள் மாரியம்மா!"

(நாட்டுப்புறத்தில், ப.40)

என்ற பாடல் அடி குறிப்பிடுகிறது.

தாயின் குறை தீர்க்க வந்த குழவி

திருமணமான பிறகு பெண்ணுக்குத் தாய்மை என்பது போற்றுதலுக்குரியது. சில ஆண்டுகள் குழந்தைப் பெறாத நிலையில் அப்பெண்ணை சமூகத்தாற் மலடி என்ற சொல்லால் ஏசுகின்றனர். "குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்" (குறள்.66) என்கிறார் வள்ளுவர். குழந்தைச் செல்வம் பரம்பரைச் சொத்து என்ற எண்ணம் சமூகத்தில் நீண்ட காலமாக நிலவுகிறது. குழந்தைப் பேறு இல்லாத பெண் ஒருத்தி தான் குழந்தைப் பெற்ற பின்னர் அக்குழந்தையைப் பற்றிய தாலாட்டுப்பாடலில் தாயின் குறைதீர்க்க வந்த கண்மணியே என்கிறாள். இதனை,

> "மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
> மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த கண்ணோ?
> எங்கள்குலம் மங்காமல் எதிர்த்தகுலம் ஏசாமல்
> தங்கமணிப் பொக்கிஷத்தைத் தானாள வந்தகண்ணோ?
> கண்ணுமணி பொன்னுமணி கந்தரோட வேலுமணி
> வேலுமணி தொட்டிலிலே விளையாட வந்தகண்ணோ?"

(நாட்டுப்புறத்தில், ப.41)

என்ற பாடல் அடிகள் மூலம் தாய்மார்கள் மலடி என்ற சொல்லை நெஞ்சைத் துளைக்கும் ஒரு நெருஞ்சி முள்ளாகவேக் கருதுவார்கள்.

வேறெந்த வகையான வசையினையும் கூடப் பொறுத்துக் கொள்வார்கள். மலடி என்று மட்டும் யாராவது ஏசிவிட்டால் பேசிவிட்டால் அவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. குழந்தை பிறந்த பின்பு தாயின் தாலாட்டில் தாயின் குறை தீர்க்க வந்த குழவி என்பது வெளிப்பட்டுள்ளது.

"பத்து வருசமா பாலனில்லா வாசலிலே
கைவிளக்கு கொண்டு கலிதீர்க்க வந்தவனோ
விளக்கிட்ட வெண்ணெய்போல் வெந்துருகி நிக்கையிலே
கலத்திலிட்ட பால்போல் கைக்குழந்தை வந்தாயோ!"

((நாட்டுப்புறத்தில், ப.73)

தாயின் தாலாட்டில் நெஞ்சம் நெகிழ வைக்கும் கொஞ்சு தமிழ் தாயின் மன உணர்வின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இது உளவியல் நோக்கில் ஆய்விற்குரியது.

அவனன்றி ஓரணுவும் அசையாது

கிராமப்புறங்களில் மகப்பேறு இல்லாதவர்கள் இறைவழிபாட்டின் மூலம் தாங்கள் குழந்தைப்பேறு பெறலாம் என்று நம்புகின்றனர். இதனால் எல்லாம் அவன் செயல் என்று ஆண்டவனிடமே தஞ்சம் அடைகின்றனர். குழந்தை இல்லாதவர்கள் அரசமரத்தைச் சுற்றி வலம் வந்து நவக்கிரக பூஜை செய்து பிள்ளை வரம் கேட்பது இயல்பான பழக்கவழக்கமாக இருந்து வருகின்றது. இறைவன் கருணை கொண்டால் எதுவும் நடக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையினை,

"வெள்ளி விளக்கெரியும் வெண்கலங்கள் ஓசையிடும்
தங்க விளக்கெரியும் சண்முகனார் கோயிலிலே
நத்தத்துப் பிள்ளையாரே நான்நடந்தேன் மாமாங்கம்
கைக்குழந்தை தந்தீன்னா கைவிளக்கு ஏந்திடுவேன்
உச்சிமலைக் கந்தா உயர்ந்தமலை வேல்முருகா
சாய்ந்தமலைக் கந்தாஎன் சஞ்சலத்தைத் தீருமய்யா!"

(நாட்டுப்புறத்தில், ப.72)

என்ற பாடல் அடிகள் வெளிப்படுத்துகிறது.

குழந்தையின் சிறப்பு

தன் மகனின் கரிய நிறத்தைக் கடுகுநிறம், காயாம்பூ மேனி என்றெல்லாம் சொல்லி வேண்டுமென்றே வம்புக்காக அழுதுகொண்டு தூங்காமல் இருக்கிறாயா...? என்று செல்லமாகக் கடிந்து கொண்டு கண்ணுறங்கு என்று கேட்டுக்கெள்கிறாள் ஒரு தாய்.

"கொம்புக் கனியே கோதுபடா மாங்கனியே
வம்புக்கு அழுதாயோ வாயெல்லாம் பால்வடிய...!
கடுகு நிறத்தானே - தம்பி
காயாம்பூ மேனியனே"

(நாட்டுப்புறத்தில், ப.42)

என்ற பாடல் அடி உணர்த்துகிறது. மேலும் நீ எங்கள் வழி வந்த எழில் முத்தோ - பாட்டனார் பரம்பரையின் பாங்கான மாணிக்கமோ - தெரிந்தெடுத்த முத்தோ - தேர்ந்தெடுத்த முத்தோ - தவம் கிடந்து கிடைத்த முத்தோ என்றெல்லாம் குழந்தையை வருணிக்கிறாள்.

தாய்மாமனின் பெருமை

குழந்தையின் அழுகைக்குக் காரணமான தாலாட்டுப் பாடலில் தாய் தன் உறவினர்களின் பெயர்களைச் சொல்லிப் பாடுகிறாள். செண்டாலும் சங்காலும் கையினாலும் என்று மற்றவர்கள் அடித்த முறையினைச் சொல்லிக் கேட்டுவிட்டு மாமாவின் முறை சொல்லிக் கேட்கும் போது மட்டும் மருக்கொழுந்துப் பூவைச் சொல்லிக் கேட்பது நம் நெஞ்சைத் தொட்டுவிட்டுச் செல்லும் சொல்லாக அமைந்திருக்கின்றது என்கிறாரர். இதனை,

"மாமா அடிச்சாரோ மருக்கொழுந்துப் பூவாலே
தாத்தா அடிச்சாரோ தாழம்பூச் செண்டாலே
அப்பா அடிச்சாரோ அரளிப்பூச் செண்டாலே
பாட்டி அடிச்சாரோ பால் வார்க்கும் சங்காலே"

(நாட்டுப்புறத்தில், ப.44)

என்ற பாடல் அடி உணர்த்துகிறது. மேலும் தாய்மாமன் குளிப்பதையும் வகிடு எடுத்துத் தலை சீவும் விதத்தையும் கார் எடுத்துவரும் அழகையும் கோர்ட்டுக்குப் போய்வரும் கம்பீரத்தையும் உடையுடுத்தும் உயர்வையும் பூஜைமடம் கட்டிவைத்த புண்ணியத்தையும் மாமாவின் சிறப்புகளாகக் கூறிப் பாடுகிறாரர்கள். இதனை,

"புள்ளிச்சட்டை போட்டுவரும் போர்விஜயர் உன்மாமன்
காலையிலே எழுந்திரிச்சி கச்சேரிக்குப் போயிருந்து
பாராவைப் போட்டுவரும் பாண்டியனார் உன்மாமன்
நடுக்காட்டில் ஒருமடமாம் வெள்ளிசெவ்வாய் பூஜைமடம்
பூஜைமடம் கட்டிவைத்த புண்ணியனார் உன்மாமன்"

((நாட்டுப்புறத்தில், ப.45)

என்ற பாடல் அடி குறிப்பிடுகிறது.

காதுகுத்து விழா

கிராமப்புறங்களில் காதுகுத்தும் நிகழ்ச்சியைச் சிறப்புமிக்க விழாவாகக் கொண்டாடுவார்கள். செல்வக்குழந்தை ஒன்றுக்குக் காதணிவிழா நடைபெறுகிறது. காதணி விழாவிற்குரிய மாம்பிஞ்சு கொண்டு மதுரை சிமிக்கி கொண்டு காதுகுத்த வாராக கனமுடி உங்களம்மான். என் ராசா காதுகுத்த வந்திருக்கும் வாழ்த்து சொல்லும் ஆசாரி என்று பாங்காக சொல்லக் கேட்டு தாய்மாமனின் சிறப்பாக அந்நிகழ்வில்,

"பாக்கு பதக்கு பச்சரிசி முக்குறுணி
எள்ளு இருநாழி இளந்தேங்கா முன்னூறு
அள்ளி விளம்புங்க அருமைமகன் காதரிசி
சிந்தி விளம்புங்க செல்வமகன் காதரிசி"

(நாட்டுப்புறத்தில், ப.74)

"குழந்தையின் அழகைக் கண்டு பிறர் ரசித்துவிட்டால் அதற்கு நோய் வரும் என்று தாய்மார்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை புராதன மந்திரவாதத்தின் அடிப்படையில் எழுந்தது. சில கண்களுக்குத் தீமையை விளைவிக்கும் சக்தியுண்டென்பது மந்திரவாதக் கருத்து. கண்பட்டால் நோய் நொடி வரும் என்பது நம்பிக்கை. காதுகுத்தும் குழந்தை உடலில் ஏதாவது சிறுகாய மொன்றை ஏற்படுத்துவதும் எமனை ஏமாற்றச் செய்யும் தந்திரங்கள். அழகான குழந்தைகளைக் கண்டு எமன் ஆசைப்பட்டு விடுவானாம். அதனால் குழந்தைகள் இறந்துபோகும். எமனை ஏமாற்ற உடலில் சிறுகாயம் ஏற்படுத்திவிட்டால் போதுமாம். இந்த நம்பிக்கை தமிழ்நாடு மட்டும்மல்லாமல், மத்திய ஆசியாவிலும், உலகமெங்கும் நிலவி வந்தது. குழந்தையின் ஆயுளைப் பாதுகாக்கும் சடங்கு ஆகையால், இதனைப் பெண்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுவர்" (தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை, பக். 100-101). கண்ணேரு படாமல் இருப்பதற்கு சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்து திட்டி சுற்றிப் போடும் விதத்தினையும்,

"கண்ணேறு தையாம கருவாணிச் சரம்போட்டு
சுண்ணாம்பும் மஞ்சளும் சுத்தியெறி சூரியர்க்கு"

((நாட்டுப்புறத்தில், ப.74)

எனும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றது.

புகுந்த வீட்டுப் பெருமை

தாலாட்டில் புகுந்த வீட்டுப் பெருமையாக கணவன், மாமனார், கணவனின் தம்பி, அண்ணன் போன்றோர் பற்றி பொதுவாகப் பாடப்படுகிறது. மு. தங்கராசு அவர்களின் நாட்டுப்புறத்தில் நூலில் ஒரு பெண் தன் கணவனைக் கிண்டல் செய்து பாடுவதாகப் பதிவுசெய்துள்ளார். இதனை,

"கோர்ட்டுக்குத் தொறந்து குறிச்சிமேல் உக்காந்து
கேசை விசாரிக்கும் கெவர்னரோ உங்களப்பா?
பாராவைப் போட்டுவரும் பாண்டியரோ உங்களப்பா?
இங்கிலீசு கார் எடுத்துவரும் இளராசா உங்களப்பா?

(நாட்டுப்புறத்தில், ப.76)

இவ்வாறு தன் கணவனைத் தாலாட்டுப் பாடலிலேயே கேலிசெய்து பாடும் பல பாடல்கள் இருக்கின்றன. விரசம் தொனிக்கும் பாங்கில் விகடம் செய்து பாடும் விகடகவித் தாலாட்டுப் பாடல்களும் இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

நிறைவுரை

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல் அக்கடலில் விளைந்த வளம்புரி முத்தே தாலாட்டு. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்வில் பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிட வேண்டும் என்று விரும்புவது

இயற்கை. குழந்தைப்பேற்றுக்காக ஏங்கும் நிலை காணப்படுகிறது. மகப்பேற்றை விரும்பி தாய் தான் செய்த வேண்டுதலை எண்ணிப்பார்க்கிறாள். குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டும் பொழுது உள்ளத்தில் எழும் கற்பனைகளைத் தாலாட்டாகப் பாடுகிறாள். தன் உள்ளத்து உணர்ச்சிகளை ஆசைகளைத் ஏக்கத்தைத் தாலாட்டின் மூலம் வெளிப்படுத்துகிறாள். தாயின் தாலாட்டில் பிறந்தவீட்டுப் பெருமை, புகுந்தவீட்டுப் பெருமை குழந்தையின் சிறப்புகள் போன்றவை வெளிப்படுகின்றது. சமூக மற்றும் உளவியல் அடிப்படையில் பெண்ணின் மனக்குமுறலுக்கான வடிகாலாகத் தாலாட்டு அமைவதை உணரமுடிகிறது.

மு. தங்கராசனின் 'பூச்செண்டு' புலப்படுத்தும் தமிழர்களின் வாழ்வியல்

க. முருகன்
வழிகாட்டு ஆசிரியர்
பெண்டிமியர் உயர்நிலைப் பள்ளி, சிங்கப்பூர்

ஓர் எழுத்தாளன் தான் வாழ்கின்ற காலத்தில் தனக்கு அமைந்த குடும்பச் சூழல், சமுதாயச் சூழல் போன்றவற்றில் ஏற்பட்ட அனுபவங்களின் வெளிப்பாட்டையோ அல்லது தான் காண விரும்பிய மாற்றங்களையோ சமூகச் செயல்பாடுகளையோ எழுத்தில் வடிக்கின்றான். அவ்வாறு வடிக்கப்படும் இலக்கியங்கள் கவிதை, கட்டுரை, நாவல், சிறுகதை என வெளிப்படுகின்றன. அதனால் இலக்கியங்களில் வெளிப்படும் கருத்துகள் அந்த எழுத்தாளன் அவன் வாழ்ந்த காலக்கட்டத்தில் கருக்கொண்டவையாகவே இருக்கும். அதனால்தான் இலக்கியம் காலத்தின் கண்ணாடி எனவும் சமூகத்தின் விளைச்சல் எனவும் கூறப்படுகிறது. எழுத்தாளர் மு. தங்கராசன் அவர்கள் இந்தியாவில் பிறந்து இளம்வயதில் மலாயாவிற்கு வந்து கல்வி கற்று, மணமுடித்து ஆசிரியப் பணியை மேற்கொண்டார். பிறகு, சிங்கப்பூருக்குப் பணிவாய்ப்பிற்காகச் சென்று தன் குடும்ப வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொண்டார். பொருளாதாரத் தேவைகளுக்காக ஆசிரியப் பணியையும் மொழிப்பற்றின் காரணமாக எழுத்துப் பணியையும் சமூகத்தின்பால் உள்ள அக்கறையின் வெளிப்பாடாக சமூகப் பணியையும் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டவர். அதனால் இவர் மாலாயாத் தமிழர்களின் வாழ்வியலையும் சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்வியலையும் நன்கு அறிந்திருந்தார். தான் சந்தித்த மனிதர்களைப் பற்றியும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைப் பற்றியும் அவர்களிடையே காண விரும்பிய மாற்றங்களைப் பற்றியும் கவிதைகளாகவும் நாடகங்களாகவும் சிறுகதைகளாகவும் அவ்வப்போது தமிழ்நேசன், தமிழ்முரசு நாளிதழ்களிலும், சமூக மன்ற விழாக்களிலும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

பூச்செண்டு, சிந்தனைப் பூக்கள், மலர்க்கொத்து, கற்பனை மலர்கள், மலர்க்கூடை, மணங்கமழும் பூக்கள், மணக்கும் மல்லிகை என ஏழு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவற்றில் 'பூச்செண்டு' தான் மு. தங்கராசன் வெளியிட்ட முதல் சிறுகதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 10 சிறுகதைகளும் 1959க்கும் 1976க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. இவை யாவும் தமிழ் நேசன், தமிழ்முரசு நாளிதழ்களில் வெளிவந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்ற பின்னரே 1985ஆம் ஆண்டு நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் விளையாட்டுப் பொம்மை, புதுப்பாடம், மஞ்சள் கயிறு, வாரிசு ஆகிய நான்கு சிறுகதைகளும் மலேசியச் சூழலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அன்னைக்குக் காணிக்கை, அவள், ஆசை, புனிதவதி, திலகவதி ஆகிய ஐந்து சிறுகதைகளும் சிங்கப்பூர்ச் சூழலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அந்த உண்மை என்ற சிறுகதை மலேசியச் சூழலில் ஆரம்பித்துச் சிங்கப்பூரில் முடிவதாக எழுதப்பட்டுள்ளது. 'பூச்செண்டு' சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள் புலப்படுத்தும் தமிழர்களின் வாழ்வியலைப் பற்றி அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்கட்பேறு

தமிழர்கள் எந்த நாட்டில் எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் திருமணம் செய்துகொள்வதையும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதையும் வாழ்வின் பேறாகக் கருதி வாழ்ந்துள்ளனர். ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும்நாளே'' என்று புறநானூறு கூறுவதை இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்களும் வாழ்வின் பயனாகக் கருதி வந்துள்ளனர். மு. தங்கராசனின் பூச்செண்டு கதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பத்துக் கதைகளில் விளையாட்டுப் பொம்மை, ஆசை, வாரிசு, புனிதவதி, திகலவதி என ஐந்து கதைகளில் குழந்தையின்மையினால் ஒரு பெண் தன் குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் எத்தகைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிறாள் என்பதைப் படிப்போரின் இதயத்தை உருக்கும் அளவிற்கு மு. தங்கராசன் வெளிப்படுத்தியுள்ளார்.

''வளர்க்க – படிக்க வைக்க வசதியும் வாய்ப்பும் இருப்பவர்களுக்குத்தான் ஏனோ வாரிசுகள் இருப்பதில்லை. அப்படியே இருந்தாலும் அபூர்வமாக ஒன்று அல்லது இரண்டு இருக்கும். ஆரம்பப் பள்ளிக்கு அனுப்பக்கூட அருகதையற்றவர்களுக்குத்தான் ஆண்டவன் ஏனோ அதிகமாகக் கடாட்சம் தருகின்றான்'' என 'ஆசை' என்ற சிறுகதையில் கூறுவதன்மூலம் சமூகத்தில் சிலர் குழந்தைகளுக்காக ஏங்கிய நிலையைக் காண முடிகிறது.

'வாரிசு' என்ற சிறுகதையில் ''கல்யாணம் பண்ணி வச்சி அஞ்சி தீவாளி வந்து போயிடிச்சி... கருவா? உருவா...? ம்.. ஒண்ணையும் காணோம். நேத்து கல்யாணம் பண்ணிக்கிட்ட நீலாவதி கூட முழுகாம இருக்கிறாளாம். போன வருடம் பண்ணிக்கிட்ட பூவாயி தாயாயிட்டா... நான் என்ன வருடம் ஒன்னா பெத்துக்கச் சொல்றேன். ஆசைக்கு ஒண்ணு வேணாம்...? பேரு சொல்லறதுக்காவது ஒரு பேரப்பிள்ளை...? ம்...'' என்று வெறுப்பைக் காட்டுவதைக் குறிப்பிடுகிறார். 'காலம் போன காலத்தில் ஒரு பேரப்புள்ளய பார்த்துடணுமுன்னு வேண்டாத கடவுளையெல்லாம் வேண்டிக்கிட்டேன். ஒண்ணும் பலிக்கலே' என்று மனைக்கட்டில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலைச் சருக்கு வரும் கிழவிகளிடம் சொல்லி அங்கலாய்க்கிறார். 'தங்கம்மாளின் தாபத்தைத் தீர்க்கும் அந்த ஒன்றுக்கு வழியே இல்லை. கணக்கு வழக்கு இல்லாமல் கடவுள் கொடுக்கிறார் பல வீடுகளில். கணக்காக – கட்டாக – முத்தாக – ஒன்றே ஒன்றுக்குத்தானே வாடுகிறார்கள். பாவம்... ஏனோ அவர்கள் மேல் பகவானுக்குக் கூட பரிதாபம்

பிறக்கவில்லை. வேண்டும் என்று துடிப்பவர்களுக்குக் கிடைக்காத விசித்திரம் என்னவோ' என்று பார்ப்பவர்கள் கூட புலம்பவே செய்கிறார்கள். தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்று மாணிக்கமும் செல்லம்மாவும் அடிக்கடி புலம்புவதும், ஒருத்தருக்கும் ஒரு பாவமும் மனசறிஞ்சி செய்யாதபோதும் இந்தக் கடவுள் ஏன் இப்படி ஓர வஞ்சனை செய்ய வேண்டும் என்று கடவுளைக் கரித்துக் கொட்டுவதைக் காணமுடிகிறது. மேலும், மருத்துவ முறையில் வெற்றிகண்டு கருத்தரித்தபோது, 'மலடு என்ற உலகப்பழிச் சொல்லிலிருந்து விடுபட்டுவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் எக்களித்தாள் அந்த இளம் ஏந்திழையாள்' என்று குறிப்பிடுவதிலிருந்து ஒரு பெண்ணின் மனம் எவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மு. தங்கராசன் தான் பார்த்த சமுதாயத்தின் பிரதிபலிப்பாக வெளிப்படுத்துகிறார்.

'உலகத்தில் எல்லா வசை மொழிகளையும் தாங்கிக் கொள்வார்கள். ஆனால், 'நீ மலடி' என்ற ஒரு சொல்லை மட்டும் ஏனோ மங்கையருள்ளம் தாங்கிக்கொள்ள மறுத்துவிடுகிறது' என்று சொல்வதன்மூலம் குழந்தை இல்லை என்ற ஒரு குறை ஒரு பெண்ணை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பதை அறிய முடிகிறது. தன்னைத் தன் மகளைப்போல பார்த்துக்கொண்ட தங்கம்மாள், தலை முழுகிட்டா... தோக்கீ புடிச்சவ' என்று வழக்கமான கதாகாலட்சேபம் செய்வதும், 'இன்னொன்னு கட்டிக்கிட்டான்னு தலைபாடா அடிச்சிக்கிறேன். கேட்டாத்தானே, தலவாணி மந்திரத்துல பய தலைசுத்திக் கெடக்குறான்' என்று வார்த்தைகளால் வதைக்கும்போது இறுதியில் செல்லம்மா தூக்குப்போட்டுக்கொள்கிறாள். காதலித்துக் கரம்பிடித்தவனைக்கூட எண்ணிப் பாராமல் உயிரைவிடத் துணிகிறாள் என்றால் அவளின் உள்ளப் போராட்டத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. 'புனிதவதி' என்ற சிறுகதையில் அம்பலவாணருக்கும் இராசம்மாவுக்கும் திருமணம் ஆகி பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் குழந்தைகள் இல்லை. ''கோயில் கட்டிக் கும்பாபிகேம் நடத்திய அந்தப் புண்ணியவானுக்கா குழந்தை பிறக்கவில்லை?, கொடுத்துச் சிவந்த கைகளைப் பெற்ற அந்தக் குணவதிக்கா குழந்தை இல்லை என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள் ஜெலுபு தோட்டத்து மக்கள். அருள்நாதரின் சாபம்தான் தனக்குப் பேரப்பிள்ளை இல்லாமல் செய்துவிட்டது என்று சிவஞானம் கிராணியார் கலங்குகிறார். ஏதோ கிரஹக் கோளாறு என நவக்கிரக பூஜை செய்வதும் சடங்கு சம்பிரதாயங்களில் ஈடுபட்டுப் பெரும் கவலையில் ஆழ்ந்திருந்தார் கிராணியாரின் மனைவி பரமேஸ்வரி. முற்பிறவியில் செய்த பாவங்களால் தான் தங்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை என்று இராசம்மா தம்பதிகள் இளைத்தனர்'' என்று 'புனிதவதி' கதையில் சுட்டிக் காட்டுகிறார்.

'திலகவதி' என்ற சிறுகதையில் அறிவானந்திக்கும் மதியழகனுக்கும் திருமணமாகி குழந்தைகள் இல்லாத சூழ்நிலையில், 'அறிவானந்தி ஒரு வேளை மலடு தானோ? இதுவும்கூட முற்பிறப்பின் ஊழ்வினைப் பயனோ...? என்று அறிவானந்தியின் பெற்றோர் நல்லுசாமியும் நல்லம்மாளும் சிந்திக்கின்றனர். கலியாணம் ஆகி மூணு வருத்துக்கு மேல ஆயிடிச்சி..! இன்னும் அறிவானந்திக்கு இந்த மயக்கம் வாந்தின்னு ஒண்ணுமே இல்லை...! அடுத்த ஏழாம் மாதம் இந்தக் கைகள் நிறைய வளை காப்பு போட்டு அழகு பார்த்தாகணும் இல்லை... இந்தத் தலை வீங்கிடும் என்று மிரட்டிக் கொட்டு வைக்கும் மாமியாரைக் காட்டுகிறார்.

'புனிதவதி' என்ற சிறுகதையில் செவ்வெண்ணெய் வர்க்கச் சொல்லுகின்றபோது, 'நான் பேறு இல்லாதவள்'(115) என்று இராசம்மா தயங்குவதைக் குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் பார்வை ஒருபக்கம் இருந்தாலும் பெண்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டு ஒதுங்குவதையும் பார்க்க முடிகிறது. பிறர் கூறும் அவச்சொல்லுக்கு அஞ்சி அவர்களாகவே தங்களைத் தாழ்த்திக் கொள்கின்றனர்.

'நான் பிறந்த காரணத்தை நானே அறிமுமுன்னம் நீயும் வந்து ஏன் பிறந்தாய் மகனே! என்று நலிவுபடும் குடும்பத்தில் நாலைந்து பிறந்து தொலையும்போது நாள்தோறும் கவலைப்பட்டுக கொண்டிருக்கும் இவர்களுக்கு நறுக்காய் ஒன்றே ஒன்று பிறந்து ஆசையை நிறைவேற்றினால் ஆகாதா?' ஆசைக்கு அணைபோட்டு வேடிக்கை பார்க்க அந்தப் பகவானுக்குத்தான் அப்படி என்ன ஆசையோ? என்று இறைவனை நொந்து கொள்வதைப் பார்க்க முடிகிறது.

பால்மரத் தோட்டங்களில் வாழ்ந்த மக்கள் ஏழ்மையில் வாடினாலும், ''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற'' என்ற குறளுக்கேற்ப அறிவறிந்த மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்ததாக, பிற எதனையும் கருதுவதில்லை. இதையே மு.தங்கராசன் தனது பனித்துளிகள் கவிதை நூலில் குழந்தை என்ற கவிதையில்,

''குழந்தையைப் பெற்றார் நெஞ்சம்
குழைந்திடும் இன்பம் காண்பார்''

என்று குறிப்பிடுகிறார்.

குழந்தை பெறாத தம்பதியைக் குடும்பத்தினரும் சமுதாயத்தினரும் இழித்தும் பழித்தும் பேசும் நிலை ஒரு பக்கம் இருந்தாலும் ஆண்பிள்ளை வேண்டும் என்று விரும்பியதையும் அதற்கான வாய்ப்பில்லாத போது ஏங்கியதையும்கூட மு. தங்கராசன் 'விளையாட்டுப் பொம்மை' என்ற கதையில் 'ஆசைக்கொரு பொண்ணும் ஆஸ்திக்கொரு ஆணும்' அப்படீன்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்கடி பூவாயி' என்று பேச்சியாத்தாப் பாட்டி நீட்டி முழக்கி நெட்டுயிர்த்துக்கொண்டே சொன்னார்கள்'' என்று கூறுவதன்மூலம் பூவாத்தா கிழவியின் ஆண் வாரிசு வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் காணமுடிகிறது. 'திலகவதி' என்ற கதையில், 'ஆசைக்கு மூன்று பிறந்தும், ஆஸ்திக்கு ஒன்றுகூடப் பிறக்கவில்லையே என்பதில் ஓர் ஆதங்கம் நல்லுசாமி குடும்பத்தினருக்கு எப்போதும் இருப்பதுண்டு. கொள்ளி வைத்து அஸ்தி

கரைக்கும் ஆன்மீக நிறைவுக்கு ஆண் வாரிசு இல்லையே' என்ற வெதும்பலைக் காட்டுகிறார். அதோடு நில்லாமல் பெண் பிள்ளைகள் கூட இடுகாட்டுக்கே வந்து கொள்ளி வைக்கிறாங்க என்ற நடப்பியலைச் சமுதாயத்திற்கு எடுத்துக்கூறி வாசகர்களை ஆறுதல் படுத்துகிறார் மு. தங்கராசன். தம் கால மக்களின் வாழ்வியலில் காணப்படும் ஏக்கங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காணும் எழுத்தாளர்கள் உள்ளதை உள்ளவாறே எடுத்தியம்புவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் அதற்குத் தீர்வு காணத் தூண்டுவதன்மூலம் எழுத்தாளன் சமுதாயத்தின் மீதுள்ள தன் அக்கறையை வெளிப்படுத்துகிறான். இவ்வகையில் மு. தங்கராசன் தான் எழுதிய 'வாரிசு' என்ற சிறுகதையில் 'கோழி முட்டையை இயந்திரப் பொறியில் வைத்து மின்சாரத்தால் குஞ்சு பொரிக்க வைக்கின்ற விஞ்ஞான விசித்திரத்தைக் கற்பனை செய்துகொண்டு செல்லம்மாளையும் அந்த மாதிரியில் பார்த்தான்' என்று அறிவியலின் வளர்ச்சியை உணர்ந்திராத ஏழைத் தொழிலாளிகளின் வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைக்கும் விதமாகக் கதையின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கிறார். இதைச் சமுதாயம் எப்படி ஏற்குமோ என்ற ஐயமும் அவருக்கு எழுந்திருக்க வேண்டும். அதனால்தானோ என்னவோ நயத்தகு நாகரீகம் என்பதற்காக நமக்கு ஒத்துக்கொள்ளாத உணவைக்கூட சில சமயங்களில் சாப்பிட வேண்டியிருப்பதை உதாரணமாகக் கூறுகிறார். முட்டையை இயந்திரத்தில் அடைகாத்தல் போல ஊசி போட்டுக் குழந்தை பெறுவதைத் தீர்வாகக் குறிப்பிடுகின்றார்.

திலகவதி என்ற சிறுகதையில் 'கரு' தானம் பெற்றுச் சோதனைக் குழாய் குழந்தை பெற்றுக்கொள்வதைத் தீர்வாகக் கூறி, அதன்மூலம் அத்தம்பதிகள் பிறரின் தூற்றுதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகப் படைத்துக்காட்டி அறிவியலின் வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சமுதாயத்திற்கு அறிவூட்டுகிறார். அதேசமயம் அதை ஏற்கத் தயங்கும் பெண் மனத்தையும் படைத்துக்காட்டுகிறார். ''அறிவியல் சாதனைக்கும், அந்த யாரோ ஒருவரிடம் நேரடியாகச் சோரம் போய் ஒரு குழந்தைக்குத் தாயாவதற்கும் என்ன வேறுபாடு? இயைந்து கெட்டாலும் வலிந்து கெடுக்கப்பட்டாலும் மொத்தத்தில் கெட்டது கெட்டது தானே? யாரோ ஒருத்தரின் கருவுக்கு... அசிங்கம் அசிங்கம்...! நான் ஓர் எச்சில் கனியாகிவிட்டேன். உடற்குறைபோல் மலட்டுத் தன்மை என்பதும் இயற்கையாகவே ஏற்படுகின்ற குறைபாடுதானே..!'' என்று பெண்களுக்கு இயல்பாகவே ஏற்படும் மனப்போராட்டத்தைப் பக்குவமாக எடுத்துரைக்கிறார்.

தேர்ந்த கல்வி ஞானமும், நிறைந்த அனுபவமும், தமிழ் மீதும் தமிழர் மீதும் மாளாத பற்றும் பாசமும் கொண்டுள்ள இவர் தமது கருத்தாழமிக்க படைப்புக்களால் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை இங்குள்ள தமிழர் இல்லங்கள் தோறும் கொண்டுசெல்லத் துணை நின்றிருக்கின்றனர். ''என்னைப் பொறுத்தவரை இலக்கியப் படைப்புகள் எந்த வடிவினதாக இருந்தாலும் இறுதிச் சாரம் சமுதாயத்திற்கு ஏதாவதொன்றை அறிவுறுத்த வேண்டும்'' என்று மு. தங்கராசனே குறிப்பிடுவது இங்கு நினைவு கூறத் தக்கதாகும்.

மூடப்பழக்க வழக்கங்களின் தாக்கம்

மு. தங்கராசனின் சிறுகதைகளில் மூடப்பழக்க வழக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் காண முடிகிறது. 'மஞ்சள் கயிறு' சிறுகதையில் திருமணமாகி முப்பத்தொன்பதே நாளில் நல்லான் விபத்தில் இறக்க, திலகா விதவையானாள். ஒன்றும் அறியாத திலகவதி ஊராரின் தூற்றலுக்கு ஆளாகிறாள். 'நாக பாசம் இருந்தது... கெண்டைக்கால் பெருத்திருந்தது... செவ்வாய் தோ'த்தில் பெரியவளானாள் புரு'னை நாற்பது நாளில் தின்னுட்டாள் என்று சாத்திர சம்பிரதாயங்களை நம்பும் ஆஸ்திகவாதிகளின் வார்த்தைகள் திலகாவை தினம் தினம் வதைத்தன' என்று கூறுகிறார்.

'அன்னைக்கு மரியாதை' என்ற சிறுகதையில் பிரசவத்தின்போது தாய் இறந்துவிடுகிறாள். குழந்தை கண்ணனைத் தந்தை வளர்த்து வருகிறார். 'தாயை வாரிக்கட்டிக்கிச்சி', 'வந்து பொறந்ததே அவருக்குன்னு ஒரு தரித்திரம் புடிச்சது', 'தலையில சுழிய வச்சிக்கிட்டு பொறந்தப்பவே தெரியும் புண்ணியவதி போயிடுவாள்னு', 'தரித்திரத்தின் பிரதிபலிப்பு' என்றெல்லாம் அக்கம் பக்கத்தினரின் வசைமொழிகளைக் கேட்டுக்கேட்டு கண்ணனது இதயம் பாறையாகிவிட்டிருந்தது. இதற்குக் கண்ணன் என்ன செய்ய முடியும். கண்ணனின் குரலாக மு. தங்கராசன் சமுதாயத்திற்குத் தனது சாட்டையடியைக் கொடுக்கிறார். ''இயற்கை உன்னை அள்ளிக்கொண்டு போனதற்கு என்னைக் கொல்கிறார்களே அம்மா... நானா உனக்கு எமனானேன்? நான் உனக்கு நஞ்சூட்டினேனா? குரல்வளையை நெறித்தேனா? கொடுவாள் கொண்டு தாக்கினேனா? காலன் உன்னைக் கொண்டுபோனதற்கு நான்தான் காரணம் என்கிறார்களே! பெற்றுத்தான் போட்டுவிட்டாய். பித்தர்களிடையே சித்தம் குழம்பி வாழவும் வைத்துவிட்டாய். நஞ்சுக் கருத்துகளைத் தாங்கிக்கொள்ளும் துணிவு தாம்மா!'' என்று வேண்டுவது வாசிப்போர் ஒவ்வொருவரையும் தன் தவற்றை உணர வைக்கிறது.

'வாரிசு' என்ற சிறுகதையில் செல்லம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் ஆகி ஐந்து ஆண்டுகள் கழிந்தும் பிள்ளை பெறாதபோது, 'கண்ணாலத்தண்ணிக்கே வடக்குக் கூரையில் இருந்து கௌளி பளிச் பளிச்சென்று சொல்லிக்கிட்டே இருந்திச்சி, நான் அப்பவே நினைச்சேன் – இது என்னமோ ஏதோன்னு' என்று குழந்தைப் பேற்றுக்குக்கூட சகுனம் பார்க்கும் மக்களின் அறியாமையைச் சுட்டிக்காட்டுகிறார்.

'அவள்' என்ற சிறுகதையில், ''ஜாதகம் என்றொரு சொல்லில் நம்பிக்கையற்றிருப்பவர்கள்

கூட தங்களுக்கென்று ஏதாவது நல்லது கெட்டது வரும்போது ரகசியமாக ராசிபலன் பார்த்துக் கொள்கிறார்கள்'' என்று சொல்வதன் மூலம் நாத்திகம் பேசுபவர்களிடமும் அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப மூட நம்பிக்கைகளில் நாட்டமிருந்ததை அறிய முடிகிறது. நல்லுசாமியின் நலிந்த உடல் தோற்றத்தினால் பெண்கள் பலரும் திருமணம் செய்துகொள்ள முன்வராத நிலையில் ஊரார், 'நல்லுசாமிக்கு நல்ல பலன் இல்லையாம்' என்றும், 'விவாகசம்பத்து இல்லை' என்றும், 'முகூர்த்த பிராப்தமே முப்பத்தைந்துக்குப் பின்னால்தான்' என்றும் சோதிடம் சொல்லப்பட்டதாகப் பலவாறு புறம் பேசுவதும், ஜாடைமாடையாகப் பேச்சுவதும் புண்பட்டுக்கிடந்த நல்லுச்சாமியின் நெஞ்சைப் புரையோடச் செய்தது என்று மு. தங்கராசன் குறிப்பிடுகிறார். தாய்மாமா கோபாலனின் குடும்பமும் ஊர்வாயை மூட முடியலையே என்று மூக்கைச் சிந்துவதையும் யாரும் அறியாமல் இல்லை.

தீமை நடக்கின்றபோது ஜாதகத்தை வைத்துக் குறை கூறும் சமுதாயம் நல்லது நடக்கிறபோதும் அதே ஜாதகத்தை வைத்துப் புகழ்ந்து பேசுவதையும் தம் சிறுகதையில் குறிப்பிட்டுள்ளார். நல்லுச்சாமிக்குப் பெண் கிடைத்தபோது கிரஹங்களின் மாற்றமாக இருக்கலாம் என்றும், பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்றும், நமக்குப் பொன்னும் புதனும் சேர்ந்தே கிடைத்திருக்கிறது என்றும் மகிழ்வதைக் காட்டுகிறார்.

'ஆசை' சிறுகதையில் உடல்நலம் தேறும் மகளுக்கு நெட்டி முறிப்பதையும், கல்லெறி பட்டாலும் கண்ணெறி படக்கூடாதும்பாங்க, திட்டிச் சுத்திப் போடணும்' என்றும் அக்காலப் பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுகிறார். 'வாரிசு' கதையில் தன் மருமகள் தாய்மையடைந்து வீடு திரும்பும்போது தங்கம்மாள் ஆரத்தி சுற்றி வரவேற்பது போன்றவற்றைத் தமிழர்கள் கடல் கடந்து வாழ்ந்தபோதும் தவறாது பின்பற்றி வந்ததை அறிய முடிகிறது.

வரதட்சணை

தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாக வறுமையில் வாழ்ந்தபோதும் திருமணம் என்று வருகின்றபோது வரதட்சணை வாங்கும் பழக்கத்தைத் தவறாமல் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர் என்பதை மு. தங்கராசன் 1964 ஆம் ஆண்டு எழுதிய புனிதவதி கதையில் தெளிவாகக் குறிப்பிடுகிறார். செல்வச் செழிப்பில் வாழ்ந்த அருள்நாதர் தன் தம்பி அம்பலவாணருக்குச் சாதாரண குமாஸ்தாவாக வேலை பார்த்த சிவஞானம் கிராணியாரின் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கப் பெண் கேட்டு வந்தார். அம்பலவாணர் இராசம்மா காதல் விவகாரம் தெரிந்திருந்தும் சம்பிரதாயப்படி வரதட்சணை–சீர்வரிசை விபரங்கள் கேட்டு முடித்தார். 'பசை வி'யத்தில் பிடி தளராமல் இருந்தார் அருள்நாதர்–பேருக்கும் அவருக்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாமலிருந்தது'. 'நம்ப பாலிசிக்கு ஒத்துவர மாட்டாங்கடா தம்பி... என்று ஆஜானுபாகு அருள்நாதர் மூவார் திரும்பிவிட்டார்' என்று குறிப்பிடும் எழுத்தாளர், குருடிக்கு ராஜகண்ணி என்றும், கருப்பாயிக்குச் சிவப்பாயி என்றும் பேர் இல்லையா என்ன? என்றும் கூறுவதன்மூலம் சில மனிதர்கள் பெயருக்கேற்ப நடந்துகொள்ளவில்லை என்பதைப் புலப்படுத்துகிறார். ''வரதட்சணை என்பது வாழையடி வாழையாக வழக்கத்தில் வந்துவிட்ட பண்பு. அதை மாற்றியமைக்க நினைப்பது மரபுகெட வழிவகுப்பதாகும். பணத்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற மூட நம்பிக்கை சில மனிதர்களின் அணுக்களில் நிறைந்துவிட்டது'' என்பதற்கு அருள்நாதரையும், அது வெறும் காகிதமாக மதிப்போரும் இருந்தனர் என்பதற்கு அம்பலவாணரையும் ஆசிரியர் படைத்துக்காட்டுகிறார்.

ஏமாற்றுதல்

ஏமாற்றுபவர்களும் ஏமாறுபவர்களும் எல்லாச் சமுதாயத்திலும் இருக்கவே செய்கின்றனர் என்பதை 'விளையாட்டுப் பொம்மை' சிறுகதையில் அழகாகச் சித்தரிக்கிறார் ஆசிரியர். வேலைக்குச் சென்றறியாத பூவாயி தன் கணவன் செல்லப்பனை இழந்த பிறகு குழந்தைகளை வளர்ப்பதற்காகப் பெரிய கிராணி வீட்டில் வேலைக்காரியாகிறாள். செல்லப்பனின் இறப்புக்காக அனுதாபம் காட்டிக் கம்பெனியார் இரண்டாயிரம் வெள்ளி அனுப்பியதைக்கூட பெரிய கிராணியார் பாதுகாப்பாக வைத்திருப்பதாகக் கூறி தன்னிடமே வைத்துக்கொள்கிறார். பூவாயி தன் நகைகளை எல்லாம்கூட பெரிய கிராணியாரின் பேங்குப் பெட்டியில் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று கொடுக்க அவைகளும் கிராணியாரின் ட்ரங்க் பெட்டியில் அடைந்துவிட்டன. பூவாயி நோயினால் இறந்தபோது தன் குழந்தைகளைப் பார்த்துக கொள்ளும்படி வேண்டுகிறாள். ஆனால், பெரிய கிராணியாரின் மனைவி அக்குழந்தைகளைத் துன்புறுத்துப போது அக்குழந்தைகள் அவ்வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். செய்தியறிந்த கிராணியார் பூவாயியின் பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. 'சாவியைக் கிலுகிலுத்துச் சமாதானப்படுத்தினார் தன் மனைவியை! அழுகின்ற குழந்தை கிலுகிலுப்பு ஆட்டி ஆசுவாசப் படுத்துவதில்லையர் அதைப்போல்! அழுதவள் சிரித்தாள். அம்மகோ அதில்தான் எத்தனை இன்பம்' என்று கிராணியின் எண்ணத்தை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் எழுத்தாளர்.

புறம் பேசுதல்

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறுவதற்கேற்ப தொழிலாளர்கள் வாழும் தோட்டப்புறத்தில் கோயில் இல்லாததைக் கண்டு அம்பலவாணர் கோயில் கட்ட முயற்சி செய்கிறார். இதற்கு முன்பு எடுத்த முயற்சிகளை எல்லாம் புறம்பேசியே தடுத்துவிட்டனர். 'தேனெடுக்கிறவன் புறங்கையை வழிக்காமலா இருப்பான்? உழக்கு எண்ணெய் வாங்கி உழக்கு எண்ணெய் விற்றால், மினுக்கெண்ணெய் மிச்சப்படாதா? என்றெல்லாம் பொன்பொழிகள் பேசி நன்மை செய்பவரையும் செய்ய விடமாட்டார்கள் என்று தமிழர்களின் புறம்பேசும் பண்பை சுட்டிக்காட்டுகிறார். 'ஏதுமில்லாப் பிரச்சினைக்குச் சும்மாடு கோலி வைத்துவிட்டு, முன்னுக்கு வருபவனை மூன்றே நாட்களில் மூலையில் உட்கார வைத்துவிட்டுத்தான் மூச்சுவிடும்

ஜென்மங்கள். இது காலங்காலமாய் வந்துவிட்ட சாபக்கேடு' என்று தமிழர்களின் புறம் பேசும் பழக்கத்தைச் சாடுவதோடு தானும் நல்லது செய்ய மாட்டார்கள் நல்லது செய்ய வருபவரையும் விடமாட்டார்கள் என்று இனத்தின் குணத்தை நேரடியாகவே சாடுகிறார் மு. தங்கராசன்.

போர்க்கால வாழ்க்கை

ஜப்பானியர்களின் படையெடுப்பின்போது தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்களுக்குச் சான்றாக 'வாரிசு' என்ற சிறுகதையை வடித்திருக்கின்றார் மு. தங்கராசன். குண்டுமழை பொழிந்தபோது அலைந்து திரிந்து உயிர் பயத்தில் வாழ்ந்ததைக் காட்டுகிறார். ''தாய்லாந்தின் காஞ்சனபுரியிலிருந்து தென்பர்மாவின் மோல்மின் வரை மரண இரயில்பாதை என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படும் தொடர்வண்டிப் பாதை அமைக்கச் சப்பானியர்கள் தமிழரை வலிய இழுத்துச் சென்றனர்'' என்ற அக்கால வரலாற்றுச் செய்தியை, சியாமுக்கு மரணப்பாலம் போடுவதற்கு கூப்பிட்டுக்கொண்டு போய்விடுவார்களோ என்ற பயத்தில் பகல் முழுவதும் சுரங்கத்தில் தங்குவதையும், இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் வீட்டிற்கு வருவதையும், விடிவதற்குள் சுரங்கத்திற்குச் சென்று மறைந்துகொள்வதையும் கதையின் இடையே படிக்கும்போது அந்த அபாயகரமான வாழ்க்கையை இக்கால வாசகர்களாலும் உணர முடிகிறது. வாய்ப்பு கிடைத்தவர்கள் தங்களின் பிள்ளைகளை ஜப்பானியரின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு அனுப்பிப் பத்திரமாக இருக்கச் செய்துள்ளதையும் புலப்படுத்துகிறார்.

தோட்டப்புறத் தொழிலாளர்களின் வாழ்க்கை

'வாரிசு' சிறுகதை தோட்டப்புறத்தில் தமிழர்களின் அன்றாட வாழ்க்கைமுறையை மிகத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். அவர்கள் தொழில நிமித்தமாகப் பயன்படுத்திய பொருட்கள், அதிகாலை எழுந்து அவர்கள் தயாராகி வேலைக்குப் புறப்படும் காட்சி, பொழுதுபுர்வதற்குள் வேலையை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயச் சூழல் போன்றவற்றை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

'நேத்து வந்தவன் என்ன நேர்த்தியா வாழ்றான்! கடங் கப்பி இல்லாம கச்சிதமா குடும்பம் நடத்துறான்' என்று சிக்கனமாகச் செலவு செய்பவர்களின் வாழ்க்கைச் சிறப்பையும், 'போடப்பா ரெண்டுபுட்டி பூப்போட்ட கிளாசுல' என்பதிலிருந்து குடிப்பழக்கம் உடையவர்களாக இருப்பதையும், 'நேத்துக்கூட ஒரு மூக்குத்திய பாசாக் கடையில வச்சிட்டு வந்தேன்' என்பதிலிருந்து பொருளாதார நிலையில் ஏழ்மையில் வாழ்க்கை நடத்துவதையும் 'விளையாட்டுப் பொம்மை' சிறுகதையில் அழகாகப் படைத்துக்காட்டுகிறார் மு. தங்கராசன். 'நம்மவர்கள் பலர் தலைகூட ஒழுங்காகச் சீவிக்கொள்வதில்லை, சிலர் குடித்துவிட்டு அறைகுறையாக அழுக்குப்படிந்த ஆடைகளை உடுத்திக்கொண்டு அலைவார்கள்' என்று தொழிலாளர்களின் நிலைமையை 'புதுப்பாடம்' சிறுகதையில் வெளிப்படுத்துகிறார்.

பொருளாதார நிலையில் நலிந்திருந்தாலும் மனிதாபிமனத்தோடு ஒருவருக்கொருவர் உதவியாய் வாழ்ந்ததையும் காணமுடிகிறது. 'ஊர்ல கல்யாணமாம் மார்ல சந்தனமாம் என்பதுபோல யார்வீட்டில் விசேமாக இருந்தாலும் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து உதவி செய்வதும் மகிழ்ச்சியில் திளைப்பதும் தமிழர் மரபு. இது வாழையடி வாழையாகத் தொடர்கிறது என்றும், 'எத்தனை காலத்து மனுசன்! போகாம இருந்தா என்னா நெனைச்சிக்குவாறு போயி தலையைக் காட்டீட்டு வருவோம். நாளைக்கு நமக்கு ஒரு நல்லது கெட்டதுன்னா நமக்கு நாலு பேரு வரணுமே' என்றெல்லாம் நினைத்து ஒருவருக்கொருவர் கைகொடுத்து உதவி செய்து வாழ்ந்ததை மு. தங்கராசன் மறவாமல் 'மஞ்சள் கயிறு' சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

கல்வியறிவு பெற்ற சமுதாய வாழ்க்கை

மு. தங்கராசன் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதால் தொழிலாளர் சமுதாயம் கல்வியறிவு பெற்று வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்ற வேட்கை உடையவராக இருந்திருக்கிறார். வாரிசு, புனிதவதி, திலகவதி என மூன்று சிறுகதைகளிலும் படிப்பறிவு பெற்றவர்களின் வாழ்க்கை பிறர் போற்றும்படி இருந்த நிலையை எடுத்துக்காட்டிச் சமுதாயத்தில் உள்ள இளையர்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்து படிக்க வேண்டும் என்ற தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளார். 'வாரிசு' என்ற சிறுகதையில் தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வியை முடித்துவிட்டு மலேசியாவிற்கு வரும் மாணிக்கம் ஆரம்பத்தில் புல்வெட்டுதல், விதைநடுதல் போன்ற எளிய வேலைகளைச் செய்துகொண்டு மாலை நேர வகுப்பில் ஆங்கிலத்தையும் தேசிய மொழியான மாலாய் மொழியையும் படித்துக் கேம்பிரிட்ஜ் வரை உயர்கிறார். புல் வெட்டும் வேளையில் ஆரம்பித்த தொழில் காரியதரிசியாகவும் தோட்டச் செயலாளனாகவும் மேனேஜராகவும் படிப்படியாக உயர்வதை அழகாக விளக்கியுள்ளார்.

'அன்னைக்குக் காணிக்கை' என்ற சிறுகதையில் நன்கு படித்த அருளானந்தரின் வாழ்க்கையைக் காணமுடிகிறது. அருளானந்தர் ஒரு டிஸ்பன்சரியில் டிரசராகப் பணிபுரிவதையும் பெருக்கேற்ப பாக்டரைவிடவும் மக்கள் விரும்பும் கைராசிக்கார டிரசராகவும் காட்டப்படுகிறார். தன் மகன் கண்ணனையும் நன்குப் படிக்க வேலைத்து நல்ல வேலையில் அமர்த்துவதைக் காணமுடிகிறது. அதே சமயத்தில் மனைவியின் இறப்பிற்குப் பிறகு உற்றார் உறவினரின் நச்சரிப்பால் மறுமணம் செய்துகொள்வதையும் பிறகு குடியும் குடித்தனமுமாக மாறியதையும் காண முடிகிறது.

'திலகவதி' என்ற சிறுகதையில் நன்குப் படித்துப் பட்டம் பெற்ற நவநாகரிகமிக்க நல்லுசாமியின் குடும்பத்தின் வாழ்க்கையைக் காணமுடிகிறது. நல்லுசாமி தனது மூத்த மகள் அன்புக்கரசியை ஆசிரியராக்கி ஆசிரியராகப் பணிபுரியும் அன்பரசனுக்கு மனமுடித்து வைக்கிறார். அறிவானந்தி உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்றபோதே

நல்ல வரன் தேடி வந்ததால் திருமணம் செய்து வைத்துவிடுகிறார். கடைசிமகள் அன்னபூரணி தொடக்கக் கல்லூரியில் படிக்கிறாள். 'வழக்கறிஞராகவும் மருத்துவராகவும் இளங்கலைப் பட்டதாரியாகவும் தேறிய பெண்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்பும் வாழ்க்கைத் துணையும் அமைதில் காலதாமதம் ஆவதால் பல பெண்களுக்கு உரிய காலத்தில் திருமணம் நடப்பதில்லை. சமுதாயத்தில் படித்துப் பட்டம் பெற்ற ஆண்மக்கள் மிகவும் குறைவு. அப்படியே படிக்கச் சென்றாலும் 'மஞ்சளில்' (இந்தியர்கள் சீனப் பெண்களைத் திருமணம் செய்துகொள்வது) மனம் பறிகொடுத்துவிடுகிறார்கள்' என்று கூறுவதிலிருந்து அக்காலச் சமூகச் சூழலை உணரமுடிகிறது. அதனால் நல்லுசாமி போன்றோர் தங்கள் பெண் பிள்ளைகளை அதிகம் படிக்க வைக்க விரும்பினாலும் வாழ்க்கைத் துணையை அமைத்துக்கொடுப்பதில் உள்ள சிரமங்களை அறிந்து நல்ல வரன் வரும்போது தாமதிக்காமல் மகிழ்ச்சியோடு திருமணம் செய்துகொடுத்த சூழலை மு. தங்கராசன் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

'ஆசை' என்ற சிறுகதை சமுதாயத்தின் உயர்மட்டக் குடியினரின் வாழ்க்கையைக் காட்டுகிறது. சொந்தத் தொழில் நடத்தும் நீலகண்டரையும் அவரது செல்வச் செழிப்புமிக்க வாழ்க்கையையும் அழகாகப் படம் பிடித்துக காட்டுகிறார் மு. தங்கராசன். தேசிய அரங்கத்தில் கூடும் கலாரசிகப் பெருமக்களின் கூட்டத்தையும், சீனச் சிங்காரிகளின் நடை உடை தோற்றத்தையும், உடன்கட்டை ஏறுவதுபோல உடலங்கள் ஒன்று சேர்ந்து நடந்து கொண்டிருப்பதையும் காட்சிப்படுத்திய மு. தங்கராசன், கண்ணராவிக் காட்சிகளைக் கண்டுவிட்ட கண்களைக் கங்கை நீர்விட்டுக் கழுவ வேண்டும் என்று முடிக்கின்றார். நீலகண்டர் பிரேமாவைப் பண்பட்ட சூழலில் வளர்த்திருந்தாலும் சூழல் பிரேமாவுக்குச் சற்று தைரியத்தை வரவழைத்தது. கலைநிகழ்ச்சிக்குச் சென்ற பிரேமா ஜோடிகள் மனம்விட்டுப் பேச மறைவிடம் தேடியபோது காதற்சிட்டுகள் பசும் புற்றரையைப் பஞ்சு மெத்தையாக்கிக் கொண்டிருப்பதைக் கண்ட பிரேமாவின் நெஞ்சில் பிரேமை உணர்வு பிறந்தது. இன்னும் இரண்டு நாட்களில்தான் திருமணம் ஆகப் போகிறதே அப்புறம் என்ன? என்ற மிகைப்பட்ட சிந்தனையோடு இடம் கிடைத்ததும் அமர்ந்தனர்- இல்லை சாய்ந்தனர்' என்று மு.தங்கராசன் காட்டுகிறார்.

ஆடம்பரவாழ்வு

தோட்டத்தொழிலாளர்களாக வாழும் தமிழர்கள் சேமிப்பு இன்றி இருந்ததையும் வருமானம் வரும்போது ஊதாரியாக இருந்துவிட்டுப் பின் வருந்துவதையும் 'புதுப்பாடம்' என்ற சிறுகதையில் அழகாகப் படைத்துக்காட்டுகிறார். நன்கு சம்பாதிக்கின்ற காலத்தில் குடும்பத்தைக் கவனிக்காமல் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதையும், வசதியான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டுப் பெண்கள் இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்படுவதையும் காட்டுகிறார். பொருளீட்டும் ஆண் குடும்பத்தைக் கவனிக்காதபோது பெண்பிள்ளைகள் குடியும் குடித்தனமுமாக இருப்பதையும் ஆண்பிள்ளைகள் ஊதாரிகளாகவும் தீயப் பழக்கங்கள் உடையவர்களாவும் வளர்வதையும் சுட்டிக் காட்டுகிறார். 'வாழ்க்கையில் வளமாக இருக்கும்போது எதிர்காலம் என்ற ஒன்றைக் கருதாததால் வறுமை வாட்டிற்று. சொர்க்கம்-நரகம் என்பது வேறு எங்கும் இல்லை. அந்தப் பெரியவர் நரகத்தை இங்கேயே கண்டார்' (20). என்று கூறுவதன் மூலம் வினை விதைப்பவன் வினையறுப்பான் என்ற முன்னோர்களின் வாக்கினை நினைவுபடுத்துகிறார். மேலும், 'பெரியவரின் உல்லாச புரியில் பவனி வந்து ஏப்பம் விட்டவர்கள் இறப்புக்குக்கூட வரவில்லையென்று அங்கிருந்தவர்கள் பேசிக் கொண்டனர்' என்று கூறும்போது சுயநலமிக்க சமுதாயமாக மாறி வருவதைக் கோடிட்டுக் காட்டுகிறார். குடும்பத்தில் தலைமை சரியில்லாதபோது வாழ்க்கைப்படும் பெண்களும் அவர்களது பிள்ளைகளும் படும் பாட்டை வாசகர்களுக்கு எளிமையாகப் புரிய வைக்கின்றார் மு. தங்கராசன்.

கற்பதும் பேசுவதும் மட்டும் கூடாது. கற்றதை – பேசுவதைச் செயலில் காட்டுவதுதான் கண்ணியம். ஐம்பொறிகளை அடக்கி, நீதிக்கும் நேர்மைக்கும் இலக்காக வாழ்க்கை நெறிகளை அமைத்துக் கொள்வதே கட்டுப்பாடு. புலனடக்கம், நெறிபிறழாமையே கட்டுப்பாடு என்று வாழ்க்கைக் குறிக்கோளை அம்பலவாணரின் கொள்கையாக மு. தங்கராசன் படைத்திருப்பது சமூகத்தின்மீதுள்ள அவரது அக்கறையைப் புலப்படுத்துகிறது.

மு. தங்கராசன் தனது ஆரம்பகாலச் சிறுகதைகளின்வழி அவர்களுடன் வாழ்ந்த சக மனிதர்களின் அன்றாட வாழ்வியலையும், அவர் கண்ட தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலையும், படித்தவர்களின் வாழ்க்கை உயர்வடைவதையும், அதே நேரத்தில் அறிவியலுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் இடையே ஏற்படும் மனப் போராட்டங்களையும், வசதியாக வாழ்வோரின் ஆடம்பர வாழ்க்கையையும், முற்போக்கு என்று வரம்புமீறும் வாழ்க்கையில் நாட்டங்கொள்வோரின் வாழ்க்கைச் சீரழிவையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். பிரச்சினைகளை மட்டும் கூறாமல் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளையும் தான் படைத்த காதாப்பாத்திரங்களின் வழியே வாசகர்கள் ஏற்கும் வகையில் அழகுபடக் கூறுகிறார்.

சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் 'மலர்க்கூடை' சிறுகதைத் தொகுப்பில் பண்பாட்டு அம்சங்கள்

க. தேவசேனா
முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை சிவகாசி நாடார் பயோனியர், மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி

முன்னுரை

உலகில் மனிதன் தோன்றிய நாளிலிருந்தே கதை சொல்லும் கலையும் தோன்றி வளர்ந்துள்ளது எனலாம். இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பே குடும்ப விழாக்களில் கதை சொல்லுவதும் கேட்பதும் எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடமும் வாய்மொழியாக இருந்துள்ளது. கட்டுக்கதைகள், உவமைக்கதைகள், கற்பனைக்கதைகள் போன்றவைகள் பழங்காலந்தொட்டே மக்கள் மத்தியில் வழங்கி வந்துள்ளன. இம்மரபுவழியில் சிறுகதையும் வாய்மொழிப் பரவலால் தோன்றி வளர்ச்சியுற்று அதற்கென்று தனி இலக்கணம் வகுக்கப்படும் அளவிற்கு நிலைபெற்றுள்ளதோடு பிற இலக்கிய வகைகளின்றும் தனித்த பண்பினைக் கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள தமிழறிஞர்களும் வெளிநாடுகளில் உள்ள தமிழறிஞர்களும் தமிழ்ச்சோலைக்கு பூக்களாகிய சிறுகதைகளை வாழ்க்கைக்கு உகந்தவாறு தந்தவண்ணம் உள்ளனர். அந்த வகையில் சிங்கப்பூர் தமிழறிஞர் மு.தங்கராசனின் பல படைப்புகளுள் "மலர்க்கூடை" என்றும் சிறுகதைத் தொகுப்பு காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் கொள்ளும் மனநிலை கொண்ட மனிதர்களுக்கு எந்நாளும் அவர்களை விட்டு நீங்காத பண்பாட்டு அம்சங்களை எடுத்தாளுகிறது. இக்கட்டுரையானது மு.தங்கராசனின் சிறுகதைத் தொகுப்பான "மலர்க்கூடை" சொரியும் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் கூற விழைகிறது.

சிறுகதை விளக்கம்:

மனித வரலாற்றில் சமூக சூழ்நிலைக்கேற்ப சிறுகதையானது பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. "மரியாஸ் கதை வளர்ச்சி, மர்மம் மூலம் உச்சகட்டத்தை அடைதல், நிறைவான முடிவு போன்றவை இருக்க வேண்டும்" என்கிறார். சிறுகதையானது சிறிய அளவில் அமைந்து ஒருபக்கம் அல்லது இரண்டு பக்கங்கள் என்ற முறையில் உருவாக்கப்படுகின்றன. தமிழண்ணல் சிறுகதை என்பதற்கு "வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சியை அல்லது ஓர் உணர்ச்சியைக் கருவாகக் கொண்டு பின்னப்படுவதாகும்" என்று விளக்கம் தருகிறார்.

பண்பாட்டு அம்சங்கள்:

பண்பாடு, கலாச்சாரம் என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயல்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் குறிக்கின்றது. பொதுவாக இது மனிதரின் நடவடிக்கைகளையும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கிறது எனலாம். பண்பாடு மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவைகளைக் கூறலாம். பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வுகளாகும் நடையுணர்வுகளாகவும் தோன்றும். "பண்புடையார் பட்டுண்டுலகு" என்றார் வள்ளுவர். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்றது கலித்தொகை. இவ்வரிசையில் பண்பாட்டின் ஒருகூறான பழக்கவழக்கங்களில் இல்லற பழக்கவழக்கங்கள் சிலவற்றை இக்கட்டுரை எடுத்தாளுகிறது. ஒழுக்க நெறிகளும் வாழ்க்கைமுறைகளும், நீதி கூறும் பழக்கம், ஈகை, சமூகக்கட்டமைப்பு, புரிந்துணர்வுகள் போன்றவைகளைப் பற்றித் தெளிவோம்.

ஒழுக்கநெறிகளும் வாழ்க்கை முறைகளும்:

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவக் கருத்து இல்லறம் நல்லறமாக விளங்குவதற்கு வாழ்விணையர்களுக்குச் சொல்லப்பட்டதாகும். சிங்கப்பூர் மு.தங்கராசனின் "மலர்க்கூடை" என்னும் சிறுகதைத் தொகுப்புகள் யாவும் இணையாள் தவறவிட்ட நெறிகளையே சொல்லிச் செல்கிறது. இல்வாழ்வில் அன்பு, அரவணைப்பு கலந்திருந்தும் சந்தேகம் என்ற பண்பு கணவரிடமோ அல்லது மனைவியிடமோ தோன்றிவிட அது துன்பமான குடும்பமாக மாறிச் சிதைந்து மனம் சஞ்சலத்தோட இருப்பதுமாகச் சில கதைகளில் படைத்து உள்ளார். "ஆமை புகுந்த வீடு" என்ற சிறுகதையில் அருளானந்தரும் அவர்தம் துணைவியார் அருளாம்பிகையும் கண்ணிணையராயக் கருத்தொருமித்து எளிமை, இனிமை, தன்னம்பிக்கை ஆகிய பண்புநலன்களால் இல்லறம் நல்லறமாக இயைந்து கொண்டிருந்தது. "மங்களகரமான பெயர்களைக் கொண்ட ஊரளந்த ஆமைகள் அருளானந்தரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் சீனப்பெண்மணி ஒருவரைச் சின்னவீடாகக் கொண்டுள்ளார் என்ற வியூகத்தைக் கொஞ்ச கொஞ்சமாக 'வி' ஊசி மூலம் ஏற்றி அருளாம்பிகையின் நெஞ்சத்தில் விரவச் செய்து விட்டார்கள்" என்றவாறு இல்லறம் இல்லாத அறமாக விளங்குவதையும் எழுத்தாளர் படைத்துள்ளார்.

துணைவனின் உள்ளத்து உணர்வுகளை புரிந்து கொள்ளாத துணையாளால் குடும்பம் சிறப்பினை எய்தவில்லை எனத் "தென்றலும் புயலும்", "விடிவெள்ளி" என்ற படைப்புகள் வெளிப்படுத்துகிறது "தர்மக் கணக்கு" படைப்பு மாறிவரும் வாழ்க்கை முறைகளை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. அழகுமலையின் பிள்ளைகள் இருவரும் வெளிநாடுகளில் படித்து அந்நாட்டுப்

பெண்களையே எளிமையுடன் திருமணம் செய்து வந்து நிற்கின்றனர். ஆனால் அவர்களுக்குச் சேர வேண்டிய ஆஸ்திகள் அவர்களைச் சேர்கிறது. "காகிதப்பூக்கள்" என்ற சிறுகதை காட்சிப் பொருளுக்காக வைக்கப்படும் காகிதப்பூக்கள் போலவே குடும்பக் கட்டமைப்புக்காகவே வீட்டில் இல்லாள் இருக்கின்றாள் என்ற வாழ்வு முறை குறிப்பிடப்படுகிறது.

சமுதாயப் பேரங்கில் தான் தலை தூக்க முடியாத அளவுக்கல்ல "தலைகுனிவு" ஏற்படத்தக்க அளவு அருள்மணியின் இதயத்தைக் குத்திக் குடைந்திடும். "நாகரிகப் போர்வையைக்" கனிமொழி என்றைக்குப் போர்த்துக் கொள்ள தொடங்கினாளோ அன்றைக்கே தோன்றிய மனப்பூசல் வாக்குவாதமாகி, வாழ்க்கைக் காலத்தில் "பட்டிமன்றங்கள்" தோன்றிய நிலையில் அந்த "பாதிப்பு" ஏற்பட்டு விட்டது என்றவாறு ஒழுக்கநெறி தவறிய மனைவியால் கணவன் படும் துன்பங்களை படைப்பாளர் காட்டுகிறார்.

ஈகை

"செஞ்சோற்றுக் கடன்" என்னும் சிறுகதையில் அமராவதி என்னும் பெண் வழிப்பறிக் கொள்ளையர்களிடம் சிக்கித் தவிக்கும் போது இரண்டு நாய்கள் குரைத்து அவளை காப்பாற்றுகிறது. பின் அவ்விரண்டு நாய்களைப் பற்றி சிந்திக்கும் போது தான் தெரிகிறது. அவைதான் சிறுவயதில் அன்போடு உணவளித்து வளர்த்த செல்லப்பிராணிகள் என்று. ஈகை பலன் அளிப்பதை படைப்பாளர் காட்டியுள்ளார். "தர்மக் கணக்கு" சிறுகதையில் அழகுமலை தன் உறவுகளிடம் ஈகைப்பண்புடன் நடந்து கொண்டார் என்ற பண்பாட்டு அம்சம் படைப்பில் பதிவாகிறது.

நீதி கூறும் பழக்கம்

நீதி கூறும் பழக்கம் ஒரு பண்பாட்டு அம்சமாகப் பார்க்கப்படுகிறது. "நெஞ்சக் கனல்" என்னும் சிறுகதையில் கருணானந்தர் என்ற அரசு ஊழியர் சமூகவியல் தீர்வு பிரச்சினைகள் பிரிவில் வேலை பார்ப்பவராகப் படைக்கப்பட்டு மனமுறிவிற்கு வருகின்ற இணையர்களுக்கு நீதி கூறி, அவர்களை ஒன்றிணையச் செய்யும் நற்பழக்கம் உடையவராகவும் படைத்துள்ளார்.

புரிந்துணர்வுகள்

படைப்பாளர் இல்லற விழுமியத்தின் கணவன் - மனைவியிடையே புரிதல் உணர்வு இருக்க வேண்டும் என சிறுகதைத் தொகுப்பு முழுவதும் ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார். இது ஒழுக்கநெறிகள் என்ற பண்பாட்டு அம்சமாகப் பார்க்கப்படுகிறது.

மூணு மாசம் "போனஸ்" வர்ரது தெரிஞ்சி முன் கூட்டியே எழுதியிருக்கிறாங்க..... அனுப்பிவைங்க ..... என்று தன் கடுகடுகப்பைத் தொடங்கி இருந்தார். அன்பரசனின் அன்புத் துணைவியார். எப்போதும் போல் அதையும் பொருட்படுத்தாமல் இயன்ற அளவுக்கு அனுப்பிவைத்து விட்டார். தங்கையிடமிருந்து நன்றிக்கடிதம் வந்திருக்க வேண்டும். இன்றும் ஒரு கொந்தளிப்பை எதிர்பார்க்கலாம். உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அகங்காரியாய்த் திகழும் தன் மனைவியைப் பற்றியே ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இதற்கொரு முடிவே இல்லையா" என்றவாறு மனைவியின் புரிதலின்மையால் கணவன் படும் மனக் குமுறல்களை விடிவெள்ளி சிறுகதையில் சித்தரித்துக் காட்டுகிறார்.

பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு அருளாம்பிகை தொடர்ந்து கொண்டிருந்த போராட்டத்தின் போது ஒருநாள் அருளானந்தர் உணர்ச்சிப் பிழம்பாகி விட்டார். அந்தவேகத்தில், "உன்னைப் பொறுத்தவரை நான் செத்துப் போய் விட்டேன்". இப்போது நான் ஒரு நடைபிணமாகத் திரிகிறேன். போதுமா... போதுமா...? என்று இரைந்து விட்டார் என்றவாறு "ஆமைபுகுந்த வீடு" கதையில் கூறுகிறார். புரிதல் உணர்வு இல்லாமல் குடும்பம் சிதறிய நிலையில் இருப்பதை சித்தரிக்கிறார் படைப்பாளர்.

சமூகக் கட்டமைப்பு

குடும்பம் சிதறுண்டு போகாமல் இருக்கவும் சமூகத்தில் தனக்கிருக்கும் மதிப்பை மரியாதையைக் கட்டிக்காத்துக் கொள்ளவும் வேண்டுமென்றால் அதற்குரிய ஒரே வழி உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அடக்கிக் கொண்டு வாழ்வதேயாகும். அந்தவொரு அமைதிப் படலத்தில்தான் அருளானந்தர் இப்போது இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர் என்றவாறு பிறரைப் போல வாழ முடியவில்லை என்றாலும் அந்த அமைப்பிலாவது வாழவேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்கிறார்.

சிங்கப்பூர்த் தமிழறிஞர் நம் தமிழ் சமூகக் குடும்ப கட்டமைப்பு முறைகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதை தவறாமல் பதிவு செய்துள்ளார். "ஆமை புகுந்த வீடு", "விடிவெள்ளி", "வாயில்லாப்பூச்சி", "நெஞ்சக்கனல்", "குருவிக்கூடு", "காகிதப்பூக்கள்", "இதுதான் உலகம்" போன்ற சிறுகதைத் தலைவிகள் அனைவருமே புரிதலின்மையுடனும், சமூகக்கட்டமைப்பை மீறியவர் களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான தலைவிகளுடன் சமூகக் கட்டமைப்பின் அடிப்படையில் குடும்பம் சிதைவில்லாமல் செல்ல வேண்டுமே என்பதற்காக துன்பத்தை ஏற்றுக்கொண்டு வெறுப்புணர்வுடனே வாழ்கின்றார். சமூகக் கட்டமைப்பு என்ற பண்பாட்டுக்கூறு மனிதனின் வாழ்விற்கு மிகவும் அவசியமான தொன்றாகப் பார்க்கப்படுகின்றது.

முடிவுரை

ஒரு சமுதாயத்தின் அடிப்படையாக வேரூன்றித் திகழ்வது குடும்பமாகும். அங்குதான் தனிமனிதன் தன்னுடன் நெருங்கிய பல்வேறு உறவுகளோடு நெருக்கமாகத் தொடர்பு கொள்கிறார். அத்தொடர்பினால் ஏற்படும் இன்பம், துன்பம் போன்ற தாக்கத்திற்கும் ஆட்படுகின்றான். வாழ்வினோடு பிரிக்க முடியாத ஒன்றாக நம் பண்பாடு, கலாச்சாரம் அமைந்துள்ளது. பண்பாடு தவறும் போது வாழ்வும் தடுமாற்றம் கொள்கிறது. இன்றைய இயந்திரமயமான உலகில் பயணிப்போர்களுக்கு பண்பாட்டுக் கூறுகளையும் அதன் அவசியத்தையும் அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டே இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

மு. தங்கராசனின் "மாதுளங்கனி" புலப்படுத்தும் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் அ. கணேசன்
தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி

முன்னுரை

படைப்பாளன் தான்வாழும் சமுதாயத்தில் தனக்கான ஓர் இடத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, அவன் கண்டுணரும் எண்ணற்ற பார்வைகளைத் தன்னகத்தே கொண்டுதான் எழுத்துகளாக மலரச் செய்கிறான். மலர்ந்த எழுத்துக்கள் பூக்களின் வாசமாய் பல்வேறு மக்களிடையே மகரந்த படைப்புகளாய் வாசனையால் மணம் வீசிக்கொண்டு இருக்கிறது. அங்ஙனமே சிங்கப்பூர் மு. தங்கராசனின் "மாதுளங்கனி"யும் பல்வேறு சமுதாயச் சிந்தனைகளைத் தாங்கி நின்று, மக்களிடம் தேனாய்த் தித்தித்துக் கொண்டிருக்கிறது. அதனடிப்படையில், அவற்றுள் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை ஆய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

சமுதாயம் - விளக்கம்

பண்டைக்காலத்தில் நாடோடியாகத் திரிந்த மனிதன் கூடிவாழ்ந்த நிலையையே சமுதாயம் என்பர். "தான்", "தனக்கு" என்றிருந்தவன் "தமக்கு" என்ற நிலைக்கு உயர்ந்தபோது தான் ஒரு அமைப்பு உருவாகுகிறது. அதுவே சமுதாயம் எனப்பட்டது.

சமுதாயம் என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி, **"மன்பதை', 'மக்களின் திரள்', 'பொருளின் திரள்', 'கோயில் நிருவாக அதிகாரிகளின் கூட்டம்', 'பொதுவானது', 'உடன்படிக்கை', "ஊர்ப் பொதுச் சொத்து' "** [1] எனப்பொருள் கூறுகிறது. இதற்கு ஆங்கில-தமிழ்ப் பேரகராதி,

> **"கூட்டு வாழ்க்கைக் குழு, மன்னாய நட்புக் குழு, சேர்க்கை, தோழை, குடிமை, தொகுதி, பண்புடையோர் குழு"**[2]

என்று விளக்கம் கொடுக்கிறது. பிரான்ஸ் நாட்டறிஞர் தே. பெர்னால்ட், சமுதாயம் என்பது சமுதாயத்தின் புலப்பாடு என்றும், இலக்கியம் மனிதகுலத் தொடர்புடையது என்றும் கூறுவர்.[3] ஒப்பிலக்கிய அறிஞர் ஹேரிலெவின் விளக்கம் கூறுகையில், இலக்கியமும் சமுதாயமும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தவை என்பதை,

> **"இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள உறவுகள் பரஸ்பரமானவை என்றும், இலக்கியம் சமுதாயக் காரணிகளின் விளைவு மட்டுமல்ல, சமுதாய விளைவுகளின் காரணமுமாகும்"** [4]

என்று குறிப்பிடுகிறார்.

சமுதாயம் என்பதற்குச் சமூகவியலார் கூறுகையில்,

> **A Society is a large, permanent, Self-Sufficient, Self-Perpetuating group of interacting people who shame certain common values and beliefs"** [5]

என்று குறிப்பிட்டுள்ளார். ஆக, இலக்கியப் படைப்பாக்கங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கையை ஏதேனும் ஒரு வகையில் விளக்கிச் செல்வனவாகவும், குழுக்களாக கூட்டங்களாக வாழ்ந்தவர்கள் சமுதாய அமைப்பாகவும் வாழ்ந்தனர் என்பதையும் காட்டுகிறது.

"மாதுளங்கனி"யில் சமுதாயச் சிந்தனைகள்

உயிரினங்கள் பலவும் விரும்பி உண்ணப்படும் மாதுளம்பழம் பல்வேறு அடுக்கடுக்காய் செறிந்திருப்பதைப் போலவே சிங்கப்பூர் மு. தங்கராசன் அய்யா அவர்களின் மாதுளங்கனியும் பல்வேறு மக்களின் சிந்தைகளை ஒருங்கே திரட்டி வைத்தாற்போல் அமைந்துள்ளது. சமுதாய நலனுக்காவும், நாட்டின் பெருமைக்காகவும் உலகளாவியச் சிந்தனைக் கருத்துக்களை ஒரே பெட்டகத்துள் அமைத்துத் தந்துள்ளார். மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திடவும், வளமான வாழ்க்கையைப் பெருக்கி அழகுற அமைத்திடவும் இவரது கவிதைத் தொகுப்பு வழிவகை செய்கிறது.

நாட்டின் வளம்

ஒருநாடு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதற்குக் காரணமாகத் திகழ்வது மனிதர்களே. அம்மனிதர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக, நற்பண்பு உடையவர்களாகத் திகழவேண்டும் என்றால் அறத்தின் மாண்புகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். அறத்தின் மாண்புகள் அறிந்த மக்களால் மட்டுமே ஒருநாடு நேர்மையான வழியில் முன்னேற்றம் அடைய முடியும். ஆறவழி அல்லாத வருமானம், வாழ்க்கை, ஆட்சி ஆகியன பழி, பாவங்களைச் சுமந்து அழிந்து போகும் என்பதை,

> **"நல்லறத்தின் நற்பயனாய் நயந்து தோன்றும்**
> **நன்மக்கட் பேறுகளே நாட்டின் செல்வம்**
> **வெல்லறத்தின் விளங்குபுகழ் மாட்சி யாக**
> **விளைந்துவந்து அறிவார்ந்து விரிந்து லாவும்"** [6]

என்னும் கவிதை வரிகளால் புலப்படுத்துகிறார் ஆசிரியர் மு. தங்கராசன். நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் செல்வங்களான இயற்கை வளம் கனிமங்கள், அறிவியல் முன்னேற்ற வளர்ச்சி ஆகியன விளங்கினாலும் அறத்தோடும், நேர்மையாகவும் மனிதன் வாழத் தலைப்படவில்லையென்றால் அவனுக்கும் அவனது சந்ததிக்கும் தீமைகளான பழி, பாவங்கள் வந்து சேரும் என்பதைக் கூறியுள்ளார். இதைத் தான் திருவள்ளுவரும் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில்,

> **"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற"** [7]

என்னும் குறளில் கூறியுள்ளார். அதாவது, "அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளை விட, இல்வாழ்க்கையில் சிறந்த பேறு எதுவுமில்லை" என இக்குறட்பாவுக்கு உரை கண்டுள்ளார் மு. கருணாநிதி. நாட்டின் வளர்ச்சிக்கும், வீட்டின் வளர்ச்சிக்கும் எத்தனை பேறுகளை ஒருவன்

பெற்றவனாகினும் நல்ல புதல்வர்களை விடச் சிறந்தது எதுவுமில்லை என்பதை இக்குறள் எடுத்துக் காட்டுகிறது. இதே கருத்தைத்தான் கவிஞர் வாலி அவர்களும்,

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி – ஒரு
சரித்திரம் இருக்குது தம்பி" [8]

என்று கூறியிருக்கிறார்.

கடமையுணர்வு:

பூமிதனில் பிறந்த மற்ற உயிரினங்களைக் காட்டிலும் மனித உயிர்களுக்குக் கூடுதலான மதிப்புகளுண்டு. அதனால் தான் அறிவுணர்வால் முன்னேறிச் செல்கிறான். அவ்வாறு சிந்தனையோட்டங்களால் வளர்ந்து செல்பவனுக்கு சமுதாயம் முன்னேற்றம் காண சில அறிவுரைகளைக் கூறுவதை நாம் காணமுடிகிறது. இதனை,

"ஈன்றிங்கு புறந்தந்து இயைந்து காத்து
இளம்பிள்ளைப் பருவத்தில் இனிதாய்ப் போற்றித்
தோன்றிவரும் துலக்கங்கள் கல்விச் செல்வம்
தோய்ந்துவரத் தந்தையவன் துணையாய் நின்றே
ஆன்றவிந்த அடங்குகின்ற அனைத்தும் கற்க
ஆயவழி மேற்கொள்ளும் ஆண்மை வேண்டும்".[9]

என்னும் கவிதை வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஒருதாய் குழந்தையைப் பெற்றெடுத்து இனிதாகக் காத்து நின்றால் மட்டும் போதாது. அந்த இளமை வாய்ந்த பிள்ளைப் பருவத்தைப் போற்றி பேணி காக்கவும் வேண்டும். நாள்தோறும் வளர்ந்து வரும் கல்விச் செல்வத்தைப் பெற தந்தையவன் அருகமர்ந்து துணையாய் இருத்தல் வேண்டும். எல்லாவற்றையும் அடக்கி ஆள்வதற்குக் கற்பதோடு மட்டும் நின்று விடாமல், அவற்றை திறம்பட நடத்துவதற்கு ஆண்மை வேண்டும் என்றும் கூறுகிறார். இக்கருத்து புறநானூற்றில் பொன்முடியார் பாடிய பாடலை ஒத்திருப்பதாக அமைந்துள்ளது. அதாவது, சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது என்பதை,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே".[10]

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. நாடாளும் மன்னவன் முதல் வீடாளும் பெண்டிர் வரை அனைவருக்கும் கடமையுணர்வு வேண்டும் என்பதை இப்பாடல் வரிகள் மெய்ப்பிக்கிறன.

குறிக்கோள்

மனிதன் தான்கொண்ட இலக்கு அடைய வேண்டுமென்றால் குறிக்கோள் மிகவும் முக்கியம். "குறிக்கோள் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப் போன்றது" என்பர் அறிஞர்கள். அதன்படி அன்றாட வாழ்வுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் அனைத்தும் இருந்து, அன்றாடம் எப்படியும் வாழ்நாளைக் கடத்தி விடலாம் என்று எண்ணுபவர்களுக்குக் குறிக்கோள் என்பதே கிடையாது. அவ்வாறு குறிக்கோள் இன்றி சோம்பேறியாக வாழ்தல் சமுதாயக் கேடு என்றும், இழிவான வாழ்க்கை என்றும் இடித்துரைக்கிறார் ஆசிரியர். இக்கருத்தினை,

"எப்படியோ வாழ்ந்திடுவோம் என்றே எண்ணி
இலக்கின்றி இருந்திடுதல் என்றும் தீதாம்!
எப்படியும் வாழ்ந்திடலாம் என்ற ஒன்று
இழிதகைமை எதிர்நோக்கு இல்லா வாழ்க்கை".[11]

என்ற கவிதை வரிகளால் கூறுகிறார் மு. தங்கராசன். அதாவது, எறும்பு முதல் உலகின் மிகப் பெரிய உயிரினங்கள் வரை அனைத்துமே ஏதோ ஒருவகையில் உழைத்துக் கொண்டு உணவைத்தேடி தான் வாழ்கின்றன. இங்கே, **"தேடல் உள்ள உயிர்களுக்கே வாழ்வில் சுவை இருக்கும், தேடல் என்பது உள்ளவரை வாழ்க்கையில் சுகம் பிறக்கும்" என்னும் திரைவரிப் பாடல் இதற்கு மெருகூட்டுவனவாக உள்ளன. ஒருவனது வாழ்க்கை மெச்சும்படியாக இருக்கவேண்டுமானால் "அதில் மேன்மையான நோக்கமோ, கடமை உணர்வோ, பாசமோ இருக்க வேண்டும்".**[12] என்பார் எமர்சன்.

விடாமுயற்சி

வாழ்க்கையில் வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒருநேரம் எதுவும் கிடையாது விடாமுயற்சியோடு செயல்படுவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்துசேரும். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்று சொல்வார்கள். முடியாது என்று எண்ணும் கடினமான ஒன்றுகூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் நிச்சயமாக வெற்றியை உண்டாக்கும். எந்தச் செயலைச் செய்வதற்கு முயற்சி எடுக்கிறமோ அதில் சாதித்து விடவும் முடியும். எந்தவொரு சாதனையாளரும் தொடக்கத்திலேயே சிகரம் தொட்டது கிடையாது. பல சோதனை களையெல்லாம் தாங்கியே சாதனையாளராக ஆகியிருப்பர். இதைத்தான் ஆசிரியர் மு. தங்கராசன் அவர்கள்,

கொன்றுந்தான் போட்டிடுவார் என்ற போதும்
கொடும்நெஞ்சக் குறியினுக்கே அஞ்சா நெஞ்சம்
கொண்டுந்தான் குறிக்கோளில் நெறியாய் நிற்கும்
கூர்மதியார் கொள்முனைப்பில் வென்றே தீர்வார்".[13]

என்னும் கவிதை வரிகளில் குறிப்பிட்டுள்ளார். அதாவது, ஒருவர் தாம் கொண்ட இலக்கினை அடைவதற்கு பல்வேறு தடைகள் வந்தபொழுதும், தன்உயிரைக் கூட விட்டுவிடும் சூழ்நிலைகள் வந்தபோதும், கொடுமையான நெஞ்சம் கொண்டவனுக்கு எதிராக அஞ்சாத நெஞ்சம் உடையவராகத் திகழவேண்டும் என்றுரைக்கிறார். அதுமட்டுமல்ல தான்கொண்ட குறிக்கோளை அடைவதற்குரிய கொள்கைகளை உடைய கூர்மையான அறிவினையுடையவர்கள் இறுதியில் வெற்றியையே அடைவர் என்றும் புலப்படுத்துகிறார். இவரது விடாமுயற்சி வெறும் வார்த்தைகள் அல்ல, அது மனிதர்களுக்கான தாரக மந்திரம் என்பதை,

"முயற்சி திருவினை யாக்கும்முயற்சி யின்மை
இன்மை புகுத்தி விடும்".[14]

என்ற திருக்குறளும் மெய்ப்பிக்கிறது. அதாவது, ஒருவன் வெற்றி இலக்கை அடைவதற்கு முயற்சி வேண்டும் என்றும், அது தன்னம்பிக்கையுடன் கூடிய

விடாமுயற்சியாக இருந்தால் சிறப்பானது என்றும் கூறிய திருவள்ளுவர் ''முயற்சியில்லாமல் இருக்கும் ஒருவனை இருளில் கொண்டுபோய்ச சேர்ந்து விடும்'' என்றும் எச்சரிக்கை செய்கிறார். இதைத்தான் ஒரு கவிஞன்,

''விடாமுயற்சி என்ற ஒற்றைநூல்
சரியாக இருந்தால்
வெற்றி என்னும் பட்டம்
நம் கையில்''.[15]

என்று குறித்துள்ளான். ஆக விடாமுயற்சி என்றும் ஒற்றைவரி நூலைப் பிடித்துக் கொண்டால் வெற்றியாகிய கனியைப் பறித்து விடலாம் என்ற நம்பிக்கையை இங்கே விதைத்துள்ளார்.

நேர்மை

'நேர்மை' என்னும் தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் ர்ழநெளவல என்று வழங்கப்பெறுகிறது. நேர்மை என்பது உண்மைக்கு மாறாக நடக்காத நிலையைக் குறிப்பதாகும். நேர்மை என்பதனை ஒருவரின் உடலமைப்பைக் கொண்டோ, கல்வியறிவைக் கொண்டோ அறியமுடியாது. ஒருவர் நடத்தையின் உண்மை வெளிப்பாட்டினைக் குறிப்பதாகும். பேசுகின்ற பேச்சில் உண்மையும் தெளிவும் இருக்குமானால் நேர்மையாளராக வாழலாம். அதனால் தான் பெரியோர்களும் நாநயம் வேண்டும் என்றார்கள். நாவிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் நயமாக இருப்பதும், பிறரது மனத்தைத் துன்புறுத்தாமல் அமைவதும் நேர்மை என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. இதைத்தான் ஆசிரியர் மு. தங்கராசன் அவர்கள் தம் கவிதைகளில்,

''சொல்லும்முன் நன்றாக யோசித்துச் சொல்லல்
சோர்வில்லாச் சுடராகும் நாநயத்தின் பாங்கு
வெல்லுறுதி வினையாக்கம் நாணயத்தின் விள்ளல்
விழையுமெழில் நல்லுலகின் விரிந்துவரும்
நேர்மை''.[16]

என்று கூறியுள்ளார். அதாவது, ஒருவரிடம் பேசுகையில் பேசக்கூடியவர் நன்றாகச் சிந்தித்துப் பேசுதல் வேண்டும். சிந்தித்தும், எதிர்கால விளைவையும் நோக்கினால் இந்த உண்மைபுரியும். அதனால் சுடரொளியில் நேர்மையானது கோபுரமாக உயர்ந்தோங்கி நிற்கும். செயலை வினையால் வெல்லும் போது வெற்றி, தோல்வி இருப்பினும் நேர்மையால் நன்மை விளையுமென்றால் அதனை நல்லவர் உலகம் பாராட்டியே மகிழும் என்றும் குறிப்பிடுகிறார். அதைவிடுத்து பயனற்ற சொற்களைச் சொல்லும் போது ஒருவன் நேர்மையற்றவனாகவும், பொய்யனாகவும் விளங்குவான். அதனால்தான் மற்றவரிடம் பேசும்போது உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தளவு உண்மையாகப் பேசவேண்டும் என்பார் வள்ளுவர். இதனை,

''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை''.[17]

என்ற குறள் வழித் தெளியலாம். அதாவது ஒருவன் உள்ளம் அறிய உண்மையைப் பேசுபவனாகில் அவன் தவமும் தானமும் செய்பவரைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுவான் என்று கூறுகிறார். இந்த உண்மை நிலையைத் திருவள்ளுவர் ''வாய்மை'' என்னும் பொருளில் விளக்கிச் செல்கிறார். இவ்வாய்மை பற்றிய திரைப்படப் பாடலொன்றும் இங்கே நோக்கத்தக்கதாய் அமைகிறது.

''நெஞ்சுக்குத் தேவை மனச்சாட்சி – அது
நீதிதேவனின் அரசாட்சி
அத்தனை உண்மைக்கும் அவன்சாட்சி – மக்கள்
அரங்கத்தில் வராது அவன்சாட்சி''.[18]

நற்பண்புகள் நிறைந்த மனிதனுக்கு கடவுள் என்ற ஒன்று இல்லை. அவனுக்குக் 'கடவுள்' அவனது மனச்சாட்சியே. மனத்திற்கு உகந்த, சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல்களை மட்டுமே பிறர்மனம் துன்புறாதவாறு செய்துமுடிப்பார். அவற்றுள் சிலநேரம் தொய்வு ஏற்பட்டாலும் முடிவு அவர்களுக்கான வெற்றியை மட்டுமே தேடித்தரும். இது நேர்மையால் மட்டுமே உண்டாக்க முடியும் என்று கூறுகிறார்.

முடிவுரை

மனித வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படைச் சிந்தனைகளை தமது படைப்புகளான கவிதைகள், சிறுகதைகள் வாயிலாகத் தெளிவாக வாசிக்கச் செய்ததன் காரணமாக, தமிழ்ச் சமுதாயம் மிகவும் சிறப்புற்று உயரும். அவ்வகையில் தமிழறிஞர் மு. தங்கராசனின் மாதுளங்கனிக் கவிதையில் காணப்படும் சமுதாயம் சார்ந்த சிந்தனைகளில் சில மட்டும் இங்கே பதிவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பிற சமுதாயச் சிந்தனைகள் இதனுள் பொதிந்துள்ள நிலையில் அவற்றையும் வெளிக்கொணர்ந்தால் ஆய்வுலகம் சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

கழக அகராதி, ப.38
சிதம்பரநாதன் செட்டியார், ஆங்கில-தமிழ் அகராதி, ப.48
தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை, ப.51
தி.சு. நடராசன், மேலது, ப.51
டாக்டர். ஆத.முத்தையா, பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப.50
தமிழறிஞர் மு. தங்கராசன், மாதுளங்கனி, ப.17
தேவநேயப் பாவாணர், திருக்குறள், ப.87
கவிஞர் வாலி, திரையிசைப் பாடல்கள்.
தமிழறிஞர் மு. தங்கராசன், மேலது, ப.18
புலியூர் கேசிகன், புறநானூறு, பாடல் எண்:312
தமிழறிஞர் மு. தங்கராசன், மேலது, ப.21
சுகிர்தா பஸ்மத், ஆளுமை வளர்ச்சி, ப.24
தமிழறிஞர் மு. தங்கராசன், மேலது, ப.25
கௌமாரீஸ்வரி, திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.192
கவிஞர் இனியன், திரும்பிப்பார், ப.60
தமிழறிஞர் மு.தங்கராசன், மேலது, ப.30
தேவநேயப் பாவாணர், மேலது, ப.180
கவிஞர் கண்ணதாசன், தமிழ்த்திரைப் பாடல்.

‘வாகைப் பூக்கள்’ கவிதைத் தொகுப்பில் ‘வாகை சமுதாயம்’

தி. சரஸ்வதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

முன்னுரை

மானுடக் கலைகளில் மகத்தானது இலக்கியக் கலையாகும். காலத்தேவைக்கேற்ப உலகம் மாறும்போது அம்மாற்றத்திற்கேற்ப மனிதனை வழிநடத்தும் ஆற்றல் இலக்கியக் கலைக்குப் பெருமளவில்உண்டு. அதனால்தான் இலக்கியம் மலர்த்தோட்டம் போன்று நாள்தோறும் புதுப்புதுப் பொலிவுடன் மலர்ந்து கொண்டு இருக்கிறது. இயல், இசை,நாடகம் ஆகிய முத்தமிழிலும் முத்திரை பதித்த சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசன் அவர்கள் தமது படைப்புக்கள் பெரும்பான்மையானவைகளுக்கு மலர் சார்ந்த தலைப்புகள் வழங்கி, தமிழ் இலக்கியம் என்ற மலர்த்தோட்டத்தை மேலும் மணம்கமழச் செய்துள்ளார். தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தில் பிறந்த இவர் தமது மூன்று வயதில் மலாயா சென்று தமிழை விரும்பிக் கற்றுத் தமிழாசிரியராகப் பணியமர்ந்தார். எழுத்தாளர், ஆசிரியர், சமூகத் தொண்டர் என்று பல பரிணாமங்களைப் பெற்றிருப்பினும், தம்மைத் தமிழாசிரியர் என்று அறிமுகப்படுத்துவதிலேயே விருப்பம் கொண்டவர். 2012இல் ‘வாழ்நாள் நல்லாசிரியர் விருது’ பெற்ற தமிழாசியர் மு.தங்கராசன் அவர்கள் சிறுகதை, நாடகம், கட்டுரை எனப் பல இலக்கிய வகைமைகளைப் படைத்திருப்பினும் இவர் படைத்த கவிதைகள் மரபுக்கவிதைகளாக அமைந்திருப்பது தனிச்சிறப்பு. அவ்வகையில் ‘வாகைப் பூக்கள்’ என்ற தமது கவிதைத் தொகுப்பில் சமுதாயம் வாகைசூடத் தேவையான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார். அக்கருத்துக்களைப்பற்றி இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகிறது.

வாகைப் பூக்கள் - நூல் அறிமுகம்

‘வாகைப் பூக்கள்’ என்ற கவிதைத்தொகுப்பானது மு.தங்கராசன் அவர்களின் நாற்பது நூல்களுள் பதினெட்டாவது படைப்பாகப் பரிணமித்த நூலாகும். 2003இல் வெளிவந்த இக்கவிதை நூலில் வெவ்வேறு தலைப்புகளுடன் கூடிய எழுபத்திரண்டுக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் அனைத்தும் நாடு, மொழி, சமுதாயம் குறித்த சிந்தனைகளை மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளன.

வெற்றியின் அடையாளமாக வாகைமரத்தின் மலர்கள் சூட்டப்பட்டு வெற்றிக்களிப்பைப் பகிர்ந்ததாகத் தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன. இன்றளவும் ‘வெற்றிவாகை சூடினர்’ என்றதொடர் வழக்கில் உள்ளது. நற்குடிமக்கள் புதியஉலகம் படைப்பதற்கான வாழ்க்கை நெறிகளை வகுத்து, சமுதாயம் வாகைசூடத் தேவையான வழிகளை வாகைப் பூக்களில் வகுத்துள்ளார் ஆசிரியர்.

நற்குடிமக்கள் உருவாக்கம்

மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் தொகுப்பே சமுதாயம் எனப்படும். ஒவ்வொரு மனிதனும் தனது குழந்தைப் பருவத்திலிருந்து தான் சமுதாயத்தில் மனிதனாகமாற்றம் பெறுகிறான். மக்கள் மாக்களாக மாறாமலிருப்பது பெற்றோரின் வளர்ப்பு நிலையில்தான் உள்ளது. ஒருவன் சமுதாயத்தில் பெரும்புகழைப் பெற்றாலும் அல்லது அதற்குமாறாக அவதூறு ஏச்சுக்களைப் பெற்றாலும் பெற்றோரின் வளர்ப்புநிலையையே அவைமுதலில் தாக்கு கின்றன.எனவே சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நல்லகுடிமகனை உருவாக்குவது பெற்றோர்களின் கடமை என்பதனை மு.தங்கராசன் அவர்கள்,

“பால்ஊட்டும் போதில் நல்ல
பண்புகளைச் சொல்லிக் காட்டி
.....
நூல்காட்டும் நெறிகள் தம்மை
நுட்பமாய்ச் சொல்லும் அன்னை!
ஆதரித்துப் போற்றிக் காத்து
அரவணைத்துப் போகும் தந்தை”

(வாகைப் பூக்கள் - பக்.22)

இக்கவிதைவரிகளில் விளக்கியுள்ளார்.நூல்கள் கூறும் நல்நெறிகளை அன்னைபிள்ளைகளுக்குப் புகட்டுவதாகக் கூறப்படுகிறது. இதிலிருந்து அன்னை கற்றுத்தேர்ந்தவளாக இருக்கவேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறார் ஆசிரியர்.

கல்வி

சமுதாயம் முன்னேறமுறையான கல்விமுறை அவசியமாகிறது. ஒருசமுதாயத்தின் கல்வி வளர்ச்சியே, அச்சமுதாயத்தின் பிறவளர்ச்சி நிலைகளுக்கு அடித்தளமாய் அமைகிறது. நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதிலும் கல்விமுறையே அடித்தளமாகிறது. கல்வியின் தேவையானது சமுதாயம், நாட்டிற்கு மட்டுமின்றி அவரவர் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் முனைப்பாகஅமைகிறதுஎன்பதை,

“வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டின்
வாழ்க்கையில் கல்விநலம் சிறக்கவேண்டும்!”

(வாகைப் பூக்கள் - பக்.26)

எனும் கவிதைவரிகளில் தமிழறிஞர் மு.தங்கராசன் அவர்கள் பதிவுசெய்கிறார்.

“அறியாமை இருளும் நீங்கி
அகிலமே சிறக்கவேண்டும்!
.....
புதுப்புதுஞானம் தோன்றி
வெறித்தனம் விலகியோடி
விடியலால் சமுதாயந்தான்

புரிந்துகொள் புதுமைஞாலம்
பூமியில் தோன்றவேண்டும்!"
(வாகைப் பூக்கள் - பக்.27)

சீர்மிகுசமுதாயம் சிறப்புறஅமைய அறியாமை நீங்கி, புதுமை ஞானம் தோன்ற வேண்டும் என்று ஆசிரியர் இக்கவிதையில் விளக்குகிறார்.

அன்பு

இவ்வுலகம் 'அன்பு' என்றபண்பில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. மனிதன் சகமனிதனோடு மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களிடத்தும் அன்புடன் பழகவேண்டும். ஆனால் இன்றைய மனிதசமுதாயத்திலே அன்பானது அரிதாகி வருகிறது. மனிதநேயம், கருணை, நல்மதிப்பு போன்ற நற்பண்புகள் அனைத்திற்கும் அன்பு என்னும் பண்பே மூலதனமாகஅமைகிறது. சிறந்த சமுதாயம் உருவாக அன்பே வழிகாட்டியாய் அமைகிறது என்பதை,

"மனிதாபிமானத்துக்கும் மன்னுயிரைமதிப்பதற்கும்
மனிதநேயம் தழைப்பதற்கும் மானசீகஉறவுக்கும்
அணிகலனாய் நெஞ்சத்தில் அமைந்துவரும் அன்பேதான்
கனிவோடுகுழைந்துவரும் கருணைக்கும் காரணமாம்!"
(வாகைப் பூக்கள் - பக்.32)

என இக்கவிதையில் விளக்குகிறார் ஆசிரியர்.

நற்றொண்டாற்றுதல்

இன்றைய இயந்திர உலகில் ஒவ்வொரு மனிதனும் தன்னையும் மறந்து உழைத்துக் கொண்டிருக்கிறான். தன் அண்டை வீட்டாரின் முகம்கூட அறியாமல் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதவாழ்வில் பொதுநலம் பெரும்பான்மை குன்றிவிட்டது. ஆனால் சமுதாயம் முன்னேற பொதுநலம் அவசியம் என்பதனைஆசிரியர்,

"சமுதாயச் செழிப்புக்குசார்ந்துள்ள இனத்துக்கு .....
நற்றொண்டுஏற்புடனேசெய்துவந்தால்
குணக்குன்றுஎன்றேஇவ் வுலகுன்னைப் பாராட்டும்!"
(வாகைப் பூக்கள் - பக்.22)

என்னும் கவிதைவரிகளில் பதிவுசெய்கிறார்.

வாழ்க்கை நெறிமுறைகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி வாழ்க்கை அமைவுமுறை உண்டு. வாழ்க்கையை முன்னோர் வகுத்தநெறிகளுடன் திட்டமிட்டு வாழ்ந்தாலே சமுதாயத்தில் வெற்றி காணமுடியும். கடமைக்குப் பணிகளைச் செய்து,கட்டுப்பாடுகளின்றிக் குறிக்கோளில்லா வாழ்க்கை வாழ்ந்தால் சமுதாயத்தில் நிலைத்தவாழ்வு வாழ இயலாது. சமுதாயமும் வெற்றி காணமுடியாது. ஒவ்வொரு மனிதனின் போற்றுகின்ற வாழ்க்கைமுறையில் தான் சமுதாயத்தின் வெற்றிஅமைந்துள்ளது என்பதனை,

"திட்டமிட்டுத் தீர்மானித்துக் குறிக்கோளுடனே
இட்டஅடிஎடுத்துவைத்துஎழுச்சியோடு
கட்டுப்பாட் டுடனேநல் கண்ணியம் போற்றி
தொட்டுத்தொடர் நடைமுறையேதுலங்கும்
வாழ்க்கை!" (வாகைப் பூக்கள் - பக்.34)

என்று மு.தங்கராசன் அவர்கள் பாங்குறப் பதிவுசெய்துள்ளார்.

நிலையில்லா மானுடம்

நிலையான இவ்வுலகில் மனிதவாழ்க்கை நிலையில்லாதது. நிலையில்லா மனிதர்களுக் கிடையேயான வேற்றுமைகளானது நாட்டின் மக்கள் தொகையைவிட அதிகரித்துச் செல்கின்றன. நிலையில்லா மானுடப் பிறப்பில் ஏழை, பணக்காரன், ஏற்றம், தாழ்வு, முதலாளி, தொழிலாளி என்று பணத்தின் மீதும் பதவியின் மீதும் அவாகொண்டு அன்றாடவாழ்க்கையை வாழ மறுக்கின்றனர். நிலையில்லா மனித வாழ்வில் எவற்றின் மீதும் பற்றின்றி வாழவேண்டும் என்ற நிலையாமைக் கருத்தினை,

"பேருக்கும் புகழ்மாலைக்கும்
பெரிதுமேஅலைவார் தாமும்
பாருக்கேகணக்குதீர்க்கும்
காலன்கரம் பற்றிச் செல்வான்!"
(வாகைப் பூக்கள் - பக்.29)

எனும் கவிதைவரிகளில் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முடிவுரை

தமிழாசிரியர் மு.தங்கராசன் அவர்கள் 'வாகைப் பூக்கள்'என்றகவிதைத்தொகுப்பில் நற்சொற்களைக் கவிமாலையாகத் தொகுத்துச் சிறந்தவகையில் மக்களிடம் சென்றுசேரும் வண்ணம் படைத்துள்ளார். இக்கவிதைத் தொகுப்பு நூலில்,சமுதாயம் வாகை சூடுவதற்கான வழிமுறைகள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. பெற்றோர் கடமை, கல்வியின் இன்றியமையாமை, பொதுப் பணிப்பேணுதல், வாழ்க்கைநெறி, நிலையாமை போன்ற சமுதாயம் முன்னேறுவதற்கான கருத்துக்கள் மக்களின் சிந்தனைகளைக் கிளர்ந்தெழச் செய்வனவாக அமைகின்றன.

பார்வை நூல்கள்

மு. தங்கராசன், மு.,வாகைப் பூக்கள்,தமிழ்வேள் நாடகமன்றம்,சிங்கப்பூர், 2003.
மோகன்,இரா.,மணிவேல்,மு.,நாச்சிமுத்து,கி.,சேதுபாண்டியன்,தூ.,(ப.ஆ.), ஆய்வுக்கோவை,இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 2007.
சுப்பையா,சொ., கவிஞர் தங்கம் மூர்த்தி, (ப.ஆ.),ஆய்வுக்கோவை,உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், 2013.

மு. தங்கராசனின் அணிகலன் கவிதை காட்டும் சமூகப் பார்வை

மு னைவர் மு. இராஜலெட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை

முன்னுரை

இலக்கிய வடிவங்களில் ஒன்று கவிதை. இது பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரையிலும் கவிதை நடை போடுகிறது. இதன் **எ**ழுச்சி கிபி 19, 20 ஆம் நூற்றாண்டில் அதீத வளர்ச்சியைப் பெற்றது. நம் உணர்வில் தோன்றும் எண்ணங்களின் வித்துக்களை விரித்து சிந்தனை ஊற்றை பெருக்கச் செய்வது கவிதை எனலாம். அக்கவிதை சமுதாயத் தளத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை எடுத்து விளக்குவது ஒரு உன்னதக் கருவியாக செயல்படுகிறது. எனவே மு. தங்கராசனின் அணிகலன் கவிதைகளில் சமுதாயப் பார்வை என்னும் ஆய்வு பொருண்மையில் இக்கட்டுரை அமையப் பெறவுள்ளது.

ஆசிரியரும் கவிதையும்

தங்கராசன் திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி வட்டம் முருங்கபட்டி ஒன்றியத்தில் பாதர் பேட்டை என்னும் சிற்றூரில் 6/ 11/ 1934 அன்று பிறந்தார். திரு.ர. முத்து வீராசாமி நாயுடுக்கும் திருமதி. பொன்னம்மாளுக்கும் மகனாகத் தோன்றியவர். தனது இரண்டு வயதில் அன்னையை இழந்து சிற்றன்னையான இராஜம்மாள் பாட்டி அம்மணி அம்மாள் ஆகியோரின் அரவணைப்பில் வளர்ந்தார். இவரின் மனைவி செல்லம்மாள் ஆவார். இவருக்கு 4 மகன்கள் 2 மகள்கள்14 பேரன் பிள்ளைகள் ஆகியோர்கள் உள்ளனர். 15/01 /2021 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் 'ஒரு நடிகர் நாடகாசிரியர், மேடை நாடக இயக்குனர் கட்டுரையாளர் ஆய்வாளர் தொகுப்பாசிரியர் இலக்கியவாதி கவிஞர் சிறுகதை எழுத்தாளர் சமூகத் தொண்டர் என பன்முகத்தன்மை" உடையவராக இனம் காட்டப்படுகிறார். (எம்.கே., சிங்கப்பூர், அணிந்துரை- அணிகலன்: பக்: 10)

"அணிகலன்" என்ற கவிதை பெண்ணின் அணிகலன் போன்று பல்வேறு வகையான வாழ்வியல் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது, இக்கவிதைத் தொகுப்பில் முப்பது தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. கவிதைகள் அனைத்தும் வாழ்க்கையின் கூறுகளை எடுத்துக் காட்டுகின்றது கவிஞர் கண்ணோட்டத்தில் மட்டும் அல்லாமல் நடைமுறை உண்மைகளை புறக்கணித்து விடாமல் கூறுகின்றது. அதுபோல உலகியல், மனிதரின் நோக்கிலும் கருத்துக்களை கவிதைகளின் வாயிலாக கவிஞர் வெளிப்படுத்த முனைகின்றார்.

சமூகத் தொண்டு

பரந்த நிலப்பரப்பில் தங்களுடைய அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி கொண்டு ஒருங்கிணைந்து வாழ்கின்ற மக்கள் கூட்டமே சமுதாயம் எனலாம். இச்சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் தன்னலம் இல்லாமல் சமுதாயத்திற்கு தன்னால் இயன்ற அளவு சேவை செய்திட உதவும் மனப்பான்மையைத் தொண்டு என்று கூறலாம்.

'தொண்டாலல் துணையும் இல்லை தொண்ட லாது உயிருக்கு ஊதியம் இல்லை' என்ற வரிகள் தொண்டின் சிறப்பை அப்பர் பறைசாற்றுகின்றது. இன்பம் என்ற கவிதை தலைப்பில் ஒன்பது வகையான இன்பங்களை கவிஞர் நவில்கின்றர். அதில் கவிஞர் காணும் இன்பம் என்ற தொண்டினை கூறுகின்றார். உலகில் பலவிதமான இன்பங்கள் நிலவுகின்றன. அதில் உலகத்தில் உள்ள உயிர்களுக்கும் தமிழரின் வாழ்வு உணர்வுக்கும் தொண்டு எவ்வளவு அவசியம் என்பதே கவிதையின் வாயிலாக வெளிப்படுத்த முனைகின்றார் கவிஞர். அனைவரின் நலம் காக்க புறப்பட்ட நற்றலைவர்கள் அன்பு கொண்டவர்கள். சான்றோர்கள் அனைவரும் தொண்டு செய்யும் அன்பர்கள. அவர்களின் கால்களைப் பணிந்து செயல்படவே நான் கண்ட இன்பம் என்று சமூகத்தொண்டு என்பதை கவிதையின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். இதனை கவிதை,

"உலகத்தின் உயர்வுக்கும் ஒண்டமிழன் வாழ்வு உய்வுக்கும் தமிழர்களை உணர்ச்சி பெறச் செய்து

நலம் காக்க புறப்பட்ட நற்றலைவர் அன்பு

நனி சான்ரா சாரங்க பாடியவர் சொல்லின்

நலங்காக்கத் தாள் பணிந்து செயல்படவே நாளும்

நாடுவதே நானிலத்தில் நான் கண்ட இன்பம்" (அணிகலன் பக்:162)

என்று தன் கவிதையில் தான் கண்ட இன்பமான தொண்டை குறிப்பிடுகிறார். நல்லவர்களாக வாழ்பவர்களுக்கு இவ்வுலகில் புகழ் உண்டு மற்றவர்களுக்கு இல்லை என்பதே புறநானூறு பாடல்,

"இவன் இசை யுடையோரர்க்கு கல்லது அனைத்தும்

உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை" (புறம் - 50)

என்று குறிப்பிடுகிறது.

கற்பின் திண்மை

பூவாத முல்லை என்னும் கவிதை சிறுகதை சித்தரிப்பால் அமையப்பெற்றுள்ளது. இக்கவிதையில் கவிஞரின் உள்ள கூற்றை நன்கு அறியமுடிகிறது. தேவதை என்னும் கவிதையில் 'கட்டழகு கூந்தலது கார்மேகம் போல" என்ற கவிதையைத் தொடங்கி கட்டுண்டே காதோடு நின்றனவே கனியுதடும் முத்துப்பல் கொத்து மலர்ப் பாவை' என்று பெண்ணை அழகு சொற்களில் வர்ணித்து கவிஞர் கூறுகின்றார். அதற்கு அடுத்த நிலையில் பெண்ணின் கற்பின் திண்மையை எடுத்துக் கூறுகிறார்.

"கட்டுடலும் மின்னிடையும் கண்ணகியின் மாண்பும்

கணிமொழி பேச்சாகும் கட்டாக பெற்றாள்' (அணிகலன்: பக் :149)

என்று கூறுகிறார். இக்கவிதையில் பெண்ணின் கற்பின் திண்ணையை திறம்பட புனைந்து கூறுகின்றார். முதல் கவிதையில் பெண்ணை வர்ணித்து புகழ்ந்து கூறிய கவிஞர், அதே வேளையில் கற்பின் பெருமையே போற்றும் இயல்பை காணமுடிகிறது. இதனை தொல்காப்பியம்.

"உயிரினும் சிறந்தன்று நானே; நாணினும்

செயிர்தீர் காட்சிக கற்புச் சிறந்தன்று" (தொல்: களவு: 23)

என்று கூறுகிறது. அதுபோல திருக்குறளும் பெண்ணின் கற்பை

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின் " (குறள் :54)

என்று கூறுகிறது.

உலகியல் சமரசம்

வெற்றி தோல்வி என்னும் கவிதை தலைப்பில் பல்வேறான கோணங்களில் கவிஞர் தன் பார்வையைப் புதைக்கின்றார். இக்கவிதை வரிகளில் மனிதர்களின் வெற்றி தோல்வியை விரிவாக பேசுகின்றது. கவிதைத் தொடரில் தேன் கூட்டில் உள்ள தேனை எடுப்பது மனிதர்களுக்கு வெற்றி. அதுபோல தேன் கூட்டில் உள்ள தேனீக்களுக்கு அது தோல்வியாக அமைகிறது. கவிதை வாசிக்கும்போது சிந்தனைக்கு பலவிதத்தில் விருந்தாக உள்ளது. இதனை கவிதை,

"போந்தாறு தோல்வியிலும் பொலியப் பார்த்து
பொறுத்தின்னோர் மரத்தில் போகும் தஞ்சம்" (அணிகலன்:பக்:110)

என்ற கவிதை வெற்றி தோல்வியை விளக்கும் கருத்துள்ள பாடலாக கவிஞர் புனைந்துள்ளார். இதனை தொடர்ந்து 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்ற வரிகள் நல்ல சிந்தனைக்கு உணவாக திகழ்கிறது. மனிதனின் வெற்றி ஒருவருக்கு இன்பத்தையும் தோல்வி மற்றொருவருக்கு துன்பத்தையும் கொடுக்கும் என்ற உலகியல் உண்மையை எடுத்து கூறுகிறது.

தோல்விதான் வெற்றிக்கு முதல் படி. முதற்படியை எடுத்துவைக்க துவளாத நெஞ்சத்தைப் பெறுதல் வேண்டும். தோல்வியை எதிர்கொண்டு துணிந்து செயல்பட்டால் வெற்றி என்னும் மலர் பாதையினை அடையலாம். ஒருவர் செய்யும் செயல்கள் அனைத்தும் பொன்னாக மாறும் என்பதை,

"தோல்வியினை எதிர்கொண்டடே துணிவும்
தொட்டதெலாம் பொன்னாகும்"
(அணிகலன்: பக்:107)

என்று கூறுகிறது. எனவே எது வெற்றி? எது தோல்வி? என்று தெரியாதவர்கள் மேதைகள். இப்பேதையினர் எது வெற்றி தெரியாமல் இது தான் வெற்றி என எண்ணி மகிழ்வது தவறான ஒன்றாகும். எது வெற்றி என்று சான்றோர்களுக்கு தெரியும். இதனை கவிதை ,

"அது வெற்றி அலவென்றே அறியும் சான்றோர்
அதிசயித்துப் பார்த்துவிடுவார் அறுக்கத் தோழடே
முது வெற்றி எங்கென்றே முனைப்பு வேண்டும்
முளைத்திட்ட காளான்கள் முழுமை அல்ல!"
(அணிகலன்:பக்:108)

என்கிறரார். முனைப்பு என்றால் முயற்சி. இதனை வள்ளுவம்

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும் " (குறள்:619)

என்கிறது.

பகையும் உறவும்

உலகில் வாழும் மக்கள் அன்பால் கட்டுண்டவர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றின் வரிக்குச் சொந்தம் உடையவர்கள். இவ்வுலகில் பிறந்தவர்கள் அனைவரும் உறவு என்ற பாலத்தில் பயணப் பட்டவர்கள். இவர்கள் உதவி செய்யும் மனம் உடையவராக காணப்படுவார்கள். உறவு , பகை என்ற இரு தளத்தில் வாழ்வியல் நோக்கில் இயங்குபவர்கள். ஆண்டவன் படைப்பில் உயர்வு தாழ்வு இன்றி அனைவரும் சமமானவர்கள். உலகில் பகைகள் ஏதும் இல்லை. உறவுக்கு இடையில் பூசல்கள் நிகழ்கின்றன. அதனால் உறவுக்கு இடையே பகை ஏற்படுகிறது என்பதை அழகாக கவிஞர்

வர்ணித்து புனைந்து கவிதைகளில் கையாளுகின்றார்.

"ஆண்டவன் படைப்பில் ஆமாம்
அழிபகை இருந்த லூாண்டோ?.
காண்டகு உறவுப் பூசல்
.....
நீண்ட வன் இயங்கும் நீர்மை
நெடும் புவி உரைக்கும் நேர்மை"
(அணிகலன்: பக்: 105)

என்று கவிதை குறிப்பிடுகிறது. உறவு குறித்து அவ்வையார்

"கொட்டிலும் ஆம்பலும் நெய்தலும் போலவே
கட்டி உறவார் உறவு" (மூதுரை : பா :17)

என்று உறவின் மேன்மையை மூதுரையின் வாயிலாக கூறுகின்றார்.

இறை நம்பிக்கை

ஒவ்வொரு மனிதன் நம்பிக்கையின் அடிப்படையில் எங்கு கின்றான் ஒவ்வொரு நாளும் விடியும் என்ற நம்பிக்கையே உறங்கி அழிக்கின்றான் இறைவன் உறவு நண்பர் சமூகம் இவையெல்லாம் நம்பிக்கை மீது செயல்படுகிறது சங்க காலத்தில் தொடங்கி இன்றைய காலம் வரையில் நம்பிக்கை வழி தடத்தில் மனிதன் பயணப்பட்டு கொண்டிருக்கின்றான் அவ்வாறான நம்பிக்கையே கவிஞர் இறைவன் மீது வைத்து கூறும் கவிதையே,

"மறை மொழியின் அருட்கூர்மை மலர்ந்தால் அந்த
மன்னுதிரு நம்பிக்கை மருட்சி நீக்கும்!
இறையருளில் நம்பிக்கை இருக்கப் பெற்றாள்
எந்நாளும் மனவமைதி இலங்கக் காண்போம்" (அணிகலன்:பக்: 112)

என்று கவிஞர் கூறுகிறார் இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கையே நமக்கு மன அமைதியை கொடுக்கும் என்று கவிதையின் வாயிலாக அறிய முடிகிறது

முடிவுரை

மு.தங்கராசன் தான் கண்ட சமூகத்தை கவிதைகளில் பதிவு செய்கின்றார். மனிதர்கள் சமூகத்தில் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதன் அடிப்படையில் இருந்து வெற்றி தோல்வி நிலைப்பாட்டையும் குறிப்பிடுகிறார். சமூகத்தில் கொள்ளும் உறவு பகை போன்ற கருத்தாக்கங்களையும் கவிதைகளில் கவிஞர் பதிவு செய்கின்றார். அதுபோல பெண்ணின் அழகை மெருகூட்டி காட்டி, பின்னர் கற்பின் திண்மை அழகாக வடித்து காட்டுகின்றார். அதுபோல சமூகத்தில் வேதங்களின் அருள் கூர்மையையும் அதன்மூலம் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதால் மனம் அமைதியை நாடும் என்ற கருத்தையும் பதிவு செய்யப்பட்டு உள்ளது. எனவே கவிஞர் கண்ட சமூகத்தின் நிலையை கவிதைகளில் அழகுடன் செதுக்கி சமூகத்தின் மாற்றத்தை நயத்தோடு எடுத்துக் காட்டுகின்றார்.

துணைநூற் பட்டியல்

மு.தங்கராசன்- அணிகலன் -நூலகம் நாச்சியார் கோயில் தஞ்சை மாவட்டம். முதற் பதிப்பு :ஆகஸ்ட் 19 85.

வேங்கடசாமி நாட்டார்-அவ்வையார் அருளிய மூதுரை - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 600 001. ஒன்பதாவது பதிப்பு : சனவரி 1950.

வரதராசனார்- திருக்குறள்- சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம். முதல் பதிப்பு மே-1949.

ச.வே.சுப்பிரமணியன்--தொல்காப்பியம்- மணிவாசகர் பதிப்பகம்-சனவரி-2003

மு. தங்கராசனின் "தமிழ் எங்கள் உயிர்" என்னும் கட்டுரைத் தொகுப்பில் பழமொழிகள்

முனைவர் த. அமுதா
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), வேலூர்

முன்னுரை

இலக்கியத்தில் ஓர் அங்கமாகக் காணப்படுவது பழமொழி ஆகும். அனுபவ அறிவைச் சுருக்கிய சொற்களால் வழங்குவதே பழமொழியின் நோக்கமும் செயலுமாகும். பழமொழிகளைப் பொதுமக்களின் உள்ளங்களில் பூத்த ஒருவரிக் கவிதைகள் எனலாம். கவிதைகளுக்குரிய எதுகை, மோனை, யாப்பமைதி, அணியழகுகளுடன் அவை திகழ்கின்றன. பொது மக்களின் வாழ்க்கையனுபவங்களின் பிழிவே பழமொழிகளாக உருப்பெறுகின்றன.. ஓர் அனுபவமொழி உருவானவுடனே அது பழமொழி என்ற தகுதியைப் பெற்று விடுவதில்லை. அது காலங் காலமாகப் பல்லாயிரக்கானவர்களின் நாவில் நடமாடிப் பின் செம்மையான வடிவத்தினைப் பெற்று வாழ்கின்றது. தங்கள் வாழ்க்கையில் ஏதாவதொரு சமயத்தில் பழமொழிகளைப் பயன்படுத்தாதவரோ கேள்விப்படாதாரோ ஒருவரும் இல்லை எனலாம். அதனால் அவற்றைக் குடிமக்களின் கவிதை வாரிகள் எனலாம்.

பலபேர்களுடைய கூட்டு அனுபவப் பிழிவாக இருப்பதால் பழமொழிகள் மக்களின் நெஞ்சிலும் நாவிலும் நிலைபெறுகின்றன. பழமொழிகள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருப்பதால் அவை சமுதாய மக்களின் மனப்போக்குகளுக்கு ஏற்ப அமைந்துவிடுகின்றன் அதனால் அவை சமுதாய வரலாற்றிற்குத் துணைபுரிவனவக உள்ளன.

ஆசிரியரின் சமுதாய அக்கறை

விரைந்துபட்ட தகவல் தொடர்புகளும் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் மனித வாழ்க்கையை வெகு வேகமாக மாற்றி வருகின்றன. சிற்றூர் இயம் (கிராமியம்) என்னும் ஒன்றே இல்லாமல் போய்விடுமோ என்னும் அளவிற்கு இவற்றின் வேர்கள் பரந்தும், ஆழ்ந்தும் செல்கின்றன. சிற்றூர் மக்களின் சிந்தனைத் தடங்களின் தடயங்களாக விளங்கும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியவற்றின் ஊற்றுக் கண்கள் வேகமாக அடைபட்டுக் கொண்டிருக்கின்றன. வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் மட்டுமன்றி, முரண்பட்ட பொருளாதார அமைப்புக் களங்களும் சிற்றூர் மக்களின் மன நிலையை அலைக்கழித்து வருகின்றன. இந்திய அரசால் வார்ப்புச் செய்யப்பட்ட பணம் என்னும் ஒன்று இருப்பதையும் இன்று வரை அறியாமல் பண்டமாற்று ஒன்றையே அறிந்து

வாழ்க்கையை நடத்தும் பழங்குடி மக்களும் இந்தியாவில் இன்றும் வாழ்கின்றனர். அதே வேளையில், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களால் ஈர்க்கப்பட்டு மன அளவில் அவர்கள் புதுமுறை மனிதர்களாக உலா வறுகின்றனர். இனமரபுக் குழுக்களும், வட்டார மொழி பேசும் மக்களும், சிற்றூர் மக்களும் மேற்கொண்டொழுகும் மரபு சார் நிலைகளைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாய முன் எப்போதையும் விட இப்போது மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, மொழி ஊடகங்களாக விளங்கும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் விடுகதைகள், பழமொழிகள் ஆகியவற்றை மொழி நலம் கருதியும், மொழி வளம் சேர்க்கவும் தொகுத்து நெறிப்படுத்துவது இச்சமுதாய மக்களின் கடமை என்று பன்முகம் கொண்ட பண்பாளர் மு.தங்கராசனார் தமது மேடைப்பேச்சில் பழமொழியைக் கையாளுகின்றார்

உறவின் தோற்றம்

“வீட்டில் பெற்றோர் – உற்றார் உறவினர் – சுற்றத்தார் – சகோதரர் ஆகியோரிடம் பணிவோடும், மரியாதையோடும், அன்போடும், பண்போடும், அடக்கத்தோடும், பழக நன்றாய் எரிகின்ற விளக்காய் இருந்தாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்” என்பதற் கேற்ப, பெற்றோர்கள் தூண்டுகோலாக இருப்பது நற்குடி மக்களை உருவாக்க வழிவகுக்கும்.

பணிவன்பு என்பது ஒரு வாழ்க்கை நெறி அதனை ஒரு மாயா ஜாலம் போல் கைவரப்பெற முடியாது. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” – தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று பழமொழிகள் கூறுவார்கள் என்று தமிழ் எங்கள் உயிர் என்னும் கட்டுரைத்தொகுப்பில் உறவுமுறையின் அவசியத்தை எடுத்துரைக்கிறார். (த.எ.உ. ப. 16)

மனிதன் சுதந்திரமானவன். அவன் உறவென்னும் சங்கிலியால் பிணிக்கப் பட்டிருக்கிறான் என்பர் அறிஞர். அக்கூற்றிற்கேற்ப நாடோடியாக திரிந்த மனிதனுக்கு நிலைத்த வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள அமைந்த காரணங்கள் பலவாகும். அவற்றில் இன்றியமையாதது உறவு அமைப்பும் ஒன்றாகும். இவ்வுறவு அமைப்பானது ஒவ்வொரு தனி மனிதனுடைய பலத்திற்கும் பலவீனத்திற்கும் துணை நிற்கலாயின. அவை உரிமைகள், கடமைகள், ஒழுங்கு ஆகியவற்றிற்கு வித்திட்டன. மேலும் மண், பொன் பெண் ஆகிய மூவாசைகளுள் அவனிடத்தில் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணிகளாகவும் அமைந்திருந்தன எனில் மிகையன்று.

மனித உறவுகள் பலவகைப்படும் ஆயினும், இவற்றை கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என இருவகையாகப் பாகுபடுத்தலாம். கூட்டுக் குடும்பத்தில் கணவன் – மனைவி தாய்-தந்தை, மக்கள், அண்ணன் தம்பி, அக்காள்- தங்கை, தாத்தா- பாட்டி எனும் நிலையில் உறவுகள் காணப்படும். தனிக்குடும்ப அமைப்பில் கணவன் – மனைவி, பிள்ளைகள் எனும் உறவுநிலை மட்டுமே உண்டு. இவர்களைத் தவிர பிற உறவுகளை பங்காளி உறவுகள், முறைமை உறவுகள் என்னும் வகைப் படுத்தலாம். இதில் உறவுகள் எப்படி இருக்கிறது என்பதை தமிழ் எங்கள் உயிர்

கட்டுரைத் தொகுப்பில் ஆசிரியர் மு. தங்கராசன் மிக அழகாக கீழ்க்காணுமாறு மிக துல்லியமாக படம் பிடித்து காட்டுகிறார்.

பிள்ளை உறவு

பிறப்புக்குக் காரணமாகிய தந்தையோ பிள்ளைக் கலி தீர்க்க வந்த பெரும் பெட்டகம்" எனப் போற்றி தன் படர்ந்த மார் மீது அடர்ந்த தோள் மீதும் போட்டு வளர்த்து வளர்ந்த பின் பள்ளிக்கு அனுப்பி கல்வியறிவு பெறச் செய்கின்றார். இரவு பகல் பாராது அரும்பாடுபட்டு உழைத்து வந்து, விரும்பும் பொருளெல்லாம் விளைத்துத் தந்து உருவாக்கி திருவாக்கி வீடுகின்றார். பெருந் தெய்வமாம் தந்தை

இத்தகையவாறு அரும்பாடுபட்டு வளர்த்து ஆளாக்குகின்ற தந்தையும் தாயுமே தெய்வங்கள் என்பதனை அருந்தமிழ்ப் பாட்டி ஔவை மூதாட்டி" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்றார் ஒரு மகன் முதலில் தாய், பின் தந்தை அதன்பின் ஆசிரியர், அதற்கும் பிறகுதான் தெய்வம் என்பது அறிமுகமாகிறது.

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம் – மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்! என்றார். உலகநீதி அருளிய உலகநாத முதலியார் ஆகவே, தாயில்லாமல் நானில்லை – தனியே எவரும் பிறந்ததில்லை – எனக்கு ஒரு தாய் இருக்கின்றாள் என்ற பாடலுக்கேற்ப தாயை மறவாமை வேண்டும்.

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பது தமிழ்கூற்று நல்லுலகம் போற்றும் பொன்னுரையாகும் "மாதாவின் காலடியே சொர்க்கம்" என்று கூறினார் மார்க்கநெறிப் பேரொளி அண்ணல் நபிகள் நாயகம்.

இவ்வாறு இலக்கியங்களும் இதிகாசங்களும் தந்தை – தாயரின் பெருமைகள் பேசுகின்றன. ஆனால், இவ்விருபதாம் நூற்றாண்டின் எழில்மிக்க நாகரிக வளர்ச்சிலே திளைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிலர் – ஏன்? இப்போது மிகப் பலர் என்றே குறிப்பிடலாம்.

தங்களின் தாய் தந்தையரை அவர் களுடைய முதுமைக் காலத்தில் தங்கள் நிழலில் தங்களது பாதுகாப்பில் வைத்துப் போற்றிப் பாதுகாக்காமல் முதியோர் இல்லங்களில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகின்றனர்.

பேர் சொல்லப் பிள்ளை வேண்டும் – வாரிசு வேண்டம் என்று துடித்தவர்கள் அனாதை களாய் ஆதரவற்றைவர்களாய் ஆக்கப்படும் விசித்திரம்தான் இன்று நிகழ்ந்து கொண்டிருக் கின்றது.

இன்றென்ன என்பதிலே இறுமாத்து விடும் உலகம் இது "நாளை நமக்கும் இந்தக் கதி தானு வரும்" என்று சிந்திக்கத் தவறுவதால்தான் இந்த நிலை.

பாட்டனுக்குத் கஞ்சி வார்க்கும் திருவோட்டை மறைத்து வைத்த சிறுவனிடம் ஏன் மறைத்து வைத்தாய் என்று கேட்ட இளம் தந்தைக்கு மகன் கூறிய பதில் என்ன தெரியுமா? உனக்குக் கஞ்சி ஊற்ற இப்போதே திருவோடைச் சேகரித்து வைத்தேன் என்பதுதான் தம் உள்ளங்களில் இடம் இல்லாக் காரணத்தால் முதியோர் இல்லங்களில் தாய் மந்தையரைக் கொண்டு சென்று அனாதைகளாய் விட்டு விடும் இயம்

இல்லறத்தாருக்கு ஒன்றை நினைவுபடுத்த நினைக்கின்றேன்.

"காவோலை வீழக் குருத்தோலை சிரிக்குமாம்" என்பது பழமொழி அந்தக் குருத்தோரையும் ஒருநாள் காவோலையாகும் விசித்திரம் தொடர்ந்திடும் பெருமை வாய்ந்த இந்த உலகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை மறந்து விடாமல் பெற்ற தாயையும், பேணிப் பாதுகாத்த தந்தையையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். என்று தமிழ் எங்கள் உயிர் என்னும் கட்டுரைத் தொகுப்பில் ஆசிரியர் மகன் வளர்ந்த அவன் தந்தைக்கு திருவோட்டை எடுத்து வைக்கும் காட்சியை அழகாக படம் பிடித்துக்காட்டுகிறார் (த.எ.உ. ப.87)

நம்பிக்கை

நாம் எண்ணுகின்ற எண்ணம் தான் வாழ்க்கை என்பதை நம்பிக்கை ஊட்டும் வகையில் தாம் கட்டுதைத் தொகுப்பில் "முடியாது என்றொரு செய்கை இருக்குமானால் இந்த முட்டாள் தனமான வார்த்தையை என்னிடம் சொல்லாதே" என்று முழுங்கினார் ஆங்கிலப் பேரறிஞர் வாங் பெல்லோ இந்தப் பொன்மொழி மனித குலத்திற்கு மாணவ சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கையூட்டும் ஓர் அறைகூவலாகும். "மனம் உண்டானால் மார்க்கம் உண்டு" என்ற மாண்புமிகு பொன்மொழி போற்றி மனத் திண்மையுடன் தன்னம்பிக்கை கொண்டு தளரா முனைப்பும் தாழா மும்முரமும் காட்டினால் தகுதிக்கண் வெற்றி தான்வந்து சேரும்..! என்கிறார் ஆசிரியர்.(த.எ.உ. ப. 93)

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்"குறள். எண் (ப.616)

என்று திருவள்ளுவர் கூறுகின்றறார். தன்னம்பிக்கையோடு கூடிய மனித முயற்சியே வாழ்வின் வெற்றிகளைக் கொண்ர்ந்து குவிக்கும் என்பது உலகளாவிய ஆன்றோர்களின் ஒருமித்த கருத்தாகும் என்கிறார் ஆசிரியர் மு. தங்கராசன்

பழமொழியைத் தவறாகப் புரிதல்

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்னும் பொன்மொழியைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் அதனைப் பெரும் போதனையாய் ஏற்றுக்கொண்ட பேதைமைப் போக்கமைந்த நோக்கு! அடுத்தவர்தம் சிறந்த வாழ்க்கையைப் பார்த்து அழுக்காறு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்னும் ஒழுக்கம் நிறைந்த உயர்ந்த சிந்தனைகளைத் தோற்றுவிப்பதற்காகக் கூறப்பட்டதே இந்தப் "போதுமென்ற மனமே பொன்சேய்யும் மருந்து" என்னும் பொன்மொழி ஆகும் என்று ஆசிரியர் தம் கட்டுரைத் தொகுப்பில் விளக்கியுள்ளார். (த எ. உ. ப. 96)

முடிவுரை

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று தமது உரையில் முழங்கியவர். மு. தங்கராசனார் மலேசியா, சிங்கப்பூர் கல்விக்கூடங்களிலும் ஏடுகளிலும், இசையிலும் என தமிழ் உரிய இடத்தை பெறவேண்டும் என்று அயராது உழைத்து எப்பொழுதும் செயல்பட்டார். மலேசியா, சிங்கப்பூர் தமிழின் இன்றைய நிலையை சுட்டிக்காட்டி அந்த நிலைமையை மாற்றியமைத்து புதியோர் உலகம் செய்வோம், தமிழுக்குப் புத்துயிர் ஊட்டுவோம்

என்கின்றார். அதற்கு ஒரே வழி எல்லாத துறைகளிலும் தமிழுக்கு உரிய இடத்தைப் பெறச் செய்வதற்கு தமது உரையின் மூலம் தமது தமிழ் ஆர்வத்தை மக்களிடையே புகட்டினார். மக்களிடம் எளிய வழி சென்றடைய தமது உரையின் இடை இடையே பழமொழியைக் கையாண்டார்.

பயன்பட்ட நூல்கள்

மு.தங்கராசன் **தமிழ் எங்கள் உயிர்**
தமிழவேள் நாடக மன்றம்
பிளாக் 733.# 03-308
யஸியுன் அவனிவு
சிங்கப்பூர் 760 733

திருவள்ளுவர் **திருக்குறள்**
நர்மதா வெளியீடு
தி. நகர் சென்னை 17

“மலர்கொத்து” சிறுகதைகளில் வாழ்வியல்

முனைவர் வெ.பரிமளம்
உதவிப்பேராசிரியர், தமிழ்இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

முன்னுரை

முதுபெரும் தமிழாசிரியர் மு.தங்கராசன் அவர்கள் இந்தியாவில் பிறந்தவர். தனது மூன்றாம் வயதில் மலாயவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். 1960 இல் தன் ஆசிரியப் பணியைத் தொடங்கியவர். பல்வேறு விருதுகளைப் பெற்றவர். தமிழாசிரியர்கள் முன்னேற வேண்டும் என்ற விரும்பித் தமிழாசிரியர் சங்கத்திற்கு தூணாக விளங்கினார். தன்னம்பிக்கை ஊட்டும் ஆசிரியராக விளங்கியவர். சிறுகதைத் தொகுப்புகள்,கட்டுரைகள், கவிதைகள் உள்ளிட்ட பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். அவரின் மலர்கொத்து என்னும் சிறுகதை பத்துச் சிறுகதைகளை உள்ளடக்கியதாகும். அதில் ஆசிரியர் பதிவிட்டுள்ள வாழ்வியல் கூறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வறுமை

மனிதன் வாழ அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இதில் குறைவு ஏற்படும் போது தான் மனிதன் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றான். அத்தகைய இல்லாத நிலையே வறுமை எனப்படுகிறது. வறுமை என்பது மிகவும் கொடுமை யானதாகும். அதுவும் இளமையில் வறுமை மிக கொடுமையானது.

கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை என்கிறார் ஔவையார். “உயிர்நண்பன்” கதையில் தயாநிதி என்பவர் இறந்துவிட்டார். நல்ல வேலையில் இருந்ததால் கடன் வாங்கி வீடு கட்டியிருந்தார். அவர் திடீரென இறந்துவிடுகிறார். அதனால் கடன் சுமை அதிகமாகிறது. அச்சூழலில் தயாநிதி தவறான தொழிலுக்கு செல்கிறான். அவன் அத்தொழிலுக்கு சென்றதற்கான தன்னிலை விளக்கமாக “குடும்பத்தின் வறுமை நிலை என்னைக் குடையத் தொடங்கியது.. என்னுடைய படிப்பு முடிந்து நான் வேலை செய்து கொண்டு வரப்போகும் வருமானத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்”(பக் -10) என்று குடும்பத்தின் வறுமை நிலையால் ஏற்பட்ட மாற்றத்தைச்சுட்டியுள்ளார்.

போதை மருத்துக்கடத்தல்

“உயிர்நண்பன்” கதையில் தயாநிதி போதை மருந்து வியாபாரம் செய்கிறான். அதைக்கண்ட அவன் நண்பன் ” பாவகரமான காரியங்களைச் செய்து பொருளீட்டிப் பணக்காரனாய் வாழ்வதைக் காட்டிலும் நீ வறுமையில் வாடி நீ செத்து போ ”(பக் -12) என்ற மேற்கோளைக் காட்டித் தவறான தொழிலைச் செய்யக்கூடாது என்று வலியுறுத்துகிறான்.

நட்பு

இலக்கியங்கள் குறிப்பிடும் உறவு வகைகளில் சிறப்பிடம் பெறுவது நட்பாகும். நட்பிற்காக திருவள்ளுவர் நான்கு அதிகாரங்களை வகுத்துள்ளார். நட்பை,

முகநக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள் 786)

என்கிறார் திருவள்ளுவர். தயாநிதி போதை மருந்துக் கடத்தல் செய்கிறான் என்பதை அறிந்த அவன் நண்பன் அஞ்சப்பன் தன் நண்பனை காவல்துறையினரிடம் இருந்து காப்பாற்றி அவனை நல்வழிப்படுத்துகிறான்.

உடுக்கை இழந்தவன் கைபோல அங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் 788)

என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்ததை "உயிர்நண்பன்" கதை விளக்குகிறது.

தாயன்பும் நேர்மையும்

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே (புறம், 312) என்கிறது புறநானூறு. பெற்று வளர்த்து சமுதாயத்தில் நல்ல மனிதனாக உலவ விடுவது தாயின் கடமையாகும். ஆனால் "உயிர்நண்பன்" கதையில் வரும் தயாநிதி குடும்பச் சூழல் காரணமாக போதைப்பொருளைக் கடத்தி பணம் சம்பாதிக்கிறான். அதை அறிந்த பின்பு அவன் தாய் அப்பணத்தில் வாழ்ந்ததை நினைத்து வருந்தி வீட்டை விட்டு வெளியேறி துப்புரவுப் பணி செய்து தன் வாழ்க்கையை நடத்துகிறார். இச்செயல் தாயின் நேர்மையை விளக்குகிறது.

தாய், தம்பி, தங்கை என்று பாசமான குடும்பத்தில் பிறந்த ராஜன் தங்கம் என்னும் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொள்கிறான். ராஜனின் தாய்க்கும் தங்கத்திற்கும் ஒத்து வராத காரணத்தால் ராஜன் தனிக்குடித்தனம் செல்கிறான். அதை நினைத்து அவன் தாய் வேதனையடைகிறாள். அவனுக்கு குழந்தை பிறக்கிறது. அக்குழந்தையை ராஜன் தன் தாயிடம் காண்பிக்கவில்லை. அதை நினைத்து மிகுந்த வேதனையடைகிறாள். "அன்னையின் குமுறல்" என்னும் கதையில் தாயின் பாசமும் மகனின் பாசமற்ற தன்மையும் குறிக்கப்பட்டுள்ளது.

குழந்தை

குழந்தையை ஒரு செல்வமாகக் கருதுவது தமிழகத்தின் பண்பு. தம் மக்களே தங்களின் பொருள் என்று கருதும் நிலை இன்று வரை உள்ளது.

குழல்இனிது யாழ்இனிது என்பர் தம்மக்கள்
மழலை சொல் கேளாதவர் (குறள் 66)

என்கிறது திருக்குறள். அத்தகைய குழந்தைச் செல்வத்தைப் பெறாதவர்களைச் சமூகம் மிகவும் கீழ்த்தரமாக பேசுவதைக் காணமுடிகிறது. ஆணுக்கு குறையிருந்தாலும் அதில் பெண்ணே பாதிக்கப்படுகிறாள். மலடி என்று பெயர் பெறுகிறாள். சமுதாயம் மற்றும் குடும்பத்தின் அவச் சொல்லக்கு ஆளாகிறாள். குழந்தை இல்லை என்றால் வேறு திருமணம் செய்யும் ஆண்களும் உள்ளனர். குழந்தை இல்லையென்றால் பெணகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். "மலடி" என்னும் கதையில் வரும் வள்ளி என்னும் கதாபாத்திரத்திற்கு குழந்தை இல்லை. மாமியார் உள்ளிட்ட அனைவரும் அவளை வார்த்தைகளால் துன்புறுத்துகின்றனர். ஊரார் அவளை மலடி என்று பேசுவதைக் கேட்டு இழி சொற்கள் தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறாள்.அவளின் கணவனுக்கு தான் குறை என்பது அவள் இறந்த பின்பு தான் தெரிகிறது. குழந்தையின்மைக்கு பெண்

காரணம் இல்லை என்றாலும் தண்டனையை பெண்ணே அனுபவிக்க வேண்டியுள்ளது என்பதை "மலடி" என்னும் கதை புலப்படுத்துகிறது.

கற்பு

கற்பு என்பது பெண்ணை அதிகாரத்தடன் இயக்குகிறது. சங்க காலத்தில் கற்பு என்னும் சொல் திருமண வாழ்க்கைக்கு பின்னர் வாழும் வாழ்க்கையைக் குறிக்கிறது..திருமணத்திற்கு முன்பே காதலென்னும் பெயராலும் பலாத்கரத்தின் பெயராலும் பெண்கள் தங்கள் கற்பை இழக்கின்றனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் சமுதாயத்தில் தவறு செய்கின்றவர்களாக "சிரித்தவள்" என்னும் கதையில் வரும் செல்வமதியும் மோகனும் அமைகின்றனர். திருமணத்திற்கு முன்னரே நெருங்கிப் பழகுகின்றனர். தன் அண்ணனுடன் செல்வமி வெளியே செல்லும் போது அதை பார்த்த மோகன் அவளை தவறாக நினைத்து அவளை விட்டு பிரிந்து செல்கிறான். ஆணும் பெண்ணும் சேர்ந்து சென்றால் காதல் என்றும் நினைக்கும் சமுதாயத்தின் மனநிலை சுட்டப்பட்டுள்ளது.

பலரைக் காதலிக்கும் மனநிலை உள்ளவளாக செல்வமதி இருக்கிறாள். இத்தகைய தன்மையுடைய பெண்களும் சமுதாயத்தில் இருக்கின்றனர் என்றாலும் இக்கதாபாத்திரம் ஏற்றுக் கொள்ளமுடியாததாகவே இருக்கிறது.

"குப்பையிலே குன்றுமணி "என்னும் கதையில் வரும் வேலனின் மனைவி பத்மினி. அவள் வேலனின் நண்பனோடு சேர்ந்து தவறு செய்கிறாள். அதைக்கண்ட வேலன் அவர்கள் இருவரையும் சேர்ந்து வைத்துவிடுகிறான். மனைவி தவறு செய்கின்ற போதும் அதை பற்றிக் குறை கூறாமல் தன் மனைவியின் உணர்வுகளை மதித்து அவளைதன் நண்பனுடன் சேர்த்து வைத்து விடுகிறான். சமுதாயத்தில் உள்ள வழக்கங்களை மாற்றி அமைக்கும் தன்மையுடையவனாக புரட்சிகரமாக வேலன் செய்யப்பட்டாலும் அவனின் மனைவி கணவன் முன் தவறு செய்வது என்பது அவளின் கீழான நிலையைச் சுட்டுகிறது. கற்பு என்று சொல்ல வந்தால் அதை இருகட்சிக்கு பொதுவில் வைப்போம் என்ற பாரதியின் வரிகள் ஆணுக்கு மட்டுமன்றி பெண்களுக்கும் பொருந்தும் என்பதை உணர்த்துகிறது.

மூடநம்பிக்கை

மூடநம்பிக்கை என்பது சமுதாயத்தில் உலவி வரும் மோசமான பழக்கமாகும் . இன்றளவும் அப்பழக்கம் சமுதாயத்தில் நிலவி வருகிறது. ஜோதிடம், ஜாதகம் போன்றவற்றின் மேல் கொண்ட நம்பிக்கையால் பலர் பொருளை இழப்பதோடு பல துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். அவ்வகையில் "தனிமரம்" என்னும் கதையில் வரும் காத்தப்பனுக்கும் சிந்தாமணிக்கும் நீண்ட நாட்கள் குழந்தையில்லை. பின்னர் வெர்களுக்கு உரு மகன் பிறக்கிறான். அவன் தீடிரென நோய்வாய்ப்பட் சிந்தாமணி கடவுளை வேண்டிக் கொள்கிறாள் . பின்னர் அக்குழந்தை குணமடைகிறது. பல மாதங்களுங்கு பின்னர் காத்தப்பன் நோய்வாய்பட சிந்தாமணி ஜோதிடம் பார்க்கிறாள். குழந்தையிறந்தால் கணவனுக்கு ஆபத்து என்று ஜோசியர் கூறி விட தன் குழந்தையை கொல்ல முடிவு செய்து மின்சாரக்கம்பியைத் தொடச் சொல்கிறாள்.

அதைத் தொட்ட குழந்தையும் இறந்து விடுகிறது. அதைக் கேட்ட கணவனும் இறந்து விடுகிறான். ஜோதிட நம்பிக்கையால் தன் குழந்தையைக் கொன்ற தாயின் மூடநம்பிக்கையை அறியமுடிகிறது.

"முறிந்த பால்" என்னும் கதை செவ்வாய் தோஷம் குறித்த மூடநம்பிககையைப் பதிவு செய்கிறது. மோகனாவும் திருத்தவாசனும் காதலிக்கின்றனர் அவளை திருமணம் செய்து வைக்க திருத்தவாசனின் தாய் விரும்பவில்லை . அதை " செவ்வாய் தோஷத்தில் பெரியவளானவள். நாற்பது நாட்களுக்குள் அறுத்துவிடுவாள் " (பக் -60) என்பதால் அறியமுடிகிறது.

காதல் மணம்

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவரை விரும்பி செய்து கொள்ளும் மணமே காதல் திருமணமாகும். பெற்றோர்கள் சம்மதத்துடன் அல்லது உடன்போக்கு சென்றோ திருமணம் செய்து கொள்வர். காதல் திருமணத்தை குறுந்தொகை,

யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்
செம்புலப் பெயர் நீர் போல் தாம்
கலந்தனவே (குறுந்தொகை – 40)

என்கிறது.

மோகனா திருத்தவாசனும் காதலிக் கின்றனர். அவர்களின் விட்டில் ஒத்துக்கொள்ளாத காரணத்தால் அவர்கள் விட்டை விட்டுச் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். மோகனா பணம் நகை ஆகியவற்றைக் கொண்டு செல்கிறாள். பின்னர் வேலைக்காக செல்லும் போது அவன் செல்லும் இரயில் விபத்திற்குள்ளாகிறது. திருத்தவாசன் இறந்துவிட்டதாக நினைத்து மோகனா பைத்தியமாகிறாள். அவள் காதலித்து வீட்டை விட்டு வெளியேறிய காரணத்தால் அவள் தந்தை இறந்து விடுகிறார். அவளுக்கு ஆதரவும் இல்லாத காரணத்ததால் பைத்தியமாக அலைகிறாள். ஆனால் திருத்தவாசன் மோகனாவைக் கைவிட்டு விட்டு தன் மாமன் மகளை திருமணம் செய்து கொள்கிறான். அவளை காலப் போக்கில் மறந்தும் விடுகிறான். இங்கு காதலினால் தன் குடும்பத்தை இழந்து பைத்தியமாகி எந்த ஆதரவும் இல்லாமல் தனயாக வீதியில் சுற்ற வேண்டிய நிலைக்குப் பெண் தள்ளப்படுகிறாள். ஆனால் ஆணுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை "முறிந்த பால்" என்னும் கதை சுட்டுகிறது.

மறுமணம்

ஆண்ணோ பெண்ணோ ஏற்கனவே திருமணம் செய்து ஏதாவது ஒரு காரணத்தினால் தங்கள் இணையை இறந்திருந்தால் அல்லது இணையால் கைவிடப்பட்டாலோமீண்டும் செய்து கொள்ளும் திருமணமே மறுமணம் எனப்படுகிறது.

முருகன் முத்தம்மாள் என்னும் பெண்னை மறுமணம் செய்து கொள்கிறான். ஆனால் அது ஆறாத வடுவாக அவனின் மனதில் தங்கியிருக்க வேண்டும். அதனால் அவளை "அறுத்துவிட்டவள் " என்று கூறிவிடுகிறான். அது அப் பெண்ணின் மனதில் ஆறாத வடுவாக மாறியது. ஆண்கள் உயரிய மனம் படைத்தவர்களாகத் தன்னைக் காட்டிக் கொள்ள மறுமணம் செய்வதைப் போன்ற கருத்தாக்கமே இதில் வெளிபடுகிறது.

உண்மையான அக்கறை அதில் காணப்படுவதில்லை.

பெண்களின் இயல்பு

கற்பகமும் ஆதவனும் காதலித்து திருமணம் செய்து கொள்கின்றனர். எதிர்பாராமல் ஆதவன் ஒரு விபத்தில் இறந்.து விடுகிறான். அதற்கு பின்னர் தான் கற்பகம் கர்ப்பமாக இருப்பது தெரிகிறது. அதை அவள் மாமியார் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறாள். கற்பகத்தை வீட்டை விடடு வெளியேறச் சொல்கிறாள். ஆனா6ல் கற்பகம் அதை மறுத்து விட்டு தன் மாமியாரை மகள் நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள். மாமியார் தன்னைக் குறை கூறினாலும் தன் கணவனின் இடத்தில் இருந்த தன் மாமியாருக்கு அனைத்தும் செய்கிறாள். குழந்தை பிறகு அக்குழந்தை ஆதவனைப் போலவே இருக்கின்றது. பெண்ணுக்கு பெண்னே எதிரியாக அமையும் தன்மையையும் பெண்கள் நினைத்தால் எப்படிப்பட்ட சூழலிலும் ஒழுக்கத்துடன் வாழலாம் என்பதையும் பெண்கள் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டால் அக்கடமையில் இருந்து தவற மாட்டார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பெண், ஆண் என்று இல்லாமல் தவறு செய்யும் போக்கு காணப்படுகிறது. ஒழுக்கத்துடன் வாழும் பெண்கள், தங்கள் கடமையை செய்யும் பெண்கள், தாயன்பு கொண்டவர்களாக மக்களை நல்லமுறையில் வளர்க்க வேண்டும் என்னும் தன்மையுடையவர்களாக பெண்கள் இருப்பதைக் காணமுடிகிறது. தவறு செய்யும் பெண்களும் சுட்டப்பட்டுள்ளனர். ஆண்கள் செய்யும் தவறுகளுக்கு பெண்கள் தண்டனை அனுபவிக்கும் நிலையும் சுட்டப்படுகிறது. கற்பில் காணும் முரண் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் பெண்களே இக்கதையில் ஆதிக்கம் பெறுகின்றனர். சமுதாயத்தில் இருக்கும் பெரும்பாலான நிலையை உள்ளது உள்ளபடி கூறுவதாக மலர்க்கொத்து என்னும் சிறுகதை தொகுதி அமைகிறது.

துணைநூற்பட்டியல்

மு.தங்கராசன் - மலர்கொத்து
பூவழகி பதிப்பகம்
சென்னை -14
முதற்பதிப்பு -1988

கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்)-
குறுந்தொகை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட்ட
அம்பத்தூர் சென்னை
மூன்றாம் பதிப்பு – 2007

கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்)
-புறநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட்ட
அம்பத்தூர் சென்னை
மூன்றாம் பதிப்பு – 2007

திருவள்ளுவர் - திருக்குறள் பரிமேலழகர் உரை
ராம் பிரசுரம்
சென்னை
முதற்பதிப்பு -2003

பன்முகநோக்கில் மகரந்தம் கவிதைப் படைப்பு

முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

படைப்புகள் என்பது வாசகனை வெல்வது மட்டுமல்ல. சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதம் ஆகும். இம்மாற்றம் எத்தகைய வடிவத்திலும் அமையலாம். தன்னம்பிக்கை ஊட்டுவது போலவும், தவறுகளைக் களைவதற்கான அறிவுரை யாகவும், வாழ்வினை மேம்படுத்தும் ஏணியாகவும், மக்களுக்குச் சிறந்த அறவுரை தரும் போதி மரமாகவும் எழுத்தாளர்கள் தத்தம் படைப்புகளைப் படைக்கின்றனர். இப்படைப்புகள் கவிதையாகவும், சிறுகதையாகவும், நெடும்பு தினமாகவும், நாடகமாகவும் உருவெடுக்கின்றன. இவற்றுள் வெளிநாடு வாழ் தமிழர்களின் படைப்புகளும் அடங்கும். சிறப்பினும் சிறப்பு என்பது போல வெளிநாடு வாழ் தமிழ்ப் படைப்பாளர்களுள் முதுபெரும் தமிழாசிரியர் மு.தங்கராசன் படைப்பு தனிச் சிறப்பிடம் பெறுகின்றது. ஏனெனில், இன்று வாழும் பல முன்னோடி இளைஞர்களுக்குத் தமிழ்க் கற்பித்த ஆசானாகவும், பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட கவிதைத் தொகுப்பு நூல்கள், கலவைகளாக விளங்கும் கட்டுரைத் தொகுப்பு நூல்கள், நாடகத் தொகுப்பு நூல்கள் என நாற்பது படைப்புகளைப் படைத்த பெருமைக்குரிய அறிஞர் ஆவார். இவருடைய மகரந்தம் கவிதைப் படைப்பு பன்முகத்தன்மைக் கொண்டும், இன்றைய சமூகத்திற்கு வேண்டிய கருத்துருக்களைத் தாங்கியிருப்பதையும் காணமுடிகிறது. இவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதுபெரும் தமிழாசிரியர் மு. தங்கராசன்

முதுபெரும் தமிழாசிரியர் மு.தங்கராசன் என்பவர் சிறந்த தமிழ் ஆசிரியராக விளங்கியவர். நம் தமிழ் மண் பூர்வீகமாக இருந்தாலும், தன் பெற்றோருடன் மலேசியாவிற்கு மூன்று வயதிலே சென்றவராவார். வெளிநாடாக இருப்பினும் தமிழ்நாட்டையும் தமிழ் மண்ணையும் மறவாத மனிதன் என்றே சொல்லலாம். அந்தளவிற்குத் தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் பேரன்பு கொண்டு வாழ்ந்த மாபெரும் மகான் என்று நெஞ்சம் நிறைய கூறலாம். இப்புகழுரைகள் அனைத்தும் வெற்று வார்த்தைகள் அல்ல. இவருடன் பழகிய தகைசான்ற தமிழர்கள் பின்வருமாறு பதிவு செய்கின்றனர்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவரான சி.சாமிக்கண்ணு, “வாழ்நாள் முழுதும் எழுதி தமிழ்த் தொண்டாற்றியவர். பல எழுத்தாளர்களை ஊக்குவித்து புத்தக வெளியீடுகளுக்கு ஏற்பாடு செய்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தமிழ்ப்பணி ஆற்றியவர் தொடக்க காலத்தில் தமிழாசிரியர்கள் நிலையினை நேரில் பார்த்து,

அனுபவித்த அவர் தமிழாசிரியர்கள் முன்னேற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார். பெரும்பாலானோர் தமிழாசிரியர்கள் ஆக வேண்டும் என்று ஊக்குவித்த அவர் தம் மூன்று மகன்களையும் தமிழாசிரியராக்கி அழகு பார்த்தவர். அதுமட்டுமின்றி தமிழாசிரியர் சங்கத்திற்குக் கடைசி வரைக்கும் ஒரே நிலையாகவும், வலுவான ஆதரவாகவும் வலிமையான தூணாகவும் விளங்கினார்."[1] என்று புகழ்ந்து பேசியுள்ளார். மேலும், இப்பெருந்தகையுடன் கல்விக் கற்ற அ.இளங்கோ என்பவர், "அவர் கற்பித்த பாடங்களும், வழங்கிய ஆலோசனைகளும், பயன்படுத்திய சொற்களும் முத்தானவைகள் என்றும், தமிழ் இலக்கிய வகுப்புகளை அவர் நடத்துவது மட்டுமின்றி நடித்தும் காண்பிப்பார். எவரும் எளிதில் மறக்க முடியாத அனுபவங்களை எங்களிடம் விட்டுச் சென்றுள்ளார் என்பதே உண்மை. அவருடன் பழகிய நாட்களும், கற்றுக்கொண்ட பாடங்களும் என் மனத்திலிருந்து அகலாவண்ணம் கல்வெட்டாய் பதிந்து கிடக்கின்றன."[2] என்று கூறுவதன் மூலம் மு.தங்கராசுவைப் பற்றிய எண்ணவோட்டம் அந்நாட்டில் ஆகச்சிறந்ததொருதாக்கத்தைத் தாங்கி நிற்பதை தெள்ளத்தெளிவாக அறிந்துகொள்ளமுடிகிறது. எழுத்தாளர் இராம கண்ணபிரான் என்பவர், "தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவதிலும் கையாளுவதிலும் இவருக்கு நிகர் இவரே என்று உணர்வுப்பூர்வமாகப் பதிவிடுகிறார். கவிதை களுக்கும், சிறுகதைகளுக்கும், நாடகங் களுக்கும் தேவையான அருமையான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி பிறருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் என்றும், அவர் அறிமுகப்படுத்திய பல அருஞ்சொற்களை நான் எனது படைப்புகளில் பயன்படுத்தி பல முறை வெற்றி கண்டுள்ளேன்."[3] என்று கூறுவதன் மூலம் இவருடைய எழுத்துக்களின் ஆற்றலை நன்கு புரிந்துகொள்ளமுடிகிறது. இத்தகைய படைப்பாளரின் எழுத்துக்கள் இன்றைய சமூகத்திற்குத் தேவைப்படுவதையே மேற் காணும் அறிஞர்களின் கருத்துக்கள் விளக்கி நிற்கிறது. குறிப்பாக, இளைய சமுதாயத் திற்கென பலதரப்பட்ட கருத்துக்கள் இதனுள் பொதிந்து கிடக்கிறது என்றே சொல்லலாம். அத்தகைய ஆக்கப்பூர்வமான அறவுரைகளும், அறிவுரைகளும் நிரம்பியே காணப்படுகிறது.

மகரந்தம் – கவிதை நூல் கட்டமைப்பு

கவிக்குலம் போற்றும் தமிழவேள், அணிகலன், உதயம் போன்ற கவிதை நூல்கள் வரிகையில் மகரந்தம் எனும் கவிதைத் தொகுப்பு சிறப்புடன் திகழ்கின்றது. இது ஒரு மரபுக்கவிதை நூலாகும். 1988-இல் சென்னை பூவழகி பதிப்பகத்தில் முதற்பதிப்பாக இப்படைப்பு வெளிவருகின்றது. ஐந்து தலைப்புகளாகப் பகுத்து ஒவ்வொன்றினுள்ளும் ஆறு தலைப்புகளில் கருத்தாடல்களைக் கொண்டு மு.தங்கராசன் படைத்திருக்கிறார். அவர் எடுத்தாண்டிருக்கும் கருப்பொருள்கள் எல்லாமே, குறிப்பாக குடும்பம், இறவாப்புகழ், படிப்பினை, தானம், தூரத்துப் பச்சை, மக்கட்பேறு, ஊழ்வினை என்பன மனிதாபிமானத்தை விளக்கி நிற்கின்றன. அயரா உழைப்புக்கு அகப்படாத அரும்பொருள் யாதுமில்லை எனலாம். சொல்நயம் ஆசிரியர் கைவந்த கலையாகத் திகழ்கின்றது.

பாடல்களில் திட்பநுட்பம், தெளிவு, விளக்கம் முதலிய பண்புகள் நிறைந்த சொற் செறிவு மிகுந்திருக்கின்றது. அச்சொற்பொருட்களோடு படிப்போர் தம் சிந்தனையை இரண்டறக் கலந்து தங்களை இன்ப வெள்ளத்தில் திளைக்க வைக்கும் கவிதை நயமும் கலந்திருக்குமாயின் அணிகலன்களால் மெருகேற்றப்பட்ட அழகுநங்கையாய் அமைந்திருக்கும் அழகிய கவிதைத் திரட்டு என்று மகரந்தம் கவிதைத் தொகுப்பைக் கூறலாம்.

எண்ணியதை இனிமையாக்குவோம்

மனிதன் சில நேரங்களில் பல விதங்களில் சிந்திக்கக்கூடியவன். அவனுடைய சிந்தனை பயனுள்ளவிதமாக இருந்தால் பாராட்டுகள் குவியும். அதுவே, தலைகீழாக இருந்தால் ஏசல்களும் பூசல்களும் வரச்செய்யும். இதனையே கவிஞர் இனிமையாக எண்ணுவோம் என்று உரைக்காமல் எண்ணுவதை இனியாக்குவோம் என மொழிகின்றார். நாம் பேசும் பேச்சுக்கு சொல் முக்கியம் எனக் குறிப்பிடுகிறார். தன் கவிதையில் சொல் தான் ஒரு மனிதனை அழகாக்கிறது என்கிறார். தொல்காப்பியர் மனித அறிவை ஆறாகப் பகுத்துரைக்கிறார். இவ்வறிவை தான் மனித குலம் பகுத்தறிவு என்கிறது. நல்லது, கெட்டது என்ற இரண்டையும் பகுத்தறிந்தாலே போதுமானது எண்ணங்கள் வண்ணங்கள் ஆகும் என்றுரைக்கிறார். இதனைக் கவிஞர்,

> "இதுதீது இதுநன்று என்றே ஒன்றை
> எழில் நெஞ்சம் பகுத்துணர்வால் ஏற்றல் நல்ல
> பொதுவிலொரு புனிதத்தின் தன்மை யாகும்
> பொலிந்திடு மேல் மனிதகுலம் போற்றும் பண்பாம்!"[4]

என்றுரைத்துள்ளார். இவ்வாறாக மனிதகுலத்திற்கான உன்னத கருத்துக்களைப் பதிவு செய்துகாட்டும் படைப்பாக மு.தங்கராசன் படைப்புகள் திகழ்வதைக் காணமுடிகிறது.

சிந்தனையைச் செறிவாக்குவோம்

சிந்தித்தைச் செயல்படுத்துவதே எண்ணமாகும். இவ்வெண்ணத்திற்கு முதல் ஊற்று சிந்தனையாகும். இச்சிந்தனையாக்கம் என்பது இன்றைய சமுதாயத்திற்கும், இளைய தலைமுறைக்கும் நல்ல வழிகாட்டலை சுட்டிக்காட்டும் விதமாக இருக்கிறது. குறிப்பாக குடும்பத்தைப் பற்றியும் குடும்ப உறுப்பினர்களைப் பற்றியும் அமைந்துள்ளது. ஏனென்றால், இன்று நிறைய குடும்பங்கள் விவாகரத்து நிலையில் போய்க் கொண்டிருக்கின்றன. இத்தகைய குடும்ப உறுப்பினர்களுக்குச் சிந்தனைத் திறனை ஊட்டும் விதமாக இத்தகைய தலைப்பினைக் கவிஞர் கையாண்டுள்ளார் எனலாம். இதனை,

> "இல்லறத்தின் தலைவனவன் இவ்வாறென்றும்
> இனிதுவக்கும் சிந்தனையில் இயைந்து மூழ்கி
> நல்லறத்தின் வழிநின்று நாடு போற்றும்"[5]

என்கிறார். ஆகவே குடும்ப அங்கத்தில் இருப்போர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் சிந்திக்கக்கூடிய செயல் திறன் நன்மை பயக்கும் விதத்தில் இருந்தால் மட்டுமே குடும்பம் நல்ல பாதையில் செல்லும் என்பதை கவிஞர் சிந்தனைச் சிறகடிப்பு என்ற தலைப்பில் மரபுக் கவிதையாகப் படைத்திருப்பது சமூக

சிந்தனைக்கு நல்ல வடிவம் கொடுத்திருப்பது போன்றதாகும்.

கடமையே கண்ணாகக் கொள்

ஒரு மனிதனுக்குக் கடமை முக்கியமானதாகும். மகனை நலமுடன் வாழ வைக்கும் குணம் தாய்க்கு உண்டென்றால் அது கடமை. பெற்றோர்க்கு நற்பெயரை பெற்றுத்தர வேண்டும் என்று நினைத்து செயலாற்றுகின்ற எண்ணம் கொண்ட மகனுக்கு அது கடமை. இவ்வாறு இவ்வுலகில் கடமையோடு செயல்படுகின்ற மனிதர்களை எராளமாகப் பார்க்கலாம். அந்த கடமை எவ்விதத்தில் இருக்க வேண்டும் என்பதை மு.தங்கராசன் விளக்கியுள்ளார். அதாவது,

"கடன்தனை வாழ்வி லென்றும் கருதா நிற்கும்
களிமக்கள் நிம்மதியைக் காண்பதில்லை
கடமைக்காய் உழைத்திடுவர் என்றும் காணார்
கனிமனத்து நிம்மதியை; கலங்கிச் சோர்வார்
உடனிங்கு பிரச்சினையைத் தீர்க்கா உள்ளம்
ஒருபோதும் நிம்மதியை உணர்வ தில்லை!"[6]

என்பதன் மூலமாகக் கடமையின் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. கடமையைச் சரிவர செய்யவில்லை எனில் நிம்மதி கிடைக்காது என்கிறார் கவிஞர். இது போன்ற கருத்தை அறவிலக்கியங்களிலும் காணலாம். குறிப்பாக, பழமொழி நானூறில் "கடங்கொண்டு செய்வார் கடன்"[7] என்பதை சான்றோர் மீது ஏற்றிப் பேசுகிறது. அதாவது, சான்றோர்கள் தாம் பெற்ற பெண்ணுக்கு உரிய கடமையைத் (திருமணம்) தக்க சமயத்தில் செய்தாக வேண்டும்.செய்ய முடியாத சூழல் எற்பட்டால் அதற்கான கடனைப் பெற்றாவது செய்ய முற்படுவர். அப்படி செய்தாலொழிய மனநிம்மதி இருக்குமே தவிர இல்லை யென்றால் பெரும் துன்பத்திற்கு ஆளாக வேண்டியது சான்றோர்களே என்பதை இவ்விடத்தில் எளிமையாகப் புரிந்து கொள்ளலாம். திருநாவுக்கரசர் கடமையைப் பற்றி பின்வருமாறு பாடியுள்ளார்.

"நம் கடன் பனை பெற்றவள் பங்கினள்
தென் கடம்பை திருக்கர கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"[8]

என்று பாடியிருப்பதன் மூலமாக கடமையின் உணர்வு எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்கமுடிகிறது. தற்காலத்தில் கூட கவிஞர் வாலி தெய்வத்தாய் படத்திற்காக கடமை எப்படிப்பட்டது என்பதைத் தன் கவிதை (என் மூன்றெழுத்தில் என்மூச்சிருக்கும்... கடமை அது கடமை) வரியில் விளக்கியிருக்கிறார். இவ்வாறாக அறவிலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை கடமை குறித்து விளக்கியிருப்பது அதன் முக்கியத்துவத்தைக் கருதியேயாகும். கவிஞர் மு.தங்கராசனும் இவ்வரிசையில் நின்று விளக்கக் காரணம் தாய் மண்ணைவிட்டு வந்தாலும் ஒரு போது கடமை என்ற உணர்வையும் விட்டுவிட்டு வரக்கூடாது. அதோடு கடமை என்ற உணர்வைஒரு போதும் மறக்கக்கூடாது என்ற தன்னுணர்வை மக்களின் உணர்வாக ஏற்றிக்கூறுவது சிறப்பினும் சிறப்பாகும்.

நல்லதொரு குடும்பம்

சிந்தனைக்கும் குடும்பத்திற்கும் பந்தம் உண்டு என்பதை முன்னமே கவிஞர் விளக்கியிருந்ததைப் பார்க்க முடிந்தது. அதனின் தொடர்ச்சியாகக் குடும்பத்திற்கான இயல்புகளைக் குறித்து குடும்பம் என்ற தலைப்பில் பா புனைந்துள்ளார். கணவன், மனைவி, பிள்ளைகள் என குடும்ப உறுப்பினர்களைப் பற்றி தம் கவிதையின் ஊடேபேசியிருக்கிறார். முன் வள்ளுவர்,

"இல்ல தெனில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்ல வண்மாணாக் கடை"[9]

என்று மனைவியின் இயல்பினை எடுத்துக்காட்டுகிறார். குடும்பத்துக்குப் பெருமை வரக்கூடிய குணங்கள் மட்டும் மனைவியிடத்தில் இருக்குமானால் அந்த வீட்டில் இல்லாதது ஒன்றுமில்லை. அந்த நற்குணங்கள் மனைவியிடத்தில் இல்லாமல் போனால் அந்த வீட்டில் மற்ற என்ன இருந்தாலும் இல்லாதது போலத்தான் என விளக்கி நிற்கிறார் வள்ளுவர். அதுமட்டுமின்றி,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா
பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"[10]

அதாவது, பழி பாவங்களுக்கு ஆளாகிவிடாத நல்ல குணமுள்ள மக்களைப் பெற்றால், அவர்களைப் பெற்ற தந்தை தாயருக்கு அவர்களுடைய மறு பிறவிகளில் ஏழு பிறவிகள் வரையிலும் துன்பம் வராது என்று விளக்குகிறார் வள்ளுவப் பெருந்தகை. மேற்கண்ட கருத்துக்களுக்கு ஈடு இணையாகக் கவிஞர் அவர்களும் தம் கவிதையால் விளக்குவதை அறியமுடிகிறது. இத்தகைய குடும்ப இயல்பினைக் குறித்து கவிஞர் தம்முடைய மரபுக்கவிதையின் மூலமாக விளக்கிச் செல்வதைக் காணமுடிகிறது. அதாவது,

"தாய்தந்தை பிள்ளைகளும் தழைத்து
மேவும்
தார்மீகத் தத்துவமே குடும்பம் ஆகும்!
காய்கனிந்து உதிர்த்தநல்ல வித்தும்
காய்ந்து
ககனத்தில் இனவிருத்தி கனிந்து தோன்ற
ஆய்பொருளாய் அமைந்திடும் அந்த
உண்மை
அடிச்சுவட்டின் அடிப்படையே குடும்பம்
ஆகும்!"[11]

எனக் குடும்பத்தின் இயல்பைக் குறித்து அழகாக எடுத்தியம்புவதின் மூலமாகக் காணமுடிகிறது. குடும்பம் என்பது பெயர் சொல்வதற்குப் பிள்ளைகளும் அடுத்தடுத்த தலைமுறைகளை உருவாக்குவதற்கும் தேவை என்பதை வலியுறுத்தும் விதமாக அமைந்திருப்பதைக் கவிஞரின் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. மேலும், பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளைப் பற்றி ரத்தினச் சுருக்கமாக விளம்பியிருப்பதையும் பார்க்க முடிகின்றது. இதனை,

"நல்லதொரு குடும்பமதும் நனிசால் கல்வி
நயக்கும்பல் கலைக்கழகப் பான்மை
நல்கும்"[12]

என்ற நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற புகழ்ப்பெற்ற வரியினை நனிமிக்க வரிகளாக விளக்கிச் செல்லும் திறன் மிக எளிமையாகப் படைப்பாளரிடம் காணப் படுவதை அறியலாம். அதுமட்டுமின்றி,

"வரவறிந்து வாழ்ந்துவரும் வழக்கம்
வேண்டும்

வந்தமையும் இடுக்கணதை வளைத்தல் வேண்டும்
தரமறிந்து பழகுகின்ற தன்மை வேண்டும்
தானென்ற கர்வமதைத் தகர்க்க வேண்டும்
உறவறிந்து உலவுகின்ற ஒழுக்கம் வேண்டும்
உண்மையினைப் புரிந்துணரும் உயர்வு வேண்டும்
கரவரிந்து ஒதுங்குகின்ற கருமம் வேண்டும்
கண்ணியங்கள் போற்றுகின்ற கனிவு வேண்டும்!"[13]

என ஒட்டுமொத்த குடும்பத்திற்கான தேவையை மிகக்கச்சிதமாகப் பேசியிருப்பதைக் கவிதையில் காணமுடிகிறது. ஒரு குடும்பத்தில் தாயும் தந்தையும் சரியாக அமைந்தால் மட்டுமே அக்குடும்பம் நல்ல நிலையை நோக்கிப் பயணிக்கும். இல்லையெனில், தண்டவாளத் திலிருந்து தடம்புரண்ட தொடர்வண்டி போல சிதறிப்போகும். இதனால் பிள்ளைகள் பாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய வாழ்க்கையும் கேள்விக் குறியாகும். இப்படிப்பட்ட நிலைக்குச் செல்லக்கூடாது என்பதில் மிக கவனமாகப் படைப்பாளர் விளங்குவதை அவருடைய படைப்பான கவிதை நூல் மகரந்தம் வழி தெளியலாம். மேலும், சரியான பாதையில் செல்லும் ஒரு குடும்பம் காலத்திற்கேற்றவாறு எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்குத் தகுந்த இலக்கணத்தை வகுத்து ஈந்தளித்திருப்பது இவருடைய ஒட்டுமொத்த திறனையும் பிரதிபலிக்கும் விதத்தில் இருப்பதைக் காண்கிறோம். வள்ளுவர் ஓரிரு அதிகாரத்தில் செப்பிச் செல்கின்ற கருத்தினைக் கவிஞர் தன் ஒரே பாவில் வகுத்துச் செல்வதைக் காணும்போது இவருடைய படைப்பாற்றல் மேலோங்கி யிருப்பதைக் காண்கிறோம்.

பன்முகநோக்கில் மகரந்தம் கவிதைப் படைப்பு எனும் இக்கட்டுரையின் வாயிலாகக் கவிஞரின் கவிப்புலமையும், இலக்கணம் மற்றும் இலக்கியப் புலமையும் காணமுடிகிறது. அதோடு அவருடைய கதை, கட்டுரை மற்றும் கவிதை படைப்புகளில் பல்வேறு சமுதாயக்கூறுகள் அடங்கியிருப்பதையும் பார்க்கமுடிகிறது. இவற்றினை ஆராய்ந்து ஆய்வுலகிற்கு எடுத்துச்சொல்ல இளம் தலைமுறையினர் முன்வரவேண்டும். மேலும், தமிழ் மற்றும் தமிழ் மண்ணைச் சார்ந்தவர்களைவிட வெளிநாடுவாழ் தமிழர் களிடம் காணப்படுகின்ற தமிழ்ச்சுவையைப் பிறரும் அறியும் வண்ணம் ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுத்திறத்தை முதுபெரும் தமிழாசிரியர் மு.தங்கராசன் படைப்புகளிலும் காட்டி சமூக மேம்பாட்டிற்கு உற்ற உறுதுணையாக செயல்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முழுநோக்கமாகும்.

சான்றெண் விளக்கம்

https://www.tamilmurasu.com.sg/singapore./tamil-teacher-thangarasan
மேலது.
மேலது.
மு.தங்கராசன், மகரந்தம், பூவழகி பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு-1988. ப.5
மேலது, ப.7
மு.தங்கராசன், மகரந்தம், பூவழகி பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு-1988. ப.11
ச.வே.சுப்பிரமணியன், பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்,

மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2010, ப.215

சொல்லரசு புலவர் வீ.சிவஞானம், திருநாவுக்கரசர் தேவாரம் மூலமும் உரையும், விஜயா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2011.(ஐந்தாம் திருமுறை, திருக்கடம்பூர் பதிகம், பா.எண்:09)

நாமக்கல் கவிஞர், திருக்குறள் புது உரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு – 2010, குறள் எண்:53

மேலது, குறள் எண்:62

மு.தங்கராசன், மகரந்தம், பூவழகி பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு-1988. ப.25

மேலது. ப.27

மேலது. ப.29

Bodhi International Journal is assigned
by ISSN National Centre, India
National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by
International Institute of
Organized Research (I2OR)

Information of Bodhi Journal

Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Hosted by

குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்,

40, காந்திஜி தெரு,
அழகப்பன்நகர், மதுரை - 625 003

Cell 9865055421, kurenjitamil@gmail.com

Articles should be mailed to
bodhijournal@gmail.com

BODHI
International Journal of Research in Humanities, Arts and Science
www.bodhijournals.com

Powered & Published by
Center for Resource, Research and Publication Services (CRRPS) India.
www.crrps.in